# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
# நடவடிக்கைகளின் அட்டவணை

## இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஏழாவது சட்டமன்றப் பேரவையின் இரண்டாவது கூட்டத்தொடர்

1981, ஜனவரி, 22, 23, 24, மற்றும் 27-ஆம் நாட்கள்

(தொகுதி 9 எண்கள் 1 முதல் 4 வரை)

©
தமிழ் நாடு அரசு
1983

சட்டமன்றப் பேரவைத் துறை,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009

விலை ரூ. 1]

128164

V211,3,'N81
N83-9

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஏழாவது சட்டமன்றப் பேரவையின் இரண்டாவது கூட்டத்தொடர்.

**1981 ஜனவரி, 22, 23, 24 மற்றும் 27 ஆம் நாட்கள்.**

[தொகுதி 9 எண்கள் 1 முதல் 4 வரை]

## உள்ளடக்கம்

| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் | |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் | v-vii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பெயர் பட்டியல் (தொகுதிகள் உள்பட அகர வரிசையில்) | vii-xii |
| அரசினர் சட்ட முன்வடிவுகள்— | |
| கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 | 376 |
| பொது வக்ஃபுகள் (கால வரையறையை நீட்டித்தல்) திருத்த சட்ட முன்வடிவு, 1981 | 376 |
| விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்தம், ரத்து) சட்ட முன்வடிவு, 1981 | 375 |
| அரசினர் தீர்மானங்கள்— | |
| தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்கு மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் | 236—237 |
| மதிப்பீட்டுக் குழுவிற்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல் | 235 |
| வேளாண்மை பல்கலைக் கழக வாரியம்—உறுப்பினர் தேர்தல் | 238 |

**அறிக்கை அளித்தல்—**


| | பக்கங்கள் |
|---|---|
| விடுதலைப் போராட்ட வீரர்களின் ஓய்வூதியத்தை அதிகப்படுத்தல்—நிதி அமைச்சரின் அறிக்கை | 435—436 |
| **அறிவிப்புகள்—** | |
| உறுப்பினர் ஒருவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்த உறுதிமொழி | 98 |
| கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 (ஆ.இ.) | 376 |
| நில மேம்பாட்டு வாரியம்—உறுப்பினர்கள் தேர்தல் | 237 |
| பேரவை அலுவல் | 233—235, 420 |
| பேரவைத் தலைவர் உறுப்பினர்களுக்கு வாய்ப்பு அளித்தல் | 239—240 |
| மதிப்பீட்டுக் குழு உறுப்பினர் தேர்தல் | 236 |
| மாற்றுத் தலைவர்கள் பட்டியல் | 98 |
| விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்தம், ரத்து) சட்ட முன்வடிவு, 1981 (ஆ.இ.) | 375 |
| வேளாண்மைப் பல்கலைக் கழக வாரியம்—உறுப்பினர் தேர்தல் | 238 |
| **ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்** | 99—173, 240—322, 379—512 |
| **இரங்கல் குறிப்பு—** | |
| இராமசாமி முதலியார், திரு. வி. எம். | |
| சந்திரன் ஜெயபால், திரு. இரா. எ. | |
| சம்பந்தம், திரு. கே. ஆர். | |
| சுயம்பிரகாசம், திரு. எம். | |
| பாலகிருஷ்ணன், திரு. எ. ஜி. | |
| பீர்முஹம்மது திரு. ஹாஜி ம. மு. | 53—54 |
| மணி, திரு. எம். எஸ். | |
| [illegible] | |



| | பக்கங்கள் |
|---|---|
| **இரங்கல் தீர்மானம்—** | |
| வால்மீகி, திரு. வி. (உறுப்பினர்) | 3—21 |
| விஷ்ணுராம் மேதி, திரு. (முன்னாள் ஆளுநர்) | 3—21 |
| **தகவல் கோரல்—** | |
| உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் | 98—99, 240, 366—369 |
| **தன்னிலை விளக்கம்—** | |
| [illegible]— | |
| மருத்துவக் கல்லூரி மாணவர்கள் தேர்வு | 266—271 |
| வனத்துறை அமைச்சரின் விளக்கம் | 369—375 |


ந


| | |
|---|---|
| **நிதி அலுவல்கள்—** | |
| 1980-81 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கை | 377—379 |
| பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 21—51, 174—175, 323—324 |
| **வினாக்கள்-விடைகள்—** | |
| (i) நட்சத்திரக்குறியிட்ட வினாக்கள் | 54—97, 99—239, 325—365 |
| (ii) நட்சத்திரக்குறியிடாத வினாக்கள். | 365 |

## அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையை பயன்படுத்தும் முறை.

இவ்வட்டவணை அகர வரிசைப்படி அமைக்கப் பெறுகிறது. முக்கியத் தலைப்புகள் ஓரங்களிலிருந்து அச்சடிக்கப் பெறுகின்றன; துணைத் தலைப்புகள் முக்கியத் தலைப்புகளிலிருந்து சற்று உள்ளடங்க அச்சிடப் பெறுகின்றன.

வினாக்கள் தவிர, மற்ற நடவடிக்கைகளைக் குறிக்க பல்வேறு குறிப்புகள் யாவும், பெயர்கள் உள்ளிட்ட வெவ்வேறு முக்கியத் தலைப்பின்கீழ் தொகுக்கப் பட்ட பொருள் விளக்கத்தினை அடுத்து அடைப்புகளுக்குள் அச்சிடப் பெறுகின்றன. எடுத்துக்காட்டாக, (தி) என்று போடுவது தீர்மானத்தையும், (க.ஈ.) என்று போடுவது கவன ஈர்ப்பையும், (ஒ.தி.) என்று போடுவது ஒத்தி வைப்புத் தீர்மானத்தையும், (அ) என்று போடுவது அறிக்கையையும் குறிக்கும்.

இத்தகைய குறிப்புகள் எதுவும் பெற்றிராத பொருள் விளக்கம் வினாக்களைச் சுட்டும் எனினும், சட்ட முன்வடிவுகள், நிதி அலுவல்களைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கமே அவற்றைத் தெளிவாக்கும்.

எல்லாச் சட்ட முன்வடிவுகளும் "சட்ட முன்வடிவு" என்ற முக்கியத் தலைப்பின்கீழ் அகர வரிசைப்படி முறைப்படுத்தப் பெறுகின்றன.

குழுக்கள், மன்றங்கள், வாரியங்கள், மாநகராட்சிகள் போன்ற அமைப்புக்கள் அனைத்தும், 'குழு(க்கள்)', 'மன்றம்(கள்)', 'மாநகராட்சி(கள்)' ஆகிய முக்கியத் தலைப்புகளின்கீழ் தொகுக்கப் பெறுகின்றன.

பள்ளிகள், கல்லூரிகள், மாநாடுகள், துறைமுகங்கள், ஆலயங்கள் குறித்த பல்வேறு விரிந்த பொருள்களும், அத்தகைய முக்கியத் தலைப்புகளின் நேரே அகர வரிசைப்படி காட்டப் பெறுகின்றன.

பேரவை முன் வைக்கப்பெறுகின்ற ஏடுகளின் பக்கங்கள் இத்தலைப்பின்கீழ் கொடுக்கப்பெறுகின்றன.

தலைவர் மற்றும் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர் ஆகியோரின் தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் "தலைவர்" என்ற தலைப்பின்கீழ் வரிசைப்படுத்தப் பெறுகின்றன.



அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையில் பயன்படுத்தப் பெற்றுள்ள சில சுருக்கங்களின் விளக்கப் பட்டியல் ஒன்று கீழே கொடுக்கப்பெற்றுள்ளது :—

அ. — அறிக்கை

அறிவி. — அறிவிப்பு

அ.வி. — அரைமணி நேர விவாதம்

கு.வி. — குறுகிய கால விவாதம்

பொ.வி. — பொது விவாதம்

ஆ.உ. — ஆளுநர் உரை

உ.பி. — உரிமைப் பிரச்சினை

ஒ.பி. — ஒழுங்குப் பிரச்சினை

க.ஈ. — கவன ஈர்ப்பு

க.ஈ.அ. — கவன ஈர்ப்பு அறிக்கை

ச.அ.நி. — சட்ட முன்வடிவின் அறிமுக நிலை.

ச.ஆ.நி. — சட்ட முன்வடிவின் ஆய்வு நிலை—இந்நிலையில்,

(1) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பெறும் தீர்மானம்,

(2) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமென்ற திருத்தம்,

(3) சுற்றுக்கு அனுப்பப்பெறுவதற்கான திருத்தம்,

(4) ஆய்வு/கூட்டாய்வுக் குழு அறிவித்தபடி ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கான தீர்மானம்,

(5) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவிற்கு மீண்டும் அனுப்புவதற்கான திருத்தம் முதலியன.

ச.பி.ஆ. — சட்ட முன்வடிவு—பிரிவுவாரியாக ஆய்தல்

ச.பே. — சட்டமன்றப் பேரவை

ச.மே. — சட்டமன்ற மேலவை

**அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையை பயன்படுத்தும் முறை.**

இவ்வட்டவணை அகர வரிசைப்படி அமைக்கப் பெறுகிறது. முக்கியத் தலைப்புகள் ஓரங்களிலிருந்து அச்சடிக்கப் பெறுகின்றன; துணைத் தலைப்புகள் முக்கியத் தலைப்புகளிலிருந்து சற்று உள்ளடங்க அச்சிடப் பெறுகின்றன.

வினாக்கள் தவிர, மற்ற நடவடிக்கைகளைக் குறிக்க பல்வேறு குறிப்புகள் யாவும், பெயர்கள் உள்ளிட்ட வெவ்வேறு முக்கியத் தலைப்பின்கீழ் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கத்தினை அடுத்து அடைப்புகளுக்குள் அச்சிடப் பெறுகின்றன. எடுத்துக்காட்டாக, (தி) என்று போடுவது தீர்மானத்தையும், (க.ஈ.) என்று போடுவது கவன ஈர்ப்பையும், (ஒ.தி.) என்று போடுவது ஒத்தி வைப்புத் தீர்மானத்தையும், (அ) என்று போடுவது அறிக்கையையும் குறிக்கும்.

இத்தகைய குறிப்புகள் எதுவும் பெறாத பொருள் விளக்கம் வினாக்களைச் சுட்டும் எனினும், சட்ட முன்வடிவுகள், நிதி அலுவல்களைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கமே அவற்றைத் தெளிவாக்கும்.

எல்லாச் சட்ட முன்வடிவுகளும் "சட்ட முன்வடிவு" என்ற முக்கியத் தலைப்பின்கீழ் அகர வரிசைப்படி முறைப்படுத்தப் பெறுகின்றன.

குழுக்கள், மன்றங்கள், வாரியங்கள், மாநகராட்சிகள் போன்ற அமைப்புக்கள் அனைத்தும், 'குழு(க்கள்)', 'மன்றம்(கள்)', 'மாநகராட்சி(கள்)' ஆகிய முக்கியத் தலைப்புகளின்கீழ் தொகுக்கப் பெறுகின்றன.

பள்ளிகள், கல்லூரிகள், மாநாடுகள், துறைமுகங்கள், ஆலயங்கள் குறித்த பல்வேறு விரிந்த பொருள்களும், அத்தகைய முக்கியத் தலைப்புகளின் கீழேயே அகர வரிசைப்படி காட்டப் பெறுகின்றன.

பேரவை முன் வைக்கப்பெறுகின்ற ஏடுகளின் பக்கங்கள் இத்தலைப்பின்கீழ் கொடுக்கப்பெறுகின்றன.

தலைவர் மற்றும் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர் ஆகியோரின் தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் "தலைவர்" என்ற தலைப்பின்கீழ் வரிசைப்படுத்தப் பெறுகின்றன.



அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையில் பயன்படுத்தப் பெற்றுள்ள சில சுருக்கங்களின் விளக்கப் பட்டியல் ஒன்று கீழே கொடுக்கப்பெற்றுள்ளது :—

அ. — அறிக்கை

அறிவி. — அறிவிப்பு

அ.வி. — அரைமணி நேர விவாதம்

கு.வி. — குறுகிய கால விவாதம்

பொ.வி. — பொது விவாதம்

ஆ.உ. — ஆளுநர் உரை

உ.பி. — உரிமைப் பிரச்சினை

ஒ.பி. — ஒழுங்குப் பிரச்சினை

க.ஈ. — கவன ஈர்ப்பு

க.ஈ.அ. — கவன ஈர்ப்பு அறிக்கை

ச.அ.நி. — சட்ட முன்வடிவின் அறிமுக நிலை.

ச.ஆ.நி. — சட்ட முன்வடிவின் ஆய்வு நிலை—இந்நிலையில்,

(1) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பெறும் தீர்மானம்,

(2) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமென்ற திருத்தம்,

(3) சுற்றுக்கு அனுப்பப்பெறுவதற்கான திருத்தம்,

(4) ஆய்வு/கூட்டாய்வுக் குழு அறிவித்தபடி ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கான தீர்மானம்,

(5) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவிற்கு மீண்டும் அனுப்புவதற்கான திருத்தம் முதலியன.

ச.பி.ஆ. — சட்ட முன்வடிவு—பிரிவுவாரியாக ஆய்தல்

ச.பே. — சட்டமன்றப் பேரவை

ச.மே. — சட்டமன்ற மேலவை

த.கோ. — தகவல் கோரல்

த.வி. — தன்னிலை விளக்கம்

தீ. — தீர்மானம்

உ.தீ. — உரிமைத் தீர்மானம்

ஒ.தீ. — ஒத்திவைப்புத் தீர்மானம்

த.தீ. — தனித் தீர்மானம்

து.மா.கோ. — துணை மானியக் கோரிக்கை

மி.மா.கோ. — மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை

பே.அ. — பேரவையின் அலுவல்

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

தமிழ்நாடு ஆளுநர்.

திரு. சாதிக் அலி

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)—பொது, பொது நிர்வாகம், திட்டம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, பொதுப்பணித் துறை மற்றும் பொதுப்பணித் துறை (நிறுவனம்) சம்பந்தப்பட்ட அலுவல்கள்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்)—நிதி, சட்டமன்றம், [illegible], [illegible], [illegible] பிற்பட்ட வகுப்பினர், இளைஞர் [illegible], [illegible] கட்டுப்பாடு, முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன் (மின் துறை அமைச்சர்)—மின்சாரம், இரும்பு எஃகு கட்டுப்பாடு.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (ஊரகத் தொழில் அமைச்சர்)—கிராம குடிசை சிறு தொழில்கள். உள்ளிட்ட ஊரக தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், ஆலைப் பதிப்புத் துறை.

5. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்)—வருவாய்கள், [illegible], ஆயத்துறை, மக்கள் தொகைக் கணக்கு.

6. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் (செய்தி அறநிலையத்துறை அமைச்சர்)—செய்தி, விளம்பரம், திரைப்பட தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சி கழகம், திரைப்படச்சட்டம், இந்து அறநிலையத்துறை, [illegible], சின்கோனா, மது அனுமதிச் சீட்டு வழங்கல்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்)—தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி.

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு மற்றும் வேளாண்மை பொறியியல்.

ாபுமிகு திரு. சி. பொன்னையன் கூட்டுறவு-சட்ட
9. )—சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள், ம
அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், நிறுவனங்கள், பதிவு
றும் வழங்கல் மீதான நிவாரணச் சட்டம், ஏட்டு பற்றிய
கடம், கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம்: பூமிதானம், கிராமதானம் நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்)—தொழிலாளர், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு, இட வசதி கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத் துறை

13. மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்—வேளாண்மை பணி, கூட்டுறவு சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், வஃபு.

14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத்துறை அமைச்சர்)—அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் ஊர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (தொழில் அமைச்சர்)—பெருந் தொழில்கள், சுரங்கங்கள், கனிப் பொருள்கள், நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. எஸ். என். இராஜேந்திரன் (கைத்தறி-கதர்த்துறை அமைச்சர்)—கைத்தறி, கதர், மது அனுமதிச் சீட்டு வழங்கல் நீங்கலாக மது விலக்கு, பயண இசைவுச் சீட்டு.

17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (அரிசன நலத்துறை அமைச்சர்)—அரிசன நலம், எழுது பொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர், வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால் நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NA.

Governor of Tamil Nadu

Thiru SADIQ ALI

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Hon. Thiru M.G. RAMACHANDRAN (Chief Minister)—Public General Administration, Planning, Indian Administrative Service District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Public Works Department and Establishment Matters relating of Public Works Department.

2. Hon. Dr. V.R. NEDUNCHEZHIYAN (Minister for Finance)—Finance, Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. Hon. Thiru S. RAMACHANDRAN (Minister for Electricity)—Electricity, Iron and Steel Control.

4. Hon. Thiru K.A. KRISHNASAMY (Minister for Rural)—Industries)—Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development and Registration.

5. Hon. Thiru S.D. SOMASUNDARAM (Minister for Revenue)—Revenue, Commercial Taxes, Excise and Census.

6. Hon. Thiru R.M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments) Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona and Grant of Liquor Permits.

7. Hon. Thiru C. ARANGANAYAGAM (Minister for Education)—Education including Technical Education and Official Language.

8. Hon. Thiru K. KALIMUTHU (Minister for Agriculture)—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (கூட்டுறவு-சட்ட அமைச்சர்)—சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள், மதி அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், நிறுவனங்கள், பதிவுறும் வழங்கல் மீதான நிவாரணச் சட்டம், சீட்டு பற்றிய சட்டம், கூட்டுறவு.

10. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம்: பூமிதானம், கிராமதானம் நெடுஞ்சாலைகள்.

11. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்)—தொழிலாளர், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு, இட வசதி கட்டுப்பாடு.

12. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத் துறை

13. மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது (நீர்ப்பாசனத் துறை அமைச்சர்—வேளாண்மை பணி, கூட்டுறவு சங்கங்கள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், வஃபு.

14. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துதுறை அமைச்சர்)—அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள்.

15. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (தொழில் அமைச்சர்)—பெருந் தொழில்கள், சுரங்கங்கள், கனிப் பொருள்கள், நெசவாலைகள்.

16. மாண்புமிகு திரு. எஸ். என். இராஜேந்திரன் (கைத்தறி-கதர்த்துறை அமைச்சர்)—கைத்தறி, கதர், மது அனுமதிச் சீட்டு வழங்கல் நீங்கலாக மது விலக்கு, பயண இசைவுச் சீட்டு.

17. மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி (அரிசன நலத்துறை அமைச்சர்)—அரிசன நலம், எழுது பொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர், வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

18. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத் துறை அமைச்சர்)—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால் நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NA.

## Governor of Tamil Nadu

## Thiru SADIQ ALI

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Hon. Thiru M.G. RAMACHANDRAN (Chief Minister)—Public General Administration, Planning, Indian Administrative Service District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Public Works Department and Establishment Matters relating ot Pubiic Works Department.

2. Hon. Dr. V.R. NEDUNCHEZHIYAN (Minister for Finance)—Finance, Legislature, Elections, Food, Fisheries, Backward Classes, Youth Service Corps, Price Control and Ex-Servicemen.

3. Hon. Thiru S. RAMACHANDRAN (Minister for Electricity)—Electricity, Iron and Steel Control.

4. Hon. Thiru K.A. KRISHNASAMY (Minister for Rural)—Industries)—Rural Industries including Village, Cottage and Small Industries, Milk, Dairy Development and Registration.

5. Hon. Thiru S.D. SOMASUNDARAM (Minister for Revenue)—Revenue, Commercial Taxes, Excise and Census.

6. Hon. Thiru R.M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments) Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest and Cinchona and Grant of Liquor Pesmits.

7. Hon. Thiru C. ARANGANAYAGAM (Minister for Education)—Education including Technical Education and Official Language.

8. Hon. Thiru K. KALIMUTHU (Minister for Agriculture)—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering.

9. Hon. C. PONNAIYAN (Minister for Co-operation and Law) — Law, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits and Co-operation.

10. Hon. Thiru P. KULANDAIVELU (Minister for Local Administration — Municipal Administration, Panchayats and Panchayat Unions, Community Development, Rural Indebtedeness, Bhoodan and Gramdhan and Highways.

11. Hon. Thiru S. RAGHAVANANDAM (Minister for Labour — Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. Hon. Dr. H.V. HANDE (Minister for Health)—Health.

13. Hon. Thiru K. RAJA MOHAMMED (Minister for Irrigation)—Agro Service Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Wakf.

14. Hon. Thiru S. MUTHUSAMY (Minister for Transport)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

15. Hon. Thiru S. THIRUNAVUKKARASU (Minister for Industries)—Large Scale Industries, Mines and Minesals and Textiles.

16. Hon. Thiru S.N. RAJENDRAN (Minister for Handloom and Khadi)—Handlooms, Khadi, Prohibition excluding grant of Liquor permits and Passports.

17. Hon. Thiru M. VIJAYASARATHY (Minister for Harijan Welfare)—Harijan Welfare, Stationery and Printing, Government Press, News Print Control, Hill Tribes and Bonded Labour and Employment and Training.

18. Hon. Thirumathi GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare) Social Welfare including Women and Children Welfare Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas, Refugees and Evacuees and Correctional Administration.

## தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

**பேரவைத் தலைவர்.**

*மாண்புமிகு திரு. க. இராசாராம்.

**பேரவைத் துணைத் தலைவர்.**

*மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

**† மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.**

1. திரு. வி. வி. சுவாமிநாதன்.
2. திரு. ஜே. எஸ். இராசு.
3. திரு. என். எஸ். வி. சித்தன்.
4. திரு. எஸ். சிவசாமி.

**சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.**

திரு. ஒ. மு. அழகர்சாமி, பி.ஏ.,பி.எல்.

**துணைச் செயலாளர்கள்.**

திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. இரா. பாலகுரு, பி.ஏ.
திரு. பி. எம். பத்மநாபன் நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல்.

**குழு அலுவலர்.**

திரு. ச. பாஷ்யம், பி.ஏ. (ஆனர்ஸ்),

**சார்புச் செயலாளர்கள்.**

திரு. வி. சீதாராமன், பி.காம்.
திரு. பெ. பள்ளிகொண்டபெருமாள், பி.ஏ., பி.எல்.
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.
திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.
திரு. பா. பாலகிருஷ்ணன், பி.காம்.
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி. ஏ.
திரு. டி. எஸ். துளசிராம் (எஸ்டேட் அதிகாரி).

---

* 21–6–1980 அன்று தேர்ந்தெடுக்கப்பெற்றார்கள்.
† 23–1–1981 அன்று நியமனம் செய்யப்பெற்றார்கள்.

**பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்**

திரு. பி. கோதண்டராமன்.

**தலைமை நிருபர்**

திரு. மா. சந்திரசேகரன்.

**விவாதப் பதிப்பாளர்**

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி.லிட்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 1 | அங்குசாமி, திரு. ச. .. .. | திருவாடானை. |
| 2 | அப்துல் ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர். |
| 3 | அப்பாதுரை, திரு. மு. .. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 4 | அம்பிகாபதி, திரு. மு. .. | மன்னார்குடி. |
| 5 | அரங்கநாதன், திரு. எஸ். | தர்மபுரி. |
| 6 | அரங்கநாதன், திரு. மு. .. | கூனூர் (செ.வ.). |
| 7 | அரங்கநாயகம், திரு. செ. .. | கோவை (மேற்கு). |
| 8 | அரங்கராசன், திரு. வெ. .. | உப்பிலியாபுரம். |
| 9 | அருணாசலம், திரு. இரா. .. | நாமக்கல் (செ.வ.). |
| 10 | அழகர்சாமி, திரு. சோ. .. | கோவில்பட்டி. |
| 11 | அன்பழகன், திரு க. .. | புரசைவாக்கம். |
| 12 | அன்பழகன், திரு. தி. .. | நாட்ராம்பள்ளி. |
| 13 | அன்பில் தர்மலிங்கம், திரு. .. | லால்குடி. |
| 14 | ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம். |
| 15 | ஆண்டித்தேவர், திரு. எஸ். .. | உசிலம்பட்டி. |
| 16 | ஆறுமுகம், திரு. எம். .. | அவினாசி (செ.வ.). |
| 17 | சேலம் ஆறுமுகம், திரு. மு. .. | சேலம்-2. |
| 18 | ஆறுமுகம், திரு. த. .. .. | அரியலூர். |
| 19 | இரத்தினம், திரு. எம். வி. .. | பொள்ளாச்சி. |
| 20 | இராசகுமார், திரு. மெ. அ. | மருங்காபுரி. |
| 21 | இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம். |
| 22 | இராசரத்தினம், திரு. து. | பூந்தமல்லி. |
| 23 | இராசாம்பாள், திருமதி. தா. | தலைவாசல் (செ.வ.). |
| 24 | இராசாராம், திரு. க. .. | பனமரத்துப்பட்டி. |
| 25 | இராசாராமன், திரு. எஸ். .. | பாபநாசம். |
| 26 | இராசு, திரு. ஜே. எஸ். .. | பெரம்பலூர் (செ.வ.). |
| 27 | இராசேந்திரன், திரு. எஸ். என். | தூத்துக்குடி. |
| 28 | இராமச்சந்திரன், திரு. எம். ஜி. | மதுரை (மேற்கு). |
| 29 | இராமச்சந்திரன், திரு. கே கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர். |
| 30 | இராமச்சந்திரன், திரு. ச. .. | பண்ருட்டி. |
| 31 | இராமச்சந்திரன், திரு.செஞ்சி ந. | செஞ்சி. |
| 32 | இராமசாமி, திரு. த. .. | இராமநாதபுரம். |
| 33 | இராமசுப்பிரமணியம், திரு. எஸ். | ஸ்ரீவைகுண்டம். |
| 34 | இராமலிங்கம், திரு. ஏ. .. | காட்டுமன்னார் (செ.வ.). |
| 35 | இராமலிங்கம், டாக்டர் கே. பி. | இராசிபுரம். |
| 36 | இராமலிங்கம், திரு. செ. .. | திருவிடைமருதூர். |

| தொடர்எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 37 | இராஜசேகரன், திரு. வெ. .. | இராதாகிருஷ்ண நகர். |
| 38 | இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. | நல்லி. |
| 39 | இராஜேந்திரன், திரு. எஸ். எஸ். | ஆண்டிப்பட்டி. |
| 40 | இளையபெருமாள், திரு. எல். | எழும்பூர் (செ.வ.). |
| 41 | ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | அம்பாசமுத்திரம். |
| 42 | உகம்சந்த், திரு. எஸ். டி. | மதுராந்தகம். |
| 43 | உச்சி, திரு. கே. .. .. | கூடலூர். |
| 44 | உத்திராபதி, திரு. பொ. .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.). |
| 45 | உமாநாத், திரு. ரா. .. | நாகை. |
| 46 | கண்ணன், திரு. ம. .. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 47 | கணபதி, திரு. கே. ஆர். .. | சிதம்பரம். |
| 48 | கணேசன், திரு. இ. .. .. | இடப்பாடி. |
| 49 | கணேசன், திரு. சி. .. | அச்சரப்பாக்கம் (செ.வ.). |
| 50 | கந்தசாமி, திரு. கா. வே. | கிணத்துக்கடவு. |
| 51 | கந்தசாமி, திரு. பி. .. .. | பொங்கலூர். |
| 52 | கபாலி, திரு. டி. கே. .. | மைலாப்பூர். |
| 53 | கருணாநிதி, டாக்டர், மு. .. | அண்ணாநகர். |
| 54 | கருப்பசாமிப் பாண்டியன், திரு. வி. | பாளையங்கோட்டை. |
| 55 | கருப்பையா, திரு. இரா. .. | குளித்தலை. |
| 56 | கருப்பையா, திரு. ஏ. டி. .. | வால்பாறை. |
| 57 | கல்லன், திரு. கே. .. .. | உதகமண்டலம். |
| 58 | கலிதீர்த்தான், திரு. சோ. .. | சங்கராபுரம். |
| 59 | கலியமூர்த்தி, திரு. பெ. .. | மங்களூர் (செ.வ.). |
| 60 | நன்னிலம் கலையரசன், திரு. ஆ. | நன்னிலம் (செ.வ.). |
| 61 | காளிமுத்து, திரு. கா. .. | திருப்பரங்குன்றம். |
| 62 | கிட்டப்பா, திரு. என். .. | மாயவரம். |
| 63 | கிருஷ்ணசாமி, திரு. கா. கோ. | காங்கேயம். |
| 64 | கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ.. .. | ஆயிரம்விளக்கு. |
| 65 | கிருஷ்ணமூர்த்தி, திரு. சா. | ஆண்டிமடம். |
| 66 | கிருஷ்ணமூர்த்தி, திரு. வீ. .. | நெல்லிக்குப்பம். |
| 67 | கிருஷ்ணராஜ், திரு. ஜி. .. | சேலம்-1. |
| 68 | கிருஷ்ணன், திரு. ரா. .. | வாசுதேவநல்லூர். |
| 69 | குப்புசாமி, திரு. என். .. | மொரப்பூர். |
| 70 | குப்புசாமி, திரு. கே... .. | ஒட்டன்சத்திரம். |
| 71 | குப்புசாமி, திரு. செ. .. | வந்தவாசி (செ.வ.). |
| 72 | குமரி அனந்தன், திரு. .. | திருவொற்றியூர். |
| 73 | குருசாமி, திரு. ப. .. .. | அந்தியூர் (செ.வ.). |
| 74 | அண்ணாதாசன், திரு. எம். | திருவரும்பூர். |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெய |
|---|---|---|
| | (1) | (2) |
| 75 | குலசேகர், திரு. ஏ. டி. .. | சிங்காநல்லூர். |
| 76 | குலசேகரப் பாண்டியன், திரு. ந. | வாணியம்பாடி. |
| 77 | குழந்தைவேலு, திரு. ப. .. | உடுமலைப்பேட்டை. |
| 78 | கேசவ ஆதித்தன், திரு. சி... | திருச்செந்தூர். |
| 79 | கோபால், திரு. சி. .. .. | சோளிங்கர். |
| 80 | கோபாலகிருஷ்ணன், திரு. கா. | பெரியகுளம். |
| 81 | கோபாலன், திரு. ஆர். டி. .. | கம்பம். |
| 82 | கோமதி சீனிவாசன், திருமதி .. | வலங்கை. (செ.வ.). |
| 83 | கோவேந்தன், திரு. எம். ஆர். | பேராவூரணி. |
| 84 | கோவைத்தம்பி, திரு .. | பேரூர். |
| 85 | சக்கரபாணி, திரு ஆ .. | பொன்னேரி. |
| 86 | சங்கரய்யா, திரு. என். .. | மதுரை (கிழக்கு). |
| 87 | சட்டநாத கரையாளர், திரு. ம். | தென்காசி. |
| 88 | சண்முகம், திரு. இரா. .. | திருத்தணி. |
| 89 | சண்முகம், திரு. ஏ சி. .. | ஆரணி. |
| 90 | சத்தியமூர்த்தி, திரு வ. .. | கடலாடி. |
| 91 | சந்திரசேகரன், திரு. ஏ. | சோழவந்தான். |
| 92 | சபாபதி, திரு. சி. .. | அரூர் (செ. வ ). |
| 93 | சமரசம், டாக்டர் கே. .. | காவேரிப்பட்டணம். |
| 94 | சாகுல்ஹமீது, திரு ஏ. .. | கடையநல்லூர். |
| 95 | சாமிக்கண்ணு, திரு. தா. .. | செங்கம். |
| 96 | சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம். |
| 97 | சிதம்பரம், திரு. சி த. .. | காரைக்குடி. |
| 98 | சிவசாமி, திரு. செ. .. | இளையான்குடி. |
| 99 | சிவஞானம், திரு ந. .. | திருவோணம். |
| 100 | சிவப்பிரகாசம், திரு சி. | சேந்தமங்கலம் (செ.வ.) |
| 101 | சிவபெருமான், திரு மு. .. | ஓசூர். |
| 102 | சிவராமன், திரு. எஸ். .. | சின்னசேலம். |
| 103 | சின்னசாமி, திரு. எம். .. | கரூர். |
| 104 | சின்னதுரை, திரு. ஏ. .. | மேல்மலையனூர். |
| 105 | சின்னராசு, திரு. சு. இரா. | கிருஷ்ணகிரி. |
| 106 | சின்னராஜ், திரு எம். .. | தொண்டாமுத்தூர். |
| 107 | சுந்தரம், திரு. கே ஆர். .. | குடியாத்தம். |
| 108 | சுந்தரம், திரு ப. .. | திருப்பத்தூர். |
| 109 | சுந்தரம், திரு மு. .. .. | ரிஷிவந்தியம். |
| 110 | சுந்தரமூர்த்தி, திரு. ஆர். | முசிறி. |
| 111 | சுந்தரராஜ், திரு. நா. .. | திருமயம். |
| 112 | சுந்தரராஜன், திரு. மு. .. | விருதுநகர். |
| 113 | சுப்பிரமணியன், திரு. உ. .. | சிவகங்கை. |
| 114 | சுப்பிரமணியன், திரு. கே. எம். எஸ். | போடிநாயக்கனூர். |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
| --- | --- |
| 115 சுப்பிரமணியன், திரு. மா. | திருவையாறு. |
| 116 சுப்பிரமணியன், திரு. வி. | திருநாவலூர். |
| 117 சுப்பிரமணியன், திரு. ஜி. கே. | பவானிசாகர். |
| 118 சுவாமிநாதன், திரு வி. வி... | புவனகிரி. |
| 119 செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபிசெட்டிப்பாளையம். |
| 120 செம்மலை திரு. செ. .. | தாரமங்கலம். |
| 121 செல்லமுத்து, திரு. எம். .. | திருவாரூர் (செ.வ.). |
| 122 செல்வராசன், திரு. அ. .. | துறைமுகம். |
| 123 சென்னிமலை என்கிற கந்தசாமி, திரு. பூ. செ. | அரவக்குறிச்சி. |
| 124 சேதுராமன், திரு. ஏ. எம். | ஆற்காடு. |
| 125 சொக்கலிங்கம், திரு. கே. | திருப்போரூர். |
| 126 சோமசுந்தரம், திரு. எஸ். டி. | பட்டுக்கோட்டை. |
| 127 சோமு, திரு. என். வி. என். | பூங்காநகர். |
| 128 சௌந்திரராசன், திரு கே... | திருச்சி-2. |
| 129 டாக்டர் சௌரிராஜன், திரு. கே. | தி. நகர். |
| 130 தங்கமணி கவுண்டர், திரு. கே. எம். | திண்டிவனம். |
| 131 தங்கராசு, திரு. ஏ. .. | குறிஞ்சிப்பாடி. |
| 132 தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | கிருஷ்ணராயபுரம் (செ. வ.) |
| 133 தங்கவேலு, திரு பி. .. | செயங்கொண்டான். |
| 134 தவசி, திரு. ஆர். .. | பரமக்குடி (செ.வ.). |
| 135 தனபால், திரு ப. .. .. | சங்கரி (செ.வ.). |
| 136 தனுக்கோடித்தேவர், திரு. கே. | முதுகுளத்தூர். |
| 137 தாமரைக்கனி, திரு. இரா. .. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 138 தியாகராசன், திரு. ஆர். .. | விருத்தாசலம். |
| 139 திருச்சி சௌந்திரராஜன், திரு. ஆர். | ஸ்ரீரங்கம். |
| 140 திருநாவுக்கரசு, திரு. எஸ். .. | அறந்தாங்கி. |
| 141 திருமாறன், திரு. பெ. .. | ஆலங்குடி. |
| 142 திருமான், திரு. .. .. | ஏற்காடு (செ.வ.). |
| 143 திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம். |
| 144 தீர்த்தராமன், திரு. ப. .. | பென்னகரம். |
| 145 துரைசாமி, திரு. பி. எஸ். .. | பர்கூர். |
| 146 துரைமுருகன், திரு... .. | ராணிப்பேட்டை. |
| 147 துரைராமசாமி, திரு. .. | வெள்ளக்கோயில். |
| 148 துரைராஜ், திரு பி. .. | சங்கரநாயினார்கோவில் (செ.வ.). |
| 149 தேவராஜ், திரு. வி. எம். .. | வேலூர். |
| 150 நடராசன், திரு. எஸ். .. | தஞ்சாவூர். |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
| --- | --- |
| 151 நரசிம்மன், திரு. பூ. மு. .. | பள்ளிப்பட்டு |
| 152 நல்லப்பன், திரு. தி. கா. .. | பெருந்துறை |
| 153 நவநீதகிருஷ்ணபாண்டியன், திரு | ஆலங்குளம் |
| 154 நாச்சிமுத்து, திரு. கே. பி. .. | மேட்டூர் |
| 155 நாராயணசாமி, திரு. கே. .. | திருவண்ணாமலை |
| 156 நாராயணன், திரு பி. ஜி. .. | பவானி |
| 157 நெடுஞ்செழியன், டாக்டர் இரா | திருநெல்வேலி |
| 158 நெடுமாறன், திரு. ப. .. | மதுரை (மத்திய) |
| 159 பக்கீர் முகமது, திரு. இ. எஸ். எம். | கும்பகோணம் |
| 160 பட்டாபிராமன், திரு. செ. .. | திருவள்ளூர் |
| 161 பம்மல் நல்லதம்பி, திரு. .. | தாம்பரம் |
| 162 பரமசிவ கவுண்டர், திரு. பி. என். | பல்லடம் |
| 163 பலராமன், திரு. இல. .. | போளூர் |
| 164 பழனிசாமி, திரு. சு. .. | மேட்டுப்பாளையம் |
| 165 பழனிமுத்து, திரு. சி. .. | ஆத்தூர் |
| 166 பழனியப்பன், திரு. கு. ப. .. | விழுப்புரம் |
| 167 பழனிவேல், திரு. என். .. | பழனி (செ வ) |
| 168 பாண்டியன், திரு. பி. எச். .. | சேரன்மாதேவி |
| 169 பாபு கோவிந்தராஜன், திரு. | கடலூர் |
| 170 பாபு ஜனார்த்தனன், திரு. | செய்யாறு |
| 171 பாரமலை, திரு. க. .. | மானாமதுரை (செவ.) |
| 172 பாலகிருஷ்ணன், திரு. ச. .. | மொடக்குறிச்சி |
| 173 பாலகிருஷ்ணன், திரு. வி. | சிவகாசி |
| 174 பாலசுப்பிரமணியன், திரு. க. | சீர்காழி (செ.வ.) |
| 175 வேடசந்தூர் பாலசுப்பிரமணியன், திரு. வி. பி. | வேடசந்தூர் |
| 176 பாலன், திரு. சு. | பெரம்பூர் (செ.வ.) |
| 177 பாலுச்சாமி, திரு. ஏ. .. | சமயநல்லூர் (செ.வ.) |
| 178 பிச்சை, திரு. எம். | அருப்புக்கோட்டை |
| 179 பிரபாகரன், திரு. ஜே.சி.டி. | வில்லிவாக்கம் |
| 180 புருஷோத்தமன், திரு. து. .. | சைதாப்பேட்டை |
| 181 பூங்காவனம், திரு. என்.ஏ. | காட்பாடி |
| 182 பெரியசாமி, திரு. ஏ. .. | தாராபுரம் (செ.வ.) |
| 183 பெரியசாமி, திரு.ரா. .. | தொட்டியம் (செ.வ.) |
| 184 பெருமாள், திரு. என். .. | வரகூர் (செ.வ.) |
| 185 பெருமாள், திரு.ரா.கு. .. | விளாத்திகுளம் |
| 186 பொன்னம்மாள், திருமதி. ஏ.எஸ். | நிலக்கோட்டை (செ.வ.) |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 187 | பொன்னுரங்கம், திரு. ப. .. | ராயபுரம் |
| 188 | பொன்னையன், திரு. சி. .. | திருச்செங்கோடு |
| 189 | மணி, திரு. டி. .. .. | சிவாவங்கோடு |
| 190 | மணிமாறன், திரு. ஆர். .. | திருப்பூர். |
| 191 | மாணிக்கம், திரு. எம்.எஸ். | வேதாரண்யம் |
| 192 | மாரிமுத்து, திரு. த. .. | குளத்தூர் (செ.வ.) |
| 193 | முகமது இஸ்மாயில், திரு. பி. | பத்மநாபபுரம். |
| 194 | முசிறிப்புத்தன், திரு. ம. .. | திருச்சி 11 |
| 195 | முத்துக்கிருஷ்ணன், திரு. சு. | கன்னியாகுமரி |
| 196 | முத்துசாமி, திரு. சு. .. | ஈரோடு |
| 197 | முத்துராமலிங்கம், திரு. இ. | ராதாபுரம் |
| 198 | முத்துவேல், திரு. என். .. | வானூர் (செ.வ.) |
| 199 | மூத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 200 | முனிரத்தினம், திரு. இரா.சா. | கும்மிடிபூண்டி |
| 201 | முனுசாமி, திரு. மு.ப. .. | பாலக்கோடு |
| 202 | மூர்த்தி, திரு. ஜி. .. .. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 203 | மொக்கையன், திரு. பி. .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 204 | யசோதா, திருமதி. டி. .. | ஸ்ரீ பெரும்புதூர் (செ.வ.) |
| 205 | ரகுமான்கான், திரு. அ. .. | சேப்பாக்கம் |
| 206 | ரங்கசாமி, திரு. ஆர். .. | சத்தியமங்கலம் |
| 207 | ரங்கசாமி, திரு. க. .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 208 | ரமணி, திரு. கு. .. .. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 209 | ராமசாமி, திரு. எஸ்.என். .. | சாத்தான்குளம் |
| 210 | ராஜமாணிக்கம், திரு. எஸ்.கே. | முசிறி |
| 211 | ரெத்தினராஜ், திரு. எஸ். .. | குளச்சல் |
| 212 | வரதராஜன், திரு. என். .. | திண்டுக்கல் |
| 213 | (வெற்றிடம்) | |
| 214 | விசயலட்சுமி, செல்வி. வி. .. | வீரபாண்டி |
| 215 | வின்செண்ட், திரு. மி. .. | நாகர்கோவில் |
| 216 | விஜயசாரதி, திரு. எம். .. | அரக்கோணம் (செ.வ.) |
| 217 | விஜயபாலன், திரு. என். .. | பூம்புகார். |
| 218 | விஜயரெகுநாத தொண்டமான் | புதுக்கோட்டை |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 219 | விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர் |
| 220 | விஸ்வநாதன், திரு. கோ. .. | அணைக்கட்டு |
| 221 | வீராசாமி, திரு. த. .. .. | ஒரத்தநாடு |
| 222 | வீராணம்பலம், திரு. க.வெ. .. | பேரூர் |
| 223 | வெங்கடசுப்பிரமணியம், திரு. ப. | காஞ்சி |
| 224 | வெங்கடரெட்டி, திரு. டி. .. | ஓசூர் |
| 225 | வெங்கடேசன், திரு. பி.எம். | பெரணமல்லூர் |
| 226 | வெள்ளைச்சாமி, திரு. அ. .. | ஆத்தூர் |
| 227 | வேணுகோபால், திரு. த. .. | தண்டராம்பட்டு |
| 228 | வேலப்பன், திரு. சி.வி. .. | கபிலர் மலை |
| 229 | ஜகத்ரட்சகன், திரு. எஸ். .. | உத்திரமேரூர் |
| 230 | ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குனேரி |
| 231 | ஜெகதீசன், ஆரூர், திரு. பு.கோ. | செங்கல்பட்டு |
| 232 | ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி |
| 233 | ஹாஜா செரீப், திரு. கே.எஸ்.ஜி. | திருவல்லிக்கேணி |
| 234 | ஹேமச்சந்திரன், திரு. ஜே. .. | திருவட்டார் |
| 235 | மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ், திருமதி. | நியமன உறுப்பினர் |

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்கள்.

1. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்—அமைச்சர்.
2. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்—அமைச்சர்
3. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே—அமைச்சர்.
4. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது—அமைச்சர்.
5. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி—தலைமை வழக்கறிஞர்.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஏழாவது சட்டமன்றப் பேரவையின் இரண்டாவது கூட்டத்தொடர்.

1981 சனவரி 22, 23, 24 மற்றும் 27-ஆம் நாட்கள்.


பக்கங்கள்

அ

அங்குசாமி, திரு. ச.—

சிறு விவசாயிகள், கடன்கள் ரத்து 66

அண்ணாதாசன், திரு. எம்.—

ஆளுநர் உரை (தீ) 169—173

அப்பாதுரை, திரு. மு.—

ஆளுநர் உரை (தீ) 483—488

சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் 54

அரங்கநாதன், திரு. எஸ்.—

தர்மபுரி கலைக் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பு வகுப்புகள் 60

அரங்கநாயகம், திரு. செ.—

ஆளுநர் உரை (தீ) 255

அரங்கராசன், திரு. வெ.—

ஆளுநர் உரை (தீ) 306—309

துறையூர் நகருக்குக் குடிநீர் வழங்கல் 75

பொங்காலைக் கோம்பை ஏரித் திட்டம் 82

அரிசன நலம்—

இலவச வீடு கட்டும் திட்டம் 90—93

வீடு கட்டும் திட்டம், 1980-81

பக்கங்கள்

அ—தொடர்ச்சி.

**அலுவலகங்கள்—**

திருவொற்றியூரில் ஆணைக் கருவூலம் அமைத்தல் 329—331

**அழகர்சாமி, திரு. சோ.—**

வால்மீகி, திரு. வி. (இ.கு.) 10—11

விஷ்ணுராம் மேதி, திரு. (இ.கு.) 10—11

**அறநிலையங்கள்—**

"முரசொலி"க்கு இந்து கோயில்கள் அளித்துள்ள ஆயுள் சந்தா தொகை 338—340

**அறிக்கை அளித்தல்—**

விடுதலைப் போராட்ட வீரர்கள், ஓய்வூதியம் அதிகரித்தல் 435—438

**அறிவிப்புகள்—**

கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 (ஆ.இ.) 376

விற்பனை வரி (திருத்தம், ரத்து) சட்ட முன்வடிவு, 1981 (ஆ.இ.) 375

**அன்பழகன், திரு. க.—**

ஆளுநர் உரை (தி) 128

பாலாற்றின் குறுக்கே தரைப்பாலம் 349

ஆ

**ஆண்டி அம்பலம், திரு. எம்.—**

முத்தரையர் வகுப்பு 210—212

**ஆண்டித்தேவர், திரு. எஸ்.—**

வால்மீகி, திரு. வி. (இ.தீ.) 12—13

விஷ்ணுராம் மேதி, திரு. (இ.தீ.) 12—13

**ஆறுமுகம், திரு. எம்.—**

கோவை, இ.எஸ்.ஐ. மருத்துவமனை 76—78

**ஆறுமுகம், சேலம் திரு. மு.—**

ஆளுநர் உரை (தீ) 484—491





பக்கங்கள்

ஆ—தொடர்ச்சி.

**ஆறுமுகம், திரு. த.—**

அரியலூர் கலைக் கல்லூரி, பி.காம்., எம்.ஏ. படிப்புகளுக்கான வகுப்புகள் 61

**ஆனூர் ஜகதீசன், திரு. பு. கோ.—**

ஆளுநர் உரை (தீ) 389—393

இ

**இயற்கை சீற்றங்கள்—**

வறட்சி நிலையைப் போக்க செயற்கை மழை 220—221

**இரங்கல் குறிப்பு—**

இராமசாமி முதலியார், திரு. வி. எா். (முன்னாள் உறுப்பினர்) 1—2

சந்திரன் ஜெயபால், திரு. இரா. எ. (முன்னாள் உறுப்பினர்) 1—2

சம்பந்தம், திரு. கே. ஆர். (முன்னாள் உறுப்பினர்) 1—2

சுயம்பிரகாசம், திரு. எஸ். (முன்னாள் உறுப்பினர்) 1—2

பாலகிருஷ்ணன், திரு. எ. ஜி. (முன்னாள் உறுப்பினர்) 1—2

பீர் முஹம்மது, திரு. ஹாஜி ம. மு. (முன்னாள் உறுப்பினர்) 53—54

மணி, திரு. எம். எஸ். (முன்னாள் உறுப்பினர்) 1—2

ராஜகோபால், திரு. கே. எம். (முன்னாள் உறுப்பினர்) 1—2

**இரங்கல் தீர்மானங்கள்—**

வால்மீகி, திரு. வி. (உறுப்பினர்)

விஷ்ணுராம் மேதி, திரு. (முன்னாள் ஆளுநர்) 3—20

**இராசாராமன், திரு. எஸ்.—**

தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம், தஞ்சையில் விஸ்தரிப்பு 365

**இராசு, திரு. ஜே. எஸ்.**

ஆளுநர் உரை (தீ) 380—381

498—503

தழுதாழை கிராமத்தில் ஏரி அமைக்க நில ஆர்ஜிதம்

பக்கங்கள்

இ—தொடர்ச்சி.

**இராமச்சந்திரன், திரு. எம். ஜி.—**
ஆளுநர் உரை (தீ) 216, 258

**இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந.—**
ஆளுநர் உரை (தீ) 312—316

**இராமசாமி, திரு. எஸ். என்.—**
மீனவரிடையே தகராறுகள் 199—204

**இராமசாமி, திரு. த.—**
மீன்வளப் பயிற்சி நிலையம், மண்டபம் 201—206

**இராமலிங்கம், டாக்டர் கே. பி.—**
கொல்லி மலைப் பகுதியில் பழரசத் தொழிற்சாலை 83

**இராமலிங்கம், திரு. செ.—**
ஆளுநர் உரை (தீ) 472—477
திருவிடைமருதூர் வட்டத்தில் குறுவை சாகுபடி நெல் விதைகள் தட்டுப்பாடு 216

**இராஜமாணிக்கம், திரு. எம். கே.—**
மண்ணச்சநல்லூர் பேரூராட்சி, வரி வசூல் ஊழல் 353

**இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா.—**
ஆட்டோ அனலைசர், சென்னை மருத்துவக் கல்லூரியில் பயன்படுத்தல் 361

**இளையபெருமாள், திரு. எல்.—**
ஆளுநர் உரை (தீ) 383—389
477—482

ஈ

**ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி.—**
சங்கு குளிக்கும் தொழிலாளருக்கு ஊக்கத்தொகை 332—334
விசைத் தறித் தொழிலாளர் நலப் பாதுகாப்புச் சட்டம் 72





பக்கங்கள்

உ

**உகம்சந்த், திரு. எஸ். டி.—**
ஆளுநர் உரை (தீ) 467—471

**உணவகங்கள்—**
பெரம்பூர், இறைச்சிக்கடை, சீர்படுத்தும் திட்டம் 363—365

**உத்திராபதி, திரு. பொ.—**
ஆளுநர் உரை (தீ) 287—292
திருத்துறைப்பூண்டி, குடிநீர் வழங்கல் 78

**உமாநாத், திரு. ரா.—**
ஆளுநர் உரை (தீ) 401—413

**உள்ளாட்சிகள்—**
மணச்சநல்லூர் பேரூராட்சி வசூலில் ஊழல் 353

ஏ

**ஏடுகள்—**
பேரவை முன் வைக்கப்பெற்றவை 21—51
174—175
323—324
512—514

க

**கருணாநிதி, டாக்டர் மு.—**
ஆளுநர் உரை (தீ) 115, 116
வால்மீகி, திரு. வி. (இ.தீ.) 6—8
விஷ்ணுராம் மேதி, திரு. (இ.தீ.) 6—8

**கருப்பையா, திரு. இரா.—**
ஆளுநர் உரை (தீ) 155—163
திருச்சி, லால்குடி கேந்திர கிராம நிலையங்கள் மாற்றல் 232—233

**கலிதீர்த்தான், திரு. சோ.—**
சங்கராபுரம் மருத்துவமனைக்கு பெண் டாக்டர் நியமனம் 231—232

பக்கங்கள்

க—தொடர்ச்சி.

**கலையரசன், திரு. நன்னிலம் அ.—**

ஆளுநர் உரை (தீ) 138—141

**கல்லூரிகள்—**

அரியலூர், கலைக் கல்லூரி, பி.காம்., எம்.ஏ. படிப்புகளுக்கான வகுப்புகள் 61—65

கரூர், கலைக் கல்லூரியில் பி.காம். பட்டப் படிப்பு 59—60

தர்மபுரி, கலைக் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு வகுப்புகள் 60—61

**கால்நடைகள்—**

திருச்சி, லால்குடி கேந்திர கிராம நிலையங்களை மாற்றல் 232—233

தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம், தஞ்சையில் விஸ்தரிப்பு 365

**காளிமுத்து, திரு. கா.—**

நிலமேம்பாட்டு வாரியம், தேர்தல் (தீ) 236—237

வேளாண்மைப் பல்கலைக் கழக வாரியம், தேர்தல் (தீ) 236

**கிட்டப்பா, திரு. என்.—**

ஆளுநர் உரை (தீ) 381

பெரியார் வாழ்க்கை வரலாறு 340—342

**கிருட்டிணமூர்த்தி, திரு. சா.—**

ஆளுநர் உரை (தீ) 151—155

**கிருஷ்ணமூர்த்தி, திரு. வி.—**

ஆளுநர் உரை (தீ) 113—132

**கிருஷ்ணன், திரு. ரா.—**

திருநெல்வேலி மாவட்டம், தொழிலில் பின்தங்கிய பகுதிகள் 84

**குடிநீர்—**

திருத்துறைப்பூண்டி, வழங்கல் 78—79

[illegible] 78—78



பக்கங்கள்

க—தொடர்ச்சி.

**குமரி அனந்தன், திரு.**

திருவொற்றியூருக்கு துணைக் கருவூலம் 329—331

வால்மீகி, திரு. வி. (இ.தீ.) 11—12

விஷ்ணுராம் மேதி, திரு. (இ.தீ.) 11—12

**குலசேகரபாண்டியன், திரு. த.—**

ஆளுநர் உரை (தீ) 421—424

**குழந்தைவேலு, திரு. ப.—**

ஆளுநர் உரை (தீ) 114, 115

**குழுக்கள்—**

மதிப்பீட்டுக்குழு, தேர்தல் (தீ) 235—236

**கூட்டுறவு—**

காஞ்சிபுரம், நூற்பாலை 362—363

**கேசவ ஆதித்தன், திரு. சி.—**

"முரசொலி"-க்கு இந்து கோயில்கள் அளித்துள்ள ஆயுள் சந்தா தொகை 338—340

**கோபாலன், திரு. ஆர். டி.—**

கம்பம் மற்றும் கடலூர் மருத்துவமனைகளில் மின்வசதி 354—357

**கோபால், திரு. சி.—**

சோளிங்கர், பால் குளிரூட்டும் நிலையம் 213—214

**சங்கரய்யா, திரு. என்.—**

வால்மீகி, திரு. வி. (இ.தீ.)

விஷ்ணுராம் மேதி, திரு. (இ.தீ.)

| | பக்கங்கள் |
|---|---|
| **ச—தொடர்ச்சி.** | |
| **சட்ட முன்வடிவுகள்—** | |
| கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 (அறி.) | 376 |
| பொது வஃபுகள் (காலவரையின்றி நீட்டித்தல்) திருத்த சட்ட முன்வடிவு, 1981 (அறி.) | 376 |
| விற்பனை வரி (திருத்தம், ரத்து) சட்ட முன்வடிவு, 1981 (அறி.) | 375 |
| **சட்டநாதகரையாளர், திரு. கி.—** | |
| வால்மீகி, திரு. வி. (இ.தி.) | 16—18 |
| விஷ்ணுராம் மேதி, திரு. (இ.தி.) | 16—18 |
| **சண்முகம், திரு. ஏ. சி.—** | |
| சுங்குவார்சத்திரம் பேருந்து நிலையத்தில் கழிப்பிட வசதி | 352—353 |
| **சத்தியமூர்த்தி, திரு. வ.—** | |
| ஆளுநர் உரை (தி) | 296—298 |
| **சமரசம், டாக்டர் கே.—** | |
| ஆளுநர் உரை (தி) | 258—266 |
| **சமூக நலன்—** | |
| பின்தங்கிய மாணவர் உதவித் தொகை | 325—329 |
| முத்தரையர் வகுப்பு | 210—212 |
| ஜவ்வாதுமலை பழங்குடி மக்களுக்குச் சிறப்புத் திட்டம் | 95—97 |
| **சர்க்கரை—** | |
| விற்பனை | 206—210 |
| **சாகுல் ஹமீது, திரு. ஏ.—** | |
| கடையநல்லூர் கூட்டுறவு சங்கத்திற்கு வழங்கப்பட்ட நூல் | 381 |
| விஷ்ணுராம் மேதி, திரு. (இ.தீ.) | 18 |
| வால்மீகி, திரு. வி. (இ.தீ.) | 18 |
| **சித்தன், திரு. என். எஸ். வி.—** | |
| சென்னையில் சஞ்சாய் காந்திக்குச் சிலை | 229 |

| | பக்கங்கள் |
|---|---|
| **ச—தொடர்ச்சி.** | |
| **சிவசாமி, திரு. செ.—** | |
| விவசாயக் கிடங்குகள், புதிதாக ஆரம்பித்தல் | 216—218 |
| **சிவஞானம், திரு. ந.—** | |
| ஒரத்தநாடு, இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் | 71 |
| **சிவப்பிரகாசம், திரு. செ.—** | |
| கொல்லிமலைப் பகுதியில் பழரசத் தொழிற்சாலை | 83 |
| **சின்னசாமி, திரு. எம்.—** | |
| ஆளுநர் உரை (தி.) | 503—507 |
| கரூர் கலைக் கல்லூரியில் பி.காம். பட்டப் படிப்பு | 58 |
| **சின்னராசு, திரு. க. இரா.—** | |
| ஆளுநர் உரை (தீ.) | 393—396 |
| சுப்பிரமணிய சிவா, நினைவுச் சின்னம் | 345—348 |
| **சின்னராஜ், திரு. எம்.—** | |
| சங்கனூர்—கணபதி பகுதிகளுக்கு நல்வாழ்வு வசதிகள் | 226—229 |
| **சுகாதாரம்—** | |
| சங்கனூர்—கணபதி பகுதிகளுக்கு நல்வாழ்வு வசதிகள் | 226—229 |
| **சுந்தரம், திரு. கு.—** | |
| திருப்பத்தூர் ஒன்றியம்—புதுப் பாலங்கள் கட்டுதல் | 218—219 |
| **சுந்தரராஜ், திரு. நா.—** | |
| வால்மீகி, திரு. வி. (இ.தீ.) | |
| விஷ்ணுராம் மேதி, திரு. (இ.தீ.) | 8—10 |
| **சுப்பிரமணியம், திரு. உ.—** | |
| வால்மீகி, திரு. வி. (இ.தீ) | 18—20 |
| விஷ்ணுராம் மேதி, திரு. (இ.தீ.) | 18—20 |
| **செங்கோட்டையன், திரு. கு. அ.—** | |
| பெருந்தலையூர்-மேட்டுப்பாளையம் குளம், சீரமைத்தல் | 80 |

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

செம்மலை, திரு. செ.—
ஆளுநர் உரை (தீ) 276—280

சே.

சேதுராமன், திரு. ஏ. எம்.—
ஆளுநர் உரை (தீ) 292—295
இராணிப்பேட்டை பாய்லர் தொழிற்சாலை 86

சோமசுந்தரம், திரு. எஸ். டி.—
ஆளுநர் உரை (தீ) 126—127

சோமு, திரு. என். வி. என்.—
ஆளுநர் உரை (தீ) 441—451

சௌரிராஜன், டாக்டர் கே.—
ஆளுநர் உரை (தீ) 298—302

த.

தகவல் கோரல்—
ஆளுநர் உரை மீதான விவாதத்தின்போது கவன ஈர்ப்பு, ஒத்திவைப்பு தீர்மானம் எடுக்கப்படாமை குறித்து 366—369
உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் 98— 99, 240

தங்கமணி, திரு. கே. எம்.—
ஆளுநர் உரை (தீ.) 271—276

தங்கவேல்ராஜ், திரு. பி. எம்.—
ஆளுநர் உரை (தீ) 132—138

தலைவர்—
அறிவிப்புகள்—
உறுப்பினர் உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்த உறுதி மொழி 98





த—தொடர்ச்சி.

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி.

அறிவிப்புகள்—தொடர்ச்சி.
நில மேம்பாட்டு வாரியம், தேர்தல் 239—240
மதிப்பீட்டுக் குழு, தேர்தல் 236
மாற்றுத் தலைவர் பட்டியல் 98
வேளாண்மைப் பல்கலைக் கழக வாரியம், தேர்தல் 238

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—
உரிமைப் பிரச்னை—
உறுப்பினர் ஒருவர் தாம் கொடுத்த உரிமைப் பிரச்னை குறித்து தகவல் கோரியபோது, தலைவர் கீழ்க் கண்டவாறு தீர்ப்புரைத்தார்:—
"அதை என் அறையில் கேட்க வேண்டும். அது பரிசீலனையில் இருக்கிறது. ஆளுநர் உரை மீதான விவாதம் முடிந்தபிறகு இப்படிப்பட்ட பிரச்னைகள் எடுத்துக்கொள்வது பற்றி முடிவு செய்யப்படும்" 366

குறுக்கீடு—
உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை தாங்கள் பேசும்பொழுது சொல்லலாம் அல்லது தங்கள் கட்சியினர் பேசுகின்றபொழுது சொல்லச் சொல்வது பொருத்தமாக இருக்கும். ஒருவர் பேசும்போது குறுக்கிட்டுக் கொண்டே போனால் நேரம் அதிகமாகும். (ஆ.உ.) 430

குற்றச்சாட்டு—
அவையிலே இல்லாத ஒருவரைப் பற்றி சொல்லக் கூடாது. (ஆ.உ.) 132
(1) பத்திரிகையில் வந்துள்ளதை ஆதாரமாக வைத்து பேரவையில் குற்றச்சாட்டு கூறக்கூடாது;

## த—தொடர்ச்சி.


பக்கங்கள்

லைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

குற்றச்சாட்டு—தொடர்ச்சி.

(2) பத்திரிகையில் வந்துள்ளதைக் குறிப்பிட்டுப் பேச வேண்டுமென்றால் தலைவரிடம் முன்கூட்டியே அப் பத்திரிகையைக் காட்டிவிட்டு அவரது அனுமதி பெற்றே சொல்ல வேண்டும்.

தகவல் கோரல்—

ஆளுநர் உரையின் மீது விவாதம் நடந்து கொண்டிருக்கும்பொழுது எல்லாப் பிரச்னைகளும் குறித்து பேச வாய்ப்பு இருப்பதால் அந்த நாட்களில் கவன ஈர்ப்பு, ஒத்திவைப்புத் தீர்மானம் போன்றவை எடுத்துக் கொள்ளப் பெறுவதில்லை 367

தன்னிலை விளக்கம்—

தன்னிலை விளக்கத்தின் மீது எவ்வித விவாதமும் இருத்தல் கூடாது 374

நடைமுறை—

அனுமதி இல்லாமல் பேசக் கூடாது (ஆ.உ.) 358

ஆளுநர் உரை மீதான விவாதத்தின் போது முக்கியமாக இருந்தாலன்றி ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக் கொள்வது மரபு அல்ல (த.கோ.) 220

"பேரவைத் தலைவர் அனுமதியின் பேரில் உறுப்பினர் ஒருவர் தன்னிலை விளக்கம் ஒன்றினை அளிக்கலாம். ஆனால், அப்போது சர்ச்சைக்குரிய பொருள் எதையும் கொண்டு வரக் கூடாது. எவ்வித விவாதமும் இருத்தல் கூடாது" 375

"போட்டோ, போட்டோஸ்டேட் காப்பி ஆகியவற்றை அவையில் காட்டி ரெபர் செய்து பேச வேண்டுமென்றால் முதலில் தலைவரிடம் காட்டி அவரது முன் அனுமதி பெறாமல் பேசக்கூடாது" 120




## நீ—தொடர்ச்சி.


பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

நீக்கம்—

"ஆளுநர் அவர்களை நியமிக்கின்ற அதிகாரம் மத்திய அரசைச் சார்ந்தது. ஆகவே, அதைப்பற்றி விவாதிக்க அவைக்கு உரிமை இல்லை" என்பதாக குறிப்புரைக்கப்பெற்று அதுபற்றி கேட்கப்பெற்றது, நீக்கப் பெற்றது. 99

"பத்திரிகையில் வருவதை ஆதாரமாகக் கொள்ளக் கூடாது" என்று குறிப்பிடப்பெற்று அவ்வாறு குறிப்பிடப்பட்ட பகுதி நீக்கப்பெற்றது 129

"துணை வினாவில் குற்றச்சாட்டு இருத்தல் கூடாது" எனக் குறிப்புரைக்கப் பெற்று அவ்வாறு குறிப்பிடப் பெற்ற பகுதி நீக்கப் பெற்றது. 207

"ஆதாரம் இருக்கிறது; கொண்டுவந்து காட்டுகிறேன்" எனக் கூறப்பெற்ற குற்றச்சாட்டு, ஆதாரம் காட்டும் வரை அவைக் குறிப்பில் வர வேண்டாம் என நீக்கப் பெற்றது. 250, 251

பேசும் முறை—

"உறுப்பினர்கள், அமைச்சர்கள் பெயரைக் குறிப்பிடும் போது மாண்புமிகு எனக் குறிப்பிடுவது மரபு" (ஆ.உ.). 115—116

"சவால் விடக் கூடாது" (வி) 255

"மறைமுகமாக, இன்னொரு திரித்துப் பேசுவதைத் தவிர்க்க வேண்டும்" (ஆ.உ.) 117—118

மரபு—

"தலைவரின் அனுமதி பெற்று தான் பத்திரிகையில் இருந்து படிக்க வேண்டும்" (ஆ.உ.). 264

விவாதம்—

"ஆளுநர் உரையில் இருக்கின்ற விஷயங்களைப் பற்றி மட்டும் பேச வேண்டும் (ஆ.உ.). 120

த—தொடர்ச்சி.


| | பக்கங்கள் |
|---|---|
| **தலைவர்—தொடர்ச்சி.** | |
| தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி. | |
| வினாக்கள்-விடைகள்— | |
| "ஒரே கேள்வியைத் திரும்பத் திரும்பக் கேட்கக் கூடாது" (து.வி.) | 338 |
| "குற்றச்சாட்டு இன்றி கேள்வி கேட்க வேண்டும்" (து.வி.) | 207, 229 |
| "கேள்வி நேரத்தில் விளக்கமளிக்கேஷன் கேட்கக் கூடாது" (து.வி.) | 85 |
| "கேள்வி நேரம் விண்ணப்பங்கள் செய்கின்ற நேரமில்லை" (து.வி.) | 68 |
| "கேள்வியாகக் கேட்க வேண்டும், விவரங்கள் சொல்லக் கூடாது" (து.வி.) | 222 |
| "சுருக்கமாகத் துணைக் கேள்வி இருக்க வேண்டும்" (து.வி.) | 206, 209 |
| "பொதுவான கேள்விகள் கேட்பது கூடாது" (து.வி.) | 72, 76 |
| "மூலக் கேள்விகளையொட்டி கேட்க கேள்வி வேண்டும்" (து.வி.) | 338, 363 |
| **தனுக்கோடித் தேவர், திரு. கே.—** | |
| ஆளுநர் உரை (தீ) | 309—312 |
| **தன்னிலை விளக்கம்—** | |
| மருத்துவக் கல்லூரி மாணவர்கள் தேர்வு | 266—271 |
| வனத்துறை அமைச்சர், சிவப்பு சந்தன மரம் குறித்து | 369—375 |
| **தாமரைக்கனி, திரு. இரா.—** | |
| கம்பம் மற்றும் கூடலூர் மருத்துவமனைகளில் மின்வசதி | 354—357 |
| சர்க்கரை விற்பனை | 206—210 |
| **திருநாவுக்கரசு, திரு. எஸ்.—** | |
| ஆளுநர் உரை (தீ) | 252—269 |
| **திருமாறன், திரு. பெ.—** | |
| ஆளுநர் உரை (தீ) | 511—512 |




த—தொடர்ச்சி.


| | பக்கங்கள் |
|---|---|
| **திருவேங்கடம், திரு. பெ. சு.—** | |
| ஆளுநர் உரை (தீ) | 379, 383—389 |
| ஏலத்தூர் மோட்டூர் தொழுநோய் தடுப்பு நிலையம் மாற்றல் | 229—231 |


## தீ.


| | |
|---|---|
| **தீர்மானங்கள்—** | |
| ஆளுநர் உரை, நன்றி நவிலல் | 99—173, 240—322, 379—512 |
| [illegible] | |
| நில மேம்பாட்டு வாரியம் தேர்தல் | 236—237 |
| மதிப்பீட்டுக் குழு, தேர்தல் | 235—236 |
| வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியம், தேர்தல் | 238 |
| **துரைராஜ், திரு. பி.—** | |
| ஆளுநர் உரை (தீ) | 430—435 |
| **தேசத் தலைவர்கள்—** | |
| பெரியார் வாழ்க்கை வரலாறு | 340—342 |
| **தொழிலாளர்கள்—** | |
| விசைத் தறித் தொழிலாளர்கள் நலப் பாதுகாப்புச் சட்டம் | 72—75 |
| **தொழில்கள்—** | |
| இராணிப்பேட்டை பாய்லர் தொழிற்சாலை | 86—90 |
| சென்னை நார் பொருள் தயாரிக்கும் பயிற்சி நிலையம், குமரி மாவட்டம் | 334—336 |
| திருநெல்வேலி மாவட்டம், தொழிலில் பின்தங்கிய பகுதிகள் | 84—86 |
| **தொழிற்சாலைகள்—** | |
| கொல்லிமலைப் பகுதியில் பழாசத் தொழிற்சாலை | 83—84 |

த—தொடர்ச்சி.

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

வினாக்கள்-விடைகள்—

"ஒரே கேள்வியைத் திரும்பத் திரும்பக் கேட்கக் கூடாது" (து.வி.) 328

"குற்றச்சாட்டு இன்றி கேள்வி கேட்க வேண்டும்" (து.வி.) 207, 229

"கேள்வி நேரத்தில் கிளாரிபிகேஷன் கேட்கக் கூடாது" (து.வி.) 85

"கேள்வி நேரம் விண்ணப்பங்கள் செய்கின்ற நேரமில்லை" (து.வி.) 68

"கேள்வியாகக் கேட்க வேண்டும், விவரங்கள் சொல்லக் கூடாது" (து.வி.) 222

"சுருக்கமாகத் துணைக் கேள்வி இருக்க வேண்டும்" (து.வி.) 206, 209

"பொதுவான கேள்விகள் கேட்பது கூடாது" (து.வி.) 72, 76

"மூலக் கேள்விகளையொட்டி கேட்க கேள்வி வேண்டும்" (து.வி.) 338, 363

தனுக்கோடித் தேவர், திரு. கே.—

ஆளுநர் உரை (தீ) 309—312

தன்னிலை விளக்கம்—

மருத்துவக் கல்லூரி மாணவர்கள் தேர்வு 266—271

வனத்துறை அமைச்சர், சிவப்பு சந்தன மரம் குறித்து 369—375

தாமரைக்கனி, திரு. இரா.—

கம்பம் மற்றும் கூடலூர் மருத்துவமனைகளில் மின்வசதி 354—357

சர்க்கரை விற்பனை 206—210

திருநாவுக்கரசு, திரு. எஸ்.—

ஆளுநர் உரை (தி) 252—269

திருமாறன், திரு. பெ.—

ஆளுநர் உரை (தீ) 511—512

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

திருவேங்கடம், திரு. பெ. சு.—

ஆளுநர் உரை (தி) 379, 383—389

ஏலத்தூர் மோட்டூர் தொழுநோய் தடுப்பு நிலையம் மாற்றல் 229—231

தீ.

தீர்மானங்கள்—

ஆளுநர் உரை, நன்றி நவிலல் 99—173, 240—322

[illegible] 379—512

நில மேம்பாட்டு வாரியம் தேர்தல் 236—237

மதிப்பீட்டுக் குழு, தேர்தல் 235—236

வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியம், தேர்தல் 238

துரைராஜ், திரு. பி.—

ஆளுநர் உரை (தி) 430—435

தேசத் தலைவர்கள்—

பெரியார் வாழ்க்கை வரலாறு 340—342

தொழிலாளர்கள்—

விசைத் தறித் தொழிலாளர்கள் நலப் பாதுகாப்புச் சட்டம் 72—75

தொழில்கள்—

இராணிப்பேட்டை பாய்லர் தொழிற்சாலை 86—90

சென்னை நார் பொருள் தயாரிக்கும் பயிற்சி நிலையம், குமரி மாவட்டம் 334—336

திருநெல்வேலி மாவட்டம், தொழிலில் பின்தங்கிய பகுதிகள் 84—86

தொழிற்சாலைகள்—

கொல்லிமலைப் பகுதியில் பழரசத் தொழிற்சாலை 83—84

பக்கங்கள்

## ந.

**நல்வாழ்வு—**

கங்குவார்சத்திரம் பேருந்து நிலையத்தில் கழிப்பிட வசதி 352—3[illegible]

**நல்லப்பன், திரு. தி. கா.—**

ஆளுநர் உரை (தி) 417—420

**நவநீதகிருஷ்ணபாண்டியன், திரு. ஆர்.—**

ஆளுநர் உரை (தி) 436—441

**நாராயணசாமி, திரு. கே.—**

ஹோமியோபதி மருத்துவமனைகள், வளர்ச்சிக்கு ஒதுக்கப்பட்ட தொகை 357—361

**நிதி அலுவல்கள்—**

வரவு-செலவுத் திட்டம், 1980-81, முதல் துணை நிதிநிலை அறிக்கை 377—379

**நிலம்—**

கோதையாறு பகுதியில் ஆக்கிரமிப்பு 342—345

**நினைவுச் சின்னம்—**

சுப்பிரமணிய சிவாவுக்கு பாப்பாரப்பட்டியில் அமைத்தல் 345—348

சென்னையில் சஞ்சய் காந்திக்குச் சிலை 229

**நீதிமன்றங்கள்—**

ஒரத்தநாடு, இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் 71—72

போளூரில் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் 65—6[illegible]

**நூல்கள்—**

கடையநல்லூர் கூட்டுறவு சங்கத்திற்கு வழங்கப்பட்டது 361

**நூல்கள்—**

சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் 54—5[illegible]

**நெடுஞ்செழியன், டாக்டர் இரா.—**

ஆளுநர் உரை (தி) 123

மதிப்பீட்டுக் குழு, தேர்தல் (தி) 235—236

## ந—தொடர்ச்சி.

பக்கங்கள்

வரவு-செலவுத் திட்டம், 1980-81, முதல் துணை நிதிநிலை அறிக்கை 377—379

வால்மீகி, திரு. வி. (இ.நி.) 3—6

விடுதலைப் போராட்ட வீரர், ஓய்வூதியம் அதிகரிப்பு (அ) 435—436

விஷ்ணுராம் மேதி, திரு. (இ.நி.) 3—6

**நெடுமாறன், திரு. ப.—**

சுப்பிரமணிய சிவா, நினைவுச் சின்னம் 345—348

வால்மீகி, திரு. வி. (இ.நி.) 13—15

விஷ்ணுராம் மேதி, திரு. (இ.நி.) 13—15

## ப

**பட்டு—**

கள்ளக்குறிச்சி, பட்டுத்தொழில் கொள்முதல் நிலையம் 212

**பலராமன், திரு. இல.—**

ஆளுநர் உரை (தி) 380, 397—400

போளூரில் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் 65

ஜவ்வாது மலை பழங்குடி மக்களுக்குச் சிறப்புத் திட்டம் 95

**பழனிமுத்து, திரு. சி.—**

ஆளுநர் உரை (தி) 507—511

**பழனிவேல், திரு. என்.—**

அரிசனங்களுக்கு இலவச வீடுகள் கட்டும் திட்டம் 90

அரிசனங்களுக்கு வீடு கட்டும் திட்டம், 1980-81 93

**பாசனம்—**

தழுதாழை கிராமத்தில் ஏரி அமைக்க நில ஆர்ஜிதம் 80—82

பெருந்தலையூர் மேட்டுப்பாளையம் குளம், சீரமைத்தல் 80

பொங்காலைக் கோம்பை ஏரித் திட்டம் 8[illegible]

**பக்கங்கள்**

**பாலகிருஷ்ணன், திரு. வி.—**

அரிசனங்களுக்கு வீடு கட்டும் திட்டம், 1980-81

**பாலசுப்பிரமணியன், திரு. க.—**

ஆளுநர் உரை (தீ) 491—494

**பாலசுப்பிரமணியன், வேடசேந்தூர் திரு. வி. பி.—**

ஆளுநர் உரை (தீ) 455—460

பாலசுப்பிரமணியன், வேடசந்தூர் திரு. வி. பி.—தொடர்ச்சி.

விடுதிகளில் படிக்கும் பின்தங்கிய மாணவர், உதவித்தொகை 325—329

**பாலங்கள்—**

உப்பனாற்றின் குறுக்கே பாலம் கட்டுதல் 222—225

கோட்டூர்புரம்-நந்தனம் இணைப்பு பாலம் கட்டுதல் 225—226

திருப்பத்தூர் ஒன்றியம்—புதுப் பாலங்கள் கட்டுதல் 218—219

பாலாற்றின் குறுக்கே தரைப்பாலம் 349

**பாலன், திரு. சு.—**

ஆளுநர் உரை (தீ) 383

பொம்பூர், இறைச்சிக் கூடத்தை சீர்படுத்துதல் 363—365

**பால்வளம்—**

குளிரூட்டும் நிலையம், சோளிங்கர் 213—214

கோவையில் விநியோகம் 336—338

**பிரபாகரன், திரு. ஜே. சி. டி.—**

ஆளுநர் உரை (தீ) 494—498

**புருஷோத்தமன், திரு. து.—**

கோட்டூர்புரம்-நந்தனம் இணைப்புப் பாலம் கட்டுதல் 225—226

**பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ்.—**

ஆளுநர் உரை (தீ) 303—306

முடிக்கொத்து நோயால் வாழைப்பயிர் பாதிப்பு 349—351





**பக்கங்கள்**

**பொன்னுரங்கம், திரு. ப.—**

உப்பனாற்றின் குறுக்கே பாலம் கட்டுதல் 222—225

**ம**

**மணி, திரு. டி.—**

ஆளுநர் உரை (தீ) 381—382

தென்னை நார் பொருள் தயாரிக்கும் பயிற்சி நிலையம், குமரி மாவட்டம் 334—336

**மணிமாறன், திரு. ஆர்.—**

ஆளுநர் உரை (தீ) 131

**மருத்துவம்—**

சென்னை மருத்துவக் கல்லூரியில் ஆட்டோ அனலைசர் பயன்படுத்தல் 361

**மருத்துவமனைகள்—**

எலத்தூர் மோட்டூர் தொழு நோய் தடுப்பு நிலையம் மாற்றல் 229—231

கம்பம் மற்றும் கூடலூர், மின்வசதி 354—357

கோவை, இ.எஸ்.ஐ. மருத்துவமனை 76—78

சங்கராபுரம் மருத்துவமனைக்கு பெண் டாக்டர் நியமனம் 231—232

ஹோமியோபதி வளர்ச்சிக்கு ஒதுக்கப்பட்ட தொகை

**மீனளம்—**

சங்கு குளிப்போருக்கு ஊக்கத் தொகை மாற்றல் 332—334

மண்டபம் பயிற்சி நிலையம் 204—206

மீனவரிடையே தகராறுகள் 199—204

**முகமது இஸ்மாயில், திரு. பி.—**

வால்மீகி, திரு. வி. (இ.தீ.) 15—16

விஷ்ணுராம் மேதி, திரு. (இ.தீ.) 15—16

ம—தொடர்ச்சி.


பக்கங்கள்

**முத்துக்கிருஷ்ணன், திரு. க.—**
ஆளுநர் உரை (தி) 316—318

**மூர்த்தி, திரு. ஜி.—**
ஆளுநர் உரை (தி) 424—426

ய.

யசோதா திருமதி டி.—
ஆளுநர் உரை (தி) 318—322

ர.

ரகுமான்கான், திரு. அ.—
ஆளுநர் உரை (தி) 240—258

**ரங்கசாமி, திரு. க.—**
கள்ளக்குறிச்சி பட்டுக் கொள்முதல் நிலையம் 212

**ரமணி, திரு. கு.—**
ஆளுநர் உரை (தி) 280—287
கோவையில் பால் விநியோகம் 336—338

**ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் திரு.—**
ஆளுநர் உரை (தி) 451—455

வ.

**வரதராஜன், திரு. என்.—**
ஆளுநர் உரை (தி) 141—151

**வாரியம்—**
நில மேம்பாட்டு வாரியம் தேர்தல் (தி) 236—237
வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியம், தேர்தல்





**பக்கங்கள்**

வ—தொடர்ச்சி.

**வின்சென்ட், திரு. மி.—**
கோதையாறு பகுதியில் நில ஆக்கிரமிப்பு 342—345
செயற்கை மழை தருவித்தல் 220—221

**விஜயராகவன், திரு. பொ.—**
ஆளுநர் உரை (தி) 460—466

**விஸ்வநாதன், திரு. கோ.—**
ஆளுநர் உரை (தி) 99, 100—113

**வெங்கடசுப்பிரமணியம், திரு. ப.—**
ஆளுநர் உரை (தி) 414—417
காஞ்சிபுரம் கூட்டுறவு நூற்பாலை 362—363

**வேணுகோபால், திரு. த.—**
வேளாண்மைப் பயிற்சி பெற்றவர்கள், வேலை வாய்ப்பு 214—215

**வேளாண்மை—**
சிறு விவசாயிகள், கடன்கள் ரத்து 66—71
திருவிடைமருதூர் வட்டத்தில் குறுவை சாகுபடி நெல் விதைகள் தட்டுப்பாடு 216
பயிற்சி பெற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு 214—215
புதிய கிடங்குகள் ஆரம்பித்தல் 216—218
வாழைப்பயிர், முடிக்கொத்து நோயால் பாதிப்பு 349—351

ஜ.

**ஜான் வின்சென்ட், திரு. மு.—**
ஆளுநர் உரை (தி) 163—169

ஐ.

...டே, டாக்டர் எச். வி.—

மருத்துவக் கல்லூரி மாணவர்கள் தேர்வு (த.வி.) 266—271

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வியாழக்கிழமை, 1981 ஜனவரி 22.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்ற பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. இரங்கல் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர்களான திரு. கே. எம். ராஜகோபால், திரு. வி. எம். இராமசாமி முதலியார், திரு. ஏ. ஜி. பாலகிருஷ்ணன், திரு. இரா. எ. சந்திரன் ஜெயபால், திரு. கே. ஆர். சம்பந்தம், திரு. எம். எஸ். மணி, திரு. எம். சுயம் பிரகாசம், ஆகியோர் மறைவு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. கே. எம். ராஜகோபால் அவர்கள் 15—8—1980 ஆம் தேதியன்றும், திரு. வி. எம். இராமசாமி முதலியார் அவர்கள் 23—8—1980 ஆம் தேதியன்றும், திரு. ஏ. ஜி. பாலகிருஷ்ணன் அவர்கள் 9—9—1980 ஆம் தேதியன்றும், திரு. இரா. எ. சந்திரன் ஜெயபால் அவர்கள் 26—9—1980 ஆம் தேதியன்றும், திரு. கே. ஆர். சம்பந்தம் அவர்கள் 22—10—1980 ஆம் தேதியன்றும் திரு. எம். எஸ். மணி அவர்கள் 29—11—1980 ஆம் தேதியன்றும் திரு. எஸ். சுயம்பிரகாசம் அவர்கள் 18—1—1981 ஆம் தேதியன்றும் மறைந்தமை குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. எம். ராஜகோபால் அவர்கள் 1967 ஆம் ஆண்டிலிருந்து 1971ஆம் ஆண்டு வரையும், பின்னர் 1971 ஆம் ஆண்டிலிருந்து 1976ஆம் ஆண்டு வரையும் செங்கல்பட்டு மாவட்டம், உத்திரமேரூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்ற பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திரு. வி. எம். இராமசாமி முதலியார் அவர்கள் 1937ஆம் ஆண்டிலிருந்து 1939ஆம் ஆண்டு வரையும், மற்றும் 1946ஆம் ஆண்டிலிருந்து 1952ஆம் ஆண்டு வரையும் வேலூர் பொது கிராமப்புற தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திரு. ஏ. ஜி. பாலகிருஷ்ணன் அவர்கள் 1962ஆம் ஆண்டிலிருந்து 1967ஆம் ஆண்டு வரையும், மற்றும் 1967ஆம் ஆண்டிலிருந்து 1970ஆம் ஆண்டு வரையும், வானூர், செட்டியூல்டு வகுப்பு (தனி) தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திரு. இரா. எ. சந்திரன் ஜெயபால் அவர்கள் 1977ஆம் ஆண்டிலிருந்து 1980ஆம் ஆண்டு வரை சென்னை நகரம், தியாகராயநகர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார், இவர் ஒரு சிறந்த ஆக்கி (Hockey) மற்றும் கால்பந்து விளையாட்டு வீரர். சென்னை மாவட்ட ஆக்கி சங்கத்தின் துணைத் தலைவராகவும், தமிழ்நாடு ஆக்கி சங்கத்தின் செயலாளராகவும் சிறப்பாகப் பணியாற்றியுள்ளார். தமிழகத்தின் சிறந்த விளையாட்டு வீரராகத் திகழ்ந்து வந்தார்.

திரு. கே. ஆர். சம்பந்தம் அவர்கள் 1952ஆம் ஆண்டிலிருந்து 1957ஆம் ஆண்டு வரையும் மற்றும் 1962 ஆம் ஆண்டிலிருந்து 1967ஆம் ஆண்டு வரையும் முறையே மாயூரம் பொது மற்றும் பொறையார் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கும் மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திரு. எம். எஸ். மணி அவர்கள் 1962ஆம் ஆண்டிலிருந்து 1967 ஆம் ஆண்டு வரையும் மற்றும் 1967ஆம் ஆண்டிலிருந்து 1970 ஆம் ஆண்டு வரையிலும் திருச்சிராப்பள்ளி-1 தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திரு. எஸ். சுயம்பிரகாசம் அவர்கள் 1952ஆம் ஆண்டு முதல் 1957ஆம் ஆண்டு வரை, தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தொகுதியிலிருந்து சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அன்னார்கள் சிறந்த முறையில் சட்டமன்றப் பேரவையில் பணியாற்றியுள்ளார்கள்.

அன்னார்களின் மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்தவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

*(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நின்றனர்.)*



## 2. இரங்கல் தீர்மானம்

(அ) உறுப்பினர் திரு. வி. வால்மீகி மறைவு.

(ஆ) முன்னாள் ஆளுநர் திரு. விஷ்ணுராம் மேதி மறைவு.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானங்களை மொழிகிறேன் :—

(1) ''இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்று இப்பேரவையின் காங்கிரஸ் (இ) கட்சி உறுப்பினராக இருந்தவரும், இனிய பண்பும், உள்ளமும், செயல்திறனும் கொண்டவருமான திரு. வி. வால்மீகி அவர்கள் 28—12—1980ஆம் நாளன்று மறைந்தமை குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. அன்னாரது மறைவால் வருந்தும் அவரது குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த பரிவையும், இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறது.''

(2) ''தமிழ்நாட்டில் 1958 முதல் 1964ஆம் ஆண்டு வரையில் ஆளுநராகவும், அதற்கு முன் அசாம் மாநிலத்தின் முதலமைச்சராகவும் இருந்த மேதகு விஷ்ணுராம் மேதி அவர்கள் நேற்று இயற்கை எய்தினார்கள். அவர் இம்மாநிலத்தின் ஆளுநராகப் பணியாற்றி, அவரது இனிய பண்பாலும், செயலாற்றலாலும் நம் அனைவரது நன்மதிப்பையும் பெற்றுள்ளார்கள். அவரது மறைவு குறித்து இப்பேரவை தன்னுடைய ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. அன்னாரது மறைவால் வருந்தும் அவரது குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த பரிவையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறது.''

1980-வது ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் திருப்பத்தூர் தொகுதியில் இந்திரா காங்கிரஸ் கட்சியினுடைய வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்று இந்த அவையிலே வந்து அமர்ந்திருந்த அருமை நண்பர் திரு. வி. வால்மீகி அவர்கள் தம்முடைய 58-வது வயதில் இயற்கை எய்தினார்கள் என்ற செய்தி நம் அனைவருக்கும் துன்பத்தையும், துயரத்தையும் அளிக்கின்ற ஒன்றாகும். திரு. வால்மீகி அவர்கள் 1938-வது ஆண்டிலிருந்து காங்கிரஸ் கட்சியிலே தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, அந்தக் கட்சியினுடைய கொள்கைகளுக்காகவும், கோட்பாடுகளுக்காகவும் பாடுபட்டதோடு, அந்தக் கட்சியினுடைய திட்டங்களை நிறைவேற்றுவதிலேயும் தன்னுடைய முழு முயற்சியையும் ஈடுபடுத்திக்கொண்டு வந்தார்கள்.

அதற்குப் பிறகு 1948-வது ஆண்டு முதல் 1951-வது ஆண்டு வரையிலும் சோஷலிஸ்ட் கட்சியிலிருந்தபொழுதும் பல்வேறு உரிமைப் போராட்டங்களிலே ஈடுபட்டு, சிறை செல்லுகின்ற அளவிற்குந் தம்முடைய உணர்வையும், தம்முடைய நாட்டுப் பற்றையும், மற்றவற்றையும் மிகத் தெளிவுபட எடுத்துக் காட்டி இருக்கின்றார்கள்.

அதுமட்டுமல்லாமல், அவர்கள் அடக்கமாகவும், அமைதியாகவும் இருந்து பணியாற்றுகின்ற இனிய பண்புகளுக்கு உறைவிடமாக விளங்கியவர்கள். அவர் பழகும்பொழுதுகூட மிக்க அன்போடும், மற்றவர்களால் பாராட்டத்தக்க அளவிற்கு, உள்ளம் நெகிழத்தக்க அளவிற்கு இனிய பண்புகளைக் கொண்டவராகவும் திகழ்ந்து வந்தார்கள்.

செட்டிக்குறிச்சி என்ற ஊராட்சி மன்றம் தோன்றிய காலத்திலேயிருந்து அவர் தொடர்ந்து அந்த ஊராட்சி மன்றத்தினுடைய தலைவராகவே இருந்து வந்திருக்கிறார். அந்த அளவிற்கு அந்த ஊராட்சி மன்றத்திலே இருக்கின்ற மக்களுடைய நன்மதிப்பையும், நம்பிக்கையையும், அன்பையும் அரவணைப்பையும் பெறுவதில் அவர்கள் சிறந்து விளங்கினார்கள் என்பதைக் காட்டுகின்ற வகையில்தான் அவர்கள் தொடர்ந்து அந்த ஊராட்சி மன்றத்தினுடைய தலைவராக இருந்து வந்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், இருமுறை அவர் சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பெற்று, 1960ஆம் ஆண்டிலிருந்து 1970ஆம் ஆண்டுவரையில் சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைவராக இருந்தார்கள் என்பது மட்டுமல்ல, 1976—77ஆம் ஆண்டு வரையிலும் அந்த ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைவராகவும் பணி புரிந்து வந்திருக்கிறார்கள்.

அவர் 58 வயதுதான் ஆனவர் என்றாலும், இப்பொழுதுள்ள சூழ்நிலையில் இன்னும் பல ஆண்டுகள் வாழக் கூடியவர் என்று எல்லோரும் எண்ணுகின்ற இந்த நேரத்தில் அவர் நம்மைவிட்டுப் பிரிந்தது நமக்கெல்லாம் ஆற்றொணாத் துயரத்தை அளிக்கக் கூடிய ஒன்றாகும். இனிய பண்புக்கும், அடக்கத்திற்கும் அமைதிக்கும், ஆழ்ந்த நாட்டுப் பற்றுக்கும், சிறந்த தொண்டிற்கும் பெயர் பெற்று விளங்கியவர் அவர். அவர் மறைந்தது நமக்கெல்லாம் பெரும் துக்கத்தையும், துயரத்தையும் விளைவிப்பதாகும். அந்த முறையில் அவருடைய மறைவு குறித்து நம்முடைய இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவருடைய குடும்பத்தினருக்கும், அவரைச் சார்ந்தவர்களுக்கும் நம் ஆழ்ந்த பரிவையும், இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறோம் என்ற தீர்மானத்தை நான் மொழிகின்றேன், இந்த அவை வழிமொழிவதன் மூலமாக அதை நிறைவேற்றி அன்னாருடைய





குடும்பத்திற்கு ஆறுதல் அளிக்கின்ற வகையில் இந்தத் தீர்மானம் அனுப்பி வைக்கப் பெற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, திரு. விஷ்ணுராம் மேதி அவர்கள் இந்த மாநிலத்தினுடைய ஆளுநராக 1958-வது ஆண்டிலிருந்து 1964-வது ஆண்டு வரையில் பணியாற்றியவர்கள், அவர் நம்முடைய 93-வது வயதில் இயற்கை எய்தியிருக்கிறார்கள், அவர் நீண்ட பெரும் காலமாகவே தம்மை அரசியலிலே ஈடுபடுத்திக் கொண்டு, இந்தியாவினுடைய விடுதலைப் பேராட்டாங்களிலெல்லாம் தம்மை ஒப்படைத்து, அசாம் மாநிலத்திற்கு வழி காட்டியாகவும், அந்த மாநிலத்திலேயிருந்த பலருக்கு எடுத்துக் காட்டாகவும் விளங்கியவர்கள் ஆவார்கள்.

அசாம் சட்டமன்றத்தினுடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவராகப் பல்லாண்டுக் காலம் பணியாற்றியது மட்டுமல்லாமல், திரு. கோபிநாத் பர்டோலாய் அவர்கள் தலைமையில் அமைந்த அமைச்சரவையில் அவர் நிதியமைச்சராகயிருந்து பணியாற்றினார்கள். 1950 ஆம் ஆண்டு திரு. பர்டோலாய் அவர்கள் மறைந்ததற்குப் பிறகு முதலமைச்சர் பொறுப்பை திரு. விஷ்ணுராம் மேதி அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். பிறகு 52ஆம் ஆண்டு புதிய அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்ததற்குப் பிறகு அப்பொழுது நடைபெற்ற தேர்தலிலே வெற்றி பெற்று வந்ததற்குப் பிறகு, அசாம் மாநிலத்தினுடைய முதலமைச்சர் பொறுப்பை மீண்டும் ஏற்று, 1957ஆம் ஆண்டு வரையில் அந்த மாநிலத்தினுடைய முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தார்கள். 1957ஆவது ஆண்டில் தம்முடைய உடல்நலக் குறைவின் காரணமாகப் பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டிய கட்டத்திற்கு ஆளானார்கள். அதற்குப் பிறகுதான் 1958-வது ஆண்டு தமிழகத்தினுடைய ஆளுநராக அவர்கள் நியமிக்கப் பெற்றார்கள். 1958ஆம் ஆண்டிலே நியமிக்கப்பட்ட அவர்கள் ஆறாண்டுக் காலம் பணி புரிய வேண்டுமென்ற நிலைக்கேற்ப தம்முடைய அந்தப் பருவத்திற்கேற்ப 1964ஆம் ஆண்டு வரையில் ஆறாண்டுக் காலம் இந்த மாநிலத்தினுடைய ஆளுநராக இருந்து பணி புரிந்தார்கள்.

மிக அடக்கமாகவும், அமைதியாகவும் தம்முடைய பணியை ஆற்றியவர்கள்; எந்தச் சிக்கலுக்கும் தன்னை உள்ளடக்கிக் கொள்ளாதவர்கள்; ஆகவே எந்தவொரு பிரச்னையிலும் அவர்கள் ஈடுபடாதவர்கள். அந்த முறையில் அமைதியாக இருந்த அந்த ஆளுநர் அவர்கள் எல்லோருடைய அன்பையும், அரவணைப்பையும், பெற்று எல்லோராலும் பாராட்டத் தக்க அளவிற்கு, புகழத்தக்க அளவிற்கு விளங்கியவர்கள் ஆவார்கள்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1981 ஜனவரி 22

அவர்களுடைய மறைவும் நமக்கு மிக்க துயரத்தை அளிக்கக் கூடிய ஒன்றாகும், அந்த முறையில், அவரைப் பிரிந்து வருந்தும் அவருடைய குடும்பத்தினருக்கும், அசாம் மாநிலத்தைச் சேர்ந்த மக்களுக்கும், அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் இந்த மன்றம் தன்னுடைய ஆழ்ந்த பரிவையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்வது கடமை ஆகிறது.

அந்த முறையில் இந்த இரு தீர்மானங்களையும் நிறைவேற்றி வைக்கும்படியாக இந்தப் பேரவையைக் கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவை முன்னவரால் முன் மொழியப்பெற்ற இரங்கல் தீர்மானங்களை நானும் வழிமொழிந்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஒரிரு கருத்துக்களை எடுத்துக்கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த மாமன்றத்தில் உறுப்பினராகப் பணி யாற்றி, ,அந்தப் பணிக் காலத்திலேயே நம்மைவிட்டு மறைந்து விட்ட காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் திரு. வால்மீகி அவர்கள் நீண்ட நெடுங்காலம் பொதுவாழ்க்கையிலே தன்னை அர்ப்பணித்துக் கொண்டு, அவருடைய தொகுதியிலே மாத்திரம் அல்லாமல், இராமநாதபுரம் மாவட்டத்தில் பெரும்புகழை ஈட் டியவர். அவர் சோஷலிஸ்ட் கட்சியிலும் காங்கிரஸ் இயக்கத்தி லும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டபோதிலும் கட்சி சார்பற்ற முறையிலே பொது மக்களுக்காகத் தொண்டாற்றுவதில் மிகுந்த செல்வாக்குப் படைத்தவராக அந்தப் பகுதியிலே விளங்கியவர்.

(முற்கல் 9-10]

அவர் ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைவராகப் பொறுப் பேற்றிருந்த காலத்தில் மாநிலத்திலே உள்ள ஊராட்சி ஒன்றியங் களில் முதன்மை வாய்ந்தது என்ற நிலையில் அவருடைய ஊராட்சி ஒன்றியம், குறிப்பாக ஊராட்சி ஒன்றியத் தலைவராக இருந்த திரு. வால்மீகி அவர்கள் தங்கப் பதக்கம் பரிசு பெற்றார் என் பதும் அவருடைய வாழ்க்கை ஏட்டில் மிக முக்கியமாகப் பொறிக் கப்பட்டுள்ள ஒரு குறிப்பாகும்.

அவர் அந்தப் பகுதியிலே பெரும் ஜாதிக் கட்டுக்கு உரியவர் அல்ல. அந்தத் தொகுதியிலேயே அவருடைய வீடு ஒன்றுதான் ; அவர் அந்தப் பகுதியிலே உள்ள எந்த வகுப்பாரையும் சேராத கவுண்டர் வகுப்பைச் சேர்ந்தவர். பெரும்பாலான வேறு பல வகுப்புகள் அங்கேயிருந்த சூழ்நிலையில் தனி ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர். ஒரு சிறுபான்மை வகுப்பை அந்தத் தொகுதியைப் பொறுத்தவரையிலே சேர்ந்தவர், இவ்வளவு பெரும் செல்வாக் குக்கு உரியவராக அங்கே விளங்கியதற்குக் காரணம் அவரது இடைவிடாத உழைப்பும், ஒய்வற்ற தொண்டும்தான் என்று சொன்னால் அது மிகையாகாது.



1981 ஜனவரி 22] [டாக்டர் மு. கருணாநிதி]

அவரை அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் வால்மீகி என்று கூட அழைக்க மாட்டார்கள். மேகம் என்றுதான் அழைப்பார்கள். அப்படிப்பட்ட ஒரு அடைமொழி அவருக்கு உண்டு. அந்தத் தொகுதியிலே உள்ள பாமர மக்களிடத்திலே வால்மீகி என்று சொன்னால் கூடத் தெரியாது. மேகம் வருகிறார், மேகம் போகி றார் என்று சொன்னால்தான் அவர்களுக்குப் புரியும். அப்படிப் பட்ட ஒரு அடைமொழியோடு மேகம் போல் அங்கு பணியாற் றக் கூடிய அளவுக்கு அவர் அனைவருடைய அன்பையும் பெற் றிருந்தார்.

அவை முன்னவர் அவர்கள், அவர் அடக்கத்தோடு விளங்கி னார்கள் என்றும் குறிப்பிட்டார்கள். அவர் அடக்கத்தோடு விளங்கிய அதே நேரத்தில், அவர் அடங்காத ஆர்வத்தோடு தன் னுடைய கட்சிப் பணிகளை ஆற்றினார் என்பதற்கும் பல அனு பவங்கள் உண்டு. அது அவருடைய கொள்கைமீது அவர் கொண்டிருந்த பற்றின் அடையாளமே தவிர வேறு அல்ல. அந்த அளவிற்கு அவர் கொள்கைப் பற்றும் இலட்சிய வெறியும் கொண்டு பெருந்தலைவர் காமராஜர் அவர்களுக்கு உற்ற நண் பராக, அவருடைய அன்புக்குரிய தொண்டராக அவர்கள் விளங் கினார்கள். அவர்களுடைய மறைவு உள்ளபடியே நமக்கெல் லாம் பேரிழப்பாகும்.

முன்னவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, 58 வயது என்பது உள்ளபடியே இந்தக் காலத்தில் ஒரு நீண்ட நெடுநாள் வாழ்ந்துவிட்டு, இனி மறைந்தால் பரவாயில்லை என்று கூறக் கூடிய வயதல்ல. நம் வாழ்வின் சரி பகுதியில் நம்மை விட்டு மறைந்து விட்டார் என்பது மிக மிக துக்ககர மான சம்பவமாகும். 1980 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் திருப்பத்தூர் தொகுதியிலே அவர் போட்டியிட்ட போது அவருக்காகப் பிரச்சாரம் செய்வதற்கு நான் பல கூட் டங்களில் கலந்து கொண்ட நேரத்தில், நான் அவரோடு நெருங் கிப் பழக முடிந்தது. அவர் எந்த அளவிற்கு அந்தப் பகுதியிலே செல்வாக்குப் படைத்தவராக இருந்தாலும், அவரைக் கண்டாலே மக்கள் அவரிடத்தில் ஒரு மரியாதையும், மதிப்பும் வைத்திருக் கிறார்கள் என்பதும், ஒரு அச்ச உணர்ச்சி கூட அவரிடத்திலே இருந்தது என்பதும் நான் ஏற்கனவே கேள்விப்பட்ட ஒரு செய்தி யாக இருந்தாலும் கூட, அவர் என்னிடத்திலேயும், மற்ற வர்களிடத்திலேயும் பழகிய அந்த இனிய தன்மை என்னைப் பெரிதும் கவர்ந்தது. தேர்தலுக்குப் பிறகும் எங்களைச் சந் தித்தபோதெல்லாம் அவர் காட்டிய பரிவும், மரியாதையும், தொய்வில்லாத நன்றி உணர்வும் உள்ளபடியே எங்கள் உள்ளத் தைக் கவர்ந்தவைகளாகும். அப்படிப்பட்ட ஒரு பெருமகனார் மறைந்துவிட்டதற்காக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார் பில் அவர்களுடைய குடும்பத்தாருக்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கின்றேன். முதல் நாள் கூட

ஒரு பொதுக்கூட்டத்திலே பேசிவிட்டுத்தான் தன்னுடைய கடமையை ஆற்றிவிட்டுத்தான் அவர் தூங்கச் சென்றிருக்கிறார்; காலையிலே மறைந்து விட்டார். அப்படிப்பட்ட ஒரு ஆற்றலாளர்; நல்ல ஓயாத உழைப்பாளி—அவருடைய மறைவினால் துயருறுகின்ற குடும்பத்தாருக்கும், நண்பர்களுக்கும்—ஏன் காங்கிரஸ் கட்சிக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஆழ்ந்த இரங்கல் உரியதாகும் என்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழகத்தின் ஆளுநராக சில காலம் வீற்றிருந்தவரும் அஸ்ஸாம் மாநிலத்தின் முதலமைச்சர் என்று பொறுப்பேற்று இருந்தவரும், அஸ்ஸாம் மாநிலத்தினுடைய காங்கிரஸ் கட்சித் தலைவராகப் பணியாற்றியவரும், அடக்கத்தின் மொத்த உருவமாகத் திகழ்ந்தவருமான நம்முடைய முன்னாள் ஆளுநரில் ஒருவரான விஷ்ணுராம் மேதி அவர்களுடைய மறைவிற்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஆழ்ந்த இரங்கலை அவருடைய குடும்பத்தாருக்கும், அஸ்ஸாம் மாநிலத்து மக்களுக்கும் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, இந்தப் பேரவை காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் மரியதைக்குரிய வால்மீகி அவர்களுடைய மறைவிற்கு அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்த இரங்கல் தீர்மானத்தின் மீது நானும் எங்கள் கட்சியின் சார்பாக வழிமொழிந்து அவரைப் பற்றி சில கருத்துக்களை சொல்வது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். அவர் 1922-ம் ஆண்டு செட்டிக்குறிச்சி என்ற கிராமத்தில் பிறந்து, தனது 12 ஆவது வயதிலேயே பொருளீட்டுவதற்காக மலேசியா நாட்டுக்குச் சென்று, அங்கே இருந்து மீண்டும் தமிழகத்திற்குத் திரும்பி வந்து, சுதந்திரப் போராட்டத்திலே ஈடுபட்டு, மரியாதைக்குரிய மறைந்த ஜெயப்பிரகாஷ் நாராயணன் தலைமையில் இயங்கிய சோசலிஸ்ட் கட்சியினுடைய அங்கமாக இராமநாதபுரம் மாவட்டத்திலே இருந்து, அதற்குப் பின்னால் அசோக்மேத்தா அவர்கள் காங்கிரஸ் கட்சியில் இணைந்த நேரத்தில் தன்னையும் இணைத்துக் கொண்டு, காங்கிரஸ் கட்சியின் இலட்சியத்துக்கு அயராமல் இரவு பகல் என்று பாராமல் பாடுபட்டு வந்த ஒரு உத்தமத் தலைவரை இழந்து இன்று காங்கிரஸ் கட்சி இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

இன்னும் அதிகமாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், அவர் மூன்று முறை சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியத்தின் பெருந்தலைவராகப் பணியாற்றினார். இங்கே மரியாதைக்குரிய கலைஞர் அவர்கள் சொல்லியதைப்போல அவருடைய பெயரைச் சொல்லி அந்தப் பகுதியிலே யாரும் அழைப்பதில்லை. மேகம் என்றுதான் சொல்லுவார்கள். அந்த அளவுக்கு மக்கள் மத்தியிலே செல்வாக்கு அடைந்திருந்தார்கள். அதற்குக் காரணம் வசதி படைத்தவர்கள் பக்கத்திலே நிற்காமல் அவர் நின்ற



அணி ஏழைகளின் பக்கத்திலே இருந்தது என்பதுதான். அதைக் கூடச் சில நேரங்களிலே சொல்வார்கள். அவர் ஆங்கில நாட்டிலே வழக்கத்திலே இருந்த "ராபின் ஹூட்" ஐப் போல அந்தப் பகுதியிலே தமிழகத்திலே ஒரு "ராபின் ஹூட்டாக" இருந்தார் என்று சொன்னால் அது வால்மீகியாகத்தான் இருக்க முடியும்.

காரணம், வசதி படைத்தவர்களிடம் இருக்கக்கூடிய பொருள்களைக் கொள்ளை அடிக்காமல் அவர்களிடம் பரிந்து பேசி அதைச் சாதாரண மக்களுக்கு, ஏழை மக்களுக்குக் கொடுப்பதன் மூலமாக அந்தக் கிராம மக்களின் மத்தியிலே செல்வாக்குப் பெற்று, அவர்கள் எல்லாம் தகப்பனைப்போல, தந்தையைப் போல பாவித்து, அவர் எதைச் சொன்னாலும் அதைச் செய்யக் கூடிய ஒரு ஆற்றல் மிக்க அணியாக அந்தப் பகுதியிலே வாழ்ந்திருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

[முற்பகல் 9—20]

திரு. வால்மீகி அவர்களைப் பொறுத்தவரையில், முதன் முதலாகச் சட்டமன்றத்திலே நுழைந்து, சட்டமன்றத்திலே முதன்முதலாகப் பேசிய பிறகு மாரடைப்பு ஏற்பட்டு, இராயப்பேட்டை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அங்கே மருத்துவ வசதி பெற்று தேறியவுடன், அங்கேயுள்ள மருத்துவர்கள் அவரை அதிகம் பேசாதீர்கள், அதிகம் சுற்றுப் பயணம் மேற்கொள்ளாதீர்கள், ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள் என்று கூறியிருந்த போதிலும், அவர் அதனைச் செய்யாமல் தொகுதி மக்களின் நலனில் அக்கறை கொண்டு பல கிராமங்களுக்குச் சுற்றுப்பயணம் செய்து பணியாற்றி இருக்கிறார்கள். மக்கள் நலனுக்காகப் பணியாற்றிய அவர் மாரடைப்பால் இயற்கை எய்தினார் என்பது மிகவும் வருந்தத்தக்க ஒரு நிகழ்ச்சியாகும்.

அவர் தொகுதி என்னுடைய தொகுதிக்குப் பக்கத்தில் இருப்பதால், அவருடைய குடும்பத்தைப் பற்றி நான் நன்றாக அறிவேன். அவர் சாதாரண ஏழையாக வாழ்ந்து, சாதாரண ஏழையாகவே இறந்தார். ஆனால், அவர் எப்போதும், கோழையாக வாழ்ந்தது இல்லை. அவர் அஞ்சா நெஞ்சத்தோடு பணியாற்றினார். பெரிய பெரிய மனிதர்களெல்லாம் அவரை எதிர்த்த நேரத்தில், அதையெல்லாம் சந்தித்து முறியடிக்கும் வகையில் பணியாற்றி, சட்டமன்றத்திற்கான தேர்தலில் வெற்றி பெற்று சட்டமன்றத்திற்கு வந்தார். அவருடைய மறைவு காங்கிரஸ் கட்சிக்கு ஒரு பேரிழப்பாக இருக்கிறது.

இந்த நேரத்தில் நான் அரசாங்கத்திடம் ஒன்றை கேட்க விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய ஒருவர் தமிழகத்தில் வேறு வேலைக்குச் செல்ல முடியாது. அவர்களுக்கு மக்கள் பணி செய்வதே பெரும் தொண்டாக இருக்கிறது;

ஆகவே, இப்படி சட்டமன்ற உறுப்பினர்கள் இடையில் திடீரென்று மரணம் அடைந்து விட்டால், அவர்களுடைய குடும்பத்தாருக்கு அரசாங்கம் நிதி உதவி அல்லது வேறு உதவிகளைச் செய்வதன் மூலம், அவரை நம்பி வாழ்ந்து வந்த குடும்பம் நடுத்தெருவில் நிற்காமல் வாழும் அளவிற்கு வழி வகை செய்ய வேண்டும் என்று சொல்லி, திரு. வால்மீகி அவர்களின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இந்த அவையின் சார்பாகவும், இந்த அரசின் சார்பாகவும், கொண்டு வரப்பட்டுள்ள தீர்மானத்தை வழி மொழிந்து, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களால் மொழியப் பெற்ற இரங்கல் தீர்மானத்தின் உணர்வுகளோடு, மார்க்சிஸ்ட் க யூனிஸ்ட் கட்சியின் உணர்வுகளையும் நான் இணைத்துக் கொண்டு, இந்தத் தீர்மானத்தை வழிமொழிகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலாவதாக, காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் திரு. வால்மீகி அவர்கள் மறைவு குறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். அவர் காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியில் பணியாற்றிய பிறகு, காங்கிரஸ் கட்சியில் பணியாற்றி இருக்கிறார். இங்கேயுள்ள உறுப்பினர்களோடு அவர்கள் அடக்கத்துடனும், அன்புடனும், எளிமையாகவும் பழகி வந்தார். சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவருடைய தொண்டு இங்கே முழுமையாக நடைபெறுவதற்கு முன்னரே, இவ்வளவு சீக்கிரத்திலேயே அவர் மாரடைப்பால் மரணம் அடைந்தார் என்ற செய்தி மிகவும் வருந்தத்தக்கதொன்றாகும். அவருடைய இழப்பால் வருந்தும் அவர் குடும்பத்தாருக்கும், அவருடைய இழப்பால் பாதிக்கப்பட்டு இருக்கும் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், தமிழகத்தின் ஆளுநராகச் சில ஆண்டுகளுக்கு முன்பு பணியாற்றிய அஸ்ஸாம் மாநிலத்தைச் சேர்ந்த பிரபல காங்கிரஸ் தலைவர் திரு. விஷ்ணுராம் மேதி அவர்களின் மறைவுக்கு இங்கே மாண்புமிகு முன்னவர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இரங்கல் தீர்மானத்தின் உணர்வுகளோடு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியையும் இணைத்துக்கொண்டு இந்தத் தீர்மானங்களை வழிமொழிந்து, அமர்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்களால் இங்கே மொழியப் பெற்றுள்ள இரங்கல் தீர்மானத்தின் உணர்வுகளோடு



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் உணர்வுகளையும் இணைத்துக் கொண்டு, அவர்களுடைய குடும்பத்தாருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருப்பத்தூர் தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் திரு. வால்மீகி அவர்கள் சிறந்த தொண்டின் காரணமாகவும், அனைவரோடும் அன்போடும் பழகி வந்தவர் என்பதாலும், பல காரியங்களைச் சிறப்பான முறையில் செய்து நற்பெயர் வாங்கியவர் என்ற காரணத்தினாலும், அவர் அந்தத் தொகுதி மக்களிடத்திலே அன்பையும், ஆதரவையும் பெற்று சிறந்த முறையில் பொதுத்தொண்டு ஆற்றிவந்தார்கள். அவர்கள் இந்த அவையின் முழுமையாகப் பணியாற்றமுடியாமல், இப்படி இடையில் மரணம் அடைந்தார் என்கிற செய்தி கேட்டு அவருடைய மறைவால் வருந்தும் குடும்பத்தாருக்கும் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கும் ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேமாதிரியாக நம்முடைய மாநிலத்திலே முன்னாள் ஆளுநராக இருந்த உயர்திரு விஷ்ணுராம் மேதி அவர்களுடைய மறைவுக்கும் எங்களுடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் அன்னார் குடும்பத்திற்கும் அஸ்ஸாம் மக்களுக்கும் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : அவை முன்னவர் மொழிந்த இரங்கல் தீர்மானத்தை வழிமொழிகின்றபோது வால்மீகி அவர்கள் இந்தப் பேரவையில் இப்போது இல்லை என்பதும் அவர் நமது நெஞ்சத்திலே நிறைந்துவிட்டார் என்பதும் நினைப்பதற்கே வருத்தம் அளிக்கின்ற செய்தியாக நமக்கு இருக்கிறது. அவர் இவ்வளவு சீக்கிரம் நம்மையெல்லாம் விட்டு பிரிவார் என்பதை யாரும் எதிர்பார்த்திருக்க முடியாது. முந்தைய நாள் கூட கூட்டத்திலே பேசிவிட்டு சிலமணி நேரத்திலேயே அவர் இவ்வுலகைவிட்டு விண்ணவரோடு இறைவரோடு கூட்டாக சென்று விட்டார் என்பதை எண்ணும்போது இதயம் மிகுந்த வேதனைப்படுகிறது.

திருப்பத்தூர் தொகுதி என்கிறபோது செவி வழிச் செய்தியாக நமக்கு வருகிற தகவலை நினைவுபடுத்திப் பார்க்க வேண்டி வருகின்றது. அதை ஒரு காலத்திலே திருப்புத்தூர் என்று அழைத்தார்கள் என்று சொல்வார்கள். சிந்தனை வயத்திலே தவம் இருந்த ஒரு மனிதனைச் சுற்றி வளர்ந்தது குன்று. அதனாலே அது திருப்புத்தூர் என்று பெயர்பெற்றது. அப்படி இருந்த மனிதன் பெயர்தான் வால்மீகி. அவன் வடநாடு சென்று வடமொழி பயின்று பாடியதுதான் இராமாயணம் என்பது எல்லாம் செவி வழிச் செய்தி. அந்த வால்மீகியும் ஒரு காலத்திலே

வேடுவராக இருந்து, பிறகு கூடியிருந்த பறவைகள் துயர் கண்டு, மனம் மாறினார் என்பதை எல்லாம் நாம் கேள்விப்படுவதைப் போலே வால்மீகி அவர்கள் சிங்கம்புணரியிலே 3 முறை ஒன்றியத் தலைவராக இருந்தார் என்கின்றபோது ஒன்றுபட்ட காங்கிரசின் சார்பிலே அவர் இருந்தார் என்ற காரணத்திற்காக அவருடைய தேர்தல் பணிகளிலே சென்று பணியாற்றுகின்ற தொண்டினை நான் செய்துள்ளேன். அந்த நேரத்திலே எல்லாம் அவர் மேகமாக இருக்கமாட்டார். வேகமாக இருப்பார். பிடிக்காதவர்களை வேகம் காட்டி, அவர் நடந்துகொள்வதை நான் நேரிலேயே பார்த்திருக்கிறேன். நாள் ஆக, ஆக அவர் எல்லைக்கோடுகளைத் தாண்டி, எல்லோர் பேரிலேயும் பாசம் காட்டி, பிறகு வேகமாகவும் வந்தார். ஆக, வேகமாகத் தொடங்கி, மேகமாக வளர்ந்து, நமது எல்லோருடைய அன்பையும் அவர் பெற்றார் என்று சொல்லுகின்ற அளவுக்கு இருந்தபோது, இன்று அவர் மறைந்திருக்கிறார். அது மிகுந்த மன வருத்தத்தைத் தருகின்றது என்பதோடு, அன்னாருடைய குடும்பத்திற்கு நமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய அன்புக்குரிய அஸ்ஸாம் மாநிலத்தில் தோன்றி, பாரத ஒருமைப்பாட்டில் நம்பிக்கை வைத்திருந்து, தமிழகத்தின் ஆளுநராக இருந்த, திரு. விஷ்ணுராம் மேதி அவர்களுடைய மறைவுக்கும் காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் தன்னுடைய ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது. அன்னாருடைய குடும்பத்திற்கும் அஸ்ஸாம் மக்களுக்கும், பொதுவாக இந்திய மக்களுக்கும் காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: துணைத் தலைவரவர்களே, அவை முன்னவர் கொண்டு வந்திருக்கிற இந்த இரங்கல் தீர்மானங்கள் மீது அகில இந்திய பார்வெர்டு பிளாக் கட்சியின் சார்பில் கருத்துத் தெரிக்கையில் என்னுடைய ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் இணைத்துக் கொள்கிறேன். மதிப்பிற்குரிய சகோதரர், சட்டமன்ற உறுப்பினர் வால்மீகி அவர்கள் இப்போது நம் மத்தியில் இல்லை என்றாலும் அவர் எல்லோரிடத்திலும் குறிப்பாக முகவை மாவட்டத்தில் அனைத்து மக்கள் உள்ளத்திலும் நிறைந்திருக்கிறார். அருமை நண்பர் வால்மீகி அவர்கள் 1965 லிருந்து எனக்கு நேரடியாகத் தொடர்புடையவர்கள். அவர் அந்தப் பகுதியிலே ஏழை எளிய மக்களுக்குப் போராடுகின்றபோது, அவர் ஒரு இயக்கத்திலே தன்னை இணைத்துக்கொண்டிருந்தாலும், அந்தப் பக்கத்திலே இருக்கிற ஆதிக்கவாதிகளை எதிர்க்கும் போது, ஆட்சியிலே இருந்தவர்கள் அவருக்கு தொல்லைகள் கொடுத்தார்கள் ; ஏழை எளிய மக்களுக்காகப் போராடும் போது ஆட்சியிலே இருந்தவர்கள் அவர்மீது வழக்குகள் போட்டு, அவரைத் தொல்லைகளுக்கு





உட்படுத்தினார்கள். அப்போது அவருக்காக நான் பல வழக்குகளிலே வாதாடியிருக்கிறேன் என்ற முறையில் எனக்கு அவரிடத்தில் நெருக்கமான தொடர்பு உண்டு. அவர் இனிய நண்பராக இருந்தது மட்டுமல்ல ; எவ்வளவு தொல்லைகள் வந்தாலும், ஆட்சிப் பொறுப்பிலே இருந்தவர்கள் கொடுத்த தொல்லைகள் மிக மிக அதிகம் ; அப்படி இருந்தும் இனிய முகத்தோடு, கஷ்டங்களுக்கு மத்தியிலும், அவருடைய குடும்பம் ஏழ்மை நிலையில் இருந்தாலும் பொதுமக்களுக்காக, ஏழை எளிய மக்களுக்காகப் போராடுகின்ற ஒரு இனிய தொண்டராக வாழ்ந்தார். அதிலும் குறிப்பாக முகவை மாவட்டத்தில் வால்மீகி என்றால் அத்துணை மக்களும் ஏற்றுக் கொள்ளுகின்ற வகையில், அத்துணை அரசியல் கட்சியினரும் பாராட்டக்கூடிய வகையில், ஏழை எளிய மக்களுக்காக வாழ்கின்றார் என்ற பெயர் பெற்றவர். அவருடைய மறைவு உண்மையிலேயே முகவை மாவட்டத்திற்கு மட்டுமல்ல ; தமிழகத்திற்கே பேரிழப்பாகும். அவருடைய குடும்பத்திற்கும் அவரை இழந்திருக்கிற காங்கிரஸ் இயக்கத்திற்கும் அகில இந்திய பார்வெர்டு பிளாக் கட்சியின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இந்த மாநிலத்திலே முன்னாள் ஆளுநராக இருந்த திரு. விஷ்ணுராம் மேதி அவர்கள் அசாம் மாநிலத்தின் முதல்வராகவும் இருந்து இருக்கிறார்கள். இந்த மாநிலத்திலே அவர்கள் ஆளுநராக இருந்த போது இந்த மாநிலத்து மக்களுடைய நன்மதிப்பைப் பெற்றவர்கள். அவரை இழந்த அசாம் மாநில மக்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் அகில இந்திய பார்வெர்ட் ப்ளாக் கட்சியின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சட்டமன்ற உறுப்பினராக இருந்து மறைந்த அருமை நண்பர் திரு. வால்மீகி அவர்களுக்கு இரங்கலை நாம் அனைவரும் தெரிவித்துக் கொண்டிருக்கிறோம். அடித்தளத்திலே அவருடைய பொது வாழ்க்கையைத் தொடங்கி சட்டமன்ற உறுப்பினராக ஆனது வரையிலே அவருடைய வாழ்க்கை பூராவும் போராட்டமாக அமைந்து இருந்தது என்று சொன்னால் அது மிகை ஆகாது. என்னுடன் மிக நெருங்கிப் பழகியவர் என்ற முறையிலே, அவர் நல்ல சமதர்ம சிந்தனை உடையவராகவும் எந்த நேரத்திலேயும் ஏழை எளிய மக்களுக்காக தன்னுடைய வாழ்வையே அர்ப்பணித்துக் கொண்டிருந்த உத்தமராகவும் அவர் திகழ்ந்தார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியத்தின் பெருந்தலைவராக அவர் விளங்கிய காலத்திலேயும் அந்தப் பதவியிலே இருந்து அவர் விலகிய பிறகும், எனக்கு முன்னால் பேசிய நண்பர் திரு. ஆண்டித் தேவர் அவர்கள் சுட்டிக் காட்டியதைப் போல அப்போதிருந்த ஆட்சி அரசியல் ரீதியாக அவர்மீது வஞ்சம் தீர்த்துக்

கொள்வதற்காக எண்ணற்ற வழக்குகளை அடுக்கடுக்காகத் தொடர்ந்தது. எத்தனை வழக்குகள் தொடர்ந்தாலும் எதற்கும் அடிபணியாமல் உறுதியாக பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் தொண்டராக இறுதிவரை திகழ்ந்த பெருமை அவரைச் சார்ந்தது.

பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் சிங்கம்புணரியிலே நடைபெற்ற ஒரு மாபெரும் பொதுக் கூட்டத்திலே திரு. வால்மீகி மீது வழக்குகளைப் போட்ட அன்றைய ஆட்சியாளர்களுக்கு எச்சரிக்கை விடுத்தது நினைவுக்கு வருகின்றது. எத்தனை வழக்குகள் போட்டாலும் வால்மீகியின் மக்கள் தொண்டை யாராலும் அடிபணிய வைக்க முடியாது என்று பெருந் தலைவர் காமராஜ் அவர்களால் பாராட்டப்பட்ட பெருமை அவரையே சார்ந்தது.

எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல அந்தப் பகுதியிலே அனேகமாக ஒரே குடும்பம் அவர்களுடைய குடும்பம் என்று சொல்லக் கூடிய அளவுக்கு மிகச் சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்த அவர் ஜாதி சமய வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு அங்கிருந்த மக்கள் அனைவரின் நன் மதிப்பையும் பெற்ற காரணத்தாலே தான் பஞ்சாயத்து யூனியன் சேர்மன் ஆகவும் சட்டமன்ற உறுப்பினராகவும் அவராலே வர முடிந்தது. அந்த அளவுக்கு ஜாதி சமய வேறுபாடுகளைக் கடந்து மக்களுக்குத் தொண்டாற்றிய ஒரு உத்தமமான தொண்டர் அவர். இங்கே இந்திரா காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அருமை நண்பர் திரு. சுந்தரராஜ் அவர்கள் குறிப்பிட்டதைப் போல நண்பர் வால்மீகி அவர்கள் தன்னுடைய குடும்பத்திற்கு என்று எதையும் விட்டுச் செல்லவில்லை. அவர்களுடைய வாழ்வு முழுவதுமே அவர்கள் ஏழைத் தொண்டராகவே வாழ்ந்து ஏழைகளுக்காகவே தன்னுடைய வாழ்வை அர்ப்பணித்திருந்தார். ஆகவே இந்த அரசு அவர்களுடைய குடும்பத்திற்கு நிதியுதவி அளிப்பது பற்றி ஆராய வேண்டும். அதே நேரத்தில் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றி அப் பதவிக் காலம் முடிந்த பின்னர் அளிக்கப்படக் கூடிய பென்ஷன் போன்ற உதவிகளையும் அவரது குடும்பத்தினருக்கு விசேஷ சலுகையாக ஏதாவது அளிப்பது பற்றி அரசு ஆராய வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொண்டு அவரின் குடும்பத்தினருக்கு காமராஜ் காங்கிரஸ் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இங்கே தமிழகத்திலே முன்னாள் ஆளுநராக இருந்த, மறைந்த விஷ்ணுராம் மேதி அவர்களுக்கும் எங்கள் கட்சியின் சார்பாக இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் இந்த மாநிலத்தின் ஆளுநராக இருந்த போது —— 1959 ஆம் ஆண்டு என்று நான் நினைக்கிறேன்—— அவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு வந்திருந்தார்கள்.





அதற்குச் சில மாதங்களுக்கு முன்னாலே, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே நடைபெற்ற மாணவர்கள் போராட்டத்திலே நானும், மாணவ நண்பர்கள் பலரும் ஈடுபட்டு, சிறை பிடிக்கப்பட்டு, சிறையிலிருந்து வெளியே வந்திருந்த நேரம். அதைப் பற்றி விசாரிப்பதற்காக, ஆளுநர் மேதி அவர்கள் அங்கே வந்தபோது, மாணவர்கள் சார்பிலே நான் அவரைச் சந்தித்து, எங்களுடைய குறைகளைச் சொன்னபோது, எந்தவித தயக்கமும் இல்லாமல் எங்களுடைய ஹாஸ்டலுக்கு அவர்கள் அந்த நேரத்திலே வந்ததும், அங்கிருக்கக் கூடிய சீர்கேடுகளை உடனடியாகக் களைவதற்கான உத்தரவுகளை பிறப்பித்ததும், இன்றைக்குக் கூட எனக்கு பசுமையாக நினைவு இருக்கிறது. தமிழகத்தின் மக்களுடைய நலத்திலே, அதிலும் குறிப்பாக மாணவர்களின் நலத்திலே அவர் காட்டிய அக்கறையை இன்றைக்கு நினைத்துப் பார்க்கிறேன்.

அத்தகைய ஒரு நல்ல தேசியத் தலைவர் மறைந்ததற்கும் எங்களுடைய கட்சியின் சார்பிலே ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. முகம்மது இஸ்மாயில்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மறைந்துவிட்ட நண்பர் வால்மீகி அவர்களைப் பற்றி இங்கே தரப்பட்ட கருத்துக்களுடனும், காட்டப்பட்ட உணர்ச்சிகளுடனும், ஜனதா கட்சி தம்மை முழுமையாக இணைத்துக் கொள்கிறது.

சில தினங்களுக்கு முன்னர் மிக நல்ல திடகாத்திரத்துடனும் சுறுசுறுப்புடனும் செயலாற்றி வந்த அந்த அருமை நண்பரை, இவ்வளவு விரைவில் இழக்க வேண்டி வரும் என்று யாரும் எதிர்பார்த்திருக்க முடியாது. இன்றைக்கெல்லாம் மாரடைப்பு என்ற கொடிய நோய் தன் தாக்குதலைத் தொடுப்பதற்குப் பொருத்தம் பக்குவம் எல்லாம் பார்ப்பது கிடையாது. எனவேதான் மிக நல்ல திடகாத்திரத்துடன் இருந்த அந்த நண்பரை, அந்தக் கொடிய நோய் தாக்கி நம்மிடமிருந்து பிரித்துச் சென்று விட்டது.

அருமை சகோதரர் வால்மீகி அவர்கள் சோஷலிச தத்துவங்களில் முழுமையாக நம்பிக்கை வைத்து, சமுதாயத்தில் தாழ்ந்த நிலையில் இருப்பவர்களுக்கு அரும்பணி ஆற்றிக் கொண்டிருந்தார்கள் என்று இங்கே பலரும் சுட்டிக் காட்டினார்கள். அவர் எந்த அளவிற்கு நலிந்தவர்களுக்காகப் பாடுபட்டார் என்பது அவர் மூன்று முறைகள் பஞ்சாயத்து யூனியன் தலைவராகவும், இப்பொழுது சட்டமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதிலிருந்தே தெரிகிறது. எந்த அளவிற்கு அவர் சமுதாய நலனில் ஈடுபட்டிருந்தார் என்பதையும் இது எடுத்துக் காட்டுகிறது.

[திரு. பி. முகம்மது இஸ்மாயில்] [1981 ஜனவரி 22]

இயற்கையின் விருப்பத்திற்கும் தாக்குதலுக்கும் எதிராகப் போராடி மனிதன் இதுவரை வெற்றி பெற்றதில்லை. அதனால் தான் அருமை சகோதரர் வால்மீகி அவர்களை இந்தச் சபை இழந்து நிற்கிறது. மறைந்த அருமைச் சகோதரர் வால்மீகி அவர்களின் குடும்பத்தினருக்கு, ஜனதா கட்சியின் சார்பாக, என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த மேதை திரு. விஷ்ணுராம் மேதி அவர்கள் நிறைந்த 90 ஆண்டுக் காலம் வாழ்ந்திருந்தவர். அவருடைய வாழ் நாளில் மிகப் பெரிய காலத்தை, இந்த நாட்டின் உயர்விற்காக பாடுபடுவதில் கழித்தவர். அவர் அரசியலில் ஈடுபட்டு எந்த அளவு சிறந்த தொண்டாற்றினார் என்பதை இந்தச் சபை அறியும்; அதை நாம் உணர்ந்திருக்கிறோம்; அன்னாருடைய மறைவிற்கும் ஜனதா கட்சி தன்னுடைய இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

* திரு. கி. சட்டநாத கரையாளர்: துணைத் தலைவர் அவர்களே, நண்பர் வால்மீகி அவர்களுடைய மறைவு தனிப்பட்ட முறையிலே எனக்கு ஒரு பெரும் இழப்பு. என்னுடன் நீண்ட காலமாக, சோஷலிச இயக்கம் தோன்றிய காலத்திலே இருந்து தொடர்பு கொண்டிருந்த நண்பர். கட்சிக்கு எளியவராக இனியவராக விளங்கியவர். தனக்கு விளம்பரம் தேடாது அரசியலில் செயலாற்றிய பண்பாளர் அவர்.

விவசாய இயக்கத்திலே பெரிதும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். வெளிநாடுகளிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கு, குறிப்பாக இலங்கையிலிருந்து குடிபெயர்ந்த தமிழக மக்களுக்கு வழிகாட்டியாக இருந்தவர். அவர்களுடைய நலனிலே மிகுந்த அக்கறை கொண்டு அவர்களுடைய நல் வாழ்விற்கு என்னென்ன கிடைக்கச் செய்யவேண்டுமோ அந்த வழிகளில் பெற்றுத் தந்து அவர்களுக்கு உற்ற துணையாக இருந்தவர் அருமை நண்பர் வால்மீகி அவர்கள். அன்னாருடைய மறைவு, அரசியலிலே தீவிரமாக தன்னலமற்று செயலாற்றக் கூடிய ஒருவருக்கு ஏற்பட்ட வினையாகவே நினைக்க வேண்டியிருக்கிறது. கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடர் நடக்கும்போது தான், அவர்கள் முதன் முதலாக இருதய நோயால் தாக்கப்பட்டார்.

[முற் கல் 9.40]

மருத்துவ மனைக்குக் கொண்டு சேர்த்த அன்றிரவு நான் அவர்களைக் கண்டபோது தாங்க முடியாது அழுதுவிட்டேன். மறுநாள், அவர்கள் பேசக்கூடாது என்று இருந்ததையும் மீறி அவர்கள் சொன்னார்கள் நான் பிரிவதைப் பற்றிக் கவலைப்படவில்லை, கடைசி நிமிடம் வரை சேவை செய்து



1981 ஜனவரி 22] [திரு. கி. சட்டநாத கரையாளர்]

பிரிய வேண்டும் என்பதுதான் என் எண்ணம் என்றார்கள். அதற்குப் பிறகு அவர் டெல்லி சென்று திரும்பிய சந்தர்ப்பத்தில் அவர்கள் ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று மருத்துவர்கள் கூறியதையும் மீறி அவர்கள் செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் கண்டு நான் அவர்களிடம் கடிந்துகொண்டேன். அவர்கள் வேதனையோடு என் விடுதிக்கு வந்து ''நான் ஓய்வெடுப்பது என்பது இயலாத காரியம், என்னை வேகமாகச் செயலாற்றிப் பழக்கப் படுத்திக்கொண்டு விட்டேன். அதை விட்டு விடத் தயாராயில்லை, மரணம் வரினும் அது நன்று'' என்று சொன்னார்கள். கடைசியாக என்னிடம் விடைபெற்றுக் கொண்ட முறை அதுவாகத்தான் இருந்தது. நான் எவ்வளவோ கூறியும், இராயப் பேட்டை ஆஸ்பத்திரிக்குச் சென்று மருத்துவர்களும், அதைத் தொடர்ந்து கார்டியாக் ஸ்பெஷலிஸ்டிடம் கொண்டு போய் அவர்களும் நீங்கள் இந்த முறையில் நடந்துகொள்ளவேண்டும் என்று வற்புறுத்தியும் அன்னார் அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்று எண்ணும்போது வேதனையாக இருக்கிறது. முடிந்த அளவிற்குத் தன்னை விளம்பரப்படுத்திக் கொள்ளாமல் மக்களோடு ஒன்றி நின்று அரசியலில் வேலை செய்பவர்கள் இன்று மிக மிகக் குறைவு. அப்படி தன்னை அழித்துக் கொண்டவர் அவர். அவர் ஒரு அரசியல் தியாகி. அன்னாரின் மறைவுக்காக அவர்களது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு முன்பு பேசிய அன்பர்கள் குறிப்பிட்டபடி அவர்களது குடும்பத்தாருக்கு அவசியம் உதவி செய்ய வேண்டும். அவர்களுடைய குழந்தைகளுக்கு கல்வித் துறையிலோ அல்லது அவர்களது குடும்பத்தைப் பராமரிப்பதற்காகவோ நாம் உதவி செய்ய வேண்டியது அவசியம் என்பதை வலியுறுத்தி இந்த இரங்கல் தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

அடுத்தபடியாக, திரு. விஷ்ணுராம் மேதி அவர்கள் ஆளுநராக இருந்த காலத்தில் நான் எதிர்க் கட்சியில் இருந்த போது எதிர்க் கட்சி சார்பில் அவர்களை நான் பலமுறை சந்தித்துள்ளேன். அப்போதெல்லாம் நாங்கள் கொடுக்கக்கூடிய ஒவ்வொரு பிரச்சினைக்கும் அதன்மீது முடிவு காண்பதற்கு என்னென்ன முயற்சிகள் எடுக்க வேண்டுமோ அவைகளை எடுப்பார்கள். ஆட்சியில் இருப்பவர்களைச் சார்ந்து பேசாமல் எதிர்க் கட்சியினர் சொல்வதையும் அதிக அக்கறையோடு கேட்டுக் கொள்ளும் பண்பு அவர்களிடம் இருந்தது. ஆளுநராக அவர்கள் இருந்து ஆற்றிய பணி சிறந்ததாக இருந்தது. அவர்களது பண்பிற்காகவும், அவர்கள் சேவைக்காகவும் அவர்களைப் பாராட்டி அன்னார் மறைவுக்கு என் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

*திரு. ஏ. சாகுல் ஹமீது : பேரவையின் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் மொழிந்த இரங்கல் தீர்மானத்திற்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பில் எங்களுடைய அனுதாபத்தையும் நாங்கள் தெரிவித்துக் கொள்கிறோம். மறைந்த நண்பர் திரு. வால்மீகி அவர்கள், இங்கே நண்பர்கள் எடுத்துக் கூறியதுபோல், தன்னுடைய சீரான பணியின் காரணமாக அவர்கள் பகுதியில் ஒரு நல்ல பெயரை எடுத்திருந்தார்கள். கார் போன்று கருணை பொழியும் அவரின் சீர் பணியை ஊர் மக்கள் போற்றி பாராட்டினார்கள் என்பதிலிருந்து அவர்களுடைய பணி செம்மையுற்றிருந்தது என்று அறிய முடிகிறது. அதிலும் ஒரு முறை ஊராட்சி தேர்தலில் மன்ற உறுப்பினராக வந்தவர் மறுமுறை வெற்றி பெற முடியாத நிலையில், இவர் மூன்று முறை ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டார் என்றால் அவரது செல்வாக்கும் சொல்வாக்கும் பல வாக்குகளை அவர்களுக்குத் தேடிதந்தது. இந்தச் சட்ட மன்றத்தில் அவர்களுக்கு ஒரு இடத்தையும் தேடித் தந்தது. அவர்களுடைய பணி ஆற்றல் மிகுந்தது, சிறப்புடையது என்பதை இதுவே காட்டுகிறது. அந்த வகையில் அவர்களுடைய குடும்பத்தாருக்கு எங்களது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அடுத்து, தமிழ்நாட்டு முன்னாள் ஆளுநராக பணியாற்றிய திரு. விஷ்ணுராம் மேதி அவர்களது மறைவிற்காகவும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பில் எங்களது ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

திரு. உ. சுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தின் உறுப்பினராக இருந்து அண்மையில் மறைந்த திரு. வால்மீகிக்காக இரங்கல் தீர்மானம் கொண்டு வருகிற நேரத்தில் அதில் என்னையும் இணைத்துக் கொள்ள வாய்ப்பு கொடுத்ததற்கு நன்றி. பல தலைவர்கள் அவர்களைப் பற்றிச் சொல்லிவிட்டார்கள். இருப்பினும் அவர்களுடைய மாவட்டத்தைச் சார்ந்தவன், அவர்களுடைய தொகுதிக்குப் பக்கத்தில் உள்ள தொகுதியைச் சார்ந்தவன், இங்கு இங்கிருப்பவர்களைவிட நீண்ட நெடுங்காலம் அவர்களோடு பழகியவன் என்ற வகையில் நானும் இதில் என்னை இணைத்துக் கொள்ள முன்வந்துள்ளேன்.

நண்பர் வால்மீகி அவர்களைப் பற்றி விரிவாக எல்லாத் தலைவர்களும் நன்கு சொல்லிவிட்டார்கள். அவருடைய பெருமைக்குச் சான்று மக்கள் மத்தியிலே அன்னார் ஒரு தொண்டராகவே இருந்து, அவர்களோடு வாழ்ந்து மறைந்தது தான். அந்தப் பகுதி மக்களிடத்திலே அவருக்கு மரியாதை உண்டு. இங்கே அவை முன்னவர் அவர்களும், எதிர்க் கட்சித்



தலைவர் அவர்களும் எடுத்துக் கூறியதுபோல், அவர் சார்ந்திருக்கின்ற இனம் எங்கள் மாவட்டத்திலே அவரும, அவரைச் சார்ந்த 10 குடும்பங்களும்தான் இருக்க முடியும். அவருக்கு உறவினர்கள் எல்லாம் திருச்சி மாவட்டத்திலே, மணப்பாறையைச் சுற்றியுள்ள இடங்களில் இருக்கிறார்கள். அப்படி இருந்தும்கூட, அரசியல் ரீதியிலே தேர்தலிலே போட்டியிடுவதற்கு ஜாதியினர் ஆதரவு, இனத்தாரின் ஆதரவு இருக்க வேண்டுமென்ற நிலை வேண்டுமென்று சொன்னாலும்கூட, தன் இனத்தைச் சேர்ந்த யாரும் இல்லாத வாக்காளர் தொகுதியிலே தனி ஒரு குடும்பத்தைச் சேர்ந்த, அவர் மிகப் பெரும் வாக்குகள் வித்தியாசத்தில் ஜெயித்திருக்கிறார் என்றால், மக்கள்பால் அவர் கொண்டிருந்த அன்பும், மக்கள் அவர்பால் கொண்டிருந்த பெரும் அபிமானமும் தான் என்பதை யாரும் மறுக்க முடியாது.

அந்த வகையில் அவர் இரண்டு மூன்று முறை பஞ்சாயத்து யூனியன் தலைவராகவும், இடையிலே சிறிது காலம் பஞ்சாயத்து யூனியன் தலைவராகவும், பின்னர் இந்த மாமன்றத்தின் உறுப்பினராகவும் இருந்து பல்வேறு செயல்கள் செய்திருக்கிறார்கள். அதன் காரணமாக அங்குள்ள மக்கள் அவரை மிக மிக விரும்பினார்கள் என்று சொல்வதில் எந்தவிதமான ஐயப்பாடும் இருக்க இடமில்லை. அப்படி அவர் மக்களுடைய சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த காரணத்தினால்தான், தன் குடும்பத்தின் வசதி வாய்ப்புகளை எல்லாம் கவனிக்காமல், கொஞ்ச நஞ்சமும் இருந்த சொத்துக்களை அரசியலுக்காக, பொதுமக்களின் தொண்டுக்காக ஈடுபட்டதன் காரணத்தினால், இழந்துவிட்ட ஒரு தொண்டராக இருந்தார். சமீப காலத்தில் கூட அவர் குடும்பத்தின் சில சொத்துக்களை கிரையம் செய்துவிட்டார் என்ற செய்தி கிடைத்தது. அவர் அந்த அளவிற்கு பொதுத் தொண்டிலே ஈடுபட்டு, அந்தப் பகுதி மக்களுக்கு அதிகமான, மிகச் சிறந்த தன்மையிலே சேவை செய்து, மக்கள் மத்தியிலே சிறந்த தொண்டராக விளங்கினார். எந்தக் கட்சிக்காரர்களும், அவரிடம் இனிமையாகவும், மரியாதையுடனும் பழகிக் கொண்டிருந்தார்கள். 'இடுக்கண் வருங்கால் நகுக' என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க, அவருக்கு பல்வேறு சொந்தத் தொல்லைகள் இருந்தாலும், பல்வேறு அரசியல் தொல்லைகள் இருந்தாலும், அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல், எந்த நேரத்திலும் யாரிடத்திலும் சிரித்த முகத்தோடு பழகியதைப் பார்த்திருக்கிறேன்.

திரு. கரையாளர் அவர்கள் சொல்லியதைப் போல், சமீபத்தில் சென்ற பட்ஜெட் கூட்டத் தொடரில் கலந்து கொண்ட சமயத்தில், அவர் இரண்டாவது முறையாக இருதய நோய்க்கு ஆளாகி, இராயப்பேட்டை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, சொஸ்தமாகி வெளிவந்தவுடன், என்னைப் போன்ற நண்பர்கள்

[திரு. உ. சுப்பிரமணியம்] [1981 ஜனவரி 22

எல்லாம் சொன்னோம். நீங்கள் வேகமாக, மிகப் பெரிய அளவில் தொகுதியிலே சுற்றி சேவை செய்ய வேண்டுமென்று நினைக்கிறீர்கள். அப்படிச் சுற்றி வராமல் ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும். மக்கள் நிச்சயமாக தவறாகக் கருதமாட்டார்கள். அப்படி இல்லாவிட்டால், நோய்க்கு மீண்டும் இடம் கொடுக்க நேரிடும் என்று நாங்கள் எச்சரித்திருந்தும்கூட, அவர் அதைப்பற்றிக் கவலைப்படாமல், தொகுதி மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று கருதி, மிக விரிவான அளவிலே பிரயாணம் மேற்கொண்டதன் காரணமாக, மீண்டும் அந்த நோய்க்கு விரைவிலே, குறுகிய காலத்திலே பலியானார்கள். ஆகவே, அவருடைய தொண்டைப் பற்றி இதற்குமேல் எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அந்த அளவிற்கு மக்களோடு மக்களாக ஒன்றி தொண்டாற்றி, தலைவருக்குத் தலைவராகவும் இருந்து சேவை செய்த காரணத்தினால் தான் இவ்வளவு அருமையான நண்பரை இழக்க வேண்டி நேரிட்டது.

சென்ற பட்ஜெட் கூட்டத் தொடரில், அவர் ஆற்றிய கன்னிப் பேச்சினை நான் வாங்கிப் படித்துப் பார்த்தேன். அதிலே அவர் தொகுதியைப் பற்றித்தான் அதிகமாக கூறியிருந்ததைப் பார்த்தேன். அதைப் பார்த்து, அவரிடம் நான் சொன்னேன். பொதுவாக, மேலெழுந்தவாரியாக மாநில அரசியல் நிர்வாகத்திலே ஏற்பட்டிருக்கின்ற தேவைகளையெல்லாம் குறிப்பிட்டுவிட்டு, பின்னால் உங்கள் தொகுதியைப் பற்றிச் சொன்னால் நன்றாக இருக்குமென்று யோசனை கூறினேன். ஆனால், அவர் அதை ஏற்கவில்லை. இன்னும் ஐந்தாண்டுகள் இருக்கப் போகிறேன்; அப்போது பேசுவதற்கு வாய்ப்பிருக்கிறது. இப்போது என்னைத் தேர்ந்தெடுத்திருக்கின்ற மக்களின் தேவைகளை, குறைகளைத்தான் நான் முதலில் சொல்லியாக வேண்டுமென்று சொன்னார்கள். அதைத்தான் அவர்கள் தன்னுடைய பேச்சிலே மிகுதியாக குறிப்பிட்டிருந்தார்கள் என்றால், அந்தத் தொகுதி மக்களிடத்திலே, தனக்கு பெரும்பான்மையான அளவிலே வாக்களித்து ஆதவு அளித்த மக்களுக்கு எந்த அளவுக்கு சேவை செய்ய வேண்டுமென்று விரும்பினார்கள் என்பதை நான் சொல்ல வேண்டிய அவசியமில்லை.

[முற்பகல் 9:50]

அடுத்து, தமிழ்நாட்டில் முன்னாள் ஆளுநராக இருந்த விஷ்ணுராம் மேதி அவர்கள் மிக அருமையாக தன்னுடைய பதவிக் காலத்தில் எல்லா மக்களிடமும் ஒன்றிப் பழகி நல்ல பெயர் எடுத்து நிர்வாகம் புரிந்தவர். அவருடைய மறைவுக்கும், நண்பர் வால்மீகி அவர்கள் மறைவுக்கும் எங்கள் கட்சியின் அஞ்சலியைச் செலுத்தி இந்த இரங்கல் தீர்மானத்தில் நாங்களும் ஒன்றுபடுகிறோம். வணக்கம்.



1981 ஜனவரி 22]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையில் தெரிவிக்கப்பட்ட இரங்கல் கருத்துக்களுடன் என் உணர்வையும் இணைத்துக் கொள்கிறேன். தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தான் மாண்புமிகு உறுப்பினர்களை இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றதன் மூலம் இரண்டு தீர்மானங்களும் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மறைந்தவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் ஒத்திவைக்கப் பெறுகின்றன. பேரவை மீண்டும் நாளை 23—1—1981 அன்று காலை 9·00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை காலை 9·53 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## 2. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

*1. இலக்குமி வணிக வங்கியை (வரையறுக்கப்பட்டது) அங்கீகரிக்கப்பட்ட வங்கியாக சேர்ப்பிப்பது குறித்து, வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 27—6—1980 ஆம் தேதியிடப்பெற்ற 561 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு, 1961 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1961) 63 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

*2. கிருஷ்ணகிரி அங்காடியில் வேளாண்மை விளைபொருள் சிலவற்றை சேர்ப்பிப்பதன் பொருட்டு வேளாண்மைத் துறையில் 2—3—1972 ஆம் தேதியன்று வெளியாகி 26—4—1972 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் II—பிரிவு 1, பக்கங்கள் 452—454-ல் (ஆங்கிலத்தில்) வெளியான II-1-1872/72 ஆம் எண் அறிவிப்பில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வேளாண்மை துறையின் 22—1—1980 ஆம் தேதியிடப்பெற்ற 82 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளை பொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

[1981 ஜனவரி 22

*3. வட ஆற்காடு மாவட்டத்தில் புளியை விலைக்கு வாங்குதல் மற்றும் விற்பனை செய்தலின் மீது கட்டுப்பாடு விதிப்பது குறித்து, வேளாண்மைத் துறையின் 30—11—1979 ஆம் தேதியிடப்பெற்ற 2184 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

*4. சேலம் மாவட்டத்தில் கொள்ளுவை விலைக்கு வாங்குதல், விற்பனை செய்தலின் மீது கட்டுப்பாடு விதிப்பது குறித்து, வேளாண்மைத் துறையின் 22—1—1980 ஆம் தேதியிடப்பெற்ற 78 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

*5. கிருஷ்ணகிரி அங்காடியில் வேளாண்மை விளைபொருள் சிலவற்றை சேர்ப்பிப்பதன் பொருட்டு, வேளாண்மைத் துறையில் 23—10—1971 ஆம் தேதியன்று வெளியாகி 17—11—1971 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் II—பிரிவு 1, பக்கங்கள் 1177—1179-ல் (ஆங்கிலத்தில்) வெளியான II-1-5117/1971 ஆம் எண் அறிவிப்பில் சில திருத்தங்கள் செய்வது குறித்து, வேளாண்மைத் துறையின் 22—1—1980 ஆம் தேதியிடப் பெற்ற 80 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

*6. சேலம் மாவட்டத்தில் வெங்காயத்தை விலைக்கு வாங்குதல், விற்பனை செய்தலின் மீது கட்டுப்பாடு விதிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 16—6—1980 ஆம் தேதியிடப்பெற்ற 1140 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

£7. தமிழ்நாடு சர்க்கரை கழகத்தின் (வரையறுக்கப்பட்டது) 1979 ஆம் ஆண்டிற்கான ஐந்தாவது ஆண்டு அறிக்கை (ஆங்கிலம்). [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-அ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

£7-அ. பெரம்பலூர் சர்க்கரை ஆலையின் (வரையறுக்கப்பட்டது) 1979 ஆம் ஆண்டிற்கான மூன்றாவது ஆண்டறிக்கை (ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-அ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]



1981 ஜனவரி 22]

*8. அனுமதிக்கப்பட்ட திருவொற்றியூர் நகர அமைப்புத் திட்ட எண். 5-ல் சில மாற்றங்கள் செய்வது குறித்து, வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 2—1—1980 ஆம் தேதியிடப்பெற்ற அரசாணை எண். 1-ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

**9. சமூக நலத்துறையில், 21—9—1979 ஆம் தேதியன்று வெளியாகி 24—9—1979 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் பாகம் II—பிரிவு 2 (ஆங்கிலத்தில்) வெளியான II (2)/5979 (எச்)/79 ஆம் எண். அறிவிப்பில் திருத்தமொன்று செய்வது குறித்து, சமூக நலத்துறையின் 8—2—1980 ஆம் தேதியிடப்பெற்ற 97 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு அரிசன நலத் திட்டங்களுக்கென நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் எண். 31/1978) 24(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

**10. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் 16—4—1980 ஆம் தேதியிடப்பெற்ற 1203 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

**11. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் 16—4—1980 ஆம் தேதியிடப்பெற்ற 1204 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

**12 தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் 11—4—1980 ஆம் தேதியிடப்பெற்ற 1161 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

£13. தமிழ்நாடு உப்புக் கழகத்தின் (வரையறுக்கப்பட்டது) 1979 ஆம் ஆண்டிற்கான ஆறாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 19 'அ' பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

[1981 ஜனவரி 22

£14. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் (வரையறுக்கப்பட்டது) 1978–79 ஆம் ஆண்டிற்கான 30-வது ஆண்டறிக்கையும் இந்தியத் தணிக்கைத் துறை தலைவரின் தணிக்கை அறிக்கையும் துறைக் குறிப்புரைகளும் •[1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1965) 619 'அ' பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

**15. தர்மபுரி மாவட்டத்தில் பொம்மிடியிலுள்ள திரு. எஸ். நடராசனுக்குச் சொந்தமான டி.எம்.பி. 4338 ஆம் எண். சிறிய பயணியர் வண்டியைப் பொறுத்தவரையில் செலுத்தத்தக்க வரி மற்றும் மேல்வரி ஆகியவற்றைக் குறைப்பது குறித்து உள்துறையின் 28—6—1980 ஆம் தேதியிடப்பெற்ற 1746 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

***16. தமிழ்நாடு 1960 ஆம் ஆண்டு மதுபான (உரிமம்-அனுமதிச்சீட்டு) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள்துறையின் (மதுவிலக்கு ஆயத்துறை IV) 8—10—1979 ஆம் தேதியிடப்பெற்ற 2520 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

*** 17. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் 6—11—1979 ஆம் தேதியிடப்பெற்ற 2777 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

*** 18. வட ஆற்காடு மாவட்டம் கரிகிரியிலுள்ள சிப்பின் தொழுநோய் ஆராய்ச்சி பயிற்சி நிலையத்திற்குச் சொந்தமான சில மோட்டார் வண்டிகளைப் பொறுத்தவரையில் செலுத்தத்தக்க வரி விதத்திலிருந்து சலுகை அளிப்பது குறித்து உள்துறையின (போக்குவரத்து-I) 19—7—1980 ஆம் தேதியிடப்பெற்ற 1910 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

*** 19. தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு பணி நடைமுறை நூலின் I ஆவது பாகத்தில் உள்ள தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழக ஒழுங்கு முறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர் அமைப்பு-நிர்வாக



22 ஜனவரி 1981]

சீர்திருத்த (பணியாளர் அமைப்பு-எம்) துறையின் 8—7—1980 ஆம் தேதியிடப் பெற்ற 711 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

***20. தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு பணி நடைமுறை நூலின் I-வது பாகத்தில் உள்ள தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழக ஒழுங்கு முறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர் அமைப்பு-நிர்வாக சீர்திருத்தத் (பணியாளர் அமைப்பு-எம்) துறையின் 11—1—1980 ஆம் தேதியிடப் பெற்ற 34 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

***21. தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு பணி நடைமுறை நூலின் I ஆவது பாகத்தில் உள்ள தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழக ஒழுங்கு முறை விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பணியாளர் அமைப்பு நிர்வாக சீர்திருத்தத் (பணியாளர் அமைப்பு-எம்) துறையின் 19—2—1980 ஆம் தேதியிடப் பெற்ற 175 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

£22. தமிழ்நாடு மீனவ வளர்ச்சிக் கழகத்தின் (வரையறுக்கப்பெற்றது) 1976–77 ஆம் ஆண்டிற்கான 3-வது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டிற்கான நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 'அ' பிரிவின் கீழ் பேரவை முன்வைக்கப்பெற்றது].

***23. 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் முதல் விவர அட்டவணையில் '' அறுவை சிகிச்சைக் கருவிகள் மற்றும் மருந்துகள் தயாரிக்கும் தொழிற்சாலை '' யினையும் சேர்த்துக்கொள்வது குறித்து தொழிலாளர் நல-வேலை வாய்ப்புத் துறையின் 15—3—1980 ஆம் தேதியிடப்பெற்ற 514 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [1947 ஆம் ஆண்டு தொழிற் தகராறுகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 14/1947) 38 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

***24. சென்னை பெருநகர் வளர்ச்சி மன்றம் அனுப்பியுள்ள சென்னை மாநகர 12·2 ஆம் எண். மைலாப்பூர் திட்டப்பிரிவில் உள்ள விவேகானந்தபுரம் பகுதிக்கான விரிவான வளர்ச்சித் திட்டத்திற்கு ஒப்புதல் அளிப்பது குறித்து வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 17—12—1978 ஆம் தேதியிடப்பெற்ற 1672 ஆம் எண். அரசாணையில் வெளியான

அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்ட சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2)பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

****25. ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறை, சமூகநலத் துறை ஆகியவற்றின் அரசுச் செயலாளர்கள் அல்லது அவர்களால் நியமிக்கப்பெறுபவர்களை அலுவல் சார்புடைய உறுப்பினர்களாக நியமனம் செய்வது குறித்து வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 5—7—1980 ஆம் தேதியிடப் பெற்ற 847 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல், அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

£26. தமிழ்நாடு மாநிலத் தொழில் அபிவிருத்திக் கழகத்தின் (வரையறுக்கப்பட்டது) 1979–80 ஆம் ஆண்டிற்கான 9 ஆவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 'அ' பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

****27. சென்னை எண்ணூரிலுள்ள சமயப் பிரச்சார அற நிலையத்திற்குச் சொந்தமான T. M. T. 2571 ஆம் எண்ணுடைய நோயாளி வண்டியைப் பொறுத்தவரையில் செலுத்தத்தக்க வரி வீதத்தைக் குறைப்பது குறித்து உள்துறையின் (போக்குவரத்து-I) 28—7—1980 ஆம் தேதியிடப்பெற்ற 1993 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

****28. சென்னையிலுள்ள திருவாளர்கள் டாட்டா இஞ்சினியரிங் அண்டு லோகோ மோட்டிவ் நிறுவனத்திற்குச் சொந்தமான T. M. S. 7954 ஆம் எண்ணுடைய மோட்டார் வண்டியைப் பொறுத்தவரையில் செலுத்தத்தக்க வரி வீதத்தைக் குறைப்பது குறித்து, உள்துறையின் (போக்குவரத்து—I) 22—7—1980 ஆம் தேதியிடப்பெற்ற 1932 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

****29. தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் பயணப்படி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பொதுத் துறையின் (பணியாளர் அமைப்பு) 9—4—1979 ஆம் தேதியிடப்பெற்ற 699 ஆம் எண். அரசாணையில் வெளியான



அறிவிப்பு [தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

****30. முன்னாள் உணவு வேளாண்மைத்துறையில் 27—5—1969 ஆம் தேதியன்று வெளியாகி, 18—6—1969 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் II-பிரிவு 1, பக்கங்கள் 865—867-ல் (ஆங்கிலத்தில்) வெளியான II-1. 2716/1969 ஆம் எண். அறிவிப்பில் திருத்தமொன்று செய்தது குறித்து வேளாண்மைத் துறையின் 9—6—1980 ஆம் தேதியிடப்பெற்ற 6853/ஏ.எம். II-80-4 ஆம் எண். அரசுக் கடிதத்தில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

****31. மதுரை மாவட்டத்தில் உருளைக் கிழங்கை விலைக்கு வாங்குதல் மற்றும் விற்பனை செய்தலின் மீது கட்டுப்பாடு விதிப்பது குறித்து வேளாண்மை துறையின் 21—5—1980 ஆம் தேதியிடப்பெற்ற 985 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

****32. சேலம் மாவட்டத்தில் பச்சைப்பருப்பு, உளுத்தம் பருப்பு, துவரம்பருப்பு, மரவள்ளிக்கிழங்கு, மஞ்சள், தேங்காய், கத்தரிக்காய் ஆகிய இவற்றை விலைக்கு வாங்குதல் மற்றும் விற்பனை செய்தலின் மீது கட்டுப்பாடு விதிப்பது குறித்து வேளாண்மைத்துறையின் 20–3–1980 ஆம் தேதியிடப்பெற்ற 517 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

****33. 14 அங்காடிகளில் தேங்காய் மற்றும் தனியாவைச் சேர்ப்பதற்கான வேளாண்மைத்துறை அறிவிப்புகளில் சில திருத்தங்கள் பிறப்பிப்பது குறித்து, வேளாண்மைத் துறையின் 31—3—1980 ஆம் தேதியிடப்பெற்ற 632 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் அண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

****34. நில அங்காடிகளின் முகவரியை மாற்றுவதைப் பொறுத்தவரையில் வேளாண்மைத் துறை அறிவிப்புகளில் சில திருத்தங்கள் பிறப்பிப்பது குறித்து வேளாண்மைத்துறையின்

13—3—1980 ஆம் தேதியிடப்பெற்ற 443 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

****35. வேர்க்கடலை, நெல், எள் அனைத்து வடிவிலுள்ள கரும்புச்சர்க்கரை, நாட்டுச்சர்க்கரை, கண்டசாரி சர்க்கரை மற்றும் படிவச் சர்க்கரை தவிர காற்றொழுக்கட்டு முறையில் தயாரிக்கப்பெற்ற சர்க்கரை ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் தண்டாரம்பட்டி அங்காடி மற்றும் அதனைச் சுற்றி 16 கி. மீட்டர் பகுதியில் அமைந்துள்ள வருவாய்க் கிராமங்கள் மற்றும் குடியிருப்பு பகுதிகளில் உள்ள அங்காடியினை அறிவிக்கப்பெற்ற அங்காடிப் பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத்துறையின் 18—4—1980 ஆம் தேதியிடப்பெற்ற 798 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கிழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

£36. தமிழ்நாடு திரையரங்குக் கழகத்தின் (வரையறுக்கப் பட்டது) 1979—80 ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டறிக்கை (ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 அ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

†37. தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு திரைப்பட விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் 12—11—1979 ஆம் தேதியிடப்பெற்ற 2810 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு திரைப்படச் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) விதியின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

†38. தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு பணியாளர் விதி முறையின் பாகம் I-ல் உள்ள தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழக விதிமுறைகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர் அமைப்பு நிர்வாகச் சீர்திருத்தத் (பணியாளர் அமைப்பு-எம்) துறையின் 25—3—1980 ஆம் தேதியிடப்பெற்ற 367 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) ஆம் பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].





†39. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு குளோரல் ஹைடிரேட்டு (குளோரல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் (P&EI) 10—9—1979 ஆம் தேதியிடப் பெற்ற 2277 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்கு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

†40. தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு பணியாளர் விதிமுறைகளில் பாகம்—1ல் உள்ள தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழக விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு நிர்வாகச் சீர்திருத்தத் (பணியாளரமைப்பு M.) துறையின் 25—3—1980 ஆம் தேதியிடப் பெற்ற 368 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.

†41. சென்னை மாநகராட்சிக்கு அரிசனங்கள் அல்லது பழங்குடிமக்கள் மற்றும் பெண்களை மாநகராட்சி உறுப்பினர்களாக உறுப்பினர்கள் (Co-option) (ஒத்துத் தேர்ந்தெடுக்கும்) உரிமை மொழிகளிலேயே தேர்ந்தெடுக்கும் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 4—3—1980 ஆம் தேதியிடப்பெற்ற 375 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1919 ஆம் ஆண்டு மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348(d) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

£42. தமிழ்நாடு கனிப்பொருள் லிமிடெட்டின் 1978—79 ஆம் ஆண்டிற்கான முதல் ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 அ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

†43. தமிழ்நாடு 1960 ஆம் ஆண்டு மதுபான (உரிமம், அனுமதிச்சீட்டு) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் (P.E.IV) 2—5—1980 ஆம் தேதியிடப்பெற்ற 1505 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

†44. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு உள்ளூர் அமைப்புத் திட்ட அலுவலர்களின் அமைப்புத் திட்ட வளர்ச்சி நிதிக் கணக்கு விதிகளை உருவாக்குவது குறித்து வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 9—4—1979 ஆம் தேதியிடப்பெற்ற 635 ஆம் எண் அராசாணயில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

[22 ஜனவரி 1981

†45. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்ச வரம்பு முறைப்படுத்துதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்த வருவாய் துறையின் 10–7–1980 ஆம் தேதியிடப் பெற்ற 1682 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்புற நில உச்சவரம்பு கட்டுதல், முறைப் படுத்துதல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1978) 47(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

£46. தமிழ்நாடு பஞ்சாலைகள் கழகத்தின் 31–3–1979 ஆம் தேதி வரையிலான ஆண்டறிக்கையும் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின் 1–4–1978 முதல் 31–3–1979 ஆம் தேதி வரை யிலான செயல்முறை குறித்த அரசின் மறு ஆய்வும் [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-A பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

‡47. சென்னையிலுள்ள அமெரிக்க ஐக்கிய நாட்டின் தூதர் அலுவலகத்திற்கும் அவ்வலுவலக அலுவலர்களுக்கு அவர் களுடைய சொந்தப் பயனுக்காக விற்பனை செய்யப்பெற்ற பொருட்களுக்கும் விற்பனை வரி விதிப்பிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்-அறக்கட்டளைகள் துறையின் 28–6–1980 ஆம் தேதியிடப்பெற்ற 566-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் I/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

‡48. மாநிலங்களுக்கிடையேயான வர்த்தகம் அல்லது வாணிகத் தின் போது (1) மிதி வண்டிகள், அதன் உறுப்புகள், மிதி வண்டி யின் உதிரிப் பொருட்களுக்கு என வரி வீதத்தினைக் குறைத்தல், (2) அரிக்கன் விளக்கு, காற்றமுத்த மற்ற மண்ணெண்ணை அடுப்பு; எலுமிச்சம் புல் எண்ணெய் (lemon grass oil) புனை எண்ணெய் (3) உந்து வண்டியின் பாகங்கள் மற்றும் உதிரிப் பொருட்களின் மீதான வரி வீதத்தை குறைத்தல் ஆகியவை குறித்து வணிக வரிகள் அறக்கட்டளைகள் துறையின் 3–7–1980 ஆம் தேதியிடப் பெற்ற 584 ஆம் எண் அரசாணையில் வெளி யான அறிவிப்பு [தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் I/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

‡49. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் 19–7–1980 ஆம் தேதியிடப்பெற்ற 1909 ஆம் எண் அரசாணை யில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட் டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].



22 ஜனவரி 1981]

‡50. தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், கேரளம், மகாராஷ் டிரம், கர்நாடகம், குஜராத் மற்றும் கோவா, பாண்டிச்சேரி போன்ற மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளுக்கிடையே யான பரிமாற்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில் தமிழ்நாட்டில் ஓடுவதற்கு அதிகாரமளிக்கப் பெற்ற தமிழ்நாடு தவிர ஏனைய மாநிலங்களுக்குச் சொந்தமான பொதுச் சரக்கு ஊர்திகளுக்கு செலுத்தப்பெற வேண்டிய வரி வீதத்தினைக் குறைப்பது குறித்து உள்துறையின் (போக்குவரத்து 1) 2–8–1980 ஆம் தேதியிடப் பெற்ற 2045 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

‡51. தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 63 ஆம் பிரிவின் உட்பிரிவு (11)-ற்கிணங்க தேசிய அனுமதி வழங்கப்பெற்று மாநிலத்தின் உரிய அதிகாரி வழங்கியுள்ள அனுமதியின் கீழ் தமிழ்நாடு மாநிலத் தில் ஓடுவதற்கு உரிமை பெற்றுள்ள தமிழ்நாடு தவிர ஏனைய மாநிலத்தில் பதிவு செய்யப்பெற்றுள்ள பொதுச் சரக்கு ஊர்தி களுக்கு செலுத்த வேண்டிய வரி வீதத்தினைக் குறைப்பது குறித்து உள்துறையின் 1980 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 2 ஆம் தேதி யிடப்பெற்ற 2047 ஆம் எண் அரசாணையில் வெளியான அறி விப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

‡52. தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள ஏ. எஸ். எஸ். ஐ.எஸ்.ஐ. மருத்துவ மனைக்குச் சொந்தமான டி. என். எப். 7108 என்ற எண்ணுடைய வண்டிக்கு சலுகைக் கட்டண வீதத் தில் வரி செலுத்துவது குறித்து உள்துறையின் (போக்குவரத்து I) 1980 ஆம் ஆண்டு ஆகஸ்டுமாதம் 7ஆம் தேதியிடப் பெற்ற 2090 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

‡53. சென்னையிலுள்ள இந்தியச் செஞ்சிலுவைச் சங்கத்தின் தமிழ்நாடு கிளைக்குச் சொந்தமான டி. எம். வி. 725, டி.எம்.வி. 1635, டி.எம்.வி. 1940 ஆகிய வண்டிகளுக்கு சலுகைக் கட்டண வீதத்தில் வரி செலுத்துவது குறித்து உள் (போக்குவரத்து I) துறையின் 1980 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 25 ஆம் தேதியிடப் பெற்ற 1958 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

[22 ஜனவரி 1981

£54. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்த மொன்று செய்வது குறித்து உள்துறையின் 1980 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 3 ஆம் தேதியிடப் பெற்ற 1774 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3) பிரிவின் கீழ் பேரவையின் முன் வைக்கப் பெற்றது].

£55. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள்துறையின் 1980 ஆம் ஆண்டு ஜூலைமாதம் 31 ஆம் தேதியிடப் பெற்ற 2029 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1934) 133(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

@56. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் 1980 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 14 ஆம் தேதியிடப் பெற்ற 2116 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

£57. தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் 1978–79 ஆம் ஆண்டிற்கான 7 ஆவது ஆண்டறிக்கை [தமிழ்நாடு 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

@58. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்ச வரம்பு கட்டுதல் முறைப்படுத்துதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த்துறையின் 1980 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26 ம் தேதியிடப் பெற்ற 1996 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு கட்டுதல் முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 24/1978) 47(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

@59. தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு கடன் நிவாரண விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து கூட்டுறவுத் துறையின் 13–12–1979 ஆம் தேதியிடப்பெற்ற 753 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டத்தின் (குடியரசுத் தலைவர் சட்டம் 31/1976) 14(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].



1981 ஜனவரி 22]

@60. 1977 ஆம் ஆண்டு தமிழ்நாடு பணி நடைமுறை நூலின் பகுதி 1-ல் உள்ள தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழக ஒழுங்கு முறை விதிகளில் திருத்த மொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு நிர்வாகச் சீர் திருத்தத் துறையின் (பணியாளரமைப்பு-M) 19–4–1979 ஆம் தேதியிடப்பெற்ற 495 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

@61. 1977 ஆம் ஆண்டு தமிழ்நாடு பணி நடைமுறை நூலின் பகுதி 1-ல் உள்ள தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக்கழக ஒழுங்கு முறை விதிகளில் திருத்த மொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு நிர்வாகச் சீர் திருத்தத் (பணியாளரமைப்பு-M) துறையின் 1–4–1980 ஆம் தேதியிடப்பெற்ற 396 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

@62. தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து கூட்டுறவுத் துறையின் 23–7–1980 ஆம் தேதியிடப்.பெற்ற 359 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 53/1961 119(4) விதியின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

@63. தென் ஆற்காடு மாவட்டம் வடதொரசலூரில் உள்ள தொழுநோய் மிஷின் மருத்துவமனைக்குச் சொந்தமான எம்.டி.கே. 4919, எம்.டி.ஜே. 7307, டி.என்.எப். 7228, மற்றும் டி.என்.எப் 9054 ஆம் எண் வண்டிகளுக்குச் செலுத்த வேண்டிய வரி வீதத்தினைக் குறைப்பது குறித்து உள்துறையின் (போக்குவரத்து-I) 20–8–1980 ஆம் தேதியிடப் பெற்ற 2157 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

@64. சென்னை கால்நடை நல வாரியத்திற்குச் சொந்தமான எம். எஸ். எம். 4369 என்ற எண்ணுடைய நடமாடும் கால்நடை மருந்தக வண்டிக்கு செலுத்த வேண்டிய வரி வீதத்தைக் குறைப்பது குறித்து உள் (போக்குவரத்து-I) துறையின் 22—8—1980 ஆம் தேதியிடப்பெற்ற 2175 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

@65. மதுரை மாநகராட்சிக்கு மாநகர முதல்வர் மற்றும் துணை மாநகர முதல்வரை தேர்வு செய்யும் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 27–8–1980 ஆம் தேதியிடப் பெற்ற 1278 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு மதுரை நகர மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

@66. ஊர்வளர்ச்சி-உள்ளாட்சித் துறையில் 26–4–1961 ஆம் நாளன்று தோன்றி 10–5–1961 ஆம் தேதியிடப் பெற்ற தமிழ்நாடு அரசிதழில் துணைவெளியீட்டில் பாகம் V பக்கங்கள் 50–51-ல் (ஆங்கிலத்தில்) வெளியான S.R.O.ஏ 489/1961 (அறிவிப்பு எண் 45) ஆம் எண் அறிவிப்பில் வெளியான திரும்ப வசூலிக்க முடியாத வரிகள், கட்டணங்கள் முதலியவற்றையும் அதன் தடைகள் மற்றும் கட்டுப்பாட்டையும் தள்ளுபடி செய்வது குறித்த அதிகாரம் அளிப்பது தொடர்பான விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 12–8–1980ஆம் தேதியிடப்பெற்ற 1209ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958] 199(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

@67. தமிழ்நாடு 1960 ஆம் ஆண்டு மதுபான (உரிமம் அனுமதிச் சீட்டு) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் (PE.II) துறையின் 3–12–1979 ஆம் தேதியிடப்பெற்ற 2971 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ் நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

@68. வருவாய்த் துறையின் 22—5—1962 ஆம் நாளன்று தோன்றி 30—5—1962 ஆம் தேதியிடப் பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பகுதி 2-ன் பிரிவு 1-ல் 982–983 ஆம் பக்கங்களில் வெளியான (ஆங்கிலத்தில்) அறிவிக்கை எண் II-1 2437/1962-ல் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள் அறக் கட்டளைகள் துறையின் 15—2—1980 ஆம் தேதியிடப் பெற்ற 142 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

@69. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொதுவிற்பனை வரிவிதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்—அறக் கட்டளைகள் துறையின் 26—8—1980 ஆம் தேதியிடப் பெற்ற 767 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].



@@70. அறிவிக்கப்பெற்ற அங்காடிப் பகுதிகளிலிருந்து குன்னத்தூர், சத்தியமங்கலம், புஞ்சைப்புளியம்பட்டி, அவினாசி, கோபிச்செட்டிப்பாளையம் அங்காடிப் பகுதிகளைச் சேர்ந்த சில கிராமங்களை நீக்குவது குறித்து வேளாண்மைத் துறையின் 10—1—1980 ஆம் தேதியிடப் பெற்ற 32 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு வேளான்-விளைபொருள் அங்காடிச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

@@71. சில சட்டமன்ற உறுப்பினர்களையும், அலுவல் சார்பற்ற உறுப்பினர்களையும், தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தில் உறுப்பினர்களாக நியமிப்பது குறித்து தொழிலாளர் வேலை வாய்ப்புத் துறையின் 2—8—1980 ஆம் தேதியிடப் பெற்ற 1788 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 41(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

@@72. நிலக்கடலை, எள், ஆமணக்கு, பருத்தி, கரும்பு, சர்க்கரை, மிளகாய், மஞ்சள், நெல் கம்பு, சோளம், ராகி ஆகியவற்றைப் பொருத்தமட்டில் நாமகிரிப் பேட்டை, தலைவாசல், பள்ளிப்பாளையம், மோகனூர் அங்காடிப் பகுதிகள் மற்றும் இவ்வங்காடிப் பகுதிகளைச் சுற்றியுள்ள 16 கிலோ மீட்டர் பரப்பினை அறிவிக்கப்பெற்ற அங்காடிப் பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 17—7—1980 ஆம் தேதியிடப்பெற்ற 1364 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்-விளைபொருள் அங்காடிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

@@73. திராட்சை மற்றும் பட்டுப் பருத்தியினை வேளாண் விளைபொருளாக அறிவிப்பது குறித்தும், மதுரை மாவட்டத்தில் மஞ்சள் வெங்காயம், தேங்காய், எள், சோளம், கம்பு, ராகி உளுந்து, துவரை, வாழை, மாம்பழம், உருளைக்கிழங்கு, திராட்சை, பருத்தி பட்டு பொருட்களை வாங்குதல் மற்றும் விற்பது மீதான கட்டுப்பாடு குறித்து வேளாண்மைத் துறையின் 5—8—1980 ஆம் தேதியிடப்பெற்ற 1525 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

@@74. வேளாண்மைத் துறையில் 23—9—1977 ஆம் நாளன்று தோன்றி 12—10—1977 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பகுதி II-ன் பிரிவு 2-ல் 583 பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியான அறிவிப்பு எண் II(2)/AG/4851/77-ஐத்

தள்ளு டி (நீக்குதல்) செய்வது குறித்து வேளாண்மை துறையின் 21—7—1980 ஆம் தேதியிடப்பெற்ற 1400 ஆம் எண் அரசாணையில். வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்-விளைபொருள் அங்காடிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

@@75. பூதப்பாடியில் அங்காடி ஒன்றினை நிறுவுவது குறித்து கோயம்புத்தூர் அங்காடிக் குழுவிற்கு கட்டளை பிறப்பிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 5—8—1980 ஆம் தேதியிடப் பெற்ற 1524 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்-விளைபொருள் அங்காடிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

@@76. சில அங்காடிகளைச் சேர்க்கும் வகையில் வேளாண்மைத் துறை அறிவிப்புகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 21—7—1980 ஆம் தேதியிடப்பெற்ற 1399 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்-விளைபொருள் அங்காடிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

@@77. தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்பு விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் (போக்குவரத்து—1) துறையின் 6—8—1980 ஆம் தேதியிடப் பெற்ற 2078 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

@@78. பயணிகளை ஏற்றிச் செல்லும் ஜீப் வண்டிகளுக்கு சலுகைக் கட்டண வீதத்தில் வரி செலுத்துவது குறித்தும், தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் பயன்படுத்தப்படும் பயணிகளை ஏற்றிச் செல்லும் வண்டிகளுக்கு செலுத்தவேண்டிய வரியின் மீது மேல் வரி விதிப்பது குறித்தும் உள் (போக்குவரத்து-1) துறையின் 3—9—1980 ஆம் தேதியிடப்பெற்ற 2276 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

@@ 79. தமிழ்நாடு 1960 ஆம் ஆண்டு மதுபான (உரிமம், அனுமதிச் சீட்டு) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் (P.E. IV) துறையின் 7—2—1980 ஆம் தேதியிடப்பெற்ற 312 ஆம் எண் அரசாணையில் வெளியான அறி



விப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

@@80. மதுரை மாநகராட்சியின் ஆணையர், வருவாய் அலுவலர், உதவி வருவாய் அலுவலர் ஆகியோர் திரை அரங்குகளைச் சோதனையிடுவதற்கான அதிகாரங்களை வழங்குவது தொடர்பாக வருவாய்த்துறையின் அறிவிப்பில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்—அறக்கட்டளைகள் துறையின் 21—8—1980 ஆம் தேதியிடப்பெற்ற 757 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

@@81. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள்துறையின் 31—7—1980 ஆம் தேதியிடப்பெற்ற 2031 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

@@82. பாலிதீன் மணிகள் போன்ற பொருள்களுக்கு செலுத்த வேண்டிய வரி வீதத்தைக் குறைப்பது குறித்து வணிக வரிகள்—அறக்கட்டளைகள் துறையின் 31—7—1980 ஆம் தேதியிடப்பெற்ற 685 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

@@83. தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு திரைப்பட (முறைப் படுத்துதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் (திரைப்படத்) துறையின் 12—11—1978 ஆம் தேதியிடப்பெற்ற 2811 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ் நாடு 1955 ஆம் ஆண்டு திரைப்படச் (முறைபடுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1955) 10 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

@@84. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் 30—6—1980 ஆம் தேதியிடப்பெற்ற 1747 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

@@85. தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு திரைப்பட (முறைப் படுத்துதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் (திரைப்பட) துறையின் 22—10—1979 ஆம் தேதியிடப் பெற்ற 2644 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு திரைப்பட (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

@@86. தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு பதிவெழுத்தர்கள் உரிம விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள்—அறக்கட்டளைகள் துறையின் 16—8—1980 ஆம் தேதியிடப்பெற்ற 830 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [1908 ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் சட்டம் (மத்தியச் சட்டம் 26/1908) 89-ஏ (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

@@87. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள்துறையின் 10—7—1980 ஆம் தேதியிடப்பெற்ற 1831 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

@@88. தொழிலாளர் வேலைவாய்ப்புத் துறையின் 6—8—1977 ஆம் தேதியன்று தோன்றி 7—9—1977 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் II-ன் பிரிவு 2-ல் 498 ஆம் பக்கததில் (ஆங்கிலததில்) வெளியான II (2)/ E.L. 4239/77 ஆம் எண் அறிவிப்பில் திருத்தமொன்று செய்வது குறித்து தொழிலாளர் வேலை வாய்ப்புத்துறையின் 17—7—1980 ஆம் தேதியிடப்பெற்ற 1588 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972) 41 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

%89. 1977 ஆம் ஆண்டு தமிழ்நாடு பணி நடைமுறை நூலின் பகுதி 1-ல் உள்ள தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழக விதிமுறைகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு-நிர்வாகச் சீர் திருத்தத்துறையின் (பணியாளரமைப்பு-M) 19—8—1980 ஆம் நாளிடப்பெற்ற 845 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

%90. புள்ளியியல் துறையிலுள்ள நூலகர் பதவியினை அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழகத்தின் வரம்பெல்லைக் குள் கொண்டு வருவது தொடர்பாக பணியாளரமைப்பு-நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் அறிவிப்பில் திருத்தமொன்று





செய்வது குறித்து பணியாளரமைப்பு-நிர்வாகச் சீர்திருத்தக் (பணியாளரமைப்பு-M) துறையின் 21—11—1979 ஆம் நாளிடப் பெற்ற 1279 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

%91. தலைமைக் கட்டிடக் கலைஞர் பிரிவிலுள்ள இளநிலைக் கட்டிடக் கலைஞர் பதவியினை தமிழ்நாடு பொது சார்புப் பணியாளர் பணியில் சேர்ப்பது தொடர்பாக தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக்கழக விதிமுறைகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு-நிர்வாகச் சீர்திருத்தத் (பணியாளரமைப்பு-M) துறையின் 29—4—1980 ஆம் நாளிடப்பெற்ற 517 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

%92. தமிழ்நாடு மீனவள சார்நிலைப் பணியிலுள்ள குளிர்பதன மேற்பார்வையாளர் பதவியினை அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழக வரம்பெல்லைக்குள் கொண்டு வருவது தொடர்பாக தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழக விதிமுறைகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு—நிர்வாகச் சீர்திருத்தத் (பணியாளரமைப்பு-M) துறையின 11—1—1980ஆம் நாளிடப்பெற்ற 33 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

%93, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு மதுபான சட்டத்தின் கீழ் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களை விற்பனை ஒழுங்கை செய்தல் விதிகளை உருவாக்குவது குறித்து உள் (P. E. IV) துறையின் 8—4—1980 ஆம் நாளிடப்பெற்ற 1304 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

%94. சென்னை (600 006) யிலுள்ள பள்ளிக் கல்வி இயக்குநரை, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழக கல்வி குழுவில் உறுப்பினராக நியமிப்பது குறித்து கல்வித் துறையின் 23—6—1980 ஆம் தேதியிடப்பெற்ற 1140 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 48 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

%95. சென்னை (600 044)யிலுள்ள தொழில் நுட்ப வத்தின் இயக்குநர் டாக்டர் எஸ். சாதிக் அவர்களை சென் 44-லிலுள்ள பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலை கழக ஆட்சி மன்றக் குழுவின் உறுப்பினராக 3 ஆண்டுக் கா திற்கு நியமிப்பது குறித்து கல்வித் துறையின் 12—8—1980 நாளிடப்பெற்ற 1578 ஆம் எண் அரசாணையில் வெளியா அறிவிப்பு (தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ண தொழில் நுட்பப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நா சட்டம் 30/1978) 43 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக் பெற்றது.]

%96. சென்னையிலுள்ள இந்தியச் செஞ்சிலு சங்கத்தின் தமிழ்நாடு கிளைக்குச் சொந்தமான 77541 ஆம் எ எஞ்சின் மற்றும் 20362/23 ஆம் எண் வண்டிக்கூடு உடை சுவிட்சர்லாந்தில் தயாரிக்கப் பெற்ற டிரக் வண்டிக்கு சலுகை கட்டண வீதத்தில் வரி (சலுத்துவது மற்றும் பதிவு உரி கட்டணங்கள் செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறி உள் (போக்குவரத்து-1) துறையின் 20—8—1980 ஆம் தே யிடப்பெற்ற 2156 ஆம் எண் அரசாணையில் வெளியான அ விப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் பேரவை முன் வைக்கப்பெற்றது].

%97. சென்னையிலுள்ள 'மித்திரா' விற்குச் சொ மான டி. எம். யூ. 3891 ஆம் எண் வண்டிக்கு சலுகைக் கட்ட வீதத்தில் வரி செலுத்துவது குறித்து உள் (போக்குவரத்து துறையின் 15—9—1980ஆம் தேதியிடப்பெற்ற 2388 ஆம் எ அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்ட 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

98. 1962 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி உறுப்பி களுக்கான தேர்தலை நடத்துவது குறித்த விதிகளில் திரு மொன்று செய்வது குறித்து ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் து யின் 19—7—1980 ஆம் தேதியிடப் பெற்ற 1091 ஆம் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1919 ஆண்டு சென்னை மாநகர மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நா சட்டம் 5/1919) 348 (d) பிரிவின் கீழ் பேரவை முன் வைக் பெற்றது].

99. சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. டி. வே கபாலி அவர்களை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் தலை ராக ஓராண்டு காலத்திற்கு நியமிப்பது குறித்து வீட்டு வசதி- நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 21—6—1980 ஆம் தேதியிட பெற்ற 302 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவி [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப்பகுதிகள் (மேம்படு தல், அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]





99ஏ. சில நபர்களை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் அலுவல் சார்பற்ற உறுப்பினர்களாக ஓராண்டுக் காலத்திற்கு நியமிப்பது குறித்து வீட்டு-வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 21—6—1980 ஆம் தேதியிடப்பெற்ற 799 ஆம் எண் அரசாணையில்வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல், அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72(2)பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

% 100. சில நபர்களை சென்னை கிண்டியிலுள்ள பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தில் கல்விக் குழுவில் உறுப்பினர்களாக நியமிப்பது குறித்து கல்வித் துறையின் 24—3—1980 ஆம் தேதியிடப்பெற்ற 551 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 43 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

% 101. சிறிய உணவு விடுதிகள் அல்லது சிற்றுண்டிச் சாலைகளில் விற்கப்படும் உணவு பொருட்கள் மற்றும் பானங்களுக்கு செலுத்த வேண்டிய வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்—அறக்கட்டளைகள் துறையின் 6—10—1980 ஆம் தேதியிடப்பெற்ற 1001 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

% 102. சென்னையிலுள்ள புற்றுநோய்க் கழகத்திற்கு விற்பனை செய்யப்பெறும் டீசல் ஜெனரேட்டர்கள் (கிராம்டன் குரோவ்ஸ்) விற்பனை மீதான விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது தொடர்பாக வருவாய்த்துறையின் அறிவிப்பில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள் அறக்கட்டளைகள் துறையின் 9—10—1980 ஆம் தேதியிடப்பெற்ற 1019 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

% 103. மதுரைக் கோட்டத்திலுள்ள அவனியாபுரம் சோதனைச் சாவடியை மாற்றுவது தொடர்பாக வருவாய்த்துறையின் அறிவிப்பில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்—அறக்கட்டளைகள் துறையின் 8—9—1980 ஆம் தேதியிடப் பெற்ற 822 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

[1981 ஜனவரி 22

% 104. பதிப்புப் புத்தகங்களின் விற்பனை மீது செலுத்த வேண்டிய விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது தொடர்பாக வணிக வரிகள்—விற்பனை வரித்துறையின் அறிவிப்பில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்—அறக்கட்டளைகள் துறையின் 7—7—1980-ஆம் தேதியிடப்பெற்ற 589 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

% 105. தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உணவு-கூட்டுறவுத் துறையின் 2—9—1980 ஆம் தேதியிடப்பெற்ற 425 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 53/1961) 119(4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

% 106. சென்னை-7லுள்ள திருவாளர்கள் ஜெயபாரதன் அண்டு கம்பெனி, சென்னையிலுள்ள பாலமந்திருக்கு (அனாதைக் குழந்தைகள் மருத்துவமனை) மனைக்கு செய்த 200 மர நாற்காலிகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்—அறக்கட்டளைகள் துறையின் 3—10—1980 ஆம் தேதியிடப்பெற்ற 971 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

% 107. உயரழுத்த மின் மாற்றிகள் மற்றும் எவர்சில்வர்களாலான கழுவும் தொட்டிகளை வாங்குவதன் மீதான விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது தொடர்பாக வருவாய்த்துறையின் அறிவிப்பு திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள் அறக்கட்டளைகள் துறையின் 9—9—1980 ஆம் தேதியிடப்பெற்ற 827 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

% 108. Orbit-ன் மூன்று தொழிற்பிரிவுகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் விற்பனை மீது செலுத்த வேண்டிய விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்-அறக்கட்டளைகள் துறையின் 6—9—1980 ஆம் தேதியிடப்பெற்ற 816 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]



1981 ஜனவரி 22]

% 109. தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து கல்வித் துறையின் 27—8—1980 ஆம் தேதியிடப்பெற்ற 1703 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1976 ஆம் ஆண்டு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (குடியரசுத் தலைவர் சட்டம் 19/1976) 54(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

% 110. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் குத்தகை பாக்கிகள் (நிவாரணமளித்தல்) விதிகளை உருவாக்குவது குறித்து வருவாய்த்துறையின் 28—6—1980 ஆம் தேதியிடப்பெற்ற 1956 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் குத்தகை பாக்கிச் (நிவாரணமளித்தல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1980) 13(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

% 111. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிவிதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள் அறக்கட்டளைகள் துறையின் 20—8—1980 ஆம் தேதியிடப்பெற்ற 751 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

% 112. தஞ்சாவூர் மாவட்டத்தில் வாங்க-விற்கப்படும் அனைத்து வடிவிலான சர்க்கரை மீதும் கட்டுப்பாட்டினை அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 18—9—1980 ஆம் தேதியிடப்பெற்ற 1862 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளை பொருள் அங்காடிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

% 113. நெல், நிலக்கடலை, உளுந்து, பச்சைப்பயிறு ஆகியவற்றைப் பொறுத்த வரையில் நாகப்பட்டினம் அங்காடி மற்றும் அதனைச் சுற்றி 16 கிலோ மீட்டர் பகுதியில் அமைந்துள்ள பரப்பினை அறிவிக்கப்பெற்ற அங்காடிப் பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 9—9—1981 ஆம் தேதியிடப்பெற்ற1794 ஆம் எண்அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு, வேளாண்மை விளை பொருள் அங்காடிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959 29(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

% 114. தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து தொழிலாளர்-வேலைவாய்ப்புத் துறையின் 2—9—1980 ஆம் தேதியிடப்பெற்ற

2048 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1972 41(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

% 115. வத்தலகுண்டு அங்காடியின் முகவரியினை மாற்றுவது தொடர்பாக வேளாண்மைத் துறையின் அறிவிப்பில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 20—9—1980 ஆம் தேதியிடப்பெற்ற அரசு கடித எண் 76966/AMII80-3ல் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்—விளை பொருள் அங்காடி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

% 116. சங்குவார்ச்சத்திரம், பள்ளிப்பட்டு மற்றும் ஊத்துக்கோட்டை அங்காடிகளை அறிவிக்கப்பெற்ற அங்காடிப்பகுதியாக அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 27—8—1980 ஆம் தேதியிடப்பெற்ற 1697 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளை பொருள் அங்காடிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

% 117 கரூர், ஓசூர், கீழமங்கலம் அங்காடிகளில் கம்பு, சோளம், வரகு, கொள்ளு, ஆமணக்கு, தேங்காய், மரவள்ளிக் கிழங்கு, உருளைக் கிழங்கு, துவரை ஆகிய பொருள்களை சேர்ப்பது தொடர்பாக வேளாண்மைத் துறையின் அறிவிப்பில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வேளாண்மைத்துறையின் 21—7—1980 ஆம் தேதியிடப் பெற்ற 1397 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

% 118. மத்திய வரி மதிப்பீட்டு வட்டத்திலுள்ள வணிக வரி அலுவலர் பதவியினை உதவி ஆணையர்கள் என்று பதவி உயர்வு செய்வது தொடர்பாக வருவாய்த் துறையின் அறிவிப்பில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்-அறக்கட்டளைகள் துறையின் 10—9—1980 ஆம் தேதியிடப்பெற்ற 831 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]



%% 119. 1977 ஆம் ஆண்டு தமிழ்நாடு பணி நடைமுறைகளின் பாகம் 1-ல் உள்ள தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழக ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு-நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் (பணியாளர் அமைப்பு-M) 22—3—1980 ஆம் தேதியிடப் பெற்ற 340 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

%% 120. தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு திரைப்பட (முறைப்படுத்துதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் (திரைப்பட) துறையின் 14—2—1980 ஆம் தேதியிடப்பெற்ற 399 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு திரைப்பட (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

%% 121. திண்டுக்கல் அங்காடியின் முகவரியினை மாற்றுவது தொடர்பாக வேளாண்மைத் துறையின் அறிவிப்பில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 9—10—1980 ஆம் தேதியிடப்பெற்ற அரசு கடித எண் 74220/80--4-ல் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் அங்காடிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

%% 122. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டி விதிகளில் திருத்தமொன்று செய்வது தொடர்பாக உள் துறையின் 29—9—1980 ஆம் தேதியிடப் பெற்ற 2508 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

%% 123. தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு திரைப்பட (முறைப்படுத்துதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் (திரைப்பட) துறையின் 7—12—1979 ஆம் தேதியிடப்பெற்ற 3010 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு திரைப்பட (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

%% 124. தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு திரைப்பட (முறைப்படுத்துதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் (திரைப்பட) துறையின் 5—3—1980 ஆம் தேதியிடப்பெற்ற

[1981 ஜனவரி 22

655 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு திரைப்பட (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

%% 125. சென்னை-600031-ல் உள்ள தமிழ்நாடு கிடங்குக் கழகத்தின் 1979—80 ஆம் ஆண்டிற்கான ஐந்தொகை கணக்கு (ஆதாயம்-இழப்பு கணக்கு ; ஆதாயம்-இழப்பு நிதி ஒதுக்கக் கணக்கு). [தமிழ்நாடு 1962 ஆம் ஆண்டு கிடங்குக் கழகச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 58/1962) 31 (11) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

%% 126. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக-வரிகள்-சமய அறக் கட்டளைகள் துறையின் 14—10—1980 ஆம் தேதியிடப்பெற்ற 1035 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன்வைக்கப் பெற்றது].

%% 127. தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 13—10—1980 ஆம் தேதியிடப்பெற்ற 1030 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

%% 128. தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு ஊர்க்காவல் படையினர் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் 25—4—1980 ஆம் தேதியிடப் பெற்ற 1305 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு ஊர்க்காவல் படையினர் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1963) 15 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

%% 129. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு சட்டமன்ற (உறுப்பினர்களுக்கான சம்பளம் மற்றும் மருத்துவ செலவு ஈட்டுத் தொகை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பொதுத் (நிர்வாகம்-1) துறையின் 25—2—1980 ஆம் தேதியிடப்பெற்ற 499 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு சம்பளச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 14 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]



1981 ஜனவரி 22]

%% 130. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு உணவகங்கள் (ஹோட்டல்கள்) மற்றும் தங்கும் விடுதிகளில் உள்ள ஆடம்பரப் பொருட்கள் மீதான வரி விதிப்பு குறித்த விதிகளை உருவாக்குவது தொடர்பாக வணிக வரிகள் அறக்கட்டளைகள் துறையின் 13—10—1980 ஆம் தேதியிடப்பெற்ற 1032 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகளில் உள்ள ஆடம்பரப் பொருள்களுக்கு வரிவிதிப்பு அவசரச் சட்டத்தின் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 7/1980) 21 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

%%% 131. சென்னையிலுள்ள பாலமந்திருக்குச் (அனாதைகள் மருத்துவமனை) சொந்தமான TMV 6511 ஆம் எண் வண்டிக்கு சலுகைக் கட்டண வீதத்தில் வரி செலுத்துவது தொடர்பாக உள் (போக்குவரத்து-1) துறையின் 22—10—1980 ஆம் தேதியிடப்பெற்ற 2749 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

%%% 132. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் 13—10—1980 ஆம் தேதியிடப் பெற்ற 2682 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

%%% 133. சென்னை, அடையாரிலுள்ள விலங்குகள் பாதுகாப்புச் சங்கம்-கால்நடை மருந்தகத்திற்குச் சொந்தமான TMV 6132 ஆம் எண் வண்டிக்கு சலுகைக் கட்டண வீதத்தில் வரி செலுத்துவது குறித்து உள் (போக்குவரத்து-1) துறையின் 22—10—1980 ஆம் தேதியிடப்பெற்ற 2750 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

%%% 134. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் 23—10—1980 ஆம் தேதியிடப் பெற்ற 2754 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

[1981 ஜனவரி 22

%%% 135. மதுரை மாவட்டம், சத்திரப்பட்டியிலுள்ள காந்தி சேவா சங்கம் வாங்கும் நாட்டுச் செக்கு வேப்பெண்ணெய்க்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்தும் மதுரை மாவட்டம், சத்திரப்பட்டியிலுள்ள காந்தி சேவா சங்கத்திற்கு விற்பனை செய்யப் பெறும் வேப்பெண்ணெய் மீது செலுத்த வேண்டிய கூடுதல் விற்பனை வரி விதிப்பிலிருந்து விலக்களிப்பது குறித்துப் வணிக வரிகள் அறக்கட்டளைகள் துறையின் 13—10—1980 ஆம் தேதியிடப்பெற்ற, 1028 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

%%% 136. எபனைட் பேனாக்கள் விற்பனையின் மீது எந்த ஒரு வணிகரும் செலுத்த வேண்டிய வரி வீதத்தைக் குறைப்பது குறித்து வணிக வரிகள் அறக்கட்டளைகள் துறையின் 6—10—1980 ஆம் தேதியிடப் பெற்ற 990 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்க பெற்றது.]

%%% 137. தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சி இணையத்தின் (வரையறுக்கப்பட்டது) 1976—77 ஆம் ஆண்டிற்கான நான்காவது ஆண்டு அறிக்கை. [1950 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956.) " 619 அ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்க பெற்றது.]

%%%138. சில பொருட்களைப் பொருத்தமட்டில் விற்பனையாளரின் கொள்முதல் மொத்த விற்பனையுடன் சேர்க்க வேண்டிய சதவீத மொத்த விற்பனையினை நிர்ணயித்தல் மற்றும் தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்-அறக்கட்டளைகள் துறையின் 1980 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22 ஆம் தேதியிடப்பெற்ற 1082 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

%%%139. சென்னை சுத்திகரிப்பு ஆலை நிறுவனம் தமிழ்நாட்டிற்கு வெளியில் அனுப்பும் உற்பத்திப் பொருட்களுக்கு 1969 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 28 ஆம் தேதியிலிருந்து விற்பனை வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்-அறக்கட்டளைகள் துறையின் 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் தேதியிடப்பெற்ற 966 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]



1981 ஜனவரி 22]

%%%140. கிரேட்டர் சென்னை தொழுநோய் சிகிச்சை சுகாதாரக் கல்வித் திட்டத்தை கிராமல்டஸ் (Gramaltes) சிறப்பு சிகிச்சை மருத்துமனை மற்றும் தொழு நோயாளர் நிலையம் என்று பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக வணிக வரிகள்-அறக்கட்டளைகள் துறையின் அறிவிப்பில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்-அறக்கட்டளைகள் துறையின் 1980 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13-ஆம் தேதியிடப்பெற்ற 1031 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு, [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

£141. தமிழ்நாடு 1962 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 3 ஆம் தேதியிடப் பெற்ற 2164 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/1959) 29 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

£142. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வட்டிக் கடைக்காரர்கள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 4 ஆம் தேதியிடப்பெற்ற 2072 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு வட்டிக் கடைக்காரர்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1957) 22 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

£143. தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு மருத்துவச் சலுகைகள் வழங்குவது தொடர்பாக தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழக ஒழுங்குமுறை விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பணியாளரமைப்பு நிர்வாகச் சீர்திருத்த (பணியாளரமைப்பு-M) துறையின் 1980 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22 ஆம் தேதியிடப்பெற்ற 1055 ஆம் எண்

[1981 ஜனவரி 22

அரசாணையில் வெளியான அறிவிப்பு. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

£144. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வீரியம் நீக்கப்பெற்ற சாராவி, மெதில் ஆல்கஹால் மற்றும் வார்னீஷ் (பிரெஞ்சு பாலீஷ்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் [மதுவிலக்கு ஆயத்தீர்வை 4] 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 18 ஆம் தேதியிடப்பெற்ற 2403 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

£(1) போக்குவரத்துத் துறை குறித்த (தமிழ்நாடு) (1976 நவம்பர்—1977 ஜூன்) குழுவின் அறிக்கையும், பட்டாபிராமன் குழுவின் போக்குவரத்துத்துறை பற்றிய பரிந்துரைகளின் மீது அரசு வெளியிட்டுள்ள ஆணைகளின் விவர அட்டவணை.

£(2) தமிழ்நாடு, 1980 ஆம் ஆண்டு ஓட்டல்கள், தங்கும் இல்லங்களில் உள்ள ஆடம்பர வசதிகளின் மீதான வரிவிதிப்பு அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 7/1980).

¶(3) தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்துதல் ரத்து செய்தல்) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 8/1980).

¶¶(4) தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு வரி செலுத்த மறுக்க அல்லது ஒத்திப்போடத் தூண்டுதலைத் தடுக்கும் அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 9/1980).

&(5) தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பகுதிநேர கிராம அதிகாரிகள் பதவி ஒழிப்பு அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 10/1980).

&&(6) தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 11/1980).

$(7) தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு வேளாண்மை விளைப்பொருள் அங்காடிகள் (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச்சட்டம் எண் 12/1980).



1981 ஜனவரி 22]

$(8) தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்களை நியமித்தல்) இரண்டாவது திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 13/1980).

***(9) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் துறையின் 1980 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 27 ஆம் தேதியிடப் பெற்ற 3468-அ 80-1, (ம. 1) ஆம் எண் குறிப்பாணையில் வெளியான சில பொது நிறுவனங்கள் தொடர்பான அறிவிப்பில் செய்த திருத்தம்.

---

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### வெள்ளிக்கிழமை, 1981 ஜனவரி 23

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கண் சோர்வு''

நல்ல சொல்லால் நல்ல பயனும் தவறான சொல்லால் தீமையும் வரும். எனவே, தம் சொல்லால் தவறு நேராமல் ஒவ்வொருவரும் காத்துக் கொள்வது நல்லது.

### 1. இரங்கல் குறிப்பு.

#### முன்னாள் உறுப்பினர் திரு. ஹாஜி ம. மு. பீர் முஹம்மது மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. ஹாஜி ம. மு. பீர் முஹம்மது அவர்கள் 22–1–1981 ஆம் தேதியன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஹாஜி ம. மு. பீர் முஹம்மது அவர்கள் 1967ஆம் ஆண்டிலிருந்து 1970-ஆம் ஆண்டு வரை, திருநெல்வேலி மாவட்டம் மேலப்பாளையம் தொகுதியிலிருந்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

அவர்கள் சவூதி அரேபியா போன்ற நாடுகளுக்குப் போய் இஸ்லாமிய மதக் கருத்துக்களையும், சமயக் கருத்துக்களையும், இந்திய நாட்டினுடைய தத்துவங்களையும் வெளி உலகத்திற்குப் பறைசாற்றி வந்த பெரியவர் என்பதை இந்த நேரத்திலே நான் நினைவுகூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் முஸ்லிம் லீக் கட்சியின் துணைச் செயலாளராகப் பணியாற்றியுள்ளார்கள். அவர்கள் அநாதை இல்லங்கள் பலவற்றை நடத்தியவர்கள். அநாதை இல்லங்களுக்குப் புத்தகங்களைச் சேகரித்தார்கள், அநாதை இல்லங்களுக்குத் தொண்டு செய்வதை ஒரு பேறாகக் கருதி வாழ்ந்த பெரியவர் அவர். தமிழகம் பெற்றெடுத்த மிகச்சிறந்த சொற்பொழிவாளர்களிலே அவர் ஒருவர் என்பதை இந்த நேரத்திலே நான் நினைவுகூறக் கடமைப்பட்டு இருக்கிறேன். அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும் இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1981 ஜனவரி 23

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கோள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நின்றனர்.)

## 2. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

சிறந்த தமிழ் நூல்களுகக்குப் பரிசு வழங்கும்திட்டம்.

*வினா எண் 1—திரு. மு. அப்பாதுரை—மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) சிறந்த நாவல், சிறுகதை, கவிதை ஆகியவற்றிற்குத் தமிழ் வளர்ச்சி மன்றம் ஆண்டுதோறும் பரிசு வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், கடைசியாக பரிசு வழங்கியது எப்போது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்—(அ) ஆம்.

(ஆ) 1971, 1972 ஆகிய ஆண்டுகளில் வெளியிடப்பட்ட நூல்களுக்கு 1975 ஆம் ஆண்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

திரு. மு. அப்பாதுரை : பேரவைத் தலைவர் அவர்களே, 1975 ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்தப் பரிசு வழங்கும் திட்டம் ஏன் பரிசீலிக்கப்படவில்லை என்பது பற்றி அரசு விளக்கம் கூறுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் அமுலில் இருக்கிறது. தற்போது அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. வெகு விரைவில் 1973, 1974 ஆகிய ஆண்டுகளில் வெளியான சிறந்த நூல்களுக்குப் பரிசளிப்பு விழா நடைபெறும்.

திரு. மு. அப்பாதுரை : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மொழியில் வெளி வருகிற நூல்களுக்கு மட்டுமல்லாமல், மற்ற மொழிகளிலே வரக்கூடிய சிறந்த நூல்களை மொழி பெயர்ப்பு செய்து தமிழிலே வெளியாகின்ற நூல்களுக்கும் பரிசுகள் வழங்கப்படுமா?



1981 ஜனவரி 23]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அத்தகைய கருத்து அரசுக்கு இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, சங்கரதாஸ் சுவாமிகள், மனோன்மணீயம் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, பேரறிஞர் அண்ணா ஆகியவர்கள் எல்லாம் தமிழ் நாவல்களுக்காகவும், தமிழ்த் துறைக்காகவும் மிகுந்த பாடுபட்டிருக்கிறார்கள் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். எனவே அவர்களுடைய குடும்பத்தினருக்குப் பரிசுகள் வழங்க அரசு ஆவன செய்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அது இந்தத் திட்டத்தின் கீழ் வராது. இந்தத் திட்டத்தின் கீழ் அந்தந்த ஆண்டு வெளியிடப்படும் நாவல், சிறுகதை ஆகியவை அந்தப் பரிசுகளைப் பெறுகின்றன.

திரு. சு. முத்துகிருஷ்ணன் : தலைவரவர்களே, குமரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. வேலாயுதம் அவர்கள் ஏராளமான புத்தகங்களை வெளியிட்டு இருக்கிறார்கள். திரு வேலாயுதம் அவர்கள் எழுதிய புத்தகங்களுக்குப் பரிசுகள் வழங்குவதற்கான நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின் கீழ் ஒரு குழு அமைக்கப்பெற்றிருக்கிறது. அந்தந்த ஆண்டில் வெளியிடப்பட்டு, கொடுக்கின்ற காலவரம்பிற்குள் வெளியிடப்பட்டு, புத்தகங்களை எழுதியவர்கள் புத்தகங்களை அனுப்பினால் பரிசளிக்கும் திட்டம்தான் இந்தத் திட்டம். பழைய நூல்கள் அல்லது இதற்கு முன் எழுதப்பட்ட நூல்களுக்குப் பரிசளிக்கும் வாய்ப்பு இத்திட்டத்தின் கீழ் வராது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தின் கீழ் வராது என்று அறிவித்தார்கள். ஏதாவதொரு திட்டத்தை வகுத்து நான் முதலிலே குறிப்பிட்டதைப்போல தமிழுக்கு, தமிழ் நாடகத்துறைக்குப் பாடுபட்ட திரு சங்கரதாஸ் சுவாமிகள், மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை, பேரறிஞர் அண்ணா ஆகியோருடைய நினைவாக அவர்களைச் சேர்ந்த குடும்பத்தினருக்கு உதவி செய்வதற்கான புதுத் திட்டத்தை வகுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட பெரியவர்களின் குடும்பங்களுக்கு உதவி செய்வது என்பது, தனிப்பட்ட முறையிலே அவர்கள் எழுதி அவைகள் வேறு முறையிலே பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று, கல்வி—

துறையின்கீழ் இந்தத் திட்டத்தின் கீழே அவைகள் வராது. அப்படி ஆர்வம் இருக்கிறவர்கள் அந்த முயற்சியை மேற்கொள்ளலாம்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு தலைவரவர்களே, தமிழில் வெளியாகும் சிறந்த தமிழ் நூல்களுக்கு வழங்கப்படும் இந்தப் பரிசுத் திட்டத்தின்கீழ் இலங்கை, மலேஷியா, இன்னும் மற்ற வெளிநாடுகளில் வாழ்கின்ற தமிழர்கள் எழுதுகின்ற நூல்களையும் சேர்த்துக் கொண்டு அவர்களுக்கும் பரிசு வழங்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, தமிழகத்திலே இருக்கின்றவர்கள் சிறந்த நூல்களை எழுதுகின்ற வகையிலே, அவர்களுக்கு ஊக்கத்தையும், உற்சாகத்தையும் தருவதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற திட்டம்தான் இந்தத் திட்டம். நம்முடைய தமிழகத்திலே இருக்கின்ற எழுத்தாளர்களுக்குக் கொடுப்பது என்ற நிலைமையிருந்தால்தான் அந்தப் பயனை நாம் பெறமுடியும். வெளிநாடுகளிலே இருக்கின்றவர்களுக்கு நாம் தருகின்ற முயற்சியிலே ஈடுபட்டு ஒரு பரிசு போனால்கூட அது இங்கு இருப்பவர்களுக்குப் பாதிப்பு ஏற்படும் நிலையை ஏற்படுத்தும்; எதிர்ப்புக் கூட வந்தாலும் வரலாம்.

[முற்பகல் 9–10]

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவரவர்களே, சிறந்த நாவல், சிறுகதை, கவிதை ஆகியவற்றிற்குப் பரிசு வழங்குவதாகத் திட்டம் இருக்கிறது. அதை வெளியிடுகின்ற பத்திரிகைகளுக்கும் பரிசுகள் வழங்குவதற்குத் திட்டம் உண்டா? ஆண்டுதோறும் பரிசு வழங்குவதாகத் திட்டம் இருந்தால் 1974–க்குப் பிறகு இதுவரையில் தேர்ந்தெடுக்காததற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, புதியவற்றை உருவாக்குகின்ற எழுத்தாளர்களுக்கு இந்தப் பரிசுகளை நாம் தருகின்றோம். அதை வெளியிடுகின்ற பத்திரிகைகளுக்கு, அந்த எழுத்தாளர்கள் பாராட்டப்படுகின்ற பொழுது மன நிறைவு கிடைப்பதுதான் அவர்களுக்குக் கிடைக்கின்ற பெரும் பரிசாகும்.

இவ்வளவு நாள் அது தடைப்பட்டிருந்ததற்குக் காரணம், 1974-ல் இதற்கான ஆராய்ச்சி மன்றத்தைத் திருத்தி அமைத்திருக்கின்றார்கள். 1976-ல் அரசு கலைக்கப்பட்டபொழுது, அதைத் தொடர்ந்து இந்த ஆராய்ச்சி மன்றம் செயல்பட முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு 1978-ல் ஆம் ஆண்டில் அதை மாற்றி அமைப்பதற்கான செயற்குறிப்பு அந்த மன்றத்திலிருந்து எங்களுக்குக் கிடைத்தது. அந்த மன்றத்தைப் புனரமைப்பு செய்து, அந்தக் குழு உறுப்பினர்களிலே இருவரை



அந்தப் பரிசுத் திட்டத்தைச் சமன்படுத்துவதற்கான நிலைக் குழுவாக அமைத்து, 31–7–1979 இல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதற்குப் பிறகு அவர்கள் கூட்டத்தைக் கூட்டி, 1973–74 ஆம் ஆண்டுகளுக்கான சிறந்த நூல்களைத் தேர்ந்தெடுத்து இப்பொழுது அனுப்பியிருக்கிறார்கள். தேர்ந்தெடுத்துவிட்டார்கள்; விழா நடைபெறும்.

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவரவர்களே, அந்தத் தமிழ்மன்றக் குழுவில் உறுப்பினர்களாக இருக்கக்கூடியவர்களுடைய பெயர்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? அதே போல், கவிதைக்கும், நாவலுக்கும், சிறுகதைக்கும் எவ்வளவு பரிசுத் தொகைகள் என்று இந்தத் தமிழ் மன்றம் வரையறுத்திருக்கிறது என்ற விவரங்களையும் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, முதல் பரிசு ரூ. 2,000 ; இரண்டாம் பரிசு ரூ. 1,000 என்று முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழு உறுப்பினர்களுடைய விவரம் இங்கே இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் நான் தருகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, சிறந்த நூல் என்று முடிவு செய்வது எந்த, எந்த அடிப்படையில் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதற்காக அமைக்கப்பட்டிருக்கின்ற குழுவிலே இருக்கிற உறுப்பினர்கள் முடிவு செய்கிறார்கள். அரசு அதிலே தலையிடுவதில்லை. அரசு எந்த வரைமுறைகளை நிர்ணயிப்பதும் இல்லை.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே சிறுகதை மன்னன் என்று பெயர் வாங்கிய ஜெயகாந்தன் போன்றவர்களுக்கு அந்தப் பரிசு கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, பரிசுகள் தருவது என்பது அந்தக் குழுவிலே இருக்கின்றவர்கள் செய்கின்ற பணியாகும். அந்தந்த ஆண்டு வெளியிடப்பட்ட நூல்களை அவர்கள் தேர்ந்தெடுத்துச் சொல்கிறார்கள். அப்படித் தேர்ந்தெடுத்து அவர்கள் தரலாம் என்று சொன்னால் இந்த அரசு அதற்குக் குறுக்கே நிற்காது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவரவர்களே, சென்ற ஆண்டு, 1980 ஆம் ஆண்டு, எத்தனை நூல்களுக்குப்

[1981 ஜனவரி 23

பரிசுகள் வழங்கப்பட்டன? முதல் பரிசு ரூ. 2,000 என்று சொல்லப்படுகிறது. அது மிகக் குறைவாக இருக்கின்ற காரணத்தாலே அதை அதிகப்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கடைசியாக 21–11–1975 ஆம் தேதியன்று பரிசுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அது 1971–72 ஆம் ஆண்டுகளிலே வெளியிடப்பட்ட நூல்களுக்காக வழங்கப்பட்டிருக்கிறது. இதிலே மேற்கொண்டு விவரம் என்னிடம் இங்கே இல்லை. பரிசுத் தொகையை உயர்த்துகின்ற எண்ணமும் இப்பொழுது இல்லை.

கரூர் அரசு கலைக் கல்லூரியில் பி. காம். பட்டப்படிப்பு

*வினா எண் 2—திரு எம். சின்னசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருச்சி மாவட்டம், கரூர் அரசினர் கலைக் கல்லூரியில் பி.காம். பட்டப்படிப்பு துவங்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

(இ) எத்தனை மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப் படுவார்கள்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்; (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூரிலே அரசு கலைக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு ஏறத்தாழ 15 ஆண்டுக்காலம் ஆகிறது. அங்கே, பி.ஏ., பி.எஸ்.சி. பட்டப் படிப்புகளுக்கான வகுப்புகள் இருக்கின்றன. ஆனால், பி.காம். வகுப்பு இல்லை. அப்பகுதியிலுள்ளவர்கள் பி.காம். படிக்க வேண்டுமானால், 50 மைல் தூரத்திலுள்ள திருச்சிக்கோ, அல்லது மேற்கே உள்ள கோயம்புத்தூருக்கோ வரவேண்டும். அடுத்த ஆண்டாவது முயற்சி செய்து, பி.காம். பட்டப் படிப்பை, அந்தக் கலைக் கல்லூரியில் துவங்க அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கல்லூரிகளில் பட்டப் படிப்பைத் துவங்குவதற்கான நடைமுறையை நான் சொல்ல விரும்புகிறேன். ஒரு கல்லூரியிலே புதிய பட்டப் படிப்பைத் தொடங்குவது என்பது அந்தந்தக் கல்லூரிகளில், அங்கேயிருக்கிற தேவைக்கேற்பவும், அனுப்பப்படுகிற விண்ணப்பங்களைப் பொறுத்தும் அந்தந்தக்



1981 ஜனவரி 23]

கல்லூரி முதல்வர்கள் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவித்து, பல்கலைக் கழகங்கள் எடுக்கின்ற முடிவை ஒத்து அமைவதாகும். அரசாங்கம் நேரடியாக எந்தப் பகுதியிலும் பட்டப் படிப்புகளை ஏற்படுத்துகின்ற பழக்கம் இதுவரையிலே கிடையாது.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கரூரிலிருந்து திருச்சிக்கு ஏறத்தாழ 50 மைல் தூரம் இருக்கிறது. அந்த 50 மைல் சுற்றளவிலே பி.காம். பட்டப் படிப்பு உள்ள கல்லூரி ஏதும் இல்லை. ஆகவே, வருகிற கல்லூரி ஆண்டிலாவது கரூர் அரசினர் கலைக் கல்லூரியில் பி.காம். வகுப்பு துவங்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: நான் ஏற்கனவே குறிப்பிட்ட மாதிரி, கல்லூரிகளிலே பட்டப் படிப்பைத் துவங்குவது பற்றிய ஒரு விளக்கத்தைத் தர விரும்புகிறேன். அந்தந்தக் கல்லூரியிலே இருக்கிற கல்லூரி தலைவர்கள் அந்தக் கல்லூரியிலே ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று கருதப்படுகிற அல்லது தேவைப்படுகிற பிரிவுகள் குறித்து, விண்ணப்பம் செய்யவேண்டும். அதைப் பல்கலைக் கழகம் பரிசீலித்து அதற்கு அனுமதி வழங்க வேண்டும். அரசும் அதற்கு அனுமதி வழங்க வேண்டும். அரசு அனுமதி வழங்குவது என்பது இரண்டாவது வருகின்ற கட்டம். ஆகவே, இந்தக் கல்லூரியைப் பொறுத்தவரை அரசு அனுமதி வழங்குகிற கட்டத்தை இன்னும் அடையவில்லை.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைக் கல்லூரி இருக்கிற எல்லா இடங்களிலும் பி.ஏ. வகுப்புகளை ஆரம்பிப்பதோடு, பி.காம். வகுப்புகளைத் தொடர்ந்து ஆரம்பிக்க அரசு அனுமதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கருத்தை ஏற்றுக் கொள்வதற்கில்லை. காரணம், பி.காம். பட்டப் படிப்பு தொழில் பாடம் போன்ற ஒன்றாகும். அதை எல்லா கல்லூரிகளிலும் ஆரம்பித்து நிறைய பி.காம் பட்டதாரிகளை நாம் உருவாக்கி விடுவோமானால், அதற்கடுத்தபடியாக, அவர்களுக்கு எத்தகைய வேலை வாய்ப்புத் தருவது என்பது பிரச்னையாகும். ஆகவே, வேலை வாய்ப்பு, நம்முடைய தேவை, இவைகளைப் பொறுத்துத்தான் நாம் பாடப் பிரிவுகளை ஆரம்பிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அதோடு, ஆசிரியர்கள் பற்றாக்குறை கூட, இந்தக் கல்விப் பிரிவில் பாடப் பிரிவில் தடையாக இருக்கிறது.

திரு. ஜே. எஸ். இராசு : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரி முதல்வர்கள் தேவைப்படுகின்ற பட்டப் படிப்பைப் பற்றி பல்கலைக் கழகத்திற்கு எழுதினால்தான், அது கவனிக்கப்பட்டு ஆவன செய்யப்படும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். சில கல்லூரிகளில் முதல்வர்கள் ஒருகால் ஆர்வம் காட்டாமல் இருந்து, பொது மக்களுடைய பிரதிநிதி கள், சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள், அல்லது ஒன்றி யத் தலைவர்கள் போன்ற மற்றவர்கள் அதைப் பல்கலைக் கழ கத்திற்குத் தெரிவித்தால், அதைக் கவனிக்குமாறு பல்கலைக் கழகம் அறிவுறுத்தப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பல்கலைக் கழகம் அட்டானமஸ் பாடி அல்லவா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசாங்கம் என்ன செய்வது என்பதை நாம் பேசுவதற்கு முன்னால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் குறைபாடுகளைப் போக்கவேண்டுமானால், மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் அந்தக் கல்லூரிக்கும் எந்த அளவுக்குத் தொடர் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் களுக்கும் அந்தக் கல்லூரி முதல்வர்களுக்கும் என்ன தொடர்பு இருக்கின்றது என்பதைப் பற்றி நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அவர்கள் கல்லூரி தலைவர்களோடு தொடர்பு கொண்டு, இன்னின்ன வகுப்புகளைத் துவக்கலாம் என்று பேசு அங்கேயே அதற்கான முயற்சிகளை நேரடியாக மேற்கொள்ளலாம்.

தர்மபுரி அரசு கலைக் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு வகுப்புகள்.

*வினா எண். 3—திரு. எஸ். அரங்கநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தர்மபுரி அரசு கலைக் கல்லூரியில் எம்.ஏ., எம்.எஸ்.ஸி. வகுப்புகள் தொடங்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், 1980–81-ம் ஆண்டிலேயே தொடங்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?





மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) 1980–81 ம் ஆண்டில் தருமபுரி அரசு கலைக் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு வகுப்புகள் ஏதும் தொடங்கப்படவில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

அரியலூர் அரசினர் கலைக் கல்லூரி.

*வினா எண். 4—திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) அரியலூர் அரசினர் கலைக்கல்லூரியில் பி.காம். மற்றும் எம். ஏ. படிப்புகளுக்கான வகுப்புகள் தொடங்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், எந்தக் கல்வியாண்டில் இருந்து இந்த வகுப்புகள் தொடங்கப் பெறும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அரியலூர் அரசினர் கல்லூரி மாணவர் விடுதியில் அரிசன மாணவர்களுக்கும், ஜாதி இந்து மாணவர்களுக்கும் இடையே ஏற்பட்ட கலவரத்தில், அரிசன மாணவர்களுக்கு இந்த அரசாங்கம் என்ன பாதுகாப்பு கொடுத்தது என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் அரசினர் கலைக் கல்லூரி ஆரம்பிக்கப் பட்டு 15 ஆண்டுகள் ஆகியும், இந்த ஆண்டும் பி.காம். மற்றும் எம்.ஏ. பட்டப்படிப்புகள் இடம் பெறவில்லை. நான் அந்தக் கல்லூரி முதல்வரைச் சந்தித்து, அந்தப் பகுதி பின்தங்கிய பகுதி என்றும், மேலும் 50 மைல் சுற்றளவுக்கு அந்தப் பகுதியில் இந்த பி.காம்., எம்.ஏ. வகுப்புகள் இல்லை என்றும் சொல்லியிருக்கிறேன். இந்த ஆண்டாவது அந்தப் படிப்புகளை ஆரம்பிக்கும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் ;** தலைவர் அவர்களே, அரியலூர் அரசினர் கலைக் கல்லூரியில் இருந்து பி.காம். பட்டப் படிப்பிற்கோ அல்லது வேறு துறைகளிலே பட்ட மேற்படிப்பு வகுப்புகள் துவங்கவோ கல்லூரி முதல்வரிடமிருந்து விண்ணப்பம் வரவில்லை. தமிழ் இலக்கியம் ஆங்கில இலக்கியம் ஆகியவற்றில் இளங்கலை பட்டப் படிப்பு வகுப்புகளும் இயற்பியல், விலங்கியல் மற்றும் வேதியல் ஆகிய துறைகளில் இளம் அறிவியல் பட்டப்படிப்புத் துவங்க விண்ணப்பம் தரப்பட்டது. அவற்றில் தமிழ் இலக்கியத்தில் இளங்கலைப் பட்டப்படிப்பு தொடங்கப் பட்டுள்ளது.

**திரு. க. இரா. சின்னராசு :** தலைவர் அவர்களே, தர்மபுரியில் அந்தக் கலைக் கல்லூரியிலே எம்.ஏ., எம்.எஸ்ஸி. பட்டப் படிப்பு வேண்டும் என்று கேட்கின்றபோது, அப்படிப்பட்ட உத்தேசம் எதுவும் இல்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் பல்கலைக் கழகத்திலே இருந்து, கல்லூரி முதல்வர் அவர்கள் எழுதிய கடிதத்திற்கு, வந்த பதிலில் பரிசிலிக்கப்பட்டு ஏற்படுத்தலாம், அதற்கான உத்தேசம் இருப்பதாகவும் அறிகிறோம். அப்படிப்பட்ட தகவல் ஏதாவது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட விவரம் இங்கே இல்லை.

**திரு. ரா. உமாநாத் :** தலைவர் அவர்களே, பி.காம். வகுப்பு திறப்பது சம்பந்தமாக அதனுடைய முறையைப் பொறுத்தவரையில் கனம் அமைச்சர் சொன்னதுதான் சரியாக இருந்தாலும் அதாவது அங்கே இருந்து அப்ளிகேஷன் வர வேண்டும் என்பது—வந்திருக்கின்ற 2, 3 கேள்விகளில் எல்லாம் பி.காம் பற்றியே திரும்பத் திரும்ப வந்துகொண்டிருக்கின்றன. குறிப்பாக அரசினர் கல்லூரிகள் சம்பந்தமாக வந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக அந்த வட்டாரத்தில் அந்தப் படிப்புக்கு, பொதுவாக தமிழ்நாட்டில் அதிக கிராக்கி இருக்கிறது. அப்படி இருக்கும்போது அதைத் திறக்காமல் இருந்தால் அதன் விளைவாக அன்பேர் மெத்தெட், கரப்ஷன் எல்லாம் அதனால் வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதனாலே புரொசிஜர் எப்படி இருந்தாலும் ஜனங்களின் தேவையைக் கருதி, கல்லூரிகளின் தேவைகளைக் கருதி அரசாங்கம் இந்தப் படிப்புகளைத் துவங்குவதற்கு பிரின்சிப்பால்களை அழைத்துப் பேசுவதற்கு முயற்சி எடுக்குமா?





**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, கல்லூரியில் இத்தகைய பாடங்களைத் துவங்குவதற்கு அந்தக் கல்லூரி முதல்வர்கள் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும் என்கிற முறை இருந்து கொண்டு இருக்கின்றது. அவர்கள் அதற்கான விவரங்களை அனுப்பினால் பல்கலைக் கழகம் தன்னுடைய குழுவை அந்தக் கல்லூரிக்கு அனுப்பி விவரங்களைப் பரிசீலனை செய்து என்னென்ன வகுப்புகளை ஆரம்பிக்கலாம் என்று முடிவு செய்கின்ற முறை இருக்கின்றது. அந்த முறையைத்தான் நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம். அரசாங்கக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், அங்கே இருக்கின்ற கல்லூரி முதல்வர்கள் அரசாங்கத்தின் பிரதிநிதிகளைப் போலத்தான் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இந்தக் கேள்விகளை பார்க்கின்றபோது மக்களுடைய பிரதிநிதிகளுக்கும், கல்லூரி முதல்வர்களுக்கும் சரியான தொடர்பு இல்லை என்பதுபோல் தெரிகின்றது. அப்படியொரு தொடர்பு ஏற்பட்டுவிடுமானால் பிரச்சினை இருக்காது.

(முற்பகல் 9-20)

**திரு. மு. ப. முனுசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி அரசு கலைக் கல்லூரியில் எம். ஏ. சரித்திரம் வகுப்பு தேவை என்று அந்தக் கல்லூரி முதல்வர் எழுதி, அது அரசின் ஆய்வில் உள்ளது என்று அறிகிறேன். அதனை இந்த ஆண்டே ஏற்படுத்தித்தர அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் என்னிடத்தில் தற்போது இல்லை. கிருஷ்ணகிரி கல்லூரியாக இருந்தாலும், அல்லது வேறு எந்தக் கல்லூரியாக இருந்தாலும், இது குறித்துப் பல்கலைக்கழகம் எடுக்கும் முடிவுக்குப் பின், அரசாங்கம் தன்னுடைய முடிவை நிச்சயம் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா. கருப்பையா :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் தொழில் கல்விக்கு அடுத்து மிகவும் அதிகமான தேவையுள்ள படிப்பாக பி.காம் பட்டப்படிப்பு இருப்பதால், தற்சமயம் மாநிலத்தில் பி.காம். பட்டப்படிப்பு இருக்கும் கல்லூரிகளில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், அரசு கல்லூரிகளைப் பொறுத்தவரையில் ஒரு குறிப்பிட்ட 10 ஆண்டு காலமாக அந்தக் கல்லூரி இயங்கி வந்தால், அவற்றில் எல்லாம் பி.காம் பட்டப்படிப்பு ஆரம்பிக்கவும், என்கிற வகையில் ஒரு பொதுவான கொள்கை முடிவை அறிவிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் இங்கே தெரிவிக்கின்ற பதிலை வைத்துக் கொண்டு, இந்த மாநிலத்தில் உள்ள அரசுக் கல்லூரிகளில் எல்லாம் பி.காம். பட்டப்படிப்பு இல்லை என்கிற தவறான கருத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் கொள்ளக் கூடாது. மாநிலத்தில் எந்தெந்தக் கல்லூரிகளில் பி.காம் பட்டப் படிப்புகள் கற்றுத்தரப்படுகின்றன என்கிற விவரம் என்னிடத்தில் இல்லை. நிறைய கல்லூரிகளில் பி.காம். பட்டப்படிப்பு வகுப்புகள் உள்ளன. மேலும் நிறைய பி.காம். பட்டப்படிப்பு வகுப்புகளை உருவாக்குவதன் மூலம் இன்றுள்ள வேலை வாய்ப்பு இல்லாத நிலையில், அந்தப் படிப்பை முடித்த மாணவர்கள் அதற்குரிய வேலையைத் தர வேண்டும் என்று கேட்கிற நிலைமை சமுதாயத்தில் ஏற்பட்டு விடக்கூடாது என்பதால் அதுகுறித்து கவனமாக முடிவு எடுக்க வேண்டியுள்ளது.

திரு. கே. குப்புசாமி: தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் இரண்டு கலைக் கல்லூரிகள் இருக்கின்றன. அந்த இரண்டு கல்லூரிகளிலும் மேல் பட்டப்படிப்பு வசதி இல்லாததால் அந்த மாவட்டத்தில் மேல் பட்டப்படிப்பு படிக்க விரும்பும் மாணவர்கள் அனைவரும் வெளி மாவட்டங்களுக்குச் சென்று படிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. அந்த மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம் என்கிற அளவில், அதை ஒரு சிறப்புப் பகுதியாகக் கருதி, அந்த மாவட்டத்தில் இருக்கும் ஒரு கலைக் கல்லூரியிலாவது மேல் பட்டப்படிப்பு வசதி ஏற்படுத்திக்கொடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, முதுகலைப் பட்டப்படிப்பு வசதிகளைத் தற்போது தமிழ்நாட்டில் மிக அதிகமாக ஆரம்பித்து வருகிறோம். தருமபுரி மாவட்டத்தில் உள்ள இரண்டு கல்லூரிகளும் அண்மைக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட கல்லூரிகள். அந்தக் கல்லூரிகள் வளர்ச்சி அடைந்து போதுமான மாணவர்கள் இருப்பார்களானால் அங்கே ஆரம்பிப்பதில் எந்தவிதமான தயக்கமும் இல்லை. இந்த ஆண்டு கிருஷ்ணகிரி கலைக் கல்லூரியில் மேல் பட்டப்படிப்பு ஆரம்பித்து இருப்பதாக நினைக்கிறேன். அது குறித்த விவரம் என்னிடத்தில் இல்லாததால் உறுதியாகச் சொல்வதற்கு இல்லை?

திரு. ஆர். சௌந்தரராசன்: தலைவர் அவர்களே, அரியலூர் கலைக் கல்லூரியைச் சுற்றி 40 மைல் விஸ்தீரணத்திற்கு எந்த விதமான பி.காம். பட்டப்படிப்பு வசதியுள்ள கல்லூரியும் இல்லை. அந்தப் பகுதியில் இயற்கையிலேயும் மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதி. ஆகவே, அந்த அரியலூர் கலைக் கல்லூரியில் பி.காம். பட்டப் படிப்பு வசதி நிச்சயமாகத் தேவைப்படுகிறது. அந்தக் கல்லூரி முதல்வர் அவர்களிடமிருந்து எந்தவிதமான மனுவும் வரவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அங்கேயிருக்கும் கல்லூரி முதல்வர் அதற்கான நட-



வடிக்கை எடுக்கவில்லை என்ற ஒரே காரணத்தால், அரசு வாளா இருக்காமல், அரசே முன்வந்து அந்தப் பிற்பட்ட பகுதியில் இருக்கும் மாணவர்கள் பி. காம் பட்டப் படிப்பு படிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்தித் தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இந்த அடிப்படையில் நாம் நடவடிக்கைகளை எடுத்தால், பல்கலைக் கழகங்களுக்கு இருக்கும் தன்னாட்சித் தன்மை போய் விடும் நிலைமையேற்படும். பல்கலைக் கழகம் என்பது சமுதாயத்திற்கு எதிரான ஒரு அமைப்பு அல்ல. அதுவும் சமுதாயத்தின் தேவைகளை அனுசரித்துத்தான் நடவடிக்கை எடுத்து வருகிறது. முறையாக முயற்சி எடுக்காத குறைபாட்டை வைத்துக் கொண்டு நாம் பல்கலைக் கழகத்தின் தன்னாட்சித் தன்மைக்கு பாதகமான நடவடிக்கை எடுத்தால் ஒரு காலத்தில் பல்கலைக் கழகம் இருக்கின்ற உரிமைகளையும் இழந்து ஒன்றுமில்லாததாக ஆகிவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## போளூரில் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம்

*வினா எண். 5—திரு. இல. பலராமன்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா :—

(அ) வட ஆற்காடு மாவட்டம் போளூர் நகரத்தில் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதிமன்றம் ஏற்படுத்துவது குறித்த பரிந்துரை ஏதும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், தற்போது என்ன நிலையில் உளளது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :—(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

திரு. இல. பலராமன்: தலைவரவர்களே, இது குறித்து உயர்நீதிமன்றம் தன்னுடைய அறிக்கையிலே இங்கு தேவை என்று சொல்லியிருப்பதாலும், இது தாலுகா தலைநகரமாக இருப்பதாலும், இங்கு வழக்குகள் அதிகமாக இருப்பதாலும், இங்கு ஒருமுதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் கோர்ட் அமைப்பது பற்றி அரசு ஏற்கெனவே அறிக்கை விட்டிருந்தாலும், கடந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலே சொல்லியிருந்தாலும், முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் கோர்ட் ஏற்படுத்த அரசு மீண்டும் முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே. இது குறித்து உயர்நீதிமன்றம் பரிந்துரை ஒன்றும் செய்யவில்லை. நீதிமன்றங்கள் அதிகார வரம்புக்குழு கூட இது குறித்து பரிந்துரை செய்யவில்லை. இருந்தாலும், திருவண்ணாமலையில் உட்கோட்ட மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தை அமைத்து, போளூர், செங்கம், திருவண்ணாமலை ஆகிய இடங்களில் இரண்டாம் வகுப்புநீதிமன்றங்களைக் கொண்டு வரலாம் என்று நீதிமன்றங்கள் அதிகார வரம்புக் குழு பரிந்துரை செய்திருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதை கருத்திற் கொண்டு, உயர்நீதி மன்றத்திற்கு அனுப்பி, அரசு பரிசீலனை செய்யும்.

திரு. ஏ. எம். சேதுராமன் : தலைவரவர்களே, போளூரிலே நீதிமன்றம் வேண்டுமென்று கேட்கின்றபோது, ஆற்காடு தாலுகாவில் 1911 ஆம் ஆண்டிலிருந்து நீதிமன்றம் ஒன்று இருந்து வந்திருக்கிறது ; இதுவரையில் அது எந்த நேரத்தில் எடுக்கப்பட்டது என்று தெரியவில்லை ; ஆனால் அந்த நீதிமன்றத்திற்கு இருந்த கட்டிடங்கள் அனைத்தும்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீதிமன்றம் போளூரில் அமைப்பது பற்றிய வினா இது. ஆகவே, உங்கள் வினாவை அனுமதிப்பதற்கில்லை.

### சிறு விவசாயிகள்.

*வினா எண். 6— திரு. ச. அங்குசாமி : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சிறிய விவசாயிகளின் கடன்களை ரத்து செய்வதில் தஞ்சை மாவட்டத்திலுள்ள 5 ஏக்கருக்கும் முகவை மாவட்டத்திலுள்ள 5 ஏக்கருக்கும் வித்தியாசம் இருப்பது பற்றி அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அது பற்றி அரசின் நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) மற்றும் (ஆ) சிறிய விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்களை தள்ளுபடி செய்வது பற்றிய அரசின் அறிவிப்பில் சிறு விவசாயிகள் என்பது 5 ஏக்கர் உடைய விவசாயிகள் என்ற அடிப்படையில் பின் பற்றப்பட்டிருக்கிறது.

திரு. ச. அங்குசாமி : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்திற்கும் முகவை மாவட்டத்திற்கும் ஏக்கர் விலையில் வித்தியாசம் இருப்பதால், கடனை ரத்து செய்வதிலும் வித்தியாசம் இருப்பதாகத் தெரிகிறது. அதற்குரிய விவரத்தை அறிவிப்பார்களா ?



மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, விவசாயிகளுக்கு சலுகைகள் அளிக்க வழி முறைகளைக் கேட்கின்றபோது ரிசர்வ் வங்கி ஒருவித வழி முறையை கடைபிடித்து வருகிறது ; அக்ரிகல்சுரல் ரீ பைனான்ஸ் கார்ப்பரேஷன் ஒருவித வழிமுறையைக் கடைப்பிடித்து வருகிறது ; மைய அரசு ஒருவித வழிமுறையைக் கடைபிடிக்கிறது. இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரை ரிசர்வ் வங்கி ''வெட் லாண்ட்'', டிரை லாண்ட்'— அதாவது நன்செய், புன்செய் எதுவாக இருந்தாலும் 5 ஏக்கருக்கு கீழுள்ள நிலத்தைப் பயிர் செய்கின்றவர்கள் சிறு விவசாயிகள் என்றும், அவர்களே சலுகை பெறத் தகுதியுள்ளவர்கள் என்றும் கூறுகின்ற காரணத்தால் அந்த அடிப்படையில் தான் இது வரையறுக்கப்பட்டிருக்கிறது.

திரு. சே. தனுஷ்கோடி தேவர் : தலைவரவர்களே, இப்போது சிறு விவசாயிகள் என்றால் 5 ஏக்கர் வைத்திருப்பவர்கள் என்று முடிவு செய்து, அவர்களுடைய கடனை ரத்து செய்ய அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. ஆனால், இயற்கையை நம்பியிருக்கிற முகவை மாவட்ட மக்கள், அங்கே 50 ஏக்கர் வைத்திருப்பவர்கள் கூட தஞ்சையை நோக்கிச் செல்லுகின்ற நிலைமை அரசுக்குத் தெரியும். ஆகையால் முகவை மாவட்டத்தில் 5 ஏக்கர் என்பதை மாற்றி, 20 ஏக்கர் வரை வைத்திருப்பவர்கள் சிறு விவசாயிகள் என்று ஏற்றுக் கொள்ள அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஒரு ஏக்கர் ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் (1:1) என்ற அடிப்படையில் தான் வரையறுக்கப்பட்டிருக்கிறது. காரணம் அங்கே நெல்லைத் தவிர மற்ற பயிர்கள் எதுவும் பயிர் செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது. இந்தப் பிரச்சினையை தஞ்சை மாவட்ட விவசாயிகள் சொல்லுகிறார்கள். ஆனால் மற்ற மாவட்டங்களில் கிணற்றுப் பாசனம், குளத்துப் பாசனம் பெறும் நிலங்கள் கூட 'டிரை லாண்ட்' என்று வரையறுக்கப்பட்டு, 2 ஏக்கர், 3 ஏக்கர், 4 ஏக்கர் நிலம் கூட ஒரு ஏக்கர் என்று கணக்கிடுவதால் தஞ்சை மாவட்ட மக்களுக்குப் பாதிப்பு ஏற்படுகிறது என்ற பிரச்சினையை எழுப்பி இருக்கிறார்கள். இதையெல்லாம் கருதிப் பார்த்து, ரிசர்வ் வங்கி 5 ஏக்கர் நன்செய், அல்லது 5 ஏக்கர் புன்செய்— புன்செய் என்றால் மானாவாரி நிலம் என்றல்ல, கிணற்றுப் பாசனம், குளத்துப் பாசனம் பெறுபவை உட்பட—என்று வரையறை செய்து, கூட்டுறவுக் கடனில் சலுகை அளிப்பது பற்றி பாகுபடுத்தி இருக்கிறது. அந்த அடிப்படையை மாநில அரசு கடைபிடித்து வருகிறது.

[1981 ஜனவரி 23

(முற்பகல் 9-30)

திரு. ஏ. டி. குலசேகர் : பேரவைத் தலைவரவர்களே, 5 ஏக்கருக்கு அதிகமாக உள்ள விவசாயிகளுக்குப பல இடங்களிலே சலுகை காட்டப்பட்டுள்ளது. அது அரசுக்குத் தெரியுமா? அப்படி இருந்தால் அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே, எங்கு 5 ஏக்கருக்கு மேல் உள்ள விவசாயிகளுக்கு சலுகை காட்டப்பட்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேலெழுந்தவாரியாகக் கூறாமல் ஆதாரத்தோடு கூறினால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சிறு விவசாயிகளுக்கு மத்திய காலக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அதுபற்றி இதுவரையிலேயும் சிறு விவசாயிகளுக்கு முறையாக தெரிவிக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, விவசாயிகள் அனைவருக்கும் முறைப்படியாக பட்டியல் போட்டு தனித் தனியாகத் தெரிவிக்கப்பட்டுவிட்டது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, சிறு விவசாயிகளின் கடன்களை ரத்து செய்வது பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிடுகின்றபோது தஞ்சை மாவட்டத்திலே கிணறு மற்றும் அடி நீர் பாசனத்தைக் கொண்டு வேளாண்மை செய்ய வேண்டியிருப்பதன் அவசியத்தை வலியுறுத்திக் காட்டினார்கள். 1988–89ஆம் ஆண்டு பசலிக்கான குத்தகை பாக்கியை வசூல்செய்வதில் மிகக் கெடுபிடியான நிலைமை இருந்து வருவதாக விவசாயிகள் சொல்கிறார்கள். அதனை ஓரளவுக்குத் தளர்த்திக் கொஞ்சம் காலக்கெடுவாவது கொடுக்கப்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கேள்வி நேரம். கேள்விதான் கேட்கப்பட வேண்டும். விண்ணப்பம் செய்கின்ற நேரமல்ல.

திரு. என். கிட்டப்பா : அந்த குத்தகை பாக்கியை வசூல் செய்வதில் கொஞ்சம் காலக்கெடு கொடுக்க அரசு முன்வருமா?

திரு. மாண்புமிகு சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய கோரிக்கை ஏற்கனவே அரசின் கவனத்தில் இருக்கிறது.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, இது முகவை மாவட்டம் சம்பந்தப்பட்ட கேள்வியாகவும் இருப்பதால் எனக்கு கேள்வி கேட்க வாய்ப்பு தரப்பட வேண்டும்.



1981] ஜனவரி 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே கேள்வி கேட்க உங்களை நான் அனுமதித்திருக்கிறேன். உங்களுக்குப் பிறகு, வாய்ப்புத் தருகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, 5 ஏக்கர் நன்செய்க்கும், புன்செய்க்குமுள்ள வித்தியாசம் அரசுக்குத் தெரியுமா என்பது கேள்வி. ஆனால் இன்றைக்கு நடைமுறையிலே இதுவரையில் இல்லாத அளவுக்கு கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து வாங்கிய கடன்களையும் சிறு விவசாயிகளுக்கு ரத்து செய்து அரசு கடைப்பிடிக்கின்ற முறையினை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். சிறு விவசாயிகள் என்று சொல்கின்றபோது அவர்களின் வருமானத்தை அடிப்படையாக வைத்துப் பார்க்க வேண்டும். அல்லது நிலத்தை அடிப்படையாக வைத்துப் பார்க்க வேண்டும். ரிசர்வ் வங்கியின் வரையறை என்று சொல்லி அதைக் கடைப்பிடிப்பது சரியாக இருக்காது. நில உச்சவரம்புச் சட்டத்திலே நிலம் சம்பந்தப்பட்ட வரையில் சொல்லப்பட்டிருக்கின்ற வரையறை நாம் எல்லோருமே ஒத்துக்கொள்ளக்கூடிய முறையிலே இருக்கின்றது. ஆகவே அந்த வகையில் 5 ஏக்கர் என்பதை 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்ற வகையிலே கணக்கெடுத்துக்கொண்டு சிறு விவசாயிகளுக்கு இந்தச் சலுகைகளை அளிக்கின்ற வகையில் ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற ஆலோசனையை ஏற்கனவே எஸ். எப். டீ. ஏ. கடைபிடித்து வருகின்றது. ஆனால் அதிலேயும் பிரச்சினைகள் இல்லாமல் இல்லை. எஸ். எ.ப். டீ. ஏ. யின் அணுகுமுறை எப்படி இருக்கின்றது என்றால் 2½ ஏக்கருக்கும் கீழே நிலம் வைத்திருக்க கூடிய விவசாயிகளை சிறு விவசாயிகள் என்று அவர்கள் கணக்கிடுகின்றார்கள். ட்ரை லாண்ட் 5 ஏக்கருக்கும் கீழே வைத்திருப்பவர்கள் சிறு விவசாயிகள் என்று கணக்கிடுகின்றார்கள். ஆகவே அங்கே தெரிவிக்கின்ற கணக்கு என்னவென்றால் 2½ ஏக்கர் வெட் லாண்ட் 5 ஏக்கர் ட்ரை லாண்டுக்குச் சமமானது என்பது. ஆனால் தஞ்சை மாவட்டத்திலேயும் திருச்சி மாவட்டத்தின் சில பகுதிகளிலேயும், கோவை மாவட்டத்தின் சில பகுதிகளிலேயும் 5 ஏக்கர் ட்ரை லாண்ட் என்று சொல்லுகின்றபோது தண்ணீர் பாய்ச்சுகின்ற நிலம் கிணற்று நீர் பாய்ச்சுகின்ற நிலம் என்ற வகைகளிலே பல சிக்கல்கள் அந்த நடைமுறையிலேகூட வருகின்றன. ஆகவே அதைக்கூட மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை ஏற்கனவே இருந்து வருகின்றது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல் எஸ். எ.ப். டீ. ஏ., ஏ. ஆர். டீ. சி., ரிசர்வ் வங்கி ஆகியவற்றின் அணுகுமுறையும் கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்வதில் மாநில அரசு கடைப்பிடிக்கின்ற அணுகுமுறையும் ஒரேமாதிரியான அணுகுமுறையாக இருப்பது நல்லது என்றுதான் நானும் கருதுகிறேன். ஆகவே அந்த வகையில் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1981 ஜனவரி 23

திரு. வெ. அரங்கராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு சட்ட அமைச்சர் அவர்கள் முதலில் கூறியபோது ரிசர்வ் வங்கி குறிப்பிடுகிற 5 ஏக்கர் என்ற குறியீடு திட்டத்தின்படி எடுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்கள். ஆனால் இப்போது சொல்லுகிறபோது பரிசீலனையில் இருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். எனவே மானாவரி நிலமாக 6 ஏக்கர் வைத்திருப்பவர்களுக்கு, இதன் மூலம் தள்ளுபடி கிடைக்காத சூழ் நிலை ஏற்பட்டு விடும். அதனால் இதை அரசு தீவிரமாக பரிசீலனை செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போல மானாவரி நிலங்களைப் பொறுத்தவரைக்கும் 5 ஏக்கருக்கு கீழ் உள்ள விவசாயிகளுக்கெல்லாம், இதில் பாதிப்பு ஏற்படும் என்பது உண்மை. அதை அரசும் உணர்கிறது. அதனால் இது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. உ. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி "சிறிய விவசாயிகளின் கடன்களை ரத்து செய்வதில் தஞ்சை மாவட்டத்திலுள்ள 5 ஏக்கருக்கும், முகவை மாவட்டத்திலுள்ள 5 ஏக்கருக்கும் வித்தியாசம் இருப்பது பற்றி அரசு அறியுமா" என்பதுதான். அதை ஒட்டியே நான் கேட்க விரும்புகிறேன். தண்ணீர் அதிகமாக கிடைக்கக்கூடிய தஞ்சாவூர் மதுரை மாவட்டங்களில் உள்ளது போல, தண்ணீரே கிடைக்காமல் வறட்சிப் பகுதி என்று மாநில மத்திய அரசுகளால் அறிவிக்கப்பட்ட இராமநாதபுர மாவட்டத்திற்கும் இதே 5 ஏக்கர் என்று குறியீடு வைத்தால், இந்தக் கடன்கள் ரத்தை 5 ஏக்கருக்கு குறைவாக வைத்திருக்கும், வறட்சிப் பகுதியில் உள்ள விவசாயிகள் பெற முடியாமல் போய்விடுகிறதே இது நியாயமா? வறட்சிப் பகுதியான இராமநாதபுர மாவட்டத்திற்கு விசேஷ சலுகைகள் அளிக்க அரசு முன்வருமா? அதேமாதிரி கன்னியா குமரி மாவட்டத்தில் $1\frac{1}{2}$ ஏக்கர் $3\frac{1}{2}$ ஏக்கர் என்று ஏற்றுக் கொண்டு நடைமுறையில் கொண்டு வந்திருக்கிற காரணத்தால், முகவை மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கும் அதேமாதிரியான சலுகையைக் கொடுக்க அரசு ஆலோசனை செய்ய முன் வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, முகவை மாவட்டத்தைப் பொறுத்த வரைக்கும் மற்ற மாவட்டங்களோடு ஒப்பிட்டுப் பார்க்க முடியாத அளவிற்கு புஞ்சை நிலங்கள் இருந்தபோதிலும், தனித்தனியாக மாவட்டத்திற்கு ஒரு விதி முறையை அனுகுவதற்கில்லை. ஏனென்றால், முகவை மாவட்டத்திலேயே சில இடங்களில் நல்ல விளைச்சல் உண்டு. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இருக்கிற பகுதியை எடுத்துக் கொண்டால் கூட, அதிலும் சில பகுதிகளில் தண்ணீர் வசதி உண்டு. அதிகமாக விவசாயம் செய்யக் கூடிய, விளையக் கூடிய பகுதிகளும் உண்டு. அதேமாதிரி தண்ணீர் கிடைக்காமல் பஞ்சத்தினால் அதிகமாக பாதிக்கப்பட்ட பகுதியும் இருக்கிறது. இவ்வளவு சிக்கலான முறையில் ... நிலவியமாக வருகிறபோது, இதை வட்ட ரீதியாக கூடக் கணக்கு எடுத்து, தண்ணீர் கிடைக்கும் வறட்சிப் பகுதி என்றுகூட பிரித்து கணக்கெடுக்க வேண்டியிருக்கிறது. அதனால்தான் நான் ஏற்கனவே சொன்னேன் ஒட்டுமொத்தமாக, ஆழமாக ஆய்ந்து முடிவெடுக்க வேண்டும் என்று சொன்னேன். அப்படி ஒரு அணுகுமுறையை, நான் கூறிய அடிப்படையில் கொண்டு வர அரசு வழி முறைகளை ஆராய்ந்துக் கொண்டிருக்கிறது. எதிர்காலத்தில் கடைபிடிக்கப்படும்.



1981 ஜனவரி 23]

ஒரத்தநாட்டில் இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம்

*வினா எண். 7—திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒரத்தநாட்டில் இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் ஏற்படுத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இல்லை.

திரு. ந. சிவஞானம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரத்த நாட்டில் இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் இல்லாததினால் பட்டுக்கோட்டைக்கு, 25 மைலுக்கு அப்பால் வந்து, இந்த இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றத்திற்கு செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஒரத்தநாட்டு மக்களுக்கு இருக்கிறது. அந்த மக்கள் மிக ஏழையாக இருப்பதினால் அவர்களுக்கு வேண்டிய வசதியை செய்து தரவேண்டும். அதனால் மீண்டும் இதனை அரசு மறுபரிசீலனை செய்து, ஒரத்த நாட்டில் இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றத்தை ஏற்படுத்த அரசு முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, 1970ல் அமைக்கப்பட்ட நீதி மன்றங்களின் அதிகார வரம்பு குறித்து "Committee on Jurisdiction of Courts" என்ற குழு ஒரத்த நாட்டில் இப்படிப்பட்ட அமைப்பைக் கொண்டு வருவதற்கான பரிந்துரையைச் செய்யவில்லை. அதன் காரணமாகத்தான் இது நடைமுறைபடுத்தப்படவில்லை.

[1981 ஜனவரி 23

[முற்பகல் 9–40]

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, 1970 ம் ஆண்டு எந்தெந்த இடங்களில் கோர்ட்டு இருக்க வேண்டுமென்று அந்தக் குழு அமைத்து அது ஆய்வு செய்ததற்குப் பின்னால் தஞ்சையிலிருந்து அறந்தாங்கி தாலுகா பிரிக்கப்பட்டு விட்டது. மன்னார்குடியிலுள்ள குற்றவியல் நீதிமன்றம் பட்டுக்கோட்டைக் குப்போக வேண்டுமென்று அந்தக் கமிட்டி சிபார்சு செய்தது. அந்த சிபார்சுக்குப் பிறகு, அறந்தாங்கி தாலுகா தஞ்சை மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்ட பிறகு மீண்டும் அதே நடைமுறையை ஹைகோர்ட் நடைமுறைப்படுத்த முயற்சிப்பது அரசுக்குத் தெரியுமா? அதைத் தடுத்து நிறுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மூலக் கேள்வி வேறு, உறுப்பினர் அவர்கள் கேட்கக்கூடிய கேள்வி வேறு. இருந்த போதிலும் சொல்கிறேன். பட்டுக்கோட்டையிலிருந்து அறந்தாங்கி ஏற்கனவே பிரிக்கப்பட்டு விட்டதால் அதன் ஜூரிஸ்டிக்ஷன் குறைந்துவிட்டது. ஒரத்தநாட்டுக்குத் தலைமை இடத்தைக் கொண்டு வரும்போது பட்டுக்கோட்டை ஜூரிஸ்டிக்ஷன் குறுகலாகிவிடும் என்பதால் உறுப்பினர் அவர்கள் முன்னால் எழுப்பிய அந்தக் கோரிக்கையை அரசாங்கம் தற்போது ஏற்கமுடியாத நிலையில் இருக்கிறது.

THIRU J. HEMACHANDRAN: Speaker Sir, May I know what is the criterion evolved by the Government in establishing the First Class Magistrate Court? and the Second—Class Magistrate Cour.

M. SPEAKER: This is a general question.

விசைத்தறி தொழிலாளர் நலன் பாதுகாப்புச் சட்டம்.

* வினா எண். 8—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) பவர்லூம் தொழிலாளர்களின் நலனை பாதுகாக்க சட்டம் இயற்றும் ஆலோசனை ஏதும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) இல்லை.



1981 ஜனவரி 23]

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: அமைச்சர் அவர்கள், சட்டப் பாதுகாப்பு கொண்டுவரவில்லை என்று சொல்லிவிட்டார்கள். இது சரியல்ல. ஏற்கெனவே பவர்லூம் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச சம்பளம் நிர்ணயிக்கப்பட்டு அரசால் அறிவிக்கப்பட்டு, அந்த அறிவிப்பு முறையாக இல்லை என்று ஹைகோர்ட்டால் தள்ளுபடி செய்யப்பட்டது. அதை மீண்டும் அரசு பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு அதை நல்ல முறையில் திரும்ப சட்டமாகக் கொண்டுவர முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: அதைப்பற்றி ஆலோசனை செய்யலாம். அந்தத் தொழிலாளர்கள் பாக்டரி ஆக்ட்டின் கீழ் வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத்: அமைச்சர் அவர்கள், கேள்விக்கு இல்லை என்று பதில் சொல்லிவிட்டார்கள். இப்போது அந்த செக்டார் சுரண்டுவதைப் பொறுத்தவரையில் பயங்கரமான ஒரு நிலை ஏற்பட்டிருக்கின்றது. பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் உள்ள செக்டார் அது. மில் முதலாளிகள் கூட அவர்கள் செலவைக் குறைக்க பவர்லூமிற்கு கொண்டு போய் துணி கொடுத்து ஸ்டாம்ப் செய்து மில் துணியாக விற்றுக் கொண்டிருக்கிறார்கள். சலுகைகள் இருப்பதால் அப்படிக் கொடுக்கிறார்கள். ஆகவே, நான் கேட்டுக்கொள்ள விரும்புவது என்னவென்றால், அந்தத் தொழிலாளர்களுக்கு சர்வாம்சத்தில் பாதுகாப்பு கொடுப்பதற்கான ஒரு ''காம்ப்ரிஹென்ஸிவ் லெஜிஸ்லேஷன்'' ஏதாவது கொண்டுவருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: அந்தத் தொழிலாளர்களுக்கு பாக்டரிச் சட்டம் பொருந்தும். பஞ்சாலைத் தொழிலாளர்களுக்குக்கூட தனியாக சட்டம் இல்லை. இந்தத் தொழிலாளர்கள் இருக்கக்கூடிய சட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம். என்னென்ன தவறுகள் நடக்கின்றனவோ அவை பற்றியும், கூலி உயர்வு போன்ற விஷயங்கள் பற்றியும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால், அரசாங்கம் அதைப் பற்றி ஆழமாக, அனுதாபமாக பரிசிலனை செய்யும்.

திரு. எம். ஆறுமுகம் : இந்தத் தொழிலாளர்களுக்கு தொழிற்சாலைச் சட்டம் பொருந்தும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். கோவையில் உள்ள பவர்லூம்ஸ் பொறுத்த வரையில் பாக்டரி இன்ஸ்பெக்டர்கள் விஸிட் செய்யும்போது சரியாக பார்வையிடாததால் அந்தத் தொழிலாளர்களுக்கு பாது காப்பு கொடுக்கக்கூடிய முறையில் தமிழக அரசு அவர்களுக்கு அவசரச் சட்டம் பிறப்பித்தாவது பாதுகாப்பு கொடுக்க முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : கோவை மாவட்டத் தில் எந்த இடத்தில் இது நடந்தது என்று சொன்னால் திடீர் சோதனை செய்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க இந்த அரசு எல்லா முயற்சியும் செய்யும்.

திரு. ரா கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, ஒரே இடத் தில் பல விசைத்தறிகளை 4, 4 ஆக பிரித்து, பினாமி பேர்களிலே எழுதிவைத்து, அங்கே 8 தொழிலாளர்கள்தான் வேலை செய் கின்றார்கள் என்ற அடிப்படையிலே. அங்கே பாக்டரி ஆக்ட் பொருந்தாது என்று மோசடி செய்து கொண்டிருக்கின்றார்கள். ஆனால், ஏற்கெனவே, பாக்டரி ஆக்ட் அப்ளிகபல் ஆகுமென்று சொல்லப்பட்டது. ஆனால், நடைமுறையில் அப்படி இல்லை. நான் இதை நிரூபிக்க முடியும். சங்கரன் கோவில் பகுதியில் இப்படி நடந்து கொண்டிருக்கிறது. இந்த மோசடியைத் தடுப் பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது ? அடுத்து, குறைந்தபட்ச சம்பளம் நிர்ணயிப்பதில் அரசுக்கு என்ன சிரமம் இருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன். ?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர் களே, குறைந்தபட்ச சம்பளம் நிர்ணயிப்பதில் அரசுக்கு சிரமம் இருக்கின்றது என்று நான் சொல்லவில்லை. என்னுடைய பதிலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனித்திருப்பார்கள் என்று கருதுகிறேன். அடுத்தது, 10 பேர்களுக்கு குறைவாக இருந்தால் அங்கே பாக்டரி ஆக்ட் பொருந்தாது. பவர் லூம்களில் எங்கே மோசடி நடக்கின்றது என்பதைப் பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவார்களானால், அதுபற்றி நடவடிக்கை எடுக்க ஒரு இன்ஸ்பெக்டரை அமர்த்தி நடவடிக்கை எடுக்கப்படும். பொதுவாகவே எல்லா இடங்களிலேயும் இப்படி இருக்கின்றது என்று உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் சொல்வதால், நான் பொதுவாகவே இன்ஸ்பெக்ஷன் செய்வதற்கு ஏற்பாடு செய்கிறேன்.



திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 பேர்களுக்குக் குறைவாக இருந்தால் பாக்டரி சட்டம் பொருந்தாது என்கின்ற காரணத்தினால், இம்மாதிரி யான நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, பவர் அவ்வை செய்கின்ற அப்படிப்பட்ட எல்லா இடங்களுக்கும் பாக்டரி சட்டம் பொருந்தும் என்கின்ற ஒரு திருத்தத்தை அரசு கொண்டுவர முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர் களே, இதற்கென ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கின்ற கட்சியைச் சேர்ந்தவர் உறுப்பினராக இருக்கிறார்கள். எனவே, அப்படிப்பட்ட ஒரு பரிந்துரையைச் செய்தால், அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

## துறையூர் நகருக்கு குடிநீர் வழங்கல்.

*வினா எண். 9—திரு வெ. அரங்கராசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) துறையூர் நகர குடிநீர் பிரச்சினையை தீர்க்க அரசு திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இத்திட்டத்திற்கு ஆகும் செலவுத் தொகை எவ்வளவு ?

(இ) இத் திட்டம் நிறைவேற எவ்வளவு காலம் ஆகும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) முதலில் ரூபாய் 56·90 இலட்சத்திற்கு ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டது. இது பின் கைவிடப்பட்டு தற்போது புதிய மதிப்பீடு ஒன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறது.

(இ) திட்டம் பல்வேறு கட்டங்கள் தாண்டி அரசு ஒப்பு தலுடன் ஆரம்பிக்கப்பட வேண்டும். எனவே இத்திட்டம் நிறை வேற சுமார் மூன்று ஆண்டுகள் பிடிக்கலாம்.

திரு. வெ. அரங்கராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, முதல் திட்டம் கைவிடப்பட்டு, இப்போது புதிய திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள் இந்தத் திட்டத்திற்கு எங்கிருந்து குடிநீர் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது என்பதை அறிய விரும்பு

தேன்? அடுத்து, அத்திட்டம் நிறைவேற 3 ஆண்டுகள் ஆகும் என்றார்கள். இப்போது வறட்சி காரணமாக மக்கள் குடிநீருக்கு அங்கே மிகவும் அவதிப்படுகின்ற காரணத்தினால், அந்தத் திட்டத்தை மிக விரைவிலே நிறைவேற்றுவதற்கு அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, காலத்தைக் குறுக்குவதற்கு அரசு முடிந்த அளவில் முயற்சி செய்யும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தண்ணீரைப் பொறுத்தவரையில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி துறையூரைப் பற்றியது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : குடிநீர்ப் பிரச்னை இன்றைய தினம் பெரிய பிரச்னையாக இருக்கிறது. குடிநீர் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்ட குழாய்க் கிணறுகள்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படிப்பட்ட பொதுவான கேள்வியை அனுமதிப்பது நன்றாக இருக்காது. கேள்வி துறையூரைப் பற்றியது.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே. நகரசபை குடிநீர் திட்டத்தின் அடிப்படையிலே 3 ஆண்டுகள் கழித்து தண்ணீர் கொடுக்கப்படும் என்று சொல்கிறார்கள். இதைப்போல, நகரசபையில் ஏற்கனவே போடப்பட்ட எஸ்டிமேட்டுகள் தள்ளுபடி செய்யப்பட்டன என்று சொல்லுகிறார்கள்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இக்கேள்வி துறையூரைப் பற்றியது. திரு. இராசமாணிக்கத்திற்கு ஒரு தீர்ப்பு. தங்களுக்கு ஒரு தீர்ப்பு என்று அளிக்க முடியாது. வினா எண். 10.

## கோவை இ. எஸ். ஐ. மருத்துவமனை.

வினா எண். 10— திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?



(அ) கோவை இ. எஸ். ஐ. மருத்துவ மனையில் உள்ள டிஸ்பென்சரிகளிலும் மருத்துவ மனைகளிலும் மருந்து கிடைக்காமல் நோயாளிகள் வெளி (தனியார்) மருத்துவ மனைகளுக்கு சிகிச்சைக்காக செல்வது அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், மருந்துகள் முறையாக கிடைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) அரசிற்கு அவ்வாறு தகவல்கள் ஏதும் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை ஈ.எஸ்.ஐ. மருத்துவமனையில் முறையான சிகிச்சை அளிக்கப்படாத காரணத்தினால், வெளியே தனியார் மருத்துவ மனைகளிலே சிகிச்சை பெறுகின்ற நிலை இருக்கின்றது. நான் இதே சட்டமன்றத்திலே இதைப்பற்றி மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடம் மனுக் கொடுத்திருக்கிறேன். எனவே, புகார் இல்லை என்று சொல்வது சரியல்ல. மேலும் ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனையைப் பொறுத்தவரையில், அங்கே வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு எந்தவிதமான மருத்துவ வசதியும் கிடையாது. ; நல்லமுறையிலும் சிகிச்சை அளிக்கப்படுவதில்லை. அதன் காரணத்தினால், தொழிலாளர்கள் வெளியே தனியார் மருத்துவ மனைகளுக்குச் சென்று தங்கள் பணத்தைச் செலவழிக்கின்ற சூழ்நிலை இருக்கின்றது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். கோவை ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனையிலே, நடைமுறையிலே மோசடி நடக்கிறது என்று சொல்லலாம். அங்கே இருக்கக்கூடிய டாக்டர் மருந்துகளை எடுத்துச் சென்று, தனியார் கடைகளிலே விற்கின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், இதைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி இன்ஷூரன்ஸ் பர்சேஸைப் பொறுத்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே பணி செய்யும் தொழிலாளர்களைப் பற்றிப் பேசினார்கள். கேள்வி எது என்று தெளிவாகச் சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன். நல்வாழ்வுத் துறை அமைச்சரிடத்தில் மனுவைக் கொடுத்து விட்டு கேள்வியை எனக்கு போட்டிருக்கிறீர்கள். மனுவையும் என்னிடத்தில் கொடுத்திருக்கலாம்.

திரு. கு. ரமணி: கோவை இ.எஸ்.ஐ. மருத்துவ மனை பெரிய மருத்துவ மனை. அந்த மாவட்டத்தில் இருக்கும் அனைத்து இன்ஷூர்டு பர்சன்சுக்கும் இருக்கும்படியான மருத்துவ மனை. அங்கு சரியானபடி சிகிச்சை கிடைப்பதில்லை. டாக்டர்கள் கவனிப்பு குறைவாக இருக்கிறது. மருந்து கிடைப்பதில்லை. அதனால் கஷ்டப்பட்டு வெளி மருத்துவ மனைக்குப் போவது உண்மைதான். அமைச்சர் அவர்கள் முன்பு திடீரென்று விஜயம் செய்து பார்த்தது போல் இப்போதும் செய்து அங்கு வந்து விசாரித்து பார்த்தால் இந்த விவரங்களை நிரூபிக்க முடியும். அமைச்சர் அவர்கள் அதற்கு உத்தரவாதம் அளிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: முன்பு திடீரென்று பரிசோதனை செய்தது உண்மை. அடிக்கடி திடீர் பரிசோதனை செய்தால்—It loses its charm அதிலே கவர்ச்சி இல்லாமல் போய்விடும். தேவையான மருந்துகள் எல்லாம் வாங்கி வைக்கப்பட்டிருக்கின்றன. அது இல்லையென்று சொன்னால் மருந்தை எழுதிக் கொடுத்து வாங்கிக் கொண்டு வந்தால் அந்தத் தொகை ரி-இம்பர்ஸ்மெண்ட் செய்யப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யாராவது ஒரு தொழிலாளரிடமிருந்தாவது புகாரை வாங்கிக் கொடுத்தால் இன்வெஸ்டிகேஷன் செய்ய உதவியாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதன் காரணமாக மீண்டும் ஒரு முறை சர்ப்ரைஸ் செக் செய்கிறேன் என்று உறுதி கூறுகிறேன்.

திரு. எம். ஆறுமுகம்: இ.எஸ்.ஐ. மருத்துவ மனையில் காச நோய்ப் பிரிவு இல்லாத காரணத்தால் தனியார் மருத்துவ மனைகளுக்குச் செல்லும் நிலைமை இருக்கிறது. அங்கு காச நோய்ப் பிரிவு ஏற்படுத்த அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பல்வேறு பெரிய மருத்துவ மனைகளிலுள்ள காச நோய் பிரிவில் இ.எஸ்.ஐ. தொழிலாளர்களுக்காக பெட் ரிசர்வ் செய்யப்படுகிறது. வேறு சில இடங்களில் தனியாகக் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகிறது. மேலும் வெளியார் நிதியிலிருந்து கட்டிடங்கள் கட்டித் தருவது பற்றியும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தப் பகுதிக்குத் தேவை என்று சொன்னால் அதையும் அரசு பரிசீலனை செய்யும்.

**திருத்துறைப்பூண்டிக்கு குடிநீர் வழங்கல்.**

வினா எண். 11—திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:



(அ) திருத்துறைப்பூண்டி நகரத்திற்கு மேட்டுபாளையத்திலிருந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் சப்ளை செய்யும் குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) அந்தத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கிடமில்லை.

திரு. பொ. உத்திராபதி: திருத்துறைப்பூண்டி பேரூராட்சி என்பது 30,000 மக்கள் தொகைக்கும் அதிகமாக உள்ள பகுதி சுதந்திரம் பெற்று 33 ஆண்டுகள் ஆகியும் கூட இன்னும் குடிநீர் கொடுக்கவில்லை என்று சொல்லுவது வருத்தத்தை அளிக்கிறது. அமைச்சர் அவர்கள் திட்டம் இல்லையென்று கூறிவிட்டார்கள். திருத்துறைப்பூண்டி நகரத்திற்கு உலக வங்கியின் மூலம் கடன் பெற்று 30லட்சம் ரூபாய் செலவில் மேட்டுப்பாளையத்தில் இருந்து தண்ணீர் கொண்டு வருவதாகச் சொல்லி அதிகாரிகள் இடத்தை யெல்லாம் சர்வே செய்து வந்தது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேலை நடந்து கொண்டிருக்கலாம். அமைச்சர் அவர்களுக்கு இன்னும் தகவல் கிடைக்காமல் இருந்தாலும் அந்தத் தகவலைப் பெற்று துரிதமாக திருத்துறைப்பூண்டி நகரத்திற்கு குடிநீர் வழங்க நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருத்துறைப்பூண்டி பேரூராட்சியின் மக்கள் தொகை 30,000 என்று சொன்னது அதிர்ச்சியாக இருக்கிறது. 1971ல் அதன் ஜனத்தொகை 17,117. 1991ல் 24,000மும், 2006ல் 32,000 என்றும் ஜனத்தொகை ஆகும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இப்போதே 30,000 ஜனத்தொகை என்றால் இதைவிட அதிர்ச்சி தரக்கூடிகய விஷயம் வேறு எதுவும் இல்லை. அநேகமாக அது சரியாக இருக்கக் கூடாது என்று வேண்டிக் கொள்கிறேன்.

1975ஆம் ஆண்டில் குடிநீருக்காக ஒரு திட்டம் போடப் பட்டது. ஆனால் 1977ம் ஆண்டு ஜூன் மாதத்திய தீரமானம் ஒன்றின் மூலம் பேரூராட்சி தனது நிதிநிலை சரியில்லாத காரணத்தினால் திட்டத்திற்கான முழுச் செலவையும் மானியமாக அளிக்கும்படி அரசைக் கேட்டுக் கொண்டது மாண்புமிகு உறுப்பினர் கேட்பது போல—அரசு திருத்துறைப்பூண்டி பேரூராட்சியின் நிதிநிலை சரியில்லாத காரணத்தால் திட்டத்தை கைவிடும்படி கேட்டுக்கொண்டது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியமும் அந்தத் திட்டம் கைவிடப்பட்டதாக பேரூராட்சிக்கு அறிவித்துவிட்டது.

### பெருந்தலையூர் மேட்டுப்பாளையம் குளம்

வினா எண். 12.—திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு நீர்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கோபி ஒன்றியத்தில் உள்ள பெருந்தலையூர் மேட்டுப்பாளையத்தில் இருக்கும் குளத்தினை தூர் எடுத்து சீரமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) இதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி தல அதிகாரிகள் ஆய்வு செய்யும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

திரு. கு. அ. செங்கோட்டையன் : தலைவர் அவர்களே, இது மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறதா ? இதன் வேலை எப்போது தொடங்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குளத்தினை தூர் எடுத்து சீரமைக்கும் சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவா என்பதைப்பற்றிப் பரிசீலனை செய்யச் சொல்லியிருக்கிறோம். அதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாகத் தெரிந்தால் அதற்குப் பிறகு மதிப்பீடு தயாரிப்பது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

### தழுதாழை கிராமத்தின் ஏரி அமைப்பு.

*வினா எண். 13—திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு நீர்ப்பாசன துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் பெரம்பலூர் தொகுதியில் தழுதாழை கிராமத்தில் சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் ஏரி கட்ட எத்தன்னை ஏக்கர் நிலம் ஆர்ஜீதம் செய்யப்பட்டது ?

(ஆ) ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்தின் சொந்தக்காரர்களுக்கு நட்ட ஈட்டுத்தொகை வழங்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) திருச்சி மாவட்டம், பெரம்பலூர் தொகுதியில் தழுதாழை கிராமத்தில் சிறுபாசன திட்டத்தின்கீழ் ஏரி கட்ட மொத்தம் 57.41 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட வேண்டியுள்ளது.



(ஆ) ஆர்ஜிதம் செய்யப்படும் நிலங்களின் சொந்தக்காரர்களுக்கு நஷ்ட ஈட்டுத் தொகை வழங்க பொதுப்பணித்துறையால் முன் பணமாக ரூ. 2,14,487.75 வருவாய்த்துறையினரிடம் கொடுக்கப்பட்டுள்ளது. ஈட்டுத் தொகை கொடுப்பதற்கான சேர வேண்டிய ஈட்டுத்தொகையை கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யும்படி மாவட்ட ஆட்சியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நட்டஈட்டுத் தொகை மிகக் குறைவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று அந்த நிலங்களை வழங்கிய நிலஉடைமையாளர்கள் கருதி, நியாயமான தொகையை வழங்க வேண்டுமென்று அரியலூர் கோட்டாட்சித் தலைவருக்கு அவர்கள் கோரிக்கை வைத்தார்களா? ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த முடிவு என்ன என்பதை அறிந்து கொள்ள விழைகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, நிலத்தை கையகப்படுத்துவதற்கான உறுதி அறிக்கை 1979 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அரசுப் பதிவேடுகளிலே பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு வருவாய்த்துறை விசாரணை செய்ய வேண்டுமென்று அங்குள்ள விவசாயிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க விசாரணை நடந்து வருகிறது. அதை விரைவுபடுத்தி, உடனடியாக நியாயமான நட்டஈட்டுத் தொகை வழங்கப்பட வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

திரு. ஜே. எஸ். இராசு : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பது, பொதுப்பணித் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிலத்திற்காக இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட தொகையை கொடுத்திருக்கிற விவரம் தான் ஆனால் நான் கேட்டிருக்கிற வினாவினுடைய அடிப்படை இதுதான். ஒதுக்கப்பட்ட பணம் இன்னின்ன நிலச் சொந்தக்காரர்களுக்கு இவ்வளவு இவ்வளவு என்று நிர்ணயிக்கப்பட்டு அது தரப்படுகிற நேரத்திலே, ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை குறைவாக இருக்கிறது என்று கருதி, நியாயமான தொகை தரப்பட வேண்டுமென்று எழுத்து மூலமாக ஆர். டி. ஓ. வுக்கு தரப்பட்டு இருக்கிறது. அது தரப்பட்டு 5 மாதங்கள் ஆகின்றன—அதன் மீது ஏதேனும் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறதா? அதை விரைவிலே வழங்குவதற்கு ஆவன செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, வருவாய்த்துறை விசாரணை செய்கிறது என்று சொன்னாலே விவசாயிகளுடைய வேண்டுகோள் அடிப்படையிலே தான் நடத்தப்படுகிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் கேட்ட மூலக் கேள்வி, ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்தின் சொந்தக்காரர்களுக்கு

நட்டஈட்டுத் தொகை வழங்கப்பட்டதா என்பது' வழங்கப்படவில்லை. பொதுப்பணித் துறை எவ்வளவு நட்டஈட்டுத் தொகை தரவேண்டுமோ அதை வருவாய்த்துறையிடம் ஒப்படைத்து, விசாரணையை விரைவாக நடத்தி அதை வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கபபெறுகிறது.

பொங்காலை கோம்பை ஏரித் திட்டம்.

*வினா எண். 14—திரு. வெ. அரங்கராசன்

மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் — கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் உப்பிலியாபுரம் தொகுதியில் 'பொங்காலை கோம்பை ஏரி கட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அந்தத் திட்டம் எந்த அளவில் உள்ளது.

(இ) எப்போது பணி துவங்கப்படும்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ), (ஆ) மற்றும் (இ) துறையூர் வட்டம் பொங்காலை வட்டம் கிராமத்தில் சுமார் 480 ஏக்கர் புதிய நிலப்பரப்புக்கு பாசனம் அளிக்க குளம் அமைக்கும் திட்டம் பொதுப்பணித் துறையின் தல அதிகாரிகள் ஆய்வில் உள்ளது.

(முற்பகல் 10.00)

திரு. வெ. அரங்கராசன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நிலப்பரப்பை எடுத்து ஆய்வில் உள்ளதாகக் கூறியிருக்கிறார்கள். பணி எப்பொழுது துவங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, இந்த திட்டத்திற்குச் சுமார் 7.47 லட்சம் ரூபாய் செலவாகும் என்று இப்பொழுது மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இருக்கிறது. தலைமைப் பொறியாளருடைய அனுமதி பெற்று பிறகு விரைவாக நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.



கொல்லிமலைப் பகுதியில் பழரசத் தொழிற்சாலை.

*வினா எண். 15— திரு. செ. சிவப்பிரகாசம் :: திரு. [illegible] இராமலிங்கம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சேலம் மாவட்டம் கொல்லிமலையில் அதிகமாகக் கிடைக்கும் பழங்களைக் கொண்டு அங்கு ஒரு பழரசத் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: கொல்லிமலையில் பழரசத் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

திரு. செ. சிவப்பிரகாசம்: தலைவரவர்களே, கொல்லிமலையில் அன்னாசி, கலா, கொய்யா, ஆரஞ்சு போன்ற பழவகைகள் அதிகமாக விளைகின்றன. அந்தப் பழவகைகளை விற்பதற்கான வசதி இல்லாத காரணத்தால் அங்கே பழங்களைப் பதனிடும் தொழிற்சாலை ஒன்றை 1980-81 ஆம் ஆண்டில் அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவரவர்களே, கொல்லிமலையில் அதற்கான திட்டம் இல்லை.

திரு. செ. சிவப்பிரகாசம்: தலைவரவர்களே, 1980-81-இல் அரசு பழம் பதனிடும் தொழிற்கூடங்களை அமைக்கின்ற திட்டம் இருந்தது. அந்தத் திட்டங்களில் ஒன்றைக் கொல்லிமலையில் அமைப்பதற்கு அரசு விரைவாக முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப் போல, கொல்லிமலையில் அதற்கான திட்டம் இல்லை. ஆனால், மதுரை மாவட்டத்தில் ஏராளமாகக் கிடைக்கின்ற பழங்கள், காய்கனிகள் ஆகியவற்றைக் கொண்டு தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம் இந்திய அரசின் உணவு மற்றும் சத்துணவுக் கழகத்தின் ஆலோசனைக் குழு இதற்கான ஒரு திட்டத்தைத் தயாரித்திருக்கிறது. நாள் ஒன்றுக்கு 22 முதல் 30 மெட்ரிக் டன் பதனிடும் திறன் கொண்ட ஒரு புதிய ஆலையை அக்கழகம் நிறுவ எண்ணியுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொல்லிமலையோடு நிறுத்திக் கொள்ளலாம்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் கொல்லி மலையில் அதிகமான பழங்கள் விளைகின்றன. அதைவிட அதிகமாக ஏற்காட்டில் பழவகைகள் இருக்கின்றன. சேலத்து மாம்பழம் உலகப் புகழ் பெற்று இருப்பதாலும்....(மணியடிக்கப்பெற்றது)

திருநெல்வேலி மாவட்டத்தில் தொழிலில் பின்தங்கிய பகுதிகள்.

*வினா எண். 16—திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) திருநெல்வேலி மாவட்டம் சிவகிரி சப்தாலுக்கா, சங்கரன் கோவில் தாலுக்கா ஆகிய பகுதிகளை தொழிலில் பின் தங்கிய பகுதிகளாக (Industrially backward area) அறிவிக்க வேண்டுமென அரசுக்கு கோரிக்கை ஏதும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. ரா. கிருஷ்ணன்: பேரவைத் தலைவரவர்களே, தொழிலில் பின்தங்கிய பகுதி என்று அறிவிக்க என்னென்ன தகுதிகள் தேவை? ஏற்கனவே இந்தப் பகுதியில் எந்தவிதமான தொழிலும் இல்லாமல் ஒதுக்கப்பட்ட தொகுதியாக இருக்கிறதே, அதைப் பற்றி அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் இருக்கிற தொழிற்சாலைகள், வறுமைக் கோட்டுக்குக் கீழே வாடுகின்ற மக்களின் எண்ணிக்கை, இப்படிப் பல்வேறு சாத்தியக் கூறுகளை மூலமாகக் கொண்டு தொழிலில் பின்தங்கிய பகுதி என்று அறிவிக்கப்படுகிறது. மத்திய அரசு ஏற்கனவே 33 வட்டங்களைத் தொழிலில் பின்தங்கிய பகுதிகளாக அறிவித்திருக்கிறது. அதைப்போல தமிழக அரசு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு 24 வட்டங்களைத் தொழிலில் பின்தங்கிய பகுதிகளாக அறிவித்திருக்கிறது. இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டிருக்கின்ற வட்டத்தைத் தற்போது பின்தங்கிய பகுதியாக அறிவிப்பதற்கான திட்டம் இல்லை. ஆனால் தமிழக அரசு அறிவித்திருக்கின்ற 24 வட்டங்களை மத்திய அரசே ஏற்று பின் தங்கிய பகுதிகளாக அறிவிக்க வேண்டுமென்று



மாண்புமிகு முதல்வரவர்களும் எழுதியிருக்கிறார்கள். சென்ற தடவை நாங்கள் போய் இருந்த பொழுதும் மத்திய அமைச்சரைப் பார்த்து சொல்லியிருக்கிறோம். அப்படி 24 வட்டங்கள் மத்திய அரசால் ஏற்கப்படுகிறபொழுது தமிழகத்தில் இன்னும் சில வட்டங்கள் தமிழக அரசால் பின்தங்கிய வட்டங்களாக அறிவிக்கப் படும்.

திரு. ரா. கிருஷ்ணன்:—தலைவர் அவர்களே, ஒரு கிளாரிபிகேஷன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:—கிளாரிபிகேஷன் கேள்வி நேரத்தில் வேண்டாம். 24 பின் தங்கிய வட்டங்களையும் அமைச்சர் படிக்க முடியாது.

திரு. ரா. உமாநாத்:—கேள்வி கேட்டவருக்கு செக்கன்ட் கொஸ்டியனுக்கு உரிமை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:—அமைச்சர் பதில் இல்லை என்று சொன்ன பிறகு, என்ன கேள்வி எழுகிறது. நான் உரிமைகளை மறுக்கத் தயாராக இல்லை. கேள்விக்கு விளக்கமாக அமைச்சர் பதில் சொல்லிவிட்டார். திரு. உமாநாத் சபையிலே இருக்கிறாரா, இல்லையா என்றால், இல்லை என்ற பிறகு, எங்கே போயிருக்கிறார் என்று அடுத்த கேள்வியை ஆரம்பிப்பதா? விவசாயத்தைப் பற்றி ஒரு கேள்வி வந்தது. 10 துணை வினாக்கள் அனுமதித்தேன். அந்த மாதிரி உள்ள எல்லாம் அனுமதிக்கிறேன். கரூர் பின் தங்கிய பகுதியாக அறிவிக்கப்படுமா என்ற கேள்விக்கு இல்லையென்று சொல்லிவிட்டார். அதற்குப் பிறகு என்ன கேள்வி எழுகிறது?

திரு. ரா. உமாநாத்:—பின் தங்கிய பகுதியாக அறிவிக்க சில கிரைட்டீரியாக்களை அமைச்சர் சொன்னார். அந்த கிரைட்டீரியாவுக்குள் கரூர் பகுதி வருகிறபொழுது, ஏன் அதை பின்தங்கிய வட்டமாக அறிவிக்கவில்லை என்று உறுப்பினர் கேட்கலாம். ஆகவே, செக்கன்ட் கேள்வி கேட்க அனுமதி அளித்துவிட்டு, அது மூலக் கேள்விக்கு ரெலவன்ட்டாக இல்லையென்றால், ரூல் அவுட் பண்ணுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்—சரி, திரு. கிருஷ்ணன் கேட்கட்டும்.

[1981 ஜனவரி 23

திரு. ரா. கிருஷ்ணன் :—தலைவர் அவர்களே, சங்கரன் கோயிலில் சர்க்கரை ஆலை நிறுவ வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தால் அனுமதி வழங்கப்பட்டு, பிறகு ரத்து செய்யப் பட்டு, அந்த ஆலை நிறுவப்படாமலே, அது அப்படியே போய் விட்டது. அந்த சங்கரன் கோயில் பகுதியிலே எந்தவிதமான தொழிற்சாலையும். கிடையாது. சங்கரன் கோயில் என்றால் வறட்சிப் பகுதி என்றுதான் அர்த்தம். அந்தப் பகுதியிலே உள்ளவர்கள் ஏழ்மையில் வாடுபவர்கள். ஆகவே அந்தப் பகுதியை பின்தங்கிய பகுதியாக அறிவிக்க மத்திய சர்க்காருக்கு ரெக்கமண்ட் செய்யப்படுமா? அதோடு, 24 வட்டங்கள் பின் தங்கியவை என்று சொல்லப்பட்டது. அந்த விவரம் தரப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்.—24 வட்டங்களுக்குப் போக வேண்டாம். முந்திய பகுதியோடு நிறுத்துங்கள்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :—ஏற்கெனவே நான் பதில் சொல்லிவிட்டேன்.

*வினா எண். 17—திரு. ஏ. எம். சேதுராமன் :—மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) வட ஆற்காடு மாவட்டம் இராணிப்பேட்டையில் பாய்லர் தொழிற்சாலை ஏற்படுத்துவது குறித்து மத்திய அரசின் திட்டம் பற்றி இவ்வரசு அறியுமா ?

(ஆ) ஆம், எனில் அதற்கென திட்டமிடப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) அத்தொழிற்சாலை எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு.—(அ) ஆம், இராணிப் பேட்டையில் பாய்லர் தொழிற் சாலையை விரிவாக்கும் திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

(ஆ) இத்திட்டத்துக்கான மதிப்பீடு தொகை ரூ. 21·56 கோடி ஆகும்.

(இ) வேலையை தொடங்கிய பிறகு சுமார் 3 ஆண்டுகளில் திட்டம் முடிவடையுமெனக் கருதப்படுகிறது.



1981 ஜனவரி 23]

[முற்பகல் 10-10]

திரு. ஏ. எம். சேதுராமன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் துவங்குவதற்கு எத்தனை நாட்கள் ஆகும் என்பதற்கு 3 ஆண்டுகள் ஆகும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தத் திட்டத்தின் வாயிலாக அங்கே இருக்கிற அதிகாரிகளுக்கு குடியிருப்புகள் ஏரியா எந்த இடத்தில் வாங்கப்படும் என்பதையும், அந்தத் தொழிற்சாலைக்கு அருகாமையிலேயே வாங்கப்படுமா என்பதையும், அதுவும் அருகில் உள்ள ஆற்காட்டிலேயே வாங்கப்படுமா என்பதையும் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே இந்தத் திட்டத்திற்கு 1,400 ஏக்கர் நிலமும், இந்தத் திட்டத்திற்கான துணைத் தொழில்கள் துவங்குவதற்கு 350 ஏக்கர் நிலமும் ஆக மொத்தம் 1,750 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்வதற்கான வேலை நடைபெற்று வருகின்றது. இந்த நிலப் பரப்பு நரசிங்கபுரம், முகுந்தராயபுரம், சிக்கராயபுரம், வீட்க்கால் ஆகிய கிராமங்களில் இருந்து கையகப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, மேற்கண்ட நிலங்களை கையகப்படுத்துகின்ற முயற்சிகள் நடைபெறுகின்றபோது புளியந்தாங்கள் என்ற கிராமமே காலி செய்ய வேண்டிய நிலைமை இருக்கின்றது. அப்படி எடுக்கின்ற நிலங்களுக்கு மார்க்கட்டு விலையை விட மிகவும் குறைந்த விலையைக் கொடுக்கின்ற நிலைமை இருக்கின்றது. சாதாரணமாக 1½ ஏக்கர் 1½ ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள், இந்த நிலங்களைக் கையகப்படுத்துவதன் காரணமாக நிலமற்றவர்களாக ஆகிவிடுகின்றார்கள். அப்படி நிலமற்றவர்களாக ஆகிவிடுகின்றவர்களுக்கு மாற்று நிலம் தந்து வேறு இடத்தில் அவர்கள் வாழ்வதற்கு இந்த அரசாங்கம் வழி செய்து தருமா என்று அறிய விரும்புகிறேன். அப்படி எடுக்கப்படுகின்ற நிலங்களுக்கு மார்க்கட்டு நிலவரப்படி விலை கொடுக்கும் நிலையை உருவாக்குமா? மூன்றாவதாக, இப்படி முதலிலே யார் யார் நிலங்கள் வீடுகள் எடுக்கப்படுகின்றனவோ, அவர்கள் வீட்டுப் பிள்ளைகளுக்கு வேலை கொடுக்கவேண்டும் என்று மத்திய அரசை இந்தச் சர்க்கார் வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே இந்தப் பகுதியில் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்ற விலையாக ஒரு ஏக்கருக்கு 5,000 ரூபாய் என்கிற அளவில் அந்த நிலங்கள் ஆர்ஜிதம் செய்ய, ரூ. 87·5 லட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும் அவர் சொல்லிய கிராமத்தில் இருந்தும், அந்தப் பகுதியில் உள்ள பொதுமக்கள் சார்பிலே

இருந்தும் இந்த நில ஆர்ஜிதம் செய்வதற்கு எதிர்ப்பு வந்ததாக அரசின் கவனத்திற்கு இதுவரையில் இல்லை. இப்படி நிலங்களை ஆர்ஜிதம் செய்ய முயற்சிக் றபோது, ஏற்கெனவே மத்திய அரசு அனுமதி அளித்தும் இப்படிப்பட்ட சில இடங்களில் தகராறு இருக்கிற காரணத்தினாலே தொழில்கள் துவங்குவதிலே காலதாமதம் ஏற்படுவதை யாரும் விரும்ப முடியாது. ஆனால் நிலம் ஆர்ஜிதம் செய்யப்படுகிறபோது யாருடைய நிலம் எடுக்கப்படுகிறதோ அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கிற விதத்தில் இந்த அரசு மத்திய அரசை வலியுறுத்தும்.

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலிலே பொதுமக்கள் மத்தியிலே இதற்கான எதிர்ப்பு வரவில்லை என்று கூறினார்கள். திரு துரை முருகன் கூறியபோது 2½ ஏக்கர், 2½ ஏக்கர், ½ ஏக்கர் வைத்திருக்கின்ற விவசாயிகள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கூறினார். அங்கே ஏரிகள் போகின்றன, பல கிராமங்களில் வீடுகள் போகின்றன. அப்படி இருக்கும்போது ஒரு தனி குடும்பத்திற்குச் சொந்தமான ஆயிரத்திற்கு மேற்பட்ட ஏக்கர் நிலம் அதனுடன் இணைந்திருப்பதை கவனத்தில் கொண்டு அரசு மறுபரிசீலனை செய்யுமா? அதற்காக அந்த விவசாயிகள் கண்ணீர் விட்டுக்கொண்டும் கூட்டம் போட்டுக்கொண்டும் இருக்கிறார்கள். அது அரசின் கவனத்திற்கு வராத நிலை ஏன் என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, ஆயிரம் ஏக்கர் நிலத்தை நிச்சயமாக தனி நபர் யாரும் வைத்திருக்க முடியாது. அப்படி இருந்தால் அதை மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவரலாம். மேலும் குறைவாக நிலம் உள்ள யார் யாருடைய நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறதோ அவர்கள் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கு முன்னுரிமை கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. ந. குலசேகர பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் வாயிலாக எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் இங்கே ஆரம்பிக்கப் பட இருக்கிற தொழிற்சாலைக்குத் தேவையான நிலம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரடியாக ஏறக்குறைய 4,00 பேர்களுக்கு வேலை வாய்ப்புக்கிடைக்கும் சூழ்நிலை இருக்கிறது. நிலம் எவ்வளவு தேவை என்பதற்கு ஏற்கனவே பதில்சொல்லியிருக்கிறேன். குறிப்பாக 1,400 ஏக்கர் அந்த



தொழிற்சாலை அமைப்பதற்கும், அதன் துணைப் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு 350 ஏக்கர் நிலமும், ஆக மொத்தம் 1,750 ஏக்கர் நிலப்பரப்புத் தேவைப்படுகிறது.

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கான நிலம் ஆர்ஜிதம் செய்வதை ஆட்சேபித்தும், தங்களுக்கு நியாயமான விலை கொடுக்கவேண்டுமென்று கோரியும், அந்தப்பகுதி நில உடமையாளர்கள் சிறு விவசாயிகள் என்பதால் பக்கத்தில் இருக்கும் ஆயிரம் ஏக்கர் நிலங்கள் ஒரு பஸ் அதிபருக்குச் சொந்தமாக இருப்பதால், அதை ஆர்ஜிதம் செய்யலாம் என்று தெரிவித்தும், மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் அந்த சிறு விவசாயிகள் மனு அளித்து, அதற்கான நிவாரணம் கோரியிருக்கிறார்களே அது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் பாரத கனரக மின் தொழிற்சாலையின் அதிகாரிகள் வந்து சுற்றிப்பார்த்து. அந்த நிலம் தான் பொருத்தமான இடம் என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதுபோல் புகார்கள் கொடுக்கப்பட்டிருந்தால், அவர்களுக்கு வேண்டிய காரியங்களை இந்த அரசு செய்து தரத் தயாராக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. என். ஏ. பூங்காவனம்: தலைவர் அவர்களே, இந்த நிலத்தை எடுப்பதற்கு முன்னால் மாவட்ட ஆட்சித் தலைவரும், மற்ற அதிகாரிகளும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முதலில் அங்கே வேலை வாய்ப்பு அளிப்பதாக வாக்குறுதி தந்தார்கள். இப்போது பத்திரிகையில் விளம்பரம் போட்டு இருக்கிறார்கள். வேலை தேடித்தரும் அலுவலகங்கள் மூலம் தான் வேலைக்கு ஆள் எடுப்பதற்கு இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த நிலத்திற்குப் பக்கத்தில் காதர் ஷெரீப் என்ற பெரிய பஸ் அதிபருக்குச் சொந்தமான ஆயிரம் ஏக்கர் நிலம் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அந்த நிலத்தை எடுத்துக்கொண்டு, இந்த சிறு விவசாயிகள் பாதிக்கப்படுவதைத் தடுக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்லாமல், நம்முடைய அமைச்சர் அவர்கள் ஒரு ஏக்கருக்கு 5,000 ரூபாய் தருவதாகச் சொல்கிறார்கள். அங்கே இருக்கின்ற விவசாயிகளைக் கேட்டால் ஒரு சென்டிற்கு 30-40 என்று சொல்லி தருகிறார்கள் என்று சொல்கிறார்கள். அது மட்டுமல்ல அங்கே இருக்கின்ற விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு 3,000—4,000 ரூபாய்தான் தருகிறார்கள் என்று சொல்லி, நோட்டீஸ் போட்டு, மாநாடு நடத்துகிறார்கள். ஆகவே அரசு இதிலே ஆழ்ந்து சிந்தித்து இந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் வழங்குவதற்குப் போதிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1981 ஜனவரி 23

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பாதிக்கப்பட்டுள்ளவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், அவர்களோடு பேசி, அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய—நான் ஏற்கனவே சொன்னதைப்போல்—இந்த அரசு என்றும் தயாராக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்வி தொழிற்சாலையைப் பற்றி இருந்தபோதிலும், துணைக்கேள்விகள் அனைத்தும் நிலத்தின் விலையைப் பற்றியே இருந்துவிட்டது.

அரிசனங்களுக்கு இலவச வீடுகள் கட்டும் திட்டம்.

*வினா எண் 18—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அரிசனங்களுக்கு இலவச வீடுகள் கட்டித் தரும் திட்டத்தை ஆண்டுக்கு 50,000 வீடுகள் என்று உயர்த்தும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதித்திராவிட மக்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டும் திட்டத்தை, ஆண்டுக்கு 50,000 வீடுகள் என்று உயர்த்துகின்ற திட்டம் தற்போது அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்த வரையில் ஏறத்தாழ 10 லட்சம் அரிசன மக்கள் குடியிருக்க வீடு இல்லாமல் இருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது, ஆண்டுக்கு 50,000 வீடுகள் வீதமாவது கட்டித்தரும் திட்டம் உண்டா என்பதற்கு அமைச்சர் அவர்கள் இல்லை என்று பதில் அளித்து விட்டார்கள். ஆகவே, அந்த 10 லட்சம் அரிசன மக்களுக்கு இலவசமாக குறைந்த பட்சம் வீட்டு மனை இடமாவது ஆண்டுக்கு 50,000 பேருக்கு வழங்க அரசிடம் திட்டமுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசைப்பொறுத்த வரையில் ஏற்கனவே அரிசனங்களுக்கு வீட்டு மனைப்பட்டாக்களை வழங்குவதற்கான திட்டத்தை நல்ல முறையில் நிறைவேற்றிவருகிறது. அரசு நிலங்களாக இருந்தால் அதை அடமானம் செய்வதன் மூலமும், தனியார் பட்டா நிலங்களாக இருந்தால் அதனை ஆர்ஜிதம் செய்வதன் மூலமும், அதிகமான அளவில் வீட்டு மனைப்பட்டாக்களை இந்த அரசு வழங்குகிறது. மாண்புமிகு உறுப்பினர்



1981 ஜனவரி 23]

அவர்கள் கேள்வியின்போது அதை அதிகரிக்கும் திட்டம் உண்டா என்று கேட்டார்கள். ஏற்கனவே இந்த அரசைப் பொறுத்தவரையில் அதிகமான அளவில் பட்டாக்களைக் கொடுத்து வருகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். இது வரையில் ஏறத்தாழ 3,41,864 வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 10-20]

திரு. என். பழனிவேல்: தலைவரவர்களே, ஏற்கனவே அரிசனங்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வாங்கிக் கொடுப்பதாகச் சொன்னார்கள். அதிலும் 3 இலட்சம் பேர்களுக்கு வாங்கிக் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். இன்னும் 10 இலட்சம் பேர்களுக்குமேல் வீட்டுமனை இல்லாமல் இருக்கிறார்கள் என்று நான் சொல்கிறேன். ஆகவே, குறைந்த பட்சம் 5 சென்ட் வீதம் வீட்டுமனை கொடுப்பதற்கு ஒரு வரம்பு நிர்ணயித்து, இந்த ஆண்டு முதல் 50,000 பேர்களுக்கு என்று வைத்துக்கொண்டால் இன்னும் 10 அல்லது 15 ஆண்டுகளில் வீட்டுமனைப் பிரச்சினை தீர்ந்துவிடும். ஆகவே, ஆண்டுக்கு 50,000 பேர்களுக்கு வீட்டுமனையாவது வாங்கிக் கொடுக்க அரசு உத்தரவாதம் கொடுக்குமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவரவர்களே, ஏற்கனவே 3,41,864 பேர்களுக்கு வீட்டுமனைகள் வழங்கியிருப்பதாகச் சொன்னேன். இந்த அரசைப் பொறுத்த வரையில் எவ்வளவு அதிகமாக அவர்களுக்கு வீட்டு மனைகள் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு கொடுத்து பணியாற்றி வருகிறது; மேலும் பணியாற்றும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏறத்தாழ 10 இலட்சம் பேர் வீட்டுமனை இல்லாமல் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இந்த அரசு அதை பரிவோடு கவனிக்கும்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்த வினாவில் வீடுகள் கட்டித்தரும் திட்டத்தை ஆண்டுக்கு 50,000 வீடுகள் என்று உயர்த்தும் திட்டம் உள்ளதா என்று கேட்கப்பட்டிருக்கிறது. ஆகவே, வீட்டு மனைப் பட்டா என்பது வேறு. என்ன காரணத்தால் வீடு கட்டித்தரும் திட்டத்தை அரசு கைவிட்டது என்று அறிய விரும்புகிறேன். மேலும் வீடு கட்டுவதற்கு 5,000 ரூபாய் என்று வழங்கியதை 3,000 ரூபாயாக குறைத்திருப்பதை அரசு அறியுமா? அப்படிக் குறைக்கப்பட்டதால், கட்டப்பட்ட வீடுகள் பாதியிலே நிறுத்தப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா? அதனால் அரசுக்கும் நஷ்டம்; அந்த மக்களுக்கும் குடியிருப்பு வசதி இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

[1981 ஜனவரி 23

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொல்வதைப் போன்று சில குற்றச்சாட்டுக்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டிருக்கின்றன. அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும். அதோடு, 1980–81 ஆம் ஆண்டுக்கு 5,060 ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் 207 சதுர அடி பரப்பில் வீடு கட்டித்தர இந்த அரசு முயற்சி எடுத்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் வீடுகட்டித் தரப் பட்டது பற்றி குற்றச் சாட்டு எதுவும் சொல்லவில்லை. கொள்கை மாறுபட்டிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் இருந்தபோது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 5,000 ரூபாய் பெறுமானத்தில் இலவச வீடுகள் கட்டித்தரப்பட்டுள்ளன. அப்படிக் கட்டித் தரப்பட்ட வீடுகள் ஏறத்தாழ 35,000 அல்லது 40,000 வீடுகள். அந்தத் திட்டம் இப்போது அறவே கைவிடப்பட்டு, கடன் வசதி அளிப்பதன் மூலமே வீடு கட்டித்தருகிறோம் என்று இருக்கிறது. இந்த கொள்கை மாறுபாட்டிற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவரவர்களே, இந்த அரசைப் பொறுத்த வரையில் தற்போது 5,060 ரூபாயில் வீடு கட்ட இருப்பதற்குக் காரணம் மேலாண்மை இயக்குநர் சிமின்ட் போன்ற பொருட்கள் விலையேற்றத்தில் காரணமாக அந்தப் பணத்திலே வீடுகளைக் கட்டித் தருவது குறித்தும் அதில் இருக்கிற பிரச்சினை குறித்தும் எடுத்துச் சொல்லி இருக்கிறார். ஆகவே, அந்தத் தொகையை உயர்த்தி, வீடுகளைப் கட்டித்தருவதை இந்த அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நன்னிலம் அ. கலைஅரசன்: தலைவரவர்களே, அரிசன நலத் துறையினால் ''தாட்கோ'' மூலம் கட்டப்படும் வீடுகள் அனைத்தும் வெயில் காலத்திலும் மழைக்காலத்திலும் மேலே பரப்பியுள்ள ஓடுகள் சரியாக பொருத்தப்பட்டு பராமரிக்கப்படாததால் சேதமடைவது அரசுக்குத் தெரியுமா? கிராம வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் கட்டப்படும் 50,000 வீடுகளில் அரிசனங்களுக்கு 35,000 கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல், யார், யார் சலுகை பெறுகிறார்களோ அவர்களுக்குப் பணமாக அளித்து. அவர்களே வீடு கட்டிக்கொள்ள அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த கருத்தையும் அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1981 ஜனவரி 23]

டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நான் அமைச்சரவர்களிடமிருந்து அறிந்துகொள்ள விரும்புவது, ஏற்கனவே இருந்த அரசால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கிட்டத்தட்ட ஐந்து ஆயிரம் ரூபாய் செலவில் இனாமாக வீடுகள் கட்டித் தரப்பட்டன; ஆனால் இப்போது இனாமாகக் கட்டித் தராமல் கடனாக மட்டும் தொகை தரப்படுகின்றதே, இந்தக் கொள்கை மாறுபாட்டிற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர்களே, அதைக் கொள்கை வேறுபாடு என்று கருதவேண்டாம். நிதி போதாமை என்பது மட்டும் காரணமல்ல. மற்ற வகுப்பினரும் தங்களுக்கும் அப்படி வேண்டும் என்று கேட்கின்ற நிலைமை ஏற்பட்டு பிரச்சினை பெரிதாகி இருப்பதும் ஒரு காரணம். இருந்தாலும் மீண்டும் அதைப் பரிசீலனை செய்வதாக இருக்கிறோம்.

*வினா எண்—19—திரு. வி. பாலகிருஷ்ணன், திரு. என். பழனிவேல்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்டவைகளுக்கு விடையளிப்பாரா:

(அ) 1980-81-ல் அரிசனங்களுக்கு எத்தனை வீடுகள் கட்டும் உத்தேசம் அரசிடம் உள்ளது?

(ஆ) எவ்வளவு மதிப்பீட்டுத் தொகை?

(இ) சிவகாசி தொகுதியில் அரிசனங்களுக்கு எந்தெந்தப் பகுதியில் வீடுகள் கட்டித்தரும் உத்தேசம் உள்ளது?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) 1980–81-ல் அரிசனங்களுக்கு சுமார் 5,000 வீடுகள் கட்டும் உத்தேசம் அரசிடம் உள்ளது.

(ஆ) வீடு ஒன்றுக்கு ரூ. 5,060 மதிப்பீட்டுத் தொகை ஆகும். அதன் பரப்பளவு 207 சதுர அடியாகும்.

(இ) எந்தெந்த கிராமங்களில் வீடுகள் கட்டுவது என்பது குறித்து அரசு பரிசீலனையில் உள்ளது.

திரு. வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த கிராமங்களினுடைய பட்டியலை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: பேரவைத் தலைவரவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போட்டால் பதிலளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவரவர்களே, 1980–81 ஆம் ஆண்டு 5,000 வீடுகள் கட்டுவதற்கு அரசு உத்தேசித்து இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்த 5,000 வீடுகளும் இலவசமாகக் கட்டிக் கொடுக்கப்படக் கூடிய வீடுகளா? அல்லது கடனாகக் கட்டிக் கொடுக்கப்படக்கூடிய வீடுகளா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : பேரவைத் தலை வர்களே, தாட்கோ மூலமாக 5 ஆயிரம் வீடுகள் கட்டி தருவதாகச் சொன்னது இலவசமாகக் கட்டித் தருகின் வீடுகளாகும்.

திரு. என். டேனியேல் : தலைவரவர்களே, இலவசமா கட்டிக் கொடுப்பது என்று சொல்வதற்கு நன்றி. அடு ஆண்டு அனேகமாக மதுவிலக்குத் திறந்து விடுவார்கள் என கருதுகிறேன். ஆகவே அந்த நிதியிலிருந்தாவது 50 ஆயி வீடுகள் கட்டித் தருவது என்ற கொள்கை ஏற்றுக்கொண் தயவு செய்து முதலமைச்சரவர்கள் அறிவித்தால் நலம் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பதில் இல்லை)

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவை தலைவரவர்களே, அரிசன மக்களுக்கு 5 ஆயிரம் வீடுகள் கட் கொடுப்பதிலோ அல்லது அவர்களுக்கு 50 ஆயிரம் வீட்டு மனை பட்டா கொடுப்பதிலோ பிரச்சினை தீரப்போவதில்லை. ஆக நகரங்களிலே எப்படி குடிசை மாற்று வாரியத்தின் மூல வீடுகள் கட்டிக் கொடுக்கின்றோமோ அதுபோன்று கிராம பகுதிகளிலேயும் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கடனாகவாவது வீடுகள் கட்டிக் கொடுத்தால் அவர்களுடை பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வழி கோலுவதாக இருக்கு ஆகவே அந்த வகையில் செய்வதற்கு முயற்சி எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவ வர்களே, நிதி ஆதாரத்தைப் பொறுத்துத்தான் அதை பற்றி சிந்திக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறே

திரு. ஜி. மூர்த்தி : தலைவரவர்களே, 3,750 ரூபாய்க் வீடு கட்டிக் கொடுப்பதைப் பொறுத்தவரையிலே தாழ்த்த பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஆயிரம் ரூபாய் ச சிடி தருகிறார்கள். ஆனால் ஏற்கனவே 5,000 ரூபாயி கட்டப்பட்ட வீடுகளுக்கு அப்படிப்பட்ட சலுகைகள் த படாமல் இருக்கின்றது. ஆகவே இந்த சப்சிடி தருகின் முறையினை அந்த வீடுகளுக்கும் விரிவுபடுத்த அரசு மு வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்தக் கருத்து ப சீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. பரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர களே, 1980-81-ம் ஆண்டிலே கட்டப்படுவதாகக் கூறப்பட் வீடுகள் இன்னும் கட்ட ஆரம்பிக்கப்படவில்லை. இந்த நி யாண்டும் முடிய இருக்கின்றது. ஆகவே இந்த நிலையி யாவது அந்தத் திட்டத்தை விரைவு படுத்தி நடவடிக்கை எடுக்க அரசு முயற்சிக்குமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.







[முற்பகல் 10.30 மணி]

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை அரசு ஏற்கனவே அனுமதித்துள்ளது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஐவ்வாதுமலை பழங்குடி மக்களுக்குச் சிறப்புத் திட்டம்.

*வினா எண். 20—திரு. இல. பலராமன் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) 1980-81-ல் வட ஆற்காடு ஐவ்வாது மலை பழங்குடி மக்களுக்கென சிறப்பு திட்டம் ஏதும் செயல் படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஆம்.

(ஆ) திட்டங்களுக்கான ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதன் விவரம் :—

| | |
|---|---|
| 1. அரசு உண்டுறைவிடப் பள்ளிகள். | இரண்டு |
| 2. பட்டுப் பூச்சிகள் வளர்த்தலுக்காக | ஏறத்தாழ 80 ஏக்கர் நிலத்தில் ரூ. 5.00 இலட்சத்திலும் |
| 3. குடிநீர் வசதிகளுக்காக | 9 குடியிருப்பில் ஏறத்தாழ ரூ. 2.89 இலட்சத்திலும் |
| 4. மின்வசதிக்காக | 2 கிராமங்களுக்கு ரூ. 1.70 இலட்சம் செலவிலும் |
| 5. வனவளத்திற்காக | ரூ. 6.05 இலட்சங்கள் செலவில் பள்ளிக் கட்டிடங்கள் கட்டல், சாலைகள் அமைத்தல் மற்றும் ஆசிரியர் குடியிருப்புகள் கட்டுதலுக்காகவும். |
| 6. நீர்பாசன வசதி | 2 திட்டங்கள் ரூ. 1.25 இலட்சமும். |
| 7. கால்நடை அபிவிருத்திக்காக | ரூ. 1.55 இலட்சத்தில் கால் |

நடை வழங்குதல் மற்றும் மருத்துவ மனை ஏற்படுத்துதல் போன்ற செலவுக்காகவும்.

8. வேளாண்மையை பொறுத்த வரையில் — ரூ. 2·33 இலட்சத்தில் விதைகள், செடிகள், மற்றும் விவசாயக் கருவிகள் வழங்குதலுக்காகவும்.

9. மண்வளப் பாதுகாப்பிற்காக — ரூ. 3·20 இலட்சங்கள் செலவிடவும் இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதையும்.

ஆக, 1980–81,ஆம் ஆண்டில் வட ஆற்காடு மாவட்டம், ஜவ்வாது மலை மற்றும் ஏலகிரி மலை வாழ் மக்களுக்கு, பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ரூ. 25·47 இலட்சங்கள் செலவிட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளன என்பதையும் இதைத் தவிர, இத்துணைத் திட்டப் பகுதிகளில், 30 குழந்தைகள் காப்பகங்கள் திறக்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. ஜவ்வாது மலைப் பகுதிகளில் தேவைக்கேற்ப இக்காப்பகங்கள் சமூக நலத் துறையால் திறக்கப்படும்.

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தில் மத்திய அரசின் பங்கு எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்? இதற்கென அமைக்கப்படும் குழுவில் சட்ட மன்ற உறுப்பினர்களும் இடம் பெறும் ஆலோசனை அரசிடம் இருக்கிறதா? இதுவரையில் இல்லை என்றாலும், இனிமேலாவது இது குறித்து அரசு ஆலோசிக்குமா? பெரிய திட்டமாக இருக்கின்ற காரணத்தினால், இது நல்ல முறையில் செயல்பட பொதுப் பணியில் இருக்கிற அங்கத்தினர்களையும் இதில் இணைப்பதற்கு அரசு ஆலோசனை செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980–81-ஆம் ஆண்டில் இந்த பழங்குடியினர் மேம்பாடு திட்டத்தின் கீழ் மொத்தமாக ரூ. 135·28 இலட்சங்கள் செலவிட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ரூ. 25·47 லட்சத்தில், நான் கூறிய அந்தப் பணிகள் நடைபெறுவதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் கீழ் மத்திய அரசின் துணைக் கொண்டு ஏறத்தாழ 9 பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அந்த 9 பகுதிகளிலே ஒன்று



இந்த ஜவ்வாது மலைப் பகுதி என்பதை தெரிவித்துக்கொண்டு மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தையும் இந்த அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, 9 பகுதிகளில் இத்திட்டம் நடைபெறவிருக்கிறது. அதில் ஒன்று ஜவ்வாது மலைப்பகுதி என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் மக்கள் பிரதிநிதிகளாகிய சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு எந்த விவரமும் தெரிவிக்கப்படவில்லை. அவர்களுக்கு விவரம் தெரிந்தால் நல்ல பல யோசனைகளை அரசுக்கு சொல்ல முடியும். அதனால் இத்திட்டத்தில் மேற்கொள்ளும் மேல் நடவடிக்கைகள் குறித்து, அவைகள் செம்மையாக நடைபெற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் விவரங்களை அனுப்ப அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஜவ்வாது மலையில் வேளாண்மைத் துறைக்காகவும் செலவிடப்போவதாக அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். ஜவ்வாது மலையில் வேளாண்மை காரியங்களுக்கு மின் இணைப்பே தரப்படவில்லை. ஆகையினால் இந்தச் சிறப்புத் திட்டத்தைப் பயன்படுத்தும்போது அங்குள்ள விவசாயிகளுக்கு மின், இணைப்புப் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான முயற்சிகளையும் அரசு எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. அறிவிப்புகள்.

### அ. மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

" தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 உள்விதி (1)-ன் கீழ், கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்பேரவையின் இரண்டாம் கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (panel of chairmen) நியமிக்கிறேன்.

1. திரு. வி. வி. சுவாமிநாதன்.
2. திரு. ஜே. எஸ். இராசு
3. திரு. என். எஸ். வி. சித்தன்
4. திரு. எஸ். சிவசாமி.

### ஆ. உறுப்பினர் உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்த உறுதி மொழி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு மற்றும் ஓர் அறிவிப்பு.

தேர்தல் மனு எண். 11/1980-இன் தொடர்பாக சென்னை உயர்நீதி மன்றம் கேட்டுக் கொண்டதற்கிணங்க திரு. கி. சட்டநாத கரையாளர் அவர்கள் தான் சார்ந்துள்ள கட்சி பற்றி அளித்த உறுதி மொழியின் உண்மை நகல் ஒன்று பதிவு அஞ்சல் மூலமாக சென்னை உயர்நீதி மன்றத்துக்கு அனுப்பி வைக்கப் பெற்றுள்ளது என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 4. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: நான் கொடுத்திருக்கும் ஒத்தி வைப்புத் தீர்மானம்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்திவைப்புத் தீர்மானங்கள் நாளையிலிருந்து எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. ப. நெடுமாறன்: தலைவர் அவர்களே, விதி 73-ன் கீழ் ** ** ** ஒரு தீர்மானம் கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சபையில் அதைப்பற்றிப் பேச நான் அனுமதிக்கவில்லை.

திரு ப. நெடுமாறன்: அதைப்பற்றி நான் ஒரு விளக்கம் சொல்ல விரும்புகிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளக்கம் சொன்னால் அதுவே ஒரு விவாதமாகிவிடும்.

* * * *

திரு ப. நெடுமாறன்: ஆளுநர் அவர்கள் சட்டசபையின் ஒரு அங்கமாக இருக்கிறார்கள் ** **

திரு. அ. செல்வராசன்: அவர்கள் சொல்வதெல்லாம் பத்திரிகைகளில் வருமா!

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் அவர்களை நியமிக்கின்ற அதிகாரம் மத்திய அரசைச் சேர்ந்தது. அதைப் பற்றி விவாதிக்க இங்கே உரிமை இல்லை. ஆகவே இதைப் பற்றி பத்திரிகைகளில் பிரசுரிக்க வேண்டாம். ஆகவே அவற்றைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட ஆணையிடுகிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: சென்ற கூட்டத் தொடரில் கேள்விகளுக்கு 15 நாட்களுக்குள் பதில் அளிக்கப்படும் என்று சொன்னீர்கள் 4—7—1980 அன்று அனுமதிக்கப்பட்ட.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று இருபது கேள்விகள் எடுத்துக் கொள்ளப் பெற்று விடையளிக்கப் பெற்றுள்ளன. அனுமதிக்கப்பட்ட எல்லாக் கேள்விகளும் வரிசையாக வரும்.

## 5. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்

திரு. கோ. விஸ்வநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

" ஆளுநர் அவர்களுக்கு கீழ்க்கண்ட நன்றியுரை அளிக்கப் பெற வேண்டும்:—

' 1981-ஆம் ஆண்டு, சனவரி திங்கள் 21-ஆம் தேதியன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு * தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்.' "

திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. விஸ்வநாதன் அவர்கள் மொழிந்த தீர்மானத்தை நான் வழி மொழிகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

* 175-184ம் பக்கங்களில் ஆளுநர் உரை இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது. அதன் தமிழாக்கம் 185-198-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

[1981 ஜனவரி 23

திரு. கோ. விஸ்வநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தெடுக்கும் மூன்று கடல் நட்ட நடுவில் நல்ல முல்லை, மருதம், குறிஞ்சி, நெய்தல் கிடக்க மெத்த நலம் செய்திடும் தமிழகத்தின் மதுரை நகரில் சீரோடும் சிறப்போடும் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெற்று முடிந்தது. அதை தமது உரையில் ஆளுநர் அவர்கள் மிகச் சிறப்பாகக் குறிப்பிட்டிருப்பது நம் அனைவருக்கும் மகிழ்ச்சி தரத்தக்கதாகும். அம்மாநாட்டில் பல நாட்டவர்களும் பங்கேற்றனர். நாடு முழுவதிலும் இருந்து வந்த பலர் பங்கேற்றனர். நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் அரசு யாரும் குறை சொல்ல முடியாத அளவிற்கு மிகச் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்தது. நமது முதல்வர் அவர்களே எல்லா நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டு அனைவரையும் ஊக்குவித்தார்கள். அமைச்சர் பெருமக்களும் அதிகாரிகளும் வந்திருந்து அனைத்தையும் கவனித்தார்கள் என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

[முற்பகல் 10-40]

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதைவிட முக்கியமான. உலகத் தமிழ்ச் சங்கம் ஏற்படுத்திடவும், ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு செம்மையாக, சிறப்பாக முடிவுறவும் நம்முடைய புரட்சித் தலைவர் அரசு வரலாற்றுச் சிறப்பு மிக்க முடிவை எடுத்தது என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பல் இலட்சக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட இந்த சிறப்பு மிக்க மாநாடு மிக நன்றாக நடந்து முடிந்தது. எந்த விதமான சிறு அசம்பாவிதமும் இன்றி முடிந்ததைப் பற்றி எண்ணிப் பார்க்கும்போது பொதுமக்களுக்கும், காவல் துறையினருக்கும் நான் பாராட்டுத் தெரிவித்தாக வேண்டும். இந்த மாநாடு எப்படி நடந்தது என்பதைக் குறிப்பிடும்போது, சர்வ கட்சித் தலைவர்களும், வெளி நாடுகளிலே இருந்து வந்திருந்த தமிழ் அறிஞர்களும் 'கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டு நடந்தது, ஆளும் கட்சிக்கு அதைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை' என்று மனதாரப் பாராட்டினார்கள். அவர்களுக்கு நான் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநாட்டின் பெயரால் வழக்கமாக இப்படிப்பட்ட மாநாடு நடக்கும்போது அரசாங்கம் வசூல் செய்வது வழக்கம். ஆனால் இந்த மாநாட்டிலே யாரும், எந்த அதிகாரியும் ஒரு பைசாகூட வசூல் செய்யப்படாமல் நடந்திருக்கின்றது என்பதை நாட்டிலே



1981 ஜனவரி 22] [திரு. கோ. விஸ்வநாதன்]

22284

இருக்கின்ற வியாபாரிகளும், தொழில் அதிபர்களும், மற்றவர்களும் பாராட்டுகின்றார்கள் என்பதையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆனால் இவ்வளவும் பெரிய சிறப்புமிக்க மாநாட்டை சில பேர், இதிலே ஊழல் இருக்கிறது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வயிற்றெரிச்சல் காரணமாக. ஊழல் கட்சியைச் சார்ந்தவர்கள், இப்படிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் மறந்துவிட முடியாது ; இதை மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இன்று தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படி பேசிக் கொண்டே போனால், இன்னும் கடுமையான தண்டனையை மக்கள் தருவார்கள் என்பதையும் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

21/3/82

நாம் 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால் அவர்கள், 'எங்கும் எதிர்ப்பு, எதிலும் எதிர்ப்பு' என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நான் சொல்லும் பதில், பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்கின்ற வார்த்தைகளிலே சொல்ல வேண்டுமானால், 'ஏசவுக்காரர்கள் வாழ்க' என்றுதான் சொல்ல வேண்டும்.

N83-9

நம்முடைய மாநிலத்தில் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாக்கப் பெற்றிருக்கிறது. தமிழ் நாட்டினுடைய இன்றைய திட்ட அளவு ரூ. 3,150 கோடி என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் பெருமையாக சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தென் மாநிலத்திலே இருக்கின்ற நான்கு மாநிலங்களிலே நாம் அதிகப்பட்டசமான தொகையைப் பெற்றிருக்கிறோம். கேரளாவிற்கு சுமார் 1,795 கோடியும் கர்நாடகாவிற்கு சுமார் 2,400 கோடியும், இன்னொரு அண்டை மாநிலமான ஆந்திராவிற்கு சுமார் 2,900 கோடியாகவும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், தமிழ் நாட்டிற்கு 3,150 கோடி ஒதுக்கப்பட்டிருப்பது மிகவும் பாராட்டக்குரியதாகும். ஐந்தாண்டு திட்டத்தில், இதைப்போல் நிறைவேற்றப்பட்ட திட்டத்தில் 1,122 கோடி ரூபாய் பெறப்பட்டது என்பதையும் நாம் மறந்துவிட முடியாது. ஐந்தாண்டுத் திட்டத்தை அப்போது பிரதம மந்திரியாகவும் இப்போதும் பிரதம மந்திரியாகவும் இருக்கும் இந்திரா காந்தி அவர்கள் இத்திட்டத்தைச் சரியாக நிறைவேற்றவில்லை என்று அன்றைய முதல்வரும், இன்றைய எதிர்க் கட்சித் தலைவரும் இந்த அவையிலே குற்றம் சாட்டியிருக்கிறார்கள். அதைப் போல், இன்றைய அரசு குற்றம் சாட்டாது. இந்தத் திட்டத்திற்கு இந்த அளவிற்கு ஒதுக்கீடு பெற்றிருக்கிறார்கள் என்பதைப் பாராட்டுவார்கள் என்று எதிர்பார்த்தோம். அதற்கு மாறாக, ஒரு பெரிய சாதனை புரியவில்லை என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், நம்முடைய அரசைப் பொறுத்தவரையில், இதைப் பற்றி நன்றாக விவாதித்து, மக்களுக்கு என்னென்ன தேவைகள் என்பதை

யெல்லாம் ஆய்ந்தறிந்து, அதற்குப் பிறகு மத்திய சர்க்காரிடத்திலே எடுத்து வைத்திருக்கிறோம். மத்திய சர்க்காருடைய நேரடி உதவி சுமார் 700 கோடி என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இது போதுமா என்பது ஒரு முக்கிய பிரச்னையாகும். ஏற்கனவே, கொடுக்கப்பட்ட ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கொடுக்கப்பட்ட தொகையைவிட இது ஏறத்தாழ இரண்டு மடங்காக இருந்தாலும், இந்தத் தொகை போதாது என்று நான் கருதுகிறேன். மத்திய சர்க்காரின் பங்கு போதாது அது இன்னும் உயர்த்தப்பட வேண்டும் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன் இதை அங்கே ஆளுங் கட்சியாக வீற்றிருக்கும் இந்திரா காந்தி அவர்களின் பிரதிநிதிகளாக இங்கே வீற்றிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள், இதைப் பற்றி மத்திய சர்காரிடத்திலே வலியுறுத்துவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். அதேபோல் அவர்களோடு லட்சிய உறவு வைத்திருக்கும் திராவிட முன்னேற்றக் கழகமும் நிச்சயமாக மைய அரசை வற்புறுத்தும் என்று நான் எதிர்பார்க்கிறேன். இங்கே இதை நம்முடைய ஆளுநர் அவர்கள் உரையிலே குறிப்பிடவில்லை என்று சொல்லுவார்கள். அதற்கும் ஒரு காரணம் இருக்கிறது. கடந்த காலத்தில், இந்தச் சட்டமன்றத்திலே பேசுகின்ற போதெல்லாம், முன்னால் முதல்வர் மத்திய அரசோடு மோதல் ஏற்படும் என்ற எண்ணத்திலே பேசியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பேச்சுக்களை நிறையப் படித்திருக்கிறேன். இன்றைய ஆளுநர் உரையிலே அப்படிப்பட்ட எண்ணத்தை உருவாகக்கூடாது என்ற காரணத்திற்காக, அதைக் குறிப்பிடவில்லை என்றே நான் கருதுகிறேன். ஆனாலும் அதே நேரத்தில் கட்சி வித்தியாசம் இல்லாமல் நம் மாநிலத்திற்கு இன்னும் அதிகமாகத் தொகையைப் பெறுவதற்கு, எல்லாக் கட்சிகளும் உதவி புரியுமென்று எதிர்பார்க்கிறேன்.

இதுவரையில் நம்முடைய பண ஒதுக்கீட்டை, திட்ட ஒதுக்கீட்டை மக்கள் தொகையை வைத்தும், நபர்வாரி வருமானத்தை வைத்தும் கொடுத்துக் கொண்டு வந்தார்கள். முதல் முறையாக புரட்சித் தலைவர் அவர்கள் நேஷனல் டெவலப்மென்ட் கவுன்சிலில் பேசும்போது புரட்சிகரமான திட்டத்தைச் சொல்லியிருக்கிறார்கள். வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கக்கூடிய மக்களின் எண்ணிக்கையை வைத்து திட்ட அளவைப் பங்கிட்டுத் தர வேண்டுமென்ற திட்டத்தை வைத்திருக்கிறார்கள். அது நிச்சயமாக ஒப்புக் கொள்ளப்படும் என்று எதிர் பார்க்கிறோம். நம்முடைய பிரதம அமைச்சர் அவர்கள் பாராளுமன்றத்தில் பேசும்போது வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்களைக் கை தூக்கிவிடுவது மத்திய அரசின் கொள்கை என்றும், அதுதான் முதல் கடமையாகும் என்றும் பேசியிருக்கிறார்கள். ஆகவே, நம்முடைய முதல்வர் அவர்கள் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படும் என்று எதிர் பார்க்கிறோம்.





இன்றைய நிலையில் விலைவாசி ஏறிக் கொண்டிருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. ஆளுநர் அவர்கள் உரையில் கூட இதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் உங்களுக்குத் தெரியும்—மாநில அரசு எந்த அளவுக்கு இதிலே பொறுப்பேற்க முடியும் என்று. மாநில அரசு தனக்கு இருக்கும் அதிகாரத்தை வைத்துக் கொண்டு எந்த அளவுக்கு நடவடிக்கை எடுத்திருக்கிறது, தமிழக அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை உரைகல்லாக வைத்துப் பார்க்க வேண்டும். வழக்கமாக வளருகின்ற பொருளாதாரத்தில் எப்போதும் பண வீக்கம் இருக்கத்தான் செய்யும்.

It is stated by Economic like Prof. Kaldor to Gunnar Myrdal in Asian Drama "inflation is inevitable in any developing economy".

ஆனாலும் பண வீக்கம் என்பதே அதைப் பொறுத்தவரை கெட்டது அல்ல. அதே அளவுக்கு உற்பத்தி பெருகி விடுமானால் பண வீக்கம் பாதிக்காது. உற்பத்தி குறைந்து பணப் புழக்கம் அதிகமாக விடுமானால் ஏழை மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். குறிப்பாக—unorganised majority—silent majority என்று சொல்லுகிறார்களே—ஆளுநர் அவர்கள் கூடக் குறிப்பிட்டிருக்கிறார்கள்—அவர்கள் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள். இன்றைய நிலையில் மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கைதான் விலைவாசி ஏற்றத்தையோ, இறக்கத்தையோ செய்ய முடியும். இதை எல்லாக் கட்சிக்காரர்களும் ஒப்புக் கொள்வார்கள். அவ்வப்போது சொல்லியும் வந்திருக்கிறார்கள்.

ரூபாயின் மதிப்பு வருஷா வருஷம் குறைந்து கொண்டே போகிறது. இதை மாநில அரசால் தடுத்து நிறுத்த முடியாது. 1949ஆம் ஆண்டு ரூபாயின் மதிப்பு 100 பைசா என்று வைத்துக் கொண்டால் முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிந்தபோது 1959ஆம் ஆண்டு ரூபாயின் மதிப்பு 85 47 ஆக குறைந்தது. அதற்குப் பிறகு 1965ஆம் ஆண்டு சீன ஆக்கிரமிப்புக்குப் பிறகு, பாகிஸ்தான் போருக்குப் பிறகு 68.87 பைசாவாகக் குறைந்திருக்கிறது. 1970ஆம் ஆண்டு 48 30 பைசா என்ற அளவுக்குக் குறைந்து போயிருக்கிறது. 1979ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ரூபாயின் மதிப்பு 24-3/4 பைசாதான்.

நாம் என்னதான் நடவடிக்கைகள் எடுத்தாலும் பண வீக்கத்தைப் பொறுத்தவரை அதைத் தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு மத்திய சர்க்காரிடத்தில்தான் இருக்கிறது. மக்களுடைய வாங்கும் சக்தி அதிகரிக்க வேண்டுமென்று ஆளுநர் அவர்கள் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அறிஞர் அண்ணா அவர்கள்கூட ஒருமுறை இந்தச் சபையில் குறிப்பிட்டார்கள் என்று

நம்புகிறேன். யாருக்காகத் திட்டம் தயாரிக்கிறோம் என்று கூறும்போது 'அழுவதற்குக் கூட திராணி இல்லாத, அமைப்பு இல்லாத மக்களை மையமாக வைத்துக் கொண்டுதான் திட்டம் தீட்டப்பட வேண்டும்' என்று குறிப்பிட்டார்கள். அப்படிப் பட்ட மக்களை மனதில் வைத்துக் கொண்டு புரட்சித் தலைவர் அரசு சிறப்பாக பணியாற்றி வருகிறது. அதைத்தான் ஆளுநர் அவர்கள் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

பொது விநியோக முறையை வலுப்படுத்த வேண்டுமென்று ஆளுநர் அவர்கள் உரையில் சிறப்பாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த மன்றத்திலும், நாடாளுமன்றத்திலும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களும், காங்கிரஸ் சோஷலிஸ்டுகளும் எப்போதும் இந்தக் கொள்கையை வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். புரட்சித் தலைவர் அரசு அதை ஏற்றுக் கொண்டு பொது விநியோக முறையை வலுப்படுத்த வேண்டுமென்று அறிவித்திருக்கிறது. இதைப்பற்றி தமிழ்நாட்டில் இருக்கும் முந்திய அரசு கவலைப் பட்டதாகத் தெரியவில்லை. இதற்காக நம்முடைய அரசு பெட்ரோலியத்தை அடிப்படையாக வைத்து உரங்கள் விலை ஏற்பட்டிருந்தாலும் நியாய விலையில் நடுத்தர விவசாயிகளுக்கும் சிறு விவசாயிகளுக்கும் உரத்தைக் கொடுக்க வேண்டுமென்று முடிவெடுத்திருப்பதை அனைவரும் பாராட்டுவார்கள் என்று நம்புகிறேன்.

விவசாயத்தைப் பொறுத்தவரை விவசாயப் பெருமக்களுக்கு விலையைக் கூட்டித் தர வேண்டும். குறிப்பாக, நெல்லுக்கும் கரும்புக்கும் விலையைக் கூட்டிக் கொடுக்க வேண்டுமென்றும் மத்திய சர்க்காரிடத்தில் கேட்டுக் கொண்டோம். அவர்கள் நெல்லுக்கு 105 ரூபாய் என்று சொன்னார்கள். ஆனாலும் அதைவிட 10 ரூபாய் கூட்டி நாம் 115 ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்திருக்கிறோம். கரும்புக்கு 200 ரூபாய் நிர்ணயிக்க வேண்டுமென்று கேட்டோம். அவர்கள் 130 ரூபாய்தான் கரும்புக்கு விலை என்று சொன்னார்கள்.

[முற்பகல் 10.50]

ஆனால் நம்முடைய மாநில அரசு 175 ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருக்கிறது. மற்ற அரசுகளை விட இந்த மாநில அரசு அதிகமாகக் கொடுத்திருக்கிறது என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் ப்ளோர் பிரைஸாகக் கொடுத்திருப்பதை நாம் புரக்யூர் மென்ட் பிரைஸாக உயர்த்திக் கொடுத்திருக்கிறோம் என்பது மிகப் பெரிய சாதனையாகும்.

கரும்பு, நெல், கோதுமை, சோளம் எண்ணெய் வித்துக்கள் பருப்பு வகைகள் போன்ற பொருட்களுக்கு விலை நிர்ணயம்





செய்யும் அதிகாரம் மத்திய சர்க்காருடைய அதிகாரத்திற்குட் பட்டது. விவசாயம் என்பது பெயரளவுக்கு வேண்டுமானால் மாநில பட்டியலிலே இருந்தாலும் இவைகளுக்கு எல்லாம் விலையை நிர்ணயம் செய்கிற அதிகாரம் பொதுப் பட்டியலிலே 33 வது வரிசை எண்ணிலே மத்திய அரசுக்குக் கொடுக்கப்பட்டி ருக்கிறது. அந்த அதிகாரத்தை அவர்கள் எடுத்துக் கொண்டி ருக்கிறார்கள். அவர்கள் அக்ரிகல்சுரல் பிரைஸ் கமிஷன் மூலமாக விலையை நிர்ணயம் செய்கிறார்கள். ஆனால் அதனு டைய சிபாரிசுகளை மத்திய அரசு ஏற்றுக் கொள்ள வேண்டு மென்ற நிபந்தனை இல்லை. அதை ஏற்றவோ குறைக்கவோ மத்திய அரசுக்கு அதிகாரம் உண்டு. விலை போதவில்லை என்று நாம் மட்டுமல்ல, எல்லா மாநிலங்களும் மத்திய சர்க்கா ரிடம் கேட்டுக் கொண்டு இருக்கின்றன. சென்ற ஏப்ரல் மாதத் திலே விலை நிர்ணயம் செய்யப்பட்டபோது தமிழ்நாடும், மற்ற மாநில அரசுகளும் கொள்முதல் விலையைக் கூட்டித் தர வேண்டுமென்று கோரிக்கையை மத்திய சர்க்கார் முன் வைத்துக் கொண்டு வந்து இருக்கிறோம். மத்திய சர்க்காருடைய விவசாயத் துறை அமைச்சர் ராவ் பிரேந்திர சிங் அவர்கள் என்ன பதிலைச் சொன்னார்கள் என்பதை இந்த நேரத்திலே ஞாபகப் படுத்த விரும்புகிறேன். மைய அரசு நிர்ணயித்துள்ள விலை களுக்கு மேலாக மாநில அரசுகள் கொடுப்பது வங்கக் கடலில் விழுந்து தற்கொலை செய்து கொள்வதற்கு ஒப்பாகும் என்று என்று சொன்னதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இதையும் பொருட்படுத்தாமல், தன் சக்திக்கு ஏற்ப விலையை உயர்த்தி யுள்ளது.

விவசாயப் போராட்டம் தமிழ் நாட்டில் மட்டுமல்ல, கர்நாடகா மகாராட்டிரம், ஆந்திரா, பஞ்சாப் போன்ற பல மாநிலங்களிலே கொள்முதல் விலையை உயர்த்தித் தர வேண்டு மென்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த நேரத்திலே விவசாயப் போராட்டத்தப் பற்றி பேசுகின்ற சில தலைவர்கள் யாராக இருந்தாலும்-விவசாயிகள் போராட்டம் அந்த மாநிலத்தில் வேறு, இந்த மாநிலத்தில் வேறு என்று பேசுவது உண்மை யல்ல, அதை யார் பேசினாலும் அது உண்மைக்குப் புறம்பானது என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டி ருக்கிறேன். அரசியல் கட்சிகளுக்கு அப்பாலே அல்லது அரசியல் கட்சிகளுக்கு எதிராக விவசாயப் போராட்டம் நடக்கிறது என்ற காரணத்தினால் எதிர்க்கட்சிகள் எல்லாம் போய் கலந்து கொள்கிறார்கள் என்பதை இந்திய நாட்டினுடைய தலைமை அமைச்சர் இந்திரா காந்தி அம்மையார் சொன்னதை நினைவு படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். மராட்டியத்திலே எதிர்க் கட்சிகள் எல்லாம் சேர்ந்து போராட்டத்திலே குதித்தார்கள். ஆனால் அங்கே விவசாயப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கி நடத்திக் கொண்டிருக்கிற சரத் ஜோஷி அரசியல் கட்சிகளுக்குத் தெரியாமலேயே நேரடியாக முதல்வருடன் பேச்சு வார்த்தை

நடத்தி முடிவுக்கு வந்திருக்கிறார். அதற்குக் காரணம் என்ன? விவசாயிகளுடைய கோரிக்கைகளை அரசியல் கட்சிகள் தங்கள் சுய லாபத்திற்குப் பயன்படுத்திக் கொள்வதை அவர் உணர்ந்தார். அதனால் கட்சிகளைக் கண்டு கவலைப்படாமல், நேரடியாக முதல்வரிடம் சென்று பேசி எதை எதை பெற முடியுமோ அதைப் பெறுவதற்கு முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டிலே இருக்கிற ஒரு சங்கம் அதை உணர்ந்த தாகத் தெரியவில்லை.

மின் கட்டணத்தைப்பற்றி எல்லோரும் பேசிக் கொண்டிருக்கிறோம். எல்லா விவசாயச் சங்கங்களோடும் முதலமைச்சர் அவர்கள் கலந்து பேசினார்கள் அரசு எல்லா கட்சிகளோடும் கலந்து ஆலோசித்தது அதனுடைய முடிவு தான் 1 ப்ளஸ் 1 என்பது. அதை எல்லோரும் ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் நாயுடு சங்கம் மட்டும் அதை ஏற்க மறுத்து விட்டு வரி கட்ட மாட்டோம், பாலில் உப்பைப் போடுவோம், நகரத்திற்கு போகும் காய்கறிகளை தடுப்போம் நிலத்தை தரிசாகப் போடுவோம் என்று பகிரங்கமாக அறிவித்தும் மிரட்டியும் செயல்படுத்தியும் வருவதை எந்த அரசால் தாங்கிக் கொள்ள இயலும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எந்த அரசாங்கம் இருந்தாலும், இந்திரா காங்கிரஸ் அரசாக இருந்தாலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அரசானாலும் வேறு எந்தக் கட்சி ஆட்சியானாலும் இப்படிப்பட்ட செயல்களை மிரட்டல்களை தாங்கிக் கொள்ள முடியாது. வன்முறை என்று வருகிற நேரத்திலே சில தவிர்க்க முடியாத நேரத்தில் குறைந்த பட்ச நடவடிக்கைகள் தான் நம்முடைய அரசால் எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதை மிகவும் பெரிதுபடுத்தி வருகிறார்கள். நான் எதிர்க் கட்சிக்காரர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் ஆளுங்கட்சியாக இருந்த போது ஏற்பட்ட சூழ்நிலைகளை மறந்து விடக் கூடாது அவர்கள் ஆட்சி செய்த போதுதான் துப்பாக்கிப் பிரயோகங்கள் ஏற்பட்டன. அப்போது விழுந்துவிட்ட பிணங்களை நான் இந்த நேரத்திலே அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

நமக்கு இருக்கிற சிறிய ஆதாரத்தை வைத்துக் கொண்டு அதிக ஆதாரம் இல்லாத நிலையிலே 60 கோடி ரூபாய்க்கு மேலாக விவசாயிகளுக்கு கடன் ரத்து கொடுத்திருக்கிறோம். இது மிகப் பெரிய சாதனையாகும்.

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்று அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அப்படிப்பட்ட வழியில் வருகின்ற புரட்சித் தலைவர் அவர்கள் 60 கோடி ரூபாயை ஏழை, நடுத்தர விவசாயிகளுக்கு அளித்து இருக்கிறார்கள் அதனால் நன்மை பெற்றிருக்கின்ற பத்து இலட்சத்திற்கு மேலான ஏழை விவசாயிகள் நிச்சயமாக நம்முடைய



அரசை வாழ்த்துகிறார்கள். ஆனால் சில பேர் இந்தச் சங்கத்தினர்மீது நடவடிக்கை எடுத்ததை ஆதாரமாக வைத்துக் கொண்டு அதன் காரணமாக இலாபம் தேடிக் கொள்ளலாம் என்று முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகம் அந்தக் காரியத்தைச் செய்து கொண்டிருக்கிறது. யார் உண்மையான நண்பன் என்பதை நிச்சயமாக விவசாயிகள் புரிந்து கொள்வார்கள். அவர்களை நீண்ட நாட்களுக்கு ஏமாற்ற முடியாது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் சதியை அவர்கள் முறியடிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது, அவர்கள் வீசுகின்ற வஞ்சக வலையில் விவசாயிகள் விழ மாட்டார்கள் என்று நான் எதிர் பார்க்கிறேன்.

மின்சார உற்பத்தி தமிழகத்திற்கு மிகமிக முக்கியமானதாகும். ஒரு காலத்தில் மின்சாரம் தொழில்களுக்கு மட்டும்தான் என்று இருந்த நிலைமை மாறி பெரும்பாலும் இன்றைக்கு விவசாயமும் அதை நம்பித்தான் இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட நேரத்தில் மின்சார உற்பத்தியை நம்முடைய தமிழகத்திலே அதிகரிப்பதற்கு எடுக்கப்படுகின்ற முயற்சிகளை நான் பராட்டுகிறேன். அதே நேரத்தில் கல்பாக்கம் அணு மின் நிலையத்தைப் பற்றி நீண்ட நாட்களாக நாம் கேள்விப்பட்டுக் கொண்டேயிருக்கிறோம். நான் பாராளுமன்றத்திலே 1970—71 ஆம் ஆண்டு நேரத்தில் அது துவக்கப்படும் என்று பதிலை அப்பொழுது நான் பெற்றேன். பத்தாண்டுக் காலம் கழித்துப் பார்க்கிறேன், கல்பாக்கம் அணுமின்நிலையம் அதே நிலையில் இருப்பதாகத் தான் இருக்கிறது. எனவே, இதை எல்லாக் கட்சிகளும் சேர்ந்து வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதைப் போலவே நெய்வேலியிலிருந்து இன்றைக்குத் தமிழ் நாட்டிற்கு அளிக்கப்படும் பங்கையும் இன்னும் உயர்த்த வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வளவு கஷ்டங்களுக்கிடையில், மின்சாரத்தைப் பக்கத்து மாநிலத்திலேயிருந்து அதிக விலை கொடுத்து வாங்கி குறைந்த விலைக்கு மின்சாரத்தை நாம் தமிழ்நாட்டு விவசாயிகளுக்குக் கொடுக்கிறோம். 12 அல்லது 14 காசுக்கு ஒரு யூனிட் மின்சாரத்தைக் கொடுப்பது என்பது இந்தியாவிலேயே நம்முடைய அரசு தான் என்பதை நாம் பெருமையாகச் சொல்லிக் கொள்ள முடியும். சில பேர் சொல்கிறார்கள், இதைவிடக் குறைவான கட்டணத்தில் சில தொழில்களுக்குக் கொடுக்கப்படுகிறது என்று. அது, அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற மின்சாரத்திற்கான கட்டணத்தை உயர்த்தலாம் என்பதற்கான வாதமே தவிர, விவசாயத்திற்குக் கொடுக்கப்படுகின்ற மின் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்பதற்கான வாதம் அல்ல என்பதை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

தொழில் துறை அமைதியைப் பொறுத்தவரையில் இன்றைக்குத் தமிழ் நாட்டிலே தொழிலாளர்களுக்குச் சாதகமாக அரசு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைச் சொல்ல வேண்டும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், போக்குவரத்துத் துறை தொழிலாளர்களுக்கு இதுவரையில் இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் கொடுக்காத அளவிற்கு அதிக சம்பளத்தை—ஊதியத்தை நம்முடைய அரசு கொடுத்திருக்கிறது. அதைப்போல, மின்வாரியமானாலும், போக்குவரத்துக் கழகமானாலும் அல்லது வேறு எந்தப் பொதுத்துறை நிறுவனமானாலும் தொடர்ந்து நஷ்டத்தில் நடந்து கொண்டிருக்க முடியாது. திடீர் திடீர் என்று வேலை நிறுத்தமும் செய்யக் கூடாது. அதிலும் குறிப்பாக பொதுமக்களின அன்றாட வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து இருக்கின்ற சேவை நிறுவனங்கள் வேலை நிறுத்தம் செய்வது என்பது மக்களைப் பெரிதும் பாதிக்கும்; ஆகவேதான், அவ்வப்பொழுது அவசரச் சட்டங்களின் மூலமாகச் சில அதிகாரங்களை அரசு பெற வேண்டியிருக்கிறது. அதைப்பற்றிக்கூட நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரவர்கள் பேசியிருக்கிறார்கள். எம்.ஜி.ஆர். அவசரச் சட்டம் போடுவார், ஆனால் அதை அவர் நிறைவேற்ற மாட்டார். போராடினால் பணிந்து விடுவார் என்றெல்லாம் கிராம அதிகாரிகள் மாநாட்டிலே எதிர்க் கட்சித் தலைவரவர்கள் பேசியிருக்கிறார்கள். தன்னையறியாமலேயே முதல்வரவர்களுக்கு அவர்கள் பாராட்டு தெரிவித்திருக்கிறார்கள் என்றுதான் நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். காரணம், மெல்லக் கடிவதும், மிரட்டுவது போல் நடிப்பதும், வளைந்து கொடுப்பதும் ஜனநாயக ஆட்சியினுடைய சிறப்புகளே தவிர, மக்கள் ஆட்சியினுடைய பலவீனம் அல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்ற பிடிவாதப் போக்கு ஜனநாயகம் ஆகாது, அது சர்வாதிகாரத்தின் பாற்படும்.

Democracy is not only a form of Government, but a way of life என்று நாம் அடிக்கடி பெரியவர்கள் சொல்ல கேள்விப்பட்டிருக்கிறோம். அப்படி ஜனநாயகத்தை வாழ்க்கையின் அடித்தளமாகக் கொண்டு இருக்கின்ற நம்முடைய முதல்வர் அவர்கள் அவசரச் சட்டங்களைப் போட்டாலும் அதைப் பயன்படுத்துவது இல்லை என்பதை அவர்களுக்கு நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

பக்கிங்காம் அன்ட் கர்நாட்டிக் ஆலை மூடப்பட்டிருப்பதையும், அதனால் ஏறத்தாழ 13,000 பேர் வேலையிழந்து இருப்பதையும் நாம் அனைவரும் அறிந்து கவலைப்படும் ஒன்றாகும். மைய அரசு இதை எடுத்து நடத்துவதிலே மாநில அரசுக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை; அவர்கள் எடுத்து நடத்தினால் ஒத்துழைப்போம். ஆனால் அந்த ஆலையைப் பொறுத்தவரை-





யில் எப்படி அதை இலாபகரமாக நடத்துவது என்பதுதான் பிரச்னை. நிர்வாகத்தை மாற்றியமைப்பதால் அங்கே ஒன்றும் செய்ய முடியாது. ஏற்கனவே அந்த ஆலை நிர்வாகத்தில் பொதுத் துறையிலே இருக்கின்ற பேங்குகள் நிறையப் பணத்தைப் போட்டிருக்கிறார்கள்; நிர்வாகத்தில் அவர்கள் இருக்கிறார்கள். மைய அரசும், மாநில அரசும், பக்கத்தில் உள்ள கர்நாடகத்தின் பிரதிநிதிகளும் அதன் நிர்வாகத்திலே இருக்கிறார்கள். எனவே, நிர்வாகத்தை மாற்றியமைப்பதால் மட்டும் பிரச்னை தீர்ந்து விடாது.

[முற்பகல் 11—00]

நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைவர் திரு. பி. இராமமூர்த்தி அவர்கள் இதிலே பெரு முயற்சி எடுத்து, சம்பந்தப்பட்ட அமைச்சர் திரு. பிரானாப் குமார் முக்கர்ஜி அவர்களோடு பேச்சு வார்த்தை நடத்துவதாக நான் அறிகிறேன். அது வெற்றி பெற வேண்டுமென்று நான் விரும்புகிறேன். தொழிற் சங்கங்களும், நம்முடைய மாநில அரசும், மைய அரசும் கலந்து பேசி, ஒரு முடிவுக்கு வந்து, ஒரு நல்ல முடிவை அறிவிக்க வேண்டுமென்று இந்த மாமன்றம் எதிர்பார்க்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நேரத்தில், பக்கிங்காம் அண்ட் கர்நாட்டிக் மில் தொழிலாளர்களுக்கு எதிராக இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்ற பொய்ப் பிரச்சாரத்தில் இறங்கியிருப்பவர்களை நிச்சயமாகத் தொழிலாளர் உலகம் வெறுத்து ஒதுக்கும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தொழில் மையத்தைப் பொறுத்த வரையில், பண்டித நேருவின் காலத்திலே, தொழில் கொள்கை அறிவிக்கப்பட்டது, மைய அரசால். அப்பொழுது பொதுத் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, பெரிய தொழில்களுக்கு நிறைய பணம் செலவிடப்பட்டது. அதற்குப் பின்னாலே, ஜனதா அரசு வந்த பொழுதுதான் தொழில் கொள்கையிலே ஒரு மாறுதல் ஏற்பட்டது. அவர்கள் டிஸ்ட்ரிக்ட் இண்டஸ்ட்ரியல் சென்டர் என்ற விதமாக, டி.ஐ.சி. பெயரிலே பெரிய தொழிலுக்கு இருந்த முக்கியத்துவத்தைச் சிறுதொழிலுக்கு மாற்றினார்கள். ஆனால், இப்பொழுது வந்திருக்கிற புதிய மைய அரசு இதுவரையிலே தன்னுடைய கொள்கையை அறிவிக்கவில்லை. சீக்கிரம் அறிவிக்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன். அப்படி அறிவிக்கும் போது, சுமார் ரூ. 100 கோடிக்கு உட்பட்ட மூலதனம் உள்ள தொழில்களை ஆரம்பிக்கின்ற உரிமையை வழங்குகின்ற அதிகாரம் மாநில அரசுகளுக்கே இருக்க வேண்டும் என்பதையும் நான் வலியுறுத்த விரும்புகிறேன். சிறு தொழில் என்பதற்கு இப்பொழுது

ரூ. 25 இலட்சம் மூலதனம் என்று மைய அரசு உயர்த்தியிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில், ஏற்கனவே நான் சொன்னதனுடைய அடிப்படையில், தொழில் கொள்கையை மைய அரசு அறிவிக்கும்போது, புட் ப்ராசஸிங் இன்டஸ்ட்ரீஸ், கன்ஸ்யூமர் ஓரியன்டட் இன்டஸ்ட்ரீஸ் மற்றும் கூட்டுறவுத் தொழிற்சாலைகளுக்கென்று லைசன்ஸ் வழங்குகின்ற அதிகாரத்தை மாநில அரசுக்குக் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுப்பதுதான் தொழில் வளத்தை மேலும் அதிகப்படுத்த உதவும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய மாநிலத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்ற ஒரு திட்டம் தன்னிறைவு திட்டமாகும். செல்ப் சபிஸியன்ஸி ப்ரோகிராம் ஏழைகளின் ஆட்சியாக இருக்கிற இந்த ஆட்சி— சுதந்திரம் பெற்று 33 ஆண்டுகளுக்குப் பிறகும், இன்னும் பல கிராமங்களில் குடிநீர் கிடையாது. சாலை வசதி கிடையாது. பள்ளிக்கூடக் கட்டிட வசதி கிடையாது என்ற அந்தக் குறையைப் போக்குவதற்காகத் தன்னிறைவுத் திட்டத்திலே இன்னும் ஓராண்டு காலத்திற்குள்ளாக தமிழகம் முழுவதும் இருக்கின்ற எல்லா ஒன்றியங்களிலும் என்ன, என்ன குறைகள் இருக்கின்றனவோ, அந்தக் குறைகளைப் போக்குகின்ற திட்டத்தை போர்க்கால அடிப்படையிலே செய்து கொண்டிருக்கிறது. வேறு எந்த மாநில அரசும் செய்யாத அளவிற்கு இந்தத் தன்னிறைவு திட்டத்தை நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். அதை மத்தியிலே திட்ட அமைச்சராக இருக்கிற திரு. என்.டி. திவாரி இங்கே வந்தபொழுது, அதைப் பார்த்து, தன்னிறைவுத் திட்டத்தை நிறைவேற்றுவதில், மற்ற மாநிலங்கள் தமிழ்நாட்டைப் பின்பற்ற வேண்டுமென்று சொல்லியதை நான் இந்த மாமன்றத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

துணைத் தலைவர் அவர்களே, அண்மையிலே, கொஞ்சகாலமாக, சிலநாட்களாக, எல்லாருமே வடிசால்களைப் பற்றியும், ஸ்பிரிட், எரி சாராயத்தைப் பற்றியும் எழுதிக் கொண்டிருக்கிறார்கள், அல்லது பேசிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் சுமார் 8 வடிசால்கள் இருக்கின்றன. நம்முடைய மது விலக்குக் கொள்கையின் காரணமாக, நான் ஐ.எம்.எப்.எல். தயாரிக்கவில்லை, மது பானங்களைத் தயாரிக்கவில்லை. வெளி மாநிலத்திற்கு இது தேவைப்படுகின்ற காரணமாகத் தான், இன்றைக்கு சாராயம் கடத்தப்பட்டது என்றும், அல்லது கோடிக் கணக்கிலே ஊழல் நடந்து விட்டது என்றும் எல்லோருமே எழுதிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு முன்னாலே, 1976ஆம் ஆண்டு அன்றிருந்த மாநில அரசு, திரு. சதாசிவம் தலைமையிலே ஒரு குழுவை அமைத்தது. அக்குழு, 1977ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதத்தில் ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்தது. அதிலே ஒரு பகுதியை உங்களுக்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.





'எரி சாராய உற்பத்தி ஆலைகள் மீது மாநில அரசு கண் வைத்து கவனமாகச் செயல்படுவதாகக் கூறப்படுகிறது. கரும்புக் கழிவு ஒதுக்கீட்டை ஒழுங்குபடுத்தும் அதிகாரம் மாநில அரசுக்கு இருப்பதாகவும் கூறப்படுகிறது. கலால் வரியை வசூலிக்கவும், லைசென்ஸ் கொடுக்கவும், ஏற்றுமதி இறக்குமதியை ஒழுங்குபடுத்தவும், கணக்குகளை சரி பார்க்கவும் மாநில அரசுக்கு அதிகாரங்களும் அமைப்பும் இருக்கின்றன என்றும் கூறப்பட்டது.

இருந்தாலும் கடந்த 6 ஆண்டுகளில் 1977-லே சொன்னார்கள் அப்பொழுது: எதிர்க்கட்சித் தலைவர் முதல்வராக இருந்த காலத்தைக் குறிப்பிட்டார்கள்— இருந்தாலும் கடந்த 6 ஆண்டுகளில் இந்த ஆலைகள் கள்ளச் சாராய உற்பத்தி விநியோகத்தில் பெரும் பங்கு பெற்றிருந்தன என்பதற்கான சாட்சியங்கள், ஆதாரங்கள் இந்தக் கமிட்டி முன்பு சமர்ப்பிக்கப்பட்டன என்பது வேதனை தரும் விஷயமாகும்' என்று சதாசிவம் குழு தனது அறிக்கையிலே சொல்லியிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்தின் நினைவிற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

இன்றைக்கு நிலைமை ஒரே லைசன்சை பலமுறை முறைகேடாகப் பயன்படுத்தியும், போலி லைசன்சுகளை தயாரித்தும் மாநில அரசுக்கு விற்கவேண்டியதை கள்ளமார்க்கட்டில் வெளியாருக்கு அதிக விலைக்கு விற்றும், லைசன்சு வாங்கியதற்கு மாறாக மூலப் பொருள்களை கள்ளமார்க்கட்டில் விற்றும் சிலபேர்கள் கோடிக்கணக்கிலே கொள்ளை அடித்திருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது. இதிலே பலபேர் உடந்தையாக இருந்ததாகச் சொல்லியிருக்கிறார்கள், எழுதியிருக்கிறார்கள். இது என்ன என்பதை நம்முடைய மாநில அரசு முழுமையாக விசாரணை நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். விசாரணை நடத்தினால் மட்டும் போதாது. வழக்கமாக நம்முடைய நாட்டில் விசாரணை நடக்கும். ஆனால் அதற்குப் பிறகு என்ன நடக்கிறது என்று யாருக்கும் தெரியாது. நடவடிக்கை எடுக்கவேண்டும் இதிலே பராபட்சம் இல்லாமல், தயவுதாட்சண்யம் காட்டாமல், யார், எந்தக் கட்சியை என்ற கவலைப்படாமல் நம்முடைய முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இதே தைரியம் எதிர்க்கட்சியினருக்கும் இருக்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

நம்முடைய ஆளுநர் அவர்கள் தம்முடைய உரையில் மதுவிலக்கைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மதுவிலக்கைப் பற்றி இந்த மன்றத்தில் இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை மனம் திறந்து தெரிவிக்கவேண்டும் என்று ஆளுநர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். இது

கொஞ்சம் கஷ்டமான காரியம்தான், அதுவும் மதுவிலக்கைப் பற்றி மனம் திறந்து பேசவேண்டும் என்பது. ஆனாலும் மதுவிலக்கு இதுவரையில் நடைமுறையிலே இருந்துவந்ததை நினைவிலே கொண்டும், நம்முடைய நிதி ஆதாரங்களை நினைவிலே கொண்டும் இந்த மாமன்றம் முடிவெடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். எனக்கு ஞாபகம் இருக்கிறது. 1973-ஆம் ஆண்டு அன்றைக்கு ஆட்சியிலே இருந்த இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மதுவிலக்கை ஒத்திவைக்கிறேன் என்பதற்கான காரணங்களை எல்லாம் சொல்லி அன்றைக்கு மதுவிலக்கை ஒத்திவைத்தார்கள். அன்றைக்கு என்ன காரணங்களைச் சொல்லி ஒத்திவைத்தார்களோ, அதே காரணங்கள் இன்றைக்கும் பொருந்தும் என்று நான் எதிர்பார்க்கிறேன். சுமார் 200 கோடி ரூபாய் வருமானத்தை இந்த அரசாங்கம் இழக்கக் கூடாது என்று நான் எதிர்பார்க்கிறேன். இன்றைக்கு யார் யார் கடத்துகிறார்களோ அவர்களுக்கு, அவர்கள் கடத்துவதற்கு, இன்றைக்கு இருக்கிற நம்முடைய மதுவிலக்குக் கொள்கை அவர்களுக்குச் சாதகமாக இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. ஆக இவைகளை எல்லாம் கருத்திலே கொண்டு நாம் முடிவெடுக்கவேண்டும் என்று கருதுகிறேன்.

மதுவிலக்கு என்பது சிறந்த கொள்கைதான். அதை நிறைவேற்ற வேண்டும் என்று முதல்வர் அவர்கள் எவ்வளவோ துடித்துக் கொண்டு இருக்கிறார்கள். அதில் அவருக்கு முழு ஒத்துழைப்பும் நம்முடைய தமிழ்நாட்டில் அவருக்குக் கிடைக்கவில்லை என்று நான் கருதுகிறேன். மதுவிலக்கை காந்தி அடிகளின் கொள்கை என்று தமிழ்நாட்டிலே பெயரளவிலே சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால் இந்தியாவிலே இருக்கிற மற்ற மாநிலங்களிலே எல்லாம் மகாத்மாகாந்தி அடிகளின் பெயரைச் சொல்லிக் கொண்டிருக்கிற யாரும் அதை மறந்துவிட்டார்கள். அதை நிறைவேற்றவில்லை. அப்படி இருக்கும் போது நாம் மட்டும் தனியாக எவ்வளவு கஷ்டப்படப் போகிறோம் என்பதை மனதிலே கொண்டு அதை முடிவு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இங்கே நான் பார்க்கும்போது நம்முடைய மாமன்றத்திலே இருக்கின்ற பெரும்பான்மையான உறுப்பினர்களின் கருத்து, காலவரம்பின்றி ஒத்திவைக்கவேண்டும் என்பதாகத்தான் இருக்கும் என்று நான் கருதுகிறேன். அநேகமாக இதிலே எதிர்ப்பே இருக்காது என்று நான் எதிர் பார்க்கிறேன். இதிலே முடிவெடுக்கும் பொறுப்பு முதல்வர் அவர்களுக்கு இருக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நான் முடிவாகக் கூற விரும்புகிறேன், துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாட்டிலே நல்ல ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. தூய்மையான ஆட்சி நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. ஆனாலும் ஒரு ஆட்சிக்கு நல்ல எதிர்கட்சித் தேவை.



"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்"

என்று வள்ளுவப் பெருந்தகை சொல்லி இருக்கிறார். ஆகவே நல்ல ஆட்சியாக இருந்தாலும் குறைகளைச் சுட்டிக்காட்ட ஒரு எதிர்கட்சித் தேவை, ஆக்கபூர்வமான யோசனைகளைச் சொல்லுகின்ற ஒரு எதிர்கட்சி நிச்சயமாகத் தமிழ்நாட்டுக்குத் தேவை. நான் பாராளுமன்றத்தில் ஒரு காலத்தில் இருந்தபோது, அன்றைக்கு இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொறுப்பைப் பற்றி ஒரு தேசிய இதழ் குறிப்பிட்டதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். 'The DMK Party functions with [illegible] and [illegible]' அந்த தேசிய பத்திரிகை அப்படி எழுதியிருந்தது. அன்றைய நிதானமும் கண்ணியமும் இன்றைய எதிர்க்கட்சிக்கு குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தேவை என்று எதிர்பார்க்கிறேன். நம்முடைய எதிர் கட்சித் தலைவர் அவர்கள் மிகவும் திறமை பெற்றவர். உழைக்கக் கூடியவர்கள். அந்தத் திறமையும் உழைப்பும் அவருடைய விரக்தியின் காரணமாக வீணாகப் போய்விடுகிறது என்பதை என்னாலே சொல்லாமல் இருக்க முடியவில்லை. அந்த விரக்தியையும், விளைவையும் அவர்கள் போக்கி, காழ்ப்பை அகற்றிச் சொஞ்சம் பெருந்தன்மையோடு நடந்து கொள்வார்களானால்-நான் எதையும் எதிர்ப்பேன், எதிலும் எதிர்ப்பேன்-என்று சொல்லாமல் இருந்தாரானால், நாட்டிலே அவர்களுடைய செல்வாக்கு அதிகமாக இருக்கும் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த மாமன்றத்திற்கு அப்படிப்பட்ட பெருந்தன்மை படைத்த ஒரு எதிர்க்கட்சித் தலைவர் தேவை. நம்முடைய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அந்தத் தேவையைப் பூர்த்தி செய்வார்கள் என்ற என் விருப்பத்தைத் தெரிவித்து நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

[முற்பகல் 11-10]

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, பொதுவாக கவர்னர் உரையில் அரசாங்கத்தின் நடைமுறைக் கொள்கைகள் இடம் பெறும் என்றாலும், என்னுடைய அருமைச் சகோதரர் விஸ்வநாதன் அவர்கள் சொல்லியதுபோல், மதுவிலக்குக்கொள்கையில் மாண்புமிகு முதலமைச்சருடைய ஆட்சி என்ன செய்கிறது. என்ன செய்யப் போகிறது என்பதை எடுத்துச் சொல்லாமல், ஏதோ மன்றத்தில் இருக்கும் அத்தனை பேரும் ஒன்றாக ஒரே மாதிரியாகத் தீர்மானத்தை உருவாக்கி, ஏற்கனவே திறந்து விடப்பட்டு இருக்கும் மதுக் கடைகளை நடத்தப்படக்கூடிய மதுக் கடைகளை—லீகலைஸ்—செய்யாலாம் என்ற அளவிலே கவர்னர் உரையில் வாசகம் இருக்கிறது என்று அவர்கள் சொன்னார்கள். உடனடியாக நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர்களிலே

ஒருவரான திரு. இளையபெருமாள் அவர்கள் இந்தச் சபையின் மொத்தக் கருத்து அது அல்ல என்று ஆணித்தரமாகச் சொன்னார்கள். அவர்களை நான் பாராட்டுகிறேன்.

பொதுவாகப் பேசுகின்ற சமயத்தில், நம்முனடைய நண்பர் விஸ்வநாதன் அவர்கள் கடைசியில் திராவிட முன்னேற்றக்கழகத்திற்குச் சிறந்ததொரு அறிவுரையை வழங்கி இருக்கிறார்கள். எப்படி அந்தக் கழகம் இருக்கவேண்டும், அது எப்படி நடைபெற வேண்டும் என்று சொன்னதற்கு—அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குச் சென்று இருந்தாலும்—அவரை எங்களால் பாராட்டாமல் இருக்க முடியவில்லை அவர் எங்கேயிருந்தாலும் அவர் மாண்புமிகு முதலமைச்சர் கட்சியில் இருந்தாலும், தாய்க்கழகமான முன்னேற்றக் கழகம் நல்லபடியாக இருக்கவேண்டும் என்று—அதாவது புகுந்த வீட்டிற்குச் சென்ற மருமகள் தாய்வீடு நல்லபடியாக இருக்கவேண்டும் என்று நினைப்பதுபோல் அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். அவர்களைப்போன்றவர்கள் நிறைய பேர்கள் மாண்புமிகு முதலமைச்சர் கட்சியில் இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். அப்படிப்பட்டவர்கள், இந்த முன்னேற்றக்கழகம் நல்லபடியாக இருக்கவேண்டும் என்று வாழ்த்துரை வழங்குபவர்கள் அடிக்கடி அவரது தலைமையில் நடக்கும் ஆட்சியில் ஏற்படும் குறைபாடுகளையெல்லாம் எங்கள் மூலமாக வெளிக்கொணர்வதற்கு உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் முன்னேற்றக்கழகத்திற்கு நல்ல பெயர் வரும். அப்படிப்பட்ட உதவிகளை திரு. விஸ்வநாதன் போன்றவர்கள், எங்கள் கட்சியில் இருந்து அண்மையில் அங்கே சென்று இருக்கும் தியாகிகள் எங்களுக்குச் செய்து கொண்டு இருக்கிறார்கள், அப்படிச் செய்வதற்குத்தான் அவர்கள் அங்கே சென்று இருக்கிறார்கள். அந்தப் பணியை அவர்கள் தொடர்ந்து செய்யவேண்டும் என்று நான் பிரார்த்திக்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே................

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: நான் உங்களைச் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர் என்ன சொல்ல வருகிறார் என்பதைக் கேளுங்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: இப்படி குறுக்கிட்டுப்பேசுவது முறையல்ல.





மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்ற நேரத்தில் மரியாதை குறைவான வார்த்தைகளை உபயோகித்து இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: நான் மரியாதை குறைவான வார்த்தை எதையும் சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அது என்ன என்பதை நான் சொல்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: நீங்கள் அப்படிச் சொல்வதாக இருந்தால், துணைச் சபாநாயகர் அவர்கள் மரியாதை குறைவான வார்த்தைகளைப் பேசுவதற்கு அனுமதித்ததுபோல் அர்த்தமாகிவிடுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர் என்ன சொல்கிறார் என்பதைக் கேட்டுவிட்டுப் பேசுங்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: என்னுடைய பேச்சுக்கு இது 'அப்ஸ்ட்ரக்ஷன்' இல்லையா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இந்த மன்றத்தைப் பொறுத்தவரையில், எந்த உறுப்பினராக இருந்தாலும் மற்றவர்களுக்கு மரியாதை கொடுத்துப் பேசுவது வழக்கம். ஆனால் இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சர் அவர்களைக் குறிப்பிடுகிறபோது—மாண்புமிகு முதலமைச்சர் பெயரைச் சொல்லி கூறிவருகிறார்கள். அவர் இப்படித் தொடர்ந்து சொல்லிக்கொண்டு வந்தால், நாங்களும் எதிர்க்கட்சித் தலைவரின் பெயரைச் சொல்லி அழைக்கும் நிலைமையேற்படும். ஆகவே, நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். தயவு செய்து நல்ல மரபைக் கடைபிடிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி: எதிர்கட்சித் தலைவரை என்னென்னவோ சொல்லி அழைத்தாகி விட்டது. பெயரைச் சொல்லி அழைத்தால் வருத்தப்படப்போவது இல்லை.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: வெளியே பேசுகிறபோது நாம் எப்படி வேண்டுமானாலும் பேசலாம். இந்த மன்றத்தில் பேசுகிறபோது, மரபைக் கடைபிடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கிருஷ்ணமூர்த்தி பேசும்போது பெயரைச் சொன்னார்கள். அப்படிச் சொல்லக் கூடாது என்று நான் சொல்ல நினைத்தேன். அதை மாண்புமிகு அமைச்சரவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : * * * ஆட்சி என்று சொன்னேன். * * * ஆட்சி இல்லாமல் கலைஞர் ஆட்சியா நடக்கிறது ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பெயரைச் சொல்ல வேண்டாம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : ஏன் சொல்லக் கூடாது ? நான் தி.மு.க.வில் ரொம்ப நாள் இருக்கிறேன். அப்படித்தான் அவரை * * * என்று சொல்லி பழக்கமாகிவிட்டது. அது அன்பின் காரணமாக சொல்லப்படுகிறதே அல்லாமல் வேறு அல்ல. நீங்கள் வேண்டுமானால் பொன்மனச் செம்மல் என்றோ வேறு வகையிலோ சொல்லிக் கொள்ளுங்கள்.

டாக்டர் மு. கருணாநிதி : நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்குச் சொல்கிறேன். இங்குள்ள அமைச்சர்களைச் சொல்லும்போது மாண்புமிகு என்று சொல்வதுதான் மரபு ; அப்படி அழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : அவர்மீது உள்ள அன்பின் காரணமாகத்தான் அப்படிச் சொல்கிறேன். அவரை * * என்று சொல்கிறேன் ; அதைப் போல * * என்று சொல்கிறேன் ; அவர்களும் ஆட்சேபிக்க மாட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பெயரைச் சொல்ல வேண்டாம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கட்சியில் இருந்து கொண்டு, எங்கள் கட்சி நல்ல முறையில் நடக்க வேண்டுமென்று சொன்ன ஆலோசனைகளுக்கு, நான் ஏற்கனவே சொன்னதைப் போல இப்படிபட்ட உதவிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் * * * என்று சொல்வதில் "டிஸ் ரெஸ்பெக்ட்" ஒன்றும் இல்லை. காரணம் என் பேரில், அவருக்கு இருக்கின்ற அன்பும், அவர் பேரில் எனக்கு இருக்கின்ற அன்பும்தான் இந்த உரிமைப் தனியானது. அவர் சினிமாவிலே நடித்த படங்களை

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





எல்லாம் பார்த்து, பார்த்து, அவர் யார் யாருடன் நடிக்கிறாரோ அவர்களோடு * * * எப்படியெல்லாம் நடிக்கிறார் என்று நான் பாராட்டியிருக்கிறேன் ; அவர் நடிக்கின்ற பண்பை, சிறந்த நடிப்பை பாராட்டியிருக்கிறேன். ஆகையால் நான் அவரை "டிஸ் ரெஸ்பெக்ட்" செய்ய வேண்டுமென்ற முறையில் * * * என்று சொல்லவில்லை ; அன்பின் காரணமாகத்தான் சொல்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புரட்சி நடிகராக ..............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் "நேரடியாக சப்ஜெக்டில் பேசுங்கள். கொஞ்சம் திரித்து பேசுவதாக இருந்தால் "ஹவுஸ் ஸ்மூத்தாக" போகாது. நீங்கள் அவை மரபுக்கு ஏற்ப டைரக்டாகச் சொல்லுங்கள் ; இன்டைரக்டாகச் சொல்ல வேண்டாம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கட்சியிலே இருக்கக்கூடியவர்கள் இப்படிப்பட்ட நல்ல காரியங்களைச் செய்வதற்கு நான் முதற்கண் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நான் பேசுகின்ற சந்தர்ப்பத்திலே நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் இங்கே இருப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். இங்கே இல்லாவிட்டாலும், எங்கு இருந்தாலும் கேட்டுக் கொண்டிருந்தால் சரி. இல்லை என்றால் பேசியதைப் படித்துப் பார்ப்பார் என்று நம்புகிறேன்.

விவசாயிகள் பிரச்சனை பற்றி அருமை நண்பர்கள் எல்லாம் சொன்னார்கள். தமிழ்நாட்டிலே புரட்சித் தலைவர் ஆட்சி நடக்கிறது. இந்த நேரத்திலே தமிழ்நாட்டில் விவசாயச் சங்கங்கள்—நாராயணசாமி நாயுடு அவர்கள் தலைமையில் இருக்கிற சங்கமும், மற்ற சங்கங்களைச் சேர்ந்தவர்களும் போராட்டம் நடத்துகிறார்கள். அதை எல்லாம் நான் அதிகமாக விமரிசிக்க விரும்பவில்லை. நாங்கள் வரி கொடா இயக்கத்தை ஆதரிக்கவில்லை. முன்னாலே, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி நடந்தபோது தமிழக விவசாயிகள் சங்கம் ஆரம்பித்த வரி கொடா இயக்கத்தை எதிர்த்திருக்கிறோம். யார் ஆட்சியில் இருந்தாலும், நாங்கள் கவலைப்படவில்லை. நாங்கள் வரி கொடா இயக்கத்தை ஆதரிக்க மாட்டோம் என்று அப்போதே சொல்லியிருக்கிறோம். ஆனால், ஆட்சியில் இருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் ஆட்சி—அப்படி சொல்லலாம் அல்லவா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்தக் கிண்டல் வேண்டாம். நீங்கள் ஒரு வழக்கறிஞர் ; நானும் அந்த

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அளவுக்குப் படித்திருக்கிறேன். நீங்கள் சொல்லுகின்ற நோக்கம் எனக்குத் தெரியும். சொல்வதை அவை மரபுக்கு ஏற்ப நேரடியாகவே சொல்லுங்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எப்படி விவசாயிகள் பிரச்னையைச் சமாளிக்கின்றார்? எப்படி 35 கோடி ரூபாய் கட்டாமல் இருக்கும் பிரச்சனை வந்தது? அதன் பிறகு எடுத்த நடவடிக்கை என்ன? துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றதன் மூலமாக ஏற்பட்ட துர்பாக்கியம் என்ன? எட்டுக்கு மேற்பட்ட விவசாயிகள் இந்த அரசினுடைய போக்கின் காரணமாக, துப்பாக்கிப் பிரயோகத்தில் இறந்து இருக்கிறார்களே, அதை நான் சொல்லுவதா?

[முற்பகல் 11-20]

அதைப்போல விவசாயிகளின் பிரச்சினை சம்பந்தமாக பல்லாயிரக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டு அவர்களின் மீது தேசியப் பாதுகாப்புச் சட்டத்தை பிரயோகப்படுத்தினார்கள். அண்மையிலேதான் அவர்கள் வெளியிலே விடப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே விவசாயிகளின் பிரச்சினைகளைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு அரசாங்கம் சரியான முறையில் அதை அணுகவில்லை. அப்படி அணுகி இருந்தால் இந்தப் பிரச்சினை இந்த அளவுக்கு வந்திருக்காது. பலர் கைது செய்யப்பட்டு இருக்க வேண்டிய நிலைமையும் ஏற்பட்டிருக்காது, அவர்கள் சிறையிலே வாடியிருக்க வேண்டிய நிலைமையும் ஏற்பட்டிருக்காது.

இந்த சட்டமன்றத்திலே உணவு சம்பந்தமாக நடைபெற்ற விவாதத்திலே பேசுகின்றபோது அரிசி பேர ஊழல் சம்பந்தமாக நான் ஏற்கெனவே பேசினேன். பல கோடி ரூபாய் பெறுமானமுள்ள அரிசியை தமிழ்நாட்டிலே அன்றைய தினம் உணவு அமைச்சராக இருந்த அமைச்சர் அவர்களாலோ அல்லது அந்த அமைச்சரின் உதவியின் மூலமாகவோ வெளியிலே எடுத்துச் சென்று விட்டார்கள் என்ற பிரச்சினை வந்தது. அது சம்பந்தமான எஸ்டிமேட் கமிட்டியினுடைய முடிவு வந்தது. அதற்குப் பிறகு ஒரு என்கொயரி கமிஷனே இங்கே நடைபெற்றது. அப்படி நடைபெற்ற அந்த என்கொயரி கமிஷனிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலை என்ன? கம்யூனிஸ்ட் கட்சியினுடைய நிலை என்ன? அவைகளைப் பற்றியெல்லாம் ஏற்கெனவே சொன்னேன். அவைகளை மீண்டும் இங்கே சொல்வது சரியாக இருக்கும் என்ற காரணத்தால் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையில் அவர்கள் தாக்கல் செய்திருந்த அஃபிடவிட்டில் Having so manipulated to accumulate large stocks of rice in the said society, it is said that the Hon Food Minister entertained the idea of causing such accumulated stock to





be exported outside the State of Tamil Nadu for which purpose he entered into understanding with his close friends—Thiru Jambulinga Mudaliar and Thiru Rajamanickam Mudaliar. என்று சொன்னார்கள். இது ரைட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. அழகிரிசாமி அவர்களுடைய அன்றைய தின ஸ்டேட்மென்ட் (ரைட் கம்யூனிஸ்ட் கட்சி என்ற பெயரில் கட்சியே கிடையாது என்று பல குரல்கள் கேட்டன) அதாவது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய அன்றைய நிலை அது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அன்றைய தினம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலை என்ன? எமர்ஜென்சிக்குப் பிறகுதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், அதற்கு முன்பு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தான். ஆகவே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நிலை என்ன? அரிசிப் பேர ஊழல் சம்பந்தமாக விசாரணை செய்ய வேண்டும் என்று அன்றைய தினம் ஜனாதிபதியிடத்திலே புரட்சித் தலைவர் அவர்கள் அப்போது மனு கொடுத்திருந்தார்கள். அவர்களின் சார்பிலே முன்னாள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு. கண்ணன் அவர்கள் என்கொயரி கமிஷனிடம் அஃபிடவிட் தாக்கல் செய்தார்கள். The terms of reference to the Commission are scanned and the representaton says that on a strict interpretation of the terms of reference, the Commission of Inquiry is to find acts on a mutilated and maimed portion in the whole set up of misuse and abuse of power என்று சொன்னார்கள். அதாவது இந்த என்கொயரி கமிஷன் வெறும் கண்துடைப்பு விசாரணை என்று சொன்னார்கள். டெர்ம்ஸ் ஆஃப் என்கொயரி சரியாக பின்பற்றப்படவில்லை என்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே மதிப்பிற்குரிய திரு. கண்ணன் அவர்கள் அப்போது சொன்னார்கள். முன்னாள் உணவு அமைச்சர் அவர்கள் தனது ரிட்டன் ஸ்டேட்மென்டை பைல் செய்யும்போது—அன்றைய தினம் அவர் ஊழல் மந்திரியாக இருந்தவர்—அவர் மறுத்து சொல்லியிருக்கிறார். He denines that Rajamanika Mudaliar of Thiruvannamalai is a close associate of his. Though his son-in-law is a partner of Pandian Commercial Financial Corporation, he denies any joint venture as between Rajamanicka Mudaliar and his son-in-law. இது அன்றைய தினம் அவர் எடுத்த நிலை. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமாக மாறி ஆட்சிக்கு வந்த பிறகு, முன்பு நடத்திய விசாரணை வெறும் கண்துடைப்பு விசாரணை என்று

[திரு வி. கிருஷ்ணமூர்த்தி] [1981 ஜனவரி 23

சொல்லி ஆகையால் டெர்ம்ஸ் ஆஃப் என்கொயரியை என்லார்ஜ் பண்ணி விசாரணை செய்கிறோம் என்று விசாரணை செய்து இருந்தால் அது மிகவும் நன்றாக இருந்திருக்கும்.

என்ன செய்வார்களோ, எதுவுமே செய்யமாட்டார்களோ எனக்குத் தெரியாது. காரணம் என்னவென்றால் அன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தில் அவர் இருந்த சமயத்தில், கண்துடைப்பு, விசாரணையைத் தடுப்பதற்காக இப்படிச் செய்யப்படுகிறது என்று அப்போது சொன்னார்கள். அப்போது இருந்த ஸ்டேண்ட் அப்படி அதனால் அப்படி - முடிவு எடுத்திருக்கலாம். ஆனால் இன்றைய தினம் அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்து விட்டார்கள். அங்கே பொதுச் செயலாளராகவும் இருக்கிறார்கள். அதனால் அவர் மீது நடவடிக்கை எடுப்பார்களோ, எடுக்க மாட்டார்களோ, அதற்கு என்ன காரணமோ எனக்குத் தெரியாது. அதை விளக்க வேண்டிய பொறுப்பு நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்களுக்கு மெத்த இருக்கிறது என்று இங்கே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முடிந்து போன விஷயங்களைப் பற்றி ஏன் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? உங்களுக்கு அச்சடித்துக் கொடுத்திருக்கிறார்களே, ஆளுநர் உரை, அதில் இருக்கின்ற விஷயங்களில் எது தமிழகத்திற்குத் தேவை, எது தேவை இல்லை என்பதைப் பற்றி மட்டும் பேசுங்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : அதைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கிறேன். ஆளுநர் உரையில் அரிசி பேர ஊழல் சம்பந்தமாக அரசாங்கம் மேல் நடவடிக்கை எடுக்கும் என்பது பற்றி எதுவுமே குறிப்பிடாதது பற்றித்தான் நான் பேசிக் கொண்டிருக்கிறேன்.

இதிலே இன்னொன்று, இங்கே நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக கட்சியிலே இருக்கிறபோது ஊழல் பிடித்தவர்களாக இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் இந்தக் கட்சியை விட்டு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்தவுடன் எவ்வாறு அவர்கள் புனிதமானவர்களாக ஆக்கப்படுகிறார்கள் என்பது புரியாத புதிராக இருக்கிறது. அது எப்படி என்று எங்களுக்குத் தெரியவில்லை. எப்படி அவர்கள் நல்லபடியாக [illegible]றார்கள் என்று தெரியவில்லை....



1981 ஜனவரி 23] [திரு வி. கிருஷ்ணமூர்த்தி]

நான் இராமாயணம் படித்திருக்கிறேன். அதிலே மங்கள சுலோகம் என்று சொல்வார்கள்.

"மங்களம் கோசலேந்த்ராய மகனீய குணாத்மனே
சக்ரவர்த்தி தனுஜாய சார்வபவுமாய மங்களம்"

என்று ஆரம்பிப்பார்கள். பிறகு மாவிலையைத் தண்ணீரில் தோய்த்து "கங்கா ஸ்நான பிராப்தி ரஸ்து" என்று மூன்று தடவை தண்ணீரை தலையில் வைத்துவிட்டு புனிதமாக ஆகிவிட்டதாகச் சொல்வார்கள். அதே போல் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் புனித தன்மையை கொடுப்பதற்கு ஏதாவது வழி வைத்திருக்கிறார்களா என்று தெரிந்தால் மிகவும் நலமாக இருக்கும்...............

திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, புனிதமாக்குவதைப் பற்றிச் சொன்னார்கள். ஏதோ மந்திரத்தைக் கூட சொன்னார்கள். அதே மந்திரத்தைப் போட்டுத்தான் மனோகரன் அவர்களை நீங்கள் புனிதமாக்கினீர்களா என்று அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : திரு. மனோகரன் அவர்களை முதலில் நீங்கள் எந்த மந்திரத்தைப் போட்டு இழுத்தீர்களோ அதே மந்திரத்தைப் போட்டு நாங்களும் செயல்பட்டிருக்கலாம். அதை நாங்கள் கற்றுக் கொண்டிருக்கலாம் (சிரிப்பொலி).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதற்குத்தான் அரசியலே வேண்டாம் என்று முன்பே சொன்னேன். ஆளுநர் உரையில் மட்டும் பேசுங்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : இதை நான் ஏன் குறிப்பிட்டேன் என்றால், அரிசி ஊழல் பேரத்தில் அவர்மீது நடவடிக்கை எடுக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஏனென்றால் எனக்கு ஒரு சந்தேகம், அதாவது முன்னாள் உணவு அமைச்சர் இந்நாள் முதலமைச்சருக்கு உறவினராக வரப்போகிறார்கள் என்று ஒரு தகவல், அதனால் விசாரணையே நடக்காதோ என்று ஒரு சந்தேகம்.................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஆளுநர் உரையில் மட்டும் இனிமேல் தயவு செய்து பேசுங்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : அதில் இவைகளெல்லாம் விடப்பெற்றன. அரிசி பேர ஊழலைப் பற்றி ஒன்றுமே குறிப்பிடப்பெறவில்லை என்றுதான் சுட்டிக்காட்ட வருகிறேன்.

அடுத்து ஆளுநர் உரையில் பச்சையப்பா கல்லூரியை அரசு இரண்டு வருடங்களுக்கு எடுத்துக் கொண்டதைப் பற்றி குறிப்

பிட்டிருக்கிறார்கள். அதைப்போல இந்த அண்ணாமலை யூனிவர்சிட்டியையும் எடுத்துக் கொள்ளக் கூடாதா? நான் கூட இங்கே அமைச்சரிடத்தில் முன்பு பேசும்போது குறிப்பிட்டேன், ''அங்கே ஆயிரத்தெட்டு ஊழல் நடக்கிறதே இதற்கு ஒரு வழி செய்யக் கூடாதா'', என்று கேட்டேன். அதற்கு அவர்கள் கூட ''எடுத்துவிட வேண்டியதுதான்'' என்று சொன்னார்கள். ஆனால் அது அவருடைய தனிப்பட்ட கருத்தாக இருந்திருக்கலாம், இருந்தாலும் அண்ணாமலை யூனிவர்சிட்டியையும் அரசு எடுக்கலாம். அதைப்பற்றி ஆளுநர் உரையில் ஒன்றுமே குறிப்பிடப்பெறவில்லை. நான் ஆளும் கட்சி உறுப்பினராக இருந்தபோது, இதைப்பற்றி நிறைய பேசியிருக்கிறேன். நம்முடைய நண்பர்கள் தேவைப்பட்டால் அதை லைப்பரரியில் வாங்கி படித்தால் அவர்களுக்கு உதவியாக இருக்கும். அதைப் பற்றி ஏன் ஏதுவுமே குறிப்பிடப்பெறவில்லை, அண்ணாமலை யூனிவர்சிட்டியையும் எடுத்திருக்கலாமே என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்தது, இந்த எரிசாராய வழக்கு. மிக சுவையானப் பிரச்சனை. இது ஒரு பெரிய பிராப்ளம். அதைப்பற்றிக் கூட ஆளுநர் உரையில் எதுவுமே சொல்லப்பெறவில்லை. 12 கோடி ரூபாய் பெறுமான ஊழல் அது, அதைப்பற்றி எதுவுமே குறிப்பிடப்பெறவில்லை. அதற்கான மேல் நடவடிக்கை எடுக்கப்படும், விசாரணை நடக்கும் என்று தெரிவித்திருந்தால் கூட, அன்றைக்கு நான் எழுந்திருந்து கவர்னர் உரை முடிந்த பிறகு, அதை தலைவர் அவர்கள் தமிழில் சொல்லும்போது, குறிப்பிட்டு சொல்லியிருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. ஏறத்தாழ 12 கோடி ருபாய் பெறுமான எரிசாராயம் நமது மாநிலத்திலிருந்து மற்ற மாநிலங்களுக்கு கடத்தப்பட்டிருக்கிறது. அந்த உண்மையை மற்ற மாநிலங்களிலிருந்து வரப்பெற்றிருக்கிற செய்திகள் உணர்த்துகின்றன. அங்கிருந்து அதிகாரிகள் இங்கே வந்திருக்கிறார்கள். விசாரணை நடத்தப் போகிறார்கள் என்று இங்கே சொன்னார்கள்.

[முற்பகல் 11-30]

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், எரிசாராயம், நமது சர்க்கரை ஆலைகளில் 4 சதவிகிதம் ரிக்கவரி மொலாஸஸ் கிடைக்கும். 1977–78-ல் 57 லட்சம் டன் கரும்பு ஆடியதில் மொலாஸஸ் 4 சதவிகிதம் ரிக்கவரி இருந்தது. 1979–80-ல் 40 லட்சம் டன் கரும்பு ஆடியதில் 1,60,000 டன் மொலாஸஸ் கிடைத்திருக்கிறது. 1980–81-ல் 45 லட்சம் டன் கரும்பு ஆடியதில் 1,80,000 டன் மொலாஸஸ் கிடைத்திருக்கிறது. புள்ளிவிவரங்கள் எங்களுக்குத் தரவில்லை, ஆனால் நான் கேட்டறிந்த புள்ளிவிவரங்களை இந்த மாமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன் கிட்டத்தட்ட எரிசாராயம் உற்பத்தி





செய்யக்கூடிய ஆலைகள் ஏழு இருக்கின்றன என்று சொல்கிறார்கள். ஒரு டன் மொலாஸஸி-லிருந்து சராசரியாக 225 லிட்டர் எரிசாராயம் தயாராகிறது. இப்படியெல்லால் விதிமுறைகள் இருப்பதாகச் சொல்கிறார்கள். இந்த எரிசாராயத்தை எப்படி தவறாகப் பயன்படுத்துகிறார்கள் எப்படி கோடிக் கணக்கான ரூபாய் கொள்ளையடிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் இதற்கு யார் யார் உடந்தை, இதை தயாரிக்க யார் யார் உடந்தை என்பதைப்பற்றியெல்லாம் இந்த மாமன்றமும் தமிழ்நாடும் அறிவதற்கு ஆவலாக இருக்கிறது. ஆகவே அந்தப் புள்ளிவிவரங்களைச் கொடுப்பது சாலச்சிறந்ததாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

எரிசாராயத்தைப் பொறுத்த வரையில் ஆலையிலிருந்து வெளியே வருகிற சமயத்தில் ஒரு லிட்டர் விலை ரூ. 2.10 எக்ஸைஸ் ட்யூட்டி ரூ. 1 ஆக ஸ்பிரிட்டின் அடக்கவிலை லிட்டருக்கு ரூ. 3.10 ஆகிறது. இந்தச் சாராயத்தில் பத்து மடங்கு தண்ணீர் கலக்கலாம். எச் 2 ஓ. தண்ணீர் பத்து மடங்கு கலக்கலாம். ஆகவே ஒரு லிட்டரில் பத்து.லிட்டர் தண்ணீர் கலக்கும்போது 11 லிட்டர் சாராயம் கிடைக்கிறது. இப்படிச் செய்யலாம் என்று விஞ்ஞான பூர்வமாக, எக்ஸ்பர்ட்ஸ் சொல்கிறார்கள். தண்ணீர் தவிர வேறு கெமிக்கல்கள் சேர்க்க வேண்டியதில்லை. வெறும் ஆற்றுத் தண்ணீரை ஊற்றவேண்டியதுதான். ஆக ஒரு லிட்டர் எரிசாராயத்திற்கு ரூ. 33 என்றால் 11 லிட்டருக்கு ரூ. 363 கிடைக்கிறது. ஆக எரிசாராயத்தை தவறாக பயன்படுத்தி விற்பனை செய்வதால் கடத்தல்காரர்களுக்கு கையூட்டாக கிடைக்கக்கூடிய பணம் ரூ. 363. செய்யவேண்டியது என்னவென்றால் 36 மணி நேரம் தண்ணீரில் ஊற்றிவைத்தால் போதும் அது சாராயமாகிவிடும். அதைச் சாப்பிடுகிறவர்களுக்குத் தெரியும் அதில் நல்ல 'கிக்' வரும் என்று. தண்ணீரோடு வேறு ஏதாவது கலந்து விற்றால் ரூ. 363-க்குப் பதில் ரூ. 500, ரூ. 600 கூடக் கிடைக்கும். ஆகவே லிட்டர் மூன்று ரூபாய் விலை உள்ளதிலிருந்து ரூ. 600 வரை சம்பாதிக்கக்கூடிய ஒரு தொழிலாக இருக்கிறது இந்த எரிசாராயத் தொழில். அப்படி இந்தத் தொழிலைச் செய்துகொண்டிருக்கிறார்கள். இதற்கு காரணம் யார்? யாருடைய ஆட்சியில் இது நடைபெற்றது? எந்த ஆட்சியில் இந்த ஒழுங்கீனங்கள் எல்லாம் நடைபெற்றன என்பதைப்பற்றியெல்லாம் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாகவே தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிதான் இங்கே நடைபெற்று வருகிறது. இடையில் கவர்னர் ஆட்சி கொஞ்சக்காலம் இருந்தது. எங்கள் ஆட்சி கவிழ்க்கப்பட்ட

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1981 ஜனவரி 23

பிறகு அப்போது சில விதிமுறைகளை போட்டார்கள் கவர்னர் ஆட்சிக் காலத்தில் ஒரு சாராய பாக்டரியிலிருந்து சாராயத்தை எடுத்துச் செல்வது என்றால் ஒரு அதிகாரி செல்வார். ஒரு போலீஸ் அதிகாரி செல்வார். இந்த இரண்டு அதிகாரிகளும் போகிறபோது டெஸ்டினேஷன்வரை தந்தி.போகும். டெஸ்டினேஷனுக்கு கொண்டு போய் கொடுத்துவிட்டு திரும்பி வந்து அதன் 'அக்னாலட்ஜ்மென்ட்டை' காட்டிய பிறகுதான் அடுத்த லாரிக்கு டெலிவரி கொடுக்கப்படும். வழியில் உள்ள போலீஸ் ஸ்டேஷன்களுக்கு செய்திகள் எல்லாவிதத்திலும் கொடுக்கப்படும். அதன் காரணமாக அந்த சமயத்தில் ஒழுங்கீனங்கள் நடைபெறாமல் இருந்தன. ஆனால் நமது புரட்சித் தலைவர் ஆட்சி வந்த பிறகு, 1977-க்குப் பிறகு, 1978-க்குப் பிறகு என்னென்ன நடைமுறைகள் கையாளப்பட்டன என்பதை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஏற்கனவே ஒரு லாரி புறப்பட்டால் அந்த லாரியில் ஒரு ரெவன்யூ அபிஷியலும் ஒரு போலீஸ் அபிஷியலும் செல்ல வேண்டுமென்றிருந்தது. அதற்குப் பிறகு இப்போது அதற்கு மாறாக நம்முடைய புரட்சித் தலைவர் ஆட்சியில் ரெவன்யூ அபிஷியல் போகவேண்டியதில்லை. போலீஸ் அதிகாரி போகலாம் என்றிருப்பது கூட, அந்தப் போலீஸ் அதிகாரி (Not below the rank of a constable), என்றால் கான்ஸ்டபிளை விட கீழ் ராங்கில் யாரோ இருப்பதுபோல் இருக்கிறது. யார் இதைத் திருத்தியது? இதற்கு யார் பொறுப்பு. இந்த இலாகா யாரிடம் இருக்கிறது. முதல் அமைச்சர் அவர்களிடம்தானே இருக்கிறது. ஆக, இவற்றிற்கெல்லாம் பதில் சொல்லவேண்டிய நிலையில் இன்றையதினம் ஆளும் கட்சி இருக்கிறது என்பதை என்னால் சொல்லாமல் இருக்கமுடியாது.

அதேபோல் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். முன்பெல்லாம், வெளி மாநிலங்களுக்கு எரிபொருள் சாராயம் அனுப்பினால், கொடுக்கப்படும் பர்மிட்டோடு டுப்ளிகேட்டாக ஒரு பிளை லீப் (Fly leaf) கொடுப்பார்கள். ஆனால் புரட்சித் தலைவர் வந்தபிறகு, அண்மைக் காலத்திலே ஒரு பர்மிட்டோடு 12 பிளை லீப் கொடுக்கலாம்; அதாவது 12 காப்பிகள் கொடுக்கப்படலாம். ஒரு பிளை லீப்பிலே ஒரு லாரி போகலாம். சைதாப்பேட்டை ஆர். டீ. ஓ. ஆபிசிலே இருந்து அப்படி 12 பிளை லீப்கள் வாங்கிக்கொண்டு, இன்றையதினம் தமிழ்நாட்டிலே இருந்து கேரளாவிற்கு எரிபொருள் சாராயம் சென்றிருக்கின்றது என்று நான் குற்றம் சாட்டுகிறேன். இப்படி 12 பிளை லீப்களாக அதிகப்படுத்தியதற்கு யார் மூல காரணம்? இதை நான் இங்கே சொல்லாமல் இருக்க முடியவில்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



1981 ஜனவரி 23] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

இன்னொன்று நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் சேம்பர் ஆப் காமர்சில் பேசினார்கள். அப்போதுதான் இதுவரைக்கும் எங்களுக்குத் தெரியாமல் இருந்த சமாச்சாரம் தெரிந்தது. அதுவரைக்கும் எங்களுக்கு இந்தச் சமாச்சாரம் தெரியவில்லை. தமிழ் நாட்டிலே இருந்து 10 லட்சம் லிட்டர் கொண்டு போவதற்குப் பதிலாக, 15 லட்சம் லிட்டர் வெளி மாநிலத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டதாக அவர்களே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி எடுத்துச் சென்று விட்டார்கள் என்று புரட்சித் தலைவர் சொன்னதற்குப் பிறகுதான், எங்களுக்கும், தமிழ்நாட்டிலே உள்ள மற்றவர்களுக்கும் தெரிந்தது. இந்த 10 லட்சம் லிட்டர் எரிபொருளை அனுமதித்தது யார்? புரட்சித் தலைவரா இல்லையா? மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களா? அல்லது .வேறு அமைச்சரா? இப்படி 10 லட்சம் லிட்டரை கர்நாடக மாநிலத்திலே இருக்கும் கோடீஸ் பிராந்தி கம்பெனிக்கு பார்ட்னராக இருக்கும் லட்சுமண ஷா என்ற முதலாளிக்கு எரிபொருள் சாராயத்தை அனுமதித்தது புரட்ச்த் தலைவரா? இல்லையா? அதைத் தெரிவிக்கவேண்டும். அவர்கள் அதற்கு இணக்கம் காட்டியதாக பேசியிருக்கிறார்கள். தமிழ் நாட்டிலே இருந்து இப்படிப்பட்ட எரிபொருள் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மருந்து பொருட்களைத் தயாரிப்பவர்கள் டாக்டர்கள், இன்னும் சிறு சிறு உபயோகத்திற்காக கேட்டவர்களுக்குக் கொடுந்திருந்தால் தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கும். இப்படி எரிபொருள் சாராயம் வேண்டுமென்று எத்தனை தொழிற்சாலைகளிலே இருந்து மனுக்கள் வந்திருக்கிறது? எப்படி இந்த அரசாங்கம் வெளி மாநிலத்திற்கு 10 லட்சம் லிட்டர் எரிபொருளை அனுமதித்தது, எப்படி முதலமைச்சர் அவர்கள் அனுமதித்தார்கள் என்ற புள்ளிவிவரங்கள் எல்லாம் சட்டமன்றத்திற்கு வர வேண்டும்; சட்டமன்ற கமிட்டிக்கு வர வேண்டும்? ஏன் அவர்கள் எல்லாம் புறக்கணிக்கப்பட்டார்கள்? அதற்கு என்ன காரணம்? என்ன காரணத்திற்காக 10 லட்சம் லிட்டர் எரிபொருள் சாராயம் தமிழ்நாடு அரசாங்கம் பெங்களூரிலே இருக்கக்கூடிய கோடீஸ் கம்பெனியைச் சேர்ந்த லட்சுமண ஷாவிற்கு கொடுக்கப்பட்டது? என்பதைத் கேட்க விரும்புகிறேன். இங்கே கொடுத்திருந்தால், தொழில் வளர்ந்திருக்கும். இங்கே உள்ள தேவை பூர்த்தி செய்யப்பட்டிருக்கும் வேற்று மாநிலத்திற்கு உத்தரவு கொடுத்தது, இந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிதான் என்று நான் குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இன்றைய தினம் பல பத்திரிகைகளிலே இதுசம்பந்தமான செய்திகள் வருகின்றது. கேரளாவிலே இருந்து இங்கே அதிகாரிகள் வருகிறார்கள். ஆனால் என் அருமைச் சகோதரர் திரு எஸ். டீ. எஸ். அவர்கள் அவசர அவசரமாக, 2, 3 தினங்களுக்கு முன் பத்திரிகையிலே ஒரு ஸ்டேட்மெண்டைத் தந்திருக்கிறார்கள்.

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1981 ஜனவரி 23

தவறுகள் நடந்ததாகத் தெரியவில்லை, எல்லாம் சரியாக இருக்கின்றது என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் நேர்மையை நான் சந்தேகிக்கவில்லை. அவர்களுக்கும், இதற்கும் என்ன சம்பந்தம்? அவர்களா இந்த இலாகாவைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்? அவர்களிடத்திலே இருந்து அறிவிப்பு வந்தால் அவர் கான்டக்ட் சர்டிபிகேட் கொடுத்ததுபோல் தமிழ்நாட்டிலே உள்ள மக்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று ஸ்டேட்மெண்ட் கொடுத்திருக்கிறார்களா என்று எனக்குத் தெரியவில்லை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எக்சைஸ்ஸை நான் தான் பார்க்கிறேன் என்பது மிக நன்றாகத் தெரியும். அது மட்டுமல்ல. இங்கே நம்முடைய தொழில் வளர்ச்சிக் குறிப்புகள் கொடுக்கின்ற போதுகூட அவைகள் இங்கே என்னுடைய பெயரிலே வந்திருக்கின்றது. நானும் அதைப்பற்றிப் பேசியிருக்கிறேன். எனவே எக்சைஸைப் பார்ப்பது நான் தான். அது மட்டுமல்ல. அதைப் பற்றிய அனுமதி வழங்குவதும் என்னுடைய இலாகாவிலேதான் இருக்கிறது.

[முற்பகல் 11–40]

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. 'கோடேசுக்கு' 10 லட்சம் லிட்டர் எரி சாராயத்தை வழங்க அனுமதித்தது நீங்களா அல்லது முதலமைச்சரா ? அது சம்பந்தமான பைல்கள் மன்றத்திற்கு வரவேண்டும். கமிட்டிக்குக் காட்டப்பட வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : சம்பந்தப்பட்ட கோப்புகளை எல்லாம் இந்த அவையில் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன். சில தினங்களுக்கு முன்னல் நான் சொல்லுகிறபோது இங்கே எந்தவிதமான தவறுகளும் நடக்க முடியாது. அப்படி நடந்தது என்று சொன்னால் மீண்டும் விசாரிக்கத் தயாராக இருக்கிறோம், விசாரித்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறேன். இதைப்பற்றிப் பூரண விவரங்களைத் தரத் தயாராக இருக்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : நம்முடைய அமைச்சர் அவர்கள் அதிகாரிகள் விசாரணை செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நான் கூறிக்கொள்வதெல்லாம்—

The flood-gates of export of sprit was opened by the Hon. Chief Minister of Tamil Nadu என்று இங்கே குற்றம் சாட்ட விரும்புகிறேன். பத்து லட்சம் லிட்டர் எரி சாராயத்தை கர்நாடக மாநிலத்திலுள்ள 'கோடேசு'க்கு



1981 ஜனவரி 23] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

அனுப்ப அனுமதி கொடுத்தது யார்? எத்தனை லட்சம் எத்தனை கோடி யார் யாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது? இந்த விவரங்கள் எல்லாம் சி.பி.ஐ. என்குயரி வைத்தால் வெளியே வரும், சுப்ரீம் கோர்ட் நீதிபதியை வைத்து விசாரித்தால் வெளியே வரும்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : முதலமைச்சராக இருந்தாலும் மற்ற அமைச்சர்களாக இருந்தாலும் கலெக்டிவ் ரெஸ்பான்சிபிலிடி இருக்கிறது. இந்தப் பிரச்சினை பற்றி என்ன விவரங்கள் வேண்டுமென்றாலும் உங்களுக்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : முதன் முதலாக பத்து லட்சம் லிட்டர் எரி சாராயம் கர்நாடகத்திற்கு அனுப்பிய பிறகுதான் கேரளத்தில் இருக்கக்கூடியவர்களும் அந்த மாநிலத்தில் நியாயமான தேவை என்று இருந்த அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டதாகப் பத்திரிகையில் இருந்து தெரிய வருகிறது. முழு உண்மைகளும் பத்திரிகையிலிருந்து தெரியாத காரணத்தால் அத்தனை விவரங்களையும் சட்ட மன்றத்திற்கு, சட்டமன்றக் கமிட்டிக்கு கொடுக்க வேண்டும்.

கேரளாவுக்கு லாரிகளில் சென்றிருக்கின்றன. ஒரு லாரிக்கு பதிலாக பத்து லாரிகளில் ஃப்ளை லீபை தவறாகப் பயன்படுத்தி கொண்டு எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன. கஸ்டம்ஸ் ஆபீசர் பிடித்த பிறகுதான் இந்த உண்மை வெளி வந்திருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இப்படி ஏதாவது ஸ்கார்ஸ் கமாடிடியை யார் எடுத்துக் கொண்டு போனாலும் மோடஸ் ஆப்பரன்டி ஒரே மாதிரிதான் இருக்கும். ஒரு இடத்தில் கூரையைப் பிய்த்துக் கொண்டு திருடுபவன் இன்னொரு இடத்தில் கதவு திறந்திருந்தாலும் கூரையைப் பிய்த்து விட்டுத்தான் திருடுவான். ஏற்கனவே தமிழ்நாட்டில் அரிசி அதிகமாக இருக்கிறது என்ற நிலையை உருவாக்கி பர்மிட் போட்டு கேரளாவுக்கு அனுப்பியபோது டூப்ளிகேட் பர்மிட் போட்டு அரிசியை எல்லாம் எடுத்துச் சென்று விட்டார்கள். அன்றைய தினம் உணவமைச்சர் * * * சொன்னார்களே, அதே முறைதான் இந்த ஸ்பிரிட் ஸ்கான்டலிலும் நடைபெற்றிருக்கிறது. பன்னிரண்டு "ப்ளை லீப்கள்" ( Fly leaf ) கொடுக்கலாம் என்று தமிழ் நாட்டு அரசாங்கம், போர்டு ஆப் ரெவின்யூ எக்ஸைஸ் கமிஷனர் உத்தரவு போட்ட பிறகு இந்த முறைகேடுகள் நடந்திருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் அவர்களுக்கு அரை மணி நேரத்திற்கு மேல் ஆகிவிட்டது.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அனுப்பப் பெற்றது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : எங்களுடைய கட்சியின் சார்பாக பேசுகின்ற இன்னொரு பேச்சாளரின் நேரத்தைக் குறைத்துக் கொள்ளலாம். அந்த நேரத்தை நான் எடுத்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தற்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுவதாக இருந்தால் திரு திருவேங்கடம் அவர்கள் பேச முடியாது. அவருக்கு ஒதுக்கப் பட்ட நேரம் 10 நிமிடங்கள்தான். ஏற்கனவே உறுப்பினர் அவர்கள் அதிகப்படியாக ஐந்து நிமிடங்களுக்கு மேலும் எடுத்துக் கொண்டார்கள். ஆகவே, இன்னும் ஐந்து நிமிடங்களுக்குள் முடித்துக்கொள்ளவேண்டும்.

திரு வி. கிருஷ்ணமூர்த்தி : இதற்கெல்லாம் மூல காரணமாக இருக்கக்கூடிய இந்த அமைச்சரவையின் பேரிலே நான் குற்றச் சாட்டு சொல்லுகிறேன். இதை சுப்ரீம் கோர்ட் நீதிபதியை வைத்து விசாரிக்கவேண்டும். இல்லையென்றால் சி. பி. ஐ. என்குயரி வேண்டும். மலையாள மனோரமா பத்திரிகையில் விளக்கமாகப் போட்டிருக்கிறார்கள். பன்னிரண்டு கோடி ரூபாய் ஊழலுக்கு இந்த அரசாங்கமும் இருக்கக்கூடிய மற்றவர்களும் உறுதுணையாக இருந்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பத்திரிகையில் வந்த விஷயங்களை ஆதாரமாக வைத்து பேரவையில் குற்றச் சாட்டு கூறக் கூடாது. மேலும் அந்தப் பத்திரிகைகளை முன் கூட்டி என்னிடம் காட்டி அனுமதி பெறவில்லை.

திரு. க. அன்பழகன் : ஏற்கனவே சொன்ன சேதிகளை மறுபடியும் ஆதாரத்தோடு சொல்லுகிறாரே தவிர சொல்லப் படாத புதிய சேதிகளைப் புகுத்துவதாக இல்லை.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மலையாள மனோரமா பத்திரிகை யில் வந்தது உங்களுக்கெல்லாம் தெரிய வேண்டுமென்பதற்காக தமிழில் போட்டிருக்கிறார்கள். அதிலே கூறியிருக்கிறார்கள்.... படிக்கிறேன்.* * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் இப்போது படிப்பது எந்தப் பத்திரிகை ?

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : முரசொலி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதைச் சொல் லுங்கள். (குறுக்கீடு)

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர் களுக்கு இந்தப் பிரச்சினை பற்றி எடுத்துச் சொல்ல, குற்றச் சாட்டு சொல்ல முழு உரிமை உண்டு. இங்கே அமைச்சர் அவர்கள், அதுபற்றி விசாரணை நடந்து கொண்டிருக்கிறது என்பதைச் சொல்லி அதுபற்றிய புள்ளி விவரங்களை அவைக்குத் தர ஆயத்தமாக இருப்பதாகச் சொன்னார்கள். இந்த அவைக்கு கோப்புகளையும் விவரங்களையும் தருவதற்கு தயா ராக இருப்பதாகச் சொன்னார்கள். குறிப்பிட்ட பத்திரிகையிலே வந்துவிட்டதன் காரணமாக அதுவே முழுவதும் தீர்ப்பாகிவிடும் என்றோ அது முழுவதும் உண்மையாகிவிடும் என்றோ சொல்லி விட முடியாது. வேண்டுமானால் அவர்கள் அந்தக் குற்றச் சாட்டை இங்கே சொல்லலாம். பத்திரிகையிலே வந்திருக்கிற குறிப்புகள் அத்தனையையும் இங்கே எடுத்துச் சொல்வார்களா னால் அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிற அத்தனை பேர்களுக்கும் மறுப்புரை சொல்கிற வாய்ப்பு இந்த நேரத்திலே இருக்காது. குற்றச்சாட்டு சொல்லுங்கள். அதிலே வந்திருக்கிற குறிப்புகள் அத்தனையையும் சொல்லாதீர்கள். அது இந்த மரபுக்கு ஏற்ற தாக இருக்காது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பத்திரிகையிலே வந்திருப்பதை சொன்னீர்கள். அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிற சில பேர்கள் இங்கே இல்லை. ஆகவே பத்திரிகை பற்றிப் பேசி யது வேண்டாம். அந்த பத்திரிகையிலே வந்தது அதாரட்டி இடையாது. சாதாரணமாக ஏதோ பத்திரிகையிலே வந்தது. ஆகவே பத்திரிகையை சொல்லிப் பேசியதை எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.[குறுக்கீடு]

திரு. எஸ்.எஸ். இராமசந்திரன் [ .. ... ..]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பத்திரிகையின் பெயரைக் குறிப் பிடுவதைப் பற்றி ஒன்றும் இல்லை. ஆனால் அதிலே உள்ள குறிப்புகள் அத்தனையையும் சொல்வது சரியல்ல. ஆகவே அதை நீக்கிவிட்டால் பிரச்சினை இருக்காது என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பத்திரிகையி லிருந்து நீங்கள் சொன்னது முழுவதும் நீக்கப்படுகிறது, அவைக் குறிப்பினிலே இடம் பெறக்கூடாது. ஏனென்றால் அந்தப் பத்திரிகைக்கு நீங்கள் பொறுப்பு ஏற்றுக்கொள்ள முடியாது.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ] [1981 ஜனவரி 23

முரசொலிக்கு வேண்டுமானால் நீங்கள் பொறுப்பு ஏற்றுக் கொள்ளலாம். மலையாள மனோரமாவிலே வந்திருப்பதற்கு நீங்கள் பொறுப்பேற்றுக் கொள்ள முடியாது. பத்திரிகையிலே வந்ததைப் பற்றி இங்கே விவாதிக்க முடியாது. அதை உண்மையாக நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. தாங்கள் பத்திரிகையிலிருந்து குறிப்பிட்ட அத்தனையும் நீக்கப்பெறுகிறது.

திரு வி. கிருஷ்ணமூர்த்தி : வேறு மாநிலத்தைச் சேர்ந்த ஒரு பத்திரிகை நம்முடைய முதலமைச்சர் மீது ஒரு குற்றச்சாட்டைச் சொல்லி இருக்கிறார்கள். அவர்கள்மீது முதலமைச்சர் வழக்குப்போடத் தயாரா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பத்திரிகையிலே வந்தது உண்மையோ பொய்யோ தெரியவில்லை, அதை விடுங்கள்.

திரு வி. கிருஷ்ணமூர்த்தி : ஆகவே நான் சொல்ல விரும்புவது எல்லாம் 10 கோடி ரூபாய் ஊழலா, 12 கோடி ரூபாய் ஊழலா, 15 கோடி ரூபாய் ஊழலா, எந்த ஊழலாக இருந்தாலும் அவைகளை கண்டுபிடித்து ஆகவேண்டும் என்பதை வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்........

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன் சென்னையிலே ஒரு முன்னாள் அமைச்சருக்குப் பிள்ளையாக இருக்கக்கூடியவருக்கு ஒரு வீடு வாங்கியிருக்கிறார்கள். அந்த வீடு இதோ இந்தப் படத்திலே உள்ள வீடுதான் (படத்தைக் காட்டினார்). பீட்டர்ஸ் காலனியிலே உள்ள வீடு. இந்த வீட்டை எவ்வளவு ரூபாய்க்கு வாங்கி இருக்கிறார்கள் என்றால்—அந்த டாக்குமென்டினுடைய போட்டோஸ்டட் காப்பியை நான் இங்கே வைத்திருக்கிறேன்.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : என்னிடம் கொடுங்கள். நான் முதலில் அதைப் படித்துப் பார்த்துக் கொள்கிறேன். அதற்கு முன்னாலே அதைப் பற்றிப் பேசக் கூடாது.

[முற்பகல் 11-50]

திரு வி. கிருஷ்ணமூர்த்தி : நான் அதை டேபிள் செய்யவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் போட்டோவைக் காண்பிக்கிறீர்கள். அப்படியில்லாமல் விடு என்று சொல்லலாம்.



1981 ஜனவரி 23]

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : நான் டேபிள் செய்யவில்லை : ரெஃபர் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஃபோட்டோவைக் காண்பித்து விட்டு ரெஃபர் செய்கிறேன் என்று சொல்ல முடியாது. ஆனால், ஓரலாக வேண்டுமானால் சொல்லுங்கள். போட்டோவைக் காட்ட முடியாது. எனவே, போட்டோவைக் காட்ட வேண்டாம்.

திரு. ஆர். மணிமாறன் : துணைத் தலைவரவர்களே, ஏற்கனவே உங்களிடம் போட்டோவையோ அல்லது அதைப் பற்றிய குறிப்புகளையோ காட்டி அனுமதி பெறாமல் பேசினார்கள் என்றால், அதே முறையில், பின் விளைவு, வருங்காலத்திலே இந்த இடத்திலேயிருந்து நாங்கள் சொல்வதற்கு நீங்கள் அனுமதிப்பீர்களா ?

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : ரெபர் செய்ய உரிமை இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்த அவையிலே ஒரு சான்றையோ அல்லது சான்றாக நிழற் படத்தையோ அல்லது ஆதாரமாக ஏதாவது குறிப்புகளைக் காட்ட வேண்டுமென்றால் முன்னாலே தலைவரிடத்தில் அனுமதி பெற்றுச் செய்ய வேண்டும் என்ற மரபு இருக்கிறது. ஆனால் குற்றச்சாட்டாகச் சொல்ல, அதற்கான ஆதாரங்களைச் சொல்ல வேண்டுமென்று பேசுகின்ற உறுப்பினர் கருதினால் இப்படிப்பட்ட குற்றச்சாட்டை நான் சாட்டுகிறேன், அதற்கான ஆதாரம் இருக்கிறது என்று தங்களிடத்தில் அல்லது உரிய அமைச்சரிடத்தில் தருகிறேன் என்று சொல்லலாமே தவிர விளக்கங்கள் முழுவதையும் இந்த அவையிலே சொல்வது முறையாகாது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : அரிசி பேர ஊழலிலே சம்பந்தப்பட்ட திருவண்ணாமலை இராஜமாணிக்க முதலியார்.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்பொழுது ஏதோ ஒரு டாகுமெண்டைப் பார்த்துப் பேசுகின்றீர்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : நான் பார்க்காமல் பேசுகிறேன். அரிசி பேர ஊழலில்.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : குற்றச்சாட்டு சொல்வதாக இருந்தால் நினைத்தாற்போல் சொல்ல முடியாது. அதற்கு ஒரு வரைமுறையைக் கடைப்பிடிப்போம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : அரிசி பேர ஊழலில் சம்பந்தப்பட்ட திருவண்ணாமலை ஏ. எம். இராஜமாணிக்க முதலியாருக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை என்று முன்னாள் உணவமைச்சர் அவர்கள் மறுத்தாரே அன்றைய தினம் மாண்புமிகு பெருமைக்குரிய * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் அவையிலே இல்லை ; அவரைப் பற்றிய அலிகேஷன் இது. இப்பொழுது யார் அவருக்காகப் பேசுவது ? நான்தான் பேச வேண்டும். அவையிலே இல்லாத ஒருவரைப் பற்றிப் பெரிய அலிகேஷனைச் சொல்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் என்று பெயரைச் சொல்கிறீர்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : ராஜமாணிக்கம் முதலியாருக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை என்று முன்னேற்றக் கழக மந்திரியாக இருந்த அவர் சொன்னாரே, அந்த உணவு அமைச்சர்—எங்கள் உணவு அமைச்சராக இருந்தார் பாருங்கள். அன்றைய அந்த உணவு அமைச்சருடைய பிள்ளைக்கு இரண்டு இலட்சத்து முப்பதாயிரம் ரூபாய்க்கு மவுண்ட் ரோட்டுக்குப் பக்கத்திலே சுமார் ஐந்து இலட்சம் பெறக்கூடிய வீட்டினை வாங்கி வைத்திருக்கின்றார்கள். அதற்கு அவர்கள் சாட்சியாகக் கையெழுத்துப் போட்டிருக்கின்றார்கள். எங்களுடைய முன்னாள் உணவு அமைச்சர் இருக்கிறாரே அவருக்கும், இராஜமாணிக்கத்திற்கும் எவ்வளவு தொடர்பு இருக்கிறது. அந்த முன்னாள் உணவு அமைச்சருடைய பிள்ளையைத்தான் இன்றைய தினம் சம்பந்தம் சம்பந்தமாக சம்பந்தங்கள் கொண்டாடக்கூடிய நிலை இருக்கின்ற காரணத்தால் இந்த அரசாங்கத்திலே இருக்கக்கூடிய அனைத்து மந்திரிகள் என்று சொல்ல மாட்டேன். இந்த அரசாங்கத்திலே இருக்கக்கூடிய முதலமைச்சர் மற்றுமுள்ள அமைச்சர்கள் இதற்குப் பொறுப்பை ஏற்க வேண்டும் ; இந்த ஊழலைக் கண்டு பிடிக்க சி.பி.ஐ. விசாரணை வேண்டுமென்று கேட்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : தலைவர் அவர்களே. . . . . .

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : நான் பேசிய பேச்சுக்கு ஆதாரம் வேண்டுமென்றால் தாக்கல் செய்யத் தயாராக இருக்கிறேன் ; செகரட்டரி மூலமாக ஸ்பீக்கருக்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு . பி. எம். தங்கவேல்ராஜ்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு கவர்னர் அவர்களின் உரையின் மீது இந்திரா காங்கிரஸ் கட்சியின் சார்பாகப் பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றியையும், வணக்கத்தையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



மேதகு கவர்னர் அவர்களின் உரையிலே இந்த நாட்டுக்குத்—தமிழகத்திற்கு உகந்த எந்த நல்ல காரியத்தையும் அவர்கள் கூறவில்லை ; கூறத் தவறி விட்டார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. விசுவநாதன் அவர்கள் குறிப்பிடுகையிலே மதுவிலக்குக் கொள்கையைத் தளர்த்துவதுபற்றி குறிப்பிட்டார்கள். மதுவிலக்குக் கொள்கையைப் பற்றியக் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை என்ன ? அவர்களுடைய கோட்பாடு என்ன ? அவர்கள் உறுதி என்ன என்பதைப் பற்றி அவர்கள் திட்டவட்டமாகக் குறிப்பிடவில்லை. ஆகவே, இந்த ஆட்சி மதுவிலக்குக் கொள்கை பற்றி திட்டவட்டமாக எதுவும் அறிவிக்கவில்லை என்பதைப் பற்றியும் நாம் ஆராயக் கடமைப் பட்டிருக்கிறோம்.

மதிப்பிற்குரிய நம்முடைய திரு. விசுவநாதன் அவர்கள் பேசுகிற பொழுது, முதல்வர் அவர்கள் மதுவிலக்குக் கொள்கையைத் தீவிரப்படுத்த, மிகவும் துடிதுடிப்பாக இருக்கிறார், ஆனால் ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை என்று குறிப்பிட்டார். ஆகவே, ஒத்துழைப்புக் கிடைக்கவில்லையென்றால் யார் கொடுக்கவில்லை ? அவருடைய கட்சிக்காரர்கள் ஒத்துழைப்பு கிடைக்கவில்லையா ? மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழி நடத்திச் செல்லும் போலீசாருடைய ஒத்துழைப்புக் கிடைக்கவில்லையா ? அல்லது மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்வதை போலீசார் கேட்கவில்லையா ? அல்லது, திறமை வாய்ந்த தமிழக போலீசாரின் திறனும், திறமையும், அந்த ஆற்றலும் குறைந்து விட்டதா என்று நாம் ஐயப்படும் சூழ்நிலைதான் உண்டாகிறது. ஆகவே, இந்திரா காங்கிரசைப் பொறுத்த மட்டிலே, மது விலக்குக் கொள்கையிலே நாங்கள் இன்னும் தீவிரமாக இருக்கிறோம். மதுவிலக்குக் கொள்கையை நீங்கள் தீவிரமாக அமுல்படுத்தினால் நிச்சயமாக இந்திரா காங்கிரஸ் உங்களுடன் ஒத்துழைக்கும் என்ற உறுதியை நான் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். மேலும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்த 6 மாதங்களுக்கு முன்பு தாய்க் குலத்தின் நன்மைக்காக மதுவிலக்குக் கொள்கையைத் தீவிரப்படுத்துகிறேன் என்றார். அடுத்த 3 மாதங்களுக்குப் பிறகு, அந்தத் தாய்க் குலத்தின் நன்மைக்காக, மதுவிலக்கைத் தளர்த்துகிறேன் என்று கூறினார். ஆகவே, மதுவிலக்குக் கொள்கையிலே, அனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒரு கோட்பாடே இல்லாமல், இங்குள்ள இந்த மாபெரும் அமைச்சரவை இருப்பது என்பது அவர்களுடைய திறமையின்மையைத்தான் குறிப்பிடுகிறது என்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இன்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் மதுவிலக்குக் கொள்கையைத் தீவிரப்படுத்த முன் வந்தால், நிச்சயம் நாங்கள் உடனிருந்து ஒத்துழைத்து

தீவிரப்படுத்துவோம். ஆகவே, அந்த மதுவிலக்குக் கொள்கையைத் தளர்த்தி விடாமல், எங்களைப் பொறுத்தவரையில் மது விலக்குக் கொள்கையைத் தீவிரப்படுத்தி, தமிழக மக்களுக்கு மதுவினால் கிடைக்கக்கூடிய ஒரு கெடுதலைத் தவிர்க்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களையும் இந்த அமைச்சர்களையும் இந்தச் சமயத்திலே கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. விசுவநாதன் அவர்கள் குறிப்பிடும்போது, மதுரையிலே நடந்த மாபெரும்—5-வது உலகத் தமிழ் மாநாடு பற்றி மிகவும் பெருமைபடக் கூறினார்கள். ஆனால், அவர்கள் கூறியதைப் போல், அந்த அளவு பெருமைபட நடைபெறவில்லையென்றாலும், தமிழ் மாநாடு நடத்துவது தவறு என்று நாங்கள் குறிப்பிடவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு கிருஷ்ணமூர்த்தி பேசும்போது முன்னாள் உணவு அமைச்சர் * * * என்று சொன்னார். முன்னாள் உணவு அமைச்சர் என்பது இருக்கட்டும். பெயர் வேண்டாம். (குறுக்கீடுகள்) பெயரை மட்டும்தான் நீக்கச் சொல்லியிருக்கிறேன். முன்னாலும் ஏதாவது விடுபட்டிருந்தால் பெயரை மட்டும் நீக்கி விடுங்கள். முன்னாள் உணவு அமைச்சர் என்பது இருக்கலாம்.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : மதுரையில் நடந்த அந்த மாபெரும் தமிழ் மாநாட்டிற்குத் தமிழக சட்டமன்ற உறுப்பினர்கள் அழைக்கப்படவில்லை என்பதை மிகவும் வருத்தத்துடன் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். வேண்டுமானால் ஆளுங்கட்சியைச் சேர்ந்த அமைச்சர் பெருமக்களுக்கும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் வேண்டுமானால், அழைப்பு விடுத்திருக்குமேயொழிய, எங்களைப் போன்ற எதிர்க்கட்சிக்காரர்களுக்கு எந்தவிதமான அழைப்பும் கொடுக்கப்படவில்லையென்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, எந்தெந்த வகையிலே மாநாடு சிறப்பாக அமைந்தது என்று கூறுகிறார்களோ, அது எந்த எந்த வகையிலே சிறப்பாக அமைந்தது, எந்த எந்த வகையிலே ஏறக்குறைய சுமார் 20 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டது, எந்த எந்த வகையிலே, யார், யார், எப்படி, எப்படி செலவழித்தார்கள் என்பதை நாங்கள் கண்டுகொள்ளக் கூடாது என்ற காரணத்திற்காகவோ, என்னவோ தான் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களாகிய எங்களைப் போன்றவர்களை இந்த மாநாட்டிற்கு அழைக்கவில்லை.

மேலும், நானும் எனது குடும்பத்தாரும் அந்த மாநாட்டைப் பார்க்க வேண்டும், ரூமும் மற்ற அரேஞ்மெண்ட்சும் செய்து தாருங்கள் என்று அன்றைய மதுரை மாவட்டக் கலெக்டர்

---

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





அவர்களுக்குக் கடிதம் எழுதியிருந்தும், மதுரை மாவட்டக் கலெக்டர் அவர்களிடமிருந்து எத்தவித பதிலும் வரவில்லையென்பதை இங்கே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியபடி, அந்த மதுரை மாநாடு எந்த வகையிலே நடைபெற்றது? எந்த வகையிலே செலவு செய்யப்பட்டது? சுமார் எத்தனை கோடி செலவு செய்யப்பட்டது என்பதைப் பற்றியெல்லாம் இந்த மாமன்றத்திலே அவர்கள் கணக்கு வைக்கத் தயாராக இருக்க வேண்டும்.

அடுத்தபடியாக, நம்முடைய விவசாயிகள் நடத்திய போராட்டத்தைப் நல்லமுறையிலே சமாளித்ததாக மாண்புமிகு கவர்னர் உரையிலே கூறப்பட்டிருக்கிறது. விவசாயிகள் போராட்டம் பற்றியும், ஒன்று சொல்ல விரும்புகிறேன். மின்சாரக் கட்டணத்தைப் பொறுத்த மட்டிலும், நாங்கள் 1 பிளஸ் 1 என்று சொல்வதை மனப்பூர்வமாக ஒத்துக் கொள்கிறோம். ஆக, 1 பிளஸ் 1 என்று இருந்தாலும், ஏறக்குறைய சேர்ந்தாற்போல 4, 5 மாதங்களாக மின்சாரக் கணக்கு சரியாக எடுக்கப்படவில்லை. கூடை குத்தகையாக என்று சொல்வார்களே, அதுபோல அவர்களிடம், ரூ. 2,000 கட்டு, 3,000 கட்டு 4,000 கட்டு, என்று கடனாக வசூலிக்கிறார்களே தவிர, சர்க்கார் அறிவித்த 1 பிளஸ் 1 பிரகாரம் வசூலிக்கப்படாமல் இருப்பதால், விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

[நண்பகல் 12—00]

மேலும், விவசாயக் கிளர்ச்சியை அடக்க முற்பட்டபோது, 7 விவசாயிகள் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஒரு போலீஸ்காரர் வெட்டி கொல்லப்பட்டு இருக்கிறார். இது பற்றி கவர்னர் உரையில் குறிப்பிடாதது மிகவும் வருந்தத்தக்கதாகும். ஏனெனில் விவசாயச் சங்கப் போராட்டம் சம்பந்தமாக இது இருந்தாலும், விவசாய சங்கத்திற்குச் சம்பந்தம் இல்லாத இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களையும் குறிப்பாக என்னுடைய தொகுதியின் முன்னாள் எம். எல். ஏ. வும் ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் உப தலைவருமான வெள்ளியணை ராமநாதன் அவர்கள் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். அவருக்கும் நாயுடு விவசாய சங்கத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. இருப்பினும், நூற்றுக்கணக்கான காங்கிரஸ் தோழர்கள் தாக்கப்பட்டு அங்கே ரத்த வெள்ளத்தில் மிதந்தார்கள் என்பதைக்

குறிப்பிட்டுக் கொண்டு, இந்த அரசு அத்தகைய நிகழ்ச்சிகளைத் தவிர்க்க என்ன நடவடிக்கை மேற்கொள்ள இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறிது நேரத்திற்கு முன்பு அவையில் பேசுகிறபோது குறிப்பிட்டார்கள். அரிசன மக்களுக்கு பல உதவிகளைச் செய்ய அரசு கருதியிருந்தபோதிலும் நிதி போதவில்லை. மற்ற இனத்தார் அதிக நிதி ஒதுக்குவதை எதிர்க்கிறார்கள் என்று சொல்லி, அதனால் கலைஞர் முதலமைச்சராக இருந்த நேரத்தில் துவக்கப்பட்ட இலவசமாக வீடுகள் கட்டித்தரும் திட்டத்தைக் கைவிடவேண்டிய நிலைமை ஏற்பட்டது என்று குறிப்பிட்டார்கள். இந்த நேரத்தில் நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு அரிசன மக்களிடத்தில் பாசம் இல்லையா, அவர்களுக்கு ஏதேனும் நல்லது செய்யவேண்டும் என்கிற எண்ணம் இல்லையா. நீங்கள் நல்லது செய்வீர்கள் என்று நம்பித்தானே அந்த அரிசன மக்கள் உங்களுக்கு ஆதரவைத் தந்தார்கள் அவர்களுக்குச் செய்வதற்கு பணம் இல்லை என்று சொல்வது நியாயம் இல்லை. மதுரை மாநகரத்தில் நடைபெற்ற மாநாட்டிற்குச் செலவு செய்யப்பட்ட 20 கோடி ரூபாயில் பாதியையாவது இந்த அரிசன மக்களின் நலனுக்காகச் செலவிட்டு இருந்தால், அரிசன மக்களின் 'ப்ராப்ளம்' ஏறக்குறைய முக்கால்வாசி குறைந்து இருக்கும். ஆகவே, அண்ணா திராவிட முன்னேற்றக்கழக அரசை அருள் கூர்ந்து கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் எல்லாம் அரிசன மக்களிடத்தில் பற்றும் பாசமும் கொண்டு செயல்பட்டால் தான், அவர்களுக்கு என்று அதிகமாக நிதி ஒதுக்கி பல வசதிகளைச் செய்து கொடுத்தால் தான், உங்களைப் பெரிதும் பாராட்டி ஆதரவு தந்து கொண்டு வருவார்கள். நீங்கள் அரிசன மக்களை மறந்தால் அவர்கள் உங்களை மறந்து விடுவார்கள் என்கிற எச்சரிக்கையை மட்டும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கேள்வி நேரத்தின் போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 3½ லட்சம் பட்டாக்கள் அரிசனங்களுக்காகக் கொடுத்து இருப்பதாகச் சொன்னார்கள். எனக்கு அது சந்தேகமாக இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன். ஏற்கனவே குடியிருந்த வீடுகளுக்கு தற்சமயம் கொடுக்கப்பட்டவைகளைச் சேர்த்துத்தான் சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன். என்னுடைய மதிப்பீடு நிலம் ஆர்ஜிதம் செய்து கொடுக்கப்பட்ட மனைகள் 50,000-க்குக் குறைவாகத்தான் இருக்கும் என்பதாகும்.



அதைப்போலவே அரிசனங்களுக்கு இப்போது பாதுகாப்பு இல்லை. குறிப்பாக என்னுடைய திருச்சி மாவட்டத்தில் ஜாதி இந்துவின் கிணற்றில் குளித்த 5 அரிஜன சிறுவர்களை மின்சாரம் பாய்ச்சி ஜாதி இந்துக்களால் கொல்லப்பட்டு இருக்கிறார்கள் அண்மையில் ஒரு வாரத்திற்கு முன்பு கன்னியாகுமரி மாவட்டத்தில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ராஜு என்பவர் போலீஸ் நிலையத்தில் அடித்துக் கொல்லப்பட்டு இருக்கிறார்கள். இப்படி பல இடங்களில் நடைபெறுகின்றன. அதற்கு இந்த அரசாங்கம் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எரி சாராயத்தைப் பற்றி விவரமாக திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டார்கள். இதிலே என்ன நிலைமை என்றால் மாண்புமிகு கேரள முதல்வர் நாயனார் அவர்கள் இதிலே கருத்து சொல்கிறபோது, தமிழகத்தில் உள்ள இந்திரா காங்கிரஸ் எம். எல். ஏ. ஒருவர் இதில் சம்பந்தப்பட்டு இருக்கிறார் என்று மிகவும் தரக்குறைவான நிலையில் குறிப்பிட்டு இருப்பது. இங்கேயுள்ள 29 எம். எல். ஏ. களையும் மற்றவர்கள் கண் முன்னால் ஒரு கேள்விக்குறியாக நிறுத்தி வைத்து இருக்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன். இந்த விஷயத்தில் இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எந்த ஒரு எம். எல் ஏ.வும் சம்மந்தப்படவில்லை என்று தெரிந்தும் வேண்டுமென்றே எங்களுக்குக் கெட்ட பெயரும், அவப்பெயரும் வரவேண்டுமென்ற நிலையில் கேரள மாநில முதல்வர் அவர்கள் கருத்து தெரிவித்து இருப்பது மிகவும் வருந்தத்தக்கது. இந்த மாமன்றத்தில் இந்திரா காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஒரு உரிமைப்பிரச்னை கேரள முதல்வர் நாயனார் அவர்கள் மீது கொண்டு வர இருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை]

கிராம அதிகாரிகளை எடுத்துக்கொண்டால், அவர்களை வேலை நீக்கம் செய்ததைப் பற்றி அதிகம் எடுத்துக்கொள்ளாவிட்டாலும் அவசரம் அவசரமாக ஒரு அவசர சட்டத்தின் மூலம் கிராம அதிகாரிகளை நீக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை. அவர்களாலே உடனடியாக நாட்டுக்கோ அல்லது மக்களுக்கோ எந்தவிதமான ஆபத்தும் ஏற்படபோவதில்லை. மேலும் கிராம அதிகாரிகளிலே ஏறத்தாழ 5,000 பேர்கள் அந்தத் தேர்வினை பாஸ் செய்த தகுதியுள்ளவர்கள் இருக்கிறார்கள். அவர்களில் சிலர் 30, 32 வயதுக்கு மேல் ஆனவர்களும் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட இவர்களின் வேலைக்கு மனுசெய்ய இயலாத நிலையில் இருப்பதால் அவர்களின் குடும்பங்கள் நிர்க்கதியில் நிற்கின்றன. மேலும்

இந்த சர்க்கார் இந்த ஆர்டினன்ஸ் கொண்டு வருகிறபோது எந்தவிதமான ஆல்டர்னேட்டிவ் அரேன்ஜ்மென்டும் செய்யவில்லை 4½ கோடி மக்களும் கஷ்டப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். 23,000 குடும்பங்கள் நடுத்தெருவில் நிற்கின்றன. இதனால் ஏற்பட்ட ஷாக்கிலேயே 21 பேர்கள் இறந்து போய்விட்டார்கள். அந்த இறந்த அதிகாரிகளின் குடும்பகளுக்கு தமிழக அரசு உதவிபுரியவேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு பதவி நீக்கம் செய்யப்பட்ட அந்த அதிகாரிகளுக்கு கிராசுவிடி, பென்ஷன் உதவித் தொகை முதலியன கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மணி அடிக்கப்பெற்றது)

*நன்னிலம் திரு. அ. கலையரசன் : பெருமதிப்பிற்குரிய மாற்றுத் தலைவர் அவர்களே, கவர்னர் உரைக்கு நன்றி தெரிவித்து பேசுகின்ற வகையில் இன்றைக்கு இருக்கக்கூடிய தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய கொள்கையைக் கடைப்பிடித்து நடக்கின்ற ஆட்சியாகும். அந்த வகையிலே "ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்பேன்" என்ற அண்ணாவின் கொள்கையை நிலைநாட்ட, வேலை இல்லாத இளைஞர்கள் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவராக இருப்பின் அவர்களுக்கு முன்னுரிமை அளித்து ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவருக்காவது வேலை தரவேண்டும் என்று தீர்மானித்து முன் வந்துள்ள இந்த அரசை மனமாரப் பாராட்டக் கடமைப் பட்டுள்ளேன். இந்த அரசை நாட்டு மக்கள் முழுமனதோடு ஆட்சிப் பீடத்தில் ஏற்றியவுடன் ஜனநாயக கருத்தை எள்ளளவும் தன்னுடைய மனதிலே ஏற்றுக் கொள்ளாதவர்கள் மக்கள் மீது பழி சுமத்தினார்கள். தமிழர் இனம் தவறு செய்துவிட்டது என ஓலமிட்டார்கள். தமிழ் மக்கள் பிறரை வாழவைத்த வரலாறு உண்டே தவிர தன்னை வாழவைத்துக்கொண்டவர்கள் அல்ல என்ற குற்றச்சாட்டை தமிழகத்திலே வாழும் தமிழ்ச்சமுதாயத்தின் மீது அடுக்கினார்கள். தாழ்த்தப்பட்டவனுக்கு இனி வாழ்வே இல்லை பிற்படுத்தப்பட்டவனின் நிலை ஒரு அபாயகரமான நிலை என வர்ணித்தார்கள். இந்நிலையிலேதான் இந்த அரசாங்கம் தன்னுடைய கொள்கையை செவ்விய முறையில் செயல்படுத்த வேண்டுமானால் நிர்வாக சீரமைப்பு தேவை என்று கருதி சென்ற ஆண்டு அரசு வருவாய் வாரியத்தை கலைத்தது. அதோடு நிற்கவில்லை. 'தம்பி உடையான் படைக்கஞ்சான்' என்ற அண்ணா அவர்கள் தன்னுடைய தம்பியை புரட்சித் தலைவரை மக்கள் மூலம் அரியணை ஏற்றினார்கள். குறிப்பாக யாரைக் குறிப்பிட்டார்கள் என்று சொன்னால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைத்தான் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தப் புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைய தினம் பகுதி நேர கிராம அதிகாரிகள்





அமைப்பை, காலத்திற்கு ஒவ்வாத காரணத்தாலும், கிராம நிர்வாகத்தில் தற்கால தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலாததாலும் மாற்றி அமைக்க முடிவு செய்து அவசர சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இதன் மூலம் கிராம அதிகாரிகளாக அத்திப் பூத்ததுபோல ஒன்றிரண்டு கிராம அதிகாரிகளைப் பெற்றிருந்த தாழ்த்தப்பட்ட ஆதி திராவிட சமுதாயம், எதிர்காலத்திலே ஏறத்தாழ 3,000 பேர்கள் இன்றைக்கு அந்தப் பொறுப்பிலே வருவதற்கான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அந்த சாதனையை தமிழக முதல்வர் அவர்கள் இன்றைக்கு ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். அந்த வகையில் அந்த சமுதாயத்தின் சார்பின் மிகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அந்தப் பொறுப்பிலே 51 சதவீதம் பேர்களை, ஆயிரக்கணக்கான பேர்களை இந்த பொறுப்பை ஏற்க வாய்ப்பை புரட்சித் தலைவர் அவர்கள் அரசு இன்றைக்கு ஏற்படுத்தித் தந்திருக்கிறது.

இப்படி பல்வேறு சாதனைகளை இந்த ஆட்சி அவசரச் சட்டத்தின் மூலமாக செய்திருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் மிகவும் துணிச்சலோடு நிறைவேற்றிய புரட்சித் தலைவர் அவர்கள், தந்தை பெரியாரின், பேரறிஞர் அண்ணாவின் எண்ணப்படி சாதி, சமய வேறுபாடற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்க முனைந்து நிற்பவர். எத்தனையோ சட்டங்கள் தீண்டாமை என்ற கொடிய நோயை அகற்ற முற்பட்டாலும் கல்வி அறிவு மூலம் முற்போக்கான எண்ணங்கள் இருந்தாலும் சமுதாயக் கோட்பாட்டில் பிணைந்து நிற்கும் நம் நாட்டு மக்கள் வெளி இடங்களில் எவ்வளவு தாராளமாக பழகினாலும் தான் வாழ்கின்ற கிராமப் புறங்களில் ஜாதிவித்தியாசத்தை மறக்காத மனத்தைத் தான் பெற்றிருக்கிறார்கள்.

[பிற்பகல் 12-10]

தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்த ஒரு ஆதி திராவிட குடிமகன் அரசு உத்தியோகங்களிலே அங்கம் வகிக்க முடிகிறதே தவிர தன்னிச்சையாக தனக்குத்தானே தொழில் அமைத்துக் கொள்ளவோ அல்லது ஒரு பெரிய கடை வீதியிலே உள்ள மளிகைக் கடையில் மாட்டுக்கு வைக்கும் தீவனத்தைக் கூட விற்க லாயக்கற்றவனாக இருக்கிறான். சமுதாயத்திலே சம அந்தஸ்து பெற வேண்டுமானால் அரசு வேலை வாய்ப்பிலே மட்டும் அல்லாமல் எல்லா துறையிலேயும் தாழ்த்தப்பட்டவர்கள் பங்கு பெற வேண்டும்.

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால் இன்றைக்கு இருக்கக்கூடிய சாதி அமைப்புகளே அவரவர் செய்யும் தொழிலை மையமாக வைத்து வந்ததாகும். எந்த ஒரு தொழிலையும்

குறிப்பிட்ட ஒரு வர்க்கம்தான் செய்ய வேண்டும் என்ற நிலை மாறி, எந்த ஒரு தொழிலையும் தொழில் தெரிந்த எந்த சமூகத்தினரும் செய்யலாம் என்ற நிலை வரும்போதுதான் சமதர்ம சமுதாயம் அமையும். அந்த சமதர்ம சமுதாயம் அமைய கால்கோள் விழாவாக புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் அமுதம் அங்காடிகளில் சீனி, கோதுமை, ரவை, எண்ணெய் போன்ற அத்தியாவசிய உணவுப் பொருள்களை விற்கும் அந்தப்பணியில் கிராமங்களில் தாழ்த்தப்பட்ட வேலை இல்லாத பட்டதாரிகள் விற்பனை செய்யவும், அப்பொருள்களை பாகுபாடு இல்லாமல் வாங்குகின்ற சூழ்நிலையையும் உண்டாக்கிய பெருமை நம்முடைய புரட்சித் தலைவரையே சேரும். அமுதம் அங்காடிகள் திறக்கப்பட்டு அவை மூலம் இன்றைக்கு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் 18 சத வீதம் வேலை வாய்ப்புப் பெறக்கூடிய நிலைமை உருவாகியிருக்கிறது. அரசாங்கம் நடத்துகின்ற கடை என்ற காரணத்தால் ஜாதி வித்தியாசம் பார்க்கின்ற கிராமங்களில் கூட அதற்கு மறுப்பு தெரிவிக்காமல் தாழ்த்தப்பட்ட மக்கள் கையால் தொட்டு வழங்குகின்ற உணவுப் பொருட்களையும், துணிபோன்றவைகளையும் வாங்கிச் செல்கிறார்கள். அது இந்த நாட்டை நடத்திச் செல்லுகின்ற புரட்சித் தலைவரின் ஆட்சியின் சிறப்பாக இருக்கிறது என்று சொல்லி, இந்த ஆளுநர் உரையை நான் வரவேற்கிறேன்.

மேலும் விவசாயத் தொழிலையே நம்பிவாழும் பல லட்சக் கணக்கான ஏழை குடும்பங்களை அன்றாடம பட்டினி போடச் செய்யும் அளவிற்கு நல்ல நிலங்களை தரிசாக போட்டாலோ அல்லது உணவுப் பொருள் பயிரிடுவதற்கு மாறாக சவுக்கு போன்ற வேறு பயிர்களை பயிரிட்டாலோ அத்தகைய நிலங்களை அரசு எடுத்து நிலமற்ற உழைக்கும் கூலி விவசாயிகளுக்கு பங்கிட்டு கொடுக்கும் என்ற முற்போக்கான கொள்கையை சில வசதி படைத்தவர்களுக்கும் அஞ்சாமல் கவர்னர் உரையில் துணிச்சலோடு தன்னுடைய கொள்கையை அரசு அறிவித்துள்ளது.

அதோடு மட்டுமல்ல. இந்த அரசை பொறுத்தவரையில் நிலமற்ற உழைக்கும் விவசாயிகளுக்கு புனர் வாழ்வு அளிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் உள்ள அரசு இது. '' காடு விளைஞ்சு என்ன மச்சான் கையும் காலும்தானே மிச்சம் '' என்று அலுத்துப்போய், இனி தனக்கு வாழ்வே இராதா என ஏங்கித் தவிக்கும் அந்த ஏழைகளுக்கு 1980 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த சட்ட வரைவை குடியரசுத் தலைவரின் இசைவுக்கு அனுப்பி வைத்துள்ள அரசுதான் புரட்சித் தலைவரால் நடத்தப்படும் அண்ணாவின் அரசாகும்.

சமுதாயத்தில் நலிந்த, ஏழை எளிய பிரிவினர்மீது குறிப்பாக ஆதி திராவிடர்கள், பழங்குடியினர் ஆகியோருக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகளை உறுதியோடு ஒடுக்க வேண்டும்



என்பது அரசின் கொள்கை. அதனால்தான் இன்றைக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அநீதி இல்லாமல் இருக்கிறது. ஒரு மனிதன் நல்லவனா கெட்டவனா என்று பார்க்க வேண்டுமானால் அவனுடைய நண்பன் யார் என்று அறிந்து, அவன் மூலம் தெரிந்து கொள்ளலாம் என்று தமிழகத்தில் சொல்வார்கள். ஆகவே, இன்றைக்கு தமிழகத்தில் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றிருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழகத்தில் இருக்கிற 5 கோடி மக்களின் முன்னேற்றத்திற்கு வழிவகுத்து அவர்கள் உள்ளத்தில் நிறைந்திருக்கிறார்கள். 'பூவோடு சேர்ந்த நாரும் மணக்கும்' என்பார்கள். இன்றைக்கு புரட்சித் தலைவர் பூவாக இருப்பவர். அவருடைய சிறந்த நிர்வாகத் திறமையால் இந்த நாடு முன்னேறுகிறது ; நாட்டு மக்கள் வாழ்வு வளம்பெறுகிறது. ஆகையால் இந்த பூவோடு நாராக சேர்ந்திருக்கிற நாட்டு மக்களும் மணம்பெறுகிறார்கள் ; புரட்சித் தலைவரோடு எத்தன்மை வாய்ந்தவர்கள் சேர்ந்தாலும் அவருக்குள்ள நல்ல பண்பே மற்றவர்களுக்கும் வரும் ; பூவோடு சேர்ந்த நாரைப்போல மணம் பெறுவார்கள். (மணியடிக்கப்பட்டது) சமுதாயத்திற்கே பெரும் தீங்கு விளைவிக்கும் சமூக விரோத சக்திகள் செய்யும் குற்றங்களை பார்த்துக்கொண்டு அரசு வாளா இருக்காது என்ற ஆணித்தரமான கொள்கையை புரட்சித் தலைவரின் அரசு கவர்னர் உரையில் கம்பீரமாக எடுத்து வைத்துள்ளது. டாக்டர் புரட்சித் தலைவரின் அரசின் அணுகு முறைகளை உன்னிப்பாக கவனித்தால் இந்த கொள்கைகள் எந்த அளவுக்கு சிறப்பாக அமுல்படுத்தப்பட்டுள்ளது என்பது தெளிவாகத் தெரியும்.

1977—ல் புரட்சித் தலைவர் முதல்வர் பொறுப்பை ஏற்றுக் கொண்டதிலிருந்து சமுதாயத்திற்கு தீங்கு விளைவிக்கும் தனிநபர்கள், அரசியல் ஊடுருவல் மூலம் தன்விருப்பத்தை பூர்த்தி செய்து கொள்வதற்கு உடந்தையாக இல்லாமல் காவல் துறை நடுநிலையோடு நடக்கும் அளவிற்கு இந்த அரசு செயல்பட்டுள்ளது. முறைகேடோ, தலையீடோ இல்லாமல் தனித்தன்மையோடு விளங்கிய காரணத்தால்தான் கடந்த பல ஆண்டுகளுக்கு முன்னால் நடைபெற்ற வகுப்பு கலவரங்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் இந்த ஆட்சிக் காலத்தில் குறைந்திருப்பதை கவர்னர் உரை கோடிட்டு காட்டுகிறது.

எனவே இன்றைக்கு முதல்வர் பொறுப்பிலே இருக்கக்கூடிய புரட்சித் தலைவர், பொன்மனச்செம்மல் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் நீடூழி வாழ்க என்று எங்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பாகக் கூறி இந்த கவர்னர் உரையை வரவேற்று நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

திரு. என். வரதராஜன் : அன்பிற்குரிய பேரவையின் மாற்றுத் தலைவரவர்களே, ஆளுநர் உரையின் மீது மார்க்சிஸ்ட் கம்யூ

னிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களை சொல்ல விழை
கிறேன். கடந்த சட்டமன்றக் கூட்டத்திற்குப் பிறகு 5½ மாத
இடைவெளிக்குப் பிறகு இந்த கூட்டத்தை நடத்திக் கொண்டிருக்
கிறோம். இதற்கிடையில் தமிழகத்தில் பல்வேறு பிரச்சினைகள்
கூட்டி மோதின. அப்படிப்பட்ட சூழ்நிலையில் இதற்கு முன்
பாகவே இந்த சட்டமன்றம் கூட்டப்பட்டு அப்படிப்பட்ட பிரச்
சினைகள் பற்றி விவாதித்து இருக்க வேண்டும் என்று நாங்கள்
கருதுகிறோம்.

இந்த கவர்னரது அறிக்கையில் எங்கும் தமிழ், எதிலும் தமிழ்
என்ற வாசகங்களோடு ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. நம்மைப்
பொறுத்த வரையிலும் அப்படிப்பட்ட தமிழ் மக்களுடைய உயர்ந்த
உன்னதமான மொழிக் கொள்கைகள் மேலும் வளர்ச்சி அடைந்
வேண்டும் என்றும் அதற்கு ஆழ்ந்த பற்றுதலோடு செயலாற்ற
வேண்டும் என்றும் நாம் கருதுகிறோம். நம்முடைய மொழியைத்
தாக்க வருகின்ற அல்லது தடுக்க வருகின்ற பிற ஆதிக்க சக்திகளை
எதிர்க்க வேண்டுமென்று விரும்புகிறோம். ஆளும் கட்சியைப்
பொறுத்தவரையில் அதில் இன்னும் கூட சரியான முறையான
கொள்கை வழி நிற்க வேண்டும் என்று ஆழமாகவற்புறுத்த விரும்பு
கிறோம். இந்தி மொழி சம்பந்தமாக இன்று நம்முடைய
மாநிலத்திலும் பிற மாநிலங்களிலும் எழுந்திருக்கக்கூடிய அச்சத்
தையும் திணிப்பையும் எதிர்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.
மத்திய அரசினுடைய மொழிக் கொள்கையினால் பிற மொழிகள்
பாதிக்கப்படுகின்றன என்பது 30 வருட காலமாக இருந்து
வருகின்ற பிரச்சினை என்பது பேருண்மை என்பதை நினைவில்
கொள்ள வேண்டும்.

அடுத்து நான் இங்கே சொல்ல வேண்டியது இன்று மக்கள்
மத்தியில் மிகக் கடுமையான ஒரு வேகம் நிறைந்த சூழ்நிலையை
உருவாக்குவது விலைவாசி என்ற ஒரு பிரச்சினை. இங்கே நாம்
பஸ் கட்டணத்தை உயர்த்துவது தவிர்க்க முடியாதது என்று
சொல்கிறோம். பால் விலையை நாமே உயர்த்தி இருக்கி
றோம். பஸ் கட்டணத்தைர் நாமே உயர்த்தி இருக்கிறோம்.
மத்திய அரசு சீனி விலையை உயர்த்தி இருக்கின்றது. கடந்த
ஆண்டு மத்திய அரசின் பட்ஜெட்டின் விளைவாக ஒன்றுக்கு பத்
தாக விலைகள் மிக வேகமாக உயர்ந்து கொண்டு இருக்கக் கூடிய
காட்சியையும் பார்க்கிறோம். தமிழ்நாட்டில் எங்கு சென்
றாலும் எந்தப் பகுதிக்குத் திரும்பினாலும் இந்த நிலையினைத்
தான் நம்மால் காண முடிகிறது. வறுமைக் கோட்டிற்குக் கீழே
இருக்கின்ற மக்கள் மட்டுமல்ல, உயர்ந்த மட்டத்தில் வாழுகின்ற
மக்களும் இன்றையதினம் ஒரு கடுமையான விலைவாசியை எதிர்
கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. இப்படி எல்லா
மட்டத்திலேயும் இருக்கின்ற மக்கள் இன்றைக்கு இந்த
மாமன்றத்தை மிக நம்பிக்கையோடு எதிர்பார்த்துக் கொண்டு
இருக்கிறார்கள் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். ஆனால்
இங்கே அளிக்கப்பட்ட அறிக்கையினை காண்கிறபோது அதிர்ச்சி





அடைகிறேன். அப்படிப்பட்ட மலை போன்ற எழுந்திருக்கக்
கூடிய பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய மார்க்கங்கள் இந்த அறிக்கை
யில் காணப்படவில்லை. அந்த விலைவாசி ஏற்றத்திற்கான
அடிப்படையான காரணங்கள் என்ன என்பதை இந்த மன்றம்
பல முறை விவாதிருக்கின்றது. ஆனால் அது இந்த அறிக்கை
யிலே இடம் பெறவில்லை என்பது ஆச்சரியமாக இருக்கின்றது.

[பிற்பகல் 1-20]

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இந்த மாநில அரசினால் இந்த விலை-வாசிகளைக் கட்டுப்
படுத்த முடியாது என்று நண்பர் விஸ்வநாதன் அவர்கள் முதலிலே
இங்கே விவாதத்தைத் ஆரம்பித்து வைத்துப் பேசும்போது
பேசினார்கள். வரவேற்கிறேன். இந்த மாநில அரசுக்கு என்ன
அதிகாரம் உண்டு. அது எந்தெந்த துறையிலே விலைவாசி
களைக் கட்டுப்படுத்த இயலும். அப்படிப்பட்ட கட்டுப்படுத்து
கிற முயற்சிகளிலே எந்த அளவிற்கு மாநில அரசு இறங்கி
இருக்கிறது என்ற சர்ச்சைகளில் நாம் ஈடுபடலாம். ஆனால்
இப்படி விலைவாசிகள் உயர்ந்து வரும்படியான விபரீதமான கட்
டத்தில், மத்திய அரசின் தவறான பொருளாதார கொள்கையின்
காரணமாகத்தான் விலைவாசிகள் ஏறிவருகிறது என்ற கொள்கை
யைக் கூட சொல்வதற்கு நீங்கள் ஏன் அஞ்சுகிறீர்கள் என்று நான்
கேட்க விரும்புகிறேன்?

உங்களுடைய கண் முன்னாலே கடந்த ஒரு வாரகாலமாக
பத்திரிகைகளிலே வருகிற செய்திகளில் என்ன பார்க்கிறீர்கள்?
இந்த நாட்டின் கருப்புப் பணம் 25 ஆயிரம் கோடிரூபாயா? 30
ஆயிரம் கோடி ரூபாய் என்று தினம் தினம் செய்தி வரவில்லையா?
இன்று மத்திய சர்க்கார் அதை வெளிக் கொண்டு வருவதற்கு,
கொண்டு வந்திருக்கக்கூடிய திட்டங்கள் மோசடியானது என்று
பத்திரிகை உலகமே இன்றையதினம் அதை எதிர்த்திருக்கக்
கூடிய காட்சியை, ஒரு மாநில அரசினால் எப்படி பார்க்க முடி
யாமல் இருந்தது என்பதை என்னால் புரிந்துக் கொள்ள முடிய
வில்லை.

இன்றைக்குக் காலையில் கூட நான் ஒரு பத்திரிகையைப்
படித்தேன். அதில் ஒரு கார்ட்டூனைப் பார்த்தேன். அவர்கள்
இந்தத் திட்டத்தின் அடிப்படையில் கருப்புப் பணம் வெளிவரவில்லை என்று கிண்டலாக போட்டிருக்கிறார்கள்.
ஆனால், அந்த 25 ஆயிரம் கோடி ரூபாயோ 30 ஆயிரம்
கோடி ரூபாயோ வைத்திருக்கும்படியான கருப்புப் பண முதலை
களுக்கு அமைச்சர் பதவிகளைக் கொடுத்து அந்தப் பணத்தை
வெளியே கொண்டு வர மத்திய சர்க்கார் ஆலோசிக்கிறது என்று
நம்முடைய நாட்டின் பத்திரிகைகள் கிண்டல் செய்யும் அளவிற்கு
இன்று கருப்புப் பணம் ஆதிக்கம் செலுத்துகிறது. இங்கே பண
வீக்கம் என்று ஆளுநர் உரையில் ஒரு இடத்தில் சொல்லியிருக்

கிறீர்கள். அது எப்படி வந்தது? இந்த 25 ஆயிரம் கோடி ரூபாய்
அல்லது 30 ஆயிரம் கோடி ரூபாய் கருப்புப் பணம் சும்மா இருக்க
வில்லை என்பதைத்தான் இது காட்டுகிறது. நம்முடைய நாட்
டின் அனைத்து பத்திரிகைகளும், இந்தியன் எக்ஸ்பிரஸ், இந்து,
தினமணி போன்ற பத்திரிகைகளில் அனைத்திலும் தலையங்கம்
கூட எழுதியிருக்கிறார்கள். அந்த 25 ஆயிரம் கோடி ரூபாயும்,
கொள்ளையோ கொள்ளை என்று இந்த நாட்டின் மக்களுடைய
ரத்தத்தை உறிஞ்சக்கூடிய அளவிற்கு, கருப்பு மார்க்கெட்டிலே
இருட்டிலே திருட்டுத்தனமாக விலைகளை ஏற்றிக் கொண்டிருக்
கிறது என்ற விபரீதமான நிலையே இந்தப் பண வீக்கத்தின்
முக்கியமான குறி என்று.

அடுத்து மிக முக்கியமானது, இந்த நாட்டினுடைய பற்றாக்
குறை பட்ஜெட், மத்திய சர்க்காருடைய பற்றாக்குறை பட்ஜெட்
அது போடும்படியான பற்றாக்குறை பட்ஜெட்டின் காரணமாகத்
தான் தேவைக்கு அதிகமான ரூபாய் நோட்டுகள் அச்சடிக்கப்படு
கின்றன என்பதையாவது இந்த மாநில அரசு பார்க்கிறதா
இல்லையா என்ற கேள்வியை எழுப்ப வேண்டியவனாக இருக்
கிறேன். அடுத்து நான் சொல்ல விரும்புவது மத்திய அரசினுடைய
வரிக்கொள்கை. கொள்கை என்று என்ன வைத்துக் கொண்
டிருக்கிறது. இந்த நாட்டில் யாரைத் தாக்க வேண்டும். யாரைத்
தூக்க வேண்டும் என்ற கொள்கையைத்தான் 30 ஆண்டுகளாக
கடைப்பிடித்து வருகிறது. 6 வது ஐந்தாண்டுத் திட்டம் ஊறாக
மத்திய அரசு என்ன கொள்கையை கடைப்பிடிக்கிறது என்று
நீங்கள் நினைக்கிறீர்கள் அல்லது எதிர் பார்க்கிறீர்கள்? அல்லது
ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்
கட்சி அறியவிரும்புகிறது.

அப்படிப்பட்ட பயங்கரமான ஒரு விலையேற்றம், இன்று
கிராம பொருளாதாரத்தையே நகரப் பொருளாதாரத்தையே
பெரும் அளவிற்கு பாதித்து இருக்கிறது என்பதை யாரும் மறுக்க
முடியாது. எரிகிற நெருப்பிலே எண்ணெயை ஊற்றிய கதை
யாக தமிழ் நாட்டிலே இன்று பெரும்பான்மையான கிராமப்
புறங்களில் வறட்சி நிலைமை ஏற்பட்டு நம்முடைய விவசாய
மக்களை மிகப் பெரிய அளவில் பாதித்து இருக்கிறது. ஒரு புறம்
விலையேற்றம் மறு பக்கத்தில் வறட்சி. இந்த நிலைதான்
தற்போது நாட்டில் நிலவுகிறது.

நியாய விலைக் கடைகளை நடத்திக் கொண்டிருப்பதாக நாம்
ஆளுநர் உரையிலே சொல்லியிருக்கிறோம். நம்முடைய நண்பர்
களை கேட்கிறேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள்
அனைவரையும் கேட்கிறேன். நாம் வைத்திருக்கும்படியான
நியாய விலைக் கடைகளில் அத்தியாவசியமான 10, 12 பண்டங்கள்
கட்டுப்படியான விலைக்கு இன்றைக்கு கிடைப்பதற்கான
ஏற்பாடுகளாவது இருக்கின்றதா? என்று.





நியாய விலைக் கடைகள் இருக்கின்றன. அவைகள் விவ
சாயிகள் வேலைக்கு போயிருக்கும்போது திறந்திருக்கும். அவர்கள்
திரும்பி வருகிறபோது அவைகள் மூடியிருக்கும். அவன் விரும்பு
கிற அத்தியாவசியப் பொருள்கள் அவனுக்குக் கிடைக்காது.
அப்படிப்பட்ட நியாயவிலைக் கடைகளைத்தானே நாம் இங்கே
நடத்திக் கொண்டிருக்கிறோம்.

நேற்றையதினம் நீங்கள்ஒன்றை வெளியிட்டிருக்கிறீர்கள் லெவி
கொள்முதல் என்று சொல்லி, 40 சதவீதம் லெவியை கொள்முத
லாக நீங்கள் பெறுவீர்கள். நெல் சொந்தக்காரர்கள் வாங்கும்
படியான நெல்லிலிருந்து 40 சதவீதத்தை லெவியாக நீங்கள் பெறு
வீர்கள் என்று அறிவித்திருக்கிறீர்கள். இது எந்த அளவிற்கு
வெற்றிப் பெறப் போகிறது என்று தெரியவில்லை. ஏற்
கெனவே நம்முடைய கையில் அரிசி குறைவு. இன்றைக்கு 1
கிலோ அரிசியினுடைய விலை 3 ரூபாய் என்ற அளவிற்கு எகிறி
குதிக்கிற காட்சியை நம்முடைய கண் முன்னால் பார்க்கிறோம்.
நம்முடைய கையிலும் இருப்பு இல்லை. அதற்காக நாம் எந்த
ஒரு கொள்முதல் கொள்கையையும் கடைப்பிடிக்கவில்லை. கொள்
முதல் கொள்கையை கடைப்பிடித்தால் அப்படி கடைப் பிடிக்க
வேண்டும் என்பது தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய
அடிப்படையான கோரிக்கை. அப்படிக் கடைப்பிடித்தால், ஒரு
மாநில அரசு எவ்வளவு கொள்முதல் செய்ய முடியும் செய்ய
வேண்டும் என்பதை நீங்கள் சொல்ல வேண்டும். ஏன் இந்த
அறிக்கையிலே ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலமாக மத்திய
அரசு இந்த மாநிலத்தின் நெல்லை கொள்முதல் செய்து ஒரு
மானிய விலையில் மாநில அரசுக்கு கொடுக்க வேண்டும் என்று
நீங்கள் வற்புறுத்தக் கூடாதா? உங்களுடைய சிவில் சப்ளைஸ்
கார்ப்பரேஷன் மூலமாக நீங்கள் கொள்முதல் செய்ய வேண்டும்
என்று நாம் வற்புறுத்த வேண்டும். ஒரு குவிண்டால் 130
ரூபாய் 140 ரூபாய் என்ற விலை வேண்டும் என்ற கோரிக்கை
தமிழ்நாட்டில் எழுந்து வருகிறது. நம்முடைய அறிக்கையில்
கூட அதை நாம் நியாயம் என்று ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

அப்படிப்பட்ட நிதி ஆதாரங்களை மாநில அரசு பெற முடி
யுமா? பெற வேண்டும் என்ற விருப்பத்தைக் கூட இந்த அறிக்
கையில் சொல்ல தயங்குகிறோம், பயங்குகிறோம், அதை
எது தடுக்கிறது என்று நான் வினவ விரும்புகிறேன்? ஆகவே,
விலைவாசிகள் இவ்வாறு உயர்ந்து கொண்டே இருக்கிற
காலத்திலே நம்முடைய நாட்டிலே நாம் என்ன பார்க்கிறோம்?
நம்முடைய நண்பர் விஸ்வநாதன் அவர்கள் கூட ஏற்றுக்
கொண்டிருக்கிறார்கள்.

பஞ்சாபையும், மராட்டியத்தையும், கர்நாடகாவையும்
பார்த்து நம் நாட்டின் கிராமப்புற மக்கள், ஏழை மக்கள், கோடிக்

கணக்கான விவசாயப் பெருங்குடி மக்கள் தங்களுடைய விளை பொருட்களுக்கு நியாய விலை வேண்டுமென்ற கிளர்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அது தமிழ்நாட்டில் மட்டுமல்ல. இதன் அடிப்படை என்ன? அரசியல் காழ்ப்புணர்ச்சியா? எவர் எவரோ அவர்களைத் தட்டியெழுப்பிய காலத்தில் வராத விவசாயப் பெருங்குடி மக்கள் முடியாது, முடியாது. இனிமேல் எங்களால் வாழமுடியாது, எங்களுடைய பொருட்களுக்கு நியாய விலை வேண்டும் என்கிறார்கள். ஒரு குவிண்டால் கரும்புக்கு விலை ரூ. 175. ஒரு குவிண்டால் கரும்பிலிருந்து இன்று சர்க்கரை எடுத்து அதை ரூ. 600, ரூ. 700—க்கு விற்கிறார்கள். ஆனால் ஒரு குவிண்டால் கரும்புக்குக் கொடுக்கக்கூடிய விலை ரூ. 175. இது வரி உட்பட, சம்பளம் கொடுப்பது உட்பட, தேய்மானச் செலவு உட்பட. ஆனால் இந்த நாட்டிலுள்ள நிபுணர்களின் கணக்கு குவிண்டாலுக்கு ரூ. 140—க்கு மேல் போகக்கூடாது என்பதாகும். ஆனால் ஒரு குவிண்டால் கரும்பிலிருந்து சர்க்கரை எடுத்து ஆலை முதலாளிகள் ரூ. 600 , ரூ. 700 என்று கொள்ளையடிக்கும்படியான காட்சி நம் கண்கள் முன்னால் இருக்கிறதா இல்லையா? இந்த அறிக்கையில் எந்த அளவிற்கு அதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறீர்கள் என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன்.

கோடிக்கணக்கான தமிழ் மக்கள் உங்களை ஆட்சிக்கு அனுப்பும் போது ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும், அவர்கள் வீடுகளில் விளக்கேற்றி வைக்க வேண்டும் என்ற வகையில் நீங்கள் அதற்கு கைலாகு கொடுக்க வேண்டும் என்று நினைத்துதான் பிரம்மாண்டமான போராட்டத்தில் அவர்கள் உங்களுக்கு ஆதரவு அளித்தார்கள். சென்ற ஆண்டு ஆளுநர் அறிக்கையைப் புரட்டிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்ற ஆளுநர் அறிக்கையில் பெருமை வாய்ந்த இந்த தமிழக மக்களுக்கு நல்வாழ்த்து வழங்கி இருக்கிறீர்கள். இந்தியாவிற்கு எடுத்துக்காட்டாக தமிழக மக்கள் திகழ்ந்தார்கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் இந்த அறிக்கையில் அதன் தொடர்ச்சி இல்லை. இப்போது விலைவாசியேற்றத்தில் மக்கள் வேதனையில் சிக்கி தவிக்கும் போதுதான் எழுந்து வருகிறான். போர்க்களத்தில் நிற்கிறான், போராடுகிறான். ஊதிய உயர்வு கேட்கிறான். வேலைநிறுத்தமாக வெடிக்கிறது. அது விபரீதமானதல்ல. அவர்கள் வேதனையிலிருந்து கிளம்பும்படியான ஒரு புயல் என்பதை அரசு உணர வேண்டும். ஒரு இடத்தில் சொல்லி இருக்கிறீர்கள், ஊதிய உயர்வு கொடுக்கக் கொடுக்க பணவீக்கம் ஏற்பட்டு இது ஒரு நச்சு வட்டத்திற்குள்ளே சுற்றிக்கொண்டிருக்கிறது [illegible] சிக்கலான நிலைமைக்கு நீங்கள் போய்க் கொண்டிருக்கிறீர்கள்.





இந்த நாட்டிலுள்ள கருப்புப் பணத்தைப் பற்றிக் கவலைப்படவில்லை. அதிகமாக நோட்டுக்கள் அச்சடிப்பதைப்பற்றிக் கவலைப்படவில்லை. மத்திய அரசின் வரிவிதிப்பைப் பற்றிக் கவலைப்படவில்லை. முதலாளிகள் பெறும் இலாபம் ஈட்டுவது பற்றிக் கவலைப்படவில்லை. இன்று வறுமையில் சிக்கிக்கொண்டு இருக்கின்றார்களே சாதாரண மக்கள், அவர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதிய உயர்வால்தான் பண வீக்கம் இந்த நாட்டில் ஏற்படுகிறது என்று சொன்னால் நீங்களும் நச்சு வட்டத்தில் மாட்டிக் கொள்வீர்கள் என்பதை மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக உள்ளன்போடு, வேதனையோடு எடுத்துக் காட்ட விரும்புகிறேன். நீங்கள் எங்கே போய் நிற்பீர்கள்? மக்கள் எழுந்து வருகிறபோது அடிதடி துப்பாக்கிப் பிரயோகம், அவசரச் சட்டம் என்று போய் நீங்கள் நிற்கக்கூடிய யதார்த்தமான நிலை இக்கொள்கைகளினால் வகுக்கப்படுகிறது. அதை நீங்கள். மாற்றிக் கொள்ள வேண்டும் என்று வினயமாக, ஆழமாக எடுத்துச் சொல்லவேண்டியவனாக இருக்கிறேன். மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக வினயமாக வேண்டிக் கொள்கிறேன். இது ஒரு விபரீதமான கொள்கை. மத்திய சர்க்காரின் கொள்கை மாற்றப்பட்டால் தவிர ஒரு மாநில சர்க்கார் தன் யதார்த்தமான வருவாயைக் கொண்டு இப்படிப்பட்ட காரியங்களை நிறைவேற்ற இயலாது.

27-ம் தேதியன்று நம் மாண்புமிகு அமைச்சர் திரு. முத்துசாமி அவர்கள் சர்வகட்சி கூட்டத்தை கூட்ட இருக்கிறார்கள். எதற்காக? பஸ் கட்டணத்தில் பத்து பைசா குறைப்பதற்காகவா? இன்னும் ஒரு பத்து பைசா கூட்டுவது நியாயமா இல்லையா என்பது பற்றி விவாதிக்கப் போவது சரியா தவறா என்பதற்குள்ளே நான் போகவில்லை. கூட்ட வேண்டுமா வேண்டாமா என்பதற்குள்ளும் நான் போகவில்லை. ஒரு புதிய நிர்ப்பந்தத்தின் மூலம் திணிக்கப்படுகிற காட்சியைக் காண்கிறோம்.

கிராமப்புறங்களில் உழைக்கக்கூடிய மக்கள் பலர் இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் திரு எஸ். டி. எஸ். அவர்களுக்குத் தெரியும் வறுமைக் கோட்டிற்குக் கீழே எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்பது. நாம் ஒரு கூலிச் சட்டம் போட்டிருக்கிறோம். அது கிடைக்காமல் இருப்பதற்கு யார் காரணம்? செக்கரட்டேரியட்டில் இருக்கிற அரசு ஊழியர்கள் அல்லது ஆசிரியப் பெருமக்கள் அல்லது அண்ணாமலையில் போராடிக் கொண்டிருக்கிற பேராசிரியர்கள் இவர்களா விவசாயத் தொழிலாளர்களுக்கு குறுக்கே நிற்கிறார்கள். துரதிருஷ்டவசமாக இன்னும் சொல்லப்போனால் எந்தஅளவிற்கு உங்களுக்கு அச்சமும் பயமும் இருக்கிறது என்பதை நாம் இதில் பார்க்க முடிகிறது. பினாமி சட்டத்தை இந்தச் சபையில்நிறைவேற்றி அனுப்பினோம். ஆனால் இதுவரை அதற்கு ஜனாதிபதி அங்கீகாரம் பெற்றுத் தராமல் [illegible] அனுப்பாத நிலைதான் இருக்கிறது.

[திரு. என். வரதராஜன்] [1981 ஜனவரி 23

[பிற்பகல் 12—30]

அப்படி அனுப்பவில்லையே என்று இதிலே ஒரு வார்த்தை இருக்கிறதா என்று நான் கேட்கிறேன். வந்தால் அது சட்டமானால், கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய உழவர்களுக்கு என்ன உபரி நிலம் கிடைக்கும்? அதை எப்படி பங்கிட்டுக் கொடுக்க முடியும்? அதை நான் சொல்ல வேண்டியதில்லை. தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட முன்னேற்ற கழகத்தினுடைய தமிழ் ஆர்வத்தை நான் குறைத்து மதிப்பிடவில்லை. அவர்கள் சொல்வார்களே, 'அத்தைக்கு மீசை முளைத்தால்தானே'? எப்படி இருக்கமுடியும்.

இந்த மாமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட சட்டத்தை மத்திய சர்க்காருக்கு அனுப்பி 5½ மாதங்களாகிவிட்டது. ஆனால் அவர்கள் எத்தனை சட்டங்களை இரவோடு இரவாக போட்டுக் கொண்டிருக்கிறார்கள். என். எஸ். ஓ. போடமுடியும்; என். எஸ். ஏ. போட முடியும். எத்தனையோ சட்டங்களை அவர்கள் இரவு பகலாக போடமுடியும். ஆனால் இந்த மாமன்றத்தில் தமிழ்நாட்டினுடைய 5 கோடி மக்களின் சார்பாக, ஏழை உழவர்களின் சார்பாக, உபரி நிலம் கொடுப்பதற்காக நாம் நிறைவேற்றி இருக்கக்கூடிய சட்டத்தை மத்திய அரசாட்சி அங்கீகரிக்கவில்லை என்று சொல்லுவதற்கு அச்சப்படுகின்ற ஒரு காட்சி, உங்கள் கட்சிக்கு அல்ல, ஆட்சிக்கு நன்மை தேடாது; தீமையைத் தேடும். கீர்த்தியை தேடாது; அபகீர்த்தியைத் தேடும். மிக வினயமாக, மிகவும் ஆழமாக, உள் உணர்வோடு நான் இதைச்சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இந்தக் கொள்கை மாற்றப்பட வேண்டுமென்று நீங்கள் போராடாவிட்டால், இந்த போராடுகின்ற மக்கள் மீது கோப தாபங்களைத் திருப்பி, அந்த மக்கள்தான் இந்த விலைவாசி ஏற்றத்திற்கு அடிப்படை, பணவீக்கத்திற்கு அடிப்படையான மூல புருஷர்கள் என்று நாம் நிறுத்துவோம். அந்த மக்களுடைய பேரெழுச்சியை உபயோகப்படுத்தி, அவர்களை கைலாகு கொடுத்து தூக்கிவிட்டால், அவர்கள் இன்றைக்கும் வரத் தயார். இந்த விலைவாசி இன்றைய நிலையில் இருக்குமானால், இந்த மாநிலத்திலே இருக்கக்கூடிய தொழிற்சங்கமானாலும் சரி, அல்லது வேறு சில இயக்கங்களானாலும் சரி, தங்களுடைய சம்பள உயர்வை இன்றே கைவிடும் என்பதை நான் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் என்ற அடிப்படையிலே இந்த மன்றத்திலே பேசுகிறேன். ஆனால், விலைவாசி இன்றைக்கு ஏறிக்கொண்டே போகிறபோது, பட்டம் போல் பறந்து கொண்டு போகும் போது அவர்களுடைய வேதனை அதிகமாகும் போது, வேலைப்பளு உயர்கின்றபோது, அவன்மீது தாக்குதல் வருகின்ற போது, கதவடைப்பு வருகின்ற போது



1981 ஜனவரி 23] [திரு. என். வரதராஜன்]

அவன் வாய் மூடி மௌனியாக இருப்பான் என்று நீங்கள் எதிர்பார்க்கலாகாது. எங்களுடைய திசை மாறும்; அப்போது அந்த காற்று வேறு பக்கம் அடிக்கும். அது மக்கள் உங்களை குறை கூறும்படியான நிலைமையை ஏற்படுத்தும் என்பதை நான் இந்த மாமன்றத்திற்கு சொல்லித்தான் ஆகவேண்டும்.

இதில் பல நண்பர்கள், கடந்த 6 வது சட்டமன்றத்திலே இருந்தார்கள். 1979 ஆம் ஆண்டு அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு அனுபவ ஆண்டாக இருந்தது என்பதை நீங்கள் எடுத்துக் கொள்கிறீர்களா ? இல்லையா? என்பதை நான் கேட்க விரும்புகிறேன். கடுமையான தாக்குதலுக்கு நீங்கள் உள்ளானீர்கள். பலவிதமான சிக்கல்கள் உங்கள் முன்னாலே வந்தது. மக்களிடத்திலே சில செல்வாக்குகளை இழக்கவேண்டிய அளவிற்கு நீங்கள் ஆளானது உங்களுக்குத் தெரிந்ததே. 1980 ஆம் ஆண்டு பிப்ரவரி மாத சட்டமன்ற நடவடிக்கைகளை நீங்கள் புரட்டிப் பார்க்க வேண்டுமென்று நான் உங்களை வினயத்தோடு கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் மூலம் இந்த சட்டமன்றத்தில் பல சட்டங்களை நிறைவேற்றினீர்கள். ஏழை உழவர்களுக்கு நிலம் கொடுக்க வேண்டும், பினாமி நிலங்களைக் கைப்பற்ற வேண்டும், சாதாரணமான விவசாய மக்களுக்கு 75—25 வாரம் கொடுக்க வேண்டும், வேலை இல்லாத பட்டதாரிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்பதற்கான சட்டங்கள் எல்லாம் அப்போது நிறைவேற்றப்பட்டது. ஆழ்ந்த கசப்பு நிறைந்த 79 ஆம் ஆண்டு அனுபவத்திற்கு ஆளானீர்கள். 80 ஆண்டு ஜனவரி பார்லிமெண்ட் தேர்தல் தோல்விக்குப் பின்னாலே, மக்கள் மத்தியிலே அவர்களுக்குப் பின்னாலே இணைந்து நிற்க நேரிட்டது. இணைந்து நிற்பது என்றால் திருவிழாவிலே கூட்டும் கூட்டமாக இணைந்து நிற்பது என்பதல்ல. அவர்களுடைய கோரிக்கைகளுக்காக கொள்கைக்காக ஏழ்மைக்காக, வறுமைக்காக, துன்பத்திற்காக மாநில அரசு இணைந்து நின்றால்தான், மன்னாதி மன்னன் டில்லியிலே கோலோச்சினாலும் கொடுமையான, அக்கிரமமான சட்டங்களைப் போட்டாலும், அவர்கள் கைதூக்கிவிடுவார்கள் என்ற அனுபவம் இந்த அமைச்சர் அவைக்கு இருந்ததா இல்லையா? அப்படிப்பட்ட அனுபவத்தைப்பற்றி நான் இந்த இடத்திலே உங்களுக்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அப்படிப்பட்ட நிலையிலே இருந்து மாற்றப்பட்டு ஒரு பயங்கரமான நிலைக்கு நீங்கள் போகிறீர்கள் என்று நான் சந்தேகப்பட வேண்டியவனாக இருக்கிறேன். இதனால், விபரீத விளைவு ஏற்படும் என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து நான் ஒன்றைச் சொல்வேன். மாண்புமிகு நண்பர்களே, உறுப்பினர்களே, அமைச்சர் அவையைச் சேர்ந்த அமைச்சர் பெருமக்களே, உங்கள் முன்னால் நிற்கும்படியான அரசு எதனால் உருவானது? இன்று நம்முடைய நாட்டிலே இருக்கக்கூடிய கோடிக்கணக்கான மக்கள் போராடுகின்ற போது, தேசிய பாதுகாப்புச் சட்டம் என்பது புதிய உருவிலே வருகின்றது. ஜனாதிபதி

ஆட்சி என்ற புதிய உருவிலே வருகின்றது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அவைகளையெல்லாம் வரவேற்கின்ற விபரீத காட்சிகளைக் காணுகின்றபோது, ஏன் இந்த சரிவிற்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு போகின்றது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இது உங்கள் கைகளை பலப்படுத்தாது, உங்கள் கொள்கையை பலப்படுத்தாது என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். வர்ணனைகள் ஏராளமாக இருக்கிறது; அதை நான் வரவேற்கிறேன். மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டு மென்று சொல்லியிருக்கிறார்கள். எப்படி நிவாரணம் வழங்க முடியும் என்பதைச் சொன்னால் என்னால் புரிந்து கொள்ள முடியும். முப்பது ஆண்டுகளாக முடியவில்லை, 3 ஆண்டுகளாக முடியவில்லை, முட்டி நொறுங்கி விலைகள் ஏறி, பொருளாதாரம் சிக்கலாகி, உற்பத்தி மந்தமாகி கிராமங்களில் கோபம் விளைந்து அவர்கள் வேலைக்காக போராடுகிற காலத்திலே இந்த நிவாரண நடவடிக்கை கடலிலே கரைத்த பெருங்காயம்தான். மக்களுடையகோபத்திற்குக் காரணம் என்ன? நம்மை இன்றைக்கு சிக்க விட்டு விட்டு மத்திய ஆட்சி தப்பித்துக் கொள்ளும். இந்தச் சூழ்நிலையில் இந்த அரசாங்கத்தினுடைய கொள்கைகள் மாறுகின்றன. இன்றைக்கு என்ன பேசுகிறார்கள். நம் தமிழ்நாடு உயர்நீதி மன்றத்தினுடைய தலைமை நீதிபதியை மாநில அரசைக் கலக்காமல் நம்முடைய நாட்டினுடைய சட்டதிட்டங்களைக் மதிக்காமல் மாற்றினார்கள் என்றால் கோபதாபம் எழுவதற்கு அடிப்படை காரணம் என்ன? மாற்றக் கூடாது என்று இந்த சபை கோர வேண்டும். இந்த நாட்டினுடைய அரசியல் கட்சிகளிடம் கோர வேண்டுமென்ற உணர்வு, ஜனநாயக உணர்வு வளர்கிற காலத்திலே மறுக்க முடியாமல் நம்முடைய முதலமைச்சர் கடிதம் எழுதியிருக்கிறார்கள். நான் அதை வரவேற்கிறேன். இதிலிருந்து எப்படிப்பட்ட நிலைமைகள் எழுகின்றன. (மணி அடிக்கப் பட்டது).

இன்றைக்கு எரிசாராயம் பற்றி ஏராளமான புகார்கள், தகராறுகள் இந்த மாமன்றத்திலே எழுப்பப்படுகின்றன. அமைச்சர் எஸ். டி. எஸ். அவர்கள் போதுமான தகவல்களை வைக்கிறேன் என்றும் முழு விவரங்களோடு எவரையெல்லாம் தாக்க வேண்டுமோ தண்டிக்க வேண்டுமோ அதைச் செய்யலாம் என்று சொல்லி இருக்கிறார்கள். நான் திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அவர்கள் இந்தப் பிரச்சினைகளை முன்வைத்தது பற்றி நான் வரவேற்கிறேன். ஒரு எதிர்க் கட்சி என்ற முறையிலே ஆற்ற வேண்டிய பணிகளை ஆற்றியே தீரவேண்டும். ஆனால் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையில் மிகப் பெரிய வேதனையோடுதான் சொல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம். தமிழ்நாட்டில் அண்ணாவின் சிறந்த கொள்கைகளை பாரம்பரியத்தை முன் கொண்டு செல்லும் படியான கட்சி என்று இன்று ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் பலத்த போட்டிகள் இருக்கக்கூடிய நிலைமையைக் காண்கிறோம். நான் இந்த அறிக்கையிலே அண்ணாவின் கொள்கைகள்



எங்கே இருக்கின்றன என்று தேடுகிறேன். கலைஞர் அவர்களும் எதிர்க்கட்சியினரும் தமிழ்நாட்டில் நிகழ்த்திவரும்படியான செய்கைகளைப் பார்க்கிறபோது ஆளுங்கட்சியின் தவறான கொள்கைகளை உந்தித்தள்ளி தவறுகளைத் திருத்தி ஒரு முற்போக்கான திசையில் கொண்டு போகக் கூடிய செயல்களா என்றால் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. நேரம் இல்லை. சபாநாயகர் அவர்கள் தலையிடுகிறார்கள். ஈரான் — ஈராக் இடையே வரும்படியான சண்டைக்குக் கூட இந்த மாநில அரசு தான் காரணம் என்று கலைஞர் கூறுவாரோ என்னவோ? எதற்கெடுத்தாலும் மாநில அரசைச் சுட்டிக் காட்டுகிறார்கள். ஜனநாயகம் வளர்ச்சி அடைவதற்கு ஜனங்களுடைய பிரச்சினைகள் தீர்வதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் உருப்படியான கட்சியாக இல்லாமல் நீங்கள் இரண்டு பேர்களும் போட்டி போட்டுக் கொண்டு இந்திராவை யார் பிடிப்பது என்று முந்திப் போகக்கூடிய போக்கை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எதிர்க்கிறது. அதை கைவிடவேண்டுமென்று வற்புறுத்தி அமர்கிறேன்.

**திரு. துரை முருகன்** : நாட்டிலே அடிக்கிற புயலைக் கூட கலைஞர் கருணாநிதிதான் தூண்டிவிடுகிறார் என்று முதலமைச்சர் அடிக்கடி கூறுகிறார் என்பது திரு வரதராஜன் அவர்களுக்குத் தெரியுமோ தெரியாதோ?

**திரு. சா. கிருஷ்ணமூர்த்தி** : பேரவைத் தலைவரவர்களே, 1981 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 21 ஆம் நாளன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தில் என்னுடைய கருத்துக்களை எடுத்தியம்புகிறேன்.

தமிழ் என்னும் பூங்காவில் வேற்றுமொழிகள் எங்கணும் புகாதவாறு பாதுகாத்த சொல்லின் ஏருழவர் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் அந்த அண்ணாவின் கொள்கைளை சிந்தாமல் சிதறாமல் கடைப்பிடிக்கும் அண்ணாவின் அரசு மதுரையில் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டினை மிகச் சிறப்பாக நடத்தி தமிழ்ப் பெருங்குடி மக்கள் மட்டுமல்லாமல் உலகின் பல்வேறு பெருங்குடி மக்கள் எல்லோரும் வந்து, தமிழரின் பெருமையையும் வரலாற்றுச் சிறப்பையும் விளக்கியபோது தமிழ்க் கவிஞன் கூறியதுபோல்

[பிற்பகல் 12-40]

''ஒப்பரிய தமிழ்க் குருதி ஓடுதடா உடம்பில்
எப்பெரிய எதிரிகள் வந்தாலும் எதிர்த்து வெல்ல என்னால்
இயலும் அந்த
முப்பெரிய சந்ததியில் தோன்றியவன் நான் இதோ
செப்பரிய காரியத்தைச் செய்கின்றேன் தமிழுக்காக,
தமிழருக்காக''

என்ற உணர்வு என் நெஞ்சில் நிற்றது.

தமிழ்நாட்டின் பின்னணியில் நாம் வாழ்வது போன்றதொரு உணர்வும் ஏற்பட்டது. மாநாட்டின் மூலம் தமிழ்ப் பண்பாட்டின் பொலிவும், இலக்கியத்தின் பெருமையும் உலகுக்கு உணர்த்தப்பட்டது.

தமிழ்நாட்டின் மீது ஒருபோதும் இந்தி திணிக்கப்பட மாட்டாதென்று இந்தியத் தலைமை அமைச்சர் கூறியதைத் தமிழக மக்கள் வாழ்த்தி வரவேற்கிறார்கள். அதே சமயத்தில் மத்திய அரசுக்கு விடுக்கப்பட்ட அறிக்கைகளும், தொடுக்கப்பட்ட கேள்விகளும் தமிழரின் நலன் காக்கும் செய்திகளாகும்.

தமிழைப் பயிலுவதற்காக இந்நாட்டிற்கு வருகின்ற வெளிநாட்டு மாணவர்களுக்குத் தாராளமாக படிப்புத் தொகை வழங்குமாறு வேண்டுதல்;

வெளி நாடுகளில் உள்ள மக்கள் தமிழ் கற்க விரும்பினால் தமிழ் ஆசிரியர்களை அங்கு அனுப்பி வைக்க மத்திய அரசு துணை நிற்க வேண்டும்.

மதுரையைத் தலைமை இடமாகக் கொண்ட உலகத் தமிழ்ச் சங்கம் ஏற்படுத்தித் தமிழ் ஆய்ந்த புலவர்கள் இங்கு பணியாற்றுவர். இது பல உலகத் தமிழ்சங்கங்களுடன் தொடர்பு கொண்டு இயங்கும்.

''எங்கும் தமிழ் எதிலும் தமிழ்'' எனும் கோட்பாட்டைச் செய்யும் தமிழக அரசுக்கும்—புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்களுக்கும் எங்கள் மனமுவந்த வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழை மேய்ந்தவர்கள் இதனைக் குறைகூறும்போது அவர்களை நாங்கள் கேட்பதெல்லாம்,

Is the World fair to you?

உலகம் உங்களிடம் நியாயமாக இருக்கிறதா?

அதோடு மட்டுமல்ல; அரசியல் பகையோடு குறைகூறும் அரசியல்வாதிகளை நாங்கள் கேட்பதெல்லாம் எதையும் குறை சொல்லாதீர்கள்; ஒரு அரசியல்வாதியின் பாதை பசும்புல்தரையாக இருந்திருக்கலாம்; பூத்துக் குலுங்கும் பூஞ்சோலையாகவும் இருந்திருக்கலாம்; பாலைவனமாகவும் இருந்திருக்கலாம்; பாலைவனத்தில் குளிர்ச் சோலையையும் கண்டிருக்கலாம்; இது வாழ்வின் தேரோட்டங்கள்.





தமிழ் மொழிக்காக, தமிழருக்காக இந்த அரசு தீட்டிய எண்ணங்கள், சிந்தனைகள், இன்ப நினைவுகள், நடப்புகள், காலதேச வர்த்தமானங்களைத் திரும்பிப் பார்த்தால் என் மனக்கண்களில் நல்லவைதான் தென்படுகின்றன.

தேனிலிருந்து சுவையையும், பூவில் இருந்து மணத்தையும், பிரிக்க முடியாதோ அவ்வாறே தமிழ்மக்களிடம் இருந்து டாக்டர் புரட்சித் தலைவரை ஒருபோதும் பிரிக்கமுடியாது.

நுகர் பொருள்களின் உயர்வு ஏதும் ஏற்படாமல் நியாயமான விலையில் இரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள் டீசல் போன்ற இடு பொருள்கள் வழங்குதல் உயர் கொள்முதல் விலை அளித்தல் போன்ற எல்லா வகையான ஊக்கமும், ஆக்கமும் உழவர்களுக்கு வழங்கவேண்டுமென அரசு விரும்புவதைப் பாராட்டுகிறேன். விவசாயிகள் உற்பத்திச் செய்யும் பொருளுக்கு உரிய விலையை நிர்ணயமாக்க மத்திய அரசுடன் மாநில அரசு தொடர்பு கொண்டதை மனம் உவந்து வாழ்த்திப் பாராட்டுகிறேன்.

காவல் துறையின் நிலையை நன்கு அறிந்த தமிழக அரசு—புரட்சித் தலைவரவர்கள் அவர்களுக்கு மலிவு விலையில் இன்றியமையாத பொருட்கள், இடர்படி வழங்குதல், காவல் வீட்டு வசதிக் கழகம் இவற்றை ஏற்படுத்தித் தந்தமைக்கு எங்கள் வணக்கத்தையும் மனமுவந்த பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள வேலையில்லாத இளைஞர்கள் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பின் அவர்கட்கு முன்னுரிமை அளித்து ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவருக்காவது வேலை தர அரசு நடவடிக்கை எடுத்ததைப் பாராட்டுகிறேன். படித்தவர்களின்மீது பாசமும் பற்றும் கொண்டு தமிழக அரசு, தமிழகத்தை ஆட்சி செய்கின்ற புரட்சித் தலைவரவர்கள் ''கருகிய மொட்டுகளாக நடமாடும் கைதிகளாகப் படித்தவர்கள் இருக்கக்கூடாது'' என்பதில் திண்ணமாக கருத்து உடையவர் என்பது இதன் மூலம் மெய்ப்பித்துக் காட்டப் படுகிறது.

நல்ல நிலங்களைத் தரிசாகப் போட்டாலோ அல்லது உணவுப் பயிர்கள் பயிரிடுவதற்கு மாறாக உழவர்களைப் பட்டினி போடும் வகையில் சவுக்கு போன்ற வேறு பயிர்களைப் பயிரிட்டாலோ அத்தகைய நிலங்களை அரசு எடுத்து நிலமற்ற உழைக்கும் விவசாயிகளுக்குப் பங்கிட்டுக் கொடுக்கும் வகையில் சட்ட முன் வடிவு கொண்டுவரப்படுவதை நாங்கள் மனமுவந்து வரவேற்கிறோம்.

நிர்வாகத்தைச் சீரமைப்பது இன்றியமையாதது என்பதனை உணர்ந்த அரசு இதனைச் செயலாக்கும் வகையில் பகுதி நேர கிராம அதிகாரிகள் அமைப்பை, காலத்துக்கு ஒவ்வாத காரணத்தாலும், கிராம நிர்வாகத்தில் தற்கால தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்ற அடிப்படையிலும் மாற்றியமைக்க முடிவு செய்ததைப் பாராட்டுகிறேன்.

தமிழ்நாட்டில், குறிப்பாக பன்னெடுங்காலத்திற்கு முன்பு ஒரு கவிஞன் சொன்னதைப் போலப் புரட்சி இந்த நாட்டினிலே வரவேண்டும். அந்தப் புரட்சி எத்தகைய புரட்சியாக அமைய வேண்டுமென்று அந்தக்கவிஞனிடத்திலே கேட்டபொழுது, "என்ன எழுதினும் என்னபேசினும் ஏழைக்கு ஒரு பயன் சேர்ந்ததா! அவர் எரியும் சாப்பசி தீர்ந்ததா? பொன்னை உருக்கினோம், புதுமை பெருக்கினோம், பொதுமை மலர்ந்ததா? இல்லை புரட்சித் தான் எல்லையே! தென்னை காய்த்தது, மாவும் பழுத்தது. தென்னீர் வயல்பயிர் காய்ந்தது, நலமே கேட்டும் நாள்தோறும் வாய்த்தது. சின்னம் சிறியவன் பென்னம் பெரியனால் சீரழியும் நிலை தொடர்ந்ததே!" என்று கவிஞன் உளம் நொந்து, மிக அழகாக வடித்துத் தந்த அந்தக் கவிதைக்குப் பொருளாக இன்றைக்குத் தமிழகத்தில், குறிப்பாக, கிராமப் புறங்களிலே, சூறையாடப்பட்டு, வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மக்களுடைய வாழ்கையில் வெறுப்பை சம்பாதித்த கிராம அதிகாரிகளுடைய நடவடிக்கைகளைக் கண்டித்து, அவர்களுடைய உத்தியோகங்களைத் தூக்கி எறிந்த புரட்சித் தன்மையை வாழ்த்தி வரவேற்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, கிராம மக்களின் பசி, பட்டினியைப் போக்கும் வேலைக்கு உணவுத் திட்டம் இப்பொழுது திருத்தியமைக்கப்பட்டு, கிராமப்புற வேலை வாய்ப்பு தேசியத் திட்டமாக பெயர் பெற்றிருப்பதை வாழ்த்தி வரவேற்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, தமிழகத்தில் 376 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. அவற்றில் 69 தற்பொழுது வளர்ச்சி வட்டாரங்களாக இருந்து பணியாற்றுகின்றன. நான் இந்த அரசை விரும்பி, வேண்டிக் கொள்வதெல்லாம், வளர்ச்சி வட்டாரங்களைத் தேர்ந்தெடுப்பதோடு மட்டுமல்லாமல், வளர்ச்சிப் பகுதிகளிலே சேர்க்கப்படாத ஒன்றியங்களில் சில வேலைகள் எல்லாம் நடைபெறாமல் இருந்து கொண்டிருக்கின்றன. அந்த வேலைகளைத் துரிதப்படுத்தி, உடனடியாக நடத்தித் தர வேண்டுமென்று இந்த அரசை விரும்பி, வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளில் ஒரு பிரிவினர் இன்றைக்கு நடத்திய போராட்டங்களைத் தமிழகம் அறிந்து கொண்டிருக்கிறது. விவசாயிகளில் ஒரு பிரிவினர் நடத்திய போராட்டங்களில் நகரங்களுக்கு இன்றியமையாத பொருள்கள் செல்வதைத் தடுத்தனர். அதோடு மட்டும் அல்ல, சில இடங்களில் பால் போன்ற உணவு பொருள்





களைப் பாழ்படுத்தினர். அத்தகையச் செயல்களைத் தடுத்து சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கும் வண்ணம், அவசரச் சட்டம் கொண்டு வந்ததற்காக, நாங்கள் மெத்த மகிழ்ச்சி அடைகிறோம். அதனை வரவேற்கிறேன். நாட்டு மக்களுக்கு நல்ல பல திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருக்கும் புரட்சித் தலைவரின் எண்ணங்கள் ஈடேறாமல் இருக்க, தடுக்க முயற்சிப்பதையும், பொய் உரைகளைக் கூறும் அரசியல்வாதிகளைப் பார்த்து, எங்களைப் போன்று இருக்கின்றவர்கள் கேட்பதெல்லாம்,

It is time to put more truth in politics. The time has come for persons in political life to face the truth and speak the truth.

அரசியலில் உண்மைகள் உலவிட வழி வகுத்திட வேண்டிய நேரம் வந்து விட்டது. அரசியல் வாழ்வில் உள்ளவர்கள் உண்மையைப் பேசவும், உண்மையைக் கூறவும் முன்வரக்கூடிய காலத்திலே நாம் வாழ்கிறோம் என்பதை உணர்ந்து எதற்கெடுத்தாலும் குறையையே சொல்லிப் பிழைப்பவர்களுக்கு, புரட்சித் தலைவருடைய அரசு பல நன்மைகளை எடுத்து இயம்பிக் கொண்டிருக்கிறது. நாட்டுத் தலைவர், புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மலுடைய அரசை மக்கள் வாழ்த்துகிறார்கள். வரவேற்கிறார்கள் என்று கூறி, என்னுடைய உரைக்குத் திரையிட்டு அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

*திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கருத்தைத் தெரிவிக்கக் கூடிய முறையிலே நான் இந்த அவையிலே பேச முற்படுகிறேன். ஆளுநர் உரையிலே, பொதுவாக, மைய அரசு, நம்முடைய மாநிலத்தின் அதிகாரங்களிலும், மாநிலத்தின் பொருளாதாரத்திலும், நீதித் துறையிலும் சமீப காலத்திலே எடுத்து வரக்கூடிய அதிக குறுக்கீடுகள் சம்பந்தமாக அது கண்டும் காணாத போக்கை, மாநில அரசு கடைப்பிடிக்கக்கூடியதாகத்தான்படுகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

தமிழ் ஆராய்ச்சிப் பணி தமிழகத்திலே நடத்தப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு, மதுரையிலே ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு நடத்தப்பட்டது. அதனுடைய முடிவாக, உலகத் தமிழ்ச் சங்கம் ஏற்படுத்த அரசு முடிவெடுத்ததை வரவேற்கிறோம்.

மொழி சம்பந்தமாக இந்தியத் தலைமையமைச்சர் இந்தியைத் தாய் மொழியாகக் கொள்ளாத மக்கள் மீது வலுக்கட்டாயமாக இந்தி திணிக்கப்படமாட்டாது என்று அளித்த வாக்குறுதியைப் பெரிதாகக் கூறப்பட்டுள்ளது.

அதே மாதிரி வாக்குறுதிதான் ஏற்கனவே ஜனதா அரசின் சார்பிலும் பதவியிலே இருந்த பிரதம அமைச்சர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்களாலும் தரப்பட்டது. நாம் விரும்புவது, தமிழக மக்கள் விரும்புவது, நேருவின் உறுதி மொழி, இந்தி பேசாத மக்கள் விரும்பும்வரை ஆங்கிலம் துணை மொழியாக நீடிக்கும் சட்டபூர்வமான பாதுகாப்பு, அது உறுதியாக நிலைநாட்டப்பட வேண்டுமென்பது தமிழக மக்களுடைய கருத்து, அது தெளிவாக இருக்கிறது. அது நிலைநாட்டப்பட வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12–50]

இந்தித் திணிப்பு இல்லை என்று ஒருபுறம் வாக்குறுதி அளித்துவிட்டு, மறுபுறத்தில் மத்திய அமைச்சரகத்திலேயும், மத்திய அரசு அலுவலகங்களிலேயும் இந்தி மொழியைத் திணிக்கும் நடவடிக்கைகள் இன்றைய தினம் எடுக்கப்பட்டு வருகின்றன. தமிழகத்திலே இருக்கக்கூடிய மக்கள் இந்தி படிக்கவேண்டாம், இந்தியிலே பேசவேண்டாம் என்பதால் மட்டும் தமிழக மக்களுக்கு நியாயம் வழங்கியதாக இருக்காது. அதற்குப் பதிலாக மத்திய அரசின் அலுவலகங்களிலே இந்தியிலே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை உன்னிப்பாகக் கவனித்து அதை மாற்றுவதற்கு, ஆங்கிலத்திலும் மத்திய அரசின் நடவடிக்கைகள் நடத்த தொடர்ந்து முயற்சிக்கவேண்டும், என்று தமிழக மக்களின் குரலை எடுத்துக் காட்டவேண்டும் என்று விரும்புகிறேன்.

இதே அடிப்படையிலே பார்ப்போமானால் இன்றைய தினம் தமிழகத்தின் உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியை கேரளா மாநிலத்திற்கு மாற்றி இருக்கிறார்கள். இது நீதித் துறையிலே மத்திய அரசு குறுக்கிடுவதைத்தான் காட்டுகிறது. தமிழகத்தின் உச்ச நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியை அவர்கள் தமிழக மக்களுக்கு, அவர்களது தாய் மொழி தமிழ் மொழியிலே பேசுவதை, அவர்களது உணர்வைப் புரிந்து கொண்டு தீர்ப்பளிக்கக்கூடிய வாய்ப்பை, பறிக்கக்கூடிய முறையிலே இந்த மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதையும், அதிகாரத்தை யதேச்சாதிகாரமாகப் பயன்படுத்தி இந்த மாதிரி மத்திய அரசு செய்து வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, ஆறாவது ஐந்தாண்டு திட்டத்திற்கு 3,150 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கான திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்று பெருமையோடு ஆளுநர்உரையிலே குறிப்பிடப்பட்டுள்ளது. ஐந்தாவது திட்டத்தைக் காட்டிலும் மூன்று மடங்கு அதிகமான செலவு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மத்திய அரசு நிபந்தனை என்ன? இதற்கான நிதி ஆதாரத்தை மாநில மக்களிடமிருந்து பெறக்கூடிய பொறுப்பை மாநில அரசு ஏற்றுக் கொண்ட



தற்குப் பின்னர்தான் இதற்கான அங்கிகாரம் தரப்பட்டிருக்கிறது. தமிழக மக்கள் அதிகமான சுமையை, வரியை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையோடு இந்தத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். மாநில அரசுக்கு அதிகமான வரிகளை விதிக்க வேண்டும். அதே நேரத்தில் சகல அதிகாரங்களையும் தன்னிடத்தே வைத்திருக்கிற, நிதி ஆதாரங்களைத் தன்னிடத்தே வைத்திருக்கிற, மத்திய அரசு இந்த மாநிலத்திற்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டில் இன்னமும் பாரபட்சம் கடைபிடிக்கின்றது என்கின்ற நிலைமையைத்தான் இந்த கவர்னர் உரை சுட்டிக்காட்டுகிறது. அத்தகைய நிலைமையைப் போக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நிதி ஒதுக்கீட்டில் மத்திய அரசு குறுக்கிடுகின்ற அதே நேரத்தில் இன்றைய தினம் 25,000 கோடி ரூபாய் கறுப்புப் பணத்தை வெளியே கொண்டுவருவதற்கு அவசரச் சட்டம் கொண்டு வந்துள்ளது அனைவருக்கும் தெரியும். அதன்படி 10 ஆண்டுகள் கழித்து 10,000 ரூபாய், 12,000 ரூபாய் வெள்ளைப் பணமாக மாறும் என்ற அடிப்படையில் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆகவே இன்றைய தினம் கறுப்புப் பணம் நம் நாட்டினுடைய பொருளாதாரத்தை, நம்முடைய மக்களுடைய வாழ்க்கையை எந்த அளவுக்குச் சூறையாடுகிறது என்பதை அறிவோம். கறுப்புப் பணத்தை வெளியே கொண்டு வருவதற்காக, மக்களது வாழ்வைப் பாழ்படுத்தக் கூடிய, மக்களின் உயிரைப்பறிக்கின்ற அந்தக்கறுப்புப் பணத்திற்கு எதிராக மத்திய அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதற்கும் அந்த நடவடிக்கையின் பயனாக அதிக நிதி ஆதாரத்தைப் பெறக்கூடிய முறையிலே நடவடிக்கைகள் இல்லை. அந்த முறையிலே நம்முடைய தமிழகத்திற்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டை பெறுவதற்கான நடவடிக்கைகளும் இல்லை.

ஆகவே இம் மாதிரியான கொள்கைகளை எதிர்த்து இந்தப் போக்கினை மாற்றுவதற்கு தமிழகத்தின் குரலை எதிரொலிக்கக் கூடிய வகையிலே இந்தச் சட்ட மன்றத்திலே ஆளுநர் உரையிலே கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, விலைவாசி ஏற்றத்தைப் பற்றி குறிப்பிட்டு இருக்கிறார்கள். விலைவாசி ஏறுகிறது. அதற்கான அடிப்படைக் காரணம் என்ன என்பதைப் பற்றி இன்றைய தினம் புதிய ஆராய்ச்சிகள் மேற்கொள்வது போல், புதிய கருத்துக்கள் இந்தச் சட்டமன்றத்தில் ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. ஸ்தாபன ரீதியாக, அமைப்பு ரீதியாக திரண்டு இருக்கும் தொழிலாளர்கள் வாங்கும் சம்பளம்தான் விலைவாசி உயர்வுக்குக் காரணம் என்று பத்தாம்பசலித்தனமான, முதலாளித்

துவ பொருளாதார நிபுணர்கள் சொல்கிற வாதத்தை இன்றைக்கு ஆளுநர் உரையில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இதைத் தான் பிரதம மந்திரி இந்திரா காந்தி அவர்களும் 1975 ஆம் ஆண்டிலிருந்து கூறிவந்தார்கள். இன்றைய தினம் ஊதியம் அதிகம் கொடுப்பதன் மூலம் விலைவாசி உயரும், பண வீக்கம் ஏற்படும் என்று சொல்வது ஒரு தவறான கொள்கையாகும். அத்தகைய ஒரு தவறான கொள்கையை, கருத்தை இந்த மாநிலத்தின் சட்ட மன்றத்தில் ஆளுநர் உரை மூலம் குறிப்பிட்டு இருப்பது வருந்தத்தக்கதாகும்.

விலைவாசி ஏற்றத்திற்குக் காரணம் என்ன? அடிப்படைக் காரணம் என்ன? ஒரு பக்கத்தில் 2,500 கோடி ரூபாய் கறுப்புப் பணம் இருப்பதைப் பற்றி நான் குறிப்பிட்டேன். அதே நேரத்தில் விலைவாசி உயர்வும் இருக்கிறது. இதற்குக் காரணம், சமுதாயத்திலே உற்பத்தியையும் பொருள்கள் வினியோகத்தையும் நாட்டிலே இருக்கும் பெரு முதலாளிகள் கையில் வைத்து இருப்பதுதான் என்பது என்னுடைய கருத்தாகும். அந்தப் பெரு முதலாளிகள்தான் மக்களைச் சூறையாடுகின்ற அளவிற்கு, தங்களுடைய இலாபத்தையே குறிக்கோளாக வைத்துக் கொண்டு, இன்றைய தினம் அவர்கள் இஷ்டம் போல் விலையை உயர்த்துகிறார்கள், மக்களின் வாழ்வைப் பறிக்கிறார்கள். ஆகவே, இது சம்பந்தமாக இன்றைய தினம் குறிப்பிட்டு இருக்கும் கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்துக்கள் அல்ல.

விலைவாசியைக் குறைப்போம் என்பது கடந்த 30 ஆண்டு காலமாக எல்லாக் கட்சிகளும் ஆட்சிக்கு வருகின்றபோது, மக்களுக்குக் கொடுக்கக் கூடிய வாக்குறுதியாகும். விலைவாசியையும், பண வீக்கத்தையும் கட்டுப்படுத்துகிறோம் என்று கடந்த 30 ஆண்டு காலமாக வாக்குறுதி அளித்து வந்தபோதிலும், விலைவாசியும் குறையவில்லை, பண வீக்கமும் குறையவில்லை. அவைகள் மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டேதான் போகின்றன என்கிற காட்சியைதான் நாம் பார்க்கிறோம். விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கான உருப்படியான நடவடிக்கைகள் எடுப்பதற்குப் பதிலாக, விலைவாசி உயர்வுக்குக் காரணம் ஊதிய உயர்வு என்று சொல்வதன்மூலம், அந்த விலைவாசி ஏற்றத்தால் பாதிக்கப்பட்ட மக்களை, சாமான்ய மக்களை, மற்ற பகுதிக்கு எதிராக அமைப்பு ரீதியில் ஒன்றுபட்டுசெயல்படும் தொழிலாளர்களுக்கு எதிராகத்திருப்பிவிடுகின்ற ஒரு முயற்சியாகும் என்று சொல்லிக் கொள்கிறேன். இந்தக் கருத்தைத்தான் நம்முடைய இந்தியப் பிரதம அமைச்சர் அவர்களும் கூறுகிறார்கள். அதே கொள்கையை வைத்து இங்கேயும் நம்முடைய தமிழ் நாட்டில் உள்ள அமைப்பு ரீதியாக செயல்-





படும் தொழிலாளர்களுக்கு எதிராக சாமான்ய மக்களைத் திருப்பி விடுகின்ற முயற்சியாக இருக்கிறதோ என்று அச்சப்பட வேண்டியிருக்கிறது. இந்த விலைவாசி உயர்வைத் தடுக்க உருப்படியான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும். அவைகள் என்னவென்றால், அத்தியாவசியமான பொருள்களின் வினியோகம் பொறுப்பு முழுமையாக அரசே ஏற்றுக் கொள்ளவேண்டும். அதைப் போலவே, அவற்றைக் கொள்முதல் செய்யும் பொறுப்பையும் அரசே மேற்கொள்ள வேண்டும் என்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

அமைப்பு ரீதியாகத் திரண்டு இருக்கக் கூடிய தொழிலாளர்களாக இல்லாமல் இருக்கும் கைத்தறித் தொழிலாளர்கள், பீடி தொழிலாளர்கள், டானரி தோல் பதனிடும் தொழிலாளர்கள், மற்ற சிறு தொழில், தீப்பெட்டித் தொழிலாளர்கள், மீன் பிடிக்கும் தொழிலாளர்கள் போன்ற பல்வேறு தொழிலாளர்களைப் பற்றிக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் அத்தனை பேரும் இந்த நாட்டில் உள்ள பெரு முதலாளிகளின் கையில் அகப்பட்டுக் கொண்டு, எந்த அளவிற்கு வதைக்கப்படுகிறார்கள், நாசப்படுத்தப்படுகிறார்கள், நசுக்கப்படுகிறார்கள் என்பதை நாம் பார்க்கலாம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்றைய தினம் தோல் பதனிடும் தொழிலை எடுத்துக் கொண்டால், டாட்டா, பிர்லா மற்றும் பெரு முதலாளிகள் கையில் பதனிடப்பட்ட தோல் ஏற்றுமதி அதிகாரங்கள் இருப்பதால், சிறு தோல் பதனிடும் தொழிலில் ஈடுபட்டு இருப்பவர்கள் வாழ்வு இழந்து, வேலை இழந்து பாதிக்கப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. அதே மாதிரி, ஒரிஸ்ஸா மாநிலத்தில் இருந்து பீடி இலைகளைத் தருவிக்கும் அதிகாரம் தமிழகத்தில் இருக்கும் பெரிய பீடி முதலாளிகளின் கையில்தான் இருக்கிறது. அதை அவர்கள் கையில் வைத்துக் கொண்டு, தங்கள் இஷ்டம் போல் விலை ஏற்றுகிறார்கள். அதனால் சாதாரண சிறு தொழில் அதிபர்களும் தொழிலாளர்களுடைய வாழ்வும் பாதிக்கப்படும் நிலைமையேற்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 1-00)

அதே மாதிரி, தீப்பெட்டித் தொழில் இருக்கிறது. விம்கோ தீப்பெட்டித் தொழிற்சாலை இந்த நாட்டிலே இருக்கிற மிகப் பெரிய தொழிற்சாலை. நம்முடைய மாநில அரசு தீப்பெட்டித் தயாரிக்கும் தொழிலை குடிசைத் தொழில் முறையில் அபிவிருத்தி செய்து, குடிசைத் தொழிலை ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறபோது மத்திய அரசாங்கமானது விம்கோ போன்ற பெரிய தொழிற்சாலைகளுக்கு அதிகமான லைசென்ஸ்களை கொடுத்து, அதன் மூலம் சிறு தொழில்கள் நசித்துப் போகின்றன. ஆகவே, மத்திய அரசின் பெரிய தொழில்களுக்கு லைசென்ஸ் கொடுக்கும் கொள்கையை மாற்றியமைத்து, சிறு

வருத்தத்தோ.டு கூற கடைமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய
மாநிலத்திலே
L.b.. c.ncilia ion m.chin ry i.s c.m. to a st.ndstill
அது முடக்கப் ட்டுள்ளது. அது இயங்கக்கூடிய நிலையிலே
இல்லை. மு. ல ளி.ளை பேச்சு வ. த்தைக்குக் கூப்பிட்
டால் அவர்கள் வர மறுக்கிறார்கள். அவர்களை வரவழைப்
பதற்கு இன்றைய தினம் எந்த நடவடிக்கையும் இல்லை. மாதக்
கணக்கிலே தொழில் தகராறுகள் நீடித்துக்கொண்டிருக்கின்றன.
பி. அண்டு சி. மில் மூடப்பட்டிருக்கின்றது. தொழில் தகராறு
சட்டத்தின் 12 (3) ஒப்பந்தம், வேலை நிறுத்தம் செய்யக்கூடிய
உரிமையை பறிக்கும் சட்டத் திருத்தங்கள் கொண்டுவரப்படும்
என அறிவிக்கப்பட்டிருக்கின்றது. தொழிலாளர்கள் வேலை
நிறுத்த உரிமையைப் பறிக்கக்கூடிய சட்டத்தைக் கொண்டு வரு
வதை அனுமதிக்க முடியாது. ஆனால் அதேநேரத்தில் முத
லாளிகள் தங்கள் இஷ்டப்படி கதவடைப்பு செய்கிறார்கள். அதை
நீக்குவதற்கான வழிவகைகள் காணப்படவில்லை. முதலாளிகளின்
கதவடைப்பு காரணமாக வால்பாறையிலே இருக்கக்கூடிய 7,000
தோட்டத்தொழிலாளர்கள் சென்ற 12ஆம் தேதியிலிருந்து பாதிக்
கப்படுகின்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது. அங்கிருக்கக்கூடிய
முதலாளிகள் தொழிலாளிகளை கதவடைப்பு செய்து பட்டினி
போடுகிறார்கள். இம்மாதிரியான நடவடிக்கைகள் அனுமதிக்கப்
பட்டு வருகின்றன. வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழி
லாளர்கள் கோர்ட்டுக்குச் செல்வதற்குக்கூட உரிமை மறுக்
கப்பட்டிருக்கின்றது. டி.ஐ. சைக்கிள் தொழிலாளர்கள் டி.வி.
எஸ். தொழிலாளர்கள் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை.
தொழிலாளர்கள் மீது போடப்பட்ட வழக்குகள் வாபஸ் பெறப்
படும் என்று முதல்வரால் கூறப்பட்டது. ஆனால் இன்னும்
வாபஸ் வாங்கப்படாத நிலை இருக்கின்றது. ஸ்கிரீனிங் கமிட்டி
நீக்கப்படவில்லை. இம்மாதிரியான பல்வேறு வகைகளில்
தொழிலாளர்களுக்கு விரோதமாக செயல்பட்டு வருகின்றது.
ஆனால் இவை அனைத்தும் தமிழகத்திலே இருக்கக்கூடிய முத
லாளிகளுக்குக் கனிந்த பயனைக் கொடுத்து வருகின்றது. தொழி
லாளிகளுக்குக் கனிந்த பயனைக் கொடுக்கவில்லை என்பதை வேத
னையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மணி அடிக்
கப்பட்டது).

சென்னை நகரின் குடிநீர் பிரச்சனைப் சம்பந்தமாக இந்த
அறிக்கையிலே குறிப்பிடப் ட்டிருக்கிறது. திருச்சி மாவட்டத்தில்
கட்டளைப் பொறி மதகின் கீழ் காவிரி ஆற்றிலிருந்து குடி
தண்ணீர் கொண்டுவரப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது.
இந்தத் திட்டத்தைப் பார்த்து இன்றைய தினம் திருச்சி மாவட்
டத்திலே இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு விவசாயம் பாதிக்
கப்படும் என்ற அச்ச உணர்வு ஏற்பட்டிருக்கின்றது. சாதாரண
மாக ஜனவரி மாதக் கடைசியில் காவிரியில் மேட்டூரிலிருந்து
தண்ணீர்விடுவது நிறுத்தப்படும். அதன்பிறகு கிடைக்கும் குறைந்த
நீரைக்கொண்டு கட்டளைக்குக் கீழே குளித்தலை முசிறி, லால்
குடி, திருச்சி தாலுக்காக்களில் ஒரு இலட்சம் ஏக்கர் நிலங்களுக்குத்





தற்சமயம் கிடைக்கும் தண்ணீர் கிடைக்காது என்ற காரணத்
தால் அங்கே பயிர் செய்யக்கூடிய விவசாயிகளின் நிலங்கள் பாதிக்
கப்பட்டுவிடும் என்ற அச்ச உணர்வு ஏற்பட்டிருக்கின்றது. நம்
முடைய பிரதம மந்திரி அவர்கள் சென்னை நகருக்கு கிருஷ்ணா
நதி நீரை அனுப்புவோம் என்று 1975-ல் வாக்குறுதி கொடுத்தி
ருக்கிறார்கள். அதன் தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்கப்
பட்டு வருகிறது என்று இந்த மன்றத்திலே அறிவிக்கப்பட்டி
ருக்கின்றது. ஆகவே, நம்முடைய மாநிலத்திலே உள்ள காவிரி
யிலிருந்து சென்னைக்குக் குடி தண்ணீர் கொண்டு வருகிறோம்
என்று சொல்லி இப்பொழுது கிடைக்கும் காவிரி நீரையே பகிர்ந்து
கொள்வது என்பதற்குப் பதில் கிருஷ்ணா நதியிலிருந்து தண்ணீர்
கொண்டு வந்து உபரியான நீர் நமக்குக் கிடைக்க நடவடிக்கை
எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்
கப்பட்டது)

திரு. மு. ஜான் வின்சென்ட் : பேரவைத் துணைத் தலை
வரவர்களே, கவர்னர் உரையின் மீது எனது மேலான சில கருத்
துக்களைக் கூறக் கடமைப்பட்டுள்ளேன். உரையின் ஆரம்பத்
திலே உலகத் தமிழ் மாநாட்டின் சீரும் சிறப்பு பற்றியும் உலகத்
தின் ஏராளமான பகுதிகளின் தமிழர்கள் கலந்து கொண்டமை
குறித்தும் பாராட்டியுள்ளனர். இந்தப் பாராட்டுக்குரியவர்
கள் ஏராளமான பேர் இருந்தாலும் இதனைச் செவ்வனே நடத்
திக் காட்டிய பெருமை தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலை
வரையே சாரும் என்பதில் யாருக்கும் எந்தவிதமான ஐயமும்
இல்லை. தமிழ் ஆர்வத்தையும் தமிழ் மக்கள் மீதுள்ள அன்பையும்
உலகத் தமிழர் மாநாடு தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டியது.
வெளிநாட்டிலிருந்து இந்த நாட்டிற்கு வருகிற மாணவர்களுக்கு
மத்திய அரசு உதவி புரிய வேண்டுமென்று மாநில அரசு சுட்டிக்
காட்டியதை இங்கு கவர்னர் உரை எடுத்துக் காட்டுகிறது. தவி
ரவும் வெளிநாடுகளிலிருந்து தமிழ் பயில வருகின்ற மாணவர்
களுக்கு உறுதுணையாக இருந்து தமிழாசிரியர்கள் தமிழை
வளர்க்க வேண்டும் என்ற திட்டத்தைத் தீட்டி வருகின்ற தமிழக
அரசையும் தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவரையும்
பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1–10)

மேலும் தமிழகத்தின் 6–வது ஐந்தாண்டு திட்டத்திற்காக தமி
ழக முதல்வரும் மற்ற அமைச்சர்களும், திட்டக் கமிஷனை
அணுகி 3,150 கோடி ரூபாயை நிர்ணயம் செய்து, அதன் மூல
மாகத் தமிழகத்திற்கு நல்ல பல திட்டங்களை செயல்படுத்த
இருக்கிற இந்த நேரத்தில், அவர்களைப் பாராட்டக் கட
மைப்பட்டிருக்கின்றோம்.

தொழில்களில் முனைந்திருக்கும் இலட்சக்கணக்கான தொழிலாளர்களைப் பாதுகாக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மீன்பிடித் தொழிலை எடுத்துக் கொண்டால், டாட்டா, பிர்லா போன்றவர்கள் கூட இன்றைக்கு மீன்பிடித் தொழிலில் இறங்கியிருக்கிறார்கள். சென்னைக்குப் பக்கத்திலே பிரிட்டானியா பிஸ்கட் கம்பெனி இருக்கிறது; அவர்களும் இன்றைக்கு அந்தக் கம்பெனியின் பெயரை பிரிட்டானியா இண்டஸ்ட்ரீஸ் என மாற்றியமைத்து, மீன்பிடிக்கும் தொழில் செய்யக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனால் சாதாரண மீனவர்கள், மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கிற ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

அதைப் போலவேதான் கைத்தறித் தொழிலாளர்கள் நிலையும் இருக்கிறது. அவர்கள் எல்லாம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம் மத்திய சர்க்காரின் கொள்கை பெரும் முதலாளிகளை ஊக்குவிப்பதாக இருப்பதுதான். ஆகவே, அவர்களுடைய கொள்கையை மாற்றியமைத்து, செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, உழவர்களுக்கு, உற்பத்தி பொருளுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டும், நியாயமான விலை கிடைக்க நம்முடைய மாநில அரசு எடுத்திருக்கும் நடவடிக்கை பாராட்டக் கூடியதாக இருக்கிறது. கரும்புக்குக் குறைந்தது 200 ரூபாய் கொடுக்க வேண்டும்; நெல்லுக்கு 130 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று நம்முடைய அரசு வாதாடி வருகிறது. ஆனால் மத்திய அரசாங்கம் அதை மறுத்து விட்டது. அதை வலியுறுத்தி பெற உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாநில அரசு 115 ரூபாய் என நெல்லுக்குக் கொள்முதல் விலை நிர்ணயித்து அறிவித்தது. அந்த விலையில் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன், புட் கார்ப்பரேஷன் மூலம் நம்முடைய மாநிலத்தில் நெல் கொள்முதல் செய்யப்பட வேண்டும். வியாபாரிகள் மூலம் அதிலும் குறிப்பாக, லெவி நெல் கொள்முதல் செய்தால், மத்திய அரசு நிர்ணயித்த விலையில் கூட வியாபாரிகள் கொள்முதல் செய்ய மறுத்துக் கொண்டிருக்கிறார்கள். அது விவசாயிகளைப் பாதிக்கும் திட்டம் என்பதால் அதை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





அடுத்து விவசாயக், கூட்டுறவுக் கடன் சம்பந்தமாக சொல்ல வேண்டுமானால் ஒரு மாநில அரசு 60 கோடி ரூபாய்க்குமேல் தன்னுடைய நிதியிலிருந்து தள்ளுபடி செய்திருப்பது வரவேற்கத்தக்கது. மத்திய அரசு ஒரு சிறு துளி கூட கொடுக்க மாட்டோம் என்று சொல்லிவிட்டார்கள். ரிசர்வ் வங்கியும் மறுத்து விட்டது நமக்குத் தெரியும். அப்படிப்பட்ட நேரத்திலே மாநில அரசு கொடுத்திருப்பது வரவேற்கத்தக்கது. அதே நேரத்தில் விவசாயிகளுக்கு கொடுக்க வேண்டிய சலுகைகளை, தள்ளுபடியை இன்னும் எவ்வளவு அளிக்க வேண்டும், எப்படி நிவாரணம் அளிக்க வேண்டும் என்பது பற்றி விவசாயச் சங்கப் பிரதிநிதிகளை அழைத்துப் பேசி, தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்தில் பருவ மழை பொய்த்து விட்டது. வடாற்காடு, புதுக்கோட்டை மாவட்டங்களில் குடிநீருக்குக் கூட பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது என்று ஆளுநர் அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. இது சரியான விவரம் அல்ல. மானாவாரி பகுதி அனைத்திலும் நம்முடைய மாநிலத்தில் பருவ மழை பொய்த்திருக்கிறது. எல்லா மாவட்டங்களிலும் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. எனவே வறட்சி நிவாரணப் பணிகளைத் தொடங்க அனைத்து ம வட்டங்களிலும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காவேரி தண்ணீர் சம்பந்தமாக 1974 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கி, இன்று வரையில் அந்தப் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. அதற்கு மத்திய அரசின் கொள்கை ஒரு காரணமாக இருக்கிறது. மத்திய அரசின் கொள்கையினால் மாநிலங்களுக்குள் தாவா ஏற்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. குண்டுராவ் அவர்கள் ஒரு சொட்டு தண்ணீர் கூட கொடுக்க முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய மாநில மக்களின் உரிமையை பாதுகாக்க விரைவான நடவடிக்கை எடுக்கவேண்டும்; மத்திய அரசுக்கு நம்முடைய கருத்தை எடுத்துச் சொல்லி, தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சிக்கு முக்கியமான தொடர்புடையது மின்சாரமாக இருக்கிறது. ஆகவே, மின்சார உற்பத்தியைப் பெருக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். தொழில் சம்பந்தமாக திட்டவட்டமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். அது பற்றிய நம்முடைய கொள்கையைத் தெளிவாக இங்கே அறிவிக்க வேண்டும்.

மற்றொரு விஷயத்தை மிகுந்த வருத்தத்தோடு அறிவிக்க விரும்புகிறேன். நம்முடைய அரசு பின்பற்றும் முன்னேற்றமான தொழிலாளர் கொள்கை கனிந்த பயனை தந்திருக்கிறது என்று கவர்னர் உரையில் கூறப்பட்டுள்ளது. அந்த கனிந்த பயனை யாருக்குக் கொடுத்திருக்கின்றது. தொழிலாளிகளுக்குக் கொடுத்திருக்கின்றதா என்பது வேதனையான விஷயமாக இருக்கின்றது. இந்த நாட்டிலே தமிழகத்திலே இருக்கக்கூடிய முதலாளிகளுக்கு தான் இது கனிந்த பயனை தந்திருக்கின்றது என்று

வருத்தத்தோடு கூற கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய மாநிலத்திலே

Labour conciliation machinery has come to a standstill

அது முடக்கப்பட்டுள்ளது. அது இயங்கக்கூடிய நிலையிலே இல்லை. முதலாளிகளை பேச்சு வார்த்தைக்குக் கூப்பிட்டால் அவர்கள் வர மறுக்கிறார்கள். அவர்களை வரவழைப்பதற்கு இன்றைய தினம் எந்த நடவடிக்கையும் இல்லை. மாதக் கணக்கிலே தொழில் தகராறுகள் நீடித்துக்கொண்டிருக்கின்றன. பி. அண்டு சி. மில் மூடப்பட்டிருக்கின்றது. தொழில் தகராறு சட்டத்தின் 12 (3) ஒப்பந்தம், வேலை நிறுத்தம் செய்யக்கூடிய உரிமையை பறிக்கும் சட்டத் திருத்தங்கள் கொண்டுவரப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கின்றது. தொழிலாளர்கள் வேலை நிறுத்த உரிமையைப் பறிக்கக்கூடிய சட்டத்தைக் கொண்டு வருவதை அனுமதிக்க முடியாது. ஆனால் அதேநேரத்தில் முதலாளிகள் தங்கள் இஷ்டப்படி கதவடைப்பு செய்கிறார்கள். அதை நீக்குவதற்கான வழிவகைகள் காணப்படவில்லை. முதலாளிகளின் கதவடைப்பு காரணமாக வால்பாறையிலே இருக்கக்கூடிய 7,000 தோட்டத்தொழிலாளர்கள் சென்ற 12ஆம் தேதியிலிருந்து பாதிக்கப்படுகின்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது. அங்கிருக்கக்கூடிய முதலாளிகள் தொழிலாளிகளை கதவடைப்பு செய்து பட்டினி போடுகிறார்கள். இம்மாதிரியான நடவடிக்கைகள் அனுமதிக்கப்பட்டு வருகின்றன. வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் கோர்ட்டுக்குச் செல்வதற்குக்கூட உரிமை மறுக்கப்பட்டிருக்கின்றது. டி.ஐ. சைக்கிள் தொழிலாளர்கள் டி.வி. எஸ். தொழிலாளர்கள் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை. தொழிலாளர்கள் மீது போடப்பட்ட வழக்குகள் வாபஸ் பெறப்படும் என்று முதல்வரால் கூறப்பட்டது. ஆனால் இன்னும் வாபஸ் வாங்கப்படாத நிலை இருக்கின்றது. ஸ்கிரீனிங் கமிட்டி நீக்கப்படவில்லை. இம்மாதிரியான பல்வேறு வகைகளில் தொழிலாளர்களுக்கு விரோதமாக செயல்பட்டு வருகின்றது. ஆனால் இவை அனைத்தும் தமிழகத்திலே இருக்கக்கூடிய முதலாளிகளுக்குக் கனிந்த பயனைக் கொடுத்து வருகின்றது. தொழிலாளிகளுக்குக் கனிந்த பயனைக் கொடுக்கவில்லை என்பதை வேதனையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மணி அடிக்கப்பட்டது).

சென்னை நகரின் குடிநீர் பிரச்சனைப் சம்பந்தமாக இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. திருச்சி மாவட்டத்தில் கட்டளைப் பொறி மதகின் கீழ் காவிரி ஆற்றிலிருந்து குடி தண்ணீர் கொண்டுவரப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இந்தத் திட்டத்தைப் பார்த்து இன்றைய தினம் திருச்சி மாவட்டத்திலே இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு விவசாயம் பாதிக்கப்படும் என்று அச்ச உணர்வு ஏற்பட்டிருக்கின்றது. சாதாரணமாக ஜனவரி மாதக் கடைசியில் காவிரியில் மேட்டூரிலிருந்து தண்ணீர்விடுவது நிறுத்தப்படும். அதன்பிறகு கிடைக்கும் குறைந்த நீரைக்கொண்டு கட்டளைக்குக் கீழே குளித்தலை முசிரி, லால்குடி, திருச்சி தாலுக்காக்களில் ஒரு இலட்சம் ஏக்கர் நிலங்களுக்குத்



தற்சமயம் கிடைக்கும் தண்ணீர் கிடைக்காது என்ற காரணத்தால் அங்கே பயிர் செய்யக்கூடிய விவசாயிகளின் நிலங்கள் பாதிக்கப்பட்டுவிடும் என்ற அச்ச உணர்வு ஏற்பட்டிருக்கின்றது. நம்முடைய பிரதம மந்திரி அவர்கள் சென்னை நகருக்கு கிருஷ்ணா நதி நீரை அனுப்புவோம் என்று 1975-ல் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். அதன் தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று இந்த மன்றத்திலே அறிவிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, நம்முடைய மாநிலத்திலே உள்ள காவிரியிலிருந்து சென்னைக்குக் குடி தண்ணீர் கொண்டு வருகிறோம் என்று சொல்லி இப்பொழுது கிடைக்கும் காவிரி நீரையே பகிர்ந்து கொள்வது என்பதற்குப் பதில் கிருஷ்ணா நதியிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து உபரியான நீர் நமக்குக் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது)

திரு. மு. ஜான் வின்சென்ட் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, கவர்னர் உரையின் மீது எனது மேலான சில கருத்துக்களைக் கூறக் கடமைப்பட்டுள்ளேன். உரையின் ஆரம்பத்திலே உலகத் தமிழ் மாநாட்டின் சீரும் சிறப்பு பற்றியும் உலகத்தின் ஏராளமான பகுதிகளின் தமிழர்கள் கலந்து கொண்டமை குறித்தும் பாராட்டியுள்ளனர். இந்தப் பாராட்டுக்குரியவர்கள் ஏராளமான பேர் இருந்தாலும் இதனைச் செவ்வனே நடத்திக் காட்டிய பெருமை தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவரையே சாரும் என்பதில் யாருக்கும் எந்தவிதமான ஐயமும் இல்லை. தமிழ் ஆர்வத்தையும் தமிழ் மக்கள் மீதுள்ள அன்பையும் உலகத் தமிழர் மாநாடு தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டியது. வெளிநாட்டிலிருந்து இந்த நாட்டிற்கு வருகிற மாணவர்களுக்கு மத்திய அரசு உதவி புரிய வேண்டுமென்று மாநில அரசு சுட்டிக் காட்டியதை இங்கு கவர்னர் உரை எடுத்துக் காட்டுகிறது. தவிரவும் வெளிநாடுகளிலிருந்து தமிழ் பயில வருகின்ற மாணவர்களுக்கு உறுதுணையாக இருந்து தமிழாசிரியர்கள் தமிழை வளர்க்க வேண்டும் என்ற திட்டத்தைத் தீட்டி வருகின்ற தமிழக அரசையும் தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவரையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1–10)

மேலும் தமிழகத்தின் 6-வது ஐந்தாண்டு திட்டத்திற்காக தமிழக முதல்வரும் மற்ற அமைச்சர்களும், திட்டக் கமிஷனை அணுகி 3,150 கோடி ரூபாயை நிர்ணயம் செய்து, அதன் மூலமாகத் தமிழகத்திற்கு நல்ல பல திட்டங்களை செயல்படுத்தவிருக்கிற இந்த நேரத்தில், அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

அதே நேரத்தில் விலைவாசி உயர்வைப் பற்றிச் சொல்லுகிற நேரத்தில், வெளியே மேடையிலே பேசுகிற சில அரசியல் கட்சித் தலைவர்கள், மத்திய அரசுதான் விலைவாசி உயர்வுக்குக் காரணம் என்று எடுத்துச்சொல்ல தைரியம் இல்லாமலோ இல்லை, தமிழகத்திலுள்ள மக்களைத் திசை திருப்பி விட வேண்டும் என்று எண்ணுகிற காரணத்தினாலோ, விலைவாசி உயர்வுக்குத் தமிழக அரசுதான் பொறுப்பு-காரணம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் இங்கே ஆளுநர் உரையிலே விலைவாசி உயர்வுக்கு மாநில அரசு மட்டும் காரணமல்ல என்று சுட்டிக் காட்டியிருப்பதை மக்கள் நன்கு புரிந்து கொண்டிருப்பார்கள் என்றே நம்புகிறேன்.

இப்படிப்பட்ட விலை உயர்வைத் தடுக்கவேண்டும் என்று தமிழக அரசு எண்ணுகிற நேரத்தில், அதற்கு அத்துணை கட்சிகளும் உறுதுணையாக இருந்த, எந்தவித அரசியல் காழ்ப் புணர்ச்சியும் இல்லாமல், தமிழக அரசிற்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சமுதாயத்தில் எல்லாப் பிரிவினர்களுக்கும், குறிப்பாக நலிந்த பிரிவினர்களுக்கு நியாயமான விலையில் இன்றியமையாப் பொருட்கள் கிடைக்கச் செய்யும் பொருட்டு, பொது விநியோக முறையை வலுப்படுத்த வேண்டும் என்று குறிப்பிடப் பெற்றிருப்பது வரவேற்கத்தக்கது. அதேபோல் நுகர்பொருள்களின் விலையில் உயர்வு ஏதும் ஏற்படாமல், நியாயமான விலையில் இரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள், விதை போன்ற இடுபொருள்கள் வழங்குதல் உயர் கொள்முதல் விலை அளித்தல் போன்ற எல்லா வகையான ஊக்கமும் ஆக்கமும் உழவர்களுக்கு வழங்க இருக்கும் இந்தஅரசின் திட்டத்தைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், ஆளுநர் உரையில், நெல்லுக்கு ஒரு குவிண்டாலுக்கு ரூ. 130-ம், கரும்புக்கு ஒரு டன்னுக்கு ரூ. 200-ம் விலை நிர்ணயம் செய்யப்படவேண்டுமென மத்திய அரசை மாநில அரசு வலியுறுத்தி வந்துள்ளதாகவும், சாதாரண ரக நெல்லின் கொள்முதல் விலை குவிண்டாலுக்கு 105 ரூபாயாகவும், ஒரு டன் கரும்பின் குறைந்த அளவு விலை ரூ. 130 ஆகவும் மத்திய அரசு நிர்ணயித்துள்ளபோது, அதை மறுபரிசீலனை செய்ய வற்புறுத்திக் கொண்டே தமிழக அரசு ஒரு குவிண்டால் நெல்லின் விலையை 115 ரூபாயாகவும், ஒரு டன் கரும்பின் விலையை 175 ரூபாயாகவும் தானாகவே உயர்த்தி உள்ளதாகவும் குறிப்பிடப் பெற்றிருப்பதை, விவசாயிகளின் சார்பாகப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.



அடுத்து சிறு உழவர்கள், அல்லது சிறு விவசாயிகளின் கடனைத் தள்ளுபடி செய்வதற்கு உதவி செய்யுமாறு மத்திய அரசை மாநில அரசு கேட்டுக் கொண்டது, மத்திய அரசு அதை ஏற்றுக் கொள்ளவில்லை என்று குறிப்பிட்டிருப்பது வருந்தத்தக்கது. தேர்தல் முடிந்த பிறகு சென்னை வந்த மத்திய அமைச்சர் ஒருவர் இங்கே பேசுகிற நேரத்தில் நாங்கள் பதவிக்கு வந்து விட்டோம், உடனடியாக விவசாயிகளின் கடன்களைத் தள்ளுபடி செய்துவிடுவோம் என்று சொன்னார்கள். ஆனால் அதன் பிறகு அப்படி பேசவே இல்லை என்று தெளிவாகக் கூறி விட்டார்கள் ஆகையினால் மத்திய அரசு அந்தக் கடனை தள்ளுபடி செய்யும் என்ற நம்பிக்கையில் மாநில அரசு அதனை வலியுறுத்தி பலமுறை சொல்லியும் கூட இதுவரை மத்திய அரசு அதை நடைமுறையில் ஏற்றுக் கொள்ளவில்லை. இது வருந்தத் தக்கது ஆனால் மாநில அரசு நடுத்தர கால கடன்களையும் தண்ட வட்டியையும் ரூபாய் 42 கோடி வரை தள்ளுபடி செய்திருக்கிறது என்று ஆளுநர் உரையிலே போடப்பட்டிருக்கிறது. அதைப் பாராட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிலர் வரி கொடா இயக்கத்தை வளர்ப்பதற்கு உறுதுணையாக இருக்கிறார்கள். வரி கொடாத நிலையில் ஒரு அரசு எந்த முறையில் செயல்படும் என்பதை அனைவரும் அறிவார்கள் என்றாலும் கூட, எதிர்க்கட்சிகளாக, ஆளும் கட்சியை எதிர்த்துச் செயல் படவேண்டும் என்றே, இவ்வரி கொடா இயக்கத்திற்கு உறு துணையாக இருந்து சிலர் தூண்டி வருகிறார்கள்.

பருவமழை பொய்த்ததன் காரணமாக, புதுக்கோட்டை வட ஆர்க்காடு மாவட்டங்களின் சில பகுதிகளில் வறட்சி நிலை ஏற்பட்டதும், வறட்சிப் பணிக்காக 1·30 கோடி செலவில் புதிய கிணறுகள் தோண்டவும், பழைய கிணறுகளை ஆழப்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்று குறிப்பிடப் பெற்றிருக்கிறது. அதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிற அதே நேரத்தில், பல பகுதிகளில் இதேமாதிரி மழை பெய்யாமல் தண்ணீர் கிடைக்காத சூழ்நிலை ஏற்பட்டிருப்பதால் அங்கேயும் இத்தகைய நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும் அந்த சிறு விவசாயிகளின் வரிகளை ரத்து செய்யவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் அதேபோன்ற நிலை தென் பகுதிகளான நாங்குநேரி தாலுக்காவிலும் அநேக இடங்களிலும் உள்ளன, பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கும் அரசு நிவாரணம் அளிக்க வேண்டும்.

அடுத்து, கேரளத்தின் மேற்கே பாயும் ஆறுகளின் உபரி தண்ணீரை கிழக்கே திருப்பி விட்டால் இராமநாதபுரம் மாவட்டம் மிகவும் பயனடையும் என்று தெரிகிறது. அத்தோடு கடந்த பல ஆண்டுகளாக மழை பெய்யாது வறட்சி ஏற்பட்டு, தண்ணீர்

கிடைக்காத நிலை இருந்து வந்தது. அந்த நேரத்தில் விவசாயிகள் பயன் அடைகிற முறையில் இரண்டு திட்டங்கள் வலியுறுத்தப்பட்டு வந்தன.

கொடுமுடியாறு அணைத் திட்டம், பச்சையாறு அணைத் திட்டம் என்று இருக்கின்றன. கொடுமுடியாறு அணைத் திட்டம் முப்பது இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டும் திட்டம் நடைபெறவில்லை. இலட்சக்கணக்கில் ரூபாய் செலவு செய்த காரணத்தாலும் அதன் பயனாக 1,150 ஏக்கர் பயனடையும் என்ற காரணத்தாலும் அந்த அணைத் திட்டம் மூலமாக குடிநீர்ப் பிரச்னை தீர்க்கப்படும் என்ற காரணத்தாலும் அந்தத் திட்டத்தை இந்த அரசு நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பச்சையாறு அணைத்திட்டம் மூலமாக 11,000 ஏக்கர் பயனடையும் என்ற காரணத்தால் அதையும் நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இத்திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம் அரசாங்கம் தன்னிறைவு பெறுவதோடு கூட பொருளாதார அடிப்படையில் மிஞ்சுகின்ற நெல்லை அண்டை மாநிலங்களுக்கு அனுப்பக்கூடிய சூழ்நிலையும் ஏற்படும்.

அடுத்து, மீனளம் குறித்து அரசு பல நன்மைகளைச் செய்யும்போது நாங்குநேரி வட்டத்தில் உள்ள கடற்கறைப் பகுதிகளில் உள்ள மீனவர்களுக்கு பல பிரச்னைகள் வருகின்றன என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். ஸ்டீம் போட்டில் செல்கிறவர்கள் நாட்டுப் படகுகளில் செல்வோர்களின் வலைகளைக் கிழித்து எறிகிறார்கள் என்ற புகார் வரும்போது அதற்காக ஒரு குழு அமைத்து அவர்களுக்குள் எந்தவிதமான போட்டியோ பூசலோ இல்லாமல் மீன் பிடிக்க ஒரு எல்லைக்கோடு வகுத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தொழிலாளர்களுக்காக இந்த அரசு செய்துள்ள உதவி, சலுகைகளுக்காக அரசைப் பாராட்டுகிறேன். வரவேற்கிறேன். தொழிலாளர்கள் என்ற அடிப்படையில் பனையேறும் தொழிலாளி மரத்திலிருந்து கீழேவிழுந்து மரணம் அடைந்துவிட்டால் ரூபாய் 5,000 கொடுப்பது என்ற வகையில் இந்த அரசு எடுத்துள்ளநடவடிக்கைக்காக அரசைத்தொழிலாளர்கள் பாராட்டுகிறார்கள். நானும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதில், பனையேறும் தொழிலாளி மரத்திலிருந்து கீழே விழுந்து மரணம் அடைந்தால் போஸ்ட்மார்ட்டம் செய்தால்தான் ரூபாய் 5,000 கொடுக்கப்படும் என்று அதிகாரிகள் கூறுகிறார்கள். அந்த அடிப்படையைத் தளர்த்தி பனை மரத்திலிருந்து விழ காரணம் என்ன என்று பஞ்சாயத்தார், தாசில்தார், போலீஸ் அதிகாரி ஆகியோர் முடிவு எடுப்பதை வைத்து போஸ்ட்மார்ட்டம் செய்யாவிட்டாலும் கூட ரூபாய் 5,000 கிடைக்க வழி வகை செய்யவேண்டும்



அடுத்த நிதி ஆண்டில் 120 வளர்ச்சி வட்டாரங்கள் சேர்க்கப்படுவதில் இன்று விடுபட்டுள்ள சில ஊராட்சி ஒன்றியங்களையும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பக்கத்து பக்கத்து ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ரோடுகளில் இணைப்புச் சாலைகள் போடும்போது ஒரு ஒன்றியத்திற்குச் செல்கிற சாலை செப்பனிடப்பட முடியாத நிலை ஏற்படுகிறது. ஆகவே, 120 வளர்ச்சி வட்டாரங்களை எடுக்கும்போது விடுபட்டுள்ள ஒன்றியங்களையும் சேர்க்க வேண்டும்.

அடுத்து, கோவை, திருச்சி ஆகிய இடங்களை இரு பல்கலைக் கழகங்கள் துவங்க தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அதற்காக எல்லா மக்களும் அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். நானும் அரசைப் பாராட்டுகிறேன். இருப்பினும், கல்வி வளர்ச்சியில் நெல்லை மாவட்டம் ஒரு எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது. ஆதியிலிருந்து இன்றுவரை கல்வி வளர்ச்சியில் ஒரு எடுத்துக்காட்டாக விளங்கிவரும் பாளையங்கோட்டையில் பல கல்விக்கூடங்கள் இருப்பதால் நெல்லையிலும் ஒரு பல்கலைக் கழகம் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுவிலக்கு பற்றி அவரவர்கள் கருத்துக்களை தைரியமாகச் சொல்ல வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். எனக்கு முன்னால் பேசிய பலர் பல கருத்துக்களைச் சொன்னார்கள். இன்றைய நிலையில் கள்ளச் சாராயம் காய்ச்சி அதைக் குடிப்பதன் மூலம் சிலர் உடல்நிலை கெட்டு அவர்கள் குடும்பங்களே அழிகின்றன. இதைச் சீர்திருத்தமான முறையில் கொண்டுவர வேண்டும் என்று மரியாதைக்குரிய புரட்சித் தலைவர் அவர்கள் எண்ணினாலும்கூட, அதற்கு மக்கள் ஒத்துழைப்பு பூர்ணமாக இல்லாததால் அதை ரத்து செய்து விட்டால் அரசுக்குக் கிடைக்கக் கூடிய ஒரு கணிசமான தொகை கிடைக்கும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நல்ல நிலங்களை தரிசாகப் போட்டாலோ அல்லது அவற்றில் சவுக்கு போன்ற வேறு பணப் பயிர்களைப் பயிரிட்டாலோ அதை அரசு எடுக்கும் என்று கூறியிருப்பதை விவசாயிகள் சார்பாக வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சில மடங்கள் சொத்துக்களை அல்லது ஆலய சொத்துக்களைத் தனியார் அனுபவித்து வருகிறார்கள். குறிப்பாக நாங்குநேரி தொகுதியில் வள்ளியூர் பகுதியில் மடப்புரம், நம்பிப்பத்து போன்றயிடங்களில் 1,500 ஏக்கர் நிலங்களை சுப்பரமண்யசுவாமி கோவில் நிலங்களை ஒரு தனி நபர் விற்பதோடு அங்குள்ள மக்களையும் தொந்தரவுபடுத்தி வருகிறார். இது குறித்து அதிகாரிகளிடம் பலமுறை தெரியப்படுத்தியிருக்கிறோம். ஆகவே, இதைப்பற்றி வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கவனித்து

தனிக்கவனம் செலுத்தி அந்த 1,500 ஏக்கர் நிலத்தை அனுபவித்து வரும் நிலையை மாற்றி மடப்புரம், நம்பிப்பத்து கிராம விவ சாயிகளுக்கு அவற்றைப் பட்டா செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1-20]

அடுத்து, அரிசன மக்கள், ஆதி திராவிடர்கள், பழங்குடியினர் ஆகியோர் மீது சில சமூக விரோதிகளால் இழைக்கப்படும் தீங்கை ஒடுக்கவேண்டுமென்ற தமிழக அரசின் ஆணித்தரமான கொள்கையை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படி அரிசன மக்கள் மீது கவனம் செலுத்தப்படுகின்ற நேரத்திலே, அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் வழங்கப்படுகின்ற நேரத்திலே, குறிப்பாக ஒவ்வொரு மாவட்டத்திலும், 10 அரிசன மாணவர்கள், 10 பிற்பட்டவகுப்பு மாணவர்கள், 10 ..பார்வேர்ட் வகுப்பினர்கள் கொண்ட 30 மாணவர்களை எடுத்து, அவர்களை நல்ல கல்விக்கூடங்களிலே சேர்த்து அரசு அவர்களுக்கு உதவித் தொகை வழங்கினால், கல்வியில் ஊக்கமளித்தால் அவர்கள் நிச்சயமாக வாழ்க்கையில் முன்னுக்கு வருவார்கள் என்பதை கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இறுதியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்திலே கிறிஸ்தவ சமுதாயம் பின்தங்கியவர்கள் பட்டியலிலே சேர்க்கப் பட வேண்டுமென்று மத்திய அரசுக்கு எடுத்துக் கூறினார்கள். இதை அப்போது ஜனதா அரசு இருந்த நேரத்தில் அன்றைய பாரதப் பிரதமராக இருந்த மொரார்ஜி தேசாய் அவர்கள் மறுத்து விட்டார்கள். குறிப்பாக, தமிழகத்தில் குமரி மாவட்டத்திலே இருக்கக்கூடிய கிறிஸ்தவர்கள் பின்தங்கியவர்கள் பட்டியலிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், அடுத்துள்ள மாவட்டமாகிய நெல்லை மாவட்டம் முதல், இந்தச் சென்னை மாவட்டம் வரையில் உள்ள கிறிஸ்தவர்கள் பின்தங்கியவர் பட்டியலிலே சேர்க்கப்படவில்லை. ஆக, ஒரு மாவட்டத்திலே இருக்கக்கூடிய கிறிஸ்தவர்கள் பின்தங்கியவர்கள் பட்டியலிலே சேர்க்கப்பட்டு, மற்ற மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் சேர்க்கப் படாமல் இருக்கும்போது, அவர்களையும் இந்த பிற்பட்டவர்கள் பட்டியலிலே சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கல்விக்காக இந்த அரசு பல நல்லவைகளைச் செய்து வருகின்றது. ஆனால், அதே நேரத்தில் நெல்லை மாவட்டத்தில் ஏரல் அரசு உயர்நிலைப் பெண்கள் பள்ளி இருக்கிறது. அது ஒரு இஸ்லாமிய மசூதிக்குச் சொந்தமானது. அந்தக் கட்டிடத்திற்கு ரூபாய் 150 வாடகையாக அந்த ஊர் கமிட்டியார் கொடுத்து வந்தார்கள். அப்படிக் கொடுத்து வந்ததை அவர்கள் கொடுக்க முடியாது என்று சொல்லுகின்ற காரணத்தினால் கட்டிடத்தை





காலி செய்ய வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை இருக்கின்ற காரணத்தினால், பொதுப் பணித் துறையினர் அதற்குரிய வாடகையைக் கொடுப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும் அல்லது ஒரு புதிய கட்டிடத்தைக் கட்டிக் கொடுத்து அங்கே இருக்கின்ற மாணவியர் செல்வங்களின் கல்விக்கு உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட கோரிக்கைகளை, நெல்லை மாவட்டத்திலே இருக்கின்ற அதிகாரிகளிடத்திலே எடுத்துச் சொல்லுகின்றபோது உடனுக்குடன் அவர்கள் தகுந்த பதிலைக் கொடுப்பதில்லை. எனவே, சம்பந்தப்பட்ட அந்தக் கட்டிட உரிமையாளர் கோர்ட் டிலே வழக்கு தாக்கல் செய்து, காலி பண்ண வேண்டுமென்று சொல்கின்ற காரணத்தினால், இதுகுறித்து கல்வி அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்து, ஒன்று வாடகை கொடுக்க வேண்டும்; இல்லையென்றால் புதிய கட்டிடம் கட்டுவதற்கு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த வாய்ப்பிற்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

திரு. எம். அண்ணாமுதாசன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர் களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும் வண்ணம், இன்றைய தினம் இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்தப் பொது விவாதத்திலே கலந்துகொண்டு, என்னுடைய உரையை இங்கே முன்வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பாக பிரதான எதிர்க்கட்சியிலே அங்கம் வகிப்பவர்கள், கவர்னர் உரைக்கு இந்த ஆட்சியிலே கொடுத்திருக்கின்ற திட்டங்களுக்குத் திருத்தங்களை நல்லமுறையிலே தருவார்கள் என்ற மரபை எதிர்பார்த்திருந்தவர்களில் நானும் ஒருவன். ஆனால், இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தமிழக சட்ட சபையின் மரபை எந்த அளவிற்கு ஆரம்பித்து கட்டிக் காப்பார் கள் என்பதை நான் எண்ணுகிறபோது, உள்ளபடியே வேதனைப் பட்டேன்.

சட்டங்களை உருவாக்குகின்ற ஒரு ஆளும் கட்சி, அந்தச் சட்டங்களிலே இருக்கின்ற ஓட்டைகளைச் சுட்டிக்காட்டு கின்ற வகையிலே அமைகின்ற எதிர்க் கட்சியாக இருக்கவேண்டு மென்பதை மறந்து, இன்றைக்கு அவர்கள் எதிர்க்கட்சியிலே இருந்தாலும், 7½ ஆண்டு காலம் இந்தத் தமிழ் நாட்டிலே அர சோச்சி ஆண்டு முடித்தார்கள் என்பதைக் கூட மறந்துவிட்டு, எங்கே எதைப் பேச வேண்டுமோ, அதையெல்லாம் பேசாமல், கிண்டலும் கேலியுமாக ஆரம்பத்திலே பேசி முடித்தார்கள் என்றால், இந்தத் தமிழக சட்டசபை மரபை எந்த அளவிற்கு

[திரு. எம். அண்ணாதாசன்] [1981 ஜனவரி 23

எதிர்க் கட்சி கீழ்த்தரமாக உருவாக்கியிருக்கிறது என்பதை நான் மிகவும் வருத்தத்தோடு முதலில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

புத்தாண்டுத் துவக்கத்தில் முத்தான மொழியாம் தமிழ் மொழிக்கு மதுரையில் மாநாடு கண்டு, யாதும் ஊரே, யாவரும் கேளிர் என்று உலகுக்கு அறிவித்த தமிழக அரசை, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை நான் என் மனதார வணங்கி வாழ்த்துகிறேன்.

அடுத்து, இன்றைக்கு நமது ஆளுநர் அவர்கள் சமர்ப்பித்த உரையில் எந்தெந்தத் திட்டங்கள் பற்றியெல்லாம் எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் நன்கு அறிவார்கள். ஆனால் புரட்சித் தலைவர் அரசு, அனைத்திந்திய அண்ணா தி.மு.க. அரசு ஆட்சி பீடத்திற்கு வருவதற்கு முன்னால் இந்த நாட்டு மக்களிடத்தில் என்ன கருத்துக்களை, உறுதிமொழிகளைத் தந்ததோ அந்த உறுதி மொழிகளுக்கேற்ப இந்த அரசு ஓராண்டுக் காலத்தில் கொடுத்திருக்கும் திட்டங்களை உண்மையில் மனிதாபிமானம் உள்ள எல்லா அரசியல்வாதிகளும் ஏற்றுக் கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

இந்த நாடு சுதந்திரம் பெற்று 33 ஆண்டுகள் ஆகின்றன. இந்த அரசு வருவதற்கு முன்னால் இருந்த கால கட்டத்திலே இருந்த அரசுகள் என்ன சாதனைகளைச் செய்திருக்கின்றன. கடந்த மூன்றாண்டுக் காலத்தில் புரட்சித் தலைவர் அரசு என்ன காரியங்களைச் சாதித்திருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். கடந்த மூன்றாண்டுக் காலத்தில் புரட்சித் தலைவர் அரசு விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், தங்களுடைய இதயத்தில் உதிரத்தை வடித்துக் கொண்டிருக்கும் உழைப்பாளப் பெருமக்களுக்கும் கொடுத்திருக்கக்கூடிய நியாய பூர்வமான தேவைகளைப் பூர்த்தி செய்திருக்கக்கூடிய நிலையை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதற்கு முன்னால் 30 ஆண்டுக் காலத்தில் விவசாயிகளுக்குப் பிரச்சினையே இல்லாததுபோலவும் ஏதோ கடந்த மூன்று ஆண்டு காலமாகத்தான் விவசாயிகளுக்குப் பிரச்சினைகள் இருப்பதுபோலவும் இன்றைக்கு நாட்டிலே ஒரு சங்கம் மிக வேகமாக மிக விழிப்புணர்ச்சியோடு தன்னை முன்வைத்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எனக்கு முன்னால் பேசிய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர் அவர்கள், தொழிலாளர் வர்க்கத்திற்கு இன்னும் தீவிரமான திட்டத்தை இந்த அரசு கைக்கொள்ளவேண்டும்,



1981 ஜனவரி 23] [திரு. எம். அண்ணாதாசன்]

ஏனோ பயந்துகொண்டிருக்கிறது, தெளிவான, உறுதியான ஒரு திட்டத்தை இந்த ஆளுநர் உரையில் தெரிவிக்கவில்லை என்று குற்றம் சாட்டினார்கள்.

ஆனால் இந்த அனைத்திந்திய அண்ணா தி.மு.க. அரசு பொறுப்பேற்ற மூன்றாண்டுக் காலத்தில்—இடையில் ஏற்பட்ட சூழ்நிலைக்குப் பிறகும் இந்த நாட்டு மக்கள் கொடுத்திருக்கும் வலுவான நம்பிக்கையின் அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் ஆளுநர் உரையில் எந்த அளவுக்கு இங்கே திட்டங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தயவுசெய்து எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கொடுத்த வாக்குறுதிக்கு மாறாக புரட்சித் தலைவருடைய அண்ணா தி.மு.க. அரசு என்றைக்கும் பயந்து எந்த நேரத்திலும் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக திட்டத்தை தீட்டாது என்பதைத் தெளிவாகக் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் தொழிலாள வர்க்கத்திற்காக தொழிலாளர் நலக் கொள்கைகளைத் தெளிவாக எடுத்து வந்திருக்கிறீர்கள் என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்.

ஆனால் கடந்த மூன்றாண்டுக் காலத்தில் தொழிலாளர் வர்க்கத்திற்காகவும், விவசாயப் பெருங்குடி மக்களுக்காகவும் எந்த அளவுக்குத் திட்டம் தீட்டப்பட்டது என்பதையும் அது இந்த நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது என்பதையும் நன்றாக அறிவீர்கள். கடந்த மூன்றாண்டுக் காலத்தில் புரட்சித் தலைவர் அரசு செய்திருக்கக்கூடிய மிகப் பெரிய சாதனை 40 கோடி ரூபாய்—பிறகு 60 கோடி ரூபாய் ஆக 100 கோடி ரூபாய் கடனை விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தள்ளுபடி செய்து அறிவிப்புச் செய்தார்கள். இந்திய உபகண்டத்தில் இருக்கும் மாநிலங்களில் எந்த மாநிலத்திலும் இவ்வளவு பெரிய தொகையை விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தள்ளுபடி செய்திருக்கிறார்களா என்று மீண்டும் ஒரு முறை தயவுசெய்து எண்ணிப் பார்க்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

எதிர்க்கட்சியில் இருக்கிற, பிரதான எதிர்க்கட்சியில் இருக்கிற மரியாதைக்குரிய உறுப்பினர் அண்ணன் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தெளிவான அரசியல்வாதி, பாராளுமன்றத்திலும் சட்ட மன்றத்திலும் நீண்ட காலம் அங்கம் வகித்தவர், ஆனால் அவர்கள் கிண்டலாகப் பேசினார்கள். அவர்களுக்கு நான் பணிவோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கிண்டலும் கேலியும் பேசிய காரணத்தால்தான் தமிழக மக்கள் உங்களைக் கிண்டி ஏற்கெனவே இருந்த 48-ல் பத்தைக் குறைத்து அனுப்பியிருக்கிறார்கள்.

[1981 ஜனவரி 23

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் பேரவை நடவடிக்கைகள் சிறிது நேரம் நீட்டிக்கப்படுகிறது.

[பிற்பகல் 1-30]

திரு. எம். அண்ணாதாசன் : தாயைப் பழித்தவனைத் தாய் தடுத்தாலும் விட்டுவிடுவேன் தமிழை பழித்தவனைத் தாய் தடுத்தாலும் விடமாட்டேன் என்று பெற்ற தாயினும் சிறந்த தமிழின் அருமை பெருமையை உணர்ந்த தமிழக அரசு உலகம்போற்ற உலகத் தமிழ் மாநாடு நடத்திக் காட்டியது. கற்றவர் கரங்களிலே தவழ்ந்த கன்னித் தமிழை பாவலர்கள் கையிலே பதுங்கிக் கிடந்த பைந்தமிழை, படிக்காத பாமரர்களும் உணர்ந்து உற்சாகக் கடலில் மூழ்க, இயல், இசை, நாடகம் என்ற மூன்று தமிழையும் மூதறிஞர்கள், குறிப்பாக நல்ல பண்பட்ட உள்ளங்கள் பாராட்டும் வண்ணம் நடத்திக் காட்டிய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு என் இதயம் கனிந்த நன்றி. எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று கனவு கண்ட கவிஞரின் கனவை நனவாக்க உலகத் தமிழ்ச் சங்கம் ஒன்றை நிறுவ இருக்கும் தமிழக அரசுக்கு என் நெஞ்சார்ந்த வணக்கங்களைக் காணிக்கையாக்குகிறேன்.

'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை'

என்ற வள்ளுவரின் வாக்கினை உணர்ந்த தமிழக அரசு, உழவர் பெருமக்களின் நிலை உணர்ந்து, அவர்கள் உணர்வதற்கு, உய்வதற்கு உரிய திட்டங்களைத் தீட்டியிருப்பது பாராட்டிற்குரியது. அதே நேரத்தில் விவசாயிகளின் வேதனை தீர ஏராளமான சலுகைகளைத் தாராளமாக வழங்க இருப்பதற்கும் வேளாண்மை வளர்ச்சிக்கு அரிய திட்டங்கள் தீட்டிச் செயல்பட இருப்பதற்கும் என் நெஞ்சார்ந்து பாராட்டுகிறேன்.

'மண்மீதில் உழைப் பாரெல்லாம் வறியராம் அவர்
புண்மீதில் அன்பு பாய்ச்சும் புலையர் செல்வராம்—இதைக்
கண்மீதில் கண்டு கண்டு அந்திக்குப் பின்
விண்மீனாய்க் கொப்பளித்த விரிவானம் பாராய் தம்பி'

என்று உழைப்பவர் படும் நிலைகண்டு கொதித்த கவிஞரின் கூற்றை உணர்ந்ததாலோ என்னவோ அரசு நிர்ணயித்த கூலியை விவசாயத் தொழிலாளர்களுக்குக் கொடுக்காமல், அவர்களுக்கு வேலையில்லாமல் செய்ய, வேண்டுமென்றே நிலங்களைத் தரிசாகப் போட்டாலோ உணவுப் பயிர்களைப் பயிரிடுவதற்கு மாறாக உழவர்களைப் பட்டினி போடும் வகையில்





சவுக்கு போன்ற வேறு பயிர்களைப் பயிரிட்டாலோ அத்தகைய நிலங்களை அரசு பறிமுதல் செய்து நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குப் பகிர்ந்து கொடுப்போம் என்ற புரட்சிகரமான திட்டம் கண்டு புளகாங்கிதம் அடைகின்றேன். பொன் தமிழால் பாராட்டுகிறேன். பொன்மனச் செம்மலால் அன்றி வேறு யாராலே முடியும் இப் புரட்சிகரத் திட்டமெல்லாம்.

சித்திரச் சோலைகளே உமை நன்கு திருத்த இப்பாரினிலே எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தனரோ என்று ஏழைத் தொழிலாளி நிலைகண்டு ஏங்கிய கவிஞனின் ஏக்கத்தை நீக்கி, ஏற்றம் தர எண்ணிய தமிழக அரசு பல திட்டங்கள் தீட்டியிருப்பது கண்டு பெருமை கொள்கிறேன்.

'ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர் உதையப்பர் ஆகிவிட்டால் ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி ஒப்புப்பர் ஆயிடுவார் ¿உணரப்பா நீ' என்ற மெய்மொழியினை உணராத பணக்கார விவசாயிகள், பசியினால் கூக்குரல் எழுப்பும் பச்சிளம் குழந்தைகளின் பசி போக்கிட, பாலை ஏற்றி வந்த லாரியினைத் தடுத்து, பாலில் உப்பைக் கொட்டி இருக்கின்றனர். இத்தகைய விரும்பத்தகாத நிகழ்ச்சிகளால் விபரீதங்கள் ஏற்படலாம், இனியும் இம்மாதிரி வெறுக்கத்தக்க நிகழ்ச்சிகள் நடக்காவண்ணம் ஏற்பாடுகள் செய்யும்படி அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்னைத் தமிழுக்கு அணிமணிகள் பூட்டி அழகு பார்த்து அலங்கார ரதத்தில் பவனிவரச் செய்து அகிலமே வியக்கும் வண்ணம் மதுரை மாநகரில் உலகத் தமிழ் மாநாடு நடத்தி ஒப்பற்ற பெருமையினை, புகழினை ஈட்டிய இந்தத் தமிழக அரசை ஏழை விவசாயிகளின் ஏழ்மையை இன்னலை இடுக்கண் நீக்கிட ஏராளமான சலுகைகளை வழங்கிய, எல்லோரும் போற்றும் இந்தத் தமிழக அரசைத், தொழிலாளர்களின் துயரநிலை உணர்ந்து அவர்களது துன்பம் துடைத்திட உரிய கரம் நீட்டி அன்போடு அரவணைக்கும் இந்தத் தமிழக அரசை நல்லவர்கள், பண்பட்ட உள்ளத்தினர் பாராட்டும் இந்தத் தமிழக அரசை நானும் வாழ்த்துகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 24-1-1981 காலை 9-மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை 1-34 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

145. தூத்துக்குடி, லூர்தம்மாள் புரத்திலுள்ள இலக்குமி டூரிங் திரையரங்கில் 29—7—1979 ஆம் தேதியன்று நேர்ந்த தீ விபத்திற்கான காரணங்கள் மற்றும் சூழ்நிலைகள் அதன் விளைவுகள் ஆகியவற்றை விசாரணை செய்வதற்கென்று நியமிக்கப்பெற்ற நீதிபதி திரு. கே. எஸ். வெங்கடராமன் அவர்களைக் கொண்ட தனிநபர் ஆணைக்குழுவின் அறிக்கை. [1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

146. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் 1979-80 ஆம் ஆண்டிற்கான 31-வது ஆண்டறிக்கை (ஆங்கிலம்). [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 'அ' பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

147. தமிழ்நாடு அரசின் 1978-79 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை கணக்குகள். [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

148. தமிழ்நாடு அரசின் 1978-79 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கக் கணக்குகள் (ஆங்கிலம்) [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

149. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1978-79 ஆம் ஆண்டிற்கான அறிக்கை (சிவில்) (ஆங்கிலம்). [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

150. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1978-79 ஆம் ஆண்டிற்கான அறிக்கை (கமர்சியல்) (ஆங்கிலம்). [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

151. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1978-79 ஆம் ஆண்டிற்கான அறிக்கை (வருவாய் வரவினங்கள்) (ஆங்கிலம்). [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]





### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

10. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்பாண்மைக் குழு (நிர்வாகத்தை மேற்கொள்ளுதல்) அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 14/1980.)

11. 1980 ஆம் ஆண்டு பொது வக்ஃப் (காலவரம்பை நீட்டித்தல்) தமிழ்நாடு திருத்த அவசரச் சட்டம். (தமிழ்நாடு அவசர சட்டம் எண். 15/1980.)

12. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வரிசெலுத்த மறுக்க அல்லது நிறுத்தி வைக்கத் தூண்டுவதைத் தடுக்கும் (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 1/1981.)

13. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இன்றியமையாப் பணிகள் பராமரிப்பு அவசரச் சட்டம், (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 2/1981).

14. 1981 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 21 ஆம் தேதி யன்று சட்டமன்றத்தில் ஆளுநர் ஆற்றிய உரை (தமிழ், ஆங்கிலம்).

## இணைப்பு I

(99-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

*Address by Thiru SADIQ ALI, governor of Tamil Nadu at the Joint session of the Tamil Nadu Legislative on 21st Jannary 1981,*

*Honourable Members of the Legislature,*

I deem it a great privilege to meet all of you for the first time in this year. Let me take this opportunity of wishing you a very happy New Year and a very happy Pongal. Let us hope that the current year would usher in an era of prosperity and plenty to the people of Tamil Nadu.

2. The year has begun well with the Fifth World Tamil Conference having just been completed on a very happy note. Government had taken immense pains in drawing up a very well organised programme for holding this Conference in the ancient and historic city of Madurai. This opportunity has been availed of not only by the Tamil-knowing population of this State but also by the lovers of the language spread throughout the country, more especially by those coming from various countries of the world. Through this event, it has been made possible to relive and to re-enact the greatness of Tamil history, the grandeur of Tamil culture and literature and also to show to the world the richness of Tamil heritage.

3. The State also had the signal honour of the Prime Minister of the country gracing the occasion on the final day, which marked the close of the Conference and which drew the appreciation from severa

lakhs of people. Addressing the huge gathering at Madurai on the 10th of this month, the Prime Minister assured the people of Tamil Nadu that Hindi would not be imposed on non-Hindi people. The Government and people of Tamil Nadu are very greatful to her for reiterating the assurance given by the late Pandit Jawaharlal Nehru that Hindi would never be imposed on Tamil Nadu.

4. The participation of a very large number of foreigners from different countries of the world in the Tamil Conference, is a clear indication of the very great interest evinced by the foreigners in Tamil language. The State Government would request Government of India to grant scholarships liberally to foreign students visiting this country to learn Tamil and also to help this Government in sending Tamil teachers to foreign countries where the domiciled Tamilians wish to learn this language.

5. Government have also decided to establish a World Tamil Sangam with headquarters at Madurai. This organisation would be staffed by Tamil Scholars who will be undertaking intensive research work. This Sangam will function with complete academic autonomy and with its own branches in various parts of the world. Government will be making all efforts to implement the principle "Engum Tamil, Ethilum Tamil".

6. Another happy development has been the finalisation of the State's Sixth Five-Year Plan, recently in New Delhi. After a series of discussions between the Chief Minister and the Union Planning Minister, the State Plan has been fixed at Rs.3,150 crores which is almost three times as large as the Fifth Five-Year Plan Outlay of Rs. 1,122 crores. This is also Rs. 1,000 crores higher than the Rs. 2,150 crores figure envisaged earlier for the 1978-83 Draft Five-Year Plan. As against a 411-crore rupees State Plan for the year 1980-81, a 514-crore rupees Plan for 1981-82 has been accepted by the Planning Commission.

7. The State Government has been requesting the Government of India at various forums to increase the quantum of central assistance to the Plan Outlay. As the Hon'ble Members are aware, Central Plan assistance is now determined under what is popularly known as the "Gadgil formula". Even at the last National Development Council meeting in Delhi the Chief Minister had suggested that the present criteria under this formula for allocation of funds needed to be changed. In the discussions with the Planning Commission last month, it was reiterated that the backwardness of a State should be judged on the basis of percentage of population below poverty line and per capita



Plan outlay of the State instead of the per capita income concept. When the emphasis is for the elimination of poverty, it is hoped that the Government of India will accept these reasonable proposals.

8. Government views with concern the trend of spiralling prices and the consequent build-up of inflationary pressures. When there is inflation, wage increases are not really going to help them, as this would again refuel fire of inflation. Price increaseand wage increase seem to be following each other in a vicious circle. Further more not only such wage increases do not bring the desired benefits to this organised minority, but also it throws the unorganised large majority of people below poverty line such as hand-loom weavers, landless labourers, the village arisans, etc., into the grip of misery by further rise in prices. While the organised minority has some clout to get higher emoluments the hapless majority does not have this. Thus, it is the silent majority which suffers the most. It is very essential that this trend is arrested. In order that the essential commodities are made available at reasonable prices to all sections of the society, especially to the weaker sections first the public distribution system must be strenghened and next, there must be an all round increase in production of such items. Honourable Members are aware that the Government has already organised a fair price shop in every revenue village in our State, to strengthen the public distribution system. As for the increased production, my Government is of the view that the farmers must be given all forms of incentives such as higher procurement price, supply of inputs such as fertilisers, pesticides, diesel, etc., at reasonable prices without causing any increase in the consumer price.

9. Agriculture, being the major contributory factor to the economy as a whole, forms the most important aspect of the rural economy. In order that not merely the land owning class but the weaker sections in the rural society such as small and marginal farmers, landless agricultural labourers, village artisans, etc., survive, they must be placed on a sound basis. One way of ensuring health in this sector is to fix a remunerptive price for their produce. Time and again, my Government has been insisting on the Government of India at almost all forums, to fix a price ensuring reasonable return to the farmers. Price of Rs. 130 per quintal for paddy and Rs. 200 per tonne for Sugar-cane have been urged by my Government. The Government of India however has fixed Rs. 105 per quintal as the procurement price for common variety of paddy and Rs. 130 per tonne as the statutory minimum price of Sugarcane. My Government, though still insisting on the Government of India to reconsider the above decisions, on its own has fixed price of Rs. 115 per quintal of paddy and Rs. 175 per tonne of Sugar-cane.

10. Keeping the interests of the agriculturists in mind, Government has undertaken a series of measures to help the small farmers who have not been able to repay the co-operative loans due to failure of rains and natural calamities. State Government had approached the Government of India for assistance to write off the loans atleast to the small farmers in respect of short term co-operative loans converted into medium term loans which were outstanding as on 31st March 1980. But this plea for assistance was not accepted by the Government of India. However, the State Government from its own funds, has accorded sanction for Rs. 42 crores for repaying to the co-operative societies, on behalf of the small farmers, the medium term conversion and medium term conversion rephasement loans with interest, including penal interest as on 31st March 1980. In case there are small farmers who owe money to the co-operative societies as on 31st March 1980 under the above conditions, and who have not been included in the earlier calculations, their loans also would be repaid by the State Government. There are some small farmers who had repaid loans of this nature to co-operative societies earlier. Government felt that the benefit given to the defaulters should accrue to this category of small farmers as well. The refund to be made to them will be adjusted towards the loans falling due against them during the year 1981-82.

11. My Government has also ordered waiving the collection of dues in respect of Takkavi loans. As a result of implementing this order as on 3rd December 1980, a sum of Rs. 20,61,50,077 has been written off benefiting about 9,17,559 agriculturists.

12. Even in spite of these liberal gestures by the Government from its meagre resources, a certain section of agriculturists has been indulging in no-tax compaign against the State Government, urging non-payment of current consumption charges, co-operative loans, taxes to the Government and to the local bodies, etc. When Government took steps to collect the current consumption charges from the agriculturists amounting to about Rs. 35 crores, the various associations of agriculturists and the political parties wanted a dialogue with the Government. My Government held consultations with the representatives from all such bodies twice and at their instance agreed to collect in easy instalments in the form of current dues and corresponding one month arrears, popularly known as 1+1 formula. It is unfortunate that a certain section of the agriculturists organised an agitation, stopping the supply iff essential commodities to the towns, thereby causing violence, loss so life and damage to property. In some places, milk and food were spoilt by them. No Government can tolerate this type of activity letroeore, my Government took appropriate action to maintain law.



and order. I hope that wise counsel would prevail among them to see reason and rationale in the stand of Government in helping the agriculturists to the utmost extent.

13. Rainfall in the course of this year has been fairly satisfactory, though not plentiful. However, certain pockets in the districts of Pudukkottai and North Arcot have experienced drought conditions due to failure of monsoons. Government has acted immediately and authorised digging of new wells and deepening of old wells at a cost of Rs. 1·30 crores. In North Arcot district, Government has also ordered remission of land revenue where the crop yeld is less than 50 per cent. Relief measures would be taken whereever similar drought conditions become marked.

14. Whenever help is to be provided to the agricultural sector, Government has always kept the interest of the small anu marginal farmers and landless agriculturel labourers uppermost in its mind. This helpful and sympathetic attitude will be continued in the future also as a policy by this Government.

15. Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Second Amendment Bill, 1980, which has been passed by the State Legislature, has been sent to the Government of India for the assent of the President. When the Bill becomes an act, it will unearth transfers of land effected between 1st January 1958 and 6th April 1960, with a view to circumvent the then proposed legislation of land ceiling. Consequent on this Bill becoming an Act, surplus lands will be available for distribution among landless agricultural persons.

16. Irrigation forms an integral part of Agriculture. As the major river sources are almost exploited, in order to extend the area of irrigation, especially to help the drought-prone parts of Madurai, Ramanathapuram and Tirunelveli districts, my Government will hold talks shortly with the Government of Kerala for diverting some of the surplus waters from the West-flowing rivers. It is unfortunate that a settlement on Cauvery River water dispute is yet to be reached in spite of several meetings among the basin States for the last twelve years starting from the year 1968. I hope that at least this year, we would be able to arrive at an amicable solution in the best interest of Tamil Nadu.

17. Allied to Agriculture, is the field of Fisheries. Tamil Nadu is blessed with a long coastal line but the State has not had the good fortune of getting the maximum benefit from this natural gift. As an initial step, State Government has requested Government of India to undertake a study, to survey the fishery resources of the East Coast of India Government of India has responded stating that this will be examined

As a further step, PAUT has been asked to work out comprehensive proposals for enabling a study to be made of the marine mining, marine environment, marine resources, etc., of the East Coast.

18. At the same time, in order to tap the fish wealth in the deeper portions of the sea, the Tamil Nadu Fisheries Development Corporation has secured technical assistance from Government of India in identifying the type of deep sea fishing trawlers for different fishing areas and the agency from whom these are to be secured. All these measures undertaken by the Government would lead to a better utilisation of the marine resources of this State and would improve the living conditions of the fishermen.

19. Power, being an important infrastructure for economic development, it is proposed to make major investments in this sector in the Sixth Plan to the tune of Rs. 1,023 crores. Lower Mettur Hydel Scheme costing Rs. 89·71 crores and Mettur Thermal scheme costing Rs. 189·70 crores have already been sanctioned. More schemes will follow suit. However, at present there is a shortage of power necessitating 30 per cent cut on industries, which will be maintained at this level for the water year ending June 1981.

20. For stepping up industrialisation of the State and to create employment opportunities Government has been encouraging establishment of industries both in the private and public sectors. With the prospect of better availability of electricity, communication facilities, skilled manpower, etc, I hope that sufficient investments by the private sector can be attracted to our State. Government of India have been addressed to issue a licence for establishing a Sugar Mill with a crushing capacity of 1,250 tonnes of cane per day in the co-operative sector in Chengalpattu district. The Newsprint Project to be started in the public sector is also making headway and the Government of India, Planning Commission and World Bank are showing keen interest in this Project.

21. The progressive labour policy, followed by the Government has produced fruitful results The labour situation in the State was, by and large, satisfactory in 1980. Government is considering amending the Industrial Disputes Act, 1948 with reference to certain provisions on settlement under clause 12(3) of the Act and also in regard to launching of strikes, the approval for which should be backed by 60 per cent of the labour force. This is now before the Standing Committee on Labour Laws, whose recommendations are awaited.



22. The one problem that is looming large is that of B. and C. Mills involving about 13,000 families in Madras City. On the one hand, when the Government is going all out to create new job opportunities for the unemployed, it is really disheartening to note a situation, where even the existing employed is rendered jobless by the closure of this Mill. The State Government is doing its best to resolve this dispute. It is pertinent to point out that this is essentially a matter to be settled by the Government of India involving both the management and the workers.. They have convened a series of meetings. Government hope that before long this problem will be amicably solved so that the industry can start working again.

23. Self-Sufficiency Scheme is now being implemented in 69 blocks out of 376 blocks in the State at an estimated cost of about Rs. 43 crores., It is expected that the physical targets fixed for the first batch of 69 blocks will be achieved before the end of the current financial year., This scheme will be extended to additional 120 blocks during the next financial year., Preliminary arrangements are being made to determine the size of the programme and for fixing the targets and arriving at estimates. A High Power State Level Committee is also monitoring the progress of the Scheme.

24 The Food for Work programme now modified and restructured as the National Rural Employment Programme, will be implemented in the State with the utmost vigour to help the rural poor.

25. Government of India opined that it would be desirable to hold the elections to the Local Bodies after census work is completed; accordingly election will be held after this work is over. These elections will be held at the earliest possible and the reins of Local Administration will be duly handed over to the democractically elected representatives of the people.

26. In the field of education, proposals for establishing two new Universities at Coimbatore and Tiruchirappalli were already announced The legislations to that effect will be introduced shortly. Government is also endeavouring to establish 2 more Universities – a Tamil University and a Universe ty at Karaikudi—during this year itself.

27. With the co-operation of the National Institute of Oceanographyi under-sea archaelogical explorations in the Coramandal coast (i.e., east coast of Tamil Nadu) especially at Kaveripoompattinam is being undertaken by the State Department of Archaeology.

28. Government have recently taken over the management of the Pachaiyappa's Trust, in public interest, for a period of two years.

29. Madras City has been having its own peculiar problems. If the monsoons fail, even drinking water becomes scarce. In order to augment the City water-supply, Government has decided to bring drinking water from River Cauvery, from a point below Kattalai regulator, in Tiruchirappalli district. Chief Engineer has opined that this scheme would provide an additional quantity of 995 million litres of water per day to the City and can be completed in a period of five years. This will provide employment opportunities to about a lakh of persons every day during the construction period. The cost of the project is nearly Rs. 459 crores and the World Bank has shown interest in this scheme.

30. Quick clearance of traffic is another serious problem pertaining to Madras City. The State is actively pursuing with Government of India the proposaal for a Mass Rapid Transit System from Madras Beach to Luz at a tentative cost of over Rs. 60 crores.

31. State Government has been pressing the Government of India for quite some time now, for introducing a third levelfeeder air service in the State, There are many centres of tourist, historic, cultural commercial and religious importance which are not covered by the Indian Airlines network. Recenly, it has been reported that North Eastern region will have the benefit of this third level air service in the course of this month. State Government hopes that Government of India would clear this proposal for Tamil Nadu also at the earliest possible time.

32. Prohibition as a measure is an important social reform. However, various views have been expressed even in this august House at various times. I would therefore request the Honourable Members to give their free and frank views on how best we can implement this beneficial measure and whether any rethinking on the policy itself is warranted.

33. The recent hike in the prices of petroleum products has been caused due to an international situation on which none in the country could do anything. Since the petroleum prices have gone up, a rise in the bus fare is inevitable. Government hopes that people of the State would appreciate the reasons for the increase in bus fare.

34. For effective implementation of any policy, it is essential to streamlin the administration. In pursuance of this policy, Government abolished the Board of Revenue last year. Since the system of part time Village Officers was out-moded and not fitting with



the modern needs of village administration, Government dicided as a next step to abolish all posts of part-time Village Officers. Accordingly, an ordinance was also promulgated by the Government. A Bill will be introduced in the ensuing session of the Legislature to replace this Ordinance.

35. For any Government to run its affairs the collection of revenue is an important function. Honourable Members are aware that a certain section of persons is indulging in anti-social activities such as inciting the agricultirists not to pay land revnue, taxes or other amounts due or payable to Government. to local authorities to the State Electricity Board or to co-operative societies causing harm and hardship and thereby creating a sense of insecurity in the minds of those who discharge their dues. It had also been brought to the notice of the Government that the sponsors of the agitation were incting directly or indirectly the use of criminal force against the public servants. As this amounted to anti-State activities and was likely to impair the State apparatus and as it is the foremost duty of the State to ensure protecion to the law-abiding citizens. it was found necessary to take deterrent action against such anti-social elements, Therefore an Ordinance was promulgated in November 1980, to deal with them. A Bill to replace this Ordinance will be introduced in the Legislature shortly.

36. The Tamil Nadu Debt Relief Act, 1980 was enacted to offer debt-relief to persons whose annual house-hold income during the year end 31st December 1979 did not exceed Rs. 4,800. The intention of this Act was to provide relief only to the poor debtors. But certain provisions of the Act had been interpreted by the affluent classes to their benefit. To rectify this defect, the Act was amended by the Tamil Nadu Debt Relief (Amendment) Ordinance, 1980. A Bill to replace this Ordinance will be brought before the Legis'ature soon.

37. A certain section of affluent agriculturists has wantonly left their lands fallow or deliberately switched from cultivation of foodgrains to cultivation of firewood like casuarina, to avoid employing agricultual labourers at the wages prescribed by Government. This will lead to a grave situation of tremendous shortage of foodgrains in the not too distant a future, with the attendant disastrous consequence of throwing the millions of poor agricultural labourers into a predicament of daily starvation. To deal with this siutation, Government is contemplating introduction of a suitable legislation for takeover of such lands for distribution among the landless.

38. To help such of those unemployed youth who have registered in the employment exchange and who belong to poor families, my Government will initiate action to give them preference in the matter of employ

ment opportunities so that at least one member in such a family gets a job. This is the first step to implement the policy of the Central, State Government to provide employment to atleast one individual per family.

39. The law and order and crime situation in the State have been generally satisfactory. It is heartening to note that instances of communal clashes and the connected violence have come down during the last year when compared with the previous years. The menace of extremists which is a major threat to peublic peace particularly in certain areas of North Arcot and Dharmapuri districts has been controlled to a considerable extent. My Government has decided to improve, both quantitatively, and qualitatively the scientific aids necessary for the efficient discharge of duties and responsibilities enjoined on the Police Force.

40. Discipline and morale of the Police Force has been high due to the introduction of several welfare measures, notable among which are the supply of essential commodities at subsidised rates, sanction of risk allowance and creation of a Police Housing Corporation.

41. It is the accepted policy of the Government that atrocities on the weaker sections of the society, particularly on Scheduled Castes and Scheduled Tribes should be dealt with, with a firm hand. Recently Government have appointed a Senior Police Officer in the rank of Deputy Inspector-General of Police, specially to enforce effectively the provisions of the Protection of Civil Rights Act, which is meant for protecting the rights of the members of Scheduled Castes and Scheduled Tribes. Separate police units to deal exclusively with crimes that are committed on the members of Scheduled Castes and Scheduled Tribes are functioning in the districts. Government will not countenance the crimial acts of anti-social elements who are a menace to the community. My Government will take severe action against the anti-social elements who indulge in these heinous deeds.

42. With the combined efforts of the people, the Government of Tamil Nadu and all of you, I am sure that the future will be bright and prosperous. Let us all work togeher in a spirit of friendship, understanding and co-operation to realise the laudable objectives of promoting the development of the State and improving the lot of the poor and the downtrodden.

*Vanakkam.*



## இணைப்பு II.

[99-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

**தமிழ்நாடு ஆளுநர் திரு. சாதிக் அலி அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டு அவையில் 1981 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 21 ஆம் நாள் ஆற்றிய உரையின் தமிழாக்கம்.**

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களே,

உங்கள் அனைவரையும் முதன்முறையாக இந்த ஆண்டில் சந்திப்பதை நான் பெரும் பேறாகக் கருதுகிறேன். இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்டு உங்கள் அனைவருக்கும் என் இனிய புத்தாண்டு வாழ்த்துக்களையும் பொங்கல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நடைமுறை ஆண்டு, தமிழ்நாட்டு மக்களுக்குக் குன்றாகச் செல்வத்தையும் குறையாத வளத்தையும் வரையாது வழங்குமென நம்பிக்கை கொள்வோமாக!

2. உவகை தரும் வகையில், அண்மையில் நடந்து முடிந்த ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டுடன் இந்த ஆண்டானது நல்ல முறையில் தொடங்கியுள்ளது. பழம் பெருமையும், வரலாற்றுச் சிறப்பும் கொண்ட மதுரையில் நடைபெற்ற இந்த மாநாட்டினை நடத்துவதற்கு நன்கு உருவாக்கப்பட்ட சீரியதிட்டத்தினை வகுக்க இந்த அரசு மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டது. இந்த மாநாட்டில் கலந்துகொள்ளும் வாய்ப்பினைத் தமிழ்நாட்டிலுள்ள தமிழ்ப் பெருங்குடி மக்கள் மட்டுமல்லாமல், நாட்டின் பல பகுதிகளிலும் பரவியிருக்கும் தமிழார்வமுடையவர்களும், அதிலும் குறிப்பாக, உலகில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களும் பயன்படுத்திக்கொண்டனர். இந்த மாநாட்டின் மூலம் வரலாற்றுச் சிறப்பு மிக்க தமிழ் நாட்டின் பின்னணியில் நாம் வாழ்வது போன்றதொரு உணர்வு ஏற்பட்டது; தமிழ்ப் பண்பாட்டின் பொலிவும் இலக்கியத்தின் பெருமையும் உணரப்பட்டன; வழிவழி வந்த தமிழ்த் தலைமுறையின் பெருமை உலக்குக்கு உணர்த்தப்பட்டது.

3. இந்த மாநாடு நிறைவெய்திய நாளன்று இந்தியத் தலைமையமைச்சர் கலந்துகொள்ளும் பெரும் பேற்றினை இம் மாநிலம் பெற்றது. இதனைப் பல லட்சக்கணக்கான மக்கள் போற்றிப் புகழ்ந்தனர். மதுரையில் இத்திங்கள் 10-ஆம் நாளன்று கூடிய பெருந்திரளான மக்களிடையே பேருரையாற்றிய இந்தியத் தலைமையமைச்சர் அவர்கள் இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாத மக்கள் மீது வலுக்கட்டாயமாக இந்தி திணிக்கப்படமாட்டா என்று உறுதி அளித்தார். தமிழ் நாட்டின் மீது ஒருபோதும் இந்தி திணிக்கப்படமாட்டாதென்று மறைந்த பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் அளித்த உறுதிமொழியை மீண்டும் வலியுறுத்

திக் கூறியதற்காகத் தமிழ்நாடு அரசும், மக்களும் இந்தியத் தலைமை அமைச்சர் அவர்களுக்கு மிகவும் நன்றி செலுத்தக் கடைமைப்பட்டிருக்கிறோம்.

4. உலகத்தில் பல்வேறு நாடுகளிலிருந்தும் வெளி நாட்டினர் பெருமளவில் உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொண்டது, வெளிநாட்டினர்க்கு தமிழ் மொழியினிடத்து எத்துணைப் பற்று உள்ளது என்பதைத் தெளிவாகப் புலப்படுத்துகிறது. தமிழைப் பயிலுவதற்காக இந்நாட்டிற்கு வருகிற வெளி நாட்டு மாணவர்களுக்குத் தாராளமாகப் படிப்புதவித் தொகைகள் வழங்குமாறு மத்திய அரசை மாநில அரசு கேட்டுக்கொள்கிறது. அதேபோன்று வெளிநாடுகளிலுள்ள தமிழ் மக்கள் தமிழ் கற்க ஆசிரியர்கள் தேவைப்படும்போது, அத்தகைய ஆசிரியர்களைத் தமிழக அரசு அவர்களுக்கு அனுப்பி உதவி செய்ய மத்திய அரசு துணை நிற்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

5. மதுரையைத் தலைமையிடமாகக் கொண்ட உலகத் தமிழ்ச் சங்கம் ஒன்றினை ஏற்படுத்துவது எனவும் அரசு முடிவு செய்துள்ளது. இந்த நிறுவனத்தில் தமிழ்மொழி வல்லுநர்கள் பணிபுரிவர். இவர்கள் தமிழ் ஆராய்ச்சிப் பணியினைத் தீவிரமாக மேற்கொள்வார்கள். இந்தச் சங்கம் ஆராய்ச்சித் துறையில் முழு தன்னாட்சி உரிமை உள்ளதாகச் செயல்படும். அது உலகெங்கணும் உள்ள பல உலகத் தமிழ்ச் சங்கக் கிளை நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு இயங்கும். ''எங்கும் தமிழ், எதிலும் தமிழ்'' என்னும் கோட்பாட்டை செயல்படுத்துவதற்கு இம் மாநில அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

6. தமிழ் நாட்டின் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அளவு அண்மையில் டில்லியில் முடிவு செய்யப்பட்டிருப்பது மற்றொரு மகிழ்ச்சியான நிகழ்ச்சியாகும். நமது முதலமைச்சரும் மத்திய திட்ட அமைச்சரும் பலமுறை கூடிப் பேசிய பின்னர், இம்மாநிலத்தின் திட்ட அளவு ரூ. 3,150 கோடியென நிர்ணயிக்கப்பட்டது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட அளவாகிய ரூ. 1,122 கோடியைக் கணக்கிடும்போது, இது கிட்டத்தட்ட மும்மடங்கு கொண்டதாகும். மேலும் முன்னர் 1978–83 கால அளவுக்கான ஐந்தாண்டு வரைவுத் திட்டத்திற்கு நிச்சயிக்கப்பட்ட தொகையாகிய ரூ. 2,150 கோடியை விட ரூ. 1,000 கோடி அதிகமாகும். 1980–81 ஆம் ஆண்டுக்கு இம் மாநில ஆண்டுத் திட்டம் ரூ. 411 கோடியாக இருக்க, 1981–82 ஆம் ஆண்டுத் திட்டம் ரூ. 514 கோடியாக இருக்குமென திட்டக்குழு ஒப்புதல் அளித்துள்ளது.



7. ஐந்தாண்டுத் திட்டச் செலவுக்கு மத்திய அரசின் நிதி உதவி அளவை உயர்த்துமாறு பல்வேறு வாய்ப்புக்களில் இம் மாநில அரசு மத்திய அரசை வேண்டி வந்துள்ளது. மத்திய அரசின் நிதி உதவி ''காட்கில் ஏற்பாட்டின்'' கீழ் தற்போது நிர்ணயிக்கப்பட்டு வருவது. மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் யாவரும் அறிந்ததே. புது டில்லியில் அண்மையில் நடைபெற்ற தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்திலும்கூட, இந்த ஏற்பாட்டின் கீழ் நிதி ஒதுக்க, தற்போது பின்பற்றும் அடிப்படையை மாற்ற வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார். கடந்த திங்களில் திட்டக் குழுவுடன் நடத்திய விவாதங்களின்போது, ஒரு மாநிலத்தின் பின்தங்கிய நிலையை, நபர் வாரி வருமான அடிப்படையில் தீர்மானிப்பதற்குப் பதிலாக, வறுமைக் கோட்டிற்கும் கீழுள்ள மக்கள் சதவீதம், மாநிலத்தின் நபர் வாரித் திட்டச் செலவு ஆகியவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. வறுமையை அறவோடு ஒழிக்க வேண்டும் என்னும் கொள்கைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதால், இந்த நியாயமான கோரிக்கைகளை இந்திய அரசு ஏற்கும் என்று நம்புகிறோம்.

8. விலைவாசி ஏறுமுகத்தையும் அதைத் தொடர்ந்து பணவீக்க நிலை தொடர்ந்து இருப்பதையும் கண்டு, இவ்வரசு மிகவும் கவலை கொண்டுள்ளது. பணவீக்கம் ஏற்பட்டுள்ளபோது, ஊதிய உயர்வுகளினால் உண்மையில் பயன் ஏற்படாது; அதற்கு மாறாக ஊதிய உயர்வு பணவீக்கம் என்கிற தீயை மேலும் வளர்ப்பதாக அமைந்துவிடுகிறது. விலைவாசி உயர்வும் ஊதிய உயர்வும் ஒன்றையொன்று தொடர்ந்து வரும் ஒரு நச்சு வட்டமாகவே தோன்றுகிறது. மேலும், அமைப்பு ரீதியாகச் செயல்படும் சிறுபான்மையினர் பெறும் ஊதியம் அவர்களுக்கு எதிர்பார்த்த பலனை அளிக்காதது மட்டுமல்ல, அதனால் ஏறும் விலைவாசி, அமைப்பில்லா பெரும்பான்மையினரான கைத்தறி நெசவாளர்கள், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், கிராமக் கைத்திறப் பணியாளர்கள் போன்ற ஏழை, எளிய உழைக்கும் மக்களையும் பாதித்து விடுகிறது. அமைப்பு ரீதியான சிறுபான்மையினரிடம் உள்ள கூடுதல் ஊதியம் பெறும் சக்தி, மிகப் பெரும்பான்மை உழைக்கும் மக்களிடம் இல்லை. இந்நிலையில், இவ்வமைதிப் பெரும்பான்மையினரே பெரும் அவதிக்காளாகின்றனர். இத்தகைய போக்கினை உடனடியாகத் தடுத்து நிறுத்துவது இன்றியமையாத பணியாகும். சமுதாயத்தின் எல்லாப் பிரிவினர்களுக்கும், குறிப்பாக நலிந்த பிரிவினர்களுக்கு நியாயமான விலையில் இன்றியமையாப் பொருட்கள் கிடைக்கச் செய்யும் பொருட்டு முதற்கண் பொது விநியோக முறையை வலுப்படுத்த வேண்டும். அடுத்து, எல்லா இன்றியமையாப் பொருட்களின் உற்பத்தியும் பெருகவேண்டும். பொது விநியோக முறையை வலுப்படுத்துவதற்காக இம் மாநிலத்தில் உள்ள

[1981] ஜனவரி 23

வருவாய்க் கிராமங்கள் ஒவ்வொன்றிலும் நியாயவிலைக் கடைகளை அரசு ஏற்கனவே ஏற்படுத்தியுள்ளதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிவர். உற்பத்தியைப் பெருக்குவதற்காக, நுகர்ப்பொருள்களின் உயர்வு ஏதும் ஏற்படாமல், நியாயமான விலையில் இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள், டீசல் போன்ற இடுபொருள்கள் வழங்குதல், உயர் கொள்முதல் விலை அளித்தல் போன்ற எல்லா வகையான ஊக்கமும் ஆக்கமும் உழவர்களுக்கு வழங்க வேண்டுமென எனது அரசு கருதுகிறது.

9. நாட்டின் பொருளாதாரம் செழிப்பதற்கு வேளாண்மையே முக்கிய கூறாக விளங்குவதால், கிராம பொருளாதாரத்தின் மிக முக்கிய அம்சமாக அது திகழ்கிறது. நிலவுடைமையாளர்கள் மட்டுமின்றி, கிராமச் சமுதாயத்தில் சிறு உழவர்கள், சொற்ப நில உழவர்கள், நிலமற்ற உழவுத் தொழிலாளர்கள், கிராமக் கைத்திறப் பணியாளர்கள் முதலிய நலிந்த பிரிவினர்களும் நல்ல முறையில் வாழ்க்கை நடத்தும் பொருட்டு அவர்கள் நல்ல வருவாய் பெற்று வாழ்வாங்கு வாழும் நிலையை உருவாக்குவது அவசியமாகும். இத்துறையில் அவர்கள் நன்முறையில் வாழ்வதை உறுதிப்படுத்த அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு உரிய ஆதாயம் கிட்டும் வகையில் விலையை நிர்ணயிப்பது அவசியமாகும். உழவர்களுக்கு நியாயமான ஆதாயம் கிடைக்கும் வகையில் விளைபொருளுக்கு உரிய விலையை நிர்ணயிக்க வேண்டுமென்று எல்லா வாய்ப்புகளிலும் மீண்டும் மீண்டும் நமது அரசு, மத்திய அரசை வலியுறுத்தி வந்துள்ளது. நெல்லுக்கு ஒரு குவிண்டாலுக்கு ரூ. 130-ம், கரும்புக்கு ஒரு டன்னுக்கு ரூ. 200-ம் விலை நிர்ணயிக்கப்பட வேண்டுமென எனது அரசு வலியுறுத்தி வந்துள்ளது. இருப்பினும், சாதாரண ரக நெல்லின் கொள்முதல் விலை குவிண்டாலுக்கு 105 ரூபாயாகவும், ஒரு டன் கரும்பின் சட்டப்படியான குறைந்த அளவு விலை 130 ரூபாயாகவும் மத்திய அரசு நிர்ணயித்துள்ளது. மேற்சொன்ன முடிவுகளை மறுபரிசீலனை செய்யுமாறு மத்திய அரசை இன்னும் வற்புறுத்திவரும்போதே, எனது அரசு ஒரு குவிண்டால் நெல்லின் விலையை 115 ரூபாயாகவும், ஒரு டன் கரும்பின் விலையை 175 ரூபாயாகவும் தானாகவே உயர்த்தியுள்ளது.

10. விவசாயிகளுடைய நலனைக் கருத்தில் கொண்டு, மழை இல்லாமலும் இயற்கையின் சீற்றங்களினாலும், கூட்டுறவுக் கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாத சிறு விவசாயிகளுக்கு உதவும் பொருட்டு, அரசு நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. நடுத்தரக் காலக் கடன்களாக மாற்றப்பட்ட குறுகியகால கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்த வரையில் (1980-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் நிலவர நிலுவை) குறைந்தது சிறு உழவர்கள் வாங்கிய கடன்



1981 ஜனவரி 23]

களை மட்டிலுமாவது தள்ளுபடி செய்வதற்கு உதவி செய்யும்
படி இந்திய அரசை இம் மாநில அரசு கேட்டுள்ளது. எனி
னும், இவ்வேண்டுகோளை இந்திய அரசு ஏற்றுக் கொள்ள
வில்லை. 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள்
நிலவரப்படி நடுத்தரக் கால கடன்களையும், நடுத்தரக் கால
தவணை ஒத்தி வைப்பு கடன்களையும், அவற்றிற்குரிய வட்டி
யையும், தண்ட வட்டியையும் சிறு உழவர்கள் சார்பில்
கூட்டுறவுச் சங்கங்களுக்குத் திருப்பிக் கொடுப்பதற்காக,
மாநில அரசு தன்னுடைய சொந்த நிதியிலிருந்து ரூ. 42 கோடி
அனுமதித்தது. இத் தொகைக்கு மேற்பட்டும், 1980 ஆம்
ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் நிலவரப்படி மேற் கூறிய
விதிகளுக்குட்பட்டு கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தொகையைச்
செலுத்த வேண்டிய சிறு உழவர்கள் இருந்தால், மாநில அரசு,
அவர்களுடைய கடன்களையும் திருப்பிச் செலுத்தும், ஏற்
கெனவே கூட்டுறவுச் சங்கங்களுக்கு இத்தகைய கடன்களைத்
திருப்பிச் செலுத்தியுள்ள சிறு உழவர்களும் சிலர் உள்ளனர்.
கடன் தொகையைச் செலுத்தத் தவறியவர்களுக்கு அளிக்
கின்றச் சலுகைகளைக் கடன் தொகையைச் செலுத்திய
சிறு உழவர்களுக்கும் அளிக்க வேண்டுமென்று அரசு கருதுகிறது.
எனவே, அச்சிறு உழவர்கள் 1981–82 ஆம் ஆண்டில் செலுத்த
வேண்டியிருக்கும் கடன் தொகையில் இத் தொகையைக்
கழித்து, அவர்களுக்கும் அப்பயன்கள் அளிக்கப்படும்.

11. தக்காவிக் கடன் தொடர்பான நிலுவை வசூலிப்பை
ரத்து செய்தும், எனது அரசு ஆணை பிறப்பித்துள்ளது.
இவ்வாணையைச் செயற்படுத்தியதன் விளைவாக, 1980-ஆம்
ஆண்டு டிசம்பர் திங்கள் 3 ஆம் நாள் வரை ரூ. 20,61,50,077
கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது : சுமார் 9,17,559 உழவர்
கள் இதனால் பயனடைகின்றனர்.

12. இவ்வரசுக்கு உள்ள நிதி ஆதாரங்கள் குறைவு. அத்
தகைய நிலையிலும், இத்தகைய தாராளச் சலுகைகளை இவ்
வரசு வழங்கியுள்ளது. இருப்பினும், மின் கட்டணங்கள்
கூட்டுறவுச் சங்கக்கடன்கள், அரசு உள்ளாட்சி மன்றங்கள்
முதலியவற்றிற்குச் சேர வேண்டிய வரிகள் ஆகியவற்றைச்
செலுத்த வேண்டாமென வலியுறுத்தி, உழவர்களில் ஒரு பகுதி
யினர், வரிகொடா இயக்கம் நடத்தி, மாநில அரசுக்கு எதி
ராகச் செயல்பட்டனர். சுமார் 35 கோடி ரூபாய் அளவுக்கு மின்
கட்டணங்களை வசூலிக்க அரசு நடவடிக்கை எடுத்தபோது,
பல்வேறு உழவர் சங்கங்களும் அரசியல் கட்சிகளும் அரசுடன்
பேச்சு வார்த்தை நடத்த விரும்பின. அச் சங்கங்கள், அரசியல்
கட்சிகள் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் என்னுடைய அரசு
இருமுறை பேச்சுவார்த்தைகள் நடத்தியது ; அவர்கள் கேட்டுக்
கொண்டதன் பேரில் எளிய தவணைகளில் அதாவது ஒவ்வொரு
மாதமும் நடப்பு மாத மின் கட்டணத்தையும் பழைய

நிலுவையில் ஒருமாதக் கட்டணத்தையும் வசூல் செய்யும் '1 1' என்னும் ஏற்பாட்டை அரசு ஏற்றுக் கொண்டது. துரதிருஷ்டவசமாக உழவர்களில் ஒரு சங்கத்தினர் மட்டும் இந்த ஏற்பாட்டை ஏற்கவில்லை. அந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் நகரங்களுக்கு இன்றியமையாதப் பொருள்கள் செல்வதைத் தடுத்தனர் ; சில இடங்களில் பால், உணவுப் பொருள்களைப் பாழ்படுத்தினர் ; அதுமட்டுமின்றி, வன் முறையில் ஈடுபட்டு, உயிருக்கும், உடைமைக்கும் ஊறு விளைவித்தனர். இத் தகைய செயல்களை எந்த அரசும் அனுமதிக்க இயலாது. எனவே சட்டம் ஒழுங்கைக் காக்க அவசிய நடவடிக்கைகளை எனது அரசு எடுத்தது. உழவர்களுக்கு இயன்றவரை உதவிவரும் அரசின் நிலையில் நியாயம் இருப்பதை உணர்ந்து இவர்கள் தீர்க்க மாகச் சிந்தித்து ஒத்துழைப்பார்கள் என நம்புகிறேன்.

13. இவ்வாண்டில் மிதமிஞ்சிய அளவுக்குப் பெய்யாத போதிலும்கூட, பெய்த மழை சுணிசமான அளவுக்குத் திருப்தி கரமாகவே இருந்துள்ளது. ஆயினும் பருவ மழை பொய்த்த தன் காரணமாக, புதுக்கோட்டை வடார்க்காடு மாவட்டங் களின் சில பகுதிகளில் வறட்சி நிலை ஏற்பட்டது. அங்கு ரூ. 1·30 கோடி செலவில் புதிய கிணறுகள் தோண்டவும் பழைய கிணறுகளை ஆழப்படுத்தவும் அரசு உடனடியாக நட வடிக்கை எடுத்துள்ளது. வடார்க்காடு மாவட்டத்தில், பயிர் விளைச்சல் 50 சதவீதத்திற்கும் குறைந்த நிலங்களுக்கு நில வரியை தள்ளுபடி செய்து அரசு ஆணையிட்டது. இது போன்ற வறட்சி நிலை, குறிப்பாகக் காணப்படும் இடங்களி லெல்லாம் துயர் தணிப்பு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப் படும்

14. வேளாண்மைத் துறையில் உதவி செய்ய வேண்டிய நிலை ஏற்படும்போது, நிலமற்ற உழவுத் தொழிலாளர்கள், சிறு உழவர்கள், சொற்ப நில உழவர்கள், உழவுத் தொழிலாளர் கள் ஆகியோரது நலனை அரசு கண்ணுங்கருத்துமாக கட்டிக்காத்து உதவி செய்து வந்துள்ளது இவர்களுக்கு உறு துணையாகவும் பரிவுடனும் நடந்து கொள்ளும் போக்கு இவ் வரசின் கொள்கையாக இனியும் தொடர்ந்து நிலவும்.

15. இம் மாநிலச் சட்ட மன்றம் நிறைவேற்றியுள்ள தமிழ் நாடு 1980 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்திற்கு உச்ச வரம்பு நிர்ணயித்தல்) இரண்டாவது திருத்தச் சட்டவரை வரைவு, குடியரசுத் தலைவரின் இசைவு பெறுவதற்காக மத் திய அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. நில உச்ச வரம்பு குறித்து முன்பு இயற்றிய சட்டத்தை ஏமாற்றும்பொருட்டு, 1959-ஆம் ஆண்டு சனவரி திங்கள் 1 ஆம் நாளிலிருந்து 1960 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6 ஆம் நாள் வரையில் செய்யப்பட்ட நில மாற்றங்களை அம்பலப்படுத்தும் இச்சட்ட வரைவு சட்டமாகி விட்டால், உபரியாகக் கிடைக்கும் நிலங்கள், நிலமற்ற உழவுத் தொழிலாளர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும்.



16. வேளாண்மைத் தொழிலுக்குப் பாசனம் இன்றியமை யாததாகும். பெரிய ஆறுகளின் நீர் முழுவதையும் பாசனத்தின் பொருட்டு அநேகமாகப் பயன்படுத்தியாகி விட்டதால், பாசனப் பரப்பை விரிவுபடுத்தும் பொருட்டும், குறிப்பாக மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களிலுள்ள வறட்சிப் பாங்கான பகுதிகளுக்கு உதவும் பொருட்டு, கேரளாவில் மேற்கே பாயும் ஆறுகளின் உபரி நீரிலிருந்து ஓரளவு நீரைத் தமிழ் நாட்டிற்கு திருப்பிவிட கேரள அரசுடன் என்னுடைய அரசு விரைவில் பேச்சு வார்த்தை நடத்தும். காவிரியாறு சம்பந்தப் பட்ட மாநிலங்களுடன், 1968 ஆம் ஆண்டிலிருந்து பன்னிரண்டு ஆண்டுகளாகப் பலமுறை பேச்சுவார்த்தைகள் நடந்துள்ளன ; இருப்பினும், காவிரி நீர்த்தகராறில் உடன்பாடு ஏற்படவில்லை என்பது வருந்துதற்குரியது. இவ்வாண்டிலேனும் நாம் தமிழ் நாட்டின் நலனுக்கேற்ற நல்லதொரு தீர்வு காண முடியுமென்று நம்புகிறேன்.

17. மீனளம், வேளாண்மையுடன் தொடர்புள்ள ஒன்றாகும். நீண்ட கடற்கரையைப் பெற்றிருக்கும் பேறு தமிழ் நாட்டிற்குக் கிடைத்திருக்கிறது. என்றாலும், இயற்கை தந்த இவ்வளத்தை மிகுதியான அளவு பயன்படுத்தும் பேறுமட்டும் இல்லாமல் போய்விட்டது. இவ்வகையில் முதல் நடவடிக்கையாக, இந்தியாவின் கிழக்குக் கடற்பகுதியில் மீனளப் பரப்புக் குறித்து ஆய்வு மேற்கொள்வதற்காக ஆராய்ச்சி நடத்துமாறு மத்திய அரசை மாநில அரசு வேண்டியுள்ளது. இக் கோரிக்கை பரி சீலிக்கப்படுமென மத்திய அரசு தெரிவித்துள்ளது. அடுத்த நடவடிக்கையாகக் கிழக்குக் கடற்பகுதியில் உயிரினங்களைப் பிடித்தல், கடல் பகுதி சுற்றுச் சூழல், கடலுறை வளங்கள் முதலியவை குறித்து ஆய்வு மேற்கொள்ள வசதியாக விரிவான செயற்குறிப்புகள் தயாரிக்குமாறு, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

18. அதே சமயத்தில் கடலில் மிக ஆழமான பகுதிகளில் உள்ள மீன்களைப் பிடிக்க இயலும் பொருட்டு, வெவ்வேறு மீன்பிடி பகுதிகளுக்கேற்ற ஆழ்கடல் மீன்பிடி இழுபடகுகள் எவையெவை என்பதையும் அவற்றை எவர்களிடமிருந்து வாங்கலாம் என்பதையும் அறிய உதவுவதற்கு மத்திய அரசிட மிருந்து தொழில் நுட்ப உதவியைத் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் பெற்றுள்ளது. அரசு மேற்கொண்டுள்ள இந்நட வடிக்கைகள், இம் மாநிலக் கடல் வளத்தை மேலும் சிறந்த முறையில் பயன்படுத்தவும், மீனவர் வாழ்க்கை நிலையை உயர்த் தவும் துணை புரியும்.

19. பொருளாதார வளர்ச்சிக்கு, மின்சாரம் மிகவும் இன்றியமையாத அடிப்படைத் தேவையாக இருப்பதால்; ஆறாவது ஐந்தாண்டு திட்டத்தில் ரூ. 1,023 கோடி அளவுக்குப் பெரும் முதலீடு செய்யக் கருதப்பட்டுள்ளது. ரூ. 89·71

கோடி செலவில் மேட்டூர் அனல் மின் திட்டமும், ரூ. 1891'70
3கோடி செலவில் மேட்டூர் அனல் மின்திட்டமும் ஏற்கனவே அனு
மதிக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தொடர்ந்து மேலும் பல
திட்டங்கள் மேற்கொள்ளப்படும். இருந்தபோதிலும், தற்போது
மின்சாரப் பற்றாக் குறை உள்ளது. இதனால் தொழிற்சாலை
களுக்கு 30 சதவீத மின்சார வெட்டு விதிக்கப்பட்டுள்ளது.
198 -ஜூன் மாதம் வரை மின்சார வெட்டு இந்நிலையிலேயே
தொடர்ந்து இருக்கும்.

20. இம்மாநிலத்தைத் தொழில்மயமாக்கும் திட்டத்தை
மேலும் செயல்படுத்துவதற்கும், வேலை வாய்ப்பு வசதிகளை
உருவாக்கவும், தனியார் துறையிலும், அரசுத் துறையிலும்
தொழில்களைத் தொடங்க அரசு ஊக்கமளித்து வருகிறது.
மின்சாரம், சாலைப் போக்குவரத்து வசதி, தேர்ச்சி பெற்ற
மனித ஆற்றல் முதலியவை நன்முறையில் நமக்குக் கிடைக்கும்
வாய்ப்பினைக் கொண்டு பார்த்தால், இம்மாநிலத்தில் தனியார்
துறை போதிய முதலீடுகள் செய்யுமென்று நான் நம்புகிறேன்.
செங்கற்பட்டு மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையில் நாளொன்
றுக்கு 1,250 டன் கரும்பு பிழியக்கூடிய திறனுடைய சர்க்கரை
ஆலையொன்றை ஏற்படுத்த உரிமம் வழங்குமாறு இந்திய
அரசுக்கு நாம் எழுதிக் கேட்டுள்ளோம். அரசுத்துறையில்
தொடங்கவிருக்கிற பத்திரிகைக் காகிதத் தொழில் திட்டத்தை
செயலாக்க முன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு
வருகின்றன. இந்திய அரசும், திட்டக் குழுவும், உலக வங்கியும்
இத்திட்டத்தில் பெரிதும் அக்கறை காட்டி வருகின்றன.

21. இவ்வரசு பின்பற்றும் முன்னேற்றமான தொழிலாளர்
கொள்கை கனிந்த பயனை நல்கி வந்துள்ளது. இம்மாநிலத்தில்
தொழிலாளர் நலன் 1980ஆம் ஆண்டில் மொத்தத்தில் திருப்தி
கரமாகவே இருந்து வந்திருக்கிறது. 1948ஆம் ஆண்டு தொழில்
தகராறுகள் சட்டத்தின் 12 (3) பகுதியின்கீழ் செய்து கொள்ளப்
படும் உடன்பாடு, வேலை நிறுத்தங்கள் தொடங்குவது தொழிலா
ளர்களில் 60 சதவீதத்தினரின் உடன்பாட்டுடன் மேற்கொள்ள
தேவையான சட்டத் திருத்தங்களை ஏற்படுத்த இந்த அரசு
கருதியுள்ளது. தொழிலாளர் சட்டங்கள் குறித்த நிலைக் குழு
முன் இது வைக்கப்பட்டுள்ளது. அக்குழுவின் பரிந்துரைகள்
எதிர் பார்க்கப்படுகின்றன.

22. "பக்கிங்காம்-கர்நாடிக் ஆலை" தற்போது மூடப்பட்டி
ருப்பது நம்முன் உள்ள பெரிய பிரச்சனை ஆகும்; இதனால்
சென்னை மாநகரின் ஏறக்குறைய 13,000 குடும்பங்கள் பாதிக்கப்
பட்டுள்ளன. வேலை வாய்ப்பற்றோருக்கு வேலை வாய்ப்பளிப்
பதற்காக, அரசு தன்னால் ஆன முயற்சிகளை மேற்கொண்டு



வரும்போது, இவ்வாலை மூடப்படுவதனால் இவ்வாலையில்
ஏற்கனவே வேலை செய்து வருவோர் தங்களது வேலையை
இழக்கும் படியான நிலை ஏற்பட்டுள்ளது என்பது உண்மையிலேயே
வருந்தத் தக்கதாகும். இப்பிரச்சினைக்கு முடிவு காண, மாநில
அரசு தன்னால் ஆகக் கூடிய எல்லாவற்றையும் செய்து வருகிறது.
நிர்வாகத்தினரும் தொழிலாளர்களும் சம்பந்தப்பட்ட இந்தப்
பிரச்சினையை மத்திய அரசே தீர்த்து வைக்க வேண்டியிருக்
கிறது என்பதைக் குறிப்பிடுவது பொருத்தமாகும். மத்திய
அரசு, இது தொடர்பாகப் பல கூட்டங்களைக் கூட்டியது;
இவ்வாலை மீண்டும் செயல்படத் தொடங்க இயலும்
வகையில், இப்பிரச்சினை மிக விரைவில் சுமுகமாக தீர்த்து
வைக்கப்படுமென என் அரசு நம்புகிறது.

23. இம்மாநிலத்தில் 376 வளர்ச்சி வட்டாரங்கள் உள்ளன;
அவற்றில் 63 வளர்ச்சி வட்டாரங்களில், சுமார் ரூ. 43 கோடி
மதிப்பீட்டுச் செலவில் தன்னிறைவுத் திட்டம் தற்போது செயல்
படுத்தப்படுகிறது. 63 வளர்ச்சி வட்டாரங்கள் அடங்கிய முதல்
தொகுதிக்காக நிர்ணயிக்கப்பட்ட திட்ட இலக்குகள், நடப்பு
நிதியாண்டு இறுதிக்குள் எய்தப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.
இத்திட்டம், அடுத்த நிதியாண்டில் மேற்கொண்டு புதிய 120
வளர்ச்சி வட்டாரங்களில் செயல்படுத்தப்படும். திட்டத்தின்
அளவை முடிவு செய்தல், இலக்குகளை நிர்ணயித்தல், மதிப்பீடு
களைத் தயாரித்தல் போன்ற தொடக்க ஏற்பாடுகள் செய்யப்
பட்டு வருகின்றன. மாநில அளவில் உள்ள உயர் அதிகாரக்
குழு, இத்திட்டம் செயல்படுவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை
கண்காணித்து வருகிறது.

24. வேலைக்கு உணவுத் திட்டம் இப்போது திருத்தியமைக்கப்
பட்டு கிராமப்புற வேலை வாய்ப்பு தேசியத் திட்டமாகப் பெயர்
பெற்றுள்ளது. கிராம மக்களுக்கு உதவி செய்யும் வகையில்
இம்மாநிலத்தில் இத்திட்டம் மிகுந்த முனைப்புடன் செயல்
படுத்தப்படும்.

25. மக்கள் தொகை கணக்கெடுப்பு முடிந்தபின் உள்ளாட்சி
மன்றங்களுக்குத் தேர்தல் நடத்துவது நல்லதென்று மத்திய அரசு
கேட்டுக் கொண்டதற்கிணங்க, அந்தப் பணிகள் முடிந்தவுடன்
தேர்தல்கள் நடத்தப்படும். எவ்வளவு விரைவில் இந்தத்
தேர்தலை நடத்த வேண்டுமோ அவ்வகையில் நடத்தி, மக்களால்
நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கையில்
உள்ளாட்சிப் பொறுப்பை எனது அரசு ஒப்படைக்கும்.

26. கல்வித் துறையில், கோயம்புத்தூர்; திருச்சி ஆகிய
இடங்களில் இரு பல்கலைக் கழகங்கள் தொடங்குவதற்கான
செயற் குறிப்புகள் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டன. அதைச்
செயற்படுத்துவதற்கான சட்டம் ஒன்று விரைவிலேயே கொண்டு

வரப்படும். இவ்வாண்டிலேயே தமிழ் பல்கலைக் கழகமும், காரைக்குடியில் ஒரு பல்கலைக் கழகமுமாக மேலும் இரு பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்தவும் எனது அரசு முயற்சி எடுத்து வருகிறது.

27. கடல் பரப்பாய்வியல் தேசீய நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் சோழமண்டலக் கடற்பகுதியில் (அதாவது தமிழ்நாட்டின் கிழக்குக் கரையில்), முக்கியமாக காவிரிப்பூம்பட்டினத்தில் படுகை தொல்பொருளியல் ஆய்வுகளை, அரசு அண்மையில் வெளியிட்ட ஆணைகளையொட்டி, மாநில அரசின் தொல் பொருளியல்துறை நடத்தி வருகிறது.

28. பச்சையப்பன் அறக்கட்டளை நிர்வாகத்தை ஈராண்டுக் காலத்திற்குப் பொது நலனை முன்னிட்டு அரசு மேற் கொண்டுள்ளது.

29. சென்னை மாநகருக்கு எனத் தனிப்பட்ட சில பிரச்சினைகள் உள்ளன. பருவமழை தவறினால், குடிநீர் கிடைப்பதும் அரிதாகி விடுகிறது. சென்னை மாநகருக்கு வழங்கப்படும் குடிநீர் அளவைப் பெருக்குவதற்காக திருச்சி மாவட்டத்தில் கட்டளைப் பொறி மதகின் கீழ் காவிரி ஆற்றி லிருந்து குடி தண்ணீரைக் கொண்டு வர அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டத்தினால் நாளொன்றுக்கு 99·5 கோடி லிட்டர் கூடுதலாக நீர் கிடைக்கப் பெறும். இத்திட்டம் 5 ஆண்டுக்கால அளவில் முடிக்கப்படலாம் என்று தலைமைப் பொறியாளர் கூறியுள்ளார். கட்டுமானக் காலத்தில், ஏறக்குறைய ஒரு நாளுக்கு இலட்சம் பேருக்கு 5 ஆண்டு காலத்திற்கு இதனால் தினசரி வேலை வாய்ப்பு கிடைக்கும். இத்திட்டத்திற்கு ரூ. 459 கோடிவரை செலவாகும். இதில் உலக வங்கி அக்கறை காட்டி யுள்ளது.

30. சென்னை மாநகரைக் குறித்த மற்றொரு சிக்கலான பிரச்சினை, விரைவான போக்குவரத்துப் பிரச்சினையாகும். சென்னைக் கடற்கரையிலிருந்து லஸ் முனைக்கு, சுமார் ரூ 60 கோடிக்குக் கூடுதலான செலவில், பெரும்பகுதியினரைக் கொண்டு செல்லும் விரைவுப் போக்குவரத்துத் திட்டம் (Mass Rapid Transit System) குறித்து மத்திய அரசுடன் இவ்வரசு தீவிரமாகக் கலந்தாலோசித்து வருகிறது.

31. இம் மாநிலத்தில், விமானப் போக்குவரத்து வகையில், மூன்றாம் நிலை கிளை வழி விமானப் போக்குவரத்தைத் தொடங்குமாறு, மாநில அரசு மத்திய அரசைச் சில காலமாக வலியுறுத்தி வருகிறது. இம் மாநிலத்திலுள்ள சுற்றுலா



இடங்கள், வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்கள், பண்பாட்டைப் பறைசாற்றும் இடங்கள், வணிக முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், சமயப் பெருமை உறையும் இடங்கள் பலவற்றுக்கு 'இந்தியன் ஏர்லைன்ஸ்' போக்குவரத்து வசதிகள் இல்லை. இம்மாதம், இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் மூன்றாம் நிலை கிளை வழி விமானப் போக்குவரத்துத் தொடங்கப் படுமென அண்மையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வகையில், தமிழ்நாட்டிற்கென அளித்துள்ள செயற் குறிப்புக்கு மத்திய அரசு விரைவில் ஒப்புதல் அளிக்குமென மாநில அரசு நம்பிக்கை கொண்டுள்ளது.

32. மதுவிலக்கு முக்கியமானதொரு சமூகச் சீர்திருத்த நடவடிக்கையாகும். எனினும், இதுபற்றி இந்த மாமன்றத்தில் பல்வேறு கருத்துக்கள் அவ்வப்போது வெளியிடப்பட்டுள்ளன. நாட்டு மக்களுக்கு நலன் விளைவிக்கும் மதுவிலக்குக் கொள்கையை எந்த வகையில் சிறப்பாகச் செயற் படுத்தலாம் என்பதையும் இக்கொள்கையை மறுபரிசீலனை செய்வது அவசியமா என்பதையும் பற்றி மாண்புமிகு உறுப்பி னர்கள் தங்களது கருத்துக்களை மனந் திறந்து தெரிவிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

33. அனைத்து நாடுகளிலும் நிலவும் நிலைமை காரணமாகப் பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்ந்துள்ளது. இவற்றின் விலையைக் கட்டுப்படுத்துவது நம் கையில் இல்லை. பெட்ரோலியப் பொருட்களின் விலைகள் உயர்ந்துள்ளமையால் பேருந்துக் கட்டணம் உயர்வதைத் தவிர்க்க இயலாது. எனவே, பேருந்துக் கட்டணம் உயர்வதற்கான நியாயமான காரணங்களை இம்மாநில மக்கள் ஏற்றுக் கொள்வர் என்று எனது அரசு நம்புகிறது.

34. எந்த ஒரு கொள்கையும் செவ்விய முறையில் செயல் பட வேண்டுமானால் நிர்வாகத்தைச் சீரமைப்பது இன்றியமை யாததாகும். இந்தக் கொள்கையைச் செயலாக்கும் வகையில், சென்ற ஆண்டு அரசு வருவாய் வாரியத்தைக் கலைத்தது. இதன் தொடர்ச்சியாக, பகுதிநேர கிராம அதிகாரிகள் அமைப்பை, காலத்துக்கு ஒவ்வாத காரணத்தாலும், கிராம நிர்வாகத்தில் தற்கால தேவைகளை பூர்த்தி செய்ய இயலாததாலும், மாற்றி யமைக்க முடிவு செய்தது. ஆகவே, இதற்காக அவசரச் சட்டம் ஒன்று பிறப்பிக்கப்பட்டது. இந்த அவசரச் சட்டத் திற்குப் பதிலாக சட்ட முன் வடிவு இக்கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும்.

35. எந்த அரசும் இயங்குவதற்கு வரி வசூலிப்புப் பணி மிகவும் இன்றியமையாததாகும். அரசுக்கு, உள்ளாட்சி மன்றங் களுக்கு, மாநில மின்சார வாரியத்திற்கு அல்லது கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சேரவேண்டிய அல்லது செலுத்தத்தக்க நில

வரி, வரிகள் ஏனைய தொகைளைச் செலுத்தக்கூடாது என்று உழவர்களைத் தூண்டி வருவதும், ஒழுங்காக அரசுக்கு வரி செலுத்துவோரை துன்பத்துக்குள்ளாக்கி, பாதுகாப்பற்ற நிலை ஏற்படுத்துவதும் போன்ற சமூக விரோத செயல்களில் சில பிரிவினர், ஈடுபட்டு வருவது மாமன்ற உறுப்பினர்கள் அறிந்தவையாகும். கிளர்ச்சியை நடத்துபவர்கள், அரசுப் பணியாளர்கள் மீது வன்முறை நடவடிக்கை எடுக்குமாறு நேரடியாகவோ, மறைமுகமாகவோ தூண்டி வருவதாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இது அரசுக்கு விரோதமாகச் செய்யும் நடவடிக்கை என்பதாலும், அரசு அமைப்பையே குலைக்கக்கூடும் என்பதாலும், சட்டத்திற்குட்பட்டு வாழ்பவர்களுக்குத் தக்க பாதுகாப்பு தர வேண்டுவது ஒரு அரசின் தலையாய கடமை என்பதாலும் இத்தகைய சமூக விரோதிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பது அவசியமாயிற்று. ஆகவே, இவர்களின் நடவடிக்கைகளைச் சமாளிப்பதற்காக, 1980 நவம்பரில் அவசரச் சட்டம் ஒன்று பிறப்பிக்கப்பட்டது. இந்த அவசரச் சட்டத்திற்குப் பதிலாக, சட்ட வரைவு ஒன்று விரைவில் சட்டமன்றத்தில் கொண்டு வரப்படும்.

36. 1979 டிசம்பர் 3 ஆம் தேதி முடியும் ஆண்டில், ஆண்டு குடும்ப வருமானம் 4,800 ரூபாய்க்கு மேற்படாதவர்களுக்குக் கடன் நிவாரணம் அளிக்கும் வகையில் தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டம் இயற்றப்பட்டது. வறுமை நிலையிலுள்ள கடனாளிகளுக்கு மட்டுமே நிவாரணம் அளிப்பது தான் இச்சட்டத்தின் நோக்கமாகும். ஆனால், இச்சட்டத்தின் சில விதிப்பிரிவுகளுக்குச் செல்வந்தர்கள் தங்களுக்குச் சாதகமாக பொருள்விளக்கம் கொள்கின்றனர். இக் குறைபாட்டை நீக்க, தமிழ்நாடு 1980-ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) அவசரச் சட்டத்தினால் இச் சட்டம் திருத்தப்பட்டது. இந்த அவசரச் சட்டத்திற்குப் பதிலாக சட்டவரைவு ஒன்று விரைவிலேயே சட்டமன்றத்தில் கொண்டு வரப்படும்.

37. அரசு நிர்ணயித்த கூலியை விவசாயத் தொழிலாளர்களுக்குக் கொடுக்காமல் அவர்களுக்கு வேலையில்லாமற் செய்ய, வேண்டுமென்றே நிலங்களை தரிசாகப் போடுவதும் உணவு வகைகளைப் பயிரிடும் நிலங்களில் சவுக்கு போன்ற பணப்பயிர்கள் பயிரிடுவதும் ஆகிய செயல்கள் ஒரு சில வசதியடைத்தவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந் நடவடிக்கை மக்களிடையே உணவுப் பஞ்சத்தை உண்டாக்குவது மட்டுமல்லாமல், விவசாயத் தொழிலையே நம்பிவாழும் பல இலட்சக்கணக்கான ஏழைக் குடும்பங்களை அன்றாடம் பட்டினிபோடவும் செய்யும் செயலாகும். நல்ல நிலங்களைத் தரிசாகப்போட்டாலோ அல்லது உணவுப்பயிர்கள் பயிரிடுவதற்கு மாறாக உழவர்களைப் பட்டினி போடும் வகையில் சவுக்கு



போன்ற வேறு பயிர்களை பயிரிட்டாலோ அத்தகைய நிலங்களை அரசு எடுத்து நிலமற்ற உழைக்கும் விவசாயிகளுக்குப் பங்கிட்டு கொடுக்கும் வகையில் சட்டமுன்வடிவு கொண்டு வரப்படும்.

38. வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ள வேலை இல்லாத இளைஞர்கள் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பின் அவர்களுக்கு முன்னுரிமை அளித்து ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவருக்காவது வேலை தர எனது அரசு நடவடிக்கை எடுக்கும். இது வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என்ற மைய, மாநில அரசின் கொள்கையை ஒட்டித் தொடங்கும் முதல் முயற்சியாகும்.

39. இம்மாநிலத்தில் சட்டம், ஒழுங்கமைதி, குற்ற நிகழ்வு நிலைமை பொதுவாகத் திருப்திகரமாகவேயுள்ளது. தமிழ் நாட்டில் கடந்த ஆண்டில் வகுப்புக் கலவரங்கள், அவற்றையொட்டிய வன்முறைச் சம்பவங்கள் முந்தைய ஆண்டுகளைவிட குறைந்து வரும் தன்மை நமக்கெல்லாம் ஓரளவுக்கு மன ஆறுதல் தரத்தக்கதாகும். பொது அமைதிக்குப் பெரிதும் ஊந்தகம் விளைவித்து வந்த தீவிரவாதிகளின் தொல்லைகள் குறிப்பாக, வடாற்காடு, தருமபுரி மாவட்டங்களின் சில பகுதிகளில் பெரும் அளவிற்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. காவல் படையினரிடம் ஒப்படைக்கப்பட்ட கடமைகளையும், பொறுப்புகளையும் மிகவும் திறமையுடன் நிறைவேற்றுவதற்கு அவசியமான அறிவியல் சாதனங்களின் தரத்திறனையும் எண்ணிக்கையையும் மேம்படுத்துவதில் மேலும் கவனம் செலுத்த எனது அரசு முடிவெடுத்துள்ளது.

40. காவலர் நல நடவடிக்கைகள் பலவற்றை மேற்கொண்டதன் காரணமாக, காவல் படையினரின் கட்டுப்பாடும் ஒழுங்குமுறையும் மனத்திட்பமும் உயரிய தன்மையிலேயே உள்ளன. இத்தகைய நல நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்கவை, மலிவு விலையில் இன்றியமையாத பொருள்கள் வழங்குதல், இடர்படி வழங்குதல், காவலர் வீட்டு வசதிக் கழகம் ஏற்படுத்தல் போன்றவையாகும்.

41. சமுதாயத்தில் நலிந்த, எளிய பிரிவினர் மீது, குறிப்பாக, ஆதி திராவிடர்கள், பழங்குடியினர் ஆகியோருக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகளை உறுதியோடு ஒடுக்கவேண்டுமென்பது அரசின் கொள்கையாக இருந்து வருகிறது. ஆதி திராவிடர்கள், பழங்குடியினர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கென்றே, மக்கள் உரிமை பாதுகாப்பு சட்டத்தின் விதிப் பிரிவுகளைச் செவ்வனே செயல்படுத்த, காவல் துறை துணை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் பதவித்தரத்தில், முதுநிலை அதிகாரி ஒருவரை அரசு அண்மையில் நியமித்துள்ளது. ஆதி திராவிடர்கள்

பழங்குடியினர் மீது இழைக்கப்படும் குற்றங்களைத் தனியே விசாரித்து ஒடுக்குவதற்குத் தனிப்பட்ட காவல் பிரிவுகள் மாவட்டங்களில் இயங்குகின்றன. சமுதாயத்திற்கே பெருந் தீங்கு விளைவிக்கும் சமூக விரோத சக்திகள் செய்யும் குற்றங் களைப் பார்த்துக்கொண்டு அரசு வாளா இருக்காது. இத்தகைய கொடுமையான செயல்களில் ஈடுபடும் சமூக விரோதிகள் மீது எனது அரசு உறுதியான நடவடிக்கை எடுக்கும்.

42. தமிழ்நாட்டு மக்களும், தமிழக அரசும் மதிப்பிற் குரிய உறுப்பினர்களாகிய நீவிரும் இணைந்து எடுத்துக்கொள் ளும் ஒத்துழைப்போடு எதிர்காலம் சிறந்து விளங்கும் என்று நான் திண்மையாக நம்புகிறேன். தோழமை உணர்வுடனும் ஒத்துழைப்புடனும் நாம் அனைவரும் இணைந்து பணியாற்றி, ஏழை எளிய, உழைக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த் தவும் தமிழகத்தின் வளர்ச்சியை மேம்படுத்தவும் எல்லா வகை யிலும் ஒன்றுபட்டு நின்று கடமையாற்றி வெற்றி பெறுவோ மாக.

வணக்கம்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சனிக்கிழமை, 1981 ஜனவரி 24.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்லல் தேற்றா தவர் "

குற்றமில்லாத சொற்கள் சிலவற்றால் ஒரு கருத்தை விளக்கிச் சொல்ல அறியாதவரே பொருளற்ற சொற்கள் பல வற்றை அடுக்கிக் கொண்டே செல்வர்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மீனவரிடையே தகராறுகள்.

வினா எண். 21 திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடலோரப் பகுதிகளில் விசைப் படகுக்காரர்களுக்கும் நாட்டுப் படகுக்காரர்களுக்கும் தொடர்ந்து இருந்து வரும் தகராறுகளைத் தவிர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சபை முன் விளக்க அறிக்கை *ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, சுமார் ஐந்தாண்டுக் காலமாக இந்த மீனவர் பிரச்சினை அரசாங்கத்திற்குத் தொல்லை கொடுக்கக்கூடிய அளவிற்கு நடந்து வருவதை இந்த அரசு உடனடியாகத் தலை யிட்டு முடிவு செய்ய உத்தேசம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கடலோரப் பகுதியில் விசைப் படகுக்காரர்களுக்கும் நாட்டுப் படகுக்காரர்களுக்கும்

* 324-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

ஆங்காங்கு தகராறுகள் அவ்வப்பொழுது ஏற்படுவதை ஆங்காங்கு உள்ள மீன் துறையைச் சேர்ந்த அதிகாரிகள், காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியவர்கள் தலையிட்டுக் கூடுமானவரையில் தீர்த்து வைப்பதற்கு முயற்சிக்கிறார்கள். கடலோரப் பகுதியிலிருந்து மூன்று மைல் தொலைவுக்குள் நாட்டுப் படகுக்காரர்கள் மட்டுமே மீன் பிடிக்க வேண்டுமென்றும், மூன்று மைல்களுக்கு அப்பால்தான் விசைப்படகுக்காரர்கள் மீன் பிடிக்க வேண்டும் என்றும் வற்புறுத்தப்படுகிறது.

ஆனால் சில பல நேரங்களில் விசைப்படகுக்காரர்கள், நாட்டுப் படகுக்காரர்கள் மீன் பிடிக்க வேண்டிய பகுதியில் நுழைந்து மீன் பிடிக்கின்ற முயற்சிகளில் ஈடுபடுகின்றபொழுது ஆங்காங்கு தகராறுகள் ஏற்படுகின்றன. அதற்குக் காரணம் கடலோரப் பகுதிகளில் அந்நியச் செலாவணி ஈட்டித் தருகின்ற அளவிற்கு உள்ளதும், எல்லோராலும் விரும்பப்படும் அளவிற்கும் உள்ள இரால் மீன்கள் அதிகமாகக் கிடைக்கின்ற காரணத்தால் மூன்று மைல்களுக்கு அப்பால் செல்ல வேண்டிய விசைப்படகுக்காரர்கள் மூன்று மைல்களுக்குள்ளே நாட்டுப் படகுக்காரர்கள் மீன் பிடிக்க வேண்டிய இடத்தில் நுழைந்து இரால் மீன்களைப் பிடிப்பதற்குத் தலையிட்டு விடுகிறார்கள். அதன் காரணமாக நாட்டுப் படகுக்காரர்கள் வலை வீசுகின்ற பகுதிகளில் சென்று திரும்பும் பொழுது அந்த வலைகள் அறுபடுகின்ற சூழ்நிலையும் ஏற்படுகின்றது. அதற்காகத்தான் சரியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதற்காக ஆங்காங்கு ரோந்து ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மூன்று மைல்களைக் குறிப்பதற்கு சில பல இடங்களில் மிதவைகள் மிதக்க விட்டுக் கொண்டிருக்கிறோம். விசைப்படகுக்காரர்கள் இந்த வழியிலே தான் சென்று மூன்று மைல்களுக்கு அப்பாலுள்ள கடலுக்குப் போக வேண்டுமென்று வழியும் காட்டப்பட்டிருக்கிறது. இதை சில நேரங்களில் ஆங்காங்கு இருப்பவர்கள் மீறுகின்ற காரணத்தால் தகராறுகள் ஏற்பட்டு, அதை உரிய முறையில் ஆங்காங்கு உள்ள காவல் துறை அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் ஆங்காங்கு முடிவு செய்து வருகிறார்கள். ஆனால் இரு சாரரும் அதைச் சார்ந்தவர்களும் இதை ஒப்புக் கொண்டு இந்த விதிமுறைகளுக்கு மதிப்பளித்தால் இப்படிப் பட்ட தகராறுகள் ஏற்படாது. எங்கே அதற்கு மதிப்பளிக்காத சூழ்நிலை ஏற்படுகிறதோ அங்கே தகராறுகள் ஏற்படுகின்றன. அப்படிப்பட்ட தகராறுகள் ஏற்படுவதைத் தவிர்க்க அவ்வப் பொழுது முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இருந்தாலும் குறிப்பிட்ட சிலபல இடங்களில் ரோந்து செய்து அந்த விதிகளைப் பின்பற்றுகின்றார்களா என்று காப்பாற்றுகின்ற வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.



திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கனம் அமைச்சரவர்கள் கூறியதைப்போல எந்த நடவடிக்கை எடுத்தாலும்கூட அங்கே போலீஸ் பந்தோபஸ்து எப்பொழுது இருந்து வருகிறது? இந்த அரசு அதன் மேல் கவனம் செலுத்தி உடனடியாக தக்க நடவடிக்கைகளை எடுத்தால்தான் இந்த அரசாங்கத்திற்கு செலவுகள் அதிகமாவது குறையும் என்பது என்னுடைய கருத்து.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவரவர்களே, எந்தெந்த இடங்களில் குறிப்பாக தகராறுகள் அடிக்கடி வருகின்றனவோ அந்தந்த இடங்களில் தீவிரமான முறைகளிலே ரோந்து ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கட்டளையிடப்பட்டிருக்கிறது. கூடுமானவரையில் தவிர்க்கப்பட்டு வருகிறது. சில பல நேரங்களில் அதையும் மீறி நடக்கின்றன. இதற்காக சட்டமே இயற்றுவதற்கு தமிழக அரசு முயற்சித்தது. ஆனால் மத்திய அரசு அகில இந்திய அளவில் சட்டம் இயற்றி நமக்கு அனுப்பி, இதையே நிறைவேற்ற வாய்ப்பளிப்போமேயானால் எல்லா மாநிலங்களுக்கும் சௌகரியமாக இருக்கும் என்ற அளவில் நம்முடைய கருத்தோடு அந்தச் சட்டத்தை மத்திய அரசுக்கு அனுப்பி வைக்க இருக்கிறோம். அதை மத்திய அரசு நிறைவேற்றி, அந்தச் சட்டம் வந்துவிட்டால் அந்தச் சட்டத்தின் அடிப்படையில் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து விசைப்படகுக்காரர்களுக்கும், நாட்டுப் படகுக்காரர்களுக்கும் தகராறுகள் ஏற்படாமல் தீர்த்து வைப்பதற்கான வழிவகைகள் ஏற்படக்கூடும். ஆனால், அதுவரையில் தக்க பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கூடுமான வரையில் நாட்டுப் படகுக்காரர்களுக்குச் செய்து தருகின்ற முயற்சியில் அரசு ஈடுபட்டிருக்கிறது. குறிப்பாக முகவை மாவட்டத்திலேயும், தஞ்சை மாவட்டத்திலேயும் 4 நாட்கள் நாட்டுப் படகுக்காரர்கள் போக வேண்டுமென்றும் 3 நாட்கள் விசைப் படகுக்காரர்கள் போகவேண்டுமென்றும் உரிமைச் சீட்டு வழங்கப்பட்டிருக்கிறது. ஒரு நாள் விட்டு ஒரு நாள், வாரத்தில் 4 நாட்கள் நாட்டு படகுக்காரர்கள் போக வேண்டுமென்றும், ஒரு நாள் விட்டு ஒரு நாள், இடைப்பட்ட 3 நாட்கள் விசைப்படகுக்காரர்கள் போக வேண்டுமென்றும் உரிமைச் சீட்டு வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கடலோரப் பகுதியில் ஒரு நாள் விட்டு ஒரு நாள் என்று 4 நாட்கள் நாட்டுப் படகுக்காரர்களுக்கும், 3 நாட்கள் விசைப்படகுக்காரர்களுக்கும் உரிமைச் சீட்டுகள் கொடுக்கப்படுகின்றன என்று சொன்னார். ஆனால், குறிப்பாக, இராமேஸ்வரம் பகுதியில் அந்தச் சட்டத்தை அமுல்படுத்தாததினால், நாட்டுப் படகுக்காரர்களுக்கு ஏற்படுகின்ற சிரமத்தைத் தீர்க்க இந்த அரசு கடுமையான நடவடிக்கை எடுக்குமா?

மேலும், நமது விசைப்படகுக்காரர்கள் இராமேஸ்வரம் பகுதியில் மீன் பிடிக்கச் செல்லும்போது, சிலோனிலிருந்து கப்பல் படையினர், நமது மாநிலத்திற்குள் வந்து மீனவர்களைக் கொள்ளை அடித்துச் செல்கிறார்கள். ரூ. 40,000 பெறுமான வலையை எடுத்துச் சென்றிருக்கிறார்கள். ஆகவே, நமது விசைப் படகு மீனவர்களுக்கும் பாதுகாப்பு கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முகவை, தஞ்சை மாவட்டங்களைப் பொறுத்தவரையிலும் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவது போன்று இராமேஸ்வரம் பகுதியில் அந்த விதிமுறை நடைமுறைக்குக் கொண்டுவரப்படாமல் இருக்குமானால் அங்குள்ள மீன்துறை அதிகாரிகளுடைய கவனத்திற்கு அது கொண்டுவரப்படுமானால், இந்த ஏற்பாட்டை அங்கும் கடைப்பிடிப்பதற்கான முழு முயற்சிகளை நாம் மேற்கொள்ளலாம்.

இலங்கையைச் சேர்ந்தவர்கள், நமக்குரிய கடல் பகுதியில் நுழைந்து, நமது மீனவர்களுக்கு தீங்கு விளைவிக்கின்ற நிலையிருந்தால் அதைக் கண்காணிக்கின்ற பொறுப்பு நமது கடற்படையைச் சேர்ந்தவர்களுக்கு விடப்பட்டிருக்கிறது. அவர்கள் அவ்வப்போது தக்க நடவடிக்கைகள் எடுக்கிறார்கள். அப்படி இலங்கையைச் சேர்ந்தவர்கள் தாக்குதல் நடத்தும்போது, அதனைத் தடுத்து நிறுத்தவும், தாக்குபவர்களைப் பிடிப்பதற்குமான முயற்சியிலே நமது கடற்படையோடு சேர்ந்து நாம் ஈடுபட்டிருக்கிறோம். அந்த வகையிலேதான், அண்மையிலே தைவான் நாட்டினுடைய கப்பல்கள் இங்கு வந்தபோது, அந்த மீனவர்களைப் பிடித்து சிறைப்படுத்தி பிறகு அவர்களை விடுதலை செய்து, அத்தனை மீன்களையும் கைப்பற்றி நாம் ஏலத்தில் விட்டிருக்கிறோம். அந்த விதத்தில், நமது கடற்படையினர் அவ்வப்போது தக்க வகையில் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் எவ்வெப்போது தொல்லைகள் வருகின்றன என்று அறிவிப்பார்களானால் அதிகாரிகள் அதன்பேரில் தக்க நடவடிக்கைகள் எடுப்பார்கள்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இரு சர்காருக்கும் ஒப்பந்தம் ஏற்படுத்தியிருந்தாலும் அல்லது கனம் அமைச்சர் அவர்கள் இப்பொழுது கூறுகிற மாதிரி, அதற்கான ஒரு சட்டத்தை மாநில அரசோ அல்லது மத்திய அரசோ கொண்டு வந்து நிறைவேற்றினாலும், அதை அமுல் நடத்த வேண்டியது கடலிலே. தரையிலே அமுல் நடத்துவது சுலபம். ஆனால், கடலிலே அமுல் நடத்துவது ரொம்பக் கஷ்டம். ஆகவே, அதை மீறுவதைத் தடுக்கவும், பிடிக்கவும், அதிகாரிகள் ரோந்து சுற்றுவதைப் பற்றிச





சொல்லி இருக்கிறார்கள். இந்த அவையில், அதற்குத் தேவையான மோட்டார் போட்டுகள் அரசாங்கத்திடம் இல்லை என்றும் மேலும் ரோந்தை அதிகப்படுத்துவதற்கான நடவடிக்கையை அரசாங்கம் எடுக்கும் என்று உறுதி அளித்திருந்தார்கள். அதன்படி ரோந்து சுற்றுவதை 'இன்டென்சிபை' செய்ய அடிஷனல் போட்ஸ், மற்றக் கருவிகள் என்ன கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று என்னென்ன வசதிகள் இப்பொழுது செய்யப்பட்டிருக்கின்றன என்ற விவரக் குறிப்புகள் இப்பொழுது இல்லை. ஆனால், தென்னாற்காடு, தஞ்சை, முகவை, இராமநாதபுரம், திருநெல்வேலி, மற்றும் கன்னியாகுமரி போன்ற குறிப்பிட்ட பகுதிகளில் ரோந்துப் பணி செய்யப்பட்டிருக்கிறது என்று எனக்குத் தகவல் தரப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட வசதி செய்யாததன் காரணமாக, ரோந்துப் பணிகள் நிறைவேறவில்லை என்று கவனத்திற்குக் கொண்டு வரப்படுமானால், அத்தகைய வசதிகளைச் செய்து தருகிற முயற்சியிலே அரசு ஈடுபடும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற கருத்தின் அடிப்படையிலே அதை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டுப் படகுக்காரர்களுக்கும் விசைப்படகுக்காரர்களுக்கும் தகராறு ஏற்படக் கூடிய நேரத்திலே ஆயிரக்கணக்கான ரூபாய் பெறுமான வலைகள் சேதப்பட்டு விடுகின்றன. அந்தச் சேதம் ஈடு செய்யப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

அதோடு, கடந்த நவம்பர் 6 ஆம் தேதியிலிருந்து, 12 ஆம் தேதி வரை வாலிநோக்கம் பகுதியிலே, தைவான் நாட்டைச் சேர்ந்த படகுகள் தொடர்ச்சியாக 8 நாட்கள் தங்கியிருந்து, மீன்கள் அத்தனையையும் பிடித்து விட்டார்கள். இராமநாதபுரம் மாவட்ட ஆர்.டி.ஓ. அவர்களும். பிஷரீஸ் டைரக்டர் அவர்களும் அங்குபோய் பார்த்து விட்டு திரும்பி வந்து விட்டார்கள். எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. டி.டி.சி. மீட்டிங்கிலும் இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். இதுவரையில் எந்த நடவடிக்கையும் இல்லை. இந்த நிலைமைகள் காரணமாக, அப்பகுதியில் மீனவர்கள் மீன் பிடிக்க இயலவில்லை. மீனவர்களுக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளது. ஆகவே, அதைத் தடுத்து நிறுத்த ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-10]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்ற கருத்துக்கள் பற்றிய விவரங்கள் இப்போது இல்லை.

[1981 ஜனவரி 24

தனிக் கேள்வி போட்டால் தைவான் நாட்டுப் படகுகளைப் பற்றிய விவரங்கள் முழுவதையும் அளிக்க இயலும். வலைகள் சேதத்தைப் பற்றியும், அதற்கு நஷ்ட ஈடு எந்த வகையில் கொடுக்கப்படுகிறது என்பதைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். சேதப்படுத்தியது யார் என்பதைக் கண்டறிந்து, அதற்கான நடவடிக்கைகளை அவர்கள் மீது எடுத்து அவர்களிடம் இருந்துதான் நஷ்ட ஈட்டைப் பெற்றுத் தர முடியும். இயற்கைச் சேதங்கள், புயல், பெரு வெள்ளம் போன்றவைகளினால் சேதம் ஏற்படும்போது அரசே தலையிட்டு அத்தகைய சேதங்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கின்றது. ஆனால் தனியார்கள் மூலம் சேதப்படுத்தப்பட்டால், அவர்கள் யாரென்று கண்டறிந்து அவர்களிடம் இருந்துதான் நஷ்ட ஈட்டை பெற்றுத் தர முடியும். ஆனால் அப்படி சேதப்படுத்துகிறவர்கள் யார் என்று கண்டு பிடிப்பதிலேதான் தகராறே ஏற்படுகிறது. அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**மீனளப் பயிற்சி நிலையம், மண்டபம்.**

*வினா எண். 22—திரு. த. இராமசாமி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மண்டபத்தில் பயிற்சி நிலையம் எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது?

(ஆ) எத்தனை பேருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது?

(இ) பயிற்சி பெற்ற எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு தரப்பட்டது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:

(அ) மண்டபத்திலுள்ள மீனளப் பயிற்சி நிலையம் 1964ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 23ஆம் நாளில் ஆரம்பிக்கப் பட்டது.

(ஆ) இதுவரை 768 மீனவர்களுக்குப் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது.

(இ) பயிற்சி பெற்ற மீனவர்களில் ஏறத்தாழ நானூறு பேர்கள் அரசு மற்றும் தனியார் விசைப் படகுகளில் வேலையில் அமர்ந்துள்ளதாக அறியப்படுகிறது.

திரு. உ. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, மண்டபத்தில் உள்ள பயிற்சி நிலையம் சரியாக நடத்தப்பட வில்லை, அதற்கான உபகரணங்கள் வைக்கப்படவில்லை என ஏற்கனவே இங்கே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டுள்ளது. அதைத் திருத்தி அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா? பயிற்சி பெற்று வெளியேறியவர்களுக்கு உறுதியான வேலை அளிக்க—அதாவது லாரிகள் ஓட்டக்கூடியவர்களுக்கு கொடுக்கப்படுவதைப் போன்று—



1981 ஜனவரி 24]

லைசன்சு கொடுக்கப்படுவதுபோன்று—விசைப் படகுகளை ஓட்டு வதற்கும் லைசன்சு கொடுத்து, அதில் பயிற்சி பெற்றவர்க ளைத்தான் வேலைக்கு வைத்துக் கொள்ளவேண்டும் என்று முடிவு செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மண்டபத்தில் உள்ள பயிற்சி நிலையத்தின் நிலை மைகளைப் பற்றிய விவரக்குறிப்புகள் எதுவும் இல்லை. எனக்குத் தரப்பட்டிருக்கிற குறிப்பில், சென்னை, கடலூர், நாகப் பட்டினம், தூத்துக்குடி, குளச்சல், மண்டபம் போன்ற இடங் களில் பயிற்சி நிலையங்கள் உள்ளன. மற்ற இடங்களில் 50 பேர்களுக்கு பயிற்சி கொடுக்கப்பட்டால், மண்டபத்தில் 60 பேர்களுக்கு பயிற்சி கொடுக்கப்படுகிறது. வசதிக் குறைவு எதுவும் இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப் பிடுவதைப்போன்று, அதன் மீது அரசு தக்க கவனம் செலுத்தி குறைபாடுகளை நீக்குவதற்கான முயற்சியிலே ஈடுபடும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

பயிற்சி பெற்றவர்களில் பல பேர்களுடைய விவரக் குறிப் புகள் இல்லை. மொத்தம் 768 பேர்களுக்கு மேல் பயிற்சி பெற் றிருக்கிறார்கள். எங்கெங்கே சேர்ந்தார்கள் என்ற விவரத்தை அனுப்பினால் யார் யாருக்கு வேலை இல்லை என்பதை அறிய முடியும். 400 பேர்களுடைய விவரம் தான் தெரிகின்றது. மற்ற வர்களுடைய விவரங்கள் தெரியவில்லை. வேலையில்லாமல் இருப்பவர்களானால் அவர்களை வேலையில் அமர்த்துவதற்கு நிபந்தனைகள் விதித்து, முக்கியமான தொழில் நடத்துகிறவர்கள் களை, இப்படிப்பட்ட பயிற்சி பெற்றவர்களைத்தான் நியமிக்க வேண்டும் என்பதைப் பற்றி ஆலோசிக்கலாம். இப்போது இருக் கிறதா, இல்லையா என்பது குறித்த விவரக் குறிப்பு இல்லை. அதுபற்றி ஆராயப்படும்.

திரு. த. வேணுகோபால்: தலைவர் அவர்களே, பயிற்சி பெறுகின்றவர்களுக்கு தற்போது கொடுக்கப்படும் ஊதியத் தொகையை உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்போது பயிற்சி பெறுகின்றவர்களுக்கு மாதம் 75 ரூபாய் உதவித் தொகையாகக் கொடுக்கப்படுகிறது. அதை உயர்த்தித் தரு கிற செயற்குறிப்பு இப்போது அரசிடம் இல்லை.

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, இப் போது இருக்கின்ற விலைவாசி முன்பு இருந்ததை விட அதிக மாக இருக்கிறது. ஆரம்பத்தில் ரூ. 50 உதவித் தொகை என்று இருந்ததை, பின்னர் ரூ. 75 என்கிற அளவிற்கு உயர்த்தப்பட் டது. ஆனால், அதற்குப் பின்னர் விலைவாசி அதிகரித்து விட்

டது. அதனால் நமக்குக் கூட சம்பளத்தை அதிகரித்துக்கொண்டு விட்டோம். இந்த நிலையில், அங்கே பயிற்சி பெறுகின்ற மாணவர்களுக்கும் கூடுதலாக உதவித்தொகை கொடுக்க அரசு முன் வருமா?

இரண்டாவதாக, அந்தப் பயிற்சிப் பள்ளியில் படித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கி விசைப்படகு வழங்குவது என்றும், ஒவ்வொரு விசைப்படகிலும் இந்தப் பயிற்சிப் பெற்ற ஒருவர் பணி செய்யவேண்டும் என்றும் இருந்தது. தற்போது விசைப் படகு வழங்குவதாகத் தெரியவில்லை. அதற்கும் இப்போது வழி இல்லை.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பயிற்சியைப் பற்றிய விளக்கம் தேவையில்லை. சுருக்கமாகக் கேள்வியைக் கேளுங்கள்.

திரு. ப. பொன்னுரங்கம் : அந்த ட்ரெயினிங் எடுத்தவர்களுக்கும் இப்போது வேலை கிடைக்கவில்லை. ஆகவே, மாநில அரசு அல்லது மத்திய அரசு பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சி பெற்ற மாணவர்கள் இத்தனை சதவிகிதம்பேர் ஒவ்வொரு விசைப்படகிலும் பணியாற்ற வேண்டும் என்கிற உத்தரவை மாநில அரசு போடுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதுபற்றிய உத்தரவு இப்போது இருக்கிறதா, இல்லையா என்ற விவரக் குறிப்புகள் இல்லை. ஆனால் இது பற்றி நான் முதலிலே சொன்னேன். அது ஆராயப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மீனளப்பயிற்சிக்கு எந்த வகுப்பு வரை படித்து இருக்க வேண்டும்? இந்தப் பயிற்சிக்கு ஜாதி வித்தியாசம் இல்லாமல் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்தப் பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்கள் 18 வயதுக்கு மேல் 35 வயதிற்குள் இருக்கவேண்டும். தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்து இருக்க வேண்டும்.

சர்க்கரை விற்பனை.

*வினா எண் 23—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கள்ள மார்க்கட்டில் சர்க்கரை அதிக விலைக்கு விற்பதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : லெவி சர்க்கரையின் சில்லரை விலை கிலோ ஒன்று ரூ. 3·50 என நிர்ணயிக்கப்பட்டு தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், கூட்டுறவுத்துறை ஆகியவற்றைச் சார்ந்த கடைகள் மூலமாக மட்டுமே குடும்ப அட்டைகளின்பேரில் வினியோகிக்கப்பட்டு வருகிறது. இச்சர்க்கரை கள்ள மார்க்கட்டில் விற்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.



1—9—1980-க்கு முன் வெளிச்சந்தை சர்க்கரைக்கு விலை நிர்ணயம் செய்யப்படவில்லை. வியாபாரிகள் அச்சர்க்கரையை அவர்கள் விரும்பிய விலையில் விற்றுக்கொள்ளலாம். எனவே இதனை கள்ளச்சந்தையில் விற்பது என்ற நிலைக்கே இடமில்லை. ஆனால் 1—9—1980 முதல் வெளிச்சந்தை சர்க்கரை பூராவையும் அரசே வாங்கி அதை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், கூட்டுறவுத்துறை ஆகியவற்றைச் சேர்ந்த கடைகள் மூலமாக கிலோ ரூ. 6·00 வீதம் விற்கப்பட்டு வந்தது. தற்போது கிலோ ஒன்றுக்கு ரூ. 6·50 வீதம் விற்கப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்களுக்கு வீட்டுக்கு ஒரு அட்டை கொடுக்கிறார்கள். அந்தக் கார்டை மக்கள் அடகு வைத்து விடுகிறார்கள். அல்லது ஜீனி வாங்கி விற்று விடுகிறார்கள். இப்படி பொதுமக்களே தவறு செய்வதால் ஜீனி விலை அதிகரித்துக் கொண்டே போகிறது. அது மட்டுமல்லாமல் கார்ட் இல்லை என்று சொல்லி ** ** கேட்கிறார்கள். அவர்களும் ஏழைகளுக்கு உதவி செய்வதாக நினைத்துக்கொண்டு புதிய கார்ட் கொடுக்க சிபார்சு செய்கிறார்கள். இதனால் போலிக்கார்டுகள் தயாரிக்கும் நிலைமை ஏற்படுகிறது...............(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற குற்றச்சாட்டுகளை வெளியே பொதுக் கூட்டத்தில் சொல்லிக் கொள்ளுங்கள். அவர் சொன்ன ** என்ற வார்த்தையை அவைக்குறிப்பில் இருந்து நீக்கிவிட ஆணையிடுகிறேன். குற்றச்சாட்டின்றி கேள்வி கேளுங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : இந்தப் போலிக் கார்ட்டுகளைத் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, போலி கார்ட்டுகளைக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மேற்பார்வையிடுகின்ற அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டு இருக்கிறார்கள். மேலும், யாராவது 10 அல்லது 15 கார்டுகள் மொத்தமாகக் கொண்டு வந்தால், அந்தக் கார்ட்டுகள் முழுவதையும் பறிமுதல் செய்து வைத்துக்கொள்ளலாம் என்றும்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பெற்றது.

[1981 ஜனவரி 24

உத்தரவு போட்டு இருக்கிறோம். இருந்தாலும் பொது மக்களின் ஒத்துழைப்பு இருந்தால்தான் இதைச் சிறப்பாகச் செய்ய முடியும். பெரும் பெரும் நகரங்களில் போலிக் கார்டுகள் பெறுவதற்கான நிலைமைகள் இருப்பதைக் கண்டு பிடிப்பதற்கான முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன. கார்டுகள் வழங்கி நீண்ட காலம் ஆகிவிட்டபடியால், புதிதாக மறுபடியும் சென்ஸஸ் எடுக்கப்பட்டு, அதன் பிறகு எல்லோருக்கும் புதிய கார்டுகள் வழங்கப்படலாமா என்பதைப் பற்றியும் அரசு உத்தேசித்துக் கொண்டு வருகிறது.

[முற்பகல் 9-20]

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, பல சின்ன அதிகாரிகளும், ஊரிலே உள்ள பெரிய பிரமுகர்களும் கார்டு இல்லாமலே 20 கிலோ 30 கிலோ என்ற அளவிலே வாங்கிக் கொண்டு சென்று விடுவதால் ஏழைகளுக்கு சீனி கிடைக்காத நிலை ஏற்படுகின்றது. இதைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அப்படிப்பட்ட குறைபாடு எந்தெந்த கூட்டுறவுக் கடைகளிலே இருக்கின்றது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, திரு. தாமரைக்கனி அவர்கள் சொல்வதுபோல கார்டுகள் இல்லாமல் பலர் வாங்கிச் செல்வதைத் தடுக்கின்ற வகையில் குடும்பங்களில் திருமணங்கள் போன்ற விசேஷ நாட்களுக்கென்றும், ஓட்டல்களுக்கென்றும் தனியாக கன்ட்ரோல் விலையில் சர்க்கரை வழங்க ஏற்பாடு செய்யப்படுமா ? அதற்காக பிரத்தியேக பெர்மிட் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கார்டுகள் மூலமாக வழங்கப்படுகின்ற சர்க்கரையைப் பொறுத்த வரையில் கிலோ 3 ரூபாய் 50 காசு என்ற அளவில் விற்கப்படுகின்றது. ஆனால் வெளிச் சந்தையிலே 8 ரூபாய், 9 ரூபாய் என்று விற்கின்ற நிலையிலே கூட நாம் திருமணம் போன்ற விசேஷங்களுக்கென்றும் ரூ. 6·50 என்ற அளவிலே தான் விற்கிறோம். ஆனால் குறிப்பிட்ட சந்தர்ப்பங்களை வைத்து அவர்கள் விண்ணப்பித்தால் அவர்களுடைய தன்மை அறிந்து அவ்வப்போது வழங்கப்படுகின்றது.

திரு. ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, கிராம கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் விற்கப்படுகின்ற சர்க்கரை சரியாக வழங்கப்படுவதில்லை. அதற்குக் காரணம் சர்க்கரை வாங்குபவர்கள் வேலைக்கு சென்றுவிட்ட பிறகு கடைகளைத் திறந்து



1981 ஜனவரி 24]

வைத்துக் கொண்டு வினியோகிக்கப்படுவதுதான். அவர்களுடைய ஓய்வு நேரத்திலே சர்க்கரை வழங்கப்படுவதில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் சர்க்கரை வினியோகிப்பது ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி சுருக்கமாக இருக்க வேண்டும்.

திரு. ஆர். தியாகராஜன் : சர்க்கரை சரியாக வினியோகிக்கப்படாததன் காரணத்தால் நாங்கள் அது குறித்து கேட்டதற்கு இந்த அதிகாரம் உங்களுக்கு இல்லை சிவில் சப்ளை அதிகாரிதான் இதைக் கேட்க வேண்டும் என்று சொல்கிறார்கள். இந்த நிலையில் நாங்கள் குறிப்பிட்ட கேஸை ரிஜிஸ்டர் செய்யாமல் விட்டுவிட்ட நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே இந்த மாதிரி நிலைகளைத் தவிர்ப்பதற்கு நாமே ஒரு சர்வ கட்சி கமிட்டி அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது வேண்டுகோள்தான். கேள்வி இல்லை.

திரு. ஏ. சி. சண்முகம் : பேரவைத் தலைவரவர்களே. தமிழகத்தின் கூட்டுறவு ஆலைகளில் எவ்வளவு டன் சர்க்கரை உற்பத்தி ஆகின்றது ? அதில் எவ்வளவு டன் வெளி மாநிலத்திற்குச் செல்கிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவரவர்களே, அந்தக் கணக்குகள் எல்லாம் நம்மிடத்திலே இருக்காது. ஆனால் மத்திய அரசு மாதம் ஒன்றுக்கு நமக்கு ஒதுக்குகின்ற சர்க்கரை 19,790 டன் என்ற கணக்குத்தான் இருக்கின்றது. மேலும் எந்தெந்த நிலையிலே எந்தெந்த ஆலைகளிலிருந்து சர்க்கரை வாங்கிக்கொள்ள வேண்டும் என்று மத்திய அரசினர் ஆணையிடுகிறார்களோ அந்தந்த ஆலைகளிலே போய் நாம் சர்க்கரையை எடுக்க வேண்டி இருக்கின்றது.

திரு. எம். ஆறுமுகம் : பேரவைத் தலைவரவர்களே, தற்போதைய சர்க்கரை வினியோக முறையின் மூலம் கிராமங்களில் இருக்கக்கூடிய ஏழை மக்களுக்கு சர்க்கரை கிடைக்காத காரணத்தால் மிகுந்த சிரமம் ஏற்படுகின்றது. ஆகவே இந்த நிலையைப் போக்க மூன்று கிராமங்களுக்கு உட்பட்ட அளவில் சர்க்கரை வினியோகிக்கக்கூடிய திட்டத்தை ஏற்படுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவரவர்களே, சில இடங்களிலே நியாய விலைக் கடைகளை ஏற்படுத்தி அவற்றின் மூலமாக சர்க்கரை வழங்கி வருகின்றோம். வேறு சில இடங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வழங்கி

வருகிறோம். எந்தெந்த இடங்களுக்கு எவ்வளவு எவ்வளவு தேவை என்பது நியாய விலைக் கடைகள் அமைக்கும்போது கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றது. மேலும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மக்களுக்கு மிக எளிதாக சர்க்கரை கிடைப்பதற்குரிய வசதிகளும் செய்யப்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் கூறியபடி இருக்கின்ற நிலைகளை ஆராய்ந்து நியாய விலைக் கடைகளை ஏற்படுத்துவதற்கு இயலுமா என்பது பற்றி ஆராயலாம் அல்லது கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கடைகளை ஆங்காங்கே வைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடலாம்.

முத்தரையர் வகுப்பு.

*வினா எண் 24—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முத்துராஜா, முத்திரியர், அம்பலக்காரர், வலையர், முதலான பல்வேறு வழங்கு பெயர்களில் உள்ளவர்களை "முத்தரையர்" என ஒரே இனமாக அறிவிக்க வேண்டுமென்ற கோரிக்கை அரசிடம் விடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:

(அ) முத்துராஜா, முத்திரியர், அம்பலக்காரர், வலையர் முதலான பல்வேறு வகுப்பு பெயர்களில் உள்ளவர்களை "முத்தரையர்" என ஒரே இனமாக அறிவிக்க வேண்டுமென்ற கோரிக்கை அரசிடம் விடப்பட்டது.

(ஆ) மேற்கண்ட கோரிக்கை அரசால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

திரு. மெ. ஆண்டி அம்பலம்: தலைவர் அவர்களே, இந்த முத்தரையர் இனத்தைப் பற்றி இன்னும் சொல்லப் போனால், 18 பிரிவுகளில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்த சமுதாயத்தினரை ஒரே பிரிவினராக ஆக்க வேண்டும் என்ற நோக்கம் அரசிடம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அந்தப் பிரிவினர் குறிப்பாக ஷெட்யூல்ட் வகுப்பினரைப் போன்று மோசமான நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை ஒரே வகுப்பினராக ஆக்க அரசு மறுபரிசீலனை ஏதாவது செய்யுமா என்பதை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே பல்வேறு பெயர்களைக் குறிப்பிட்டு [illegible] அவர் [illegible] வகுப்பினராக [illegible] [illegible] அதிகமாகத் [illegible]



டும் என்று சொன்னால், மொத்தத்தில் 213 வகுப்பினர் பிற்பட்ட வகுப்பினராக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலே 39 வகுப்பினர் மிகவும் பிற்பட்ட வகுப்பினர் என்று வகுக்கப்பட்டு இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற முத்தரையர் சமுதாயத்தில் சில பலர் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகவும், சிலர் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகவும் இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் ஒன்றாக ஆக்கினால், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பெறும் சில சிறப்புச் சலுகைகளை அவர்கள் பெற முடியாமல் போய்விடும் நிலை ஏற்படும். அவர்கள் அனைவரையும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்று வகுக்கலாம் என்றால், அப்படி வகுக்கும் முறைகளில் பிற்பட்டோர் துறைக்கு சில பல சங்கடங்கள் இருப்பதாகத் தெரிகிறது. அதனால் தான் அந்தக் கோரிக்கை அரசால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

திரு. மெ. ஆண்டி அம்பலம்: பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை, இராமநாதபுரம் போன்ற இடங்களில் எல்லாம் இந்தச் சமூகத்தினர் மிகவும் மோசமான நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மிகவும் தீண்டத்தகாதவர்கள் போன்றே அங்கெல்லாம் நடத்தப்படுகிறார்கள். அவர்களுக்கு மிகவும் பிற்படுத்தப்பட்டோரின் சலுகைகளைப் பெற்றுத்தர வேண்டும், அவர்கள் வாழ்க்கை முறையை முன்னுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் நான் இந்தக் கேள்வியை அரசின் முன் வைத்தேன். அதனால் எப்படியாவது அவர்களையும் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு அரசு ஆவன செய்ய முன் வருமா என்றும் அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட வகுப்பினரை மட்டும் சுட்டி, அவர்களைப் பின் தங்கியோர் பட்டியலிலோ அல்லது மிகவும் பின் தங்கியோர் பட்டியலிலோ சேர்க்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருந்தால் மிகவும் எளிதாக இருந்திருக்கும். ஆனால் பல பிரிவுகளைக் கொண்ட முத்தரையர் சமூகத்தினர் அனைவரையும் ஒரே வகுப்பின்கீழ் கொண்டு வரவேண்டும் என்ற கோரிக்கையை நிறைவேற்றுவதில்தான் அத்துறைக்கு சங்கடங்கள் அதிகமாக இருக்கிறது என்று சொன்னேன்.

மேலும் மத்திய அரசு சென்சஸ் கணக்கை எடுத்த பிறகுதான் சமூக ஜாதி முறைகளில் எந்தவித பாகுபாடுகளையும் செய்ய வேண்டும் என்று உத்தரவு அனுப்பியிருக்கிறார்கள். அதுவரையில் எந்தவித சமூகத்தினரையும் பிரிக்க வேண்டாம் என்று கேட்டிருப்பதாலும், அப்படி சென்சஸ் கணக்கை எடுத்து முடித்த பிறகு, எவ்வளவு மக்கள் ஒவ்வொரு சமூகத்திலும் இருக்கிறார்கள் அவர்களுடைய கல்வித்தரம் வாழ்க்கைத்தரம் போன்றவற்றை தெள்ளத் தெளிவாக அறிந்த பிறகு வேண்டுமானால் நடவடிக்கை

[1981 ஜனவரி 24

எடுக்க முயற்சி செய்யலாம். ஆகையினால் அந்த அடிப்படையில் சென்சஸ் ரிப்போர்ட்டுகள் வந்தபிறகு தான் பல பிரச்னைகள் தீர்க்கப்படவேண்டியிருக்கிறது என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வ. சத்தியமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, ஜாதியை ஒழிக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் கொள்கை. ஆகவே மாநிலத்திலுள்ள ஜாதிகளைக் குறைக்க, இப்படி பல்வேறு முனைகளிலிருந்து வரும் வேண்டுகோளுக்கு இணங்கி அவைகளை ஒருங்கிணைத்தால், ஜாதிப்பிரிவுகளின் எண்ணிக்கையைக் குறைக்கலாமே, அந்த வகையில் ஒரு குழுவை அமைக்க அரசு யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அரசாங்கத்தின் முன் எல்லோரும் ஒன்று என்பது உண்மைதான் என்றாலும் கூட, நூறு, ஆயிரம் ஆண்டுக்காலமாக பிற்படுத்தப்பட்டு வாழ்க்கையில் பின் தங்கிய நிலையில் உள்ளோர் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த, இப்படி பல பிரிவுகள் இருந்தால், அதனைக் குறிப்பிட்டு அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய சலுகைகளை கொடுக்க முடியும் என்ற அடிப்படையில்தான் அரசாங்கம் இப்படி இயங்கி வருகிறது. நமது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போன்ற நிலை, எண்ணங்கள் வளர வளர, வாழ்க்கைத்தரம் உயர உயர, மக்களிடையே கூட தானாக ஏற்படக் கூடும். அது வரவேண்டும் என்றுதான் நாம் அனைவரும் விரும்புகிறோம்.

கள்ளக்குறிச்சி வட்டத்தில் பட்டுக் கொள்முதல் நிலையம்

*வினா எண் 25—திரு. க. ரங்கசாமி : மாண்புமிகு ஊரக தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி தாலுகாவில் உற்பத்தி செய்யப்படுகிற பட்டை அரசே கொள்முதல் நிலையத்தை ஏற்படுத்தி வாங்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில் எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : : (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.



1981 ஜனவரி 24]

சோளிங்கரில் பால் குளிரூட்டும் நிலையம்.

*வினா எண் 26—திரு. சி. கோபால் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு மாவட்டம், சோளிங்கர் நகரில் பால் குளிரூட்டும் நிலையம் ஆரம்பிக்கும் எண்ணம் இவ்வரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : : இல்லை.

[முற்பகல் 9-30]

திரு. சி. கோபால் ; வட ஆற்காடு மாவட்டம் சோளிங்கரில் கூட்டுறவு பால்வழங்கு சங்கத்தில் நாள்தோறும் ஏறக்குறைய 5,000 லிட்டர் பாலுக்கு மேல் உற்பத்தியாகிறது. அதன் சுற்றுப்புறத்தில் உள்ள கிராமங்களில் இருந்தும் ஏறக்குறைய 4,000 லிட்டர் பால் தினந்தோறும் உற்பத்தியாகிறது. மழை காலங்களில் பத்தாயிரம் லிட்டருக்கு மேல் பால் உற்பத்தியின் அளவு அதிகமாகிறது. சாதாரணமாக உற்பத்தியாகிற பாலை அவர்கள் பாலுச்செட்டிசத்திரத்திற்கு அங்குள்ள பால்குளிரூட்டும் நிலையத்திற்கு அனுப்புகிறார்கள். மழை காலங்களில் பால் உற்பத்தி அதிகமாகும்போது அவர்கள் எங்களுக்கு இந்த அளவிற்குப் பால் தேவை இல்லை என்று சொல்லிவிடுவதால் உற்பத்தித்திறன் இருந்தும் கூட உற்பத்தியாகிற பாலைப் பயன்படுத்துகிற நிலை அல்லது வழிமுறை இல்லாததால் சோளிங்கர் நகரில் அடுத்த ஆண்டிலாவது பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் முயற்சியை மேற்கொள்ள அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பாலுச்செட்டி சத்திரத்திலுள்ள குளிரூட்டு நிலையம் மட்டுமல்லாமல் வேலூருக்கு மூன்று மைல் அண்மையில் இருக்கிற சத்துவாச்சாரி பால்பதனிடும் நிலையத்திலும் சோளிங்கர் அதை ஒட்டியிருக்கிற பகுதிகளிலிருந்து கொள்முதல் செய்கிற பாலை பதனிடுகிற வசதி செய்யப்பட்டிருக்கிற காரணத்தால் சோளிங்கரில் தனியாக ஒரு பால் குளிரூட்டு நிலையம் அமைத்தால் அது பொருளாதார ரீதியாக இலாபகரமாக இருக்காது என்ற காரணத்தாலும் அந்த முயற்சி இப்போது மேற்கொள்ளப்படமாட்டாது என்பதை உறுப்பினர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. சி. கோபால் : பாலுச்செட்டிசத்திரத்திலும், சத்துவாச்சாரியிலும் உள்ள பால் குளிரூட்டும் நிலையங்களில் அதிகப்படியான பாலை எடுக்க முடியாத நிலையில், வட ஆற்காடு மாவட்டத்திலும், செங்கை மாவட்டத்திலும் உற்பத்தியாகிற பாலை எடுக்க முடியாத நிலையில் அண்டை மாநிலத்திலுள்ள

[1981 ஜனவரி 24

சித்தூரிலுள்ள குளிரூட்டும் நிலையத்திற்கு எடுத்துச் செல்கிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இதை மீண்டும் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறேன்.

(பதில் இல்லை).

## வேளாண்மைப் பயிற்சி பெற்றவர்கள்.

*வினா எண் 27—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் வேளாண்மைத்துறையால் நடத்தப்படும் வேளாண்மைப் பயிற்சிப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு 1977-ம் ஆண்டில் இருந்து 1980 வரை எத்தனை மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு அரசாங்கத்தால் அளிக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : 1977-ம் ஆண்டிலிருந்து 31—7—80முடிய வேளாண்மைத்துறையால் நடத்தப்படும் வேளாண்மைப் பயிற்சி பள்ளிகளில் பயின்ற மாணவர்களில் 20 பேர்களுக்கு அரசாங்கத்தால் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

திரு. த. வேணுகோபால் : வேளாண்மைத்துறையில் பயிற்சி பெற்ற மொத்த மாணவர்கள் எண்ணிக்கை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : 813.

திரு. த. வேணுகோபால் : அவர்களுக்கு வேலைவாய்ப்பு வசதி அளிக்க அரசுக்கு உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இந்தப் பயிற்சிப் பள்ளியின் முக்கிய நோக்கமே கிராமப்புறத்தில் உள்ள இளைஞர்களுக்கு முன்னேற்ற சாகுபடி முறைகளில் பயிற்சி அளிக்க வேண்டும் என்பதுதான். வேலைவாய்ப்பு உத்தேசத்தோடு இந்தப் பள்ளிகள் நடத்தப்படுவதில்லை. அவ்வப்போது வாய்ப்புகள் ஏற்படும்போது நிச்சயமாக வேலைவாய்ப்பு அளிக்கப்படும்.

திரு. மு. அப்பாதுரை : அரசால் நடத்தப்படும் பள்ளிகள் தவிர தனியார்கள் இப்படிப்பட்ட பள்ளிகள் நடத்துவது அரசுக்குத் தெரியுமா ? அப்படி நடத்தப்படுகிற பள்ளிகளில் தவறான முறையில் பணம் வாங்கப்படுவதும் அரசுக்குத் தெரியுமா ? அதைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தெரியாது. தெரிவித்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.





1981 ஜனவரி 24]

திரு. இல. பலராமன் : இந்த வேளாண்மைப் பயிற்சிப் பள்ளிகளில் எந்தத் தகுதி அடிப்படையில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் ? தேர்வுக் குழு அது குறித்து பரிசீலிக்கும் நிலையில் அதில் ஏற்படும் தவறுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : 18 வயது முதல் 30 வயது வரை உள்ளவர்களாகவும், எட்டாவது வகுப்பு அல்லது தேர்ட் பாரம் '' (Third Form) '' வரை குறைந்தபட்சம் படித்தவர்களாக இருக்கவேண்டும். பயிர்த் தொழிலில் உள்ளவர்களாக இருக்கவேண்டும் என்பதுதான் தகுதி. இதில் தவறு எதுவும் நடப்பதாக அரசுக்குத் தகவல் இல்லை.

திரு. எல். இளையபெருமாள் : கிட்டத்தட்ட 120 மாணவர்கள், ஹரிஜனங்கள், மலைவாழ் மக்கள் இருந்தும் அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்காமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்ததுண்டா ? அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிந்து கொண்டவர்கள் 813 பேர்கள் இருக்கிறார்கள். ஆனால் வேலைவாய்ப்பு உத்தரவாதத்தோடு இந்தப் பள்ளிகள் நடத்தப்படுவதில்லை. கிராமப்புறங்களில் வேளாண்மைத் துறையில் முன்னேற்ற முறையில் அவர்கள் சாகுபடி செய்ய வேண்டும் என்பதுதான் இந்தப் பயிற்சியின் முக்கிய நோக்கம். செயல் விளக்க உதவியாளர் பதவிகள் காலியாகிற நேரத்தில் முன் உரிமை அளிக்கப்பட்டு இவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். மலைவாழ் பகுதி மாணவர்களும் இதில் இருக்கிறார்கள். வாய்ப்பு எப்போது வருமோ அப்போது தரப்படும்.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டைமான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பயிற்சிப் பள்ளியிலே படிக்கக்கூடிய ஏழை மாணவர்களுக்கு இலவச ஸ்காலர்ஷிப் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு இது தொடர்பற்றது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். நான் பல முறை, ஏறத்தாழ 31 நிமிடங்களாக என் உடல்நிலையைக் கூட பொருட்படுத்தாமல் கையை உயர்த்திக்கொண்டிருந்தும், தாங்கள் ஒருமுறை கூட என்னை அழைக்கவில்லை. என்னுடைய வருத்தத்தைத் தெரிவிக்கின்ற அடிப்படையில் நான் இந்த அவையை விட்டு வெளியேறுகிறேன்.

(திரு. என். கிட்டப்பா வெளிநடப்புச் செய்தார்)

[1981 ஜனவரி 24

### திருவிடைமருதூர் வட்டத்தில் குறுவை சாகுபடிக்கான விதை நெல் வழங்கல்

* வினா எண். 28—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தாலுகாவில் உள்ள அரசாங்க விதை டெப்போக்களிலும் ஒன்றிய வேளாண்மை டெப்போக்களிலும் குறுவை சாகுபடிக்கான நெல் விதைகள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் தட்டுப்பாடு நீங்க மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :—

(அ) ஆம்.

(ஆ) நடப்பு ஆண்டில் சுமார் 900 டன்கள் குறுவை விதைகளை உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, விதை ஆராய்ச்சிப் பண்ணைகளிலிருந்து வெளி வருகின்ற புதிய ரக நெல் வித்துக்கள் சிறு விவசாயிகளுக்குக் கிடைக்கவில்லை. விதை வித்துக்கள் அரசாங்க டெப்போக்களுக்கு வந்தவுடனேயே பெரிய விவசாயிகள், மிராசுதாரர்கள் வாங்கிக் கொள்கிறார்கள். எனவே, சிறு விவசாயிகளுக்கு அப்படிப்பட்ட புதிய ரக நெல் வித்துக்கள் கிடைக்க அரசு ஆவன செய்யுமா ? இரண்டாவது வெளி மார்கெட்டிலே அதிக விலைக்கு நெல் விற்கின்றபோது அரசாங்க டெப்போக்களிலுள்ள நெல்லை வெளி மார்க்கெட்டிலே சில அதிகாரிகள் விற்பது அரசுக்குத் தெரியுமா ? அதைத் தடுத்து, சிறு விவசாயிகளுக்கு அப்பேர்ப்பட்ட நெல் கிடைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இதுபற்றிய புகார் அரசுக்கு வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற கருத்தின் அடிப்படையில், நிச்சயமாக அரசு இதற்கு ஆவன செய்யும்.

### புதிய விவசாயக் கிடங்குகள்.

*வினா எண். 29—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் விடையளிப்பாரா—

(அ) புதிதாக விவசாய கிடங்குகள் ஆரம்பிக்க ரூ. 25 ஆயிரத்துக்கு விவசாயிகள் விதை வாங்கி இருந்தால்தான் ஆரம்பிக்கப்படும் என ஏதாவது நிபந்தனை உள்ளதா ?

(ஆ) அப்படியானால் மேற்படி நிபந்தனை தளர்த்தப்படுமா ?



1981 ஜனவரி 24]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) ஆம்.

(ஆ) விவசாயப் பொருள்கள், பூச்சி மருந்துகளின் எதிர்பார்க்கப்படும் ஆண்டு விற்பனை மட்டுமின்றி,

(1) இப்பொருள்களை வாங்க வேண்டி விவசாயிகள் செல்லும்தூரம்;

(2) திறக்கப்படும் விவசாயக் கிடங்கு சேவை செய்யக்கூடிய விஸ்திரணம் ;

(3) பயனடையக்கூடிய கிராமங்களின் எண்ணிக்கை முதலியவற்றைக் கருத்தில் கொண்டு வேண்டுமானபோது இந்நிபந்தனை தளர்த்தப்படுகிறது.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, வேண்டுமானால் புது நிபந்தனைகள் தளர்த்தப்படும் என்று சொல்வதை நான் வரவேற்கிறேன். ஆனால், அதே நேரத்தில் 3 ஆண்டுகளாக இந்த கோரிக்கை வைக்கப்படுகிறது. 3 ஆண்டுகளாக இது நிறைவேறவில்லை. எனவே இந்த நிபந்தனையைத் தளர்த்தி இந்த கோரிக்கையை கூடிய சீக்கிரத்திலே என்னுடைய தொகுதியிலே ஆத்தூரில் விவசாயக் கிடங்கு ஆரம்பிக்கப்படாததால், இதை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, புதிதாக விவசாயக் கிடங்கு ஆரம்பிக்க வேண்டுமானால், அதன் பராமரிப்புச் செலவை ஏற்றுக்கொள்ள சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்தின் தீர்மானத்தைப் பெற்று, மாவட்ட ஆட்சித் தலைவர், வட்டார வளர்ச்சி அலுவலர், வேளாண்மைத் துறை இயக்குநர் ஆகியோர்களின் சம்மதத்தைப் பெற்று பிறகுதான், அரசு ஆணை பிறப்பிக்க முடியும்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, இவர்கள் பக்கத்தில் பக்கத்தில் இருந்து கொண்டிருக்கிறார்கள். இரண்டு பேர்களும் இணைந்து, இந்த கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுக்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து ; தலைவர் அவர்களே, இந்த கோரிக்கையை அரசு ஆராயும்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலே விதை வித்துக்கள் அரசு பண்ணையிலிருந்து தயாரித்துக் கொடுக்க வேண்டுமென்றிருந்தாலும், சில அதிகாரிகள் தனியார்களிடம் ஒப்பந்தம் செய்து

கொண்டு, அவர்களிடமிருந்து இந்த விதை வித்துக்களை வாங்கிக் கொடுக்கிறார்கள். அப்படிச் செய்யும்போது தவறான விதை களை சில நேரம் வாங்கிக் கொடுக்கப்படுவதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படித் தவறுகள் செய்யும் அதி காரிகள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதைவித்துக்கள் வாங்கியிருந்தால்தான் விவசாய கிடங்குகள் துவங்கப்படும் என்று சொல்லப்படுகிறது. ஆனால் விவசாய கிடங்குகள் ஏற்படுத்தினால் தான் விதை வித்துக்களை வாங்கி வைப்பதற்கும், அவைகளைப் பாதுகாக்கவும் முடியும். அதனால்தான், பல்வேறு விதைக் கிடங்குகளில் விதை வித்துக்களுக்குப் பழுது ஏற்பட்டு, விவசாயிகள் அவைகளை வாங்கிக்கொண்டு போகும்போது, அவைகள் முளைக்காமல் போய்விடுகிறது. எனவே, அமைச்சர் அவர்கள் இதைக் கருத்தில் கொண்டு, ஆங்காங்கே விதைகளைப் பாதுகாக்கக்கூடிய கிடங்கு களை அமைத்துத் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

[முற்பகல் 9–40]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இப்போதே தமிழகத்தில் மொத்தம் 800 விவசாயக் கிடங்குகள் இருக்கின்றன. தேவையை ஆராய்ந்து புதிதாகக் கிடங்குகள் திறக்க அரசு நிச்சயமாக முயற்சி மேற்கொள்ளும்.

திருப்பத்தூர் ஒன்றியப் பகுதியில் பாலங்கள்.

*வினா எண். 30—திரு. கு. சுந்தரம் : மாண்புமிகு வேளாண் மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூர் சர்க்கரை ஆலை யின் மூலம் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஆறுகளின் குறுக்கே மேம்பாலம் கட்டுவதற்காக அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இந்தத் திட்டங்கள் உடன் செயல்படுத்தப் படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) மற்றும் (ஆ) ஆம். ரூபாய் 4.15 இலட்சம் செலவில் திருப்பத்தூர் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் இராஜபாளையம் கிராமத்தில் பாம்பாறு குறுக்கே பாலம் கட்டுவதற்கு அரசால் ஒப்பளிக்கப்பட்டு தற் போது வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.



திரு. ப. சுந்தரம் : அந்தப் பாலம் கட்டுவதற்கு ஐந்தாண்டு களுக்கு முன்னாலேயே உத்திரவிடப்பட்டது. தொகுதியில் பல பகுதிகளில் பாம்பாறு குறுக்கிடுகிறது. கரும்பாலைகள் பல இருக்கின்றன. ஆலை ஓடுகின்ற நேரத்தில் மட்டும் அவர்கள் சிமெண்ட் பைப் போட்டு கரும்பை எடுத்து வருகிறார்கள். மற்ற நேரங்களில் விவசாயிகள் தங்கள் விளைபொருள்களைக் கொண்டு செல்ல சிரமப்படுகிறார்கள். ஆகையால் அரசு உடனடியாகக் கவனித்து அந்தப் பாலங்களைக் கட்ட ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இது பற்றிய மதிப்பீடு கள் தயார் செய்யப்பட்டு நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை தலைமைப் பொறியாளரின் தொழில் நுட்ப அனுமதிக்கு அனுப் பப்பட்டிருக்கிறது. அவர்கள் ஆய்வு செய்து கொண்டிருக்கிறார் கள். ஆய்வு முடிந்தவுடன் செயல்படுத்தப்படும்.

திரு. ப. சுந்தரம் : ஏற்கெனவே, கடந்த சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தில் திருப்பத்தூரில் பாம்பாற்றுக்கு அருகே மூன்று பாலங்கள் கட்டுவதாக அறிவிக்கப்பட்டு இதுவரை நட வடிக்கை எடுக்கவில்லை. உடனடியாக நடவடிக்கை எடுத்து கட்ட ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே பதில் சொல்லியாகிவிட்டது.

திரு. தி. அன்பழகன் : அந்தத் திட்டங்கள் செயல்படு படுவதில் சிறிது கால தாமதம் ஏற்பட்டிருக்கிறது. திருப் தூர் சர்க்கரை ஆலைக்கு ஆம்பூரிலிருந்து செ தரைப்பாலம் அமைக்க டெண்டர் விடப்பட்டு இதுவரை வே துவங்கப்படவில்லை. காலதாமதத்தைத் தவிர்த்து விரை திட்டத்தைச் செயல்படுத்த முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஆவன செய்யும்.

திரு. ஜி. மூர்த்தி : திருப்பத்தூர் சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரை பாலம் கட்ட டைரக்டர் ஆப் ஷுகர்ஸ் பங்கு தரவேண்டுமென்று அந்தப் பகுதியில் இருப்பவர்கள் மனுப் போட் டிருக்கிறார்கள். அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறார் களா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அதுபற்றிய தகவல் இல்லை.

[1981 ஜனவரி 24

செயற்கை மழை தருவித்தல்.

*வினா எண். 31—திரு. மி. வின்சென்ட் :—மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) செயற்கை மழையை வரவழைக்க எந்த ஆண்டு மாநில அரசு முயற்சிகள் மேற்கொண்டது ?

(ஆ) அதனால் ஏற்பட்ட பலன் யாது ?

(இ) இதனால் அரசுக்கு லாபமா ? நஷ்டமா ? எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) 1975 ஆம் ஆண்டு இந்தச் செயற்கை மழை தருவிக்கும் திட்டம் செயல்படுத்தப் பட்டது.

(ஆ) மற்றும் (இ) 1975 ஆம் ஆண்டு சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் நிலவிய கடுமையான வறட்சி நிலை காரணமாக மக்கள் குடிதண்ணீர் மற்றும் வேளாண்மைத் தேவைகளுக்கு மிகுந்த துன்பப்பட்டார்கள். அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதனை முக்கிய நோக்கமாகக் கொண்டு இலாப நஷ்ட நோக்கின்றி இத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

திரு. மி. வின்சென்ட் : தலைவர் அவர்களே, செயற்கை மழை பெய்ததா ? அது பேய் மழையா ? பொய் மழையா ? மெய் மழை என்றால் எங்கே பெய்தது ? அரசு எவ்வளவு ரூபாய் செலவழித்தது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இலாப நஷ்ட நோக்கமின்றி இது செயல்படுத்தப்பட்டது என்று குறிப்பிட்டேன். ஏற்பட்ட செலவு நிகரமாக ரூபாய் 65,87,002.67 காசுகள்.

திரு. இரா. தாமரைக்கனி : செயற்கை முறை மழை மாவட்ட வாரியாகவா ? இந்தியா முழுவதுமா ? அல்லது தமிழ் நாட்டில் மட்டுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : : மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : அமைச்சர் அவர்கள் ஏறத்தாழ 6 லட்சம் ரூபாய் செயற்கை மழை பெய்விக்க செலவழித்ததாகச் சொன்னார்கள். அதனால், தமிழ் நாட்டு விவசாயிகளுக்குக் கிடைத்த ஆதாயம் என்ன ? விளைபொருள் அதிகமாயிற்றா? புள்ளி விவரங்களைக் கூறுவார்களா ?



1981 ஜனவரி 24]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : 1975-ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தபோது செயல்படுத்தப் பட்டது. சென்னை மற்றும் சுற்றுப்புறங்களுக்குச் செயல்படுத்தப்பட்டது. சென்னை நகரத்தின் குடிநீர்த் தேவை, சுற்றுப்புறங்களில் உள்ள விவசாயிகள் தேவையை முன்னிட்டு செயல்படுத்தப்பட்டது. அமெரிக்கக் கம்பெனியோடு தொடர்பு கொண்டு அவர்கள் மூலமாக இந்தத் திட்டம் செயல்படுத்தப் பட்டது.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, வறட்சியின் காரணமாக குடிநீர்த் தட்டுப்பாடு போன்ற நிலைமைகள் ஏற்படுவதைப் போக்குவதற்காக செயற்கை மழை பெய்ய வைக்கப் பட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த ஆண்டு தமிழகம் முழுவதும் வறட்சி நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மதுரை இராமநாதபுரம் போன்ற பகுதிகளிலே குடிநீருக்கே மிகச் சிரமமான நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே, இப்போது செயற்கை மழை பெய்ய வைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இப்போது இயற்கை மழையை எதிர்ப்பார்ப்போமாக.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : தலைவர் அவர்களே, 1975-ஆம் ஆண்டிலே வரவழைக்கப்பட்ட செயற்கை மழை எத்தனை மில்லி மீட்டர் பெய்தது ? எந்த எந்தப் பகுதிகளிலே பெய்தது என்ற விவரங்களைத் தெரிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : விவரம் இல்லை.

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, இப்போது மழை பெய்விப்பதற்குப் பணத்தைச் செலவு செய்கிற நிலைமை இருக்கிறது. சில இராகங்களைப் பாடியே மழை பெய்ய வைத்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். தீபக் என்ற இராகத்தைப் பாடி புதுக்கோட்டை அரண்மனையையே தீப்பிடிக்க வைத்ததாக எல்லாம் சங்கீத வரலாறு சொல்கிறது. சில இராகங்களைப் பாடி பயிர் விளைவித்து இருக்கிறார்கள், சில இராகங்களைப் பாடியே வருண பகவான் மழை பொழிய கூடிய நிலையை ஏற்படுத்தி இருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட வித்தகர்களை வைத்து சில இராகங்களைப் பாடச் செய்து மழையைப் பொழியச் செய்ய இந்த அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : திரு. துரைமுருகன் அவர்களுடைய வயலில் இதை செயல்படுத்திப் பார்த்து தம்முடைய முடிவைச் சொல்வார்களானால் அதைப் பற்றி ஆராயலாம்.

[1981 ஜனவரி 24

உப்பனாற்றின் குறுக்கே பாலம்.

*வினா எண். 32—திரு. ப. பொன்னுரங்கம் : திரு. பாபு கோவிந்தராசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கடலூரில் ஸ்டேட் பாங்குக்கும், சிங்காரத் தோப்பிற்கும் இடையே உப்பனாற்றின் குறுக்கே பாலம் ஒன்று கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் கட்டுமானப் பணி எப்போது தொடங்கி எப்போது முடிவுறும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) இப்பணி சம்பந்தமாக திருத்திய மதிப்பீடு தலைமைப் பொறியாளரிடமிருந்து வந்துள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது. இது சம்பந்தமான அரசு ஆணை பிறப்பித்த பின்னர் வேலை துவங்கப்படும்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த நேரத்திலே இந்தத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அடிக்கல் நாட்டு விழா நடத்தப்பட்டது. முந்தைய அரசு இருந்தபோது கூட நான் இதுபற்றி கவன ஈர்ப்பு கொண்டு வந்தேன். அப்போது உப்பனாற்றின் குறுக்கே ஸ்டேட் பாங்கிற்கும் அதற்கு எதிரே உள்ள பகுதிக்கும் இடையே அந்தப் பாலம் உடனடியாக அமைக்கப்படும் என்று சொன்னார்கள். 2, 3 ஆண்டுகளுக்கு முன்னாலே இருந்த அ.தி.மு.க. அரசே அதற்கு உறுதி அளித்தது. ஆனால் அமைச்சர் அவர்கள் இப்போது சொல்கிறார்கள், அதிகாரிகளுக்கு அனுப்பியிருக்கிறோம், அந்தத் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது என்று. ஏற்கனவே கால தாமதமாகிவிட்டது. இது மிகவும் அத்தியாவசியமானது. நானே போயிருந்தபோது நடந்ததைச் சொல்கிறேன், என்னுடைய பெர்சனல் எக்ஸ்பீரியன்ஸ் ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தின்போது கேள்வியாகக் கேட்க வேண்டும். விவரங்கள் சொல்லக் கூடாது.

திரு. ப. பொன்னுரங்கம் : ஏற்கனவே கால தாமதமாகி விட்டது. அந்தப் பாலத்தை உப்பனாற்றின் குறுக்கே உடனடியாக அமைக்க துரிதமான நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இத்தப் பாலத்தை அமைக்க 13½ இலட்சம் ரூபாய் செலவிலே 1975-76-ம் ஆண்டு பகுதி இரண்டு திட்டத்தின் கீழே கொண்டு வர முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் இந்தப் பாலம் அமைக்கப்பட்டால் போக்கு



1981 ஜனவரி 24]

வரத்துக்கு சரிவர இணைப்பை ஏற்படுத்தாது என்றும் துறைமுகத் துறையினருக்கு விண்ணப்பித்தபோது அந்த இடத்திலே அமைத்தால் துறைமுகப் பணிகள் பாதிக்கக்கூடும் என்றும், ஆகவே அதை சோழங் குப்பத்திற்கு மாற்றக் கோரி ஆலோசனை வழங்கினார்கள். அந்த அடிப்படையிலே திருத்திய மதிப்பீடுகள் 34 இலட்ச ரூபாய் அளவிற்குத் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : முன்னாள் முதலமைச்சர் அவர்களால் இப் பாலத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்ட சமயத்தில் இத்தப் பாலம் கட்டப்பட்டு நல்ல முறையிலே செயல்படுகிற வகையிலே இடையிலே சிறிய 'போட்கள்' இடைஞ்சல் இல்லாமல் செல்வதற்கு வசதியாகவும் போக்குவரத்துக்கு வசதி ஏற்படும் வகையிலும் விஸ்தாரமாக இடம் விட்டு கட்டப்படக் கூடிய முறையிலே தான் அப்போது இருந்த அரசாங்கம் அதற்கு அனுமதி வழங்கியது.

மறுகரைப் பகுதியில் வசிக்கின்ற ஏறக்குறைய இருபது முப்பதாயிரம் பேர்கள் ஜனங்கள், பொதுவாகத் தாய்மார்கள் இக்கரை வருவதற்குச் சிரமப்படுகிறார்கள். ஆகவே, அவர்கள் வருவதற்கு வசதி செய்ய வேண்டுமென்ற நிலையிலே ஆரம்பிக்கப்பட்டது. ** ** **

(முற்பகல் 9—50)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காரண காரியங்களுக்குப் போகாமல் கட்டாததற்கு என்ன காரணம் என்ற அளவோடு முடித்துக் கொள்ள வேண்டும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் இல்லையென்றால் அவரை விட்டுக் கேட்கச் சொல்லுங்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : 13½ இலட்சம் ரூபாயில் கட்டி முடிக்கக்கூடிய பாலத்தை கட்ட முன்வராமல், 34 இலட்சம் ரூபாய்க்கு ரிவைஸ்ட் எஸ்டிமேட் போட்டு காலதாமதம் ஏன் ஏற்பட வேண்டும் ? பழைய திட்டத்தின்படியே அமலுக்குக் கொண்டு வருவதற்கு அரசு முன் வருமா ?

---

[illegible] பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன் ; துறைமுக நடவடிக்கைகள் பாதிக்கப்படும் என்கின்ற காரணத்திற்காகத்தான் சிங்காரத் தோப்பிலிருந்து சோனாங்குப்பம் வழியாக அமைக்க வேண்டுமென்று திருத்திய மதிப்பீடு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏதோ திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டு வந்த திட்டம் என்பதற்காக ஒதுக்கப்படவில்லை. * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விக்குப் பதில் சொன்னால் போதும்.

திரு. க. அன்பழகன் : ** ** கேள்விக்குப் பதில் அளிக்கின்ற பொழுது ஒரு குற்றச்சாட்டைச் சொல்லுகின்ற முறையில் சொல்வது இந்த அவையிலே ஏற்கனவே அனுமதிக்கப்படவில்லை அனுமதிக்கப்படாது என்று தெரிந்திருந்தாலும் வேண்டுமென்றே சொல்லும் ஒரு மனப்பான்மை இருந்தால் ஒன்று அப்படிச் சொன்னவர்கள் அதை வாபஸ் பெற வேண்டும் ; இல்லையென்றால் தலைவரவர்கள் அதை நீக்குவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** என்பதை மட்டும் நீக்கிவிடும்படி ஆணையிடுகிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவரவர்களே, அமைச்சருடைய பதிலிலேயிருந்து அந்தப் பாலம் கட்டுகின்ற இடம் சிங்காரத் தோப்பிலேயிருந்து வேறொரு இடத்திற்குச் செல்லும் சாயில் இடம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏற்கனவே கட்ட டெஸ்ட்—மண் பரிசோதனை செய்யப்பட்டு அங்கே கட்ட முடியாது என்று முடிவெடுத்தார்கள். அதை அமைச்சரவர்கள் அறிவார்களா ? அப்படியென்றால் பழைய திட்டத்தையே அமல்படுத்துவார்களா ?

திரு. ஆர். மணிமாறன் : தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கேள்வி கேட்டபொழுது சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் என்ன கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது, என்ன பதில் சொல்லப்பட்டிருக்கிறது என்பதை நடவடிக்கைக் குறிப்பில் பார்த்த பிறகு சொல்கிறேன். அதுவரை பத்திரிகைகளிலேயும் அது வர வேண்டாம்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, சிங்காரத் தோப்பிற்கும், சோனாங் குப்பத்திற்கும் இடையில் பாலம் அமைத்து அணுகுசாலை ஒன்றை அமைக்கும் திட்டத்திற்குத்தான் 34 இலட்சம் ரூபாய். ஏற்கனவே போடப்பட்ட திட்டத்தின்படி பாலத்திற்கு மட்டும் 13½ இலட்சம் ரூபாய். ஆகவேதான் இந்த மதிப்பீடு அதிகமாகியிருக்கிறது. மேலும் நான் வருகின்ற 1-ம் தேதி கடலூருக்குச் செல்லவிருக்கிறேன். அப்படிப் போகின்ற நேரத்தில் அந்தப் பகுதியையும் பார்வையிடுவதாக இருக்கிறேன்.

கோட்டூர்புரம்—நந்தனம் இணைப்புப் பாலம்

வினா எண் 33—திரு து. புருடோத்தமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா : —

(அ) சென்னை கோட்டூர்புரம்—நந்தனம் பகுதிகளை இணைக்கும் வகையில் ஒரு பாலம் அமைக்கும் திட்டம் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆமெனில் திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) விரைவில் இப்பணி நிறைவேற்றப்படும்.

திரு. து. புருடோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம் கட்ட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் பொழுது........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாலத்தைப் பற்றிய கேள்வி இது. அந்த ஆட்சி, இந்த ஆட்சி என்று ஆரம்பிக்காதீர்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஏற்கனவே விளக்கம் கொடுத்து, அதை நான் கவனிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். அடுத்த கேள்வியும் அதே முறையில் போகக் கூடாது.

திரு. துரைமுருகன் : ஆட்சி என்று சொன்னதை ஆட்சேபிக்க வில்லை. ** * என்று சொன்னதை நீக்க வேண்டுமென்று கேட்பது தப்பா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் தப்பு என்று சொல்லவில்லை. கோபப்படாமல், சாதாரணமாகவே கேட்கலாமே.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1981 ஜனவரி 24

திரு. து. புருஷோத்தமன் : தலைவர் அவர்களே, இந்தக் கோட்டூர்புரம் நந்தனம் பகுதியை இணைக்கும் பாலத்தை, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் பொழுது, ஏறக்குறைய ரூ. 43 இலட்சம் ஒதுக்கீடு செய்து, அதைக் கட்ட வேண்டுமென்று திட்டம் இட்டார்கள். இடையிலே, அவசர நிலை வந்த காலத்திலே அது தவிர்க்கப்பட்டு, பிறகு அந்த அவசர நிலை காலத்திலேயே அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. இருந்தாலுங்கூட இன்றையதினம் வரையில் அது நிறைவேற்றப்பட வில்லை என்று தெரிய வருகிறது. இது ஒரு செல்வந்தருடைய தலையீட்டின் காரணமாக, இந்தப் பாலம் அங்கே கட்டப்படவில்லையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே 1972-லே இந்தப் பணிக்காக ரூ. 26 லட்சம் மதிப்பீட்டுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. அதற்குப் பின்னாலே, 1974-லே அந்த ரூ. 26 இலட்சம் மதிப்பீடு ரூ. 44 இலட்சமாக உயர்த்தப்பட்டது. 1977 பிப்ரவரி திங்களில், மீண்டும் 4 வழிப் பாதையாக இல்லாமல், இரண்டு வழிப் பாதையாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற காரணத்திற்காக, மீண்டும் திருத்திய மதிப்பீடுகள் ரூ. 39,20,000-க்குப் போடப்பட்டது. அந்தப் பாலத்தினுடைய முக்கிய நோக்கமே, அண்ணா சாலையிலே ஏற்படுகிற நெரிசலைத் தவிர்க்கவும், அதே நேரத்தில், பிரயாண நேரத்தைக் குறைக்கவும், எரிபொருள் செலவுகளைக் குறைக்கவும், ஆக இவற்றிக்குத்தான் இந்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. ஆக, திருத்திய மதிப்பீடுகளின் அடிப்படையிலே பால வேலைகள் துவங்கப்பட்டு, வேலைகள் நடந்து வருகின்றன.

திரு. டி. கே. கபாலி : தலைவர் அவர்களே, என்னுடைய 129-வது வட்டத்தில் திருவள்ளுவர் சிலையிலிருந்து முண்டகக் கன்னி அம்மன் கோயிலுக்குப் போகும் பாலம் இடிந்து விழும் தருவாயில் உள்ளது... . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு அனுமதி இல்லை. மூலக் கேள்வி கோட்டூர்புரம் பற்றியது.

### சங்கனூர், கணபதி பகுதிகளுக்கு அடிப்படை வசதிகள்

*வினா எண் 34—திரு. எம். சின்னராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகராட்சியோடு இணைக்கப்பட்டுள்ள சங்கனூர், கணபதி பஞ்சாயத்துப் பகுதிகளில் அடிப்படை சுகாதார, சாலை, சாக்கடை வசதிகளை ஏற்படுத்த அரசு விசேஷத் திட்டம் ஏதேனும் செயல் படுத்துகிறதா?



1981 ஜனவரி 24]

(ஆ) இணைக்கப்பட்டுள்ள பகுதிகளை சிறப்பாக நிர்வகிக்க கூடுதலாக பணியாளர்கள் நகராட்சியில் நியமனம் செய்யப்படுவார்களா?

(இ) இப்பகுதிகளுக்கு சிறுவாணி திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) தக்க திட்டம் தயார் செய்யப்பட்டு வருகிறது.

(இ) ஆம்.

திரு. எம். சின்னராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் மாநகராட்சியாகப் போகும் கோவை நகராட்சியோடு சில பகுதிகளைச் சேர்த்து, இப்போது 10 சதுர மைலிலிருக்கும் நகராட்சி 44 சதுர மைல் பரப்பளவை எட்டியிருக்கிறது. ஆகவே, இணைக்கப்பட்ட இது போன்ற பகுதிகள் நிறைந்த மக்கள் தொகை கொண்டிருக்கிற காரணத்தினால் மாநாடு கண்ட மதுரையைப்போல், தன்னிறைவு அடைவதற்கு ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவில் நல்ல திட்டங்களை அரசு செயல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

அதே போல் அங்கு வரவேண்டிய சிறுவாணி குடிநீர், திட்டம் இந்த ஆண்டு ஜூன் மாதத்திலே முடிவடைய வேண்டும். இன்னும் அது முடிவு பெறவில்லை. அந்தக் கால தாமதத்திற்கான காரணம் என்ன என்பதையும் அமைச்சர் மூலம் அறியவிரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, தற்போழுது ஊராட்சி ஒன்றியங்களில் மட்டுமே தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால், நகராட்சிகள் பொறுத்த அளவில் தன்னிறைவுத் திட்டம் என்ற அளவில் இல்லாமல் இன்று நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையிலே திட்டங்கள் செயலாக்கப்பட்டு வருகின்றன குறிப்பாக, கோவையைப் பொறுத்தவரையிலே அதற்கு 1, 2 மாதங்களில் மாநகராட்சியாகப் போகின்ற ஒரு நகராட்சியாக இருந்து வருகிறது. அதற்குரிய பணிகள்தான் தீவிரமாகச் செயல் படுத்தப்பட்டு வருகின்றன குறிப்பாக கோவையைப் பொறுத்தமட்டில், சிறுவானி திட்டத்தின் மூலமாகத்தான் அங்கே இருக்ககூடிய மக்களுக்குக் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்வதற்குண்டான திட்டங்கள் முடிவடைகின்ற தருவாயிலே இருந்து வருகின்றன. இந்த ஆண்டு ஜூன் மாதத்திலே முடிவடைய வேண்டிய திட்டம் அடுத்த ஆண்டு 1982 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலே முடிவடையும் என்கிற சூழ்நிலையிலே இருந்து வருகிறது. ஆகவே, இந்தச் சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கும் குடி நீர் வசதியைச் செய்து கொடுக்கக் கூடிய திட்டமாகத்தான் இந்தத் திட்டம் செயல் படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.

[1981 ஜனவரி 24

[முற்பகல் 10–10]

திரு. எம். சின்னராஜ்: தலைவர் அவர்களே, தொண்டாமுத்தூர் தொகுதியிலே சிங்கனூர், கணபதி போன்ற கிராமங்கள் நகராட்சியோடு இணைக்கப்பட்டு இருக்கின்றன. அந்த கிராமங்களில் அபிவிருத்திப் பணியாக என்ன பணிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, சங்கனூர் பகுதியில் 14 சாலைப் பணிகள், 5 சாக்கடைப் பணிகள் 48 தண்ணீர் விநியோகப் பணிகள், ஆக மொத்தம் 67 பணிகளுக்கு ரூ. 3.38 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. அதேபோல 20 சாலைப் பணிகள், 9 தண்ணீர் விநியோகப் பணிகள், 9 சாக்கடைப் பணிகள் போன்றவைகளுக்கு 25.61 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. அதேபோல கணபதி பகுதியில் 9 சாலைப் பணிகள், 3 சாக்கடைப் பணிகள், 5 தண்ணீர் பணிகள் ஆக மொத்தம் 17 பணிகளுக்கு 2.23 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது. மேலும் 20 பணிகளுக்கு 9 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, கோவை நகரம் விரைவில் மாநகராட்சியாகப் போகிறது. அவ்வளவு பெரிய நகரத்தில் புதிய ஏரியாக்கள் சேர்க்கப்பட்டு இன்னும் விரிவடைந்துள்ள சந்தர்ப்பத்தில் இங்கே சுகாதாரப் பணிகளை கவனிப்பதற்காக 700க்கும் மேற்பட்ட ஊழியர்கள் இல்லாத குறை அந்த நகரத்தில் உள்ளது என முன்பு இதே சட்ட மன்றத்தில் அமைச்சர் அவர்கள் பதில் அளித்திருக்கிறார்கள். அவர்களின் 300 பேர்களை நியமிக்கவேண்டும் என்று கூறியதே இன்னும் நிறைவேற்றாமல் இருப்பதன் காரணம் என்ன? இதனால் கோவை நகரம் குப்பை நகரம் போன்று ஆகி, குப்பைக் கூளங்கள் நாற்றம் அடித்துக் கொண்டிருக்கிறது. எனவே ஏற்கனவே சொல்லப்பட்ட 300 பேர்களை நியமிப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே ஏற்கனவே கோவை நகராட்சியின் மூலமாக துப்புரவு பணியாளர்கள் தேவை என்ற அடிப்படையில் 300 பேர்களுக்கு அங்கீகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. 300 பேர்கள் அங்கீகரிக்கப்பட்டதன் பேரில், இப்போது ஆட்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்தப் பணிகள் தீவிரமாக நடைபெறும்.



1981 ஜனவரி 24]

திரு. எம். ஆறுமுகம்: தலைவர் அவர்களே, சிங்கனூர் பஞ்சாயத்துக்குட்பட்ட சாய்பாபா காலனியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு ரோடு போடுவதற்கு 2,000 ரூபாய் கொடுத்தால்தான் ரோடு போட முடியும் என்று அங்கிருக்கிற தனி அதிகாரி சொல்லுகிறார்........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குற்றச்சாட்டு சொல்வதற்கு இது நேரமல்ல.

### சென்னையில் சஞ்சய் காந்திக்குச்சிலை

*வினா எண் 35—திரு. என். எஸ். சித்தன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் அமரர் சஞ்சய் காந்தி அவர்களுக்கு சிலை வைப்பதற்க்கு அனுமதி கேட்டு அரசிடம் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(ஆ) இதுபற்றி சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளின் கருத்து கோரப்பட்டுள்ளது. அவை கிடைத்தவுடன் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

### எலத்தூர் மோட்டூர் தொழுநோய் தடுப்பு நிலையம்.

*வினா எண். 36—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் கலசபாக்கம் தொகுதியில் உள்ள எலத்தூர் மோட்டூர் கிராமத்தில் இயங்கி வந்த தொழுநோய் தடுப்பு நிலையம் போளூர் நகரத்திற்கு மாற்றப் பட்டு விட்டதா?

(ஆ) ஆம் எனில் அதன் காரணமென்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) தற்காலிகமாக மாற்றப்பட்டுள்ளது.

(ஆ) 18—5—1980 அன்று இரவு பெய்த பலத்த மழையின் காரணமாக இந்நிலையத்தின் கட்டடம் சேதமடைந்துள்ளது.

[1981 ஜனவரி 24

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு பல்வேறு கட்டடங்கள் இருந்து வருகின்றன. ஒரு கட்டடம் பழுதடைந்தால் மற்ற கட்டடங்களில் அந்த அலுவகத்தை மாற்றி இருக்கலாம். ஆனால் அங்கே இருக்கின்ற டாக்டர்கள் நகரத்திற்குப் போய்விடவேண்டும் என்ற தவறான எண்ணத்தில் செய்துவிட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை ஏற்படாமல் அரசாங்கம் உடனடியாக மாற்ற நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, இந்தக் கட்டடம் 6 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு தடவை பலத்த மழை காரணமாக போளூர் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டது. பின்னர் ஓரளவுக்கு செம்மைப் படுத்தப்பட்டு மீண்டும் பழைய இடத்திலேயே கொண்டு வரப்பட்டது. இந்த முறை பலத்த மழையின் காரணமாக மீண்டும் பழுதடைந்தது. அதை பழுதுபார்ப்பதற்கு 2·95 இலட்சம் ரூபாயில் ஒரு திட்டம் ஏற்படுத்தப்பட்டு அதற்காக மாவட்ட மருத்துவ அதிகாரி அவர்கள் பரிந்துரை அனுப்பி இருக்கிறார்கள். அது உடனடியாக நடைமுறைப்படுத்த உரிய நடவடிக்கை எடுத்து, நல்ல கட்டடத்தை அமைத்து அந்த மருத்துவ மனையை மீண்டும் இயங்கச் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, அங்கே புதிய கட்டடம் கட்டுவதை நான் வரவேற்கிறேன். இருப்பினும், ஏற்கனவே அங்கே பல்வேறு குடியிருப்புகள் இருப்பதால் அந்த மருத்துவ மனையை அங்கே வைத்துக் கொள்ளலாம். சிரமம் ஏதும் இருக்காது. ஆகவே, அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்த மருத்துவமனையை அங்கே அமைக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் யோசனையை ஏற்றுக்கொண்டு, முதலில் அங்கே கொஞ்ச நாள் வைத்துக்கொண்டு இருந்தோம். அந்த மருத்துவமனை இயங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து இருந்தோம். ஆனால், நோயாளிகளே அங்கே வரவில்லை. நோயாளிகள் அந்தக் கட்டடத்திற்குள் வந்து படுத்துக்கொள்ள பயப்படுகிறார்கள். இரண்டு மூன்று மாதங்கள் வைத்திருந்து பார்த்தோம். எந்த நோயாளியும் வராததால் அதை போளூர் நகரில் உள்ள பழைய மருத்துவமனைக் கட்டடத்திற்கு மாற்றப்பட்டு, இப்போது, அங்கே நோயாளிகள் சிகிச்சைப் பெற்று வருகிறார்கள். இப்போது அங்கே ஒரு புதிய மருத்துவமனைக் கட்டடம் 3 இலட்ச ரூபாய் செலவில் கட்ட இருக்கிறோம். அது கட்டி முடிக்கப்பட்டால் அந்தக் கட்டடத்தில் அந்த மருத்துவ மனை மீண்டும் அமைக்கப்படும்.



1981 ஜனவரி 24]

திரு. செ. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, இந்தத் தொழுநோய் தடுப்புப் பிரிவு எல்லாத் தாலுக்கா மருத்துவ மனைகளிலும் செயல்படுகிறதா ? ஆம் எனில், தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவிடைமருதூர், நன்னிலம்........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு பூராவும் உள்ள தொழுநோய் பிரிவு பற்றி இப்போது கேட்க முடியாது. வடாற்காடு மாவட்டத்தைப் பற்றி இருந்தால் கேட்கலாம்.

சங்கராபுரம் மருத்துவமனை.

*வினா எண். 37—திரு. சோ. கலிதீர்த்தான்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் அரசாங்க மருத்துவமனைக்கு பெண் டாக்டர் நியமிக்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில் விரைவில் நியமிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:

(அ) ஆம்.

(ஆ) கூடுதல் மருத்துவ அலுவலர்(Additional Medical Officer பணியிடத்திற்கு ஒப்புதல் வழங்கிய பின்னர் நியமிக்கப்படுவார்.

திரு சோ. கலிதீர்த்தான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைச் செய்ய எவ்வளவு காலம் ஆகும் என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, 16 அடிஷனல் மெடிகல் ஆபீசர் போஸ்ட்டுகள் கூடுதலாக நியமிக்க வேண்டும் என்று டைரக்டர் ஆப் மெடிகல் சர்வீசஸ் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டு, அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. அந்தப் பரிந்துரையின் அடிப்படையில் மிக விரைவில் நாம் அந்தப் பதவிகளை நிறைவுபடுத்த இருக்கிறோம். அதே நேரத்தில், சர்வீஸ் கமிஷன் மூலம் புதிதாக 1,400 மருத்துவர்களை செலக்ட் செய்ய இருக்கிறோம் விரைவில் அந்தப் பணி முடிக்கப்படும். அதற்குப் பிறகு இந்தப் பற்றாக்குறை இருக்காது என்று அரசாங்கம் கருதுகிறது.

திரு. எல். இளையபெருமாள் : சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவில் என்று சொன்னார்கள். கடந்த 10 மாதகாலமாக சங்கராபுரத்தில் உள்ள மருத்துவ மனையில் மருத்துவர் இல்லை என்று பல மனுக்கள் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்பது உண்மையா ? 10 மாதகாலமாக போடாமல் இருப்பதற்கான காரணம் என்ன ? வேலையில்லா மல் பல டாக்டர்கள் இருக்கின்றபோது, இந்த நிலைமை ஏன் என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர் களே, கிராமப்புறங்களுக்கு மருத்துவர்கள் போக மறுக்கிறார்கள் என்கிற எண்ணம் பரவலாக இருந்தது. மாண்புமிகு முதலமைச் சர் அவர்கள் நேரடியாக இதில் தலையிட்டு, சர்வீஸ் கமிஷன் மூலமாக நிரந்தரமாக மருத்துவர்களை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். முன்பு எல்லாம் ஒரு ஆண்டுக்கு 500 மருத்துவர்கள் தான் தேர்ந்தெடுக்கப்பெற்று வந்தார்கள். இந்த முறை முதன் முதலாக ஒரு புரட்சிகரமான முறையில் 1,400 மருத்துவர்களை ஒரேயாண்டில் நிரந்தரமான முறையில் நிய மிப்பதற்கான முறையில் தேர்ந்தெடுக்கப்பட இருக்கிறார்கள். இதன் காரணமாக வேலை இல்லாமல் இருக்கும் மருத்துவப் பட்டதாரிகளுக்கு வேலை கிடைக்கவும், மருத்துவர்கள் இல்லா மல் இருக்கும் மருத்துவ மனைகள் மருத்துவர்களைப் பெறவும் முடியும். மருத்துவர்கள் தேர்வை அந்தக் குழு நடத்திக் கொண்டு இருக்கிறது. இன்னும் ஓரிரு மாதங்களில் அந்தப் பணி முடிந்துவிடும். அதற்குப் பிறகு இத்தகைய குறை இருக்காது என்று திட்டவட்டமாக நான் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 38, 39 ஆகி யவை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் வேண்டு கோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்பெறுகின்றன.

### திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள கேந்திர கிராம நிலையங்கள்

*வினா எண். 40—திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் திருச்சியிலும், லால்குடியிலும் கால்நடை பராமரிப்புத்துறையில் உள்ள கேந்திர கிராம திட்டத்தை குளித்தலைக்கும், கிருஷ்ணராயபுரத்துக்கும் மாற்ற அரசு உத்திரவிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும் ?





மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :
(அ) ஆம்.

(ஆ) இந்த இரண்டு கேந்திர கிராம நிலையங்களை மாற்ற தேவையான நிதி, வேளாண்மைத் துறையின் 1981 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 13-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 84ல் வழங் கப்பட்டுள்ளது. இந்த கிளை நிலையங்கள் விரைவில் துவக்கப்படும்

திரு. அன்பில் தர்மலிங்கம் : தலைவர் அவர்களே திருச்சி லால்குடி ஆகிய இரண்டு இடங்களிலிருக்கும் கிளை நிலையங்களை மாற்ற வேண்டிய அவசியம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10-10]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர் களே, நான் ஏற்கெனவே பதிலில் கூறியபடி விரைவில் துவக்கப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அன்பில் தர்மலிங்கம் : தலைவரவர்களே, அதை மாற்றுவதற்கு என்ன அவசியம் ஏற்பட்டது என்பதைத்தான் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவரவர் களே, அதை மாற்றுவதற்கான சரியான காரணம் பற்றிய விவ ரம் தற்போது என்னிடத்தில் இல்லை. அந்த விவரம் கிடைத்த வுடன் இங்கே தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## உ. அறிவிப்புகள்.

### அ. பேரவையின் அலுவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 23—1—1981 அன்று கூடிய அலுவல் ஆய்வுக்குழு கூட்டத்தில் பேரவையின் நடவடிக்கைகள் கீழ்க்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டன :—

| | |
|---|---|
| 24—1—1981 (சனிக்கிழமை) | ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம்—தொடர்ச்சி. |

[பேரவைத் தலைவர்] [1981 ஜனவரி 24

| | |
|---|---|
| 25—1—1981 (ஞாயிற்றுக்கிழமை) | விடுமுறை. |
| 26—1—1981 (திங்கட்கிழமை) | குடியரசு நாள்—விடுமுறை. |
| 27—1—1981 (செவ்வாய்க்கிழமை) | (1) 1980–81 ஆம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கையைப் பேரவைக்கு அளித்தல்.<br>(2) ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம்—தொடர்ச்சி. |
| 28—1—1981 (புதன்கிழமை) | ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம்—தொடர்ச்சி. |
| 29—1—1981 (வியாழக்கிழமை) | ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம்—தொடர்ச்சியும் பதிலுரையும். |
| 30—1—1981 (வெள்ளிக்கிழமை) | 1980–81 ஆம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கையின் மீது விவாதமும் வாக்கெடுப்பும் அதற்கான நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு அறிமுகம் செய்தலும். |
| 31—1—1981 (சனிக்கிழமை) | (1) நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருப்பின் அதை ஆய்வுசெய்தலும் நிறைவேற்றுதலும்.<br>(2) தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1980–81 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் மீதும் 1979–80 ஆம் ஆண்டிற்கான துணை நிதி நிலை அறிக்கையின் மீதும் விவாதம். |
| 1—2—1981 (ஞாயிற்றுக்கிழமை) | விடுமுறை. |
| 2—2—1981 (திங்கட்கிழமை) | தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1980–81 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையின் மீதும், 1979–80 ஆம் ஆண்டிற்கான துணை நிதிநிலை அறிக்கையின் மீதும் விவாதம்—தொடர்ச்சி. |



1981 ஜனவரி 24]

| | |
|---|---|
| 3—2—1981 (செவ்வாய்க்கிழமை) | பேரவைக் கூட்டம் இல்லை. |
| 4—2—1981 (புதன்கிழமை) | அரசு அலுவல்கள் |
| 5—2—1981 (வியாழக்கிழமை) | தனி உறுப்பினர் அலுவல்கள். |
| 6—2—1981 (வெள்ளிக்கிழமை)<br>7—2—1981 (சனிக்கிழமை) | அரசு அலுவல்கள். |
| 8—2—1981 (ஞாயிற்றுக்கிழமை) | விடுமுறை |
| 9—2—1981 (திங்கட்கிழமை) | அரசு அலுவல்கள். |
| 10—2—1981 (செவ்வாய்க்கிழமை) | அரசு அலுவல்கள்—தேவையிருப்பின். |

## 3. அரசினர் தீர்மானங்கள்

### (அ) மதிப்பீட்டுக் குழுவிற்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 210 (3)-வது விதியின் கீழ் 1980-81 ஆம் நிதி ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவில் திரு வி. வால்மீகி அவர்கள் மறைவினால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

[1981 ஜனவரி 24

2 அறிவிப்புகள்—(தொடர்ச்சி)

ஆ. மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்—தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஒற்றைமாற்று வாக்குமுறைப்படி தேர்தல் நடத்துவதற்குப் பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ் மதிப்பீட்டுக் குழுவில் ( Estimates Committee ) திரு. வால்மீகி அவர்களின் மறைவால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு ஒரு உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள் வேட்புத் தாள்களை 28—1—1981 புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும் வேட்புத்தாள் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வேட்புத்தாள்கள் 29—1—1981 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 30—1—1981 வெள்ளிக் கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பெற்ற வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்படவேண்டிய எண்ணிக்கைக்கு, அதாவது ஒன்றுக்கு மேற்படுமாயின், 31—1—1981 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கும் பகல் 12.00 மணிக்கும் இடையே சென்னை கோட்டையிலிருக்கும் சட்டமன்றக் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

3. அரசினர் தீர்மானங்கள்—(தொடர்ச்சி)

(ஆ) தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்கு மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' 1959 ஆம் ஆண்டு, தமிழ்நாடு நில மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்த சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 31/1959) 8-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (f) பகுதியின்கீழ், வேளாண்மைத் துறையின் 1979 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 20 ஆம் நாளிட்ட அரசாணை எண் 1638-ன்படி திருத்தியமைக்கப்பட்ட தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்தின் உறுப்பினர்கள் பதவியில் ஏற்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு—

(1) திரு. செ. இராமலிங்கம்.

(2) திரு. ஆர். சி. சுப்பிரமணியம்.



1981 ஜனவரி 24] [திரு. கா. காளிமுத்து]

(3) திரு. கி. பெ. காத்தமுத்து

ஆகிய உறுப்பினர்களை மேற்படி வாரியத்தின் உறுப்பினர்களாக இப்பேரவை தேர்ந்தெடுத்தபடியாலும்,

1980 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 17 ஆம் நாளன்று சட்ட மன்றப் பேரவை கலைக்கப்பட்டதன் காரணமாக மேற்கண்ட பிரிவின் (2) உட்பிரிவைச் சேர்ந்த (f) பகுதியில் குறிப்பிட்டுள்ள உறுப்பினர்களின் பதவிக் காலம் மேற்கண்ட பிரிவின் உட்பிரிவைச் சேர்ந்த 5 (1) பகுதியின் படி 17—2—1980 ஆம் நாளன்று முடிவடைந்து விட்டபடியாலும்;

1959 ஆம் ஆண்டு, தமிழ்நாடு நில மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்த சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 31/1959) 8வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (f) பகுதியையொட்டி மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் ஒரு நாளன்று மேற்கண்ட வாரியத்தின் உறுப்பினர்களாக இருக்கும்படி சட்ட மன்றப் பேரவையின் மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க இப்பேரவை முற்படுமாக ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

2. அறிவிப்புகள்—(தொடர்ச்சி)

(இ) நில மேம்பாட்டு வாரியம்—உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானத்திற்கிணங்க தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்கு மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான நியமனத் தாள்களை 27—1—1981, செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்க்க வேண்டும். நியமனத்தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 28—1—1981 புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 29—1—1981 வியாழக் கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பெறவேண்டிய எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 31—1—1981 சனிக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் உள்ள குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

3. அரசினர் தீர்மானங்கள்—(தொடர்ச்சி)

இ. வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 18 வது பிரிவின் (2) உட்பிரிவில் ''வகை II பிற உறுப்பினர்கள்'' என்ற தலைப்பின் கீழ் (H) பகுதிக்கிணங்க மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் ஒரு நாளன்று, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் நிர்வாக வாரியத்தில் உறுப்பினராய் இருந்த திரு அ. மொ. பரமசிவம் அவர்களின் பதவிக்காலம் மாநில சட்டமன்றப் பேரவை கலைக்கப்பட்ட தேதியிலிருந்து முடிவடைந்ததால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஓர் உறுப்பினரை இப்பேரவை தேர்ந்தெடுக்க முற்படுமாக".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

2. அறிவிப்புகள்—(தொடர்ச்சி)

(ஈ) வேளாண்மை பல்கலைக்கழக வாரியம்—உறுப்பினர் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானத்திற்கிணங்க, வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாக வாரியத்திற்கு ஒரு உறுப்பினரை தேர்ந்தெடுப்பதற்கான வேட்பாளர் நியமனத்தாள்களை 27—1—1981 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 28—1—1981 புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 29—1—1981 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பெற வேண்டிய எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 31—1—1981 சனிக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் உள்ள குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.



2. பேரவைத் தலைவர் உறுப்பினர்களுக்கு வாய்ப்பு அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். இன்று மன்றத்தில், கேள்வி நேரத்தின்போது திரு. கிட்டப்பா அவர்கள் தாம் 30 நிமிடமாக கையைத் தூக்கிக்கொண்டிருந்ததாகவும், நான் அவரைக் கவனித்து அழைக்கவில்லை என்றும் சொல்லி வெளிநடப்புச் செய்தார்.

நேற்றும் இன்றும் கேள்வி நேரம் $1\frac{1}{2}$ மணி நேரத்திற்கு நடைபெற்றது. நேற்று 20 கேள்விகளுக்குப் பதிலளிக்கப் பெற்றன. இன்றும் 20 கேள்விகளுக்குப் பதிலளிக்கப் பெற்றன. இதில் இரண்டு கேள்விகள் அமைச்சர் இல்லாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பெற்றுள்ளன.

திரு. கிட்டப்பா அவர்கள் முதலில் கையைத் தூக்கியதை நான் கவனிக்காமலில்லை என்றாலும், கேள்விகளுக்கு ஒதுக்கப் பெற்றுள்ள கால அளவில்தான் நான் ஒரு ஒழுங்கோடு துணைக் கேள்விகள், அதற்கான பதில்கள் கேட்பதற்கும், விடையளிப்பதற்கும் வாய்ப்பளித்தாக வேண்டும். எல்லாக் கட்சிகளுக்கும் சம வாய்ப்புக் கொடுக்க வேண்டும். பேரவையில் எதிர்க்கட்சி வரிசையிலும், ஆளும் கட்சி வரிசையிலும் கடைசியில் உள்ளவர்களைக் கூட கவனித்துதான் ஒரு ஒழுங்கோடு வாய்ப்பளிக்கிறேன்.

பாராளுமன்றத்தில் கூட நாங்கள் எட்டுபேர்கள் இருந்தபோது வாய்ப்புப்பெற முடியாது மிகவும் கஷ்டப்பட்டோம். எதிர்க்கட்சிகளுக்குப் பல சந்தர்ப்பங்களில் வாய்ப்பே கிடைக்காமல் போயிருக்கிறது. இன்று திருவாளர்கள் திருவேங்கடம், சொக்கலிங்கம் போன்றவர்களுக்கு எல்லாம் துணைக்கேள்விகள் கேட்க வாய்ப்பு அளித்தேன். தவிர நேற்றுக்கூட கேள்வி நேரத்தின்போது திரு. கிட்டப்பா அவர்களுக்கு 3 கேள்விகள் கேட்கவும் விடைகளைப் பெறவும் வாய்ப்பு அளிக்கப் பெற்றுள்ளது. இன்றைக்கு அவரது உடல் நலம் சரியில்லையோ என்னவோ சற்று கோபம் கொண்டு வெளிநடப்புச் செய்து விட்டார். இன்றைக்குக் கேள்வி நேரம் $1\frac{1}{2}$ மணி நேர அளவிற்கு நடந்திருக்கிறது. அதிக அளவில் உறுப்பினர்கள் இதில் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். முடிந்த அளவிற்குப் பேரவை நடவடிக்கைகளை ஒழுங்காக நடத்திக் கொண்டு போவதற்கான வழிமுறைகளை வகுத்துக் கொண்டிருக்கிறோம். கட்சித்தலைவர்களும் தயவுசெய்து தங்கள் தங்கள் கட்சி உறுப்பினர்களுக்குத் தெரிவித்து முடிந்த அளவிற்கு பேரவையை நல்ல முறையில் நடத்திச்செல்ல பேரவைத் தலைவருக்கு ஒத்துழைப்புத் தரும்படி வேண்டிக்கேட்டுக் கொள்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [1981 ஜனவரி 24

நான் எல்லோருக்கும் வாய்ப்புக் கிடைக்கும்படியாகச் செய்ய வேண்டிய நிலையில் உள்ளேன். சென்ற சட்டமன்றக் கூட்டத்தில் கேள்வி கேட்க வாய்ப்பில்லாதவர்களுக்கு இப்போது வாய்ப்பளிக்க வேண்டியிருக்கிறது. எனவே தயவு செய்து வயது முதிர்ந்த உறுப்பினர்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

## 4. தகவல் கோரல

### உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை

**திரு. ப. பொன்னுரங்கம்** : நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்துள்ளேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : ஆளுநர் உரைமீதான விவாதத்தின் போது பலவற்றையும் எடுத்துப் பேச வாய்ப்பு உள்ளது ஆளுநர் உரைமீதான விவாதத்தின்போது சில முக்கியமான தீர்மானங்களாக இருந்தாலன்றி எடுத்துக்கொள்வது மரபு அல்ல. திரு. பொன்னுரங்கம் தயவு செய்து ஒத்துழைக்கவேண்டும்.

[முற்பகல் 10-20]

## 5. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் தொடர்ச்சி.

**திரு. அ. ரகுமான்கான்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் உரையின்மீது நன்றி தெரிவிக்கிற தீர்மானத்தின் மீது நான் சார்ந்திருக்கிற கட்சி சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சட்டமன்றத்தைக் கூட்டச் சொன்னால் அமளிதுமளி ஏற்படுத்துவார், என்னிடத்தில் பிரச்னைகளைச் சொல்லலாம், சட்டமன்றத்தைக் கூட்டவேண்டிய அவசியமில்லை, என்றெல்லாம் பத்திரிகை நிருபர்களிடத்தில் பேசினார்கள். ஆனால் இன்று மனம் திறந்து கருத்துக்களைச் சொல்லுங்கள் என்ற நிலைக்கு வந்திருக்கிறார்கள். அதற்காக நான் முதல் அமைச்சர் அவர்களுக்கு மனம் திறந்து என்னுடைய நன்றி கலந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆளுநர் உரை என்பது அரசாங்கத்தினுடைய கொள்கைகளைப் பிரதிபலிப்பதாக இருக்கவேண்டும். இந்த அரசினுடைய திட்டங்களைக் கோடிட்டுக் காட்டுவதாக இருக்க வேண்டும். ஆனால் இந்த ஆளுநர் உரை அப்படி இருக்கிறதா என்று கேட்டால் அமாவாசையில் வெண்ணிலவு இல்லாமலிருப்பது போல், அத்தி மரம் பூக்காதிருப்பது போல், ஆடிக்காற்றில் தென்றல் சுகம் இல்லாதது போல் இந்த ஆளுநர் உரை கொள்கைகள் இல்லாத, திட்டங்கள் இல்லாத உரையாகத்தான் இருக்கிறது என்பதை உங்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.



1981 ஜனவரி 24] [திரு. அ. ரகுமான்கான்]

இந்த உரையில் புத்தாண்டு வாழ்த்து, பொங்கல் வாழ்த்து சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நான் ஒன்றை இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். புத்தாண்டு, துப்பாக்கிக் குண்டின் முழக்கத்தோடுதான் இந்த அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் துவங்கியது. பத்து பேர்கள் சுட்டுப் பொசுக்கப்பட்டிருக்கிறார்கள். அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பல தாய்மார்கள் பூ இழந்து, பொட்டிழந்து, தாலி அறுக்கப்பட்டு விதவைகளாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். விலைவாசி விஷம்போல் ஏறியிருக்கிறது. சட்டம்—ஒழுங்கு கெட்டிருக்கிறது. மது அரக்கன் நம் முதல் அமைச்சர் அவர்கள் மடியிலேயே தவழ்ந்து கொண்டிருக்கிறான். 13,000 பி. அண்ட். சி. தொழிலாளர்கள் நடுத்தெருவில் நிற்கிறார்கள். கிராம அதிகாரிகள் இன்றைக்கு வேலை பறிக்கப்பட்டு வீட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடத்தப்படாமல் ஜனநாயக தீபம் அணைந்திருக்கிறது. நக்ஸலைட்ஸ் என்ற பெயரால் மனித வேட்டை நடத்தப்படுகிறது. லஞ்ச லாவண்யம் இந்த ஆட்சியில் குடிசைத் தொழிலாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அழகான பெண்ணின் முகத்தில் அம்மைத் தழும்பு இருப்பதுபோல் உங்கள் ஆட்சியில் பல்வேறு பிரச்னைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் முதல் அமைச்சர் அவர்களும், இந்த அரசாங்கமும் புகையும் எரிமலையின் மேல் அமர்ந்து உல்லாசமாக வசிப்பது போல் ஆளுநர் உரையில் புத்தாண்டு வாழ்த்து, பொங்கல் வாழ்த்து சொல்வது வேடிக்கையாக இருக்கிறது.

அது மட்டுமல்ல, கிராம அதிகாரிகள் பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களிடமிருந்து இரவு நேரத்திலே ரிக்கார்டுகளைப் பிடுங்கக்கூடிய நிலைமைகள் எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன. 3 வருஷ ரிக்கார்டுகள் கிடைக்கவில்லையானால், 5,000 ரூபாய் அபராதம் என்ற கடுமையான சட்டம் போடப்படுகிறது. இது நியாயம்தானா ? கிராம அதிகாரிகள் சமூக விரோதிகளா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்? ஒரு கணக்குப் பிள்ளை வீட்டில் சாந்தி முகூர்த்தத்தின்போது போய் தொந்தரவு கொடுக்கக்கூடிய நிலைமையெல்லாம் கூட ஏற்பட்டிருக்கிறது. இந்த மாதிரியான நிலைமைகளை சுப்ரீம் கோர்ட் அநாகரிகம் என்று கண்டித்திருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் அதற்குத் தலை வணங்குகிறேன் என்று சொல்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். இந்த ஆட்சியின் அநாகரிகச் செயலை சுப்ரீம் கோர்ட் அநாகரிகம் என்று சொல்லுகின்றபோது, முதலமைச்சர் அவர்கள் அதற்குத் தலை வணங்குகிறேன் என்று சொன்னால், அதற்கு நான் பாராட்டுத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, இன்றைக்குப் பதவி நீக்கம் செய்யப்பட்ட கிராம அதிகாரிகளுக்குக் கர்நாடக மாநிலத்திலே மாதம் ரூ. 100 அலவன்சாகக் கொடுக்கப்படுகிறது. ஆந்திர மாநிலத்

திலே 20 மாதச் சம்பளம் கிராஜுவிட்டியாக வில்லேஜ் ஆபீசர்களுக்குத் தருகிறார்கள். ஆனால், நம் மாநிலத்திலே வில்லேஜ் ஆபீசர்கள் போஸ்ட் அபாலிஷ் செய்யப்பட்டிருக்கிறது. நான் கேட்கிறேன், ஏதாவது அவர்களுக்கு நஷ்டஈடு தரவேண்டாமா?

இன்றைக்குக் கோவை நகரிலே இருந்து ஒரு கிராம அதிகாரி எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். அவர் பிராமண சமூகத்தைச் சார்ந்தவர். 3 குழந்தைகளுடன் கஷ்டப்படுகிறார். உங்களுடைய பாஷையிலே சொல்ல வேண்டுமானால், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர். அவருக்கு ஏதாவது நஷ்டஈடு தரவேண்டாமா? முன்னாள் கவர்னர் பட்வாரி அவர்கள் வீட்டுக்குப் போகிறபோது, 10,000 ரூபாய் கொடுத்து மாப்பிள்ளையோடு மகளை அனுப்பி வைப்பதுபோல் அனுப்பி வைத்தீர்களே, அது யாருடைய பணம்? அந்தப் பணத்தை எங்கேயிருந்து கொடுக்கிறீர்கள்? ஆனால், கிராம அதிகாரிகளுக்கு 10 பைசா நஷ்டஈடு உண்டா? இது நாச்சுரல் ஜஸ்டிசுக்கு விரோதம் இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை

அது மட்டுமல்ல, கிராம அதிகாரிகள் நீக்கப்பட்டிருப்பதற்கான காரணம் சொல்லப்பட்டிருக்கிறது. கிராம அதிகாரிகள், கர்ணம் வேலை பார்ட் டைம் போஸ்ட் என்றும், அதனால் பதவி நீக்கம் என்றும் சொல்லப்படுகிறது. இந்த போஸ்டை ஹோல் டைம்பப்ளிக் சர்வென்டாக ஆக்க வேண்டுமென்பதற்காக கொண்டு வரப்படுகின்றது என்று சொல்லப்படுகிறது. அதாவது அட்மினிஸ்ட்ரேஷன் ரிபார்ம்ஸ் கமிஷன், 1973ல் சிபாரிசு செய்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். நான் ஒன்றைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஒரு கமிஷன் ரிப்போர்ட்டையெல்லாம் ஒரு சர்க்கார் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. அப்சல்கான் சம்பந்தமாக போடப்பட்ட கமிஷன் ரிப்போர்ட் என்ன ஆயிற்று? அவர் தற்கொலையே செய்துகொண்டு விட்டார். அவர் இந்த உலகில் இப்போது இல்லை. அதே மாதிரி ஒன் மேன் கமிஷன், திரவியம் கமிஷன் போடப்பட்டது. பொய் வழக்குகள் போட்டு, டி.எஸ்பி.யை டிஸ்மிஸ் செய்யவில்லையா? எந்தெந்த கமிஷன் ரிப்போர்ட்டுகள் எல்லாம் டேபிள் மேல் வைக்கக்கூடிய நிலைமையில் இருக்கிறது. அப்சல்கான் மீது போடப்பட்ட அந்தக் கமிஷன் ரிப்போர்ட்டை இதுவரைக்கும் வைக்காமல் ஏன் மூடி மறைக்கிறீர்கள் என்று கேட்கிறேன். ஆக, கமிஷன் ரிப்போர்ட் கொடுத்து விட்டது என்பதாலே, கட்டாயமாக இப்படி செய்ய வேண்டுமென்று கிடையாது. ஆனால், இவர்கள் போஸ்ட், பார்ட் டைம் என்று சொல்வதுகூட சரியில்லை, காரணம், Governmen Servent Family Benefit Fund Act அவர்களுக்கு applicable ஆகாது. அது மட்டுமல்ல; round the clokc அதாவது இரவு நேரத்திலே அவர்களிடம் ஒரு சர்டிபிகேட்





வேண்டுமென்று கேட்டால், அவர்கள் அதைத் தரவேண்டிய நிலையிலே இருக்கிறார்கள். அப்படித் தருவதற்குக்கூட natuie of the po t அந்த வில்லேஜ் ஹெட்மேனுக்கு இருக்கிறது. ஆகவே, இது பார்ட் டைமாக இருந்தாலும், புல் டைம் சர்வீசாக ஆக்கலாம். இப்படி 24,000 பேர்களை வீட்டுக்கு அனுப்ப வேண்டியதில்லை. இது நியாயம்தானா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்?

புதிதாக இந்த வில்லேஜ் ஆபீசர்களை நியமனம் செய்யப் போகிறீர்கள். அதற்கு சர்க்காருக்கு 6 கோடி ரூபாய் செலவாகிறது என்று சொல்லப்படுகிறது. அவர்கள் ஊருக்கு ஊர் டிரான்ஸ்ஃபர் செய்யப்படும் என்று சொல்லப்படுகிறது. அப்படி டிரான்ஸ்ஃபர் செய்தால் உள்ளூர் விவகாரம் அவர்களுக்குத் தெரியாது. அடங்கல் போன்றவைகளை எல்லாம் வைத்திருக்கக் கூடிய ஒரு டெக்னிகல் ஜாப் அது. மற்றவர்களால் அதைச் செய்ய முடியாது. வக்கீல் தொழிலை, வக்கீல்தான் செய்ய முடியும். எம்.ஏ. படித்தவருக்கு வாய்ப்புத் தரவேண்டுமென்பதற்காக, அவரை நியமித்தால் அவரால் அந்தத் தொழிலைச் சரிவர செய்யமுடியாது. அதேபோல், எம்.பி., பி.எஸ். படித்தவரை விட்டு, எம்.ஏ. படித்தவருக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று கொடுத்தால், அவரால் ஆபரேஷன் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டால் எந்த நிலைமைக்குக் கொண்டு போய் விடுமென்பதைப் பார்க்க வேண்டும். ஆகவே, வேலை வாய்ப்புத் தர வேண்டுமென்பதற்காக 24,000 பேர்களை வீட்டுக்கு அனுப்ப வேண்டுமா? இது நியாயந்தானா?

கிராம அதிகாரிகள் லஞ்சம் வாங்குகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இந்தச் சமுதாயத்திலே லஞ்சம் வாங்குகிறவர்கள் எல்லா இடங்களிலும் இருக்கிறார்கள். சில நல்லவர்களும் இருக்கிறார்கள். நான் கேட்கிறேன். ஆர்.டி.ஓ லஞ்சம் வாங்கவில்லையா? ஆர்.டி.ஓ. லஞ்சம் வாங்கியதாக முதலமைச்சர் அவர்களே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். வறுமையால் போலீஸ்காரர்கள் லஞ்சம் வாங்குகிறார்கள் என்பதற்காக அவர்களுக்கு மலிவு விலையிலே தானியங்கள் வழங்கப்படுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். நான் கேட்கிறேன்.. தாசில்தார் லஞ்சம் வாங்கவில்லையா? வேறு உயர் பதவிகளிலே இருப்பவர்கள் லஞ்சம் வாங்க வில்லையா? லஞ்சத்தை ஒழிப்பதற்காகப்போடப்பட்ட எக்ஸ்பர்ட் கமிட்டியே லஞ்சம் வாங்கக்கூடிய நிலைமை ஏற்படவில்லையா? அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கும்போது, ஸ்பெசிஃபிக்காக இன்ன தப்பு என்பதைக் கண்டுபிடித்து, வழக்குப் போடுங்கள். அதை விட்டு, வீட்டில் எலித் தொல்லை என்பதற்காக, வீட்டையே கொளுத்துவது சரியல்ல. வெள்ளைச் சட்டையிலே கறைபடிந்து விட்டது என்பதற்காக, அந்த வெள்ளைச் சட்டையையே பொசுக்குவது புத்திக்கு உகந்ததாக இருக்க முடியாது.

இதைத் தவிர, கிராம அதிகாரிகள் கற்பழிக்கிறார்கள் என்றும் சொல்கிறார்கள். இந்த கிராம அதிகாரிகள் ஏற்கனவே நொந்து போயிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையில் இருக்கும் கிராம அதிகாரிகளுக்கும், அவர்களுடைய மனைவிக்கும் இடையே இப்படிப்பட்ட சிக்கலை நாட்டிலே ஏற்படுத்துவது நல்லதல்ல என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10–30]

வல்லபாய் பட்டேலைப் போல் இந்தக் காரியத்தைச் செய்ததாக முதலமைச்சர் சொன்னார். அன்றையதினம் இன்டிபென்டன்ஸ் கிடைத்து ஸ்டேட்சுகளை எப்படி இணைப்பது என்ற கேள்வி வரும்போது பல்வேறு மாநிலங்கள்—சர். சி. பி. இராமசாமி அய்யர் அவர்கள் திவானாக இருந்த திருவாங்கூர் இணைய மறுத்தது. ஹைதராபாத் நிஜாம் இணைய மறுத்தார். அந்த நேரத்தில் வல்லபாய் பட்டேல் அதற்காக தனியாக ஒரு இலாகாவை ஏற்படுத்தி அவை எல்லாம் இணைவதற்கு முயற்சிகளை மேற்கொண்டார். 'மிலிடெரி ஆக்ஷன்' என்று ஐ.நா. நிறுவனம் சொல்லும் அளவுக்கு ஏற்பாடுகளைச் செய்தார். ஹைதராபாத் தனக்கென்று காயினேஜ், தனக்கென்று டிஃபென்ஸ், தனக்கென்று போஸ்டல் சர்வீஸ் என்று வைத்துக் கொண்டு பாகிஸ்தானோடு தொடர்பு கொண்டு இந்திய தேசத்தின் ஐக்கியத்திற்கு எதிராக நடந்து கொண்ட காரணத்தால் இந்திய தேசத்தின் ஐக்கியத்தை முன்னிட்டு, பெடரேஷன் ஃபார்ம் ஆக வேண்டுமென்பதற்காக வல்லபாய் படேல் மிகப் பெரிய காரியத்தைச் செய்தார். அது புலி வேட்டை; நீங்கள் கிராமாதிகாரிகளை எலி வேட்டையாடியிருக்கிறீர்கள். நீங்கள் எலி வேட்டைக்குப் போய்விட்டு பட்டேலை உதாரணமாகச்சொல்லுவது வருத்தமாக இருக்கிறது.

விவசாயிகள் பிரச்சினையில் திரு. நாராணயசாமி நாயுடு அவர்களை முதலமைச்சர் அவர்கள் சமூக விரோதி என்கிறார். இந்தச் சமூக விரோதியின் பின்னாலேதான் சட்டசபைத் தேர்தலுக்கு முன்னால் போனார். எப்படி இந்துக்கள் காசிக்குப் போகிறார்களோ, முஸ்லீம்கள் மெக்காவுக்குப் போகிறார்களோ அதே போன்று முதலமைச்சர் அவர்கள் அவர் பின்னாலே போனார். அப்போது அவர் சமூக விரோதியாகத் தெரியவில்லை. அவர் மீது வழக்குப் போட்டார்கள். அன்றையதினம் திருநெல்வேலியில் நடைபெற்ற சப் இன்ஸ்பெக்டர் கொலைக்கு கோவில்பட்டியில் நாயுடுதான் காரணம் என்று பிரிவுகள் 302, 307 ன் கீழ் வழக்குப் போட்டார்கள். பிறகு வழக்கை வாபஸ் வாங்கினார். நாயுடு தேவைப்பட்டால் நல்லவர். தேவைப்படவில்லை என்றால் சமூக விரோதி. என்.எஸ்.ஏ. படி சமூக விரோதி என்று கைது செய்யச் சொன்னார். சமூக



விரோதி நாயுடு என்று தெரிந்த பிறகு இப்போது ஏன் வெளியே விட்டீர்கள்? நாங்கள் கேட்டதற்காக வெளியே விட்டீர்களா? அவர் சமூக விரோதி இல்லையென்று வெளியே விட்டிருக்கிறீர்களா?

துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றிருக்கிறது. எல்லாக் கடனையும் ரத்து செய்வோம் என்று அன்று சொன்னீர்கள். சிறு விவசாயிகள், பெரிய விவசாயிகள் என்று சொல்லவில்லை. ஒன்பது அம்சக் கோரிக்கையை நிறைவேற்றுவோம் என்று சொன்னீர்கள். மின்சாரக் கட்டணத்தை வசூலிக்காமல் காலம் கடத்தியது யார்? விவசாயிகள் கட்டவேண்டிய வரி இவ்வளவு அக்கியூமுலேஷன் ஆகி சரியாக வசூலிக்கப்படாமல் இருந்ததற்கு இந்தச் சர்க்கார்தான் காரணம். விவசாயிகளுக்கு இவ்வளவு ஆசைகளைக் காட்டிவிட்டு வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்று அவர்கள் அமைதியாகப் போராட்டம் நடத்துகிறார்கள். ஜனநாயகத்திற்கு உட்பட்டு நடத்தப்பட்ட போராட்டத்தில் சில அசம்பாவிதங்கள் நடைபெற்றிருக்கலாம். காந்தியார் நடத்திய போராட்டத்திலேயே சௌரி சௌரா நடைபெறவில்லையா? அதற்காக காந்தியாரை சமூக விரோதி என்றா சொல்வது? இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் சப் இன்ஸ்பெக்டர் எரிக்கப்பட்டார். அதனால் அண்ணா சமூக விரோதி என்றா சொல்லி விட்டார்கள்? நாயுடுவுக்குச் சம்பந்தம் இல்லாமல் அந்தக் காரியங்கள் நடக்கலாம். ஆனால் நாயுடுவையும் மற்றும் பலரையும் சிறையில் அடைத்துவிட்டு துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியிருக்கிறார்கள். திருவேங்கடத்திலிருந்து சங்கரன் கோயிலுக்குச் செல்லும் வழியில் உள்ள அந்தக் கிராமத்தைப் போய்ப் பார்த்தேன். பந்த் நடத்துகிற அளவுக்கு அங்கு நிலைமை இல்லை. அந்த ரூட்டில் இரண்டு பஸ்கள்தான் வரும். அங்குள்ள பள்ளிக்கூடத்தில் 30, 32 ரவுண்ட் சுட்டிருக்கிறார்கள். உள்நோக்கத்தோடு அக்ரேரியன்சை மிரட்ட வேண்டுமென்ற உணர்வோடு துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டிருக்கிறது. இதற்கு ஒரு நீதி விசாரணை அவசியம் வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சர்க்காரின் தவறான அணுகுமுறை காரணமாகத்தான் இது போன்ற நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. 42 கோடி ரூபாய் விவசாயக் கடன் ரத்து-நம்முடைய சர்க்கார், அகில இந்திய அண்ணா தி.மு.க.சர்க்கார் அறிவித்தது. நம்முடைய நிதியமைச்சர் நாவலர் எம்.ஏ. அவர்கள் நல்ல முறையில் அறிமுகம் ஆனவர்கள். அவர்கள் 42 கோடி ரூபாய்க்கு மேல் ரத்து கிடையாது என்கிறார்கள். அமைச்சர் பொன்னையன் அவர்கள் 42 கோடி ரூபாய்க்கு ரத்து என்கிறார்கள். ஆனால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அண்ணா சிலைக்கு முன்னால் நின்று கொண்டு 240 கோடி ரூபாய் விவசாயிகள் கடனை ரத்து செய்வோம் என்று சொல்லுகிறார். ஏன் முதலமைச்சர் இப்படிச் சொல்லுகிறார் என்று கேட்கும்போது. எதிர்காலத்தில் மழை வரும்

[திரு. அ. ரகுமான்கான்] [1980 ஜனவரி 24

புயல் வரும், அதையெல்லாம் கணக்கிட்டால் கரெக்டாக 240 கோடி ரூபாய் அப்போது ரத்து செய்வார்கள் என்ற புதிய விளக்கம் சொல்லப்படுகிறது. மேலும் தக்காவிக் கடன் ரத்து என்று சொல்லுகிறார்கள். அது வராத கடன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, எதிர்காலத்திலே புயல் வரும், அதற்காக இந்த அளவுக்குக் கடன்கள் ரத்து செய்யப்படும் என்று யார் சொன்னார்கள் என்று சொன்னால் நலமாக இருக்கும்.

**டாக்டர் மு. கருணாநிதி :** முதலமைச்சர் அவர்கள் செப்டம்பர் 15 ஆம் நாள் அண்ணா சிலைக்கு முன்னால் 240 கோடி ரூபாய், ஐந்தாண்டுகளில் ரத்து செய்யப்படும் என்று சொன்னார்கள். அதைப் பற்றி எதிர்க்கட்சிகள் கேட்டபோது அமைச்சர் பொன்னையன் அவர்கள், 240 கோடி ரூபாய் புயல் வெள்ளத்தால் மறுபடியும் மக்கள் பாதிக்கப்பட்டால் ரத்து செய்வதாகச் சொன்னார் என்று குறிப்பிட்டார்.

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவர் அவர்களே, தக்காவிக் கடன் ரத்து என்று சொன்னால் செத்த பாம்பு அது, அது கணக்கிலே வராதது, ரெவின்யூ ரெக்கவரி என்று பண்ண முடியாதது அது..............

**மாண்புமிகு திரு. எம். இராமச்சந்திரன் :** துணைத் தலைவர் அவர்களே, சட்டசபையிலே சொல்லவில்லை, பத்திரிகையிலே வந்ததாகச் சொல்கிறார்கள், நான் படித்துவிட்டு அதற்குப் பிறகு பதில் சொல்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தக்காவிக் கடன் ரத்து என்று சொன்னால் செத்துபோன பாம்பை அடிக்கிற நிலை தான். அது ** கணக்கிலே எழுதப்பட வேண்டியது. ரிக்கார்டுக்காக வைக்கப்பட்டிருக்கிறது. இதை ஒரு சாதனையாக நீங்கள் பத்திரிகையிலே விளம்பரம் கொடுத்திருப்பது அறியாமையைக் குறிப்பதாகும்.

**திரு ப. நெடுமாறன் :** * * பற்றி இந்த மன்றத்திலே அவமதிப்பாகப் பேசுவது வருந்தத் தக்கது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** * * என்று பேசியதை நீக்கும்படி உத்திரவிடுகிறேன்.

**திரு. க. அன்பழகன் :** துணைத் தலைவர் அவர்களே, ஒரு சிறிய விளக்கம். ** **

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



1981 ஜனவரி 24]

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மதுவிலக்குக் கொள்கை மிக முக்கியமான கொள்கை என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். "We are committed to the policy of Prohibition" என்று சொல்லப்பட்டிருக்கிறது. போன ஆளுநர் உரையை எடுத்துப் பாருங்கள் தெரியும். அதற்காக நாய்ப்படை அமைத்தார். Law and order தனியாக இருக்கவேண்டும் என்றார். மதுவிலக்கை அமல்படுத்துவதற்குத் தனிப் பிரிவு இருக்கவேண்டுமென்று சொன்னார். தாய்மார்கள் கண்ணீரைத் துடைப்பேன் என்றார். ஓரத்த நாட்டிலே, என் தாய் சத்தியா மீது ஆணையாகச் சொல்கிறேன் என்று சொன்னார், நான் மது அரக்கனை இருக்க விடமாட்டேன் என்று சொன்னார். இவ்வளவுக்கும் மேலாக கடுமையான சட்டம் கொண்டுவந்தார். இன்று மனம் திறந்து கருத்துக்களைச் சொல்லுங்கள் என்று கேட்கிறார். நாங்கள் அன்றைய தினமே சொன்னோம். கொலை செய்வதற்கு ஒரு சர்க்கார் பெர்மிட் தருவது இல்லை, கொள்ளை அடிப்பதற்கு ஒரு சர்க்கார் பெர்மிட் தருவதில்லை, ஆனால் குடிப்பதற்கு ஒரு சர்க்கார் இங்கே பெர்மிட் தருகிறது; கொலையைப் போல, கொள்ளையைப் போல குடிப்பது ஒரு "grave offence" அல்ல, அது ஒரு "technical offence", ஒரு "social offence"; ஆகவே கிரேவ் அஃபன்ஸுக்கு உரிய தண்டனை அதற்கு இருக்கக்கூடாது என்று சொன்னோம். அப்போது என்ன சொன்னார்? பத்திரிகையிலே படித்தேன், திருடன் கையிலே பூட்டுச் சாவியைக் கொடுப்பதா என்று கேட்டார். இன்றைக்கு மனம்திறந்து கருத்துக்களைச் சொல்லுங்கள் என்று கேட்டு இருக்கிறார். அன்றைக்குச் சைக்கிளை வாடகைக்கு எடுத்து அந்தச் சைக்கிளிலே சாராயம் கடத்தினால் அதிலே போகிறவன் மட்டுமல்ல, சாராயம் கடத்தி வந்தவன் மட்டுமல்ல, சைக்கிளை வாடகைக்கு விட்ட உரிமையாளனும் உள்ளே போக வேண்டும் என்று அந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. ஜாமீனிலே வெளியே வர முடியாது. சிறைச்சாலைக்குள்ளே தள்ளப்பட்டவர்கள் வெளியே வர அனுமதிக்கப்படவில்லை. காரணம் சிறைச்சாலை ஒரு விஞ்ஞானக் கூடம், ஆய்வுக் கூடமாக புதிய சரக்கை தயாரிப்பது எப்படி என்ற ஆராய்ச்சி சிறைக்கூடத்திலே நடக்கிறது" என்று பலர் சொன்னார்கள். அதுமட்டுமல்ல நாடு கடத்துகின்ற சட்டம், அதாவது ஊரைவிட்டு ஊர் கடத்துகின்ற சட்டம் போட்டார்கள்.

அடுத்து முதல்வர் அவர்கள் கோபித்துக் கொள்ளக் கூடாது. நான் தப்பாகச் சொல்லவில்லை. அவர் சொல்லியதைத்தான் நான் சொல்கிறேன். ** ** (குறுக்கீடு). இதே சட்டமன்ற நடவடிக்கைகள். வேண்டுமானால் நாளையே உங்களுக்கு காண்பிக்கிறேன். முதலமைச்சர் பேசியிருக்கிறார்.

---

** ** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1981 ஜனவரி 24

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நாளைக்கு நீங்கள் காண்பிக்கிற வரையில் வெளியே வரவேண்டாம்.

**திரு. துரைமுருகன் :** உறுப்பினரே பொறுப்பேற்றுக் கொண்டு நாளைக்கு காண்பிக்கிறேன் என்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உறுப்பினரே நாளைக்குக் காட்டுகிறேன் என்றுதான் சொல்லியிருக்கிறார். ஆகவே அதுவரையிலே அது வெளிவர வேண்டாம்.

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவர் அவர்களே, இன்றைக்கு என்ன நிலைமை? 25 ரூபாய்க்கு பெர்மிட், அரசு பாட்டிலில் சாராயம் விற்கப்படும் என்று நாவலரும் சொல்கிறார், முதலமைச்சரும் சொல்கிறார். அது மட்டுமல்ல, அடியோடு ரத்து செய்யவேண்டுமென்று மதிப்பிற்குரிய விஸ்வநாதன் கேட்கிறார். இனிமேல் என்ன ரத்து செய்யப்போகிறார்கள், மக்கள் பேசிக் கொள்கிறார்கள், ஏற்கனவே ரத்து ஆகியிருக்கிறதே இனிமேல் என்ன ரத்து, அதிகாரப்பூர்வமான ரத்தா என்று கேட்கிறார்கள்.

[முற்பகல் 10-40]

நான் கேட்கிறேன். ஏன் இந்தக் கொள்கைக் குழப்பம்? ஏன் இந்த முரண்பாடு? அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் சின்னம்தான் இரட்டை இலை என்று எண்ணிக் கொண்டிருந்தேன்; அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சர்க்காருக்கும் இரட்டைக் கொள்கைதானா? இதை முதலமைச்சரவர்கள் கோபப்படாமல் ரசிப்பார்கள் என்று நினைக்கின்றேன்.

விலைவாசிப் பிரச்சினையை எடுத்துக் கொண்டால், அன்பழகன் அண்ணாச்சி அரிசி விலை என்னாச்சி என்று கேட்டார்கள். கருணாநிதி அண்ணாச்சி கருப்பட்டி விலை என்னாச்சு என்று கேட்டார்கள். ஆனால் இன்றையதினம் அரிசியின் விலை, பருப்பின் விலை, எண்ணெய் விலை ஆகிய அனைத்து விலைகளும் ஏறிவிட்டன. சிலபேர் பேசிக்கொள்கிறார்கள்; நம்முடைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சாராய விலை கூட ஏறியிருப்பதாக சொல்கிறார்கள்; என்ன நிலைமை என்பது எனக்குத் தெரியாது.

சட்டசபைத் தேர்தலின்பொழுது முதலமைச்சரவர்கள் சொன்னார்கள் * * * *

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** * * * *

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.



1981 ஜனவரி 24]

**திரு. அ. ரகுமான்கான் :** * * * *

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** * * * *

**திரு. அ. ரகுமான்கான் :** * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இரண்டையும் நாளைக்குச் சொல்லலாம்; நாளையதினம் பிரசுரித்துக் கொள்ளலாம்; அதுவரையில் பிரசுரிக்க வேண்டாம்.

**திரு. துரைமுருகன் :** பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். துணை சபாநாயகர் அவர்கள் ரூலிங்கைத் தப்பாகக் கொடுக்கக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** முதலமைச்சரவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், எங்கே பேசினேன், எப்பொழுது பேசினேன் என்று கேட்கிறார்கள். நாளையதினம் சொல்வதாக உறுப்பினரவர்கள் சொல்கிறார்கள். நாளைக்குச் சொல்லிய பிறகுதான் பத்திரிகையிலே வர வேண்டும். அதுவரையில் பத்திரிகைக் குறிப்பிலே வரவேண்டாம்.

**டாக்டர் மு. கருணாநிதி :** துணைத் தலைவரவர்களே, அப்படிப் பேசவில்லை என்றால், அதை மறுப்பதற்கு முதலமைச்சருக்கு உரிமை இருக்கிறது. அப்படி மறுத்துவிட்டால் அதுவும் பதிவாகிவிடும்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** நான் மறுப்பது என்பது இறுதியில். எல்லோரும் பேசிய பிறகு பதில் சொல்லும் பொழுது உண்மை வெளிவரும். அதுவரையில் இப்படிப்பட்ட செய்திகள் வந்துகொண்டு பதில் சொல்லாமல் இருப்பது நியாயம் அல்ல. நான் ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். நான் யாருடைய பேச்சிலேயும் குறுக்கிடக்கூடாது என்றுதான் இருக்கிறேன். இருக்க விரும்புகிறேன்; அதையே கடைபிடிக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய விருப்பமும், வற்புறுத்தலும் ஆகும். ஆனால், எதையெடுத்தாலும் சொல்லிவிட்டு, பிறகு தருகிறேன் என்று சொல்லாமல், விவரங்களைத் தெரிந்தவர்கள் தலைவரிடம் கொடுத்துவிட்டேன் என்று சொன்னால் இப்படிப்பட்ட பிரச்னை இருந்திருக்காது.

**திரு. துரைமுருகன் :** துணைத் தலைவரவர்களே, இந்த மன்றத்தின் மரபு என்னவென்றால், ஒரு அங்கத்தினர் பேசுகிறார் என்றால், சில குற்றச்சாட்டுக்களைச் சாட்டுகிறார் என்றால், அதற்காக எல்லாவற்றையும் பீரோவாகக் கொண்டு வந்து நிற்க வைக்க முடியாது.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[1981 ஜனவரி 24

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள் என்பது தெரியும்.

**திரு. துரைமுருகன்:** உங்கள் உத்தரவிற்கு நான் கட்டுப் படுகிறேன். ஆனால் ஒன்றைச் சொல்கிறேன். ஒரு அங்கத்தினர் பேசுகின்றபொழுது நான் சொல்கின்ற கருத்துக்கு நான் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்கிறேன் என்று சொன்னால் அவர் மீது நம்பிக்கை வைத்து அதை ஒத்துக் கொள்வதுதான் முறை. நாளைக்குத் தருகிறேன் என்று சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் எண்ணத்தை நான் ஒத்துக் கொள்கிறேன். அவரை அனுமதியுங்கள்; பேசட்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்த அறிக்கைகளை மாண்புமிகு உறுப்பினரவர்கள் கொடுக்கும்பொழுது நாம் அதைப்பற்றி பரிசீலித்து கொள்ளலாம். அதுவரைக்கும் இதைப் பிரசுரிக்க வேண்டாம்.

**திரு. துரைமுருகன்:** நாளையதினம் அவர் கட்டவில்லை என்றால், அதையும் மறுபடியும் சொல்லி மறுப்பதற்கு உரிமை இருக்கிறது. எனவே, துணைத் தலைவரவர்கள் தவறான ஒரு நடைமுறையைப் பின்பற்றக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நடைமுறையில் பார்த்தால், பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்று சொல்லி விட்டுப்பிறகு பொறுப்பேற்றுக் கொள்வது இல்லை.

**திரு. துரைமுருகன்:** இந்த மன்றத்தில் நீண்ட நாட்களாகக் கடைப்பிடிக்கப்படும் முறை அது.

(கூச்சல்—குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் திரு. ரகுமான்கானை கன்வின்ஸ் பண்ணுகிறேன். மற்றவர்கள் உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன்:** நான் ஒரு மெம்பர். எனக்கு ஒரு பிரிவிலெஜ் இருக்கின்றது. திரு. ரகுமான்கானுக்கு நீங்கள் சொல்வது வேறு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு கொட்டேஷன் கொடுத்து, நாளைக்கு நான் ஆதாரம் தருகிறேன் என்று சொல்லி இருக்கிறார். அதுபற்றி பிறகு பரிசீலிப்போம். அது இப்பொழுது வேண்டாம்.



1981 ஜனவரி 24]

**திரு. துரைமுருகன்:** தவறான தீர்ப்பு கொடுக்கக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தவறு அல்ல. உரிமை இருக்கிறது என்று சொல்லிவிட்டு யாரைப் பற்றி வேண்டுமானாலும் அலிகேஷன் சொல்லலாம். நாளை காலை வந்து நான் அலிகேஷன் சொல்லவில்லை அல்லது என்னிடம் ஆதாரம் இல்லையென்று சொல்லலாம். அப்படி சொன்னால் என்ன செய்வது? எல்லோரும் உட்காருங்கள், திரு. ரகுமான்கான் தொடர்ந்து பேசட்டும்.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சட்டம் ஒழுங்கு பற்றி இன்றைக்கு நிலைமை என்ன என்று கேட்டால், புராணத்திலே ஒரு வழக்கு உண்டு, கண்ணனுக்கு 5 வயதானால் அவன் கம்சனை அழிப்பான் என்று. ஆகையினாலே, கம்சன் என்ன செய்தானாம்? 5 வயதான எல்லோரையுமே கொன்று குவித்தானாம். அது போல் நக்சல்பாரிகள் என்ற பெயராலே பல நிரபராதிகள் சுட்டு பொசுக்கப் பட்டிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பீகாரிலே, பகல்பூரில் 15 கிரிமினல்களின் கண்களைக் குருடாக்கியதற்காக சுப்ரீம் கோர்ட் தலையிட்டு, சர்க்கார் தலையிட்டு, குற்றவாளிகள்மீது அல்லது குற்றம் சுமத்தப்பட்டவர்களை சஸ்பெண்ட் செய்து, நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். ஒரு நாயினுடைய உயிர்கூட இந்த நாட்டிலே புனிதமானது. சட்டத்தை தன் கையிலே எடுப்பதற்கு எந்தப் போலீசுக்கும் அதிகாரம் கிடையாது. ஆகையினாலே அது குறித்து ஒரு நீதி விசாரணை போடப்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, திருச்செந்தூர் விவகாரத்தைப் பற்றி நீதி விசாரணையை முதல்வர் போட்டிருக்கிறார்கள். அதிலே நம்முடைய அமைச்சர் திரு. வீரப்பன் பொறுப்பிலே இருக்கிறவரைக்கும் சரியான விசாரணை கிடைக்காது என்பது என்னுடைய குற்றச்சாட்டு. அவர் தாமாகவே பதவி விலகுகிறேன் என்று சொன்னால் அது ஒரு ஹெல்த்தி டெமாக்ரசி—நல்ல மரபு என்று நான் வரவேற்பேன். உதாரணத்திற்குச் சொல்கிறேன். கோவாவில் இருக்கக்கூடிய ஒரு எடுக்கேஷன் மினிஸ்டர் வாத்தியாரைப் பார்த்து 10 மார்க் தன் உறவினருக்குப் போடச் சொன்னார் என்ற குற்றச்சாட்டு மாணவர்களால் வைக்கப்படுகின்றது. முதலமைச்சர் கமிஷன் போட்டிருக்கிறார். அவர் பதவியை ராஜிநாமா செய்தார். அதைப் பின்பற்றுவதும் பின்பற்றாததும் உங்களுடைய விருப்பம். ஆனால் ஒன்றைச் சொல்கிறேன். அவரைப் பொறுத்தமட்டிலே இதிலே மேலும் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். இது தற்கொலைதான்;

[திரு. அ. ரகுமான்கான்] [1981 ஜனவரி 24

5 அடி உயர மனிதன்; சுப்பிரமணியம் பிள்ளை, 6 அடி குழாயில் அவர்—160 பவுண்ட் உள்ளவர்—தற்கொலை செய்துக் கொண்டார். கருணாநிதி அரசியல் பிணத்தை வைத்துக்கொண்டு அரசியல் நடத்துகிறார்....(குறுக்கீடு) நான் கமிஷனுக்குள்ளே போகவில்லை; டேர்ம்ஸ் ஆப் ரெபரன்சுக்குள்ளே போகவில்லை.........

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** தலைவர் அவர்களே, ஏற்கெனவே கமிஷன் போடப்பட்டிருக்கிறது என்று அவரே சொன்னார். சொல்கிற பொழுது அவர் எத்தனை அடி உயரம் எத்தனை இஞ்ச், அந்தக் குழாய் எவ்வளவு நீளம் இருந்தது என்று அந்த விவரத்தையெல்லாம் பேசுகிறாரே, அது அனுமதிக்கப்படக் கூடியதா என்பதைக் தலைவர் அவர்கள் யோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** I am raisi g a point of orcer. கமிஷன் ஆப் என்கொயரி என்று சி. ஜே. ஆர். பாலை நியமித்திருக்கிறார்கள். அவர் பேப்பரிலே போட்டிருப்பது, இந்த விவரம் தெரிந்தவர்கள் எல்லாம் வாருங்கள், என்னிடத்திலே வந்து சொல்லுங்கள் என்றுதான் கேட்டிருக்கிறார்கள். வெளியிலே இருப்பவர்களுக்கு சி. ஜே. ஆர். பாலிடம் சொல்லக் கூடிய உரிமை இருக்கும்போது, சட்டமன்றத்திலே இருக்கக்கூடிய மெம்பர் சொல்லக்கூடாதா என்ன? அதற்கு எதற்காக மந்திரி ஆட்சேபணை செய்ய வேண்டும்? I don't follow I can't understand the reasion.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது என்பது வேறு. சில பத்திரிகைகள் அவரவர்களுடைய விருப்பு வெறுப்புகளுக்கேற்றபடி செய்திகள் வெளியிடலாம். ஆனால், அந்த நீதி விசாரணை பாதிக்கப்படுகின்ற அளவிலே சட்டமன்றத்திலே அதை பேசி, ரெக்கார்ட் செய்வது முறையானதுதானா என்பதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் திரு.வீரப்பன் அவர்கள் நேற்றையதினம் இன்னொரு அவையிலே பேசும்பொழுது, இந்தத் திருச்செந்தூரைப் பற்றி குறிப்பிட்டபொழுது சொல்லியிருக்கிறார், 'இந்த நீதி விசாரணை போடப்பட்டதே அங்கே மக்கள் ஒன்றும் கொந்தளிப்பு செய்யவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் அடிக்கடி அதைப்பற்றிச் சொன்னார். அதற்காக அது போடப்பட்டதே தவிர, வேறொன்றும் அல்ல' என்று. அதை விட நீதி விசாரணைக்கு எதிர்ப்பு தெரிவிக்கக்கூடிய ஒன்று, அல்லது திசை திருப்பக்கூடிய ஒன்று வேறு எதுவும் இருக்க முடியாது என்று நான் கருதுகிறேன். அதைவிட இவைகளையெல்லாம் பெரியவைகளாக நான் எண்ணவில்லை.



1981 ஜனவரி 24]

**திரு. அ. ரகுமான்கான்:** தலைவர் அவர்களே, உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது, இன்றைக்கு, பி. அண்ட் சி. மில் மூடப்பட்டிருக்கிறது. 13,000 தொழிலாளர்கள், 25,000 குடும்பங்கள் இன்றைக்கு அல்லல்படுகின்றன. தலைவலி என்பதற்காக தலையை வெட்டக் கூடாது. 1976-லே எந்த நஷ்டமும் இல்லை. இடையிலே வெள்ளம் வந்தது. ஆனால் இலாபம் இருக்கிறது என்று கணக்குக் காட்டப்பட்டிருக்கிறது. மிஸ்-மானேஜ்மென்ட்தான் அதற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. நிலைமை எப்படியிருந்தாலும் நம்முடைய இந்தச் சர்க்கார், அதிலே என்ன முயற்சி எடுத்திருக்கிறது, என்று கேட்டால், அவர்களுடைய வாழ்க்கை இப்படி பாழ்பட்டுவிட்டது. 25,000 குடும்பங்கள் நடுத்தெருவில் நிற்கிறார்கள். ஜனநாயக அடிப்படையில் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டாமா என்று கேட்டால், அவசரமான சட்டத்தைத் தொழிலாளர்களின் நண்பர் என்று சொல்லக்கூடிய நம்முடைய முதலமைச்சர் அவர்கள் போட்டிருக்கிறார்கள். அது எந்தவிதத்திலே நியாயம் என்று நான் கேட்க விரும்புகிறேன். இது ஏற்கெனவே, இரண்டு மூன்று முறை வந்து பயம் காட்டிவிட்டுப் போன சட்டம். இப்பொழுதும் கூட வந்திருக்கிறது. அதிலே என்ன நிலைமை என்று கேட்டால், Tamil Nadu Essential Service Maintcnance Ordinance என்ற ஒரு அவசரச் சட்டத்தை நம்முடைய முதலமைச்சர் பிறப்பித்திருக்கிறார். நான் சொல்கிறேன், வேலை செய்வதும் செய்யாததும் ஒருவருடைய தனி உரிமை. ஆனால், அப்படிப்பட்ட தனி உரிமையை ரத்து செய்யும் வகையில், rcfusal to work in an essential service-punishment என்னவென்றால், 1 வருஷம்—ரூ. 2,000 என்றிருக்கிறது. துண்டினால் கூடப் போதும், 1 வருஷம்—ரூ. 2,000; ஊர்வலம் போகிறார்கள், பக்கத்து வீட்டு அம்மா, தண்ணீர் கொடுத்தால் போதும், அந்த அம்மாவையும் கூடப் பிடித்து உள்ளே போடக்கூடிய அளவுக்கு சட்டத்திலே இருக்கிறது. Even giv ng f nance என்று கூட இருக்கிறது. டொனேஷன் கொடுத்தால் கூட உள்ளே போக வேண்டியிருக்கிறது. நான் கேட்கிறேன், அதே நேரத்திலே, ஒன்றை மறந்து விடக் கூடாது. பி. அண்ட். சி. மில் தொழிலாளர்களுடைய பிரச்னையைத் தீர்ப்பதற்கு மத்திய சர்க்காரோடு நின்று, நீங்களும் இருந்து அந்த முயற்சியிலே ஈடுபட வேண்டுமே தவிர, அதற்காகத் தொழிலாளர்களுடைய உரிமைகளை நசுக்குவது, ஒரு சட்டத்தைக் கொண்டு வருவது என்றால், இது ஒரு தொழிலாளர் விரோத சர்க்கார் என்று நான் அச் சட்டத்தை விமர்சிக்கின்ற நேரத்திலே, உங்களைக் கடுமையாகக் குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

[முற்பகல் 10-50]

அதுமட்டுமல்ல, உள்ளாட்சி மன்றத் தேர்தல்கள் நடைபெறவில்லை. இன்னும் சொல்லப் போனால், உங்கள் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வருகிறேன். பல கிராமங்களிலே மஸ்டர்

ரோல்கள் தயாரிக்கப்படுகின்றன. சென்சஸ் எடுக்கப்படுகிறது. 18 வயதுக்காரர்களுக்கு வாக்குரிமை என்றெல்லாம் சொன்னீர்கள். இப்போது என்ன சொல்கிறீர்கள், என்றால் மத்திய சர்க்கார் தேர்தலை நடத்த வேண்டாம் என்று சொல்லியிருக்கிறது. இந்த சென்சஸ் எல்லாம் முடிந்ததற்குப் பிறகுதான் தேர்தலை நடத்த வேண்டும் என்று உத்தரவு வந்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் கேரளாவிலே 7 வது மாதத்தில் தேர்தல் நடைபெற்றிருக்கிறது., மாநகராட்சிக்கு அங்கே போடாத உத்தரவு, இங்கே மட்டும் எப்படி வந்தது. எனவே விரைவிலே தேர்தலை நடத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவருக்கு வேலை என்று சொல்லியிருக்கிறீர்கள். நான் உங்களைக் கேட்கிறேன். பல வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கிறீர்கள், ஏற்கனவே கொடுத்த வாக்குறுதிகள் என்ன ஆயிற்று. வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் பட்டியனியால் சாவது போல் இருந்தால் ரூ. 100 கொடுக்கப்படும் என்ற வாக்குறுதி என்ன ஆயிற்று? அது போலவே பல்வேறு வாக்குறுதிகள் எல்லாம் இருக்கின்றன.

இந்த ஆளுநர் உரையிலே மிகவும் முக்கியமான விஷயம் சொல்லப்படவில்லை. அதை மட்டும் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். ஊழலை ஒழிப்போம் என்று சொன்னீர்கள். ஆனால் அந்த ஊழல் ஒழிந்திருக்கிறதா என்றால் இல்லை. நான் சொல்வதை அமைச்சர் பெருமக்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் கவனமாக ஆத்திரப்படாமல் கேட்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முதல் அமைச்சருக்காகவே ஆதாரங்களோடு நான் கொண்டு வந்திருக்கிறேன். உங்களுக்கு ஞாபகம் ஊட்ட விரும்புகிறேன். ரெட் சான்டல், அதாவது சிவப்பு சந்தனம் என்று ஒரு வகை தேக்கு உள்ளது. அது தேக்கைக் காட்டிலும் விலை உயர்ந்ததாகும். பாரஸ்ட் ஆக்டின் படி அந்த மரங்களை யாரும் வெட்டக்கூடாது, விற்கக்கூடாது. அப்படி இருக்கும்போது 60 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள ரெட் சான்டல் மரங்கள் பாரஸ்ட் ஆக்டிற்கு விரோதமாக அந்த மரங்கள் வெட்டப்பட்டு, சில வியாபாரிகள் மெட்ராஸ் ஹார்பரில் இருந்து ஜப்பானுக்குக் கப்பல் மூலம் ஏற்றுமதி செய்து அனுப்புகிறார்கள். அதிகாரிகள் அதைக் கண்டுபிடித்து அவர்கள் மீது வழக்குப் போடுகிறார்கள். கிரிமினல் கேஸ் கோர்ட்டில் பெண்டிங்காக இருக்கின்றது. திடீரென்று அந்த வழக்கு வாபஸ் வாங்கப்படுகிறது. அந்த வழக்கு வாபஸ் வாங்கப்படவேண்டும் என்று உத்தரவு போடுவது யார் தெரியுமா? நம்முடைய மரியாதைக்குரிய அமைச்சர் அவர்கள். நான் பெயரை வேண்டுமானாலும் சொல்லுகிறேன். உத்தரவுகளைக் கையிலேயே வைத்துக்கொண்டிருக்கிறேன். தேவைப்பட்டால் நான் சொல்லவிரும்புகிறேன். இதிலே ஒரு ஊழலப்பன் ஒளிந்திருப்பதாக நான் பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறேன்.





காரணம் 'ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட்' கொடுத்து, அந்த ரெட் சான்டல் மரத்தை வெட்டக் கூடாது என்று ஏற்கனவே ஷெடியூலிலே இருந்ததை மாற்றி, ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுத்து வெட்டுவது சரிதான் என்று அதிலே அவர்கள் ஒரு மாற்றத்தை, ஒரு அமென்மென்டை கொண்டு வந்திருக்கிறார்கள். அமைச்சர் வீரப்பன் அவர்கள் இந்த ஊழலுக்காக பதில் சொல்லவேண்டும் என்று நான் அமைதியோடும், பொறுப்போடும் கேட்டுக் கொள்கிறேன். அதற்கான ஆதாரத்தை நான் தரத் தயாராக இருக்கிறேன். ஜி.ஓ. இருக்கிறது. ஊழலே கிடையாதுஎன்று சொல்லுகிற உத்தமர்கள் இதற்குப் பதில் சொல்ல வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, அடுத்து மருத்துவக் கல்லூரி பற்றிய விஷயம். ஆனால் அமைச்சர்கள் எல்லாம் இல்லாமல் இருக்கிறார்கள். வருத்தப்படுகிறேன். மருத்துவக் கல்லூரித் தேர்விலே மாபெரும் ஊழல் நடைபெற்றிருக்கிறது. நான் இதை சவாலாகவே விடுகிறேன். இதை நிரூபிக்காவிட்டால் நான் என் பதவியை ராஜினாமா செய்கிறேன். நான் யோசித்துத் தான் சொல்லுகிறேன். அவசரப்பட்டுச் சொல்லவில்லை. ஆதாரம் அந்த அளவுக்கு தெளிவாக இருப்பதால்தான் சொல்லுகிறேன். நான் இதை நிருபித்துவிட்டால் இந்த மந்திரிசபை ராஜினாமா செய்யத் தயாரா என்று கேட்க விரும்புகிறேன். காரணம் மதுரை மருத்துவக் கல்லூரி தேர்வு மார்க் லிஸ்ட்டை கொண்டு வாருங்கள். குறைந்த மார்க்கு வாங்கி இருப்பவர்களுக்கு இடம் கொடுத்திருக்கிறீர்கள். கூடுதல் மார்க்கு எடுத்து இருப்பவர்களுக்கு இடம் கொடுக்கவில்லை. பெயர் பட்டியலைச் சொல்லுகிறேன். விவரங்களைச் சொல்லுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு குற்றச்சாட்டைச் சொன்னீர்கள். அதை ஒட்டி சவால்களை விட்டீர்கள். அந்தச் சவாலை நீக்கிவிட்டு மற்றவைகளை எல்லாம் பேசுங்கள்.

Thiru A. RAHMANKHAN : It is my birthright. Because of the evidence, I have such confidence. I am prepared to resign my post in the interest of the people, if it is not proved.

Mr. SPEAKER : I welcome your confidence. I received the acknowledgement.

Thiru A. RAHMANKHAN : Much obliged.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : : மாண்புமிகு தலைவர் அவர்களே, நாம் மார்க்கு பிரகாரம்தான் மெடிக்கல் காலேஜ், இன்ஜினிரிங் காலேஜுக்கு எடுக்கவில்லை என்பது தெரிந்த காரணம்தான். அதிலே குறைந்த மார்க்கு வாங்கியவர்களுக்கு கிடைத்திருக்கக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. அதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே இதையே பெரிய ஊழல் என்று சொல்ல ஆரம்பித்தால், இதுவரையில் நடந்ததெல்லாம் என்ன?

திரு. அ. ரகுமான்கான் : ஊழல் என்பதற்கு நான் பேசியதற்குப் பிறகு இதற்குப் பெயர் ஊழலா, ஊழல் இல்லையா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர் அவசரப்பட வேண்டாம் அவருடைய பிரச்னையும் இருக்கிறது. கொஞ்சம் பொறுமையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படி நீங்கள் பேசுவதாக இருந்தால், இன்டர்வியூ தேவையில்லை என்று தைரியமாகப் பேசுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் விளக்கம் அளிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். கொஞ்சம் பொறுமையோடு இருந்து கேட்டு, பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. இரா. முத்தையா : அவர் ரொம்ப நேரமாகப் பேசுகிறார் ? அவருக்கு எவ்வளவு நேரம் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவருக்கு அளிக்கப்பட்ட நேரம் 30 நிமிடம். மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் சீக்கிரம் முடித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : எனக்குக் கொடுக்கப்பட்ட நேரத்திற்குள் நான் பேசி முடித்து விடுகிறேன்.

பிளஸ் 2 படித்த பெண்—மணிமேகலை—மெடிகல் காலேஜ் சீட் கேட்டு அட்மிஷன் அப்ளிகேஷன் கொடுக்கிறார். எல்லாத் தகுதிகளையும் கொண்டவர். மொத்த மார்க் 1200 ல் 919 மார்க் எடுத்து இருக்கிறார். தமிழ் 174—ஆங்கிலம் 101—பிசிக்ஸ் 163— கெமிஸ்டிரி 163— பாடனி 150— ஜுவாலாஜி 167 ஆக மொத்தம் 919 மார்க்குகள் 1200 க்கு எடுத்து இருக்கிறார். இன்டர்வியூ கார்ட் நெம்பர் 2846. ராணுவத்தில் பணியாற்றியவரின் புதல்வி. அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட 6 சதவீத இட ஒதுக்கீட்டிலும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. பாக்வார்ட் கிளாஸ் லிஸ்டிலும் இல்லை. இன்டர்வியூ சிறப்பாகச் செய்து இருக்கிறார். அதற்கும் ஆதாரம் உண்டு. அப்படி இருந்தும் அவருக்குச் சீட் கிடைக்கவில்லை—அதுமட்டுமல்ல, உடுமலைப்பேட்டையில் ஒரு கேன்டிடேட்—இன்டர்வியூ நெம்பர் 10285, ஜீவாவேதமணி. எடுத்த மார்க்குகள் 1200-க்கு 863. பேக்வார்ட் கிளாஸ். இடம் கிடைக்கவில்லை. ஆனால் 1200-க்கு 769 மார்க்குகள் எடுத்த ஒரு நபருக்கு இடம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அந்த கேன்டிடேட் ரிஜிஸ்டிரேஷன் நெம்பர் 10286. அந்தக் கேன்டிடேட்டும் பாக்வார்ட் கிளாஸ் தான்.





அதுமட்டுமல்ல. மதுரை மெடிகல் காலேஜில் வெறும் 76 சதவீதம் மட்டும் எடுத்தவர்கள் மேலே சண்ட கேன்டிடேட்டுகளை விடக் குறைவான மார்க் எடுத்தவர்கள், இடம் பெற்றுள்ளனர். அதை நிரூபிக்கத் தயார்.

I am prepared. Place the mark list on the table of this August Assembly.

அடுத்து நான் இன்னொன்றையும் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். ''நவமணி'' பத்திரிகை பற்றி உங்களுக்குத் தெரியும். அந்த ''நவமணி'' பத்திரிகையில் மிக முக்கியமான பிரச்னை—ஏறத்தாழ 22 இலட்ச ரூபாய் பெறுமான ரோட்டரி கலர் மெஷின் எந்தவிதமான ஏலமும் போடாமல், பப்ளிக் டெண்டர் விடாமல் ''மக்கள் குரல்'' பத்திரிகைக்கு ஈனக் கிரயமாக 2½ இலட்ச ரூபாய்க்கு இந்தச் சர்க்கார் கொடுத்து இருக்கிறது ஒரு உத்தரவு போட்டு. அந்த உத்தரவை—சர்க்கார் அலுவலகம் போட்ட ஒரு உத்தரவை—அது ஒரு பப்ளிக் டாக்குமென்ட்—எல்லோரும் போய் கேட்டு விட்டார்கள். கிடைக்கவில்லை. ஆனால் கடைசியாக நம்முடைய அமைச்சர் அவர்கள் அதைத் தெரிவிப்பார்கள் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொல்லிய பிரச்னைகளில் ஏதாவது நீதி விசாரணையில் உள்ளது இருக்கின்றதா ? ஏனென்றால், நீங்கள் கோர்ட்டுக்கும் போகக் கூடியவர், இங்கேயும் வரக்கூடியவர், அதனால்தான் கேட்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : அப்படி எதுவும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் பேச ஆரம்பித்து முக்கால் மணி நேரம் ஆகிவிட்டது. முடித்துக் கொள்ளுங்கள். மற்ற பாயிண்ட் இருந்தால் வேறு ஒருவரிடத்தில் கொடுத்துப் பேசச் சொல்லலாம்.

திரு. அ. ரகுமான்கான் : இன்னும் 5 நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் விவாதத்தைத் துவக்கி வைத்துப் பேசினார்கள் என்பதால் அவருக்கு அதிக நேரம் ஒதுக்கப்பட்டது. உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 30 நிமிடங்கள்தான். எல்லோரும் தலைவர்கள் பேசுகிற மாதிரி அதிக நேரம் வேண்டும் என்று சொன்னால் நேரம் இல்லை. ஆகவே, தாங்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து டாக்டர் கே. சமரசம் பேசுவார்.

திரு. அ. ரகுமான்கான் : ஒரு பாயின்டை மட்டும் பேசி முடித்து விடுகிறேன்.........

[1981 சனவரி 24

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என் அனுமதி இல்லாமல் பேசினால் மைக் வேலை செய்யாது. மைக் ஆப் செய்தாகி விட்டது.

திரு. து. புருஷோத்தமன் : உண்மையைச் சொல்ல ஏன் அனுமதி மறுக்கிறீர்கள் ? ஏன் பயப்படுகிறீர்கள் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. புருஷோத்தமன் உட்காரவேண்டும். நான் யாருக்கும் பயப்பட தேவையில்லை. பயப்படுவது பற்றி என்னிடத்தில் சொல்ல வேண்டாம். டாக்டர் கே. சமரசம் பேசுங்கள்.

[முற்பகல் 11-00]

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள்........

திரு. அ. ரகுமான்கான் : நான் பேசி முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரம் இல்லை. நீங்கள் உட்காருங்கள். அடுத்த உறுப்பினரைப் பேச அழைத்து விட்டேன்.

திரு. அ. ரகுமான்கான் : அப்படியானால் ஊழல் பற்றிச் சொல்ல வேண்டாமா ?

டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவரவர்களே, நண்பர் ரகுமான்கான் அவர்களிடத்திலே வேறு ஏதாவது ஆதாரங்கள் அல்லது செய்திகள் இருந்தால் அதை மற்ற உறுப்பினர்களிடம் தருவதற்கு வாய்ப்பு இருக்கின்றது. ஆகவே தானே எல்லாவற்றையும் பேசாமல் அதை மற்றவர்களுக்கும் விநியோகிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 21 ஆம் நாள் இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. விஸ்வநாதன் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தின் மீது வழிமொழிந்து ஆட்சிக் கட்சியின் சார்பாக நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன். பொதுவாகவே இங்கே ஆளுநர் உரையில் சுருக்கமாகவும், விளக்கமாகவும் இந்த அரசின் கொள்கை பற்றியும் இன்றைய நாட்டு நடப்பு பற்றியும் மிகத் துல்லியமாக படம் பிடித்து காட்டி இருக்கிறார்கள். அப்படிப்பட்ட இந்த ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகின்ற நேரத்தில் சிற் சில பிரச்சினைகள் பற்றி திரு. ரகுமான்கான் அவர்கள் கூட ஒரு



1981 சனவரி 24] [டாக்டர் கே. சமரசம்]

சில கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் பேசுகின்ற நேரத்திலே கிராம அதிகாரிகளுக்கு நஷ்ட ஈடு தரவேண்டாமா என்று கேட்டிருக்கிறார்கள். கிராம அதிகாரிகள் தேவையில்லை என்று சொல்லக்கூடிய நிலையிலே இருந்து மாறி அவர்களுக்கு ஏதேனும் நஷ்ட ஈடு தரக்கூடாதா என்று கூறுகின்ற அளவுக்கு ஏற்பட்ட அவரது மனமாற்றத்தை நான் உண்மையிலேயே வரவேற்கிறேன். பொதுவாக கிராம அதிகாரிகளை நீக்கியது சரிதான் என்பதற்கு அவரது வாதம் துணையாக இருந்திருக்கின்றது. ஆகவே சரியான பாதையில்தான் இந்த அரசு சென்று கொண்டிருக்கின்றது என்பதற்கு இதுவே ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். சிட்டா, அடங்கல், பேரேடு ஆகியவற்றை அவர்களால்தான் தர முடியுமே தவிர, அதை மாற்றக்கூடிய அதிகாரிகளால் தர முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். கர்ணம், முன்சீப் ஆகியவர்களுடைய கணக்குகள் ஒழுங்காக இருக்கின்றன என்று அவர்களால் நிரூபிக்க முடியுமா ? என்னைப் பொறுத்தவரையில் நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஒரு நாடு வாழ்வதற்கு அடிப்படையாக இருக்கக் கூடிய முக்கோணங்கள் கிராமத்திலே இருக்கக்கூடிய அதிகாரிகளும், பஞ்சாயத்து தலைவர்களும், பாங்குத் தலைவர்களுந்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள்தான் ஒரு நாட்டுக்கு முதுகெலும்பாக, அடிப்படையாக பவுண்டேஷனாக இருக்கிறார்கள். அவர்கள் மூவரிடத்திலும் நான் நாட்டின் ஜீவநாடியே அடங்கி இருக்கின்றது. அப்படிப்பட்ட ஜீவநாடி நல்ல முறையில் இல்லாமல் இருந்த காரணத்தால்தான் அந்தக் கட்டத்திலே ஒரு கட்டத்தை இன்றைக்கு எடுத்திருக்கிறார்கள். இன்னும் இரண்டு கட்டங்கள் செப்பனிடப்பட வேண்டி இருக்கின்றது. ஆகவே இப்படிப்பட்ட நிலையிலே எந்தப் பிரச்சினைகள் வந்தாலும் அதற்கு தக்க ஆலோசனைகள் இதுவரை என்ன சொல்லியிருக்கிறார்கள் ? எதிர்க்கட்சிகள் என்ற வகையிலே இன்னின்ன ஆலோசனைகளை வைக்கிறோம் என்று சொன்னால் அது வரவேற்கத்தக்கது. அப்படியில்லாமல் எதைச் செய்தாலும் எதிர்க்கக்கூடிய நிலையிலேயும், தடுக்கக்கூடிய நிலையிலேயும் இருந்துகொண்டு நல்ல காரியங்களைக் கெடுத்து விடாதீர்கள் என்று நான் அந்த நண்பர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து விவசாயிகள் பிரச்சினை என்று சொன்னார்கள். விவசாயிகள் பிரச்சினைகளைப் பொறுத்தவரையில் இதுவரையில் மற்ற மாநிலங்களிலே சிந்தித்துக்கூடப் பார்க்காத அளவில் தமிழக அரசுதான் பல கோடி ரூபாய் அளவிற்கு கடன் தள்ளுபடி செய்திருக்கின்றது. அதுமட்டுமல்ல, மின் துறையிலேயும் பல சலுகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த அளவுக்கு விவசாயிகளின் பிரச்சினைக்கு தீர்வு கண்டிருக்கின்றது இந்த

அரசு என்பதை யாரும் மறந்துவிட முடியாது. மேலும் தேர்தல் அறிக்கையிலே என்ன என்ன சொன்னோமோ அவற்றில் நாற்றுக்கு எண்பது சதவீதத்தை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்ட பிறகு நிறைவேற்றி இருக்கிறோம் என்று சொல்ல முடியும். கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் இன்று தேசீய திட்டமாக மாற்றப்பட்டிருக்கின்றது. இந்தியாவின் ஜீவநாடி கிராமப்புறத்திலே இருக்கின்றது என்று சொன்னார்களே தவிர 30 ஆண்டு காலமாக கிராமம் முன்னேறவில்லை. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியிலே குடிதண்ணீர் இல்லாத கிராமம் இல்லை. பள்ளிக்கூட கட்டிடங்கள் இல்லாத கிராமம் இல்லை. பாதைகள் இல்லாத கிராமம் இல்லை. போக்குவரத்து வசதி இல்லாத பாதைகளே இல்லை என்று சொல்லத்தக்க அளவுக்கு தேவையான எல்லாவற்றையும் இந்த அரசு செய்திருக்கின்றது என்பதையும் மேலும் செய்வதற்கு வேண்டிய தன்னிறைவுத் திட்டங்களைப் போட்டிருக்கின்றது என்பதையும் இந்த நேரத்திலே எதிர்க்கட்சிகளுக்கு நான் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

கிராமப்புற வேலைவாய்ப்பு திட்டம் இப்போது ஒரு தேசீயத் திட்டமாக செயல்படுகிறது. இந்த தன்னிறைவுத் திட்டம் என்பது தமிழகம் தந்த ஒரு பெரிய வரப்பிரசாதம் என்று கூட சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே ஆளுநர் உரை படிக்கப்பட்டு, அதை தமிழில் மொழி பெயர்த்து நமது அவைத் தலைவர் அவர்கள் பேசுகிறபோது கூட, எதிர்க்கட்சியில் இருக்கும் சிலர் எரிசாராயம் பற்றி, வடிசாராயம் பற்றி எல்லாம் குறிப்பிடப்பெறவில்லையே என்று கேட்டார்கள். இதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட கவர்னர் உரையிலே கூட, பூச்சி மருந்து ஊழல், கோதுமை பேர ஊழல், அரிசி பேர ஊழல், மஸ்டர் ரோல் ஊழல் எல்லாம் வரவில்லை. அவைகள் அதிலே கொண்டு வரப்படவில்லை என்பதையும் அவைகள் எந்த நேரத்தில் எப்படி வந்தாலும் அவைகளை சந்தித்து தக்க விளக்கம் தர இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதையும் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு வேலை தர வேண்டும் என்று சொல்கிற ஒரு திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அது மிக நல்ல ஒரு திட்டம். தமிழகத்திலே உள்ள குடும்பங்களில், குடும்பத்தில் ஒருவனாவது அரசாங்கத்தின் சேவகனாக இருக்க வேண்டும் என்று சொல்லும் முறையிலே இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. வரவேற்கிறேன்.

இந்த ஆட்சி பேரறிஞர் அண்ணாவின் வழியை பின் பற்றக் கூடிய ஆட்சி. தந்தை பெரியார் அவர்களின் வழியைப் பின் பற்றக் கூடிய ஒரு ஆட்சி. தந்தை பெரியார் அவர்களின்



சொத்துக்கள், தனியார்களின் கையில் அகப்பட்டுக்கொண்டு பாழடிக்கப்படுவதாக செய்திகள் அன்றாடம் வந்துக் கொண்டேயிருக்கின்றன. ஆகையினால் அந்த சொத்துக்களை அரசு எடுத்து ஒரு அறக்கட்டளையை நிறுவி அதை காப்பாற்ற வேண்டும். பெரியாரின் கொள்கைகளை பரப்ப அமைப்பு ஒன்றை அரசே நிறுவ வேண்டும். அந்தச் சொத்துக்களை அப்படியே வைத்து, அதிலிருந்து பெறப்படும் வருமானத்திலிருந்து பெரியார் பகுத்தறிவுப் பிரச்சாரப் படையினை அமைத்து சுய மரியாதைத் கொள்கையை பரப்ப ஒரு இயக்கத்தை உருவாக்க வேண்டும். அப்படிச் செய்வதன் மூலம் சொத்துக்களும் பாதுகாக்கப்படும். சுயமரியாதை இயக்கத்தை வளர்க்க அரசே துணை நிற்க முடியும் என்றும் அந்த இயக்கம் தொன்று தொட்டு காலம் காலமாக நிலவுவதற்கு வழிகோல முடியும் என்பதையும் சொல்லி, அதை அரசு செய்ய முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே சட்டம் ஒழுங்கு பற்றி பலர் பேசினார்கள். இந்திய துணை கண்டத்திலேயே சட்டம் ஒழுங்கு சீராக நடைபெறுவது தமிழகத்திலே ஒன்றுதான் என்று சொன்னால், அது மிகையாகாது. நான் சேர்மேனாக இருக்கும் எஸ்டிமேட் கமிட்டியுடன் வடமாநிலங்களுக்கு சென்றிருந்தபோது, அங்கே ஒரு காட்சியைப் பார்த்தேன். டெல்லியிலே பெண்கள் வேலைக்குச் செல்லும்போது, தனியாக கைப்பையில் ஒரு சேலையையும் எடுத்துச் செல்கிறார்கள். எதற்கு இப்படி எடுத்துச் செல்கிறீர்கள் என்று கேட்டதற்கு, 'நாங்கள் மீண்டும் வீட்டுக்கு வரும்போது சேலை கிழிந்திருக்கும், வேறு பலவகையான அசம்பாவிதங்களும் இங்கே நடைபெறுகின்றன-போக்குவரத்தும் மோசமாக உள்ளது, ஆகவே தான் பாதுகாப்பிற்காக கையிலும் ஒரு சேலையை எடுத்துச் செல்கிறோம்' என்று சொன்னார்கள். இந்திய துணை கண்டத்தின் தலைநகரிலே இப்படிச் சொல்கிறார்கள். ஆனால் தமிழகத்தில் இப்படி எல்லாம் நிலைமை இல்லை. சட்டவிரோத செயல்கள் பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. வேறு எந்த மாநிலத்தைக் காட்டிலும் சிறப்பாகவே இருக்கிறது. இங்கே இருக்கிற போக்குவரத்துக் கழகங்களும், வேறு மாநிலங்களைவிட சிறப்பாகவே பணிபுரிகின்றன.

மகாராஷ்டிராவிலிருந்து அங்குள்ள கமிட்டியினர், நம் மாநிலத்தில் உள்ள போக்குவரத்துத் துறையைப் பற்றி அறிவதற்காக வந்து சென்றனர். இன்னும் சில வாரங்களில் ஹரியானா, ஹிமாசலப் பிரதேசம் போன்ற மாநிலங்களிலிருந்தும் கமிட்டியினர் இதன் பொருட்டு தமிழகம் வரவிருக்கின்றனர். நமது போக்குவரத்து முறைகளின் நடைமுறைகளை கண்டு செல்லவிருக்கின்றனர் என்பதையும் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இந்திய துணைக் கண்டத்திலேயே போக்குவரத்துத் துறையிலும் தன்நிறைவு பெற்று சிறப்போடு செயல்படுவது இந்த அரசு தான் என்பதை சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

[டாக்டர் கே. சமரசம்] [1981 ஜனவரி 24

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழ்நாட்டிற்கென 3,150 கோடியை மத்திய அரசுடன் வாதாடி தமிழக அரசு பெற்றுள்ளது. அதைப் பாராட்டுகிறேன். அந்த திட்டங்கள் நல்ல முறையில் செயல்பட அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். மின்துறைக்கென இந்த 6—வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1,023 கோடி ரூபாய் ஒதுக்கப்பெற்றதாக தெரிகிறது. மாநில அரசு தீட்டியுள்ள மின் திட்டங்கள் மத்திய அரசின் பார்வையில் வெற்றி பெற்றால், 1985-ல் அத் திட்டங்கள் மின் துறையில் தன்னிறைவை ஏற்படுத்தும் என்பதில் ஐயமேயில்லை. அதுவுமல்லாமல் 3,150 கோடி ரூபாயை மத்திய அரசுடன் வாதாடி பெற்றது இந்த அரசு என்று சொன்னால், இரு அரசுகளுக்கும் இடையே இருக்கும் சுமூகமான நிலையை இது எடுத்துக் காட்டுகிறது என்றே கொள்ளவேண்டும்.

அதுமட்டுமல்லாமல் நபர் வாரி வருமான அடிப்படையை மாற்றி வறுமை கோட்டிற்கு கீழே வாழும் மக்களின் அடிப்படையில் திட்டம் தீட்ட முயற்சிப்பது, வறுமையை ஒழிக்க, ஜாதி பேதங்களை நீக்க பெரிதும் உதவும். 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்று சொல்லக் கூடிய அளவில் ஒரு நிலைமையை இத்திட்டம் உருவாக்கும்.

அதுவுமல்லாமல், உலகத் தமிழ் சங்கம் அமைத்து அதற்கு விழா எடுப்பது என்பது பழைய வரலாறு திரும்புகிறது என்று நினைக்கவேண்டியிருக்கிறது. இது உலகத்திற்கே ஒரு எடுத்துக்காட்டாகும். ஆனால் எவ்வளவுதான் சொன்னாலும் கூட எல்லாவற்றிலும் குறை சொல்லக்கூடியவர்களும் இருக்கிறார்கள். இது எப்படி இருக்கிறது என்றால், 4 பேர்கள் சேர்ந்துக் கொண்டு ஒரு நண்பனின் சாவிற்கு சென்றார்களாம். அதற்கான பணிகள் முடிந்த பிறகு, இறந்தவனுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் ஆளுக்கு நூறு ரூபாய் அவன் சமாதியில் வைக்க வேண்டும் என்று பேசிக் கொண்டு முதல் மூன்று பேர்களும், ஆளுக்கு 100 ரூபாய் வீதம் 300 ரூபாயைக் கொண்டு போய் சமாதியில் வைத்தார்களாம். அந்த நாலாம் மனிதன், 400 ரூபாய்க்கு இறந்தவன் பெயருக்கு செக் எழுதிக் கொண்டுபோய் சமாதியின் மேல் வைத்து விட்டு, அந்த முன்னூறு ரூபாயையும் எடுத்துக் கொண்டு வந்து விட்டானாம், அந்தக் கதை போல் இருக்கிறது. எதை செய்தாலும் எப்படிச் செய்தாலும் குற்றங் குறைகள் சொல்லிக் கொண்டு, அதில் என்ன ஆதாயம் தேடலாம் என்று நினைப்பவர்களாக இருக்கிறார்களே தவிர, உண்மையான நிலையை புரிந்துக் கொள்ளாதவர்களாகவே அவர்கள் இருக்கிறார்கள் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[முற்பகல் 11—10]

மதுவிலக்கு பற்றி இங்கே எதிர்க்கட்சி உறுப்பினர்கள்கூடச் சொன்னார்கள். மதுவிலக்கு பற்றி ஏற்கனவே நீங்கள் பல திட்டங்கள் எல்லாம் போட்டீர்களே என்றெல்லாம் கூடச் சொன்னார்கள். நான் அவர்களுக்கு ஒன்று சொல்லிக் கொள்ள விரும்பு



1981 சனவரி 24] [டாக்டர் கே. சமரசம்]

கிறேன். கடுமையான சட்டம் போட்டோம், அப்படிப் போட்டு மதுவிலக்கை அமல் நடத்தலாம் என்று முயற்சித்தோம். ஆனால் எதிர்க்கட்சியினர் ஒத்துழைப்பு தராத காரணத்தாலும் சமுதாயத்தில் உள்ள 51 சத விகித மக்கள் எதை விரும்புகிறார்கள் என்று பார்க்கிற காரணத்தாலும், நிச்சயமாக என்னென்ன பிரச்னைகள் வந்தன, அதில் ஏழை எளியவர்கள் எந்தளவிற்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் அல்லது பாதிக்கப்படுகிறார்கள் என்ற நிலைமைகளைத் தெரிந்த காரணத்தாலும் மதுவிலக்கு பற்றி இப்போது மறுபரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் இந்த அரசுக்கு வந்திருக்கிறது என்பதே தவிர வேறு எந்தவிதமான புதுக் காரணமும் இல்லை என்பதை உறுப்பினர்கள் உணருவார்கள் என்று நான் கருதுகிறேன்.

என்னைப் பொறுத்த வரையில் மதுவிலக்கு பற்றி நான் ஒன்று கூற விரும்புகிறேன். இது எனது தனிப்பட்ட, சொந்தக் கருத்து. மதுவிலக்கு தளர்த்தப்பட வேண்டும். பெர்மிட்களை ஏழைகளுக்கு பத்து ரூபாய்க்கு வழங்கலாம். மதுவை பாட்டில்களில் அடைத்துக் கொடுக்கலாம். அப்படிக் கொடுக்கக்கூடிய நிலையில் தனியாருக்கு ஏல முறையில் கொடுப்பதைத் தவிர்க்கலாம். அரசாங்க விற்பனை அங்காடிகளில் அல்லது கூட்டுறவு அங்காடிகளில், இப்போது இருக்கிற விற்பனை நிலையங்களில் அவற்றை வழங்கலாம். அதே நேரத்தில் மதுவிலக்குப் பிரச்சாரத்தை நாம் தீவிரப்படுத்த வேண்டும். அதற்காக ஒரு பிரச்சாரப்படையை நாம் அமைக்க வேண்டும். அதோடுகூட மதுவிலக்கு வழக்குகள் இருக்கக்கூடாது. போலிச்சரக்குகளை போலீசார் கைப்பற்றினால் அவர்களைப் பிடித்து வழக்குகள் போடுவதை விட்டுவிட்டு அதை அங்கேயே அழித்துவிட வேண்டும் என்ற நிலையை உருவாக்க வேண்டும். போலீஸ் நிலையங்களில் மதுவிலக்கு வழக்குகள் பதிவு செய்யப்படுவதை மாற்றியமைத்தல் வேண்டும். இது நாட்டுக்கு தேவைப்பட்ட ஒன்றாகும். வருவாயும் பெருகும், குடிப்பவர்களும் குடிப்பார்கள், குடிக்காதவர்கள் குடிக்காமல் இருக்கவும் உதவும்.

அடுத்து, இங்கே உலகத் தமிழ் மாநாடு பற்றி பலர் பலவித கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் ஏற்கனவே சொல்லியிருக்கிறார்கள். எதிரி உன்னைப் பாராட்டினால் நீ பாதை தவறிச் செல்கிறாய் என்று பொருள். நண்பர்கள் கண்டித்தால் நீ திசை மாறிச் செல்கிறாய் என்று பொருள். விரோதிகள் திட்டினால் நீ நேர்வழியில் செல்கிறாய் என்று பொருள் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்நிலையில் இன்றையதினம் எதிரிகளாக தங்களை உருவாக்கிக் கொண்டவர்கள் திட்டுகிறார்கள் என்பதற்காக நாங்கள் வருந்தப்படவில்லை. மாறாக மகிழ்ச்சியடைகிறோம். இப்போதுதான் நாங்கள் நல்லவழியில் நேர்வழியில் சென்று கொண்டிருக்கிறோம் என்பதற்கு அண்ணா அவர்கள் சொல்லியிருப்பது போல் நற்சான்று வழங்கியிருக்கிறார்கள்.

[டாக்டர் கே. சமரசம்] [1981 ஜனவரி 24]

மதுரையைப் பொறுத்த வரையில் உலகத் தமிழ் மாநாடு நடத்தியதில் அதை "ஏதன்ஸ்" போல் மாற்ற வேண்டும் என்ற வகையில் அமைந்திருந்தது. மதுரையில் நடந்த உலகத் தமிழ் மாநாட்டைப் பற்றி பலர் பல விமர்சனங்களைச் செய்திருக்கிறார்கள். இனிமேல் ஒரு உலகத் தமிழ்ச் சங்கம் அமையுமா என்று சொல்லும்போது அது ஏன் அகில உலக எம். ஜி. ஆர். சங்கமாக அமையக் கூடாது என்ற கருத்தும் சொல்லப்பட்டிருக்கிறது. புரட்சித் தலைவர் அவர்களைப் பற்றி நாங்கள் மட்டும் புகழ்ந்து சொல்லவில்லை. நான் வட நாடு சென்றிருந்தபோது மகாராஷ்டிராவில் ஒரு பத்திரிகை வாங்கினேன். அது ஆந்திராவிலிருந்து வரக்கூடிய ஒரு தெலுங்குப் பத்திரிகை. அந்தப் பத்திரிகையில் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களைப் பற்றிச் சொல்லியிருக்கக்கூடிய ஒரு கருத்தை இந்த மன்றத்தின் முன் வைப்பதன் மூலம் அவர் தமிழ் இனத் தலைவர் என்பது ஆதாரத்தோடு தெரியவரும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : நேற்று நாங்கள் படிக்கும்போது 'அலவ்' செய்யாதபோது இப்போது மட்டும் அவர்கள் பத்திரிகையிலிருந்து படிப்பதை எப்படி 'அலவ்' செய்யலாம்.

I cannot allow such things to go on record.

டாக்டர் கே. சமரசம் : இது குற்றச்சாட்டு அல்ல, ஆதாரம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் சமரசம், முதலிலே தாங்கள் அவைத் தலைவரின் அனுமதியைப் பெற்றுக்கொண்டு இதைப்பற்றிப் பேசவேண்டும். இப்போது கொண்டுவரக் கூடாது. இந்த மாதிரி கொண்டுவந்தால், மற்றவர்களும் கொண்டுவருவார்கள். எனவே, அதைப் படிக்கவேண்டாம்.

டாக்டர் கே. சமரசம் : பத்திரிகையிலே வந்ததைப் படிக்காமல் அதன் கருத்தைச் சொல்கிறேன். அண்ணா அவர்கள் வழிவந்த புரட்சித் தலைவர் அவர்களைப் பற்றி மற்ற மாநிலத்திலே இருக்கக் கூடியவர்கள், தமிழகத்திலே இருக்கக் கூடியவர்கள் அல்ல, ஏதோ சினிமா மாயையில், மற்ற நண்பர்கள் ஏதோ சினிமா ரசிகர்கள் என்று சொல்வார்களே, அப்பேர்ப்பட்டவர்கள் அல்ல, வெளி மாநிலத்தைச் சேர்ந்த ஒரு மீனவப் பெண்மணி சொல்கிறார். அந்த மீனவப் பெண்மணி புரட்சித் தலைவர் அவர்கள், எம்.ஜி.ஆர். அவர்கள் தேர்தலிலே வெற்றி பெற்றால் அவரது உருவத்தை 40 கிலோ எடையுள்ள மெழுகு வர்த்தியை கோவிலிலே ஏற்றுவதாகப் பிரார்த்தனை செய்து கொண்டார்.



எம். ஜி. ஆர். அவர்கள் தமிழகத்தின் தலைவர் என்பதை ஒப்புக்கொண்டு, அப்படிப்பட்ட 40 கிலோ எடையுள்ள மெழுகு வர்த்தியை, செப்டம்பர் மாதத்தில் ஊர்வலமாக எடுத்துச் சென்றார். அப்படி எடுத்துக்கொண்டு சென்று, அதை கோவிலிலே ஏற்றி வைத்திருக்கிறாள். அது இன்னும் அணையாமல் எரிந்துகொண்டிருக்கிறது. அவர் மீண்டும் முதல்வராக வரும் வரை அணையாமல் இருக்கும் என்ற செய்திகள் இருக்கிறது. அப்படி அது இன்னும் அணையாமல் இருக்கின்றது என்று சொன்னால், அவருடைய பெருமையைப் பற்றி, இந்தத் தமிழகத்திற்கு தானைத் தலைவனாகக்கூடிய தகுதி அவருக்கு உண்டு என்பதைப் பற்றி மற்றவர்கள் சொல்வதை இங்கே உதாரணமாக வைக்கிறேன். அது மட்டுமல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒதுக்கிய நேரத்திற்கு மேலாகிவிட்டது. சீக்கிரம் முடியுங்கள்.

டாக்டர் கே. சமரசம் : உலகத் தமிழ் மாநாட்டைப் பற்றிச் சொல்லுகின்றபோது, இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் நடந்த பல பாடங்களை, படிப்பினைகளை வைத்துக்கொண்டு, இந்த ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டை மதுரையில் சிறப்பாக நடத்தியிருக்கிறோம். அந்தப் படிப்பினையை வைத்துத்தான் அடிப்படைத் தேவைகளைக் கருதி பல கோடி ரூபாய், இதற்காக செலவழித்திருக்கிறோம். இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின்போது அலங்கார வண்டிகள் சில தனிப்பட்டவர்கள் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டது. அதனால் சில சங்கடங்கள் வந்தது. 5 ரூபாய் செலவழித்துவிட்டு, 50 ரூபாய் நலன் தேடக்கூடிய நிலையெல்லாம் ஏற்பட்டது. அப்படிப்பட்ட ஒரு நிலைமையையெல்லாம் கருதித்தான் அரசே இந்தப் பொறுப்பை ஏற்று நடத்துவதென்று முடிவுக்கு வந்து, இந்தத் தமிழ் மாநாட்டினை நடத்தினார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மதுரை உலகத் தமிழ் மாநாட்டின் போது, படித்தவர்களுக்கு அல்லாது, புலவர்களுக்கு அல்லாது, கவிஞர்களுக்கு அல்லாது, அங்கே இருக்கக்கூடிய மற்ற பாமர மக்களுக்கும் மொழி, கலாச்சாரம், பண்பாடு, நாகரீகம் என்ன என்பதை எடுத்துக்காட்டத்தக்க வகையில் இந்த உலகத் தமிழ் மாநாடு அமைந்தது. அதுமட்டுமல்ல. கொடுக்கப்பட்ட விளம்பரங்கள் எல்லாக் கட்சிகளுக்கும், பத்திரிகைகளுக்கும் கொடுக்கப்பட்டது. கூட்டம் கூட்டமாக அங்கே எவ்வளவோ லட்ச மக்கள் வந்ததால், எந்தப் பத்திரிகைகளிலும் ஒழுங்காக கணக்கிட்டு எழுத முடியவில்லை. எவ்வளவோ லட்சம் மக்கள் அங்கே வந்தாலும், ருசி குறையாது எல்லா ஓட்டல்களிலும் விலை ஏறாது, அதே விலைக்கு உணவுப் பண்டங்கள் வழங்கப்பட்டன. அதை மறந்துவிட முடியாது என்று பலர் சொன்னார்கள்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** பேரவைத் தலைவர் அவர்களே, பேசலாம் என்றால் அதற்கும் கூடப் பதிலளிக்கத் தயாராக இருக்கிறேன். 60 சதவிகிதம் மார்க் வாங்கியவர்கள் மனுப் போடலாம். இண்டர்வியூவில் 75 மார்க்குகளுக்கு எவ்வளவு வாங்கியிருக்கிறார்கள் என்பதையும் அவர்கள் எடுத்த மார்க்கோடு சேர்த்து பட்டியல் போட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி விளக்கும்போது தற்போது வழக்குப் போட்டிருப்பவர்கள் பிரச்சினையையும் கொண்டு வரவேண்டியிருக்கிறது. அந்தப் புள்ளி விவரங்களையும் கொண்டு வரவேண்டியிருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் எந்த நேரத்திலும் விளக்கத் தயாராக இருக்கிறேன். இதிலே எந்தவிதமான ஊழலும் நடைபெறவில்லை என்பது என்னுடைய வாதம். பேசுகிற நேரத்திலே எல்லா மார்க்குகளும் வரும். வழக்கு இருக்கும் நேரத்தில் பேசுவது மரபல்ல. பேசலாம் என்றால் அதற்கும் தயாராக இருக்கிறேன்.

**திரு. க. அன்பழகன் :** திரு. ரகுமான்கான் அவர்கள் எழுப்பிய பிரச்சினை நீதிமன்றத்தில் உள்ளது அல்ல. ஆனால் நான் உறுப்பினருடைய பேச்சின் நோக்கத்தை மட்டும் சொல்லுகிறேன். தகுதியான மார்க் வாங்கியவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை என்ற குறையைச் சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் முறைகள் என்ன என்பதைத் திரும்பத் திரும்பச் சொல்லுகிறார்கள். அவர்கள் சொல்லக்கூடிய கருத்தாக, எண்ணக்கூடியது அப்படி எந்தக் குழு தேர்ந்தெடுக்கிறதோ, முறைப்படிதான் செய்திருக்கிறார்கள் என்று நாங்கள் கருதுகிறோம் என்றுதான் சொல்லுவதாக இருக்கிறதே தவிர வாதிக்கலாமா, வாதிக்கக்கூடாதா என்ற பிரச்சினைக்கு அமைச்சர் அவர்கள் பதிலாக அமைந்துவிடக் கூடிய ஒன்று. நீதிமன்றத்திற்குள் போகிற பிரச்சினை அல்ல. ஆகவே, இந்தப் பிரச்சினை எழுப்பக் கூடாத பிரச்சினை, வேறு எங்கோ போய்விடும் என்று கருத முடியாது, அந்த ஐயுறவு தேவையில்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** அடிப்படையாக தியரியில் எவ்வளவு மார்க் வாங்கியிருக்கிறார்கள் என்று சொல்லவேண்டும். வைவா வோசியில் எவ்வளவு மார்க் வாங்கியிருக்கிறார்கள் என்று பட்டியலைக் கொண்டு வந்து படிக்கவேண்டும். பட்டியலைப் படிக்கிற நேரத்திலே அதிலே சம்பந்தப்பட்ட எல்லோருடைய பெயர்களும் வரும். அதைப் படிப்பதிலே எனக்கு ஒன்றும் கஷ்டம் கிடையாது. நான் அதைச் சொன்னால், சொன்னவுடனேயே திரு. ரகுமான் கான் அவர்களுக்கே கூட மன நிறைவை அளிக்கக்கூடிய புள்ளி விவரமாக அது இருக்கும் என்று நான் நினைக்கிறேன். தியரியில் இவ்வளவு மார்க் வாங்கினார்கள், வைவா வோஸியிலே இவ்வளவு மார்க் வாங்கினார்கள் என்ற விவரத்தை எல்லாம் சொல்ல வேண்டியிருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன். அது சப்ஜூடிஸ் ஆக இருக்கிறது.



**திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அவ்வளவு ஆர்வமாக இருந்து, அந்தப் பட்டியலை இங்கே சொல்லவேண்டும் என்று சொல்கிறார்கள். நீதி மன்றத்திலே வழக்கு இருக்கிற காரணத்தினால் சொல்லமுடியவில்லை என்று சொல்கிறார்கள். நீதி மன்றத்திலே இருக்கிற வழக்கு முடிந்ததற்குப் பின்னால் அந்தப் பட்டியலைச் சட்டமன்றத்திலே வைப்பதாக சொன்னால் யார் என்ன பேசினார்களோ அவர்களுக்கு தகுந்த பதில் தானே கிடைக்கும்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** நீதி மன்றத்திலே இருக்கிற வழக்கு முடிந்ததற்குப் பிறகு, திரு. ரகுமான்கான் கேட்ட கேள்விக்கும் விரிவான பதிலை புள்ளி விவரத்தோடு நான் தர தயாராக இருக்கிறேன் என்ற வாக்குறுதியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** தலைவர் அவர்களே, 5, 6 பெயர்களைச் சொல்லி அவர்கள் எடுத்திருக்கிற மார்க்குகளைச் சொல்லியிருக்கிறார்கள். ஓரலில் இவ்வளவு மார்க், ரிட்டனில் இவ்வளவு மார்க் என்று இருப்பதைக் கூட்டி கணக்கிடுகிறபோது 120 மார்க் ரிட்டனில் வாங்கி 35 மார்க் ஓரலில் எடுத்திருந்தால் மொத்தம் 155 ஆகிறது, அதே நேரத்திலே ரிட்டனில் 125 மார்க்கும் ஓரலில் 25 மார்க்கும் எடுத்திருந்தால் அவருக்கு இடம் இல்லாமல் போனதற்கு சான்ஸ் இருக்கிறது. கோர்ட்டிலே இருக்கிறபோது ஓரலில் இவ்வளவு மார்க் வாங்கினார்கள் என்று சொல்கிறபோது, ஓரலில் ஒழுங்காகச் சொன்னார்கள், மார்க் போடப் படவில்லை என்று சொல்வது, கோர்ட்டிலே சொன்னதற்குப் பிறகு சொல்லமுடியுமே தவிர, அதற்கு முன்னாலேயே ஊழல் இருக்கிறது என்று சொல்லமுடியாது. பத்திரிக்கையிலே விளம்பரத்திற்காக, ஏதோ குறைத்து வாங்கியவருக்கு இடம் கிடைத்து இருக்கிறது. கூடுதலாக வாங்கியவருக்கு விட்டுப்போய்விட்டது என்று பத்திரிக்கையிலே வருகிறபோது தவறு நடந்திருக்கிறது என்ற ஒரு பிரமையை வெளியே உண்டாக்கக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே அவர் சொன்ன டிடெய்ல்ஸ் பத்திரிக்கையிலே வருவது சரியல்ல என்பதைத் தெரிவித்து தலைவர் அவர்கள் அது பற்றி முடிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி :** பத்திரிக்கை செய்தியாக வரும் என்று பயப்படுகிறார்கள் அல்லது பத்திரிக்கையிலே தவறான செய்தி வரும் என்று எண்ணுவார்களேயானால் கிட்டத்தட்ட 50-க்கும் மேற்பட்ட மாணவர்கள் வழக்கு மன்றத்திற்குப் போய் இருக்கிறார்கள். அது பத்திரிக்கையிலே செய்தியாக வந்திருக்கிறது. தகுதியுடையவர்களுக்கு இடம் அளிக்கப்படவில்லை. தகுதியற்றவர்களுக்கு இடம் அளிக்கப்பட்டிருக்கிறது

என்று 50-க்கும் மேற்பட்ட மாணவர்கள் தமிழ்நாட்டின் சரித்திரத்திலேயே இல்லாத அளவுக்கு 50-க்கும் மேற்பட்ட மாணவர்கள் வழக்கு மன்றத்திற்கு சென்றிருக்கிறார்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல் அதற்கு நம்முடைய பேராசிரியர் அவர்கள் கேட்டுக்கொண்டதைப் போல் நீதி மன்றத்திலே வழக்கு முடிந்த பிறகு கூட அல்ல, மொத்தப் பட்டியலை இப்போதே கூட இந்த அவையிலே வைத்தால் எல்லோருக்கும் புரியும்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வரலாற்றில் இல்லாத அளவுக்கு கேஸ் இருக்கிறது என்று சொன்னார்கள். கோர்ட்டிலே வழக்குப் போட்டவுடனே குற்றச்சாட்டு நிரூபிக்கப்படுமா என்பதிலே (குறுக்கீடு) நான் தலைவரின் அனுமதியோடு பேசிக்கொண்டிருக்கிறேன், பேசி முடித்து விடுகிறேன், கோர்ட்டிலே வழக்கு இருக்கிறது என்பதற்காக ஏராளமான வழக்குகள் இருக்கின்றன என்பதற்காக குற்றம் நடந்திருக்கிறது என்று அதனுடைய அடிப்படையிலே சொல்வது நியாயமாக இருக்காது என்ற கருத்தை பெருமதிப்புக்கு உரிய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆகவே அந்த விவாதத்திற்குள் நுழையாமல் எந்த நேரத்திலேயும் அந்தப் பிரச்சினைக்குப் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன், அந்த வாய்ப்பு வரும்போது, கோர்ட்டில் வழக்கு முடிந்ததற்குப் பிறகு இந்தக் கேள்விகளை எழுப்பினால் அதற்குச் சமாதானம் சொல்லத் தயாராக இருக்கிறேன். எந்த வகையிலேயும் ஊழல் நடைபெறவில்லை என்பது தான் என்னுடைய வாதம். ஊழல் நடைபெற்று இருக்கிறது என்று யாராவது வர்திட்டால் அதற்கு நான் சரியான பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று காலையிலே வினா-விடை நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர், திரு வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்கிறபோது ** என்று கேட்க அதன் விளைவாக பல விளைவுகள் ஏற்பட்டு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னது வரையில் சம்பவங்கள் நடந்தன. சில பகுதிகளை நீக்கவேண்டுமென்பதற்காக, அந்தப் பகுதியை நான் படித்துப் பார்த்துவிட்டு சொல்கிறேன் என்று சொல்லி இருக்கிறேன். ஆகவே அதையெல்லாம் பார்த்தபிறகு ** என்பதையும் (குறுக்கீடு).

[முற்பகல் 11-30]

This is an insinuation அந்தக் கேள்வியிலேயிருந்துதான் எல்லாம். எனவே, திரு. வி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கேட்ட ** என்ற அந்தப் பகுதியும் நீக்கப்படுகிறது

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



அடுத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலிலே கூறப் பெற்ற ** என்ற பகுதியும் நீக்கப்படுகிறது.

அடுத்து. எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்கள் கூறிய கருத்தில், ** என்பது வரையில் நீக்கப்படுகிறது.

மற்றபடி யார் மீதும் எந்தக் குற்றச்சாட்டும் இல்லாமல் இருக்கிறது.

**திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, தங்களுடைய நோக்கத்தில் நான் மாறுபடவில்லை; எல்லாவற்றையும் நீக்கலாம். இடையிலே நான் வருகின்ற இடம் அது ஒன்றுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவருடைய பேச்சில் பாதியை வைத்துவிட்டு மீதியைத்தான் நீக்குகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவரவர்கள் நியாயப்படுத்தி ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அது எல்லா நேரத்திலும் எல்லோருக்கும் பொருந்தக்கக்கூடிய கருத்து. அதை அப்படியே வைத்துவிட்டு, மற்றவற்றை மட்டும் நீக்கிவிடுகிறேன்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** என்னுடைய கேள்வி இருக்கிறதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றாக, அழகாக இருக்கிறது.

## ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் தொடர்ச்சி.

**திரு. கே. எம். தங்கமணி கவுண்டர்:** மரியாதைக்குரிய மாமன்றத் தலைவரவர்களே, இந்த தமிழகச் சட்டமன்றத்தில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின் மீது நடைபெறுகின்ற விவாதத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் சார்பிலே ஒரு சில கருத்துக்களை நான் எடுத்து வைக்க விரும்புகிறேன்.

கவர்னர் உரையிலே உலகத் தமிழர் மாநாடு நடைபெற்ற விதத்தைப் பற்றிச் சுட்டிக் காட்டும் வகையில், தலைமையமைச்சர் அவர்கள் இந்தி மொழி எத்தகைய நிலையிலும் திணிக்கப்படமாட்டாது என்று கூறிய கருத்தை எடுத்துக் காட்டும் வகையில், ''வலுக்கட்டாயமாக இந்தி திணிக்கப்படமாட்டாது என்று உறுதியளித்தார். தமிழ் நாட்டின் மீது ஒருபோதும் இந்தி திணிக்கப்படமாட்டாதென்று மறைந்த பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் அளித்த உறுதி மொழியை மீண்டும் வலியுறுத்திக்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

கூறியதற்காகத் தமிழ்நாடு அரசும், மக்களும் இந்தியத் தலைமை அமைச்சர் அவர்களுக்கு மிகவும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.'' என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அதற்கு நான் நன்றி செலுத்தக் கடைமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் நீண்ட நெடுங்காலமாகத் தமிழ் நாட்டிலே, மத்திய சர்க்கார் இந்திராகாந்தி இந்தியைத் திணிக்கிறார் என்ற மாயையை, பிரமையைச் சித்தரித்த காலம் உண்டு; ஆனால், இன்றைய தினம் ஆளுகின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடத்தப்பட்ட உலகத் தமிழர் மாநாட்டில் இந்த நாட்டின் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் அளித்த வாக்குறுதியை நினைவூட்டி ஆளுநர் உரையில் அதற்காக நன்றி சொல்லியிருப்பதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் இந்த நாட்டினுடைய பிரதமராக இருந்த நேரத்தில், 1965-ஆம் ஆண்டுக்குப் பின்னால் இந்த நாட்டிலே இந்திதான் ஆட்சிமொழியாக வரக்கூடும் என்று அரசியல் சட்டம் இருந்த நேரத்தில், அன்றையதினம் தன்னுடைய வெண்கலக் குரலால் பாராளுமன்றத்தில் சொல்லின் செல்வர் திரு. சம்பத் அவர்கள் கூறிய நேரத்தில், அன்றையதினம் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் தமிழ் மக்கள் விரும்பும் வரையில் ஆங்கிலம் நீடிக்கும்; இந்தி ஒரு போதும் திணிக்கப்பட்ட மாட்டாது என்ற வாக்குறுதியை தன்னுடைய புனிதக் கரத்தால் எழுதித் தந்திருக்கிறார்கள் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

நேற்றைய தினம் இங்கே பேசிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நண்பர் ஒருவர் பேசியபொழுது, உலகத் தமிழர் மாநாட்டைப்பற்றிப் பேசியபொழுது, ஏதோ மத்திய ஆதிக்கச் சக்திகள் வருவதாகவும், இந்த மாநிலத்தில் இந்தி மொழி திணிக்கப்படுவது போன்ற பிரமையை ஏற்படுத்தினார்கள்; அது எவ்வளவு தவறு என்பதற்கு விளக்கமாக ஆளுநர் உரையில் இதுபற்றிச் சொல்லியிருப்பதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகத் தமிழர் மாநாட்டிலே இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் பேசினார்கள். அதோடு இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். உலகத்திலே தொழிலாளி—பாட்டாளி மக்கள் அமைத்திருக்கின்ற சோஷலிச சுப்ரீம் சோவியத் நாட்டிலே பிரதமர் அவர்கள் ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்று சொல்லி, இந்திய தேசிய ஒருமைப்பாட்டுத் தத்துவத்தை மட்டுமல்ல, உலக ஒருமைப்பாட்டுத் தத்துவத்தை, தொன்மை வாய்ந்த தமிழை அந்தச் சிறப்பை சுப்ரீம் சோவியத் நாட்டிலே சொல்லியிருக்கிறார்கள் என்பதை நான் சொல்ல வேண்டும்.





ஆனால் ஒன்று, மாநாட்டை நீங்கள் சிறப்பாக நடத்தியிருக்கின்றீர்கள். மாநாட்டிலே சட்டம் ஒழுங்கு சீர்குலையவில்லை. நான் நன்றி செலுத்துகின்றேன். ஆனால், அந்த மாநாட்டிற்காக செலவிடப்பட்டிருக்கிற தொகை ரூ. 12 கோடி என்று சொல்லப் படுகிறது. அப்படிச் செலவிடப்பட்டிருக்கிற பணம் ஒழுங்காக, முறையாக, செலவிடப்பட்டிருக்கிறதா என்பது ஐயக்குறி, மிகப் பெரிய கேள்விக் குறியாகத்தான் இன்றைய தினம் தமிழக மக்கள் மனதிலே இருக்கிறது. ஆகவே, மிகுந்த வினயத்துடன் உங்களைக் கேட்டுக் கொள்ள நான் ஆசைப்படுகிறேன், நீங்கள் எப்படி இந்தப் பணத்தைச் செலவழித்தீர்கள் என்பதை பப்ளிக் அக்கவுன்ட்ஸ் கமிட்டியிலோ, அல்லது எஸ்டிமேட்ஸ் கமிட்டியிலோ, அல்லது தமிழக சட்டமன்றத்திலோ இருக்கிற அனைத்துக் கட்சி—சர்வ கட்சி—தலைவர்கள் கொண்ட கமிட்டி கூட்டத்திலோ அதை வைத்து பரிசீலிப்பதற்காக வாய்ப்பளிக்கும் வகையில் நீங்கள் அவற்றை வைக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

உலகத் தமிழ் மாநாட்டை நீங்கள் நடத்தினீர்கள். நான் சொல்வதனாலே யாரும் வருத்தப்பட மாட்டார்கள் என்று கருதுகிறேன். உலகத்திலேயே கெத்துப்போன மொழி சமஸ்கிருதம் என்று சொல்வார்கள். அந்தச் சமஸ்கிருத மொழிக்குக் கூட உயிர் தருவதற்கான முயற்சிகள் இன்றைய தினம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால், நீங்கள் நடத்திய உலகப் பெரும் மாநாட்டில், அந்தத் தமிழ் மாநாட்டில், தமிழை நவீன மொழியாக்குவதற்காக, விஞ்ஞான ரீதியாக ஆக்குவதற்காக, ஏதேனும் தயாரிப்புகள் உண்டா? முயற்சிகள் உண்டா? ஏதேனும் நடவடிக்கை எடுத்தீர்களா? ஒன்றும் இல்லையாது. மிகப் பெரிய சித்திரை விழா, மிகப் பெரிய, பிரம்மாண்டமான கும்பமேளா விழாவைப் போல் கூடினோம், கலைந்தார்கள் என்ற நிலைமைதான் இருந்திருக்கிறதே தவிர, தமிழை நவீன மொழியாக, விஞ்ஞான ரீதியாக ஆக்குகின்ற வகையிலே அந்த மாநாடு அமையவில்லை என்பதற்கு என்னுடைய வருத்தத்தைத் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தை ஆண்ட முதுபெரும் தலைவராக இருந்த முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் காலத்திலேதான் தமிழ் பயிற்சி மொழியாக்கப்பட்டது என்பதை உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர ஆசைப்படுகிறேன். அவருடைய காலத்திலேதான் உலகம் போற்றுகின்ற தமிழ்க் கலைக் களஞ்சியம் இந்தத் தமிழகச் சட்டமன்றத்திலே கொண்டு வரப்பட்டது. அதையாவது நீங்கள் புதுப்பித்திருக்கக் கூடாதா? அந்த மாநாட்டின்பொழுது அதைப் புதிப்பித்தீர்களா என்றால் இல்லை என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

[திரு. கே. எம். தங்கமணிகவுண்டர்] [1981 ஜனவரி 24

இன்றையதினம் புதிதாக சொல்வதைப் போல் ஒன்றை சொல்கிறார்கள். அன்றைய தினம் நீங்கள் சொன்னீர்கள். தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்று நாங்கள் துவங்க இருக்கிறோம் என்று சொன்னீர்கள். அந்தத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் பணி என்ன? அதனுடைய பொறுப்புகள் என்ன? அதனுடைய கடமைகள் என்ன? அது எதற்காக அமைக்கப்படவிருக்கிறது என்பதை அன்றைய தினம் சொன்னீர்களா? இன்றைய தினம் புதியதாக உலகத் தமிழ்ச் சங்கம் ஒன்றை உருவாக்கப் போகிறேன், அதற்குத் தலைவர் என்ற முறையில் மந்திரிக்கு என்ன அந்தஸ்து உண்டோ அந்த அந்தஸ்தைத் தரப் போகிறேன் என்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார். இந்த நேரத்திலே எனக்கு ஒரு அச்சம். தமிழகச் சட்ட மன்றத்திலே இடம் பெற முடியாத யாரோ ஒருவருக்கு அப்படி தலைவர் அந்தஸ்தைக் கொடுத்து, மந்திரி அந்தஸ்தை உருவாக்குவதற்காக ஓர் இடத்தை ரிசர்வ் செய்திருக்கிறார்களோ, என்னவோ, என்னாலே புரிந்து கொள்ள முடியவில்லை. அந்த உலகத் தமிழ்ச் சங்கம் என்ன செய்யப் போகிறது? உலகம் முழுவதும் உள்ள தமிழர்களைச் சேர்த்து வைக்கப் போகிறேன் என்று சொல்கிறீர்களே, அது என்ன செய்யப் போகிறது? அப்படியானால் தமிழ் பல்கலைக் கழகத்தின் பொறுப்புகள் என்ன? அது வேறா, இது வேறா? அதனுடைய பொறுப்புகள் என்ன என்பதை இந்த நேரத்திலே உங்களிடத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று இன்றைய தினம் நீங்கள் சொல்கிறீர்கள். அதற்கு நான் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆனால், அதே நேரத்திலே, கவர்னருடைய பெயராலே, வருகிற அவசரச் சட்டங்களையும், சர்க்கார் கெஸட்டையும் இன்றைய தினம் ஆங்கிலத்திலே வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்களே, அதை முதலிலே தடுத்து நிறுத்துங்கள். உடனடியாக அதைத் தமிழிலே வெளியிடுவதற்கான முயற்சிகளை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்.

விவசாயிகள் பிரச்னையைப் பொறுத்தவரை, குவிண்டால் நெல்லின் விலையை ரூ. 115 ஆக உயர்த்தித் தந்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். மகிழ்ச்சி. இன்னும் உயர்த்த வேண்டுமென்பதற்காக விவசாயிகள் போராடுகிறார்கள். ஆனால், மத்திய சர்க்கார் உயர்த்தித் தரவில்லையென்று சொல்கிறீர்கள். சட்டமன்றத்தில் உள்ள நாங்கள் மட்டுமல்லாது பாராளுமன்றத்தில் உள்ள எங்கள் கட்சி உறுப்பினர்களும் சேர்ந்து பிரதமர் இந்திரா காந்தியின் முன்னாலே, இன்றைய தினம் உள்ள நிலையைச்சொன்னதற்குப்பின்னாலே நெல்லின்விலையை உயர்த்த வேண்டுமென்பதற்காக, விவசாய உற்பத்திக் கமிஷன் என்ற ஒன்றைப் போட்டுள்ளது மத்திய அரசு. அதிலே, 18 பேர்—பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட உறுப்பினர்களாக உள்ளனர்



1981 ஜனவரி 24] [திரு. கே. எம். தங்கமணி கவுண்டர்]

என்பதை இந்த நேரத்திலே நான் நினைவுபடுத்த ஆசைப்படுகிறேன். ஆனால், ஒன்று, விலையை உயர்த்தி விடுவதனால், செல்வந்தர்கள், பணக்காரர்கள், இலாபம் பெறுவார்களே தவிர, சிறு உழவர்கள், வாங்கிச் சாப்பிடுபவர்கள் ஏதாவது பலன் பெறுவார்களா என்றால், நிச்சயமாக அவர்கள் பெற மாட்டார்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகவே, தமிழகத்தை ஆளும் பொறுப்பை ஏற்றிருக்கிற நீங்கள் சிறு விவசாயிகளுடைய வாங்கிச் சாப்பிடுபவர்களுடைய நலனைக் கருதி, விவசாய இடு பொருள்களான உரம், பூச்சி மருந்து, தரமான விதை, மற்றும் அது சம்பந்தப்பட்ட பொருள்களையெல்லாம் அதிகமாக, மானியமாக தமிழக அரசின் சார்பிலே நீங்கள் ஏன் தரக் கூடாது என்று இந்த நேரத்திலே நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

குறைந்த பட்ச கூலி நிர்ணயம் சட்டத்தை ஒவ்வொரு பிளாக் லெவலிலும் அமுல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்

மின் கட்டணம், 1 பிளஸ் 1 என்ற திட்டத்தை தமிழக அரசு விவசாயப் பிரதிநிதிகளை, அரசியல்வாதிகளை வைத்துப் பேசி, ஒத்துக் கொண்ட ஒன்று எங்களுடைய கட்சியின் சார்பிலே அதை ஆதரிக்கிறோம் அந்த முடிவை நீங்கள் நவம்பர் மாதத்தில் எடுத்திருக்கிறீர்கள்.

[முற்பகல் 11-40]

ஆகவே, நீங்கள் நவம்பர் மாதத்தில் எடுத்து வைத்திருக்கிறீர்கள். நவம்பர், டிசம்பர், ஜனவரி ஆகிய 3 மாதங்கள் ஆகி இருக்கின்றன. எனவே 3 பிளஸ் 3 என்று மூன்று மாதங்களுக்கும் சேர்த்துக் கொடுக்க வேண்டும் என்று திட்டத்தைக் கொண்டு வந்தால் விவசாயிகள் கொதித்து எழுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னொன்று மின்சார வாரியத்தில் தோராயமாக பில்களைப் போடுகிறார்கள். அது மிக தவறான காரியமாகும். எவ்வளவு மீட்டர் ஓடுகிறதோ அதன்படி பில் போடுங்கள். கட்டுவதற்குத் தயாராக இருக்கிறோம். அதே நேரத்தில் நாராயணசாமி நாயுடு சங்கத்தால் நடைபெறுகின்ற விவசாய போராட்டத்தை நாங்கள் ஆதரிக்கிறோமா என்றால், நிச்சயமாக ஆதரிக்கவில்லை. பாதைகளை மறிப்பதும், பாலங்களைத் தகர்ப்பதும், பாலிலே உப்பைக் கொட்டி பாழாக்குவதும் நிச்சயமாக நாங்கள் ஆதரிக்கவில்லை. ஆனால் அதே நேரத்தில் தேர்தல் காலங்களில் தமிழகத்தின் முதல் அமைச்சர் அவர்கள், மாண்புமிகு மரியாதைக்குரிய முதல் அமைச்சர் அவர்கள், தேர்தல் நேரத்தில் அவர்களுக்கு என்ன வாக்குறுதிகளைக் கொடுத்தார்களோ அவைகளை நிறைவேற்ற வேண்டாமா? அவைகளை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

தமிழ்நாட்டிலே இன்றைக்கு விவசாயிகள்மீது துப்பாக்கிச் சூடு நடைபெற்றிருக்கின்றது. 7, 8 பேர்கள் இறந்து போயிருக்கிறார்கள். காவல் துறையிலும் ஒருவர் இறந்து இருக்கிறார். அதற்காக ஒரு ஆழ்ந்த அஞ்சலி, ஆறுதல் வார்த்தை இந்த கவர்னர் உரையில் சொல்லப்படவில்லை. அதற்காக நான் வருத்தப்படுகிறேன். அப்படி துப்பாக்கிச் சூட்டிலே இறந்தவர்களுக்கு முதலமைச்சர் அவர்களுடைய நிதியில் இருந்து ஏதாவது மானியம் தர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டு கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழ்நாட்டில் வறட்சிப் பகுதி என்று, புதுக்கோட்டை, வட ஆற்காடு மாவட்டங்கள் அறிவிக்கப்பட்டு இருக்கின்றன. ஏன் இந்தப் பகுதிகளை மட்டும் இவ்வாறு அறிவித்திருக்கிறார்கள். ஒரு வேளை அமைச்சர் வீரப்பன் இருப்பதாலா அல்லது உங்களுடைய பொதுச் செயலாளர் இருப்பதாலா என்பதை என்னாலே புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் ஒன்று எங்கள் மாவட்டம் கூட வறட்சியானதுதான் பண்ருட்டி பகுதி எல்லாம் வறட்சியாக இருக்கிறது. எனவே மாண்புமிகு பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்கள் இருக்கிற மாவட்டத்தை வறட்சிப் பகுதியாக அறிவிக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கோ. விஸ்வநாதன் : தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் பேசும்போது வட ஆர்க்காடு மாவட்டத்தை வறட்சிப் பகுதியாக அறிவித்ததைப் பற்றி ஒரு தவறான கருத்தைச் சொல்லி இருக்கிறார்கள். அதை அவ்வாறு அறிவித்தது பொதுச்செயலாளர் இருக்கிறார் என்பதற்காக அல்ல. உண்மையிலேயே வறட்சி ஏற்பட்டு குடிக்கக்கூட தண்ணீர் கிடைக்காத நிலையில் அரசாங்கம் அவ்வாறு அறிவித்திருக்கிறது. எனவே உண்மை இவ்வாறிருக்க தவறான கருத்தை உறுப்பினர் சொல்லி இருக்கவேண்டாம்.

திரு. கே. எம். தங்கமணி கவுண்டர் : வட ஆற்காடு மாவட்டத்தைவிட தென்னார்காடு மாவட்டம் வறட்சியாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் உங்கள் கருத்தைச் சொல்லி இருக்கிறீர்கள். அவர் அவருடைய கருத்தைச் சொல்லியிருக்கிறார். இரண்டும் இருக்கட்டும். (மணி அடிக்கப்பெற்றது.)

திரு. செ. செம்மலை : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. விசுவநாதன் அவர்கள் மொழிந்துள்ள கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின் மீது என்னுடைய கருத்தையும் சொல்ல அனுமதி அளித்த தங்களுக்கு நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.





இங்கே இந்த மாமன்றத்திலே பேசிய உறுப்பினர்கள் இந்த தீர்மானத்தின் மீது தங்களுடைய கண்ணோட்டத்திற்குத் தகுந்தாற்போல் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். நல்ல உள்ளம் படைத்தவர்கள் அதைப் பாராட்டி வரவேற்றிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் ''யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே'' என்பதைப்போல, எதிர்காலத்தில் வரவிருக்கிற நல்ல திட்டங்களுக்கு இது ஒரு முன்னறிவிப்பாகவும், நல்ல கருத்துக்கள் அடங்கிய நல்ல புத்தகத்துக்கு ஒரு முன்னுரையாகவும், இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கிறது என்றால் அது மிகையாகாது.

இங்கே சொல்லப்பட்டிருக்கும் திட்டங்களுக்குள் ஒரு மகுடத்தில் பதித்த வைரம் போல் ஒளிவிடும் திட்டம்—ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கும் திட்டம்—வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என்ற திட்டமாகும். இந்தத் திட்டம் புரட்சிகரமான ஒரு திட்டமாகும். இதுவரையில் எந்த அரசும் செய்யாத, செய்யத் துணியாத திட்டமாகும். அதனை இன்றையதினம் புரட்சித் தலைவர் தலைமையில் உள்ள இந்த அரசு நிறைவேற்றத் துணிந்து இருக்கிறது என்று சொன்னால் அது மிகவும் பாராட்டுதற்குரிய ஒன்றாகும். எல்லோரும் இன்புற்று இருக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என்கிற நிலைமையைப்பார்க்கிறபோது, உள்ளபடியே ஏழை எளிய மக்களுக்கு, நடுத்தர மக்களுக்கு இந்தத் திட்டம் நல்ல வகையில் உதவிபுரியும் என்பதை நிச்சயமாக மாமன்ற உறுப்பினர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆளுநர் உரையில் இந்தத் திட்டத்தைப் பற்றிச் சொல்கிறபோது, வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள ஏழை எளிய மக்களுக்குத்தான் முன்னுரிமை அளிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளவர்களோடு மட்டும் இருக்காமல், தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பரிட்சைக்கு ''அப்பியர்'' (appear) ஆகியிருப்பவர்களுக்கும் முன்னுரிமை அளித்து வேலைவாய்ப்பு அளித்தால், மேலும் பல்வேறு ஏழை எளிய மக்களுடைய குடும்பத்தில் படித்து வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

தற்போது இம்மாநிலத்தில் 69 வளர்ச்சி வட்டாரங்களில் முதல் கட்டமாக தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் இயங்குகிற இந்த ஆட்சி, ஒவ்வொரு கிராமத்திலும் இந்தத் தன்னிறைவுத் திட்டம் அமல்படுத்துவதன் மூலம், ஆங்காங்கு, பாதுகாக்கப்பட்ட குடிநீர், சாலை வசதி, பள்ளிக்கூடங்கள், மருத்துவ வசதிகள் போன்ற நல்ல திட்டங்களைச் சீரிய முறையில்

செயல்படுத்திவருகிறது. இது பாராட்டப்படவேண்டிய ஒரு திட்டமாகும். இப்போது 69 வட்டாரங்கள் தான் இந்த வளர்ச்சி திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. அவைகள் எல்லாம் அந்தந்தவட்டாரங்களில் செவ்வியமுறையில் நடைபெற்று வருகின்றன. இந்த நேரத்தில் அந்த வளர்ச்சி வட்டாரங்களில் விடுபட்டுப்போன என்னுடைய தொகுதியில் அத்தகையபணிகள் தொடரப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதன்மூலம் அந்தப் பஞ்சாயத்துப் பகுதிகளிலும் சாலைவசதி, மருத்துவ வசதி, நல்ல வகையில் ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

இந்த வளர்ச்சி வட்டாரப் பகுதிகளில் இந்த வேலைகள் சரிவர நடக்கிற அதே நேரத்தில், அந்தத் திட்டத்தில் விடுபட்டுப்போன பகுதிகளில் அத்தகைய பணிகள் சரிவர நடக்காமல் போய்விடுமோ என்கிற ஐயப்பாடு இருக்கிறது. இதற்குக் காரணம், அந்த விடுபட்டுப்போன பகுதிகளில் இத்தகைய காரியங்கள் செய்யப்படவேண்டும் என்று கேட்டால், அங்கேயுள்ள அதிாரிகள் அதற்கான இயந்திரங்கள் எல்லாம் வளர்ச்சி வட்டாரத்திற்குச் சென்று விட்டன என்று சொல்லிவிடுகிறார்கள். ஆகவே, நான் கேட்டுக் கொள்வதெல்லாம் வளர்ச்சி வட்டாரங்களில் இந்தப் பணிகள் சீரிய முறையில் செயல்பட்டு வருவதைப்போல், அந்தத் திட்டத்தில் சேராத பகுதிகளிலும் இத்தகைய திட்டங்கள் நல்லமுறையில் எந்தவிதமான இடைஞ்சலும் இல்லாமல் செயல்பட மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் உத்தரவிடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நாட்டின் பொருளாதாரம் செழிப்படைய வேளாண்மைத் துறையிலும், தொழில் துறையிலும் முக்கியத்துவம் கொடுத்து அரசு நடவடிக்கைகள் எடுத்துள்ள செய்தி மிகவும் மகிழ்ச்சி தரத்தக்கதாக உள்ளது. இது ஒரு வரவேற்கத்தக்க அம்சமாகும். இந்த மாநிலத்தில் பல்வேறு மாவட்டங்கள் தொழில் துறையில் பின்தங்கிய நிலையில் உள்ளன. அங்கேயெல்லாம் தொழில் மையங்கள் அமைத்து, நல்ல பல சலுகைகளை அளித்து, அங்கே தொழில்கள் துவங்குவதற்கான முன்னுரிமை அளிக்கப்பட்டு இருப்பதைப் பார்க்கிறோம். அந்த அடிப்படையில் என்னுடைய வேண்டுகோளாக நான் இந்த மன்றத்தில் வைக்க விரும்புவது—இன்றைக்கு நம்முடைய மாநிலத்தில் படித்து விட்டு வேலையில்லாமல் இருக்கும் பட்டதாரிகள் தொழில் துவங்குவதற்கு வசதி இல்லாமல் இருந்து வருகிறார்கள். ஆகவே தொழில் வளம் மிக்க மாவட்டமாக இருந்தாலும், அதிலே படித்து விட்டு வேலை இல்லாமல் இருக்கும் பட்டதாரிகளுக்கு தொழிலில் பின்தங்கிய மாவட்டத்தில் உள்ளவர்களுக்கு அளிக்கப்படுகிற சலுகைகளை அளிக்க அரசு முன் வந்தால் அப்படி படித்து விட்டு வேலை இல்லாமல் இருப்பவர்கள் தொழில் துவக்க முன் வருவார்கள் என்று நான் சொல்லி, அந்தச் சலுகையை அரசு அளிக்க முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





[முற்பகல் 11–50]

அடுத்து விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற அடிப்படையிலேயும், உற்பத்திப் பொருள்களுக்கு நியாயமான விலை நிர்ணயிக்கப்படவேண்டும் என்ற அடிப்படையிலும் செய்திகள் இங்கே ஆளுநர் அவர்களது உரையிலே குறிப்பிடப்பட்டிருந்தன. இது ஏழை விவசாயிகளுக்கு நல்லதொரு செய்தியாகும். விவசாயம் மாநில அரசு சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இருந்தாலும் நியாயமான விலை நிர்ணயிப்பது, உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள், டீசல் போன்ற பொருட்களை வழங்குகின்ற அதிகாரம் மத்திய அரசிடமிருந்துதான் வரவேண்டி இருக்கின்றது என்பதை அனைவரும் அறிவோம். எனவே இந்த அரசு மத்திய அரசோடு தொடர்பு கொண்டு அந்த உரிமைகளைப் பெற நிச்சயமாக போராடுகின்றது என்பதை இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயிகளுக்கு நாங்கள் தான் பாதுகாப்பு கொடுக்கின்றோம் என்று சொல்லிக்கொண்டிருக்கின்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களும் மத்திய அரசுக்கு தமிழக அரசு கொடுக்கின்ற இக்குரலுக்கு ஒத்துழைப்புக் கொடுத்தால் நிச்சயமாக நல்லமுறையிலே விவசாயிகளுக்குப் பயன் ஏற்படும் என்பதை வலியுறுத்திச் சொல்லிக் கொள்கிறேன். நல்லபல திட்டங்கள் பற்றி இந்த ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருந்தாலும் அவற்றை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வரவேற்கிறார்களா என்றால் இல்லை, அப்படி வரவேற்காவிட்டாலும் குறை சொல்லாமலாவது இருக்கிறார்களா என்றால் அதுவுமில்லை. அவ்வாறு குறை சொல்லிவிட்டு தொந்தரவு கொடுக்காமல் இருக்கிறார்களா என்றால் அதுவுமில்லை. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் ஒரு பாட்டிலே ''தொந்தரவில் சுகம் கண்டேன் தோழி' என்று சொல்லி இருக்கிறார். அதுபோல் இன்றைக்கு எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர்கள் ஆளும் கட்சிக்குத் தொந்தரவு கொடுத்து அதிலே சுகம் கண்டுகொண்டிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். மேலும் ஆளுகின்ற கட்சிக்கு இருக்கின்ற பிரச்சினைகளை மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் நன்றாக உணருவார்கள் என்று கருதுகிறேன். இருந்தாலும் எப்படியாவது ஆளும் கட்சிக்குத் தொந்தரவு கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையிலே—தூங்குபவர்களை எழுப்பிவிடலாம், தூங்குவதுபோல் நடிப்பவர்களை எழுப்ப முடியாது அதுபோன்று—வேண்டுமென்றே ஆளும் கட்சிக்குத் தொந்தரவு கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். (மணியடிக்கப்பட்டது.)

எப்படியாவது, எங்கேயாவது போராட்டம் என்று உருவாகாதா, யாராவது நெருப்பு வைக்க மாட்டார்களா, அதிலே குளிர் காயலாம் என்று எண்ணி அந்த அடிப்படையிலே செயல்பட்டு வருகின்ற எதிர்க் கட்சியினர் தங்களது நிலையினை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த

[திரு. செ. செம்மலை] [1981 ஜனவரி 24

அரசைப் பொறுத்த வரையில் ஆளுகின்ற கட்சிக்குத்தான் பொறுப்பு இருக்கின்றது என்று யாரும் தயவுசெய்து நினைக்க வேண்டாம். இங்கிருக்கின்ற அத்தனை உறுப்பினர்களும் ஆளுங் கட்சி, எதிர்க்கட்சி என்ற பாகுபாடில்லாமல் இதனை உணரு வார்கள் என்று நான் கருதுகிறேன். ஆகவே அந்த நிலையில் ஆளுகின்ற கட்சி ஏழை மக்களுக்காகப் போடுகின்ற நல்ல திட்டங் களை எதிர்க்கட்சி உறுப்பினர்களும் ஆதரிப்பார்கள் என்ற நம் பிக்கையோடு, இன்றைக்கு தமிழகத்தை ஒளிமயமாக ஆக்கி இருக்கின்ற ஒளி விளக்காகத் திகழ்கின்ற புரட்சித் தலைவரின் திட்டங்களுக்கு ஒத்துழைப்புத் தர உங்களது மனம் மறுத்தாலும் தயவு செய்து புரட்சித் தலைவரின் தலைமையில் இயங்குகின்ற இந்த ஆட்சிக்குத் தொந்தரவு கொடுக்காமலாவது இருங்கள் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். எப்படியிருந் தாலும் பிரச்சினைகள் பல வரும். ஆனால் அந்தப் பிரச்சினை களைத் தீர்ப்பதற்கு எதிர்க்கட்சிகள் வழி தரவேண்டுமே தவிர நீங்களே பிரச்சினையை உருவாக்கக் கூடாது என்று கேட்டுக் கொண்டு இந்த அளவோடு என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

* திரு. கு. ரமணி : மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் எங்களுடைய கட்சியின் சார்பிலே திரு. என். வரதராஜன் அவர்கள் பேசுகிற நேரத்தில் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கருத்துக்களை இந்த மன்றத்திலே வைத்தார்கள். நானும் சில கருத்துக்களை அதை யொட்டி இங்கே வைக்க விரும்புகிறேன்.

மேன்மை தங்கிய ஆளுநர் அவர்களுடைய உரையை நாங்கள் பார்த்தபோது எங்களுக்கு அது ஒரு பெரிய ஏமாற்றத்தைத்தான் அளித்தது. கொள்கை அளவிலும் சரி, அன்றாட நடைமுறை யிலும் சரி நம்முடைய அரசாங்கத்தினுடைய நடவடிக்கைகள் ஏழை எளிய மக்களை பாதுகாக்கின்ற ஒரு சக்தியாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் இந்த அரசாங்கத்திற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தன்னுடைய ஆதரவை நல்கிக் கொண்டு வருகிறது. சென்ற தேர்தல் காலத்தில் தமிழக மக்களிடம் சென்று நாம் சொல்லியதை இங்கே சற்று ஞாபகப் படுத்த விரும்புகிறேன். '' ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கான ஜனநாயகப் பாதுகாப்பு அணி '' என்று தமிழகத்திலே இருக்கும் படியான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், அத்தோடு சேர்ந்த மற்ற ஆதரவு கட்சிகளும் சேர்ந்து ஒரு அணியை அமைத்துக் கொண்டு, தமிழக மக்களுக்கு ஜனநாயகத்தை பாது காப்பதற்காக, சர்வாதிகார சக்திகளை வளர விடாமல், அந்த சக்திகள் எடுக்கின்ற நடவடிக்கைகளினால் மக்களுக்கு ஆபத்து ஏற்படாமல் பாதுகாப்பது என்ற அந்த உறுதியைத்தான் தமிழக மக்கள் அனைவருக்கும் நாம் கொடுத்து வந்திருக்கிறோம்.



1981 ஜனவரி 24] [திரு. கு. ரமணி]

உங்கள் எல்லோருக்கும் தெரிந்த உண்மைதான். **1980** ஜனவரி மாதத்திலே நடந்த பாராளுமன்ற தேர்தலில் இந்திரா காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்று, தங்களுடைய ஆட்சியை அமைத்துக் கொண்ட பிறகு, 9 மாநிலங்களில் இருக்கும்படியான சட்டமன்றங்களை, யார் தங்களை தேர்ந்தெடுத்தார்களோ, அதே மக்கள் தேர்ந்தெடுத்த சட்டமன்றங்களைக் கலைத்தார்கள் அவர்கள். இப்படிப்பட்ட நடவடிக்கைகள் ஜனநாயகத்தின்பாற் பட்டது அல்ல என்பதுதான், எங்கள் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எடுத்துள்ள நிலை. அந்த நிலையை வைத்துக் கொண்டு தான். அப்போது தமிழகம் முழுவதும் நடந்திருக்கும்படியான தேர்தல் போராட்டத்தில் பிரசாரம் செய்தோம், பாராளுமன்றத் தேர்தலின் தலைவிதி எவ்விதம் இருந்த போதிலும், தமிழக மக்களைப் பொறுத்தவரையில் அப்படிப்பட்ட நிலையை அனு மதிக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கையோடு தைரியத்தோடு அந்த நடவடிக்கையை நாம் எடுத்தோம். தமிழக மக்களும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு முன்பு இருந்ததை விட மிகப் பெரிய சக்தியை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். அனைத்துக் கட்சிகளும்—அதாவது தோழமை கட்சிகள் அனைத் தும் சேர்ந்து எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் பலன் அது. அப்படிப்பட்ட நிலையிலிருந்து பிரண்டு, மிக வேகமாக சறுக்கிச் சென்றுக் கொண்டிருக்கும்படியான போக்கு அரசியலிலே இப் போது ஏற்பட்டு வருகிறது. அது மிகவும் வருந்தத்தக்க விஷய மாகும். அந்த போக்கிலிருந்து முறித்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் எங்களுடைய கட்சியினுடைய இப்போதைய நிலை ஆகும்.

உதாரணமாக இந்திய நாட்டிலே இன்றைக்கு ஏற்பட்டு வரும் படியான போராட்டங்கள், மக்களுடைய எழுச்சிகளை எடுத்துக் கொள்ளலாம். எல்லா மாநிலங்களிலும் விவசாய மக்களுடைய எழுச்சிப் போராட்டங்கள் நடைபெறுகின்றன. இப்படிப்பட்ட நெருக்கடிகளைத் தடுப்பதற்கு ஜனநாயக முறையில், அந்த மக்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்ற பல முறைகள் இருக் கின்றன, ஆனால் அதற்குப் பதிலாக அடக்கு முறையைக் கையாண்டு சட்டங்களை ஏற்படுத்தி அடக்கலாம் என்ற முறையில் மத்திய அரசு தேசியப் பாதுகாப்புச் சட்டம் என்ற அவசரச் சட்டத்தை பிறப்பித்தார்கள். அப்போது பார்லிமெண்டில் இருந்த அனைத்து எதிர்க்கட்சிகளும் அந்தச் சட்டத்தை இஞ்ச் இஞ்சாக எதிர்த்துப் போராடியும் கேட்காமல் அந்தச் சட்டத்தை நிறைவேற்றினார்கள்.

நான் ஒன்று தாழ்மையோடு கேட்க விரும்புகிறேன். ஜன நாயகத்தை பாதுகாக்க விரும்புகிற அனைத்து அங்கத்தினர்களை யும் ஒன்று வேண்டிக் கொள்ள விரும்புகிறேன். இந்திய நாட்டில் காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இல்லாத மாநிலங்களில் 5 அரசாங் கங்கள் இருக்கின்றன. அதிலே 3 அரசாங்கங்கள் '' நாங்கள் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தப் போவது இல்லை '' என்று

பகிரங்கமாக அறிவித்திருக்கிறார்கள். ஆனால் அதற்கு மாறாக எப்படிப்பட்ட பலாத்கார நிகழ்ச்சிகளையும் ஒடுக்க இந்திய நாட்டில் எவ்வளவோ சட்டங்கள் இருக்கின்றன. அவைகளை வைத்துக் கொண்டு சமாளிக்காமல், தமிழகத்தில் இந்த தேசியப் பாதுகாப்புச் சட்டத்தை பயன்படுத்தியிருக்கிறார்களே, அதை நீங்கள் விரும்புகிறீர்களா என்று கேட்க விரும்புகிறேன்.

நாராயணசாமி நாயுடுவின் சங்கத்தின் கொள்கையை எங்கள் கட்சி ஆதரிக்கவில்லை. அந்தச் சங்கத்தின் கொள்கை தவறானது என்று அவ்வப்போது நாங்கள் விவசாய மக்களிடத்திலே எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். மின்சாரத்தை உபயோகிப்போம் ஆனால் அதற்கான கட்டணத்தை செலுத்த மாட்டோம். அரசாங்கம் கொடுக்கும் சலுகைகளை உபயோகித்து கடன் வாங்குவோம் ஆனால் அந்தக் கடனை திருப்பிக் கொடுக்க மாட்டோம் என்று சொல்லக் கூடிய அந்த கொள்கை விவசாய மக்களை எந்த வகையிலும் பாதுகாக்காது என்று அவர்களுக்கு எங்களால் முடிந்த வரையில் அவ்வப்போது எடுத்துச் சொல்லி வருகிறோம். ஆனால் அப்படிப்பட்ட தவறான கொள்கைகளை உடையவர்களும், இந்த நாட்டிலே விருப்பப்படி பேசுவதற்கும், வாழ்வதற்கும் உரிமை உண்டு. அவர்களை அந்தச் சட்டத்தை பயன்படுத்தி கைது செய்து சிறையில் அடைப்பது நியாயமாகாது. அதை நாங்கள் ஆதரிக்கவில்லை. அன்றே எதிர்த்தோம்.

தமிழக அரசு என்ன கருத்தோடு இதைச் செய்திருக்கிறது? இந்திரா காந்தியின் அரசாங்கத்தினுடைய பக்கத்தில் சேர்ந்து நிற்பதற்கு வேண்டியிருக்கும்படியான எண்ணங்களை அது கொண்டிருக்கிறது என்பதைத்தான் இது எடுத்துக் காட்டுவதாக நாங்கள் நினைக்கிறோம். அந்த வழியில் இந்த அரசு மிக வேகமாகச் சென்றுக் கொண்டிருக்கிறது. ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காக அணியை திரட்டி, வெற்றி பெற்று விட்ட பிறகு தேர்தலிலே வருமா இனிமேல் இந்த நாட்டில், இனிமேல் கொண்டு ஜனநாயகம் பிழைக்குமா இந்த நாட்டில், ஜனநாயக அடிப்படையான அமைப்புகள் நிலைத்திருக்குமா இந்த நாட்டில் என்று தமிழக மக்களிடத்திலே கேட்டு, அவர்கள் அதற்கான அனுமதியைக் கொடுத்து அனுப்பியிருக்கும் நேரத்தில், சர்வாதிகார சக்திகளோடு இணைந்து நிற்கும்படியான எண்ணத்தோடு இந்த அரசு சென்றுக் கொண்டிருந்தால் அது எங்கே போய் முடியும் என்று உங்களை கேட்க விரும்புகிறேன்.

[நண்பகல் 12-00]

இது நிச்சயமாக அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் கொள்கைகளுக்கோ அல்லது அந்தக் கட்சியின் வளர்ச்சிக்கோ உதவாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படியிருக்கும்போது இந்த மாதிரி போக்குகளை கைவிட்டுவிட முன்வர வேண்டும். ஜனநாயகத்தைப் பாதுகாக்க மக்கள் சக்தியைத் திரட்டி அரசாங்கம் அமைத்த





பின் ஜனநாயக சக்திக்கு ஆபத்து இழைக்கிற அதே சர்வாதிகார சக்திகளுடன் அணி வகுக்க தீர்மானித்து அந்த முறையில் கொள்கைகளில் மாறுதல்கள் செய்வது என்பது சரியல்ல. இந்நிலை தொடர்ந்து போகுமானால், அரசாங்கமும் ஆளும் கட்சியும் இந்த நிலையிலிருந்து மாறுபட்டு திரும்பிவராத நிலை ஏற்படுமானால் நான் மிகுந்த வேதனையோடு சொல்லிக்கொள்கிறேன். மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்திற்குக் கொடுத்து வருகிற ஆதரவைப் பற்றி மறுபரிசிலனை செய்ய வேண்டிய நிலை அந்த நிர்பந்தம் வரக் கூடாது என்று நாங்கள் கருதுகிறோம். உங்களுடைய இப்படிப்பட்ட போக்குகளை நாங்கள் இன்று நேற்று அனுபவித்தது அல்ல. பல உதாரணங்கள் இருக்கின்றன.

1973-ல் திண்டுக்கல் பாராளுமன்றத் தேர்தல் முடிந்த பிறகு உங்களுக்கு ஏற்பட்ட மாறுதல் என்ன? அதை சற்று சிந்தனை செய்து பார்க்க வேண்டும். 1976 ஆம் ஆண்டு சர்வாதிகாரம் வீழ்த்தப்பட்ட பிறகு 1977-ல் பாராளுமன்றத் தேர்தல் நடந்தது. அப்போது ஏற்பட்ட நிலை என்ன? அப்போது எந்த அணுகு முறையில் சென்றீர்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஜனநாயக விரோத சக்திகளோடு சேர்ந்து நிற்கும்படியான எண்ணத்தில் அதுவும் போட்டி போட்டுக் கொண்டு செல்வது என்றால் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலை பற்றி நாங்கள் மறுபரிசீலனைதான் செய்ய வேண்டியிருக்கும். திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றி நான் கவலைப்படவில்லை. இந்திரா காங்கிரஸோடு இணைந்து நிற்பது குறித்து அவர்கள் தெள்ளத் தெளிவாக எடுத்துக் கூறி முதலிலேயே அவர்களோடு போய் சேர்ந்திருக்கிறார்கள். அவர்களைத் தோற்கடிப்பதற்கு அதற்கு முந்தியே நீங்கள்போய் நிற்பது என்பது சரி என்ற முடிவுக்கு வந்தால் நல்லதொரு பழமொழியை நான் சொல்ல முடியும், அதை நான் இங்கே பயன்படுத்த விரும்பவில்லை. ஆகவே மதிப்புமிக்க மாமன்ற உறுப்பினர்களே, நான் உங்களிடத்திலே சொல்லிக்கொள்ள விரும்புவது என்னவென்றால், இந்நிலையில்இருந்து அரசு மாறவேண்டும். ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் பாதையில் செல்ல வேண்டும். நாஷனல் செக்யூரிட்டி ஆக்டைப் பயன்படுத்தி நல்ல பிள்ளைகளாக காட்சியளிக்க விரும்புகிறார்கள். அந்தப் போக்கு தவறானதாகும்.

அடுத்தபடியாக, பணவீக்கம் ஊதிய உயர்வுகளினால் ஏற்படுகிறது என்று ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆளுநர் உரை என்பது அமைச்சரவையால் தயாரித்துக் கொடுக்கப்படுகிற ஒரு உரையாகும். இந்த சர்க்காரின் கொள்கைகள் இதுதானா என்று கேட்கவேண்டியிருக்கிறது. 'மேலும், அமைப்பு ரீதியாகச் செயல்படும் சிறுபான்மையினர் பெறும் ஊதியம் அவர்களுக்கு எதிர்பார்த்த பலனை அளிக்காதது மட்டும் அல்ல, அதனால் ஏறும் விலைவாசி, அமைப்பில்லா பெரும்பான்மையினரான கைத்தறி நெசவாளர்கள், நிலமற்ற

[திரு. கு. ரமணி] [1981 ஜனவரி 24

விவசாயத் தொழிலாளர்கள், கிராமக் கைத்தறிப் பணியாளர்கள் போன்ற ஏழை எளிய உழைக்கும் மக்களையும் பாதித்து விடுகிறது. அமைப்பு ரீதியான சிறுபான்மையினரிடம் உள்ள கூடுதல் ஊதியம் பெறும் சக்தி, மிகப் பெரும்பான்மை உழைக்கும் மக்களிடம் இல்லை. இந் நிலையில், இவ்வமைதிப் பெரும்பான்மையினரே பெரும் அவதிக்குள்ளாகின்றனர். இத்தகைய போக்கினை உடனடியாகத் தடுத்து நிறுத்துவது இன்றியமையாத பணியாகும் என்று சொல்லப்பட்டிருககிறது. இதன் இம்ப்ளிகேஷன்ஸ் என்ன என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். தொழிலாளர் வர்க்கத்தை ஸ்தாபன ரீதியாகத் திரட்டி ஒரு சக்தியாக நிறுத்துவது என்பது வெறும் காசு, பணம், போனஸ், சம்பளம் இவற்றிற்காக மட்டுமல்ல. ஜனநாயகத்தைப் பாதுகாக்க இது ஒரு உன்னதமான சக்தியாகத் திகழ்கிறது. ஸ்தாபன ரீதியாகச் செயல் படும் மைனாரிட்டி அதிகமான ஊதியம் பெறுவதால் கைத்தறி நெசவாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்றால் அதை உலகம் ஒத்துக் கொள்ளுமா என்று யோசித்துப் பார்க்க வேண்டும். என்ன பொருளாதாரக் கண்ணோட்டத்தோடு இந்த அரசு இருக்கிறது என்பதைத் தெளிவாக்க வேண்டும். இப்படி ஒரு தந்திரத்தைக் கையாண்டால் ஆர்க்கனைஸ்ட் வொர்க்கிங் க்ளாஸ்க்கும், அன் ஆர்கனைஸ்ட் வொர்க்கிங் க்ளாஸ்க்கும் இடையே மோதல். உங்களுக்கு அவர்கள்தான் விரோதிகளா? இந்த நாட்டிலுள்ள பெரும் பணக்காரர்கள் அல்ல, இந்த நாட்டிலுள்ள ஏகபோக முதலாளிகள் அல்ல. இந்த நாட்டிலுள்ள நிலச்சுவாந்தார்கள் அல்ல, இந்த நாட்டிலுள்ள கள்ள மார்க்கட்காரர்கள் கடத்தல் பேரிவழிகள் அல்ல, அப்படிப்பட்ட சுரண்டல்காரர்கள் அல்ல. அதற்குப் பதிலாக ஆர்க்னைஸ்டாக நின்று போராடி வாங்குகிறார்களே, பணவீக்கத்திற்கு அவர்கள்தான் காரணம் என்கிறீர்கள். அதனால் மற்றவர்களுக்கு கிடைக்காது என்கிறீர்கள். இந்தத் தத்துவம் ஒன்றும் புதிதல்ல. ஏகபோக முதலாளிகள், டாட்டா பிர்லாக்கள் மற்றும் நிலச்சுவாந்தாரர்கள் வழிவழியாகச் சொல்லக்கூடிய தத்துவம்தான் அது. காங்கிரஸ் கட்சி அதிகாரத்தில் வந்த காலத்திலிருந்து சொல்லி வரக்கூடிய தத்துவம் அது. அந்தக் கோள்கையை இந்த அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. அதைத்தான் ஏற்றுக் கொண்டிருக்கிறது என்றால், அந்தக் கோள்கை நியாயமானதல்ல; அதைக் கைவிடும்படி நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இந்தக் கொள்கையை தொழிலாளர் வர்க்கத்தின் மீது திணித்தால், அதன் விளைவாகத் தான் தொழிலாளர் சங்கங்கள் போராட்டத் தந்திரங்களைக் கையாண்டு, எதிர்த்துப் போராடும் நிலைதான் அதனால் தவறுகள் ஏற்படும். அந்தத் தொழிலாளர்கள் அதிக ஊதியம் கேட்கிறார்கள், அவர்களுக்கு மேலும் மேலும் வேண்டுமென்ற பேராசையோடு கேட்கின்றார்கள் என்று சொல்வது நியாயமானதல்ல. உதாரணமாக ஒன்றைச் சொல்ல முடியும்.



1981 ஜனவரி 24] [திரு. கு. ரமணி]

இந்த அரசாங்கம் மிக முக்கியமான திட்டமொன்றை, காடாம்பாறை மின் திட்டத்தை 70 கோடி ரூபாய்க்குத் திட்டமிட்டு, அந்தத் திட்டத்தை கான்ட்ராக்டுக்கு விட்டது. அதிலே வேலை செய்யக்கூடிய சுரங்கத் தொழிலாளர்கள், திறமை மிக்கவர்கள், டிரில்லிங் செய்யக்கூடிய தொழிலாளர்கள் 300 பேர்கள் அதிகச் சம்பளம் வேண்டுமென்று கேட்டபோது, இந்த அரசாங்கம் கொடுத்த பதில் என்ன தெரியுமா? கான்ட்ராக்டருக்கு 3, 4 ஆண்டுகள் என்று காண்டிராக்ட் கொடுத்து விட்டோம், உங்களுக்கு அதிகச் சம்பளம் கொடுத்தால், காண்ட்ராக்டருக்கு அதிகம் கொடுக்க வேண்டும், எனவே எப்படி கொடுப்பது என்று சொல்லப்பட்டது. இப்படிப்பட்ட வாதத்தைக் கொண்டுபோனால், என்ன கதி ஆகும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். 5 அல்லது 7 ஆண்டுகளில் முடித்துவிட வேண்டுமென்று ஒரு திட்டத்தை கான்ட்ராக்டரிடம் கொடுத்திருக்கலாம். நான் கேட்கிறேன். அப்படி கொடுக்கப்படும் கான்ட்ராக்ட் அக்ரிமென்டிலே சேப்டி கிளாஸ் கிடையாதா? சகல பொருள்களுக்கும் விலைகள் ஏறினால் சரிக்கட்ட எக்ஸ்கலேஷன் கிளாஸ் இருக்கிறது. சிமெண்டு, இரும்பு, கல் போன்ற பொருள்களின் விலை உயர்ந்தால், அதற்கு எஸ்டிமேட்டில் அதிகத் தொகை கொடுக்க வேண்டுமென்று ஏற்பாடு இருக்கிறது ஆனால் கான்ட்ராக்டர்களுக்கு கீழே வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு இத்தகைய பாதுகாப்பு இல்லை. அப்படி அதிகச் சம்பளம் கொடுக்கவில்லை என்ற அடிப்படையில் அவர்கள் வேலைக்கு தக்க கூலி கேட்டார்கள். அவர்கள் விலைவாசி உயர்ந்துவிட்டது, எனவே அதிகச் சம்பளம் வேண்டுமென்று தான் கேட்டார்கள். அது தப்பு என்று சொன்னால், தொழிலாளர்களுக்கு விரோதமான ஒரு கொள்கையை ஏற்படுத்தினால், அது எங்கே கொண்டுபோய் விடுமென்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்தக் கொள்கையினால், அங்கே உள்ள 110 ஆண்களும் 33 பெண்களும், சுமார் 130 பேர்கள். கைக்குழந்தைகள் உட்பட கொடுமைப்படுத்தப்பட்டு, கோவை சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பற்றி விசாரணைகூட நடத்தாமல், விசாரணை செய்வதற்கு, சார்ஜ் சீட்டுக்கல் போடுவதற்கு அங்கே உள்ள கோர்ட்டிலே ஆள் இல்லாமல், ஜெயிலில் அடைக்கப்பட்டு கொடுமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலைமை அங்கே ஏற்பட்டிருக்கிறது. அந்தத் தொழிலாளர்கள் அத்தனை பேரும் சிறையிலே குடும்பத்தோடு, இன்றைக்கு வதங்கிக் கொண்டிருக்கிற நேரத்தில் கான்ட்ராக்டர்கள் கருங்காலிகளை வைத்துக் கொண்டு வேலை செய்வதற்கு, அவர்களுக்கு சகாயம் செய்வதற்கு போலீசும் உதவி செய்கிறது; இந்த அரசாங்கமும் உதவி செய்கிறது. அதற்கு மாறாக தொழிலாலர்களை விடுதலை செய்து, அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்ற நியாயமான கோரிக்கையை

நல்ல எண்ணத்தோடு பரிசீலிக்க வேண்டுமென்ற எண்ணமில்லை. இன்றைக்கும் அவர்கள் சிறையிலே, பெண்கள் உடுத்துவதற்குகூட மறு உடை இல்லாமல், நாங்கள் துணிகளை வசூல் பண்ணி, சப்ளை செய்ய வேண்டிய நிலை இருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது. 6 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளை கையிலே வைத்துக் கொண்டு இருந்த தாய்மார்களிடமிருந்து பிரித்து அந்தப் பெண்கள் கண்ணீர் சிந்தி, சிந்தி பலர் சிறையில் தனியாகவை வத்ததால் சிறையிலே வாடிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட துஷ்டத் தனமான காரியத்தைச் செய்ய வேண்டுமா? இந்த அரசாங்கத்தின் கொள்கையைப் பார்க்கும்போது, கான்ட்ராக்டர்களுக்கு கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவதற்காக தொழிலாளர்களுக்கு இதற்குமேல் சம்பளம் கொடுக்க முடியாது லால் சந்த், ஹீராச் சந்த் என்ற காண்ட்ராக்டர் பெரு முதலாளிகளைத் தான் காப்பாற்ற வேண்டுமென்ற நிலையில் இருக்கிறதென்றால், அந்தத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யக் கூடாதா? வேலை நிறுத்தம் செய்கின்ற உரிமை தான் அவர்கள் கையில் இருக்கிறது. இந்த உரிமை பறிக்கப்படும்போது அவர்கள் போராடுவார்கள். இது பற்றிய சட்டம் இங்கே வருகின்றபோது நான் விரிவாகப் பேசுகிறேன். (மணியடிக்கப்பட்டது).

அடுத்து ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மதுவிலக்கைப் பற்றிய விஷயமாக மதுவிலக்கைப் பற்றி மனம் திறந்து பேசுங்கள் என்று சொல்லப்படுகிறது. இந்த சட்டமன்றத்திலே எந்த அளவுக்கு மனம் திறந்து பேசமுடியுமோ, அந்தளவுக்கு மனதுக்குகதவே இல்லாத அளவுக்குத் திறந்து பேசியிருக்கிறோம். மதுவிலக்கை நீங்கள் நிறைவேற்ற வேண்டுமானால், போலீசும், தடியும் வைத்துக் கொண்டு தான் நிறைவேற்ற முடியும். அது நடக்காத ஒன்று என்பதைச் சொல்லி இருக்கிறோம். ஆனால் இன்றைக்கு என்ன நடக்கிறது? ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலும் எவ்வளவு பணம் சம்பாதிக்கிறார்கள் என்பது எனக்கு நன்கு தெரியும். நான் குறிப்பிட்ட போலீஸ் ஸ்டேஷன் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. அப்படிச் சொல்வது நல்லதல்ல. என்னுடைய தொகுதியிலே உள்ள ஜனங்களிடம் சாட்சியம் பெற்று நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். உதாரணத்துக்கு ஒரு போலீஸ் ஸ்டேஷனில் மாதம் ஒன்றுக்கு ஒரு இலட்சத்து பத்தாயிரம் ரூபாய் கைக்கூலியாகப் பெறுகிறார்கள் 4 ஹோல்சேல் (Whole sale) வியாபாரிகள்; ரிட்டையில் வியாபாரிகள் அன்டர் கிரவுண்டில் 8 பேர்கள். இப்படி அவர்களின் கீழ் பல ரவுடிகள் எல்லாம் சேர்ந்து வாங்கி விற்கக் கூடிய ஏற்பாடுகள் இருக்கிறது.

[பிற்பகல் 12—10]

இது நடக்கிறதா? இல்லையா? ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம். இப்படி வரக்கூடிய கள்ளச் சாராயப் பணம் அத்தனையும் அரசு கணக்கில் வெளியே வராது. அத்தனையும்



கள்ளப் பணம் அல்லவா? இதனால் லஞ்சம் ஊழல் வளருகிறது. இதனால் அப்படிப்பட்டவர்கள் அரசியல் கட்சிகளை, குறிப்பாக ஆளுகின்ற அரசியல் கட்சிகளில் ஆட்களைப் பிடிக்க முயற்சி செய்கிறார்கள் (மணி அடிக்கப்பட்டது)

எவ்வளவு பேர்களைப் பிடித்திருப்பார்கள் என்பது தெரியாது, அப்படிப்பட்ட மதுவிலக்கை ரத்து செய்யுங்கள். நண்பர் ஒருவர் பேசும்போது பத்து ரூபாய் லைசென்ஸ் வைக்கலாம் என்றார். லைசென்ஸ் வேண்டாம், ஒன்றும் வேண்டாம். முழுமையாக மதுவிலக்கை ரத்து செய்யுங்கள். எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்கத் தயார். மது குடிப்பது தப்பு என்று பிரசாரம் செய்யத்தயார். அந்த முறையில்தான் ஒத்துழைப்பு தரமுடியும்,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மேலும் நிறையப் பேர்கள் பேசவேண்டியிருப்பதால் உறுப்பினர் அவர்கள் முடித்துக் கொள்ள வேண்டும்.

திரு. கு. ரமணி: தீவிர வாதிகளை அடக்கி போலீசார் செய்துள்ள சேவை பற்றி கவர்னர் உரையில் கூறப்பட்டுள்ளது. நக்சலைட்டுகளை போலீசார் சுட்டிருக்கிறார்கள். உண்மையில் என்ன நடந்திருக்கிறது? பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்டார்கள். பொது மக்கள் அடிக்கப்பட்டார்கள். பலரும் தாக்கப்பட்டார்கள். நிலச்சுவான்தார்களால் பாதிக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கான விவசாயக் கூலித் தொழிலாளர்கள் மன எரிச்சலில் உள்ளவர்களை நக்சலைட் போன்றவர்களை உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். அதை எதிர்த்து நிற்கும் சக்தி மக்களுக்கு உண்டு. அதைத் திரட்டி சமாளிக்க வேண்டும். நக்சலைட்களைப் பிடித்து கொலை செய்வது சரியல்ல. மக்கள் சக்தியைத் திரட்டி அரசியல் ரீதியாக அவர்களைத் தோற்கடிக்க வேண்டும். அப்படித்தான் மேற்கு வங்காளத்தில் எங்களரசு செய்தது. அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏழை விவசாயிகளுக்கான சில நல்ல சட்டங்களைத் தயாரித்திருக்கும் அதே நேரத்தில் தொழிலாளர்களுக்கு விரோதமான காரியங்களையும் செய்து வருகிறார்கள். இப்போக்கை கைவிட வேண்டும் என்று கோருகிறேன்.

(மணி அடிக்கப்பட்டது)

* திரு. பொ. உத்திராபதி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களை சொல்ல முன்வந்திருக்கிறேன்.

ஆளுநர் உரையைப் படித்துப் பார்க்கிறபோது வீட்டுக்கு ஒருவருக்கு வேலை, விவசாயிகளுக்கு நல்லெண்ணத்தைக் காண்பித்தல், விவசாயத் தொழிலாளர்களுக்கு வாழ உத்தரவாதம் செய்வது என்று இப்படி பல்வேறு காரியங்கள் ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிக்கிறதே தவிர, அடிப்படையாக

[திரு. பொ. உத்திராபதி] [1981 ஜனவரி 24

தமிழகத்தில் வாழக்கூடிய ஏழை எளிய மக்களுக்கு ஒட்டு மொத்தமாக ஒரு உத்தரவாதமான திட்டம் இருக்கிறதா என்று பார்த்தால் உறுதியாக இல்லை.

தமிழகத்தில் விவசாயத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 29 லட்சமாக இருந்தது இன்றையதினம் அரசாங்கத்தின் புள்ளிவிவரப்படி 44 லட்சமாகப் பெருகியிருக்கிறது. அவர்களுக்காக அடிப்படைத் திட்டம் என்ன என்று பார்க்கிறபோது திட்டம் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஒன்று குறிப்பிடப் பட்டிருக்கிறது—விலைவாசி ஏறுமுகத்தை யும் அதைத் தொடர்ந்து பணவீக்க நிலை தொடர்ந்து இருப்பதையும் கண்டு, இவ்வரசு மிகவும் கவலை கொண்டுள்ளது. பணவீக்கம் ஏற்பட்டுள்ளபோது, ஊதிய உயர்வுகளினால் உண்மையில் பயன் ஏற்படாது; அதற்கு மாறாக ஊதிய உயர்வு பணவீக்கம் என்கிற தீயை மேலும் வளர்ப்பதாக அமைந்துவிடு கிறது. விலைவாசி உயர்வும் ஊதிய உயர்வும் ஒன்றையொன்று தொடர்ந்து வரும் ஒரு நச்சு வட்டமாகவே தோன்றுகிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே நம்முடைய தமிழக அரசும் மத்திய அரசை பின்பற்றிச் செல்கிறது என்றால் நாட்டிலே விலைவாசிகள் ஏறிக்கொண்டிருக்கின்றன; நாடாளு மன்றத் தேர்தல் நடந்தபோது இந்திரா காங்கிரஸ் கட்சியும், திராவிட முன்னேற்றக்கழகமும் சேர்ந்து நின்றபோது நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் இந்த நாட்டில் நிலையான ஆட்சி வரவேண்டுமென்று சொன்னால், இந்த நாட்டிலே இருக்கிற ஒரே தலைவி இந்திராவால்தான் வரமுடியும் என்றும், தங்கத்தின் விலை இறங்கி வீட்டுக்கு தங்கம் கிடைக்கவேண்டுமென்று சொன்னால், இந்திரா காங்கிரஸால்தான் முடியும் என்றும் சொல்லி வாக்குக் கேட்டார்கள். தமிழகமக்களும் அதை நம்பி நாடாளுமன்றத்துக்கு வாக்களித்தார்கள். ஆனால் இன்றைய நிலை என்ன? தங்கத்தின் விலை இன்றைக்கு 1,200 ரூபாய் விலைவாசி இறங்கியிருக்கிறதா? நாடாளுமன்றத் தேர்தல் நடக்கிறபோது தேங்காய் எண்ணெய் விலை லிட்டர் ஒன்றுக்கு 12 ரூபாய், ஆனால் இன்றைக்கு அதன் விலை 22 ரூபாய். என்ன பதில் சொல்லப் போகிறார்கள்? இப்படி விலை வாசி ஏறியிருப்பதைக் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு இருக் கிற மத்திய அரசு எதைச்சொல்கிறதோ அதையே சொல்வது சரியல்ல. உழைக்கின்ற தொழிலாளர் வர்க்கத்திற்கு சம்பளம், பஞ்சப்படி இவைகளைக் கொடுப்பதால்தான் விலைவாசி உயர் கிறது என்று அவர்கள் வியாக்கியானம் பேசி மக்களை ஏமாற்று கிறார்கள். அதே வியாக்கியானத்தை தமிழக அரசும் ஏற்றுக் கொண்டு விலைவாசி உயர்வுக்கு அதுதான் காரணம் என்று சொல்வது சரியல்ல. ஆகவே மத்திய அரசு சொல்கிற எதை யும் ஏற்றுக்கொண்டு மத்திய அரசுக்குப் பின்னாலே போவது எதிர்காலத்திலே ஆபத்தை விளைவிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1981 ஜனவரி 24] [திரு. பொ. உத்திராபதி]

அதிகமான சம்பளம் கோரி போராடுகிறார்கள், குறைந்த சம்பளம் பெறுகிறவர்கள் அதிகமான சம்பளம் பெறுகிற வர்கள் இரண்டு பேர்களையும் சமமாகப் பாவிக்க முடியுமா என்று கேட்கிறார்கள். விலைவாசி உயர்வால்தான் சம்பள உயர்வு கேட்கிறார்கள். கிராமப்புறத்திலே உள்ளவர்களும் விலைவாசி உயர்வினால் பாதிக்கப்படுவதால் அதிகமாகக் கேட் கிறார்கள். இரண்டையும் ஒப்பிட்டுக் காட்டி உயர்ந்த சம்பளம் வாங்குகிறவர்கள், குறைந்த சம்பளம் வாங்குகிறவர் கள் ஆகியவர்களை இப்படி மோதவிடுவது சரியல்ல என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். விலைவாசி ஏற்றத்திற்குத் தகுந்தாற்போல் அந்தந்தப் பகுதி மக்களுக்குச் சம்பள உயர்வு தருவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன். இதிலே விவசாயத் தொழிலாளர்களைப் பற்றிக் குறிப்பிட்டு இருக்கிறார்கள், எல்லோருக்கும் அதிகமான வருமானம் கிடைக்கிறது, ஆனால் விவசாயத் தொழிலாளர்கள் கைவினைஞர்கள், கைத்தறித் தொழிலாளர்களுக்கு எல்லாம் குறைந்த வருமானம்தான் கிடைக் கிறது. எனவே அவர்களை இந்த அரசு பரிவோடு கவனிக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். பரிவோடு கவனிப்போம் என்பது மனிதாபிமானத்தோடு நல்ல எண்ணத்தின் அடிப்படையிலே வரக் கூடிய உணர்வு தான், ஆனால் அந்த அளவுக்கு ஆளுநர் உரை யிலே எந்தவிதமான குறிப்பும் கிடையாது. தமிழகத்திலே மொத்தம் 44 லட்சம் விவசாயத் தொழிலாளர்கள்இருக்கிறார்கள் 44 லட்சம் பேர்கள் என்று சொன்னால் குடும்பத்தினரை எல்லாம் சேர்த்து மொத்தமாகப் பார்க்கிறபோது ஒரு கோடி யையும் தாண்டி எண்ணிக்கை வருகிறது. விவசாயத் தொழிலாளர்களுக்கு கூலி கொடுப்பதற்கு சட்டம் இருக்கிறது. கீழத் தஞ்சையிலே உள்ளவர்களுக்கு 7·80, மேலத் தஞ்சையிலே உள்ளவர்களுக்கு 6·00, தமிழகத்திலே மற்றவர்களுக்கு 6·00 என்ற முறையிலே கொடுக்கப்படவேண்டுமென்று சொல்லப் பட்டிருக்கிறது. அந்தச் சம்பளம் உண்மையிலேயே தொழி லாளர்களுக்குக் கிடைக்கிறதா என்றால் கிடைக்கவில்லை. இன்றைக்கு வடஆற்காடு, தர்மபுரி, செங்கற்பட்டு, தென் ஆற்காடு ஆகிய இந்த மாவட்டங்களிலே குறைந்த பட்ச கூலி 2 ரூபாய் முதல் 4 ரூபாய் வரையிலும் ஆண்களுக்கும், ரூபாய் முதல் 3 ரூபாய் வரையில் பெண்களுக்கும் கிடைக் கிறது. கூலிக்காக போராடுகிறவர்களை சட்டமும், போலீஸும் தான் பாதுகாக்கவேண்டும். ஆனால் அவர்கள் யாரைப் பாதுகாக்கிறார்கள் என்றால் நிலப்பிரபுக்களைப் பாதுகாக் கிறார்கள், தொழிலாளர்கள் சிறைக்குச் செல்கிறார்கள், சித்திரவதைக்கு ஆளாகிறார்கள்.

[பிற்பகல் 12–20]

தர்மபுரி, திருப்பத்தூர் ஆகிய இந்தப் பகுதிகளில் விவசாயத் தொழிலாளர்கள் போராடும்பொழுது அந்தத் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் சாமிக்கண்ணு அவர்களை நிர்வாணமாக்கி

காவல்துறையினர் கட்டிவைத்து அடித்து சிறைக்கு அனுப்பியிருக் கிறார்கள். ஆனால் கூலி கொடுக்காத மிராசுதாரர்கள் மீது எந்த நடவடிக்கையும் கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

தர்மபுரி மாவட்டத்தில்—திருப்பத்தூரில், சமீபத்தில் நக்சல் பாரி வேட்டை நடந்து கொண்டிருந்தது. நக்சல்பாரிகள் என்பவர்கள் ஒருசில நபர்கள்தான் ஆனால் உழைக்கின்ற ஆயிரக்கணக்கான விவசாயத் தொழிலாளர்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள், அதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் கிடையாது.

அதேபோலத்தான், மிராசுதாரர்கள் கொடுத்த மனுவின் பேரில் தர்மபுரி மாவட்டத்தில் நூற்றுக்கணக்கான விவசாயத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு இன்றைக்கு சிறைக்கு அனுப்பப் பட்டிருக்கிறார்கள்.

கடன் நிவாரணச் சட்டத்தின் கீழ் 4,800 ரூபாய் என்பது அந்தக் கடன் நிவாரணச் சட்டத்தின் கீழ் இதுவரையில் எத்தனைபேர் பயன் அடைந்திருக்கிறார்கள்? இன்றைக்கு, திருத்தச் சட்டம்கூடக் கொண்டு வரப்போவதாகச் சொல் கிறார்கள். பெரிய வசதி படைத்தவர்களுக்கான வாய்ப்பைத் தடுக்க இருக்கிறார்கள் என்பதை அறிந்து அதை நான் வரவேற்கிறேன். ஆனால் இந்த 4,800 ரூபாய் கடன் நிவாரணச் சட்டத்தின் கீழ் எத்தனை பேருக்கு பலன் கிடைத் திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன் அதிகாரிகளால் உண்மையிலேயே ஏழை எளியவர்களுக்கு அந்தப் பலன் கிட்டவில்லை; அதற்குமாறாக அந்தந்தப் பகுதிகளிலே சர்வ கட்சிக் குழு என்று அதிகாரிகளையும் கொண்ட குழுவைப் போட்டு யார் ஏழை என்று பார்த்து நடவடிக்கை எடுத்தால் அந்தக் கடன் நிவாரணச் சட்டத்தால் பலன் கிடைக்கும் என் பதைச் சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல, 58-லிருந்து 60-வது ஆண்டு வரையில் உள்ள பினாமி நிலங்களை எடுக்கச் சட்டம் இயற்றப்பட்டு பிறகு ஜனாதிபதியின் அங்கீகாரத்திற்காகச் சென்றிருக்கிறது. ஆனால் இப்படிப்பட்ட நல்ல சட்டத்தைக்கூட மத்திய அரசு அங்கீகரிக்காமல், ஜனாதிபதி கையெழுத்திட்டு அனுப்பாமல் இவ்வளவு மாத காலம் கழிந்து கொண்டிருக்கிறது என்பதெல் லாம் எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான். இவ்வாறு, மத்திய அரசு பினாமி நிலங்களைக்கூட எடுக்கத் தயாராக இல்லை என்று வருகிறபொழுது, மத்திய அரசைத் தொடர்ந்து இன்னும் நமது தமிழக அரசு அனுசரணையாக செல்வது சரியல்ல என்பதை எங்கள் கட்சியின் சார்பாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.



பினாமி நிலத்தை எடுக்கின்ற நேரத்தில், தஞ்சை மாவட்டத்தில் தியாகராஜ முதலியாருக்கு இருந்த 4,000 ஏக்கர்களுக்கு நஷ்டஈடு கொடுத்து, 3,000 ஏக்கர்களை குத்தகைக்கு எடுத்து ஆக 7,000 ஏக்கர்கள் கரும்புப் பண்ணை கழகமாக தஞ்சை மாவட்டதில் வடபாதி மங்கலத் தில் நடந்து கொண்டிருக்கிறது.

குத்தகை நிலத்தைத் திருப்பிக் கொடுக்கின்ற வகையில் 166 சிறு நிலச் சொந்தக்காரர்கள்—600 ஏக்கர் நிலம்; வடபாதி மங்கலம், கோவில் நிலம் குன்னியூர் சிவானந்திடார் அய்யர் போன்ற இவர்களுக்கெல்லாம் திருப்பிக் கொடுக்கக்கூடிய நிலம் 2,400 ஏக்கர். இந்த நிலத்தை திருப்பிக் கொடுத்தால் கரும்புப்பண்ணைக் கழகம் பொதுத்துறை கொள்கையை ஏற்றுக்கொள்ளவில்லை என்று பொருள். இந்த போக்கு நிலப்பிரபுக்களை பாதுகாக்க உதவும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன் இப்பாடச் சட்டத்தின் பெயரால் நிலப்பிரபுக்களுக்கு மீண்டும் கொடுக்க வேண்டுமா என்பதைப்பற்றி மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நிலச் சொந்தக் காரர்களுக்குக் கொடுக்கும் பெயரால் 2,400 ஏக்கரை பெரும் நிலக்காரர்களுக்கு கொடுத்து அப்படியொரு பண்ணையை விணடிப்பது சரியல்ல.

விவசாயத் தொழிலாளர்களுக்குக் கீழத் தஞ்சையில் பத்தாண்டுக் காலமாக அறுவடைக்கு காத்திருந்து, ஆறு லிட்டர் என்று கூலி இருக்கிறது மேல் தஞ்சையிலும், மற்ற பகுதிகளிலேயும் எட்டில் ஒன்று என்று அறிவித்திருக்கிறார்கள் இன்றைக்கு கீழத் தஞ்சை மாவட்டத்தில் கலத்திற்கு ஏழு லிட்டர் கூலி வேண்டுமென்று தொழிலாளர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள் உடனடியாக அரசாங்கம் இதை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத் தொழிலாளர்கள் 60 வயது அடைந்தால், அவர்கள் அனாதையாக இருந்தால் அவர்களுக்குத் தமிழக அரசின் பென்ஷன் தொகை உண்டு என்று அறிவித்திருக்கிறார் கள். நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்; இந்த தேசத்தில் 7 வயது முதல் மாடுபோல் உழைத்து 60 வயது வரையில் இந்த நாட்டினுடைய உற்பத்திக்காகப் பாடுபட்டு உருக்குலைந்த இப்படிப்பட்ட விவசாயத் தொழிலாளி 60 வயது ஆனாலும்கூட அனாதை என்று சொல்லக்கூடிய நிலைமையில் தமிழக அரசு வந்திருக்கிறது என்றால் உண்மை யிலேயே இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பாக வருத் தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்குக் கேரளாவிலே, 60 வயது அடைந்தால், எந்தவிதமான பாகுபாடும் இல்லாமல் பென்ஷன் தொகை 50 ரூபாய் என்று கொடுக்கிறார்கள். இங்கே விவசாயத் தொழி லாளியை நாம் அனாதை என்று ஒதுக்கி வைப்பது எச்

[திரு. பொ. உத்திராபதி] [1981 ஜனவரி 24

காரணத்தைக் கொண்டு சரியல்ல அதே போல், தமிழகத்திலே விவசாய உழவர்களுக்கு 60 வயதானாலே, பிள்ளை இருந்தாலும், மனைவி இருந்தாலும், யார் இருந்தாலும், இல்லாவிட்டாலும், அதையெல்லாம் பார்க்காமல் ரூ. 50 உதவித் தொகை கொடுக்கவேண்டும்.

அதே போல், விவசாயத் தொழிலாளிப் பெண்களைப் பற்றி இங்கே என்ன சொல்கிறார்கள்: விவசாயத் தொழிலாளி பெண் நடவு வேலைக்குச் செல்லும்போது, அது ஏதோ சாதாரண வேலை என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. உண்மையிலே, நீங்கள் பரிவோடு பார்க்கவேண்டும். இந்த நாட்டில் ஏழை, எளிய விவசாயப் பெண்கள் 5 மணி நேரம் 6 மணி நேரம் முழங்கால் சேற்றில் நின்றுகொண்டு எல்லோராலும் முன் நோக்கிச் செல்கிறோம் அவர்கள் 6 மணி நேரம் வயலில் பின் நோக்கிச் சென்று நடவு வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமானப் பாதுகாப்பும் கிடையாது. நாங்கள் கேட்டுக் கொள்வதல்லாம், மற்ற துறையில் பணிபுரியும் அந்தத் தாய்மார்களுக்கு கொடுப்பதுபோல், பிரசவ நேரங்களில் 3 மாதங்களுக்கு மட்டுமாவது ரூ. 30 ஒவ்வொரு விவசாயத் தொழிலாளிப் பெண்ணுக்கும் கொடுக்க வேண்டும். இலவச வைத்திய உதவி செய்ய வேண்டும். அதற்குத் தமிழக அரசு முன் வரவேண்டும். அவர்களது குழந்தைகளுக்குக்கூட எந்தவிதமான பாதுகாப்பும் கிடையாது. அந்த விவசாயப் பெண்கள் அன்றாடம் வேலைக்குச் சென்றால்தான் வீட்டில் உணவு கிடைக்கும். அப்படிப்பட்ட குழந்தைகளுக்குப் பாதுகாப்பு இல்லங்கள் வைத்துக் கொடுக்க வேண்டும். அந்தக் குழந்தைகளைப் பராமரிக்கத் தனியாக ஒவ்வொரு பஞ்சாயத்து ஏரியாவிலும் தனியாக ஒரு பெண்மணியைப்போட்டு, அந்தக் குழந்தைகளைப் பாதுகாக்கவேண்டுமென்று கேட்டு, இப்படிப்பட்ட காரியங்களையெல்லாம் வலியுறுத்தி, எங்கள் தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர் சங்கம் தமிழக அரசுக்கு இன்னும் பல்வேறு கோரிக்கைகளை வைத்து 2 இலட்சம் மகஜர் அளித்திருக்கிறது. தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளிகள் சங்கக் காரியங்களைத் தமிழக அரசாங்கம் பரிசீலனை செய்து, நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு, தமிழ்நாடு வளம் பெற, தமிழ்நாடு மக்கள் வாழ, மத்திய சர்க்காரது தவறான கொள்கைளை எதிர்க்க வேண்டும். மத்திய சர்க்கார் போட்டிருக்கக்கூடிய பாதுகாப்புச் சட்டத்தை முறியடிக்க தமிழக அரசு முன்வரவேண்டும் என்று பேச வாய்ப்பு கொடுத்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமருகிறேன்.

திரு. ஏ. எம். சேதுராமன்: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் மேதகு ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கு.



1981 ஜனவரி 24] [திரு ஏ. எம். சேதுராமன்]

தீர்மானத்தின்மீது பேச எனக்கு வாய்ப்பளித்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஜனவரி திங்கள் 4 முதல் 10 ஆம் தேதி வரையில், உலகம் வியக்கும் வகையில் உலகத் தமிழ் மக்கள் போற்றும் வகையில் 5 ஆம் உலகத் தமிழ் மாநாடு நடத்தி, தமிழக வரலாற்றிலேயே சிறப்பைச் சேர்த்த பெருமை புரட்சித் தலைவரின் அரசுக்கு உண்டு என்பதை நான் மனமாரத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இறுதி நாள் விழாவைச் சிறப்பித்து பெருமை சேர்க்க வந்திருந்த நமது பிரதம அமைச்சரையும், அமைச்சர்களையும் நான் பாராட்ட வேண்டியவனாக இருக்கின்றேன். மதுரையில் தமிழ்ச் சங்கம் அமைக்க எடுத்துக் கொண்ட சீரிய முயற்சி புரட்சித் தலைவரின் தமிழ்ப் பற்றையும், தமிழ் ஆர்வத்தையும் எடுத்துக் காட்டுவதாக இருக்கிறது. எங்கும் தமிழ், எதிலும் தமிழ் ஏற்பட வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தும் வகையில் தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவ எடுத்துக்கொண்ட முயற்சியினை மனமாரப் பாராட்ட வேண்டும்.

தமிழ்ப்பல்கலைக் கழகத்தை வட ஆற்காடு மாவட்டத்தில், குறிப்பாக, ஆற்காட்டில் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வதற்குக் காரணம், வட ஆற்காடு மாவட்டத்தில், இதுவரையில், எந்தப் பல்கலைக்கழகமும் கிடையாது. தமிழ் வளர்த்த இடம் என்பதற்காகவும். தமிழ் வளர வேண்டுமென்பதற்காகவும், அந்த மாவட்டம் வளரவேண்டுமென்பதற்காகவும், அந்த மாவட்டத் தமிழ் மக்கள் வளர்வதற்காகவும் அங்கு ஏற்படுத்த வேண்டும்: அதற்கு பல ஆதாரங்கள் இருக்கின்றன என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

எந்த ஓர் ஐந்தாண்டுத் திட்டத்திலும் ஒதுக்கப்படாத அளவுக்கு ரூ. 3,150 கோடியைத் தமிழகத்துக்குப் பெற்றுத் தந்த புரட்சித் தலைவரின் தனிச் சிறப்பைப் பாராட்டாமலிருக்க முடியாது. விவசாயிகளின் நலன் கருதி, கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ. 200 அளிக்க வேண்டுமென்று கழக அரசு மத்திய அரசைக் கேட்டிருக்கிறது. அந்த ரூ. 200 என்ற இடத்தில் ஒரு விளக்கம் தேவை என்று கருதி, நான் ஒன்றைச் சொல்ல விரைகின்றேன். ரூ. 192.80 காசு இப்பொழுது விவசாயிகளுக்குக் கரும்புக்கு ஒரு டன்னுக்கு அளிக்கப்படுகிறது. அதனை ரூ. 200 ஆக்க வேண்டுமென்று கேட்கிறோம். பாக்டரியில் போய் விசாரித்ததில் விவசாயிகளுடைய கருத்து என்ன என்று சொல்ல விரும்புகிறேன். ரூ. 192.80 என்பது போதுமான விலை என்றாலும், போக்குவரத்துச் செலவை அரசு கொடுக்க வேண்டும், அல்லது சர்க்கரை ஆலை கொடுக்க வேண்டுமென்ற கருத்தினை நான் இங்கே முன்வைக்கிறேன்.

[பிற்பகல் 12-30]

அந்தப் போக்குவரத்துச் செலவினை அவர்கள் ஏற்றுக் கொள்வார்களானால் நிச்சயமாக விவசாயிகள் திருப்தி அடைவார்கள். அதேபோன்று ஒரு குவிண்டாலுக்கு நெல்லுக்கு 130 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசிடம் மாநில அரசு வலியுறுத்தி வருகிறது. இப்போது கொடுக்கப்படும் 115 விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகாத நிலையில் இருக்கிறது. இதனால் விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். விவசாயத்திற்குத் தேவையான மருந்துகள், உரச் சாமான்கள், டில்லர்கள், டிராக்டர்கள் போன்றவைகள் மிக அதிகமான விலைக்கு விற்றுக் கொண்டிருக்கின்றன. அதனாலே தற்போது கழக அரசு கேட்டுக் கொண்டிருக்கின்ற 130 ரூபாய் கூட போதாது. அதை 150 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க கேட்கவேண்டும் என்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அடுத்து சர்க்கரை ஆலைகள் இருக்கும் இடங்களில் போக்குவரத்து வசதியை முன்னிட்டு பெட்ரோல் பங்குகள் நிறுவப்படவேண்டும் என்று குறிப்பாக இருக்கின்றன. இது குறித்து அதிகாரிகள் என்னிடத்திலே கேட்டுக்கொண்டதற்கிணங்கத்தான் நான் இதைச் சொல்ல விழைகிறேன். குறிப்பாக வேலூரில் உள்ளசர்க்கரை ஆலையில் பெட்ரோல் பங்கு தேவைப்படுகிறது. அங்கே ஒரு பெட்ரோல் பங்கு போட்டால் அந்தப்பகுதியில் உள்ள மில்களுக்கு அது வசதியாக அமையும்.

நெல்லுக்கு குவிண்டாலுக்கு 130 ரூபாய் கேட்டிருப்பது போதாது என்றும் அதை மேலும் அதிகமாக உயர்த்திக் கேட்க வேண்டும் என்றும் மறுபடியும் வலியுறுத்திக் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து விவசாயிகளுக்கு கடன் ஒரு விதத்திலே நமது மாநிலத்தில் கொடுக்கப்படுகிறது. ஆனால் மற்ற மாநிலங்களில் 3 முறையில் கொடுக்கிறார்கள். இதை நாங்கள் நேரிலேயே பார்க்க முடிந்தது. எனவே நமது அரசாங்கம் விவசாயிகளுக்கு கடனை மூன்று விதங்களில் தைரியமாகக் கொடுக்கவேண்டும். கடன் வாங்கிய விவசாயிகள் எங்கேயும் போய்விட மாட்டார்கள். எனவே தைரியமாகக் கொடுக்கலாம். மாட்டுக்குக் கடன் கொடுத்தால் அதை பாலை வாங்கிக் கொள்வதன் மூலமாக திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். நெல்லுக்கு கடன் கொடுத்தால் நெல்லாகவே பெற்றுக் கொள்ளலாம். டில்லர், டிராக்டர்களுக்குக் கடன் கொடுத்தால் அவர்களிடம் இருந்து நீண்ட காலத்திற்கு, லாங் டெர்ம் ஆகப் பெற்றுக் கொள்ளலாம். எனவே, விவசாயிகளுக்குத் தைரியமாகக் கடன் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.





விவசாயிகள் கட்டவேண்டிய மின்சாரக் கட்டணத்தை இன்றைக்கு நல்ல முறையில் நமது கழக அரசு எளிய முறையில் வசூலித்துக் கொண்டிருக்கிறது. 35 கோடி ரூபாயாக இருந்த மின்சாரக் கட்டணத்தில் 10 கோடி ரூபாய் புரட்சித் தலைவர் ஆட்சியிலே வசூலிக்கப்பட்டு இருப்பது மிகப் பெரிய சாதனையாகும். வற்புறுத்தல் இல்லாமல், துன்புறுத்தாமல் 1 பிளஸ் 1 என்ற முறையில் வசூலித்தது மிகவும் பாரட்டுக்குரிய செயலாகும்.

மேலும் மின்சாரத் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு தமிழக அரசு மின்சாரத் துறையிலே இருந்து 189.70 கோடி ரூபாய் செலவில் 420 கிலோவாட் கெப்பாசிடியுள்ள அனல் மின் திட்டத்தை மேட்டூரிலே அமைத்திருக்கிறார்கள். அதேபோன்று 120 மெகாவாட் கெப்பாசிடியில் ஒரு புனல் மின்திட்டத்தை 81.70 லட்சம் ரூபாய் செலவிலே அமைத்து, சீக்கிரத்திலேயே ஆரம்பிக்கப்பட்டு, 5 ஆண்டிலே முழுமையாக முடிக்கப்பட இருப்பது பெரும் சாதனை என்பதை பாராட்டாமல் இருக்க முடியாது.

ஆகவே,, இதுபோன்று விவசாயிகளுக்குத் தொல்லை கொடுக்காமல் அதே சமயத்தில் அரசாங்கத்திற்குத் கட்டவேண்டிய கட்டணத்தை வசூலிக்கவேண்டும் என்ற அடிப்படையில் 1 பிளஸ் 1 என்னும் ஏற்பாட்டை அரசு ஏற்றுக்கொண்டதை எல்லோரும் பாராட்டுகிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இந்த நேரத்தில் நான் ஒன்றைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். விவசாயிகளுக்கு இந்த அரசு அளிக்கிற சலுகைகள் தெரியுமோ தெரியாதோ தெரியவில்லை. யூனிட் 45 பைசாவிற்கு மின்சாரத்தை அண்டை மாநிலத்தில் இருந்து வாங்கி, விவசாய உபயோகத்திற்காக பயன்படுத்துறவர்களுக்கு 12 பைசா அல்லது 14 பைசா என்கிற அளவிற்கு மின்சாரம் அளித்து வருகிறார்கள் என்பதை விவசாயமக்கள் உணரவேண்டும். அவர்கள் வாழ்வு வளரவேண்டும், அவர்கள் நல்வாழ்வு வாழவேண்டும் என்கிற அடிப்படையில் தான் சலுகை அளிக்கப்பட்டு வருகிறது, என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

நமது மாநிலத்தில் உள்ள 376 ஊராட்சி ஒன்றியங்களில் 69 ஒன்றியங்கள் தற்போது தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் முன்னேற்றம் அடைந்து வருகின்றன. இப்போது புரட்சித் தலைவர் அவர்கள் இந்த கவர்னர் உரை மூலமாக மேலும் 120 ஒன்றியங்கள் இந்த ஆண்டு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்படும் என்று அறிவித்து இருப்பது வரவேற்கத்தக்கதாகும். அதில் விட்டுப்போன திமிரி ஒன்றியம், ஆற்காடு ஒன்றியம் ஆகியவற்றை இத்துடன் இணைக்கவேண்டும் என்று கேட்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவ அவர்களே, சங்கம் வைத்துக் தமிழ் வளர்த்த கூடல்மாநகரில் 5 ஆம் உலகத் தமிழ் மாநாட்டை சீரோடும் சிறப்போடும் நடத்திக் காட்டிய மர்ண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்களுக்கு பாராட்டுக்களைத் தெரிவித்து என் உரையை துவக்குகிறேன். புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி தமிழகத்தின் பொற்காலம் என்று அமெரிக்கப் பல்கலைக்கழகம் ஒரு அத்தாட்சி வழங்கியிருக்கிறது. அதனால் தான் அவர் டாக்டர் புரட்சித் தலைவராக அழைக்கப்படுகிறார். அந்த வகையில் தமிழகத்தில் நிர்வாகம் சீராகவும் சிறப்பாகவும் இருக்கின்றது புரட்சித் தலைவர் ஆட்சி என்று அமெரிக்கப் பல்கலைக்கழகம் சான்று வழங்கியிருக்கிறது. இருப்பினும், இன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் எங்கள் மீது தூசி வாரி இறைக்க முற்படுகிறார்கள். இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் உரை நிகழ்த்துகிறபோது அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக அரசை வர்ணிக்கறபோது, அழகான பெண்ணின் முகத்தில் அம்மை விழுந்தது போல் இருக்கிறது என்று கூறினார்கள். அந்த உதாரணத்தை அவர்கள் சொல்கிற போது அதன் அர்த்தத்தை அவர்கள் உணர்ந்து கூறினார்களா என்பதை நான் ஐயுறுகிறேன். ஏன் என்று கேட்டால் அழகிய பெண் என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே. அழகிய பெண் என்று அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை அவர் வர்ணித்து இருக்கிறார் என்று பொருள் கொள்ளலாம் என்று கருதுகிறேன். அம்மை விழுந்த முகம் என்று கூறினார்கள். அம்மை தழும்பு ஏற்பட்டதற்கு அது அழகாகப் பிறந்த அந்தப் பெண்ணின் குற்றம் ஆகாது அம்மை விழுந்து விட்டால் சில நேரங்களில் அத்தகைய வடுக்கள் இருக்கத்தான் செய்யும். எப்படி அழகான பெண்ணாகப் பிறந்தவளுக்கு அம்மை விழுந்தவுடன் தழும்புகள் ஏற்பட்டு விடுகிறதோ அதைப்போல, நம்முடைய சமூதாய அமைப்பில் தி.மு.க. போன்ற உள்ள எதிர்கட்சிகள் எந்த விதத்தில் செயல்படுகிறார்களோ அவர்கள் பிரச்சாரத்தின் திறன் எந்த விதத்தில் அமைகிறதோ அதைப்பொறுத்து இந்த அரசு மீது தழும்புபோன்ற குற்றச் சாட்டை ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள் அழகான பெண்ணின் முகத்தில் அம்மை வடு இருந்தாலும் உள்ளத்தில் களங்கம் இல்லாமல் இருப்பதைப்போல், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக அரசு நிர்வாகத்தில் பொறுத்த வரையிலும் எந்தவிதமான களங்கமும் இல்லை என்பதைஇந்த நேரத்தில் நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அது மட்டுமல்லாமல், நேற்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இந்த மாமன்றத்தில் உரையாற்றுகின்றபோது அடிக்கடி ஏதோ குடித்துக்கொண்டு பேருரை நிகழ்த்தினார்கள். அந்தப் பேருரையில் எரிசாராயத்திலிருந்து குடிசாராயம் எவ்வளவு லிட்டர் தயாரிக்க இயலும் என்று





விரிவான முறையில் உரை நிகழ்த்தினார்கள். அவர் பேசுகிற நேரத்தில் பார்த்தால் அனுபவம் பேசுகிறதோ என்று ஐயுறுகிற அளவிற்கு அவ்வளவு விரிவாக சாராயம் தயாரிக்கும் முறை பற்றி எடுத்துச் சொன்னார்கள். முதன்முதலாக இந்த எரி சாராயத்தைப் பற்றிச் சொல்கிறபோது, ஒரு வாரத்திற்கு முன்பு 3 கோடி ஊழல் என்று சொன்னார்கள், அதற்கு அடுத்த வாரம் 12 கோடி என்று சொன்னார்கள், இறுதியாக 30 கோடி ஊழல் என்று கூறினார்கள் நேற்றையதினம் பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசும்போது முழு உண்மையும் எனக்குத் தெரிய வில்லை என குறிப்பிட்டார்கள் முழு உண்மை தெரியாத போது ஊழல் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்.

[பிற்பகல் 12-40]

அடுத்து இந்த குற்றச்சாட்டுகளுக்கெல்லாம் எங்களது இதய தெய்வம் இந்தத் தமிழகத்தின் முதல்வர், புரட்சித் தலைவர் அவர்கள் இதுவரையில் ... — ......

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே; மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது என்னைப் பற்றி ஏதோ குடித்துக் கொண்டு இங்கே பேருரை நிகழ்த்தியதாகக் குறிப்பிட்டார்கள். நான் தண்ணீர்தான் குடித்தேன். அமைச்சர்கள் எல்லாம் எதைக் குடிக்கிறார்களோ அதைத்தான் குடித்தேன்..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சரி. ஐஸ் வாட்டர் சாப்பிட்டிருப்பார். அது ஒன்றும் பெரிய பிரச்சினை அல்ல. விட்டு விடுங்கள்.

திரு. வ. சத்தியமூர்த்தி : மதுரையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டுச் செலவையும், அரிசனங்களுடைய நிலையையும் ஒப்பிட்டு மாண்புமிகு இந்திரா காங்கிரசைச் சேர்ந்த உறுப்பினர் அவர்கள் நேற்று தன்னுடைய உரையிலே குறிப்பிட்டார்கள். மதுரை மாநகரத்தில் மிகப்பெரிய அளவில் வசதிகள் செய்யப்பட்டிருப்பது என்பது இன்றைக்குக் கண்கூடாகக்காணக்கூடிய ஒன்றாகும் அங்கு சாலை வசதிகள் பல செய்யப்பட்டிருக்கின்றன. குடிசைப் பகுதிகள் ஒளிமயமான பகுதிகளாக ஆக்கப்பட்டிருக்கின்றன. அங்கு இப்படி பல்வேறு விதமான வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட செலவினங்களை வீண்விரயம் என்று யாரும் கருத இயலாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே அரிசனங்களுடைய பிரச்சினைகள் பற்றியும் மதுரை உலகத் தமிழ் மாநாடு பற்றியும் ஒப்பிட்டு பேசுவது மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடுவது போன்றது என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து ஆளுநர் அவர்களது உரையில் வேலைவாய்ப்பு பற்றி ஒரு குறிப்பு கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதனை வரவேற்க நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன். வேலை வாய்ப்பு

அலுவலகங்களில் பதிவு செய்திருக்கின்ற ஏழை குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கின்ற வகையில் ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வொருவருக்கும் வேலை என்ற புரட்சிகரமான திட்டம் அறிமுகம் செய்யப்பட்டிருக்கின்றது. இந்தத் திட்டத்தைப் பாராட்டி வரவேற்பதுடன் நடைமுறைக்கு உகந்த வகையிலே ஒரு சட்ட முன்வடிவை புரட்சித் தலைவர் அவர்களின் அரசாங்கம் உடனே கொண்டு வர வேண்டும் என்றும் அதன் மூலம் ஏழை எளிய மக்களுடைய வாழ்வு நலம் பெற வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வறட்சி நிவாரணப் பகுதி என்ற வகையிலே இராமநாதபுரம் மாவட்டம். வறட்சி பகுதியாக அறிவிக்க வேண்டுகிறேன். முகவை மாவட்ட நீர்பாசனத்தை அபிவிருத்தி செய்ய வேண்டி அரசு விரைவில் கிழக்கு முகவை மாவட்டத்தில் நீர் பாசன கருத்தரங்கு நடத்திட வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நேரம் இல்லை நீங்கள் முடித்துவிடுங்கள் அடுத்து டாக்டர் சௌரிராஜன் அவர்களைப் பேச அழைக்கிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன்: மரியாதைக்குரிய சட்ட மன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தில் காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே என்னை பேசுவதற்கு அனுமதி அளித்தமைக்கு நன்றி கூற முற்படுகிறேன். அதுவும் தனிப்பட்ட முறையில் 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 30 ஆம் நாளன்று, நான் ஆளுநர் அவர்களுக்கு இந்த அவையை இன்னின்ன காரணங்களுக்காக கூட்ட வேண்டும் 4 மாதங்களாக நடந்த ஆட்சியிலே விமரிசனம் செய்வதற்கு எதிர்கட்சியிலே உள்ள உறுப்பினர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்க வேண்டும் என்ற ஒரு விண்ணப்பதைத்த, ஒரு கோரிக்கையை ஆளுநர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். அதனுடைய விளைவாகவோ அல்லது மற்ற எந்தக் காரணங்களினாலோ டிசம்பர் 10ம் தேதியன்று அறிவிப்பு வந்தது. எனக்கும் கடிதம் வந்தது, ஜனவரி 21 ஆம் தேதி அன்று சட்டமன்றம் கூட்டப்படும் என்று ஆளுநர் அவர்களே எனக்கு கடிதம் எழுதியுள்ளார். அதற்காகவே அவர்களுக்கு நான் இன்னொரு முறை நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அண்மையில் நடந்த உலகத்தமிழ் மகாநாடு பற்றி உள்ளபடியே தமிழகத்திலே உள்ள அனைவரும் பெருமைப்பட வேண்டும். கருத்துக்கள் வேறுபட இருக்கலாம். ஆனால் 12 கோடி ரூபாய் செலவிலே நடத்தப்பட்ட தமிழ் மகாநாட்டிலே, அதனுடைய விளைவுகள் என்ன என்பதைப் பற்றி நாம் சிந்திக்க கடமைப் பட்டிருக்கிறோம். இந்தி பேசாத மாநிலங்களிலுள்ள மக்களுக்கு இந்தியை கட்டாயமாக புகுத்த மாட்டோம் என்ற வாக்குறுதியை, மத்தியில் உள்ள அரசு நாட்டிலுள்ள அனைத்து மொழி



களையும் ஒன்றாகவே பாவித்து, எல்லா மொழியினுடைய வளர்ச்சிக்கும் உத்தரவாதம் அளிக்கும் என்ற முறையிலும் இந்த நாட்டினுடைய பிரதமர் அவர்களை அங்கே வரவழைத்து தமிழகத்திலுள்ள மதுரையிலே அன்று கூடிய லட்சோபலட்ச தமிழக மக்களின் முன்பாக சொல்ல வைத்தப் பெருமை நம்முடைய தமிழக முதல்வர் அவர்களையே சாரும் என்பதையும் இங்கே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக தமிழக முதல்வர் அவர்கள் ஆற்றிய உரையிலே —நான் அதை தொலைக்காட்சியிலேதான் பார்க்க முடிந்தது.— அதற்கான காரணத்தை பின்னால் சொல்கிறேன்.—அவருடைய உரையிலே, தமிழக மக்கள் கண்ணியத்திலும், நாகரிகத்திலும், கடமையிலும், கட்டுபாட்டிலும் தவறியவர்கள் அல்ல—மிக உயர்ந்தவர்கள் என்றார். அது உண்மைதான். தேசிய நீரோட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்கள் தமிழர்கள். எங்களுடைய தலைவர், இலக்கியச் செல்வர் சொல்வது போல தமிழ் இல்லாத தேசியமும், தேசியம் இல்லாத தமிழும் இருக்கவே முடியாது என்றும். '30 கோடி முகமுடையாள்—செப்பும் மொழி பதினெட்டுடையாள் ஆனால், சிந்தனை ஒன்றே உடையாள்,' என்று சொல்லக் கூடிய அளவிற்கு தமிழ் மக்கள் அன்று நடந்துக் கொண்டார்கள் மத்திய அரசிற்கு என்றும் விஸ்வாசமாக, ஒருமைப்பாட்டினை காப்பதில் மற்ற மாநிலத்தவர்களுக்கு குறைந்தவர்கள் அல்ல என்பதையும் அந்த நேரத்தில் நன்றாகவே எடுத்துக் காட்டினார்கள். ஆகவே அந்த அடிப்படையிலே தேசிய ஒருமைப்பாட்டினை காக்கின்ற மகாநாடாகவும், சிறுபான்மை மொழி பேசுகின்ற மக்களின்மீது அவர்கள் விரும்பாத மொழி சுமத்தப்படமாட்டாது என்பதற்கான உறுதி மொழியை, பெறுவதற்கான மகாநாடாகவுமே இதை நான் கருதுகிறேன். அந்த அளவிற்கு இதை நோக்குகிற நேரத்திலே எத்தனைக் கோடி ரூபாய் செலவழித்தாலும் பரவாயில்லை என்றுதான் என்னைப் போன்றவர்கள் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் சில கருத்துக்களையும் நான் சொல்ல விரும்புகிறேன்.

மகாநாடு என்று வந்தால், குறைபாடுகளும் இருக்கத்தான் செய்யும். என்னைப் பொறுத்தவரையில் கூட எனக்கு மகாநாட்டுக்கு அழைப்பு வந்ததே ஒழிய எங்கே வரவேண்டும், யாரை சந்திப்பது, எங்கே எங்களுக்குத் தங்க வேண்டிய இடம் கிடைக்கும் என்று கூடத் தெரியாமல், 4 ஆம் தேதியன்றே அங்கே சென்று தெருவிலே நின்று திண்டாடி இரவு 12 மணிக்கு மேல் நடுத் தெருவிலேயா படுத்து உறங்குவது என்று நினைத்து உடனடியாகப் புறப்பட்டு வந்தேன் என்பதைச் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மிக இனிமையான, தொன்மையான மொழி தமிழ் மொழி, மொழி என்பது மனிதனுடைய அறிவையும் ஆற்றலையும் உபயோகித்து அதை பிறருக்குச் சொல்லக் கூடிய ஒரு சாதனம்.

அதிலே தமிழ் மொழி மிகத் தொன்மையான மொழி. தமிழன் அறிவிலும் ஆற்றலிலும் இந்த உலகத்திலே உள்ள அனைவருக்கும் —ஏன் எல்லோரையும் விடச் சிறந்தவன். அந்த அடிப்படையிலே சொல்கிற நேரத்திலே இப்படிப்பட்ட மகாநாடுகளில், தமிழ் மொழியின் இலக்கிய ஆராய்ச்சி பற்றியும், வரலாற்றைப் பற்றியும் மாத்திரம் எடுத்துக் கொள்ளாமல், தமிழனின் அறிவின் உயர்வையும், அவனுடைய விஞ்ஞான அறிவையும் ஆற்றலையும் வெளிப்படுத்துகின்ற ஆராய்ச்சிகளுக்கும் இத்தகைய மகாநாடுகளில் இடம் அளிக்க அரசாங்கம் முன் வந்திருக்க வேண்டும், இனி மேலாவது வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஔவை தமிழிலே பாட்டொலித்தாள், பூமி பிளந்தது. கண்ணகி தமிழிலே சாடினாள், மதுரை மாநகரமே பற்றி எரிந்தது. குறளை தமிழிலே எழுதி, ஏட்டிலே வடித்து வைத்தால், அது வைகை ஆற்றையே கிழித்துக் கொண்டு சென்றது. இவையெல்லாம் கதைகள் என்று சொல்லலாம். ஆனால் நடைமுறையிலேயே அதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளது என்பதை எல்லோரும் ஒத்துக் கொள்வார்கள்.

[பிற்பகல் 12-50]

நான் இண்டர்மீடியெட் படித்துக் கொண்டிருந்த போது டால்டன் ஆட்டாமிக் தியரியில் அணுவைப் பிளக்க முடியாது என்று சொன்னார்கள். ஆனால் அன்றே ஔவைப் பாட்டி அணுவைப் பிளந்து ஏழ் கடலைப் புகுத்திக் குறுகத்தறித்த குறள் என்று சொல்லியிருக்கிறார்கள். அணுவைப் பிளக்க முடியும் என்பது தமிழனுக்கு அன்றே தெரிந்திருந்தது. இப்படிப்பட்ட விஞ்ஞான ஆராய்ச்சிகளை தமிழிலேயே நாம் செய்ய வேண்டும். தமிழ் அறிஞர்கள் அறிவை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்காக எவ்வளவு பணம் வேண்டுமானாலும் செலவிடலாம். இன்று சூரிய ஒளி மூலம் சக்தி பெற்று அதைப் பயன்படுத்தமுடியுமா என்று உலகம் பூராவும் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஒலி மூலம் அதுவும் தமிழ் ஓசை மூலம் உலகத்தையே கட்டி ஆள முடியும் என்றளவிற்கு தமிழ் மக்களின் அறிவும் விஞ்ஞானமும் முன்னேறியிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. அதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நாம் மூன்று மடங்கு அதிகமாகப் பெற்றுவிட்டோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அன்றிருந்த ரூபாயின் மதிப்பையும் இன்றிருக்கிற ரூபாயின் மதிப்பையும் ஒப்பிட்டு கணக்குப் போட்டுப்பார்த்தால் நிச்சயமாக ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் என்ன வேலைகளைச் செய்தோமோ அந்த அளவு வேலைகளைக் கூட இந்த மூன்று மடங்குத் தொகையை வைத்துக் கொண்டு செய்யமுடியுமா என்பது ஐயப்பாடாகவே இருக்கிறது. அண்மையில் இந்த





ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் ட்றாப்ட் ப்ளான் பற்றி ஒரு சிறிய விளக்கம் பத்திரிகைகளில் குறிப்பாக தமிழக அரசு சார்பாக வந்திருக்கிறது. நாஷணல் ஹெரால்ட், 5—1—81. தமிழ்நாட்டு மக்கள் 1976ல் இருந்து 1980 க்குள்ளாக இந்த நான்காண்டு காலத்தில் 52 சதவிகிதம் பாவர்ட்டி லைனில் இருந்தவர்கள் இன்று 62 சதவிகிதம் ஆக அதிகரித்திருப்பதாக அந்தக் குறிப்பு சொல்கிறது.

அதேபோல் இந்தியா பூராவும் வேலையில்லாத் திண்டாட்டம் 8.1 சதவிகிதம் என்றிருக்கும் நிலையில் தமிழ்நாட்டில் உள்ளவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் 16.1 சதவிகிதம் என்றளவிற்கு இருக்கிறது. அந்தளவிற்கு ஏழ்மை, மக்கள் பிச்சைக்காரர்களாக போய் இருக்கிறார்கள். இது கடந்த நான்காண்டுகால புள்ளிவிவரங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசு நமக்கு கொடுக்கிறது ப்ளான் அவுட்லே-யில் 40 சதவிகிதம்தான் கொடுக்கப்போகிறார்கள். தமிழ்நாடு ஏழ்மையை நோக்கிச் செல்கிற நிலையில், மற்ற மாநிலங்களைவிட வறுமைக் கோட்டின் கீழ் இருப்பவர்கள் அதிகமாக இருப்பதால் இன்னும் அதிகப்படியான சதவிகிதப் பணம் மத்திய அரசு நம் ப்ளான் அவுட்லேக்கு தரவேண்டும் என்று நாம் வற்புறுத்திக் கேட்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சென்னை நகர மேம்பாடு பற்றிப் பேசியிருக்கிறார்கள். வீராணம் திட்டத்திற்குப் பதிலாக மாற்றுத் திட்டம் ஒன்றை முன்வைத்திருக்கிறார்கள். வீராணம் திட்டத்தைக் கொடுத்தவர்கள் யார்? அன்றுள்ள மந்திரிகளா? இல்லை. இதே பொறியியல் நிபுணர்கள்தான். இன்று மாற்றுத் திட்டத்தைக் கொடுப்பவர்களும் அதே பொறியியல் நிபுணர்கள்தான். இந்த அதிகாரிகளைப் பற்றி நாம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். ஒரு காரியத்தைப் பற்றி கேட்டால் இப்படியும் செய்யலாம் அப்படியும் செய்யலாம், நீங்கள் சொல்கிறபடி இப்படியும் செய்யலாம் என்று சொல்லிவிட்டு தவறு நேரிடுகிற போது தட்டிக்கழித்து போய் விடுவது அதிகாரவர்க்கத்தின் வழக்கமான நிலையாகும். ஆகவே அப்படிச் செய்யாமல் நம் சிந்தனையை உபயோகித்துப் பார்க்க வேண்டும். வீராணம் திட்டம் சரி என்று அவர்கள் சொன்னார்கள். இன்று சரியில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, அப்படி சரி என்று சொன்னவர்களை வேலையைவிட்டு வெளியே அனுப்புங்கள். அதைச் செய்திருக்க வேண்டும்.

என்னைப் பொறுத்த வரையில் நான் சொல்வேன். ஒரு வீராணத்தையே சமாளிக்க முடியவில்லை, மற்றுமொரு வீராணம் நமக்கு வேண்டாம். வேறு ஏதாவது மாற்றுவழிகள் உண்டா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகஸ்ட் 5, எக்கணாமிக் டைம்ஸ்-லும் நேற்றைய ஹிந்துவிலும் கூட பல மாற்றுத் திட்டங்களை பல பொறியியல் நிபுணர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஒக்கேன்மடகு தண்ணீரை தேக்கி வைக்கமுடியும். புலிக்காட் தண்ணீரையும் தேக்கி வைக்க முடியும். இவற்றைச் சேர்த்து வைத்தால் சென்னை நகரின் குடிநீர்ப்பஞ்சம் 40 சதவிகித அளவிற்கு

தீர்த்து வைக்க முடியும் என்று பொறியியல் நிபுணர்கள் ஆதாரத்தோடு சொல்லியிருக்கிறார்கள். இதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒரு வீராணத்தினால் பட்ட அவதியே போதும், மற்றொரு வீராணம் தமிழகத்தில் உருவாக வேண்டாம்.

அடுத்து, மதுவிலக்கு கொள்கை பற்றி இங்கே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்கள் இயக்கம் காங்கிரஸ் இயக்கத்தின் பாரம்பரியத்தில் வந்தது. மதுவிலக்குக் கொள்கையில் அசைக்கமுடியாத நம்பிக்கை உடையவர்கள் நாங்கள் சந்தர்ப்பத்திற்காக அல்லது சில சில காரணங்களின் அடிப்படையில் எதிர்க்கட்சி கூட்டணியோடு நாங்கள் இங்கே வந்திருந்த போதிலும்கூட எங்கள் அடிப்படைக் கொள்கைகளில் எந்தவிதமான மாறுதலும் இருக்க முடியாது. இந்த மதுவிலக்கை இப்போதுள்ள நிலைமையில் சரியாக அமுல் செய்ய முடியவில்லை காரணம், 1973-லே ஆட்சியிலே இருந்தவர்கள், டெம்பரரி சஸ்பென்ஷன் ஆப் புரொகிபிஷன் என்று தெரியாமல் செய்ததினால் இளைஞர்கள் எல்லாம் குடித்துவிட்டு, என்றென்றும் மொடாக் குடியர்களாக ஆகிவிட்ட காரணத்தால், மதுவிலக்கைப் பூரணமாக அமுல்நடத்த முடியவில்லை என்பதை ஒப்புக்கொண்டே தீரவேண்டும். அந்த நேரத்திலே, இராஜாஜி அவர்கள் மதுவிலக்கைத் தளர்த்த வேண்டாம் என்று கெஞ்சினார்கள். அதைக் கேட்காமல், மதுவிலக்கை டெம்பரரியாக சஸ்பெண்ட் செய்த காரணத்தினால், ஏராளமான இளைஞர்கள் புதிதாக குடிப்பவர்கள் இந்த நாட்டிலே உருவாகி, அதைக் கட்டுப்படுத்த முடியாத சூழ்நிலையிலே இருக்கிறோம். இந்த வாக்குறுதியை புரட்சித் தலைவர் அவர்கள் தேர்தலுக்கு முன்னாலே சொல்லி இருக்க வேண்டும். இப்போது இங்கு, 234 சட்டமன்ற உறுப்பினர்களை இதைத் தளர்த்தலாமா, வேண்டாமா என்று கேட்பது நியாயமல்ல. தேர்தலுக்கு முன்னால் இந்த மதுவிலக்கை எடுக்கப் போகிறேன் என்று சொல்லியிருந்தால்.....................

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உங்கள் நேரம் முடிந்து விட்டது. உட்காருங்கள். திருமதி பொன்னம்மாள்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** அவர் மனம் திறந்து பேசுகின்றார் ; அனுமதியுங்கள்.

**டாக்டர் கே. சௌரிராஜன் :** கடைசியாக ஒன்றைச் சொல்கிறேன். இந்த மருத்துவக் கல்லூரி தேர்வின் முடிவை 6 மாதங்கள் கழித்துத்தான் வெளியிட்டீர்கள். அந்த மருத்துவக்கல்லூரிக்கு தேர்ச்சி பெற்றவர்கள், நன்கு படித்தவர்கள், நல்ல மார்க்கு, வாங்கியவர்கள் மற்றக் கல்லூரிகளிலே பி.எஸ்.ஸி., பி.காம். வகுப்புகளில் சேர்ந்து படித்துக் கொண்டிருக்கிறார்கள். 6 மாதங்கள் கழித்து இந்த முடிவுகளைச் சொன்னால், அவர்கள் அதைவிட்டு வரப் போகிறார்கள். அப்போது 1,200 இடங்கள்...

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற முறை பி.யு.சி. படித்தவர்கள், இந்த ஆண்டு பிளஸ் இரண்டு படித்தவர்





கள், இரு சாராரையும் சேர்க்க வேண்டிய காரணத்தினால், அனாடமி, பிசியாலஜிக்கு போக வேண்டிய காரணத்தினால், அந்த இலாகாவிற்கு வேலைப் பளு ஜாஸ்தியாக இருக்குமென்றும், அந்த இலாகாவிலே இடமில்லை என்பதாலும், 6 மாதங்கள் தவணை கொடுத்து, இரண்டாம் பேச்சிலே படிப்பதற்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. பிளஸ் இரண்டு மாணவர்களை எடுக்க வேண்டிய காரணத்தினால் இந்த நிலை என்று பத்திரிகைகளுக்கு விளக்கியிருக்கிறேன். இதிலே எந்தவிதமான உள்நோக்கமும் கிடையாது. திட்டமிட்டபடி இந்த ஆண்டு ஜனவரியிலே சேர்ந்திருக்கிறார்கள். பி.யு.சி. படித்தவர்கள் 25 பேர்களும், பிளஸ் 2 படித்தவர்கள் 25 பேர்களும் ஆக 50 பேர்கள் எல்லாம் ஓர்க் லோட் இரண்டு மடங்காக ஏற்படுமென்ற நிலையையெல்லாம், விளக்கமாக சொல்லி இருக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** போதும் உட்காருங்கள். திருமதி பொன்னம்மாள்.

* **திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது கவர்னர் அவர்களால் கொண்டுவரப்பட்ட திட்டங்களை ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். முதன் முதலில் உலகத் தமிழ் மாநாட்டை நடத்தியது ஒரு மிகப் பெருமைக்குரிய காரியம். இவ்வளவு மிகப் பெரிய மாநாட்டிலே, ஒரு சின்ன அசம்பாவிதம்கூட இல்லாமல் நடத்தப்பட்டதைப் பார்க்கும்போது, நாங்கள் நன்றிசொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால், அதே நேரத்திலே ஒரு குறையைச் சொல்ல ஆசைப்படுகிறேன். நீங்கள் கூட, அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம், அதிலே இருந்து இன்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று பெயர் வைத்துக்கொண்டிருக்கிறீர்கள்.

[பிற்பகல் 1—00]

ஆனால் ஒரு சிறந்த தலைவன், உலகமெல்லாம் போற்றும் உத்தமத் தலைவன் காமராஜ் அவர்கள் வெள்ளைக்காரன் ஆட்சியில் இருந்தபோதே '' தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி '' என்று பெயர் வைத்தார்கள். அவர்கள் இந்த மன்றத்தில் இருக்கக்கூடிய காலத்தில் தமிழ்த் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து தமிழ் வளர்ச்சிக் குழுவை ஏற்படுத்தி, சட்ட மன்ற நிகழ்ச்சிகள் தமிழில் நடைபெற வழி செய்தார்கள். அவர்களை ஏனோ, மறந்துவிட்டீர்கள். ஒரு உருவப் படம் போட்டு ஊர்வலத்தில் கொண்டு வர மறந்து விட்டீர்கள் என்பதை நினைக்கும்போது வேதனைப்படுகிறோம் என்பதை மனம் நொந்து கூறுகிறேன். இன்னொரு குறை—எல்லாப் பக்கங்களிலும் நுழை வாசல் போட்டீர்கள். ஆமதாபாத்தில் இருந்து, பம்பாயில் இருந்தெல்லாம் தமிழர்கள் வருகிறார்கள். அவர்கள் எல்லாம் கார், பஸ்ஸில் வரவேண்டுமென்று சொன்னால் பெங்களூர் வந்து, ஊட்டி வழி

யாக காலை வந்து பிறகு திண்டுக்கல் வழியாக வர வேண்டும். திண்டுக்கல் பகுதியில் ஏன் ஒரு நுழைவாசல் அமைக்க மறந்து விட்டீர்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இவ்வளவு மிகப் பெரிய மாநாட்டினைச் சிறப்பாக நடத்திய நிலையில், சிறு அசம்பாவிதம் கூட ஏற்படாதவாறு நடத்திய நிலையில் இந்த இரண்டு பெரிய குறைகளைச் செய்திருப்பது வருந்தத்தக்கது.

கவர்னர் உரையில் மதுவிலக்கைப் பற்றி உங்கள் கருத்தை எடுத்துச் சொல்லுங்கள் என்று கூறியிருக்கிறார்கள். நான் ஒரு பெண் என்ற முறையில் கூறிக் கொள்கிறேன். நீங்கள் அடிபடப் போவதில்லை. உங்களுடைய மனைவிமார்களோ, உடன்பிறந்த சகோதரிகளோ குடித்துவிட்டு அடிக்க மாட்டார்கள். இப்போது பெண்களும் குடிக்கிறார்களா, தாய்க்குலம் சிரமப்படும் அளவில் ஏற்கெனவே இருந்த அரசாங்கம் மதுவிலக்கைத் தளர்த்தி குடிக்காமல் இருந்த இளைஞர்கள் குடித்துக் கெட்டுப் போகும் அளவுக்கு நிலைமையை ஏற்படுத்தியது. மீண்டும் அந்த நிலைமையை உருவாக்க வேண்டுமா என்பதைப் பற்றி இந்த அரசாங்கமும், முதல்வர் அவர்களும் யோசித்துப் பார்க்க வேண்டும்.

அப்படி மீண்டும் மதுவைக் கொண்டுவந்தால் உங்களைத் தாய்மார்கள் மீண்டும் ஏற்றுக்கொள்வார்களா? தாய்க்குலம் ஆதரவு கொடுப்பார்களா? உங்களைத் தெய்வமாக நினைத்து ஆதரவு கொடுத்தார்கள்? ஆகவே, இதிலே பங்கம் ஏற்படுமானால், தாய்மார்கள் வேதனைப்படுவார்கள், கண்ணீர் சிந்துவார்கள் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

குடித்துவிட்டு வாழ்வு சிதைந்து போகக்கூடிய அளவுக்கு மதுவிலக்கை மீண்டும் ரத்து செய்ய வேண்டாம். மதுவிலக்குச் சட்டத்தைத் தளர்த்த வேண்டாம். மது குடிப்பவர்கள் மீது கடுமையாக என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதைச் செய்ய வேண்டுமென்று தாய்க்குலத்தின் சார்பிலும் அரிசன மக்கள் சார்பிலும் பணிவோடு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

மகாத்மா காந்தி அவர்களால்தான் பொன்னம்மா போன்ற நாங்கள் எல்லாம் இங்கு வந்திருக்கிறோம். தாழ்த்தப்பட்ட மக்களில் 112 பிரிவுகள் இருக்கின்றன. மகாத்மா காந்தி அவர்கள் அவர்களை எல்லாம் இணைத்து அரிசனங்கள் என்று பெயர் வைத்தார்கள். அதை மாற்றி ஆதித் திராவிடர் என்று குறிப்பிட்டால் அது ஒரு குறிப்பிட்ட வகுப்பாரை மட்டும் குறிப்பதாக ஆகிவிடும். அந்த 112 பிரிவினரும் ஆதித் திராவிடர் என்பதில் அடங்க மாட்டார்கள். ஆகவே, அரிசனங்கள் என்று அப்படியே இருக்கட்டும், இல்லையென்றால் மத்திய அரசில் இருப்பது போல் ஷெட்யூல்டு காஸ்ட்ஸ், ஷெட்யூல்டு ட்ரைப்ஸ் என்று இருக்கட்டும். இதை மாற்றினால் பல பிரிவைச் சேர்ந்த ஹரிஜன மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.





நிலங்களைத் தரிசாகப் போட்டு மரங்களை வளர்த்தால் அந்த நிலங்களை எடுத்துக்கொள்வது வரவேற்கத்தக்கது. பாராட்டத் தக்கது. ஆனால், சிறு விவசாயிகள், இரண்டு ஏக்கர் அதற்குக் குறைவாக வைத்திருக்கக் கூடியவர்கள் வசதி இல்லாமல் நிலத்தை வீணாகப் போட்டு வைத்திருக்கின்றார்கள். முப்பது நாற்பது ஏக்கருக்குச் சேர்த்து காமன் வெல்லாக ட்யூப் வெல் போட்டு பாசன வசதி செய்து கொடுத்தால் நிச்சயமாக அவர்கள் விவசாயம் செய்வார்கள். அவர்களிடம் வாட்டர் செஸ் வேண்டுமானாலும் வசூலித்துக் கொள்ளலாம். அந்த அடிப்படையில் அணுக வேண்டும். அது சாலச் சிறந்ததாக இருக்கும். நிலமும் தரிசாக இருக்காது.

பத்திரிகையில் பார்த்தால் வட ஆற்காடு மாவட்டத்தில் இருபதாயிரம் ஹெக்டேரில் மரங்களை வளர்க்கப் போவதாகப் போடப்பட்டிருக்கிறது. அதிலே சவுக்கு மரங்கள், யூகலிப்ட்ஸ் மரங்களை வைப்பதாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள் விவசாயத் துறை அதிகாரிகள் இன்ன இன்ன நிலத்தில் இன்ன இன்ன மரங்கள் வரும், இலாபம் வரும் என்று எல்லாம் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால், தண்ணீரே இல்லாத இடங்களிலே எல்லாம் கூட மரங்களை வைத்து வளர்ப்பதற்கான அனுமதியை அரசாங்கம் கொடுக்க வேண்டும். தண்ணீர் இல்லாத இடங்களிலே வாட்டர் டிவைனரை வைத்து அதன் உதவியுடன் தண்ணீரை எடுத்து பயிர் செய்யலாம். அவ்வாறு ஏற்பாடு செய்து கொடுத்தால் விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, கரும்புக்கு 175 ரூபாய் என்று விலையை நிர்ணயித்து இருக்கிறார்கள். நான் விவசாயிதான், நான் அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போலவே நெல்லுக்கு 115 ரூபாய் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். நான் உண்மையிலேயே அதற்காக பாராட்டுகிறேன். ஆனால், மத்திய அரசாங்கம் உரத்திற்காக கொடுத்துவந்த மானியத்தை நிறுத்தி விட்டது. உரம் இல்லாவிட்டால் கரும்பு பயிர் செய்ய முடியாது. கொடுத்து வந்த மானியத்தை நிறுத்திவிட்ட பிறகு இப்போது 175 ரூபாய் கொடுத்தால் கூடப் போதாது. ஒரு ஏக்கருக்கு இப்போது 3 ஆயிரம் 4, ஆயிரம் செலவு செய்யக் கூடிய நிலைமை இருக்கிறது, கரும்பு பயிர் செய்கிறவர்களுக்கு கட்டுப்படியாகவில்லை, உரம் வாங்குகிறபோது விலை அதிகமாக இருக்கிறது, வாங்க முடியவில்லை, ஆகவே, அதற்காக கொடுக்கப்பட்டு வந்த மானியத்தை உடனடியாகக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே அரசைக் கேட்டுக் கொள்கிறேன்

அடுத்து, பெரியாறு இம்ப்ரூவ்மென்ட் ஸ்கீம் போட்டோம். அந்தத் திட்டம் வரும் என்று நினைத்தோம். அந்த வேலை துவங்கப்பட்டது. அதற்காக அதிகாரிகள், சீப் எஞ்சினீயர், சூப்பிரண்டென்டிங் எஞ்சினீயர், எக்ஸிகியூடிவ் எஞ்சினீயர்,

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1981 ஜனவரி 24

அஸிஸ்டெண்ட் எஞ்சினீயர் எல்லாம் போட்டிருக்கிறோம், இங்கே நீர்ப்பாசனத்துறை அமைச்சர் இருக்கிறார். 72 கோடி ரூபாய் பணம் ஒதுக்கினால் கூட அந்த ஸ்கீம் மூலமாக பல ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலத்திற்கு தண்ணீர் கிடைக்கும் என்று நாம் நினைத்தோம். ஆனால் இன்றைக்கு உலக பாங்கு மறுத்து விட்டதோ என்னவோ தெரியவில்லை. அப்படி உலக பாங்கு மறுத்திருந்தாலும்கூட அரசே எடுத்து பார்ட் 2 ஸ்கீமிலே பத்து கோடி பிறகு பத்து கோடி இப்படி பத்து பத்து கோடியாக ஒதுக்கி அந்த பெரியாறு லிங்க் கேனாலை வெட்டினால் அந்த ஏழை விவசாயிகளுக்கு, வறண்ட பகுதிகளிலே வாழக்கூடிய மக்களுக்கு தண்ணீர் கிடைக்கும், காலம் எல்லாம் அந்த மக்கள் உங்களைப் பாராட்டுவார்கள், ஆதரவு கொடுப்பார்கள். இன்றைக்குப் பல பகுதிகள் வறட்சி பகுதிகள் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றன. என்னுடைய நிலக்கோட்டை தொகுதியிலே, விரிவீடு ஏரியா ஒன்று, நிலக்கோட்டை ஏரியா இரண்டு, இந்தப் பகுதிகளுக்கும், மற்ற வறண்ட பகுதிகளுக்கு என்ன நிவாரணம் அளிக்கின்றதோ அதையே அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தக்காவிக் கடன்களை, ஏழைகளுக்கு தள்ளுபடி செய்யப் பட்டிருக்கின்றது. வட்டியோடு அசலையும் சேர்ந்து தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றது. கொஞ்சம் நிலம் அதிகமாக வைத்திருந்தாலும்கூட நான் தள்ளுபடி செய்யச் சொல்லவில்லை, வட்டியை விட்டுவிட்டு ஒரு ஆண்டு என்பதை 5 ஆண்டுக் காலம் ஆக்கி அவர்கள் கொஞ்சம் கொஞ்சம் ஆகக் கட்டுவதற்கு வாய்ப்புத் தந்தால் அவர்கள் இலகுவாகக் கட்டுவார்கள். ஆகவே, அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

படித்துவிட்டு பெண்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். கவர்னர் உரையிலே பெண்களுக்கு வேலை வாய்ப்பு பற்றி இருக்கும் என்று எதிர்பார்த்தேன். ஒன்றும் இல்லை. ஆங்காங்கே தொழிற்சாலைகள் ஏற்படுத்தி அவர்களுக்கு வேலை வாய்ப்பு தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1—10)

திரு. வெ. அரங்கராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் ஆளுநர் உரையின் மீது நன்றி தெரிவித்துப் பேச சந்தர்ப்பம் அளித்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆண்டுத் துவக்கமே நாட்டு மக்களுக்கு நன்மை செய்யும் ஆண்டாக இருக்கும் என்று மகிழத்தக்க வகையில் துவங்கியிருக்கிறது. அனைத்து நாடுகளிலும் உள்ள தமிழ் அறிஞர்கள் பாராட்டிப் போற்றும் வகையில் உலகத் தமிழ் மாநாட்டை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள். நடத்தியுள்ளார்கள். அவருக்கு உறுதுணையாக இருந்த அமைச்சர்



1981 ஜனவரி 24] [திரு. வெ. அரங்கராசன்]

பெருமக்கள் அனைவருக்கும் எனது பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறேன். உலகத் தமிழ் மாநாட்டின் அடையாளமாக என்றென்றும் சாட்சியளிக்கும் வகையில் மதுரை மாநகரம் தன் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டுள்ளது.

உலகத் தமிழ் மாநாட்டில் கலந்துக் கொண்ட பிரதமர் அவர்கள் சொன்ன 'இந்தி பேசாத மக்கள் மீது இந்தியைத் திணிக்க மாட்டோம்' என்ற உறுதி மொழியை நாடாளுமன்றத்தில் சட்டமாக்க வேண்டும் என்று நாம் வற்புறுத்துவதை எந்த எதிர்க்கட்சியும் ஒப்புக் கொள்ளும் என்று கருதுகிறேன். உலகத் தமிழ்ச் சங்கத்தை அமைத்து 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்பதை நிலைநாட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் நடவடிக்கை எடுத்து வருவது பாராட்டத் தக்கது.

விலைவாசி உயர்வுக்குக் காரணம் நாட்டில் ஏற்பட்டுள்ள பணவீக்கம்தான் என்பதை ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். எதிர்க்கட்சியினர் சிலர், விலைவாசியைக் கட்டுப்படுத்த தமிழக அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று கேட்கலாம். விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டிய முக்கிய பொறுப்பு மத்திய அரசிடம்தான் இருக்கிறது. தமிழக அரசின் அதிகாரத்திற்கு உட்பட்ட பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப் படுத்தலாம். ஆனால் மத்திய அரசை நாம் அதிகாரம் செலுத்த முடியாது.

கடந்த ஓராண்டுக் காலத்தில் விவசாய இடு பொருட்களான உரம், விவசாயத்திற்குத் தேவையான டீசல் போன்றவை விலை இருமுறை உயர்ந்திருக்கிறது. மத்திய அரசு விவசாய விளை பொருட்களுக்கு விலையை அதிகரித்துத் தர வேண்டும் என்று தமிழக முதல்வர் வற்புறுத்தி வருகிறார். விவசாய இடுபொருள் விலையை உயர்த்தும் அதே நேரத்தில் விளை பொருள் விலையையும் நியாயமாக மத்திய அரசு நிர்ணயம் செய்ய வேண்டும்.

பரம்பரைச் சொத்துபோல விவசாயிகளைத் தொடர்ந்து வந்து கொண்டிருந்த சுமார் 21 கோடி ரூபாய்த் தக்காவிக் கடனை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு தள்ளுபடி செய்திருக்கிறது. 1965-ம் ஆண்டு முதல். அப்பொழுது ஆட்சியிலேயிருந்து வந்த காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயும், எதிர்க்கட்சியினர் ஆண்ட காலத்திலேயும் தள்ளுபடி செய்யாத தக்காவிக் கடன்களை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே தள்ளுபடி செய்திருப்பதை இன்றைய தினம் விவசாயப் பெருங்குடி மக்கள் அனைவரும் இந்த அரசைப் பாராட்டி வருகிறார்கள்.

அதைப் போன்று, பினாமி நிலங்களைப் பறிமுதல் செய்யும் சட்டத்தை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்துப் பலமாத கால மாகியும் அதற்கு அனுமதி தரப்படவில்லை என்று கருதுகிறேன். 'விவசாய தொழிலாளர்கள் போராட்டத்தை ஆதரிப்போம்' என்பவர்கள் அவர்களுக்கு நன்மைதரும் பினாமி நில ஒழிப்பு சட்டத்திற்கு மத்திய அரசிடம் வாதாடி அங்கீகாரம் பெற்றுத் தரலாமே?

பாம்புக்குத் தலையும் மீனுக்கு வாலும் என்பார்கள்: அது போல வடக்கே விவசாயப் போராட்டத்திற்கு எதிர்ப்பு; தமிழ கத்தில் போராட்டம் நடத்தினால் ஆதரவா?

பி. அன்ட் சி. மில் சில பிரச்சினைகளுக்கு வழி தேடும் வகை யில் மூடியிருக்க வேண்டிய கசப்பான சூழ்நிலை உருவாகியிருக் கிறது. கடந்த காலங்களைத் திரும்பிப் பார்த்தால் தொழிற் சங்கத்தைத் தங்கள் ஆதிக்கத்தில் கொண்டு வர வேண்டும் என்பதற்காக நடந்த போராட்டங்களாலேயே பல ஆலைகள் மூடியிருந்தது நினைவிருக்கும்.

உள்ளாட்சித் தேர்தலை நடத்த இந்த அரசு எப்போதும் தயார் என்று அமைச்சர் அறிவித்திருக்கிறார். அது பாராட்டத் தக்கது.

அமைதியாகக் கிடந்த தமிழகம் என்ற நீரோடையில் எதிர்க் கட்சித் தலைவர் தனது கருணையாக மதுவிலக்கைத் தளர்த்தி தற்காலிகம் என்ற பெருங்கல்லை வீசினார். அந்த அலையில் கரையேற முடியாமல் பலர் போதைக்காக விஷம் அருந்தும் நிலைகூட ஏற்பட்டதுண்டு. அப்படிப்பட்ட குடும்பங்களைச் சாவிலிருந்து காப்பாற்ற வேண்டும்.

ஆண்டுக்கு 200 கோடி ரூபாய் மதுவிலக்கில் வரும் வருமா னத்தை இழக்கும் நிலை வேண்டாம். அமல்படுத்த செலவாகும் தொகையும் மிஞ்சும் வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டு மென்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

பினாமி நிலங்களைப் பூனை, நாய் பெயர்களில் எழுதி வைத்திருப்பதாக சென்ற முறை உறுப்பினர் திரு. இளைய பெருமாள் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படிப்பட்ட பினாமி நிலங்கள்—தேவைக்கு அதிகமான நிலங்கள் தரிசாகப் போடப் பட்டிருக்கின்றன.

விவசாயக் கூலிகளுக்கு அதிக கூலி தர வேண்டும் என்பதற்குப் பயந்தே நில முதலைகள் தரிசு நிலமாகவும், உணவு பயிரிடும் நிலங்களில் சவுக்கு மற்றும் வேலிக்காத்தான் போன்றவற்றைப் பயிரிடுகின்றனர்.



நாம் சுதந்திரம் அடைந்து 33 ஆண்டுகளாகியும் இந்த இடைப்பட்ட காலத்தில் ஆட்சி செய்த எந்த அரசும் செய்யாத புரட்சியை முதல்வர் புரட்சித் தலைவர் அரசு அறிவித்துள்ளது. தரிசு நிலங்களை எடுத்து நிலமற்ற ஏழைகளுக்குத் தருவோம் என்று சோஷலிச சமுதாயத்தைப் படைக்கும் திட்டத்தின் படி களில் ஒன்றாகக் கருதி இதனை வரவேற்கிறேன்.

1980-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31-ம் நாளைய நிலவரப்படி நடுத்தரக் காலக் கடன்களையும், நடுத்தரக் காலத் தவணை வைப்புக் கடன்களையும் அவற்றிற்கான வட்டி, தண்ட வட்டி ஆகியவற்றைச் சிறு உழவர்களுக்கு அரசு கூட்டுறவுச் சங்கங் களுக்கு மாநில அரசு சொந்த நிதியிலிருந்து 42 கோடி ரூபாயை அனுமதித்து தள்ளுபடி செய்திருப்பது பெரிய சாதனைக்குரியது.

திரு எல். இளையபெருமாள்: துணைத் தலைவர் அவர் களே, ஒரு தன்னிலை விளக்கம். நான் சொன்னது, பூனை, நாய்களுக்கு, ராதா என்றும், கிருஷ்ணன் என்றும், லில்லி என்றும் பெயரிட்டு ஏமாற்றுகிறார்கள் என்று சொன்னேனே தவிர, நேரிடையாகப் பூனை, நாய் பெயர்களில் எழுதி வைக்கிறார்கள் என்று சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது தெரியும் பூனையை யும், நாயையும் நேரடியாக ரிஜிஸ்திரார் ஆபீசுக்குக் கொண்டு செல்ல முடியாது.

திரு கே. தனுக்கோடித் தேவர்: துணைத் தலைவர் அவர் களே, இந்த மாமன்றத்தில் ஆளுநர் ஆற்றிய உரையின் மீது நான் சார்ந்திருக்கிற அகில இந்திய பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பாகப் பேச வாய்ப்பளித்தமைக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக, பாண்டிய நாட்டுத் தலைநகராகிய மதுரையில் உலகத் தமிழ் மாநாட்டை நடத்தி தமிழர்க்கெல்லாம் பெருமை தேடித் தந்த தமிழக முதல் வருக்கும், அமைச்சரவை மக்களுக்கும் அங்கே பணியாற்றிய காவல் துறை அதிகாரிகளுக்கும் என் சார்பாகவும் நான் சா திருக்கிற அகில இந்திய பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பாக வும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், இங்கே ஆளுநர் அவர்களுடைய உரையில் நல்லதொரு கருத்தினைச் சொல்லியிருப்பதை ஆதரிக்கின்றோம். குறிப்பாக, விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், ஒரு வீட்டுக்கு ஒரு ஆளுக்கு வேலை வாய்ப்பு தருகின்றோம் என்று குறிப்பிட் டிருப்பதும், மேற்கே ஓடுகின்ற நதிகளைத் திருப்பிவிட கேரள அரசிடம் பேசி, அங்கே வீணாகக் கடலில் விழுகின்ற நதியைத்

திருப்பி, முகவை மாவட்டத்தையும், நெல்லை மாவட்டத்தையும் செழிப்புள்ள பூமியாக ஆக்கப் பாடுபடுவதாக அறிவித்திருப்பதையும் பார்க்கும்போது, இந்தத் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களைப் பாராட்டாமலிருக்க முடியாது.

இந்த மாமன்றத்தில் பேசிய உறுப்பினர்களது கருத்துக்களை உற்று நோக்குகின்ற நேரத்தில், பாலுக்கும் காவல் பூனைக்கும் நண்பன் என்ற வகையில் கருத்துககளைச் சொல்கிறார்கள் என்பது தெரிகிறது. அதாவது, மக்களிடத்திலே ஒன்றைச் சொலவது, மாமன்றத்தில் ஒன்றைச் சொல்வது போல் தோன்றுகிறது. அரசியல்வாதிகள் கூற்றைப் பார்க்கும் போது, ஆளுகின்ற அரசுமீது, எவ்வளவு பழியைச் சுமத்த வேண்டுமோ, அவ்வளவு பழியைச் சுமத்துகின்றார்கள். ஆகையால், மதிப்பிற்குரிய மாமன்ற உறுப்பினர்கள் இங்கே வாழ்கின்ற ஏழை, எளியவர்களுடைய வாழ்வை மனதில் கொண்டு, அந்த ஏழை, எளிய மக்கள் வாழ வழி செய்ய வேண்டும், வாழ்கின்ற மக்களுக்கு அறிவுரை வழங்குவதோடு, இந்த மாமன்றம் அவர்கள் வாழவும் வழி செய்ய வேண்டும். இந்த மாமன்றத்தில் இயற்றுகின்ற சட்டதிட்டங்கள் இந்த நாட்டுக்கு, இந்த மாநிலத்திற்கு எந்த அளவு நன்மை தர வேண்டுமோ, அந்த அளவு நன்மை பயக்கும் விதத்தில் நாம் செயல்பட வேண்டுமே தவிர, எதிர்கூறாக செயல்படுவோமானால், அது நாமே நம் தலையில் மண்ணைப் போட்டுக் கொள்வதாகத்தான் இருக்கும் என்று என்னைப் போன்றவர்கள் கருத வேண்டிய சூழ்நிலையிருக்கிறது. ஏனென்று கேட்டால், இங்கே ஆளுகின்ற அரசு, மக்கள் கொடுக்கின்ற வரிப் பணத்தைக் கொண்டுதான் ஆளுகின்றது என்பதை நாமும் ஒத்துக் கொள்வோம், அரசும் ஒத்துக் கொள்ளும். ஆகையால், வரியும் கொடுக்கக் கூடாது, வரியும் போடக் கூடாது ; ஆனால், அதிலே பல திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டால், ஆளுகின்ற அரசு, எதைக் கொண்டு பணியாற்றும் என்பதை நாமும் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்றபதுதான் என்னுடைய தாழ்மையான கருத்து. ஆகவே, இந்த மாமன்றத்தில் அமர்ந்திருக்கின்ற பெருமதிப்பிற்குரிய நண்பர்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன், குறிப்பாக, வறண்டு கிடக்கின்ற மாவட்டங்கள் பலவற்றைப் பார்க்கின்றோம். அங்கே வாழ்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் இந்த நாட்டுக்கும் நமக்கும் உணவு அளிக்கின்ற அந்தப் பெரும் பிரஜைகள் இன்றைக்கு எச்சூழ்நிலையில் வாழ்கிறார்கள் என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நமக்கெல்லாம் உணவளிக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் நிலையைப் பற்றி நாம் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இங்கே, கவர்னர் உரையில், பல உறுப்பினர்கள் பல நல்ல கருத்துக்களையும் சொல்லியிருக்கிறார்கள். அதே நேரத்தில், மன வேதனையான சில கருத்துக்களையும் சொல்லி





இருக்கிறார்கள். இந்த அரசுக்கு என்னுடைய கருத்தொன்றை நான் தெரிவிக்க ஆசைப்படுகிறேன். குறிப்பாக, அமைச்சர் பெருமக்கள், இந்த அரசை நடத்திச் செல்லும் முதலமைச்சர் ஆகியோருக்கு, ஏழை, எளியோருடைய நல்லெண்ணத்தைப் பெற்றிருக்கிற தமிழக முதல்வர் அவர்களுக்கு, முகவை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் நன்றாகத் தெரியும்.

[பிற்பகல் 1-20]

அங்கே போன ஆண்டில் அடித்த வெள்ளத்தாலும், புய
லாலும் விவசாயப் பெருங்குடி மக்கள் மிகவும் பாதிக்கப்பட்
டிருக்கிறார்கள். போன ஆண்டு உற்பத்தி செய்த பொருள்கள்
முழுவதும் அழிந்து அவர்கள் வறுமையில் வாடினார்கள். அதே
போன்று இந்த ஆண்டும் அங்கே வடகிழக்கு பருவமழை தவறி
விட்ட காரணத்தால் அவர்கள் பஞ்சையாய் பராரியாய்
தஞ்சையை நோக்கி செல்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.
அப்படி வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழுகின்ற விவசாயப்
பெருங்குடி மக்கள் இன்றைக்குத் தஞ்சையை நோக்கி செல்
இன்ற சூழ்நிலை அங்கே உருவாகியிருக்கிறது. நான் இங்கே கூறுவ
தெல்லாம், அங்கே இயற்கையையே நம்பி வாழ்கின்ற விவசாயி
கள் ஒரு ஆண்டு மழை பெய்தால் அடுத்த ஐந்தாண்டு மழையே
இருக்காது. அப்படி பெய்கின்ற மழைகூட ஒரேயடியாக பெய்து
பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. நானும் பார்த்துக்கொண்
டிருக்கிறேன். மொத்தம் 3 ஆட்சிகள் நடைபெற்றிருக்கின்றன.
2 ஆட்சிகள் முடிந்து 3-வது ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருக்
இன்றது. ஏழை எளிய மக்களின் வாழ்க்கையிலே இடம் பெற்று
இருக்கிற இந்த தமிழக அரசு அந்தப் பராரியாக இருக்கிற
முகவை மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்களின் நல்லெண்ணத்
தைப் பெற்றிருக்கிற இந்த அரசு அங்கே வாழ்கின்ற விவசாயப்
பெருங்குடி மக்களை உற்றுப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.) துணை சபாநாயகர்
அவர்கள் எங்களுக்கு இன்னும் கொஞ்சம் நேரம் கொடுக்கவேண்
டும். நான் சார்ந்திருக்கிற கட்சியில் 3 பேர்கள்தான் இருக்
இறோம்.

மாணபுமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்த 2 பேர்களும் இன்னும் 2 நாளில் பேசலாம். நீங்கள் இத்துடன் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு கே. தனுக்கோடித் தேவர் : இப்பொது கவர்னர்
உரையிலே 2 மாவட்டங்களை வறட்சி பகுதிகளாக அறிவித்
திருக்கிறார்கள். அதேபோல் முகவை மாவட்டத்தையும் வறட்
சிப் பகுதியாக அறிவித்து, நல்ல திட்டங்களை இயற்றி அங்கே
இருக்கிற அதிகாரிகளுக்கு ஆணைகள் பிறப்பிக்கவேண்டும் என்று

கேட்டுக்கொள்கிறேன். அங்கே இருக்கிற அரசாங்க அதிகாரிகளில் சிலர் மாற்றுக் கருத்துடன் பணியாற்றுகிறார்கள். அரசு மானியங்களை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும் என்ற அவர்களை வலியுறுத்தி, கொடுக்கின்ற மானியம் மக்களுக்குக் கிடைக்கும் வகையில் வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மதுவிலக்குப் பற்றி சொன்னார்கள். நான் வணங்கும் தெய்வத் திருமகன் தேவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி மதுவென்றால் என்னவென்றே தெரியாத ஒரு சூழ்நிலையிலே மது எப்படி இருக்கும் என்று தெரியாத நிலையில் வாழ்கின்ற போதிலும் அந்த மதுவைக் குடித்துவிட்டு நல்லவர்கள் கூட கெட்டுவிடுவதை நான் பார்த்திருக்கிறேன். நல்ல குடும்பத்தில் பிறந்து இருக்கிற குடிமகனும் அதனுடைய சூழ்நிலையால் அவதிப் படுவதைக் கண்டிருக்கிறேன். என்னென்ன பொருள்களை உபயோகப்படுத்தியோ குடித்துவிடுகிறார்கள். குடிக்காமல் இருக்கவும் முடியவில்லை. குடித்துவிட்டவுடன் இந்தச் சூழ்நிலை ஏற்பட்டுவிடுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்த மதுவிலக்கைத் தளர்த்தி அதிலே கிடைக்கின்ற நிதியை வைத்து ஏழை எளிய மக்களுக்கு நல்ல திட்டத்தை தீட்டி ஏழை அரிசன பெரு மக்கள் வாழ வழி செய்ய வேண்டும். என்னுடைய தொகுதியில் குடியிருக்க இடமில்லாமல் பிரிந்த கூரையை வேய முடியாத சூழ்நிலையில் இருக்கின்ற அரிசனப் பெருமக்களுக்கு இதன் மூலம் கிடைக்கின்ற நிதியைக் கொண்டு நல்ல திட்டங்களை செய்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன். வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். ஜெய்ஹிந்த்.

* திரு செஞ்சி. ந. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நடைபெற்றுக்கொண்டு இருக்கிற தமிழகஆளுநர் உரை மீதானவிவாதத்தின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்றைய தினம் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கிற ஆளுநர் உரை எந்த விதமான புதுமையையும் புரட்சியையும் கொண்டதாக இல்லை என்பதை முதன் முதலில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காரணம், பல்வேறு வாக்குறுதிகளைத் தேர்தல் நேரத்தில் சொன்னார்கள். ஏழை எளிய மக்களின் உரிமைகள் பாதுகாக்கப் படும் என்று சொன்னார்கள். வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களை உயர்ந்த மாளிகைக்குக் கொண்டு போகிறேன் என்று வாக்குறுதி தந்தார்கள். ஆட்சி பீடம் ஏறியவுடன் அத்தகைய திட்டங்கள் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் இந்த ஆளுநர் உரை எந்த விதமான திட்டங்களையும் உள்ளடக்கியதாக இல்லாமல் வெறும் உரையாக இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.





குறிப்பாக, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு எல்லாம் பல்வேறு கோரிக்கைகளை நாங்கள் ஆட்சிக்கு வந்தால் நிறைவேற்றுவோம் என்று சொல்லி, நாராயணசாமி நாயுடு அவர்களை பலமுறை பார்த்து, உறுதிமொழிகள் கொடுத்தபோதிலும், ஆட்சிக்கு வந்தபின்பு அந்த விவசாய மக்கள் மீது மோசமான முறையில் அடக்குமுறையை அவிழ்த்துவிட்டு, அவர்களை என். எஸ். ஓ. வில் கைது செய்து, அவர்களைத் தலைதூக்கவிடமாட்டோம் என்று கங்கணம் கட்டிக்கொண்டு இருக்கிறார்கள். டாக்டர் கலைஞர் அவர்கள் அந்த என். எஸ். ஓ. வைப் பயன் படுத்தக்கூடாது அதன்படி விவசாயிகளைச் சிறையில் போட்டது தவறு என்று சொன்ன பிறகும், விடுதலை செய்யாததால், பொங்கலுக்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகம் நேரடியாக போராட்டத்தில் இறங்கும் என்று எச்சரிக்கை விட்டதால், பின்னர். அவர்களை விடுதலை செய்தார்கள். இன்றைக்குத் தமிழகம் எங்கும் பார்த்தால் விவசாயிகளின் பிரச்னை ஒரு பர்னிங் பிராப்ளமாக இருக்கிறது. 'தீப் பற்றி எரியும்' பிரச்னையாக அது இருக்கிறது. இன்றைய தினம் மத்தியில் இருக்கிற மாண்பு மிகு பிரதம அமைச்சர் இந்திரா காந்தி அவர்கள் கூட இந்தப் பிரச்னையில் நியாயம் இருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். பல்வேறு தலைவர்கள் கூறியிருக்கிறார்கள். மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள முதலமைச்சர் அவர்கள் கூட கூறியிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய மாநில அரசாங்கம் மட்டும் இதைப் பற்றிச் சிந்திக்காமல், தான் தோன்றித்தனமான முறையில் நான் நினைத்ததைச் செய்வேன் என்று செய்துகொண்டு இருக்கிறார்கள். இதனால் எதிர்காலத்தில் எந்த அளவிற்கு விவசாயத்துறை பாதிக்கப்படும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் சரியான எதிர்க்கட்சியாக இருந்து பல நேரங்களில் நல்ல பல கருத்துக்களைச் சொன்னாலும் எந்தவிதமான காரியங்களும் செய்யப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் ஒன்றியக் கழக செயலாளராக இருக்கும் அருமை நண்பர் பாண்டுரங்கன் அவர்கள் விவசாயத் சங்கத்திற்கு—நாயுடு சங்கத்திற்கு—எந்த விதத்திலும் தொடர்பு இல்லாதவர். அவரை ஆளும் கட்சியினர் சேர்ந்து கொண்டு மோசமாகத் தாக்கியிருக்கிறார்கள். அவர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருகிறார். இந்த அளவிற்கு வன்முறைச் சம்பவங்கள் நடந்து இருக்கின்றன. அதே போல், பண்ருட்டி தொகுதியில்—நம்முடைய அமைச்சர் அவர்களின் குறிப்பிற்காகச் சொல்கிறேன்—அவரது பகுதியில் வீரபடுமாநல்லூர் என்ற இடத்தில் ஏழுமலை என்கிற ஏழை விவசாயி மோசமாகத் தாக்கப்பட்டு இருக்கிறார். அமைதியான முறையில் போராட்டம் நடத்துகின்ற அவர்களை மோசமாகத் தாக்குவது தவறு. போலீசார் எந்தவிதமான

முன்னெச்சரிக்கையும் செய்யாமல் அவர்களை சுட்டு இருக்கிறார்கள். அதே போல் பரமத்தியிலும் போலீசார் தாக்கியிருக்கிறார்கள். அந்த இடத்தை கந்தசாமி M.P. போய்ப் பார்த்து இருக்கிறார்கள். அந்த அளவிற்கு மோசமான முறையில், அநியாயமான முறையில் விவசாயப் பிரச்னையை இந்த அரசு கையாண்டு இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆளுநர் உரையில் பல்வேறு கருத்துக்களைக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். குறிப்பாக, ஹெலிகாப்டர் வாங்குவதைப் பற்றி சொல்லி இருக்கிறார்கள். இதற்குக் காரணம் தமிழகத்தின் முக்கியமான நகரங்களுக்கு, சுற்றுலா இடங்களுக்குச் செல்வதற்கு போக்குவரத்து வசதிகள் போதுமான அளவு இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கு உண்மையான காரணம் என்னவென்று சொன்னால், தமிழ் நாட்டில் உள்ள அமைச்சர்களும், அவர்களைச் சேர்ந்த அதிகாரிகளும் இன்றைக்கு ரயில் மூலமாக செல்வதற்குதான் வழி இருக்கிறது. அவர்களுக்கு விமான மூலம் செல்ல வாய்ப்பு இருக்கவேண்டும் என்பதற்காக இதைச் சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் அனுமதியோடு, அவையின் நேரத்தை நீட்டிக்கிறேன்.

[பிற்பகல் 1–30]

**திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் :** ஆகவே அவர்கள் விமான சர்வீஸ் தொடங்கவேண்டும் என்று சொல்வது தங்களுடைய சொந்த சுகபோகத்திற்காகத்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த சர்வீஸை எப்படி நடத்தப்போகிறார்கள். தமிழக அரசே நடத்தப்போகின்றதா அல்லது இண்டியன் ஏர் லைன்ஸ் நடத்தப்போகின்றதா ? அதற்கு முன்னதாக க்ளீயரன்ஸ் என்று சொல்லப்படுகின்ற அனுமதி வாங்கி இருக்கிறார்களா ? அதை எப்படி நடத்தப்போகிறார்கள் என்ற விவரத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து மிக முக்கியமான பிரச்சினை ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சில நாட்களுக்கு முன்பு உலகத் தமிழ் மாநாடு நடந்தது. அம்மாநாட்டில் இலங்கை பாராளுமன்றத்தின் எதிர்க் கட்சித் தலைவர் நாவலர் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் கலந்து கொண்டார்கள். உலகத் தமிழர்களுக்கெல்லாம் ஒரு தனித் தமிழ்நாடு வேண்டும் என்று மிக உரிமையோடு குரல் எழுப்பிக் கொண்டிருக்கின்ற ஒரே தலைவர் திரு. அமிர்தலிங்கம் அவர்கள். அவர் அங்கு பேசுகின்ற நேரத்தில் நம்முடைய முதல்வர் அவர்கள் அவரைப் பேச விடாமல் அவமதித்து இருக்கிறார்கள். அதன் காரணமாக இலங்கை வானொலி நிலையம் திரு. அமிர்தலிங்கம் அவர்களுடைய பேச்சுக்கு தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் கண்டனம் தெரிவித்து இருக்கிறார் என்று சொல்லி இருக்கின்றது. நாவலர் அமிர்தலிங்கத்தை அவமதித்ததன் மூலமாக தமிழர்களை அவமானப்படுத்தி இருக்கிறார். இவர் தமிழ் நாட்டின் முதலமைச்சர் தான். ஆனால் நாவலர் அமிர்தலிங்கம் ஒரு நாட்டின் பார்லிமெண்டின் எதிர்க் கட்சித் தலைவர். தமிழர்களை எல்லாம் மதிக்காத இந்த முதலமைச்சர் உலகத் தமிழ்மாநாடு நடத்தி இருக்கிறார்.



இப்படிப்பட்ட ஒரு மாநாடு நடத்தினால் என்னென்ன அறிவிப்புகள் வரவேண்டும், தமிழ் மொழிக்காக இன்னின்ன திட்டங்கள் என்ற அறிவிப்பு வந்திருக்க வேண்டும். அப்படி வந்ததா என்றால் இல்லை. உலகத் தமிழ்ச் சங்கம் என்று மட்டும் சொல்லி இருக்கிறார்கள். அது யாருக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது ? அதன் தலைவருக்கு அமைச்சர் பதவிக்குரிய பெருமை கொடுக்கப்படும் என்று சொல்கிறார்கள். உலகத் தமிழ் மாநாட்டுக்குச் செலவு செய்திருப்பது 15 கோடி ரூபாய். செலவிட எண்ணி இருந்தது 5 கோடி ரூபாய். முன்பு கோலாலம்பூரிலே உலகத் தெலுங்கு மாநாடு நடத்தி இருக்கிறார்கள். அதற்கு ஆகின்ற செலவு 5 இலட்சம் ரூபாய் கூட இல்லை என்று சொல்லப்படுகின்றது. ஆகவே இப்போது நடத்தப்பட்ட உலகத் தமிழ்மாநாட்டில் 15 கோடி ரூபாய் செலவு செய்தும் எந்தவிதமான திட்டவட்டமான முடிவுகளும் அறிவிக்கப்படவில்லை. தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்ட மாணவர்களுக்கு உதவி மற்றும் வேலை வாய்ப்பு போன்ற புரட்சிகரமான திட்டம் எதையும், எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று சொல்லுகின்ற அரசு, அறிவிக்கவில்லை. இந்த அரசு நடைமுறை சாத்தியமான காரியங்கள் எதையும் செய்யவில்லை. தமிழ் மொழியை விஞ்ஞான மொழியாக, ஆராய்ச்சி மொழியாக, உலகிலேயே முதல் மொழியாக நிலை நாட்டுகிற வகையில் இந்த அரசு எந்தவிதமான காரியமும் செய்யவில்லை.

மொழிப் பேரறிஞர் என்று நாமெல்லாம் பாராட்டுகின்ற தேவநேயப் பாவாணர் அவர்களுக்கு உலகத் தமிழ் மாநாட்டிலே உரிய மரியாதை அளிக்கப்படவில்லை. அதன் காரணமாகத்தான் அவர் இறந்திருக்கிறார். அப்படி இறந்ததற்குக் காரணம் தமிழகத்தின் முதல்வர் அவர்கள்தான்.

**திரு. கோ. விஸ்வநாதன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேவநேயப் பாவாணர் அவர்கள் இறந்து போனதற்கு உலகத் தமிழ் மாநாட்டில் அவருக்கு உரிய மரியாதை தரப்படாததுதான் என்ற அர்த்தமற்ற குற்றச்சாட்டைக் கூறுகின்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை எப்படி நிரூபிக்கப் போகிறார் ?

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : உலகத் தமிழ் மாநாட்டில் அவர் பேசுகின்றபோது அவரைப் பேசவிடாமல் அங்கே இருந்தவர்கள் அவரைக் கேலி செய்திருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு யாரோ தவறான தகவலைத் தந்திருக்கிறார்கள். தவறான தகவலின் அடிப்படையில் தான் அவர் பேசுகின்றார். அந்த மாநாட்டின் கருத்தரங்கிலே தேவநேயப் பாவாணர் அவர்கள் ஒருமணி நேரத்திற்கும் மேலாக அழகான, ஆராய்ச்சி நிறைந்த, புலவர்கள் எல்லாம் கைதட்டி வரவேற்ற ஒரு சிறப்பான சொற்பொழிவினை ஆற்றினார்கள். அவர் பேசியதற்குப் பிறகு பேராசிரியர் திரு. க. அப்பாதுரை அவர்கள் பேசினார்கள். ஆகவே, கடைசி வரையில் இருந்து பேசிவிட்டுத்தான் அவர்கள் சென்றார்கள். ஆனால் அன்றையத் தினம் இரவு அவருக்கு மார்பு வலி ஏற்பட்டு உடனே மருத்துவ மனையிலே சேர்க்கப்பட்டார்கள். மருத்துவ மனைக்கு முதல்வர் அவர்கள் சென்று பாவாணர் அவர்களுக்கு வேண்டிய சிகிச்சை அளிப்பதற்குரிய ஏற்பாட்டைச் செய்தார்கள். அதற்குப் பிறகு அவர்கள் நல்ல நிலைமையோடுதான் இருந்தார்கள். ஆனால் செகன்ட் அட்டாக் என்று சொல்வார்களே அந்த வகையில் இரண்டாவது முறையாக நான்கைந்து நாட்களுக்குப் பிறகு அவருக்கு மார்பு வலி ஏற்பட்டது. அப்போது இங்கிருந்து நான்கைந்து மருத்துவர்களை அனுப்பி அவர்களுக்குச் சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்தார்கள். ஆனால் எதிர்பாராத வகையிலே நாமெல்லாம் வருந்தத்தக்க வகையிலேயும் அவர்கள் மறைந்து விட்டார்கள். ஆகவே உலகத் தமிழ் மாநாட்டிலே அவரை அவமதிக்க வேண்டிய அவசியமே இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவருடைய சொற்பொழிவை அத்தனைபேரும் கடைசி வரையில் உட்கார்ந்திருந்து கேட்டார்கள். அப்படி இருந்து கேட்டவர்களில் நானும் ஒருவன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. க. முத்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநருடைய உரையின் மீது நன்றி தெரிவிக்கின்ற வகையில் பேசுகின்ற ஒரு வாய்ப்பினை தந்தமைக்காக நான் முதலிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆறாவது ஐந்தாண்டு, திட்ட அளவிற்கென கூடுதலாக நிதி உதவியைப் பெற்றுத் தருகிற முறையிலே தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மத்திய திட்டக் குழுவோடு பேசி ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டதை விட ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமாக, மொத்தம் 3,150 கோடியாக பெற்று நிர்ணயித்திருப்பதற்காக, புரட்சித் தலைவர் அவர்களை





இந்தச் சந்தர்ப்பத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். 1980-81-ஆம் ஆண்டுக்கு இம்மாநில ஆண்டுத் திட்டம் ரூபாய் 411 கோடியாக இருந்தது. வருகின்ற 1981-82-ஆம் ஆண்டுகளில் அதற்கான திட்ட ஒதுக்கீடு 514 கோடியாக இருக்குமென சுட்டிக் காட்டி, அதற்கான திட்டக்குழுவின் ஒப்புதலையும் இந்த அரசு பெற்றுள்ளது என்றால், இந்த அரசு ஏழை எளிய மக்களின் மீது எவ்வளவு அக்கறையைக் கொண்டிருக்கின்றது என்பதை அறிய முடிகிறது. அவர்களுக்காக இந்த அரசு இன்னும் எவ்வளவோ நல்ல திட்டங்களை உருவாக்க இருக்கின்றது என்பதற்கு, இது ஒரு நல்ல சான்றாக இருக்கின்றது என்றும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டும் அல்ல, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தேசீய கவுன்சிலிலே பேசுகின்றபோது மத்திய அரசின் நிதி உதவி மாநில அரசுகளுக்கு தற்போது '' காட்கில் ஏற்பாட்டின் '' கீழ் வழங்கப்பட்டு வருவதை மாற்றி, ஒரு மாநிலத்தின் பின் தங்கிய நிலையை, நபர்வாரி வருமான அடிப்படையில் தீர்மானிப்பதற்குப் பதிலாக வறுமைக் கோட்டிற்கும் கீழுள்ள மக்கள் சதவீதம் மாநிலத்தின் நபர் வாரித் திட்டச் செலவு ஆகியவற்றின் அடிப்படையில் தீர்மானிக்க வேண்டும், அந்த அடிப்படையில் நிதி உதவிகளை மாநிலங்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்றும் நமது மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் பேசி இருக்கிறார்கள். இந்த வேண்டுகோளை மத்திய அரசு ஏற்று மாநில அரசுகளுக்கு உதவ முன் வரவேண்டும். இந்த ஆண்டு முதல் திட்ட ஒதுக்கீடாக 103 கோடி ரூபாயை மாநில அரசு பெறுகின்ற நேரத்தில் மத்திய அரசு இந்த வேண்டுகோளை ஏற்பதற்கான ஒப்புதலையும் தந்து மாநில அரசுகளுக்கு உதவிடும் வகையில் நடந்திட வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தமிழகத்தில் தோன்றி உள்ள முக்கியமான பிரச்சினை பி. அண்டு சி. மில் 1876-ஆம் ஆண்டிலேயே தொடங்கப்பட்டு, நடைபெற்றுக் கொண்டிருந்த நிறுவனம். அது 1980-ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை 24 கோடி ரூபாய் நஷ்டத்தில் ஓடிக் கொண்டு இருந்தது என்பது மட்டுமல்லாமல், 34 கோடி ரூபாயை கடனாகவும் இந்நிறுவனம் வைத்துக் கொண்டிருக்கிறது. இருந்தபோதிலும் இந்நிறுவனத்தை மூடுவதன் மூலம் 13,000 தொழிலாளர் குடும்பங்கள் வேலை இல்லாமல் நடுத் தெருவில் நின்று கொண்டு இருக்கிறார்கள். தொழிலாளர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். தமிழக அரசும் தன்னால் இயன்ற அளவு இரு தரப்பினரையும் கூட்டி பேசிக் கொண்டுதான் இருக்கிறது என்றாலும், பிரச்சினைக்கு தீர்வு காணப் பெறவில்லை.

திரு. கு. முத்துக்கிருஷ்ணன்]

மத்திய அரசு, சிறிது காலத்திற்கு முன்பாக [1981 ஜனவரி 24
டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பொரேஷன் மூலமாக 100 நலிந்த மில்களை நேஷனல்
எடுத்துக் கொண்டிருக்கின்றது. அந்த 100 மில்களை
கொண்டிருக்கும்போது, ஏன் இந்த பி. அண்டு சி. மில்லையும் எடுத்துக்
எடுத்துக் கொள்ளக் கூடாது என்று கேட்கிறேன். அது மட்டும்
அல்ல மாருதி கார் தொழிற்சாலை நஷ்டத்தில் ஓடுகிறது என்று
தெரிந்த பின்னும் ஒரே நாளில் உத்தரவு பிறப்பித்து அதை
எடுத்துக் கொண்டதைப் போல, பி. அண்டு சி. மில்லையும்
மத்திய அரசு அம்மாதிரி உத்தரவு ஒன்று போட்டு ஏன்
எடுத்துக் கொள்ளக் கூடாது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்க
விரும்புகிறேன் ?

[பிற்பகல் 1-10]

அதுமட்டுமல்ல, எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்
திரு. ரகுமான்கான் அவர்கள் அகில இந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக்கழக ஆட்சியில் கணவன் இறந்து விட்டால் மனைவி
தாலியை எடுத்துவிடுகிறார் என்று சொன்னார்கள்.

திரு. அ. ரகுமான்கான் : உறுப்பினர் குறிப்பிடுவது போல
நான் சொல்லவில்லை. (மணியடிக்கப்பட்டது).

*திருமதி. டி. யசோதா : தலைவர் அவர்களே, உவகை கரும்
வகையில் உலகத் தமிழ் மாநாட்டை நடத்திவிட்டு அதைப்பற்றி
கவர்னர் உரையில் கொண்டுவந்து நிறுத்தி பாராட்டுகிற நிலையில்
ஒரு பக்கமும், அதில் இருக்கின்ற குற்றங்களை எடுத்துச்
சொல்கின்ற நிலையிலேயும் இங்கே மன்றம் நடைபெற்றுக்
கொண்டிருக்கின்றது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று
சொன்னால் என்னைப் பொறுத்தமட்டில் அதிகமான செலவில்
இந்த உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது என்பதை குறிப்பிடா
மல் இருக்க முடியவில்லை. தமிழகத்தின் நிதிநிலை சரியாக
இல்லை என்று முதல்வர் அவர்கள் குறிப்பிடுகிற நேரத்தில்
கிட்டத்தட்ட எத்தனை கோடி ரூபாய் செலவானது என்று
தெரியாத சூழ்நிலையில் இவ்வளவு பெரிய விளம்பரம் தேவை
தானா என்ற கேள்விக் குறிக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறோம்.
இன்னும் சொல்லப் போனால் நிதிநிலை சரியாக இல்லை என்ற
நிலையில் ஹரிசனங்களுக்கு இலவச வீடுகள் கட்டித் தர முடிய
வில்லை. அதற்காக கடனாக கொடுத்துக் கொண்டிருக்கிறோம்
என்று சொல்கிறபோது உலகத் தமிழ் மாநாட்டின செலவை
கட்டுப்படுத்தி இருக்கலாம். அதே நேரத்தில் மற்ற சமுதாயத்
தினரும் கேட்கிறார்கள், ஆகவே ஹரிசனங்களுக்கு இலவசமாக
வீடுகள் கட்டித் தரமுடியவில்லை என்று சாக்குப் போக்கு சொல்
வது ஒரு தகப்பனின் நிலையில் இருக்கிற தமிழக முதல்வருக்கு
அழகாக இருக்க முடியாது. பல குழந்தைகள் இருக்கலாம் ஒரு



1981 ஜனவரி 24]

தகப்பனுக்கு. அதில் எந்தக் குழந்தை பலகீனமாக இருக்கின்றதோ
அந்தக் குழந்தைக்கு தனிப்பட்ட போஷாக்கு அளிக்க வேண்டியது
அவரது கடமை என்ற நிலையில் இப்படிப்பட்ட நிலைகளில்
அவர்கள் தம் கருத்துக்களைச் சொல்வது சரியாக இருக்க
முடியாது. அவரது கடமையிலிருந்து தவறியவர் ஆவார்.

உலகத் தமிழ் மாநாடுபற்றி நான் குறிப்பிடுகிற போது
ஜப்பான் நாட்டிலிருந்து வந்திருந்த ஒரு அறிஞர் விடைபெற்றுச்
செல்கின்ற நேரத்தில் குறிப்பிட்டுள்ளதை நான் இங்கே குறிப்பிட
விரும்புகிறேன். இந்த ஊர்வலக் காட்சிகளையோ, மந்திரிகள்
ஊர்வலங்களையோ அவர்களுடைய ஆரவாரத்தையோ பார்ப்
பதற்காக நான் வரவில்லை. தமிழைப் பற்றியும் என்னுடைய
மொழி பற்றியும், அவற்றின் உயர்வு தாழ்வு தெளிவுசுளிவுகள்
பற்றி விவாதிப்பதற்காக என் நாட்டுப் பணத்தில் நான் வந்துள்
ளேனே தவிர இங்கே இந்த ஆடம்பரத்தைக் காண வரவில்லை
என்று அவர்கள் விடைபெறுகின்ற நேரத்தில் சொல்லியிருப்பது
வருந்தத்தக்கது.

அதேபோல் உலகத் தமிழ் மாநாட்டுக்கு யாரையெல்லாமோ
அழைத்தீர்கள். தமிழ் அறிஞர் டாக்டர் தமிழ் சுலபில் அழைக்கத்
தவறியது ஏன் ? ஆனால் அவர்களது மாணவர்கள் ஆறு பேர்
களை அழைத்து பேசச் செய்திருக்கிறீர்கள். இங்கே உட்லண்ட்ஸ்
ஹோட்டலில் அவர் தங்கியிருந்தும் அவர் அழைக்கப்படாதது
ஏன் ? அரசியல்வாதிகளை அழைக்கவில்லை என்றால் அதற்குக்
காரணம் இருக்கலாம். ஆனால் ஒரு தமிழ் அறிஞரை அழைக்கா
மல் அவர்களது மாணவர்களை அதுவும் சென்னையில் படித்துக்
கொண்டிருக்கின்ற ரிச்சர்ட், வாஸக் என்ற மாணவர்களை
மட்டும் பேச வைத்திருக்கிறீர்கள் என்றால் அந்த மாணவர்களை
அழைத்ததற்கு உள்நோக்கம் ஏதாவது இருக்க வேண்டும் என்று
தான் நான் நினைக்கிறேன்.

மதுர நாயகி என்ற நடன நாடகத்தை ஏற்பாடு செய்திருக்கி
றீர்கள். அது என்ன இலக்கிய நாடகமா ? நடனமா ? அது ஒரு
கற்பனைக் கதை. அதற்காக செலவு செய்திருக்கின்ற பணம்
நிச்சயமாக வீண் என்று குறிப்பிட விரும்புகிறேன். அண்ணா
அவர்கள் உலகத் தமிழ் மாநாடு நடத்திய போது தனிப்பட்ட
நிலையில் வேற்றுமை பார்க்காமல் தமிழ்நாட்டின் மிகச் சிறந்த
நடிகரை, உலகப் புகழ் பெற்ற நடிகரை, நடிகர் திலகம்
சிவாஜி அவர்களை அழைத்து நாடகத்தை நடத்தி சக்தி கிருஷ்ண
சாமியை கதை வசனம் எழுதச் சொல்லி சிலப்பதிகாரம் நாட
கத்தை நடத்தினார்கள். கலைஞர் அவர்கள் பூம்புகார் எழுதி
யிருந்த நிலையிலும்கூட அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கா
மல் சிவாஜி அவர்களையே நாடகம் போடச் சொன்ன பெருமை
அவர்களைச் சாரும். அண்ணா அவர்களின் வழி செல்கிறேன்

[திருமதி. டி. யசோதா] [1981 ஜனவரி 24

என்று சொல்கின்ற நீங்கள் ஏன் நடிகர் திலகம் சிவாஜி அவர்களை அழைத்து நாடகம் நடத்தும் ஒரு வாய்ப்பை தரவில்லை என்று நான் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் ஏதோ சிவாஜி கணேசன் அவர்களை கூப்பிடவில்லை போல் இருக்கிறது. அவரைக் கூப்பிடுவது மட்டுமல்ல; அந்தக் குழுவிலே அவரைப் போட்டிருந்தோம். அந்தக் குழுவிற்கு அவர் வரவில்லை. ஒத்துழைப்பும் தரவில்லை. உலகத் தமிழ் மாநாட்டிலே ஆர்வமும் இருக்கவில்லை. உலகத் தமிழ் மாநாட்டிலே கலந்துகொண்டு, தமிழ் அறிஞர்களைப் பெருமைப்படுத்தும் உணர்வு அவருக்கு இல்லை.

திருமதி டி. யசோதா : நீங்கள் தென்னிந்திய நடிகர் சங்கத்தின் சார்பில் ஒரு நாடகத்தைக் கேட்டிருந்தீர்கள். திரு. வி. கே. ராமசாமி அவர்கள் 'களம் கண்ட கவிஞன்' என்ற நாடகத்தை உங்களுக்கு எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். என்ன காரணமோ, அதை நீங்கள் ஏற்றுக்கொள்ள வில்லை. அதற்குப் பிறகு அதைக்கூட விளக்குவதற்கு இந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டால் நன்றாக இருக்கும். ஆகவே, உண்மை நிலையைச் சொல்லவேண்டுமென்று சொன்னால், ஏதோ ஒரு தனிப்பட்ட முறையில் நடந்ததைப்போல், சட்டமன்ற உறுப்பினர்களுக்குக்கூட சரியான முறையிலே அழைப்பு அனுப்பப்படவில்லை. சாதாரணமானவர்களை அழைப்பதுபோல் தான், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டது. ஒரு சட்டமன்ற உறுப்பினர் தங்குவதற்கு இடமில்லாமல், நடுத் தெருவில் தங்க முயற்சித்து, கடைசியாக சென்னைக்கு ஓடி வந்துவிட்டேன் என்று இந்த மன்றத்திலே சொல்லியிருக்கின்றார். ஆகவே, எங்களுக்குக்கே இந்த நிலைமை என்றால், கலைஞர்கள், நடிகர்கள், சிவாஜி கணேசனுக்கு எந்த வகையில் அழைப்பு அனுப்பியிருந்தாலும், அவருக்கு உரிய மரியாதை கொடுக்கப்படவில்லை என்ற எண்ணத்தின் காரணமாக இதை நான் குறிப்பிட்டேன். அதே நேரத்திலே, நடிகர் சங்கத்தால் 'களம் கண்ட கவிஞன்' நாடகம் கொடுக்கப்பட்டு, அது மறுக்கப்பட்டு விட்டது. அது உண்மையிலே வருந்தத்தக்க ஒன்றாகும்.

அடுத்தாற்போல், பி. அன்டு சி. மில்லைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதை சுமுகமாக தீர்த்துவைக்க அரசுக்கு நம்பிக்கை இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். இதிலே, 13,000 பேர்களுடைய குடும்பம் பாதிக்கப்பட்டிருப்பதால், இதை தீர்த்து வைப்பதில் அரசு செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1981 ஜனவரி 24] [திருமதி. டி. யசோதா]

இன்று மதுவிலக்குப் பிரச்னையில், அரசுக்கு நாளுக்கு நாள் நம்பிக்கை குறைந்துகொண்டு வருகிறது. மதுவிலக்கு இந்திய அரசியல் சட்டத்தின் கோட்பாடுகளில் ஒன்றாகும். இந்திய அரசியல் சட்டத்தையும், அதன் கோட்பாடுகளையும் கட்டிக் காக்கவேண்டிய ஆளுநர் அதற்கு பதிலாக, மதுவிலக்குப் பிரச்னையில் மறு பரிசீலனை செய்யவேண்டுமென்று கோருவது தவறு. ஆனால், மதுவிலக்குப் பிரச்னையில் சட்டமன்ற உறுப்பினர்களின் கருத்துக்களை மனம்திறந்து சொல்லவேண்டுமென்ற நிலை எப்படி வந்தது? மதுவிலக்குப் பிரச்னையை மக்கள் மன்றத்திலே சந்திக்கிறேன் என்று சொன்ன அந்த வாசகம் என்ன ஆயிற்று என்று கேட்கிறேன்? இது சம்பந்தமாக தாய்க் குலத்தின் தனியான கருத்துக்களையும், வாக்குகளையும் தெரிந்துகொள்ள வேண்டுமென்று சொன்ன அந்த வார்த்தைகள் என்ன ஆயிற்று என்பதைத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன். அண்ணா அவர்களின் கொள்கையை அமுல்படுத்துவதாகச் சொல்வார்கள், மதுவிலக்கை தளர்த்துவது என்பது....

திரு. கோ. விஸ்வநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள் இந்தியாவில் மட்டுமல்ல 17 மாநிலங்களையும் ஆளுகின்ற கட்சியைச் சார்ந்தவர் பேசுகின்றார். அவர்களுடைய மாநிலங்களிலே ஏன் இந்த மதுவிலக்குக் கொள்கையை நிறைவேற்றவில்லை. அதை அவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருமதி யசோதா அவர்களே, நீங்கள் சீக்கிரம் முடியுங்கள்.

Thiru L. ILAYAPERUMAL : Point of order. You should not say that because we do not implement prohibition in our State, we should not say that you should implement prohibition. This is* * * This is irregular.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: * * என்று சொன்ன அந்த வார்த்தை இருக்கக்கூடாது; அதை நீக்க வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

Thiru L. ILAYAPERUMAL : * * is a parliamentary word, it is not an unparliamentary word. Any how if you so desire I withdraw that word.

***பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பெற்றது.

[1981 ஜனவரி 24

மாண்புகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் விஸ்வநாதன், தங்கமணி உட்காருங்கள். திருமதி யசோதா சீக்கிரம் முடியுங்கள்.

திருமதி. டி. யசோதா : குறிப்பாக சொல்லவேண்டுமென்று சொன்னால், மதுவிலக்குப் பிரச்னையில் எங்கள் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் குறிப்பிட்ட அந்தந்த மாநிலங்கள் விரும்பினால் அவர்கள் சௌகரியத்தை முன்னிட்டு, செய்து கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். தற்போது, இதற்கு சட்டமன்ற உறுப்பினர்களின் ஆலோசனைகளைக் கேட்டகாரணத்தினால், பதில் சொல்லக்கூடிய நிலைமையிலே இருக்கிறேன். நான் உங்களுடைய விவகாரங்களில் தலையிட வேண்டிய அவசியமே இல்லை. ஆலோசனை கேட்ட காரணத்தினால் தான், சுட்டிக் காட்டுகிறோம். அண்ணாவினுடைய கொள்கையை நாங்கள் அமுல்படுத்துகிறோம் என்று உரிமையோடு கூறி, இந்தச் சட்டத்தைக் கடுமையாக்கியபோது, அப்போது இந்த மன்ற உறுப்பினர்களை எப்படி மறந்து விட்டீர்கள் என்று கேட்க ஆசைப் படுகிறேன்.

[பிற்பகல் 1-50]

கடுமையான சட்டத்தால் மது அருந்துபவர்கள் காவலில் வைக்கப்பட்டு லட்சக்கணக்கானவர்கள் மீது வழக்குப் போட்டு திடீரென்று விடுதலை செய்தீர்களே — அப்போது இந்த உறுப்பினர்களை மறந்து விட்டீர்கள். அப்பாவிகள் அவதிப்படக் கூடாது என்ற எண்ணத்தில் குறைந்த கட்டணத்தில் பர்மிட் கொடுக்க முன்வந்தபோது இந்த உறுப்பினர்களை மறந்து விட்டீர்கள். முதலில் அரசு அதிகாரிகளுக்குப் பர்மிட் இல்லை என்று பின்னர் கொடுக்க முனைந்தபோது ஏன் இந்த உறுப்பினர்களைக் கேட்கவில்லை என்று கேட்க ஆசைப்படுகிறேன். இப்போது என்ன வந்தது ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட 10 நிமிட நேரம் முடிந்து விட்டது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 27—1—1981 ஆம் தேதி காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-52 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.



1981 ஜனவரி 24]

## 7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டப்படியான விதிகளும், ஆணைகளும்.

152. தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு ஊர்க்காவல் படை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் 11—7—1980 ஆம் தேதியிடப்பெற்ற 1844 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு ஊர்க் காவல் படைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1963) 15(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

153. மாநில-மத்திய அரசுத் துறைகளுக்கு விற்பனை செய்யப்பெறுகிற மின் கருவிப் பொருள்களின்மீது செலுத்தத் தக்க சலுகை வரிவீதத்தைப் பொறுத்தவரையில், வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 6—9—1977 ஆம் தேதியிடப்பெற்ற 11(1)/வ.வ.ச.அ./196/77 ஆம் எண் அறிவிப்பில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள் சமய அறக் கட்டளைகள் துறையின் 13—10—1980 ஆம் தேதியிடப்பெற்ற 1029 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ் நாடு, 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது. ]

154. சென்னை 34-ல் உள்ள ஸ்ரீ ஸ்ரீநிவாச நிகேதத்திற்கு நன்கொடை வழங்குவதற்கென இந்திய விமானப்படையின் முன்னாள் வாரண்ட் அதிகாரி (Warrant Officer) திரு. எம். பாலசுப்பரமணியத்திற்கு, சென்னை-2ல் உள்ள யூனியன் கம்பெனி (மோட்டார்ஸ்) பிரைவேட் லிமிடெட் நிறுவனம் ஸ்டான்டர்டு 20 (251D) பட்டுவாடா வண்டியை விற்பனை செய்தலின்மீது விற்பனை வரிக்கு விலக்களிப்பது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 22—10—1980ஆம் தேதியிடப் பெற்ற 1078 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

155. செவிகேட்புக் கருவிகளுக்கு விலக்களிக்கும் ,வருவாய் துறையின் 28-3-1959 ஆம் தேதியிடப் பெற்ற SROA/1966/1959 ஆம் எண் அறிவிப்பில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 10—9—1980ஆம் தேதியிடப் பெற்ற 833 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

156. தமிழ் நாடு 1970 ஆம் ஆண்டு நகராட்சிப் பணி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து ஊர்வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் 19—7—1975 ஆம் தேதியிடப் பெற்ற 1197 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ் நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 5/1920) 304 (ஈ) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

**ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.**

எதுவுமில்லை.

**இணைப்பு**

[199 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 21க்கான விடையைக் காண்க.]

விடை ;

கடலோரப் பகுதியிலிருந்து மூன்று மைல் தொலைவுக்குள் கட்டுமர மீனவர்கள் மீன் பிடிக்க வேண்டுமென்றும், மூன்று மைல் தொலைவுக்கப்பால் விசைப்படகுக்காரர்கள் மீன்பிடிக்க வேண்டுமென்றும் வற்புறுத்தப்படுகிறது.

2. சென்னை மற்றும் செங்கற்பட்டு மாவட்ட கடற் பகுதிகளில் விசைப்படகுக்காரர்களுக்கும், நாட்டுப் படகுக்காரர்களுக்கும் தகராறு ஏற்பட்டு சட்ட ஒழுங்குப் பிரச்னை உண்டாகும் போது காவல் துறையினர் குறுக்கிட்டு அதைத் தவிர்க்கின்றனர்.

3. இதர மாவட்டங்களில், மாவட்ட ஆட்சியர்கள் மீன்துறை காவல் துறை அலுவலர்களையும், விசைப்படகுக்காரர்கள், நாட்டுப் படகுக்காரர்கள் பிரதிநிதிகளையும் அழைத்து, சமரச குழுக்களைக் கூட்டி அவ்வப்போது பிரச்னைகளை சுமுகமாக தீர்த்து வருகின்றனர்.

4. தஞ்சாவூர், இராமநாதபுரம் மாவட்டங்களில் ஒரு வாரத்தில் நாட்டுப்படகு மீனவர்கள் நான்கு நாட்களிலும், விசைப் படகுக்காரர்கள் மூன்று நாட்களிலும் இரவில் மீன் பிடிக்க மீன் துறையினரால் அனுமதிச் சீட்டு வழங்கப்படுகிறது.

5. தென்னாற்காடு, தஞ்சாவூர், இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மீன்பிடிக் காலங்களில் கடலில் தகராறுகள் ஏற்படுவதைத் தவிர்த்திட மீன் துறையினர் குறிப்பிட்ட முக்கிய இடங்களில் ரோந்து செய்கின்றனர்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1981 ஜனவரி 27.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

‘ வெள்ளத்து அனைய மலர்நீட்டம் ; மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு ’

நீரில் வளரும் பூக்களின் நீளம், அவை நிற்கும் நீரின் அளவினதாக நிற்கும். அதைப்போல மக்களின் உயர்வு, அவர்களுடைய ஊக்கத்தின் அளவினதாக அமையும்.

**1. வினாக்கள்-விடைகள்.**

**[அ] உடுக்குறியிட்ட வினாக்கள்.**

**விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கான உதவித் தொகை**

*வினா எண் 41—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விடுதிகளில் தங்கிப் படிக்கும் பின்தங்கிய கல்லூரி மாணவர்களுக்கு வழங்கும் உதவித் தொகையை உயர்த்தித் தரும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : அப்படிப்பட்ட செயற் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் கல்வி பயிலுகின்ற, விடுதிகளில் தங்கிப் படிக்கின்ற மாணவர்களுக்கு உதவித் தொகையை உயர்த்திக் கொடுக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, முதலிலே நான் குறிப்பிட்டபடி அதற்கான செயற் குறிப்பு இல்லை. இப்போதுள்ள சூழ்நிலைகளையொட்டி ஆங்காங்குள்ள விடுதிகளில் உள்ளவர்களும், கல்வி நிறுவனங்களிலே உள்ளவர்களும் விண்ணப்பித்துக் கொள்வார்களேயானால் கல்வித் துறையின் மூலமாக பிற்பட்டோர் நலத்துறை அது பற்றி ஆராயும். ஆனால் அதுபற்றிய செயற்குறிப்பு எதுவும் இப்போது அரசினிடத்திலே இல்லை.

**திரு. கு. ப. பழனியப்பன் :** தலைவர் அவர்களே, பள்ளி மாணவர்களுக்கு என்று இருக்கின்ற மாணவர்கள் விடுதிகளிலே நாளொன்றுக்குச் செலவிடப்படும் தொகை மிகவும் குறைவாக இருக்கிறது. அந்தந்தக் காப்பாளர்கள் தங்கள் சொந்தப் பணத்தைச் செலவு செய்து விட்டு—மாதம் முழுவதும் எடுத்துச் செலவழித்து விட்டு—பின்னர்தான் அதைத் திருப்பிப் பெறக் கூடிய நிலைமை இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா? அதைப் போக்குவதற்கு வழிவகை செய்யப்படுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூலக்கேள்வி கல்லூரியைப் பற்றியது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற உதவித் தொகை எந்த ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டது? இப்போது விலைவாசி உயர்ந்து வருகிற காரணத்தினாலே வருகிற ஆண்டிலிருந்தாவது அந்தத் தொகையை உயர்த்துகிற உத்தேசம் அரசுக்கு உண்டா? பிற்பட்ட மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்குவது ஒருபுறம் இருக்க, அவர்களுக்காக கட்டடங்கள் கட்டுவதற்கு எடுக்கப்படுகிற முயற்சியிலே, திருமங்கலத்திலே ஒரு கட்டடம் கட்ட ஆரம்பித்து 10 ஆண்டுக் காலமாகியும் கூட இன்னும் ஆரம்ப நிலையிலேயே தான் இருக்கிறது, அதற்குரிய செயற்குறிப்பு இப்போது என்னிடத்திலே இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லாது இந்த ஆண்டாவது அதைத் தொடர்ந்து கட்டி முடிக்க ஆவன செய்ய முன்வருவார்களா

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, கடைசியாக எப்போது நிர்ணயம் செய்யப்பட்டது என்ற விவரம் என்னிடத்திலே இல்லை. 1948–49ஆம் ஆண்டிலே தான் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு அந்தச் சலுகைகள் மற்றவைகள் எல்லாம் வழங்கப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு அப்போது ஒரு லட்ச ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு 650 மாணவர்களுக்கு அளிக்கப்பட்டது. அதற்குப் பிறகு படிப்படியாக அது வளர்ந்து வளர்ந்து மாணவர்களுடைய எண்ணிக்கையும் வளர்ந்து வளர்ந்து அதற்கேற்றாற் போல் அந்த



உதவித் தொகைகளினுடைய அளவும் உயர்ந்து உயர்ந்து இப்போது 2,54,605 மாணவர்களுக்கு கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் 148 வகைகளிலே உதவிகளை அவர்கள் பெற்று வருகிறார்கள். இப்போது 2 கோடியே 95 லட்சத்து 91 ஆயிரம் ரூபாய் செலவழிக்கப்பட்டு வருகிறது. எப்போது அது நிர்ணயிக்கப்பட்டது என்ற செயற்குறிப்பு இல்லை. நான் முதலிலேயே சொன்னேன். அதற்கான குறிப்புகளை ஆங்காங்கு உள்ளவர்கள் கல்வித் துறையின் மூலமாக அனுப்பினால் அதை பிற்பட்டோர் நலத்துறை ஆராயும். அந்தத் தொகையை உயர்த்தினால் மாணவர்களுடைய எண்ணிக்கையை எதிர் காலத்திலே குறைக்க வேண்டியிருக்கும். அதிகமான மாணவர்களுக்குத் தர வேண்டுமானால் செலவைக் குறைக்க வேண்டி இருக்கும். ஆழமாக இவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்துத்தான் நியாயமான முடிவை மேற்கொள்ள வேண்டும். கட்டடம் கட்ட வேண்டியது பற்றி மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி கூட போட வேண்டாம். என்னிடம் தனியாக அதைப்பற்றி எழுதி அனுப்பினால் இந்தத் துறையின் மூலமாக அதுகுறித்து ஆவன செய்வதற்கு அரசு முயலும்.

**திரு. சி. பழனிமுத்து :** தலைவர் அவர்களே, கல்லூரி விடுதிகளில் தங்கிப்படிக்கும் ஏழை எளிய பின்தங்கிய மாணவர்களுக்குக் கொடுக்கப்படுகிற சலுகைகள் குறைவாக உள்ளன. அரிசன, பின்தங்கிய மாணவர்களிடையே நியாயமான அடிப்படையில் வித்தியாசம் உள்ளது. இந்த வித்தியாசத்தை எல்லாம் பரிசீலனை செய்து கல்லூரி மாணவர்களுக்கு உதவித் தொகையை அதிகப்படுத்துவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டபடி அதைப் பற்றி வேண்டுகோள் வருமானால் அரசு அதை ஆராயும்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் :** கோவைத் தலைவர் அவர்களே, ஒரு நபருக்கு 1·50 என்று நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது. அந்தப் பணம் ஒரு நேரத்திற்குக் கூட போதாது. விலைவாசி ஏற்கனவே ஏறியிருப்பதை அமைச்சரவர்கள் அறிவார்கள். எனவே, விலைவாசி ஏற்றத்தைக் கணக்கில் கொண்டு இந்த உதவி தொகையை அதிகப்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஏற்கனவே திரு. என். எஸ். வி. சித்தன் அவர்களால் உதவித் தொகையை அதிகப்படுத்த முடியுமா என்று கேட்கப்பட்டு அமைச்சரவர்கள் பதில் அளித்து விட்டார்கள்.

[1981 ஜனவரி 27

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : அப்படி உயர்த்துவது மட்டுமல்லாமல், அந்த உதவித் தொகையை வருடக் கடைசியிலே கொடுப்பதை மாற்றிக் கலாகாலத்தில் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றி அரசு ஆராயும்.

திரு ரா. உமாநாத் : காலாகாலத்தில் கொடுப்பது என்பது கடமை. அதையே அரசு ஆராயும் என்று சொல்கிறார்களே.

திரு. என் இட்டப்பா : தலைவரவர்களே, கல்லூரிகளில் படிக்கின்ற பின்தங்கிய மாணவர்கள் அல்லது மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் அல்லது தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த கல்லூரி மாணவர்கள் அல்லது மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் விடுதிகளில் தங்கிப்படிக்கின்றவர்களுக்கு உதவித்தொகை அளிக்கும்பொழுது அதற்கு ஒரு குறிப்பிட்ட தூரத்திற்கு அப்பாலிருந்து வருபவர்களுக்கு வழங்கப்படுவதாகத் தெரிகிறது. அதை மாற்றி ஓரளவுக்கு வறுமையின் அடிப்படையில், மிக வறுமையாக உள்ள குடும்பங்களைச் சார்ந்தவர்களுக்கு அத்தகைய சலுகையை வழங்குவதற்கு அரசு ஆலோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் முதலிலே கூறியபடி பள்ளிகளிலிருந்து கல்லூரிகள் வரையில் பல்வேறு வகைகளில், பல்வேறு படிப்புகளுக்கு, பல்வேறுவிதமான உதவித் தொகைகளை வழங்குகிறோம்; 148 வகைகளில் உதவித் தொகைகளை வழங்குகிறோம். எங்கு, எந்த அளவிற்கு இந்த உதவித் தொகைகளைப் பற்றிச் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்பது ஆராயப்பட வேண்டிய ஒன்று. மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோன்று இருக்கின்ற கஷ்டங்களைப்பற்றி வேண்டுகோளாக உரியவர்களிடத்திலேயிருந்து வருமேயானால் துறையினர் ஆராய்ந்து வேண்டியவற்றைச் செய்வதற்கு அரசு முயலும்.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பின்தங்கிய வகுப்பு மாணவர்கள் உதவித் தொகை சம்பந்தமாகச் சொல்லும் பொழுது 1948 ஆம் ஆண்டில் அது நிர்ணயிக்கப்பெற்றது என்று சொன்னார்கள். கிட்டத்தட்ட 32 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. இன்றைக்குள்ள விலைவாசியைப் பற்றி ஏற்கனவே பலர் சொன்னார்கள். ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு விலையாக இருக்கிறது. பல கல்லூரி மாணவர் விடுதிகளிலே அவர்களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகை போதாமல் வீட்டிலிருந்து பணத்தை....



1981 ஜனவரி 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விலைவாசி உயர்வு பற்றி பேசியாகி விட்டது. மாதாமாதம் விலை ஏறுகின்றபொழுது மாதாமாதம் சர்க்கார் கூட்டிக் கொடுக்காது. உறுப்பினர் கேட்ட கேள்வியை திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் கேட்டு விட்டார்கள். அமைச்சரும் பதில் அளித்து விட்டார். ஒரே கேள்வியைத் திருப்பித் திருப்பிக் கேட்கக் கூடாது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இப்பொழுது பின்தங்கிய மாணவர்கள் கல்லூரிகளில் படிக்கின்றபொழுது அல்லது உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கின்றபொழுது கொடுக்கப்படுகின்ற உதவித்தொகை போதாது. 50 ரூபாய் உதவித் தொகை கொடுத்தால் 1,000 ரூபாய் வெளியே செலவழிக்க வேண்டியிருக்கிறது. இதனால், சாதாரண ஏழை எளிய மாணவர்களுக்கு எந்த நோக்கத்திற்காகக் கொடுக்கிறோமோ அந்த நோக்கம் நிறைவேறாமல், அவர்கள் படிக்க முடியாமல் கீழேயே நின்றுவிடுகிறார்கள். ஆகவே, உதவித்தொகை என்று கொடுப்பதற்குப் பதிலாக அவர்களுடைய சாப்பாட்டிற்கு விடுதியில் என்ன செலவாகிறதோ அதை அப்படியே ஏற்பது என்ற புதிய கொள்கையைக் கடைப்பிடிக்க அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றிய முடிவு எதையும் இப்பொழுது அரசு மேற்கொள்ளவில்லை. உதவித்தொகை என்று சொல்லும்பொழுது ஓரளவிற்கு உதவி செய்வோம் ; மற்றதை அவரவர்கள் செய்ய வேண்டுமென்ற நிலைதான் வருகிறது. 1948–49 ஆம் ஆண்டில் இப்படிப்பட்ட திட்டம் புகுத்தப்பட்டது என்றுதான் சொன்னேன். 1 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டு, 650 மாணவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் ; ஆனால் அவ்வப்பொழுது விலைவாசியேற்றத்தைக் கொண்டு ஓரளவிற்கு ஏற்றிக்கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது கொடுக்கப்படும் உதவித் தொகை போதுமானதாக இருக்கிறதா இல்லையா என்பது பிரச்சினை. இதுபற்றி வேண்டுகோள் வந்தால், இருக்கின்ற நிதி நிலைமைகளின் அடிப்படையில், நியாயத்தின் அடிப்படையில் முடிவு செய்யலாம் என்பதுபற்றி இயன்றவரையில் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### திருவொற்றியூரில் துணைக் கருவூலம்

*வினா எண். 42—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவொற்றியூரில் துணைக் கருவூலம் அமைக்கும் முயற்சிகள் எந்த அளவில் உள்ளன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : திருவொற்றியூரில் துணைக் கருவூலம் துவங்கும் செயற்குறிப்பு எதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[1981 ஜனவரி 27

[முற்பகல் 9-10]

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலில் அப்படிச் செயற்குறிப்பு இல்லையென்று சொன்னதை மிக்க வருத்தத்தோடு கேட்டுக் கொண்டிருந்த நான், திருவொற்றியூர் பகுதியிலே மட்டும், அரசாங்க அலுவலகங்கள் 39 இருக்கின்றன என்பதையும், நூற்றுக்கணக்கான தொழிற்கூடங்களும், நீதிமன்றமும் இருக்கின்றன என்பதையும், அந்த நிலையில் அங்கிருக்கின்ற மக்கள் சைதாப்பேட்டைக்கு வருகின்ற துயரத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் அறிந்து, அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் உடனே முன் வருவாரா, மறுபரிசீலனை செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கருவூல விதிக் கோவை தொகுதி ஒன்றைச் சேர்ந்த ஐந்தாவது கருவூல விதியின் கீழ் வரும் 1-வது துணை விதிக்கிணங்க, ஒவ்வொரு வட்டத் தலைமையிடத்திலும் துணைக் கருவூலம் இருக்க வேண்டும். துணை வட்டம் ஒவ்வொன்றின் தலைமையிடத்திலும் வேலைப் பளு அதிகமாக ஏற்படுமானால், ஆங்காங்கு ஆராய்ந்து துணை வட்டத் தலைநகரில் கருவூலம் வைக்கலாம் என்ற அளவுக்கும் விதியிருக்கிறது. அதை ஆராய்ந்துதான் துணைக் கருவூலங்கள் ஆங்காங்கே நிறுவப்பட்டு வருகின்றன. துணைக் கருவூலம் ஒன்றைத் தொடங்குவதற்கான மற்றொரு முக்கிய அடிப்படை துணைக் கருவூலம் பொது மக்களுக்குச் சிறந்த பணி அளிப்பதோடு, பொதுமக்களும் சம்பளம் பெறும் அலுவலர்களும் எளிதில் சென்று பணம் பெற வசதியுடையதாக இருக்க வேண்டுமென்பது.

திருவொற்றியூரிலும், திருவொற்றியூரைச் சுற்றியுள்ள இடங்களிலும் உள்ள அரசு அலுவலகங்கள், பொதுமக்கள் சம்பந்தப்பட்ட அரசு பற்று-வரவுகள் தற்பொழுது சைதாப்பேட்டை, நந்தனம் துணைக் கருவூலங்களால் கவனிக்கப்பட்டு வருகின்றன. திருவொற்றியூரிலும், திருவொற்றியூரைச் சுற்றியும் உள்ள 12 அரசு அலுவலகங்கள் சைதாப்பேட்டை துணைக் கருவூலத்துடனும், 6 அலுவலகங்கள் நந்தனம் துணைக் கருவூலத்துடனும் இணைக்கப்பட்டுள்ளன. இப்பதினெட்டு அலுவலகங்களும் மாதம் ஒன்றுக்கு சுமார் 300 சம்பளப் பட்டியலை அனுப்பி வைக்கின்றன. திருவொற்றியூர் பகுதியிலிருந்து மாதம் ஒன்றுக்குச் சுமார் 900 செலுத்துச் சீட்டுகள் மூலம் இத்துணைக் கருவூலங்களில் பணம் செலுத்தப்படுகின்றன. இப்பகுதியில் ஓய்வூதியம் பெறுகிறவர்கள் 208 பேர்கள் உள்ளனர். மேற்சொன்ன பற்று-வரவுகளைக் கவனிப்பதற்கு ஒரு தனிக் கருவூலம் இப்பொழுது அவசியம் இல்லை. இந்த அளவுக் கணக்கைப் பார்க்கும்போது



1981 ஜனவரி 27]

தனிக் கருவூலம் அவசியம் இல்லையென்ற ஒரு கருத்து இருக்கிற காரணத்தால் திருவொற்றியூரில் தனிக் கருவூலம் நிறுவுவதற்கு அவசியம் இல்லையென்று எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 12 அலுவலகங்கள் இருக்கிற நேரத்தில், 9,000 சீட்டுகள் கட்டப்படுகின்ற இடத்தில், இப்பொழுது உள்ள ஏற்பாடே போதுமானது என்று சொல்வதை, மீண்டும் நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன், மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று. 39 அலுவலகங்கள் அங்கிருக்கின்றன என்ற பட்டியலே என்னுடைய கையில் இருக்கிறது. இன்னும் நீதிமன்றம் இருக்கிறது, சார்புப் பதிவாளர் அலுவலகம் இருக்கிறது, கூட்டுறவு நிலவள வங்கி இருக்கிறது ; இத்தனையும் இருக்கிற காரணத்தாலே,......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அனைத்தையும் சொல்ல ஆரம்பித்து விட்டால் நேரம் போதாது.

**திரு. குமரி அனந்தன் :** பொதுமக்களுடைய வசதிக்கேற்பவும், என்ற அந்த விதியைப் பயன்படுத்தி, பொது மக்களுடைய வசதி என்ற அடிப்படையிலே நிறுவலாம் என்று மரியாதைக்குரிய நிதி அமைச்சர் அவர்கள் சொன்னதனாலும், பொது மக்களுடைய அக்கறையிலே அவர்கள் எப்பொழுதும் நாட்டம் செலுத்துகின்றவர்கள் என்ற அளவிலும், நிச்சயமாக அவர்கள் அந்தப் பொதுமக்கள் நலன் என்ற அடிப்படையில், அதனைச் செய்து தருவாரா என்பதனை மீண்டும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே, 12 பிளஸ் 6, ஆக, 18 அரசு அலுவலகங்கள் அங்கே இருக்கின்றன என்று கணக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 39 என்று சொல்கின்றார். எனக்கு அரசின் சார்பாக கொடுக்கப்பட்டிருக்கிற தகவல் 18 அரசு அலுவலகங்கள் என்பதுதான். அது சரிபார்க்கப்படும். 900 செலுத்துச் சீட்டுகள் என்று சொன்னேன். 9,000 அல்ல. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப் போன்று, அவருடைய வேண்டுகோளை வேண்டுமானாலும் நான் மீண்டும் பரிசீலிக்கத் தயாராக இருக்கிறேன். பரிசீலித்து இந்தக் காரணங்களுக்கு அப்பாற்பட்டு ஒரு கருவூலம் நிறுவப்படுவது அவசியம், நியாயம் என்று பட்டால் நிறுவப்படும். நியாயம் என்று படவில்லையென்றால், இப்பொழுதுள்ள கருவூலங்களே போதுமானது என்று கருதப்படுமானால், அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால், அந்த வேண்டுகோளை முழுப் புள்ளி விவரங்களோடு அவர்கள் தந்தார்களானால், இந்த அரசு ஆராயும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

சங்கு குளிப்போருக்கு ஊக்குவிப்புத் தொகை.

*வினா எண். 43—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கு குளிக்கும் தொழிலாளர்களுக்கு ஊக்கத்தொகை திட்டத்தில் மாறுதல் செய்யப்பட்டு உள்ளதென்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 1,500 முழு அளவு உள்ள சங்குகளுக்கு மேல் எடுக்கும் ஒவ்வொரு முழு அளவு சங்குக்கும் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கும் அதிகமாக 60 காசுகள் ஊக்குவிப்புத் தொகை 1979—80 சங்கு குளி பருவத்திலிருந்து வழங்க ஆணையிடப்பட்டது. இந்தத் திட்டத்தினால் எல்லா தொழிலாளர்களும் பயனடையமாட்டார்கள் என அறிந்து மாற்று திட்டம் ஒன்று 1980 நவம்பர் மாதத்தில் அறிவிக்கப் பட்டது. அதன்படி சங்கு குளித் தொழிலாளர் ஒவ்வொருவரும் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு மேல் கீழ்க்கண்டவாறு ஊக்குவிப்புத் தொகை பெறுவர் :—

(i) 750 முழு அளவுள்ள சங்குகளுக்கு—ஒவ்வொரு சங்குக்கும் 10 காசுகள்.

(ii) 750 முழு அளவுள்ள சங்குகளுக்கு மேல் ஆனால் 1,500 சங்குகள் வரை—ஒவ்வொரு சங்குக்கும் 15 காசுகள்.

(iii) 1,500 முழு அளவுள்ள சங்குகளுக்கு மேல்—ஒவ்வொரு சங்குக்கும் 20 காசுகள். ஊக்குவிப்புத் தொகை 1978—79 சங்கு குளி பருவத்திலிருந்தே அளிக்கப்படும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே ஊக்குவிப்புத் தொகை மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதற்காக நன்றி. அதோடு இதுவும் கூட போதாது என்று சொல்லி கோரிக்கை ஏதேனும் அரசுக்கு வந்ததா ? அதை அரசு பரிசீலித்ததா ? அதுபோக வலம்புரிச் சங்கு எடுப்பதற்கு தனியாக ஏதேனும் ஊக்கத் தொகை கொடுக்கப்படுகின்றதா ? சமீபத்தில் இது போன்ற வலம்புரிச் சங்கு கண்டுபிடிக்கப்பட்டதா ? அதற்கு எத்தனை தொகை அரசு வழங்கியிருக்கிறது?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்போது நவம்பரில்தான் இந்த ஆணை இடப் பட்டிருக்கிறது. இதிலே எதுவும் குறைபாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை. ஏற்கனவே 500 சங்கு, 600 சங்கு திரட்டு கிறவர்களுக்கு ஒரு ஊக்கத் தொகையும் இல்லாமல் இருந்த காரணத்தினால், 750 வரையில் ஒவ்வொரு சங்குக்கும் 10 காசுகளும், 750 க்கு மேல் 1,500 வரையிலும் 15 காசுகளும், அதற்கு மேல் 20 காசுகளும் கொடுக்கப்பட வேண்டும் என்று நிர்ணயித்திருக்கிறோம். அதை இப்போது வாங்கிக் கொண்டு இருப்பார்கள் என்று கருதுகிறேன். ஆனால் இதிலே ஏதாவது சங்கடங்கள் ஏற்படுமானால், இது வரையில் அது பற்றிய கோரிக்கைகள் வரவில்லை, அது பற்றி அரசின் பரிசீலனைக்கு வந்தால் அது பற்றி ஆராய அரசு தயாராக இருக்கின்றது. மற்றைய வலம்புரிச் சங்கைப் பொறுத்த வரையிலும் போதிய அளவுக்குக் குறிப்புகள் இல்லை. அதற்காகத் தனியான ஊக்கத் தொகை தரப்படுகிறது. தனிக் கேள்வி போட்டால் அது பற்றிய விவரங்கள் சேகரித்துத் தரப்படும்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலிலே மூழ்கி சங்கு குளிப்பது என்பது மிகவும் சிரமமான விஷயம் என்பது தாங்கள் அறிந்ததே. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் நடித்த படகோட்டி படத்தில் கூட விவரமாக இதைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள். ஆகவே சங்கு குளிப்பவர்களைப் பாதுகாப்பதற்கு அவர்கள் விபத்துக் குள்ளானால் அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பதற்குச் சட்டம் கொண்டு வர அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இது பற்றிய செயற் குறிப்பு இப்போது இல்லை.

திரு. வ. சத்தியமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, சங்கை அரசிடம் மட்டும்தான் விற்க வேண்டும் என்று சட்டம் இருப்பதால் கள்ளச் சந்தை சங்குத் தொழிலில் வளர்ந்து வருவதை அரசு அறியுமா ? நல்ல சங்கை தனியாரிடம் விற்று விட்டு, அரசாங்கத்திடம் பாழ்பட்ட சங்குகளை மட்டுமே விற்க தொழிலாளிகள் கொண்டு வரும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே அரசிடம் மட்டும்தான் விற்க வேண்டும் என்ற சட்டத்தை மறு பரிசீலனை செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற குறை பாடுகள் எந்த அளவிலே நிகழ்கின்றன என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஆகவே அரசாங்கம் பெறுகின்றதிலே இந்த

பெறுவதற்கான வாய்ப்பு குறைந்து போகிறது. இதைக் கருத்தில் கொண்டு அந்தத் தடையை நீக்குவதற்கு இந்த அரசு உடனடியாக முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லாத காரணத்தால் அருள் கூர்ந்து உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் அளிக்கப்படும் என்பதைக் தெரிவித்துக் கொள்கிறேன்.

## கோவை நகரில் பால் வழங்கல்

***வினா எண். 45— திரு. கு. ரமணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை நகரத்திலுள்ள லட்சக்கணக்கான மக்களுக்கு நல்ல முறையில் பால் கிடைக்காத நெருக்கடி உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம். எனில் சென்னை நகரிலுள்ளது போல் அரசு பால் விநியோக நிறுவனம் ஒன்றை அமைக்க உத்தேசம் உண்டா?

(இ) கோவை நகர மக்கள் அனைவருக்கும் நிர்ணய விலையில் பால் சரிவர கிடைக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** (அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

(இ) கோவை மாநகர் பால் உற்பத்தியாளர் ஒன்றியம் மூலம் கோவை நகரின் பல்வேறு பகுதிகளிலும் தரமான பால் விநியோகம் தற்போது செய்யப்பட்டு வருகிறது.

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தரமான பால் கூட்டுறவு சங்கங்களின் மூலம் பல பகுதிகளில் விநியோகம் செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். கோவை நகரத்தில் இருக்கும்படியான பகுதிகளில்— இப்போது அண்மையில் புதிதாகச் சேர்க்கப்பட்ட பகுதிகளைப் பற்றி நான் சொல்லவில்லை—பழைய பகுதிகளிலேயே—5 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இருக்கிறார்கள். அவர்களில் 4–ல் ஒரு



பகுதி மக்களுக்குக் கூட இந்த பால் விநியோகம் சரியாகச் செய்யப்படவில்லை. அதனால் ஏராளமான மக்கள் கஷ்டப்படுகிறார்கள். பல நேரங்களில் தண்ணீர் கலந்த பால்தான் விநியோகிக்கப்படுகிறது. இந்த நிலையை உணர்ந்து அரசே அங்கே ஒரு பால் விநியோகம் செய்யும் நிறுவனத்தை அமைத்து, அதன் மூலம் விற்பனை செய்ய முயற்சி செய்யப்படுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கனவே அங்கே கோவை மாவட்ட ஒன்றியத்தின் சார்பாக பால் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஆனால், தற்போது அரசின் கொள்கையின்படி தனியாக அங்கே ஒரு பால் விநியோக நிறுவனம் ஏற்படுத்தி, விநியோகம் செய்ய அரசு தயாராக இல்லை. இது அரசின் கொள்கை என்பதை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**திரு. டி. மணி:** தலைவர் அவர்களே, ஒரு ஒன்றியம் பால் விநியோகம் செய்கிறது என்பது அல்ல அங்கேயுள்ள பிரச்சினை. கோவை நகரத்தில் இருக்கும்படியான மக்களுக்கு, மிகவும் மோசமான முறையில் பால் விநியோகம் செய்யப்படுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளைத்தான் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுவும், அந்த நகரத்தை மாநகரமாக மாற்றப்பட இருக்கின்ற இந்த நேரத்தில் இந்த நிலைமை நீடிப்பது சரியல்ல. அத்தகைய ஒரு பெருநகரத்திற்குச் சீரான முறையில் பால் விநியோகம் செய்யும் பொறுப்பு இந்த அரசுக்கு இல்லையா என்று கேட்க விரும்புகிறேன். எந்த நிலையில் பார்த்தாலும், திருப்திகரமான முறையில் பால் விநியோகத்தைச் செய்ய முடியாத அந்த ஒன்றியத்தை அரசே ஏற்று நிர்வகிப்பதால் என்ன சட்ட விரோதம் அல்லது கொள்கை மாற்றம் வந்து விடும் என்பது எனக்குப் புரியவில்லை. அமைச்சர் அவர்கள் இதைத் தெளிவுபடுத்துவதோடு, அந்த விநியோக முறையைச் சீரமைக்கவும் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, கோவை நகரத்து மக்களின் பெருகி வரும் தேவையை நிறைவு செய்ய அரசு பல திட்டங்களைத் தீட்டி இன்றைக்குச் செயலாற்றிட எண்ணி இருக்கிறது. அந்த வகையில் செயல்படுகின்ற நேரத்தில் ஏதாவது குறைபாடுகள் இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவார்களானால், நிறைவு செய்யப்படும்.

திரு. வெ. அரங்கராசன் : தலைவரவர்களே, விவசாயிகள் போராட்டத்தின்போது பால் விநியோக நிலையங்களுக்கு வந்த பாலுக்கு ஏற்பட்ட சேதம் எவ்வளவு?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வியை யொட்டிக் கேட்க வேண்டும்.

திரு. எம். ஆறுமுகம் : தலைவரவர்களே, கோவை நகரில் இலட்சக்கணக்கான மக்களுக்கு பால் கிடைக்காத நெருக்கடி இருப்பதால் கோவை மாவட்டத்தில் அரசு பால் பண்ணை அமைக்க அரசிடம் உத்தேசம் ஏதாவது உண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முரசொலிக்கு அளித்துள்ள சந்தா தொகை.

*வினா எண் 46—திரு. சி. கேசவ ஆதித்தன் : மாண்புமிகு செய்தித்துறை அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழ்நாட்டிலுள்ள இந்து கோயில்கள் எல்லாம் முரசொலி பத்திரிக்கைக்கு ஆயுள் சந்தாவாக ரூபாய் ஆயிரம் கொடுத்திருப்பது இந்த அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அந்தப் பணத்தை மீண்டும் அந்த கோயில்களுக்குத் திரும்பப்பெற ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

(அ) மற்றும் (ஆ) பதினைந்து திருக்கோயில்கள் முரசொலி நாளிதழுக்கு தலா ரூபாய் ஆயிரம் வீதம் சந்தா அளித்துள்ளன. இத்தொகையினை திரும்பப்பெற சம்பந்தப்பட்ட கோயில்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தன்னுடைய பதிலிலே 15 திருக்கோயில்கள் முரசொலி நாளிதழுக்கு 1,000 ரூபாய் வீதம் ஆயுள் சந்தா செலுத்தியிருப்பதாகக் குறிப்பிட்டு, அதை மீண்டும் திரும்பப் பெற ஏற்பாடு செய்து வருவதாக கூறினார்கள். இந்த 1,000 ரூபாயை செலுத்த வேண்டுமென்று அன்றையதினம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த திராவிட முன்னேற்றக் கழகம் கூறியதா அல்லது அந்த கோயில் நிர்வாகம் தாமாக முன் வந்து கொடுத்தார்களா என்று அறிய விரும்புகிறேன். அதோடு இன்னொன்று இந்த 1,000 ரூபாய்க்கு ஓரளவுக்கு பத்திரிகை





போட்டிருப்பார்கள். எப்படி இருந்தாலும் போட்டுவிட்ட பத்திரிக்கைகளுக்குப் பணம் செலுத்த வேண்டியது முறை என்பதை உணர்வார்களா? அதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, என்னிடத்திலே கேட்கப்பட்டிருக்கிற வினா, '' தமிழ்நாட்டிலுள்ள இந்து கோயில்கள் எல்லாம் முரசொலி பத்திரிக்கைக்கு ஆயுள் சந்தாவாக ரூபாய் ஆயிரம் கொடுத்திருப்பது இந்த அரசுக்குத் தெரியுமா? அந்தப் பணத்தை மீண்டும் அந்த கோயில்களுக்குத் திரும்பப்பெற ஆவன செய்யப்படுமா? '' என்பது இந்த இரண்டுக்கும் பதில் சொல்லியிருக்கிறேன். 15 திருக்கோயில்கள் முரசொலி நாளிதழுக்கு ஆயிரம் ரூபாய் வீதம் ஆயுள் சந்தா அளித்துள்ளன : இத்தொகையினை திரும்பப் பெற சம்பந்தப்பட்ட கோயில்களால் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. ஏன் திரும்ப வசூல் செய்யப்பட வேண்டுமென்ற கட்டாயம் வருகிறது என்றால் இந்து சமய கோயில்களுடைய பணத்திலிருந்து சமய சம்பந்தமான நூல்கள் வாங்குவதற்கு மற்றும் அதுபோன்ற பிற வகைகளுக்கு மட்டுமே செலவிட வேண்டுமென்ற விதி இருக்கிற காரணத்தினால், அந்த விதிக்கு ஏற்ப அந்தந்த கோயில் அறங்காவலர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். இதில் அரசு நேரடியாக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

திரு. குமரி அனந்தன் : தலைவரவர்களே, ஆயுள் சந்தா என்ற அடிப்படையிலே 15 கோயில்கள் கொடுத்தன என்றால் அது ஆலயத்தினுடைய ஆயுளா அல்லது முரசொலி பத்திரிக்கையின் ஆயுளா ? எந்த ஆயுளை கணித்துக் கொடுத்தார்கள் ? ஆண்டவன் ஆயுளை கணிக்க ஆலயத்தைச் சேர்ந்த அறங்காவலர்களுக்கு உரிமை இல்லை என்பதை அமைச்சரவர்கள் தெரிந்திருப்பார்கள் அல்லவா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, இந்த ஆயுள் சந்தா என்ற வார்த்தை நீண்டகாலமாக பத்திரிகை உலகில் விளங்கி வரும் வார்த்தை. எந்த பத்திரிக்கையாளர்களும் பணம் சேர்ப்பதிலே இருக்கிற பல வழிகளில் இது ஒரு முறை. அது பத்திரிகை ஆயுளா அல்லது மனிதனுடைய ஆயுளா என்று யாரும் நிர்ணயிக்கவில்லை. மனிதனுடைய ஆயுளையே நிர்ணயிக்க முடியாதபோது ஆலயத்தின் ஆயுளை யாரும் நிர்ணயிக்க முடியாது.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, இந்த ஆயிரம் ரூபாய் சந்தாவை முரசொலிக்குக் கொடுத்ததை எந்தெந்த கோயில்களிலிருந்து கொடுத்தார்கள்? அதைக் கோவில்

நிர்வாகத்தினரே முன்வந்து கொடுத்தார்களா அல்லது இவர்கள் கேட்டுக் கொடுத்தார்களா? அப்படிக் கேட்டது யார் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கிட்டப்பா அவர்களும் அந்தக் கேள்வியைத்தான் கேட்டார்கள். யார் கேட்டார்கள், யார் கொடுத்தார்கள் என்ற விவரம் எல்லாம் இல்லை. ஆலய நிர்வாகம் என்பது அந்தந்த அறங்காவலர்களைப் பொறுத்ததுதான். 15 கோயில்களிலிருந்து கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரம் தான் இருக்கிறது.

**திரு. க. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது 15 கோயில்கள் இப்படிப்பட்ட ஆயுள் சந்தா ஆயிரம் ரூபாய் வீதம் முரசொலி பத்திரிகைக்குக் கொடுத்திருப்பதாகத் தெரிவித்தார்கள். அந்த ஆயுள் சந்தா எந்த ஆண்டிலிருந்து பெறப்பட்டது? அதைப்போல இந்த ஆயுள் சந்தாவை அந்த நேரத்தில் கொடுத்த அதிகாரிகள் யார், யார்? இங்கே கோயில் விதி முறைகளை அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த விதி முறைகளுக்கு மாறாக அன்றைய தினம் ஆயிரம் ரூபாய் வீதம் கொடுத்த அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கையை இந்த அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-30]

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1975 ஆம் வருடத்திலேதான் இந்த ஆயுள் சந்தா தொகை செலுத்தப்பட்டுள்ளன. முறை தவறாக ஆலயத்தின் நிதி செலவழிக்கப்படுமேயானால் அதற்குப் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டியவர்கள் அறங்காவலர்கள். அவர்களிடத்திலேயிருந்துதான் அதைத் திரும்ப வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஆக இப்படி எத்தனையோ நிகழ்ச்சிகள் நடைபெற்று இருக்கின்றன. அதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

**தந்தை பெரியார் வாழ்க்கை வரலாறு.**

*வினா எண். 47—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு செய்தி—அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவையொட்டி அமைக்கப்பட்ட பெரியார் வரலாறு தொகுக்கும் குழு தனது பணியை முடித்து விட்டதா?

**(ஆ) இல்லையெனில் அதற்கான காரணங்கள் என்ன?**



**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** (அ) இல்லை.

(ஆ) "பெரியார் புரட்சி மொழிகள்" என்னும் நூல் தயாரிக்கப்பட்டு செப்டம்பர் 1979-ல் வெளியிடப்பட்டது.

தந்தை பெரியார் 'வாழ்க்கை வரலாறு' என்ற நூல் தயாரிப்பு பணிகள் அக்டோபர் திங்களில் தொடங்கப்பட்டு, ஆதாரங்களையும் குறிப்புகளையும் திரட்டும் பணி நடைபெற்று முடிவடைந்துள்ளது.

ஏனைய பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, தந்தை பெரியார் அவர்களுடைய நூற்றாண்டு விழாவை ஒட்டி அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை தொகுக்கின்ற பணி யார் யார் அடங்கிய குழுவினிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதையும் அந்தக் குழு தனது பணி முழுவதையும் முடித்துவிட்டதா என்பதையும் எங்களைப் போன்ற சாதாரண சட்டமன்ற உறுப்பினர்களுக்கும்—நான் எல்லோரையும் சொல்லவில்லை—அது கிடைப்பதற்கு வழிவகை செய்யப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** பேரவைத் தலைவரவர்களே, பெரியார் நூற்றாண்டு விழா குழு என்ற ஒரு பொதுவான குழு மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களுடைய தலைமையின் கீழ் அமைக்கப்பட்டது. தந்தை பெரியார் அவர்களின் வரலாற்று நூலைத் தயாரிப்பதற்கென்று தமிழ் மொழி வளர்ச்சித் துறையின் இயக்குநராக இருக்கின்ற டாக்டர் நன்னன் அவர்களுடைய தலைமையின் கீழ் ஒரு குழு இயங்கிக் கொண்டிருக்கின்றது. நூல்கள் தயாரிப்பதிலே தேர்ச்சி பெற்ற தமிழறிஞர்களும் அவர்களுக்கு உறுதுணையாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அந்தக் குழுவிலே சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்களா இல்லையா என்பது பிரச்சினை இல்லை. யார் யார் அதற்குப் பயன்படுவார்களோ அவர்கள் அதிலே நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் பெற விரும்பிய பதில் சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் அந்தக் குழுவிலே சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்பதல்ல. அந்தக் குழுவிலே யார் யார் அடங்கி இருக்கிறார்கள் என்ற வினாவைத்தான் நான் பணிவோடு கேட்டுக்கொண்டேன். அதுமட்டுமல்ல. அந்த நூல்

வெளியிடப்படுகின்றபோது சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து அதற்குரிய கட்டணத்தைப் பெற்றுக்கொண்டாவது அந்த நூலை அவர்களுக்குத் தருவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு சட்ட மன்றப் பேரவைத் தலைவரவர்களே, தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவை ஒட்டி அரசு வெளியிடுகின்ற நூலை, அதாவது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்கள் குறிப்பிடுகின்ற நூலை சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கட்டணம் இன்றியே வழங்குகின்ற வகையிலே ஒரு ஆலோசனையை, பரிந்துரையை மாண்புமிகு நிதியமைச்சரவர்களிடம் கொடுத்து அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோதையாறு பகுதியில் நில ஆக்கிரமிப்பு.

*வினா எண் 48—திரு. மி. வின்செண்ட், திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. டி. மணி : மாண்புமிகு செய்தி—அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் பாலமோர் தோட்டத்திற்கு மேலே, மேல் கோதையாறுக்கு கீழே காலியாக இருக்கும் சுமார் 400 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலம் தனிப்பட்ட முதலாளிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது, அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், ஆக்கிரமிப்பை அகற்ற அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :**

(அ) பாலமோர் தோட்டத்திற்கு மேலே, மேல் கோதையாறுக்கு கீழே வரும் நிலப்பரப்பு ''வீரப்புலி ஒதுக்கப்பட்ட காடுகள்'' எனப்படும். இதில், வனத்துறையினரால் 341 ஏக்கர் நிலம் சுமார் 15 பேர்களுக்கு 1963 ம் வருடம் முதல் நீண்ட கால குத்தகையாக ஏலக்காய் சாகுபடிக்கு என்று கொடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. மி. வின்செண்ட் :** பேரவைத் தலைவரவர்களே, ஏற்கெனவே ஆயிரக்கணக்கான ஏக்கர் அரசு நிலங்களை பெரும் பணக்காரர்கள் குத்தகை என்ற பெயரால் பல ஆண்டுகளாக வைத்துக்கொண்டு வருகிறார்களே, அதை மீட்டு ஏழைகளுக்கு வழங்குகின்ற வகையில் சட்டத் திருத்தம் கொண்டு வருவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட ஒரு நிலைமை தமிழ் நாட்டிலே இருந்து வருவதாலே, அதைக் கவனத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு கடந்த ஒரு ஆண்டிற்கு முன்னாலே சில விதிகளை உருவாக்கி இருக்கிறது. பல்வேறு இடங்களிலே உள்ள அரசுக்குச் சொந்தமான இப்படிப்பட்ட நிலங்களை நிலச்சுவான்தார்கள் குத்தகை என்ற பெயராலே நீண்ட காலம் பரம்பரை பாத்தியதையாக அனுபவித்து வருவதைத் தடுக்கும் நோக்கத்தோடு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, இத்தகைய குத்தகைகள் முடிவு அடைகின்ற போது அவைகளை மீண்டும் புதுப்பிக்கக்கூடாது என்றும் உத்தரவுகள் இடப்பட்டு, அப்படி கைப்பற்றப்படும் நிலங்களை நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு 5 ஏக்கர் வீதம் குத்தகைக்கு விடலாம் என்ற கொள்கையும் எடுக்கப்பட்டு அது அமுல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மி. வின்செண்ட் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குத்தகை எடுத்துள்ள பெரும் பணக்காரர்கள் யார் யார் ? பாலமோர் எஸ்டேட் முதலாளிகளின் பெயர்களிலும் அவர்களின் குடும்பத்தினரின் பெயர்களிலும் எத்தனை ஏக்கர் நிலங்கள் குத்தகையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது போன்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று தெரிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் ;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குத்தகை எடுத்தவர்களுடைய பட்டியல் என்னிடம் இருக்கிறது. அவர்களுடைய சொத்து விவரம் என்னிடத்திலே இல்லை. அவர்களிலே யார் யார் பெரும் முதலாளிகள் என்பதும் எனக்குத் தெரியாது. பட்டியலை வேண்டுமானால் படிக்கிறேன் :

| | |
|---|---|
| திரு. எம். ஆர். மோரிஸ் .. | 6 ஏக்கர் நிலம் தரப்பட்டிருக்கிறது. அவர்களுக்கே 4 தலைப்புகளில் 6 ஏக்கர்கள் வீதம் 24 ஏக்கர்கள். |
| டாக்டர் மத்யாஸ் .. .. | 24 ஏக்கர் — இன்னொரு தலைப்பில் 22 ஏக்கர். |
| திருமதி ரோஸம்மாள் மத்யாஸ். | 32 ஏக்கர். அவர்களுக்கே மேலும் 8 ஏக்கர்கள், 7 ஏக்கர்கள் தரப்பட்டிருக்கின்றன. |

| | | |
|---|---|---|
| திரு. தாமஸ் வர்க்கீஸ் | .. | 43 ஏக்கர். |
| திருமதி கீதா ஜார்ஜ் | .. | 38 ஏக்கர். |
| திரு. வி. ஓ. வி. பிள்ளை | .. | 44 ஏக்கர். |
| திரு. ஏ. ஓ. மாத்தியூ | .. | 31 ஏக்கர். |
| திரு. எல். ஏ. ஜேக்கப் | .. | 32 ஏக்கர். |
| திரு. மோளி வர்க்கீஸ்.. | .. | 33 ஏக்கர். |

திரு. டி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, பாலமோர் தோட்ட அதிபர்களின் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு இப்படி பல தலைப்புகளில் நிலங்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறதே அவைகளை ரத்து செய்து, அந்தப் பகுதியிலே கிட்டத்தட்ட கேசவன்புதூரிலிருந்து கீரிப்பாறைவரை நிலமில்லாத ஏராள ஏழை எளியவர்கள், சாலை ஓரங்களில் வசிக்கிறார்கள்—அவர்களுக்கு இந்த நிலங்களை எடுத்து கொடுக்க அரசு முன் வருமா? தவிர, இதேபோல, நியூ ஆவம்பாடி,, சி. எம். எஸ். வின்ஸ் டாக்டர் போன்ற பகுதிகளிலும் தேவகிரி போன்ற தனியார் முதலாளிகளிடம் ஏராளம் புறம்போக்கு நிலங்கள் குத்தகை எடுத்து அனுபவித்து வருகிறார்கள். அவைகளை எடுத்து சிற்றார் அணைக்கட்டு பகுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்ட நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குக் கொடுக்க அரசு முன் வருமா என்றும் அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒப்பந்தங்கள் சில 63ஆம் ஆண்டிலிருந்து 88 ஆம் ஆண்டு வரையிலும், சில 67 ஆம் ஆண்டிலிருந்து 92 ஆம் ஆண்டு வரையிலும் கூட செய்யப்பட்டுள்ளன. அப்படிப்பட்ட ஒப்பந்தங்களை ரத்து செய்கிற உரிமை அரசுக்கு இல்லை என்று அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று தடுப்பு ஆணை பெற்றிருக்கிற காரணத்தினால், அரசு இதில் தீவிரமாக தலையிட முடியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேறு சில பிரச்னைகளைக் குறித்தும் கேட்டிருக்கிறார்கள். அதற்கு தனியாகக் கேள்வி போட்டால் தக்க ஆதாரங்களோடு விடைகளைச் சேகரித்துத் தரமுடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, குத்தகை காலம் எவ்வளவு என்று வினவலாம் என்று நினைத்திருந்தேன். அமைச்சர் அவர்களே பதில் அளித்து விட்டார்கள். அதிலுள்ள மற்ற கண்டிஷன்கள் என்ன என்பதை தெரிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்? (மணியடிக்கப்பெற்றது).





மாண்புமிகு பேரவைத் தலைவர் : கண்டிஷன்கள் எல்லாம் இடத்திற்கு இடம் மாறுபடும். அவைகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும். அவைகளைச் சொல்லிக் கொண்டிருந்தால் நேரம் தான் வீணாகும். உட்காருங்கள்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்திலே அரசுக்குச் சொந்தமான 400 ஏக்கர் நிலத்தை வைத்திருக்கக் கூடியவர்களைப்பற்றி எல்லாம் சொன்னார்கள். அதேபோல தமிழகத்திலே ஆலயங்களுக்குச் சொந்தமான தரிசாக இருக்கக்கூடிய பல ஏக்கர் நிலங்களையும் இப்படிப்பட்ட முதலாளிகள் வைத்திருப்பதாகத் தெரிகிறது. அந்த நிலங்களை அரசாங்கம் அவர்களிடமிருந்து பெற்று, நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு அரசாங்கமே நேரிடையாகக் கொடுக்க உத்தரவு பிறப்பிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத்துறை சம்பந்தப்பட்ட கேள்விதான் மூலக் கேள்வியாகக் கேட்கப்பட்டிருக்கிறது. அதற்கான பதில்களைத்தான் துணை வினாக்களுக்கும் நான் அளித்து வந்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறநிலையத் துறை பற்றிய கேள்வியை கேட்கிறார்கள். தனியாக கேள்வி கேட்டால் தக்க பதில் தர முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

### பாப்பாரப்பட்டியில் சுப்பிரமணிய சிவாவுக்கு நினைவுச் சின்னம்.

* வினா எண். 49—திரு. க. இரா. சின்னராசு, திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு செய்தி—அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தர்மபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியில் அமைந்துள்ள தியாகி சுப்ரமணிய சிவா அவர்களின் சமாதியை நினைவுச் சின்னம் ஆக்கும் திட்டம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கான முன் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) தர்மபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டியில் உள்ள சுப்பிரமணிய சிவாவின் சமாதியைச் செப்பனிட்டு அங்கு ஒரு நினைவுத் தூண் நிறுவ அரசு முடிவு செய்துள்ளது.

(ஆ) இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி தர்மபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

[முற்பகல் 9-40]

திரு. க. இரா. சின்னராசு : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சுப்பிரமணிய சிவா சமாதியை ஒரு நினைவுச் சின்னமாக்குவதற்கு அரசு முடிவு செய்திருப்பதாகத் தெரிவித்தார்கள். அதற்காக அந்த மாவட்ட மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக் கொண்டு, அந்தத் திட்டத்தின் அளவு எவ்வளவு என்று அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே இப்போது அதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிற தொகை ரூ. 8,791·46.

திரு. ப. நெடுமாறன் : தியாகி சுப்பிரமணிய சிவா அவர்கள் சமாதி மிகவும் சீர்கேடடைந்த நிலையில் இன்றிருக்கிறது. அவர்கள் பாரதபுரம் என்ற ஊரை எழுப்பி வைத்திருந்தார்கள். அந்தக் கட்டடங்கள் எல்லாம் இன்று இடிந்து கிடக்கும் பரிதாபகரமான நிலையில் இருக்கிறது. ஆகவே அதை முற்றிலும் சீர்திருத்தியமைத்து அங்கே அவர்களது பெயரால் ஒரு மண்டபம் எழுப்ப வேண்டும் என்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, அப்படி ஒரு விரிவான திட்டத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சுமார் ரூ. 3.94 லட்சம் செலவில் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டார்கள். அரசாங்கம் அங்கேயிருக்கிற—தேசிய உணர்வுமிக்க பெருமக்கள் பலர் அங்கேயிருக்கிற காரணத்தால் அதை வசூல் செய்து அரசாங்க நிதியையும் சேர்த்து அதை உருவாக்கலாம் என்ற ஆலோசனையைத் தெரிவித்தது. மாவட்ட ஆட்சித் தலைவர் அது இயலாது என்று தெரிவித்ததையொட்டி இப்போது அந்த இடத்தைத் திருத்தி நினைவுத்தூண் எழுப்புகிற முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது.

திரு. இல. பலராமன் : சுப்பிரமண்ய சிவா அவர்களுக்கு நினைவுச் சின்னம் எழுப்புவதற்கு அரசு மான்யமாக ரூ. 8,000 ஒதுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இது நாட்டின் விடுதலைக்காகப் போராடிய ஒரு பெரிய தியாகியின் நினைவுச் சின்னம். ஆகவே அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற இந்த மதிப்பீடு மிக மிகக் குறைவு என்று அரசாங்கம் கருதுகிறதா? இந்தத் தொகையை மேலும் உயர்த்த வேண்டும். அவர்கள் போராட்ட காலத்தில் நோய் வாய்ப்பட்டு தொழு





நோயால் பாதிக்கப்பட்டார்கள் என்ற நிலையும் இருக்கிறது. ஆகவே அதைக் கருத்தில் கொண்டு ஒரு மருத்துவமனைக்காவது அவர்களது பெயரை வைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : விடுதலை வீரர் சுப்பிரமண்ய சிவா அவர்களின் தியாகத்தை எடைபோட்டு நிதி ஒதுக்கப்படவில்லை. இருக்கிற வாய்ப்புகள் வசதிகளை வைத்துதான் நிதி ஒதுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த மற்றொரு கருத்து பரிசீலனைக்குரியது. அதை அருள்கூர்ந்து அவர்கள் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களிடம் கேட்டார்களானால் அவர்கள் விரும்புகிற மருத்துவமனைக்குப் பெயர் வைக்கிற ஒரு ஏற்பாட்டையோ அல்லது வேறு அமைப்புகளுக்கு பெயர் வைக்கிற ஏற்பாட்டையோ அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. இரா. சின்னராசு : அமைச்சர் அவர்கள் பதில் கூறுகிறபோது ரூ. 8,000 ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். பெரிய ஒரு தியாகி, சுதந்திரப் போராட்டத்திற்காக தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட ஒரு தியாகிக்கு நினைவுச் சின்னம் எழுப்புவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள இந்தத் தொகை மிக மிகக் குறைவு. ஆகவே அந்தத் தொகையை அதிகப்படுத்தி பெரிய அளவில் அவர்களுக்கு நினைவுச் சின்னம் ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி ஏற்கெனவே ஒரு உறுப்பினர் கேட்டாகி விட்டது.

திரு. மு. அம்பிகாபதி ; கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரம் பிள்ளை, மகாகவி பாரதியார் இவர்களுடன் சுப்பிரமணிய சிவா ஒன்றாக நின்று தோளோடு தோளாக நின்று போராடி நாட்டுக்கு விடுதலை வாங்கித் தந்ததன் காரணமாகத்தான் நாம் இங்கே எம்.எல்.ஏ. க்களாக இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் ஒரே காலத்தில் இருந்தவர்கள், தனித்தனியாகப் பிரித்துப் பேசாதீர்கள்.

திரு. மு. அம்பிகாபதி : பாரதி நூற்றாண்டு விழாவினையொட்டி அந்த மாபெரும் தியாக சீலருக்கு, மாவீரன் சுப்பிரமணிய சிவாவிற்கு அரசாங்கமே நேரடியாக—மாவட்ட ஆட்சித் தலைவர் எழுதினாரா எழுதவில்லையா என்பது அல்ல பிரச்னை—அதை ஒரு சுற்றுலா மையமாக ஆக்குகிற அளவிற்கு பத்து லட்சம் ரூபாய் அளவிற்குத் திட்டம் தீட்டி செய்வதற்கு அரசு முன்வர வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது ஒரு வேண்டுகோள்.

**திரு. ப. நெடுமாறன் :** அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 8,000 ரூபாய் ஒதுக்கப்பட்டதாகச் சொன்னார்கள். மேற்கொண்டு வசூல் செய்து செய்யலாம் என்ற திட்டத்தையும் அவர்கள் வெளியிட்டார்கள். நாங்கள் பொது மக்களிடமிருந்து ஒரு லட்ச ரூபாய் வசூல் செய்துத்தர தயாராக இருக்கிறோம். அரசாங்கம் ஒரு லட்ச ரூபாய் போட்டு, ஆக இரண்டு லட்சம் செலவில் அந்த மணி மண்டபத்தை எழுப்புகின்ற காரியத்தைச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விடுதலை வீரர் சுப்பிரமணிய சிவா நினைவுச் சின்னம் எழுப்புவதில் நாம் எவ்வளவு செலவழிக்கிறோம் என்பதைப் பற்றி நடைபெறுகின்ற விவாதம் நாம் அவர்களுக்குச் செய்கின்ற மரியாதையாக இருக்காது, என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் கேட்ட கேள்விக்கு மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் பதிலளித்திருக்கிறார்கள். பொதுமக்கள் எல்லாம் இதிலே தங்களுடைய பங்கினைச் செலுத்த முன்வர வேண்டும். அப்படி முன்வருவது அந்த மாவீரருக்கு நாம் செய்கின்ற கடமையும், வீர வணக்கமும் ஆகும் அப்படி முயற்சி எடுத்துக் கொள்கிற போது, அரசு அனைத்து உதவிகளையும் செய்யும் என்கிற அளவிலே மட்டும் இந்த நேரத்திலே உறுதி அளிக்கிறேன்.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே சுப்பிரமணிய சிவா அவர்களுக்கு எழுப்புகின்ற இந்த நினைவுச் சின்னத்தினுடைய அளவு அவருடைய தியாகத்தை, அவருடைய தொண்டை வைத்து கணக்கிட்டு. அதையே மனதிலே வைத்துப் பார்க்காமல், அமைச்சர் பெருமகனார் அவர் பாரத மாதா கோவில் எழுப்ப வேண்டுமென்று விரும்பிய காரணத்தினாலும், சிறையிலே இருந்த போது தொழு நோயினால் பாதிக்கப் பட்டும் தேசபக்தி தளராத காரணத்தினாலும், தனித் தமிழ் இயக்கத்தை மறைமலை அடிகளுக்கு சற்று முன்னதாகவே ஆரம்பித்துவிட்ட காரணத்தினாலும், இதை எல்லோரும் பார்க்கின்றவகையில் பாரத மாதா கோவில் எழுப்பி, அந்த மணி மண்டபத்தை அவருக்கு நினைவுச் சின்னமாக அளிக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுப்பிரமணிய சிவா அவர்களுக்கு நினைவுச் சின்னம் எழுப்புகின்ற இந்தப் பொருள் பற்றி மன்ற உறுப்பினர்கள் தெரிவித்த உணர்வுகளின் அடிப்படையில் அரசு இந்தப் பிரச்சினையை ஆராயும் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.





### பாலாற்றின் குறுக்கே தரைப்பாலம்.

*வினா எண். 50—திரு. நி. அன்பழகன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம் பாலாற்றின் குறுக்கே அம்பலூர் எக்லாஸ்புரத்திற்கு தரைப்பாலம் அமைக்கும் திட்டம் இருக்கிறதா?

(ஆ) அவை எப்பொழுது துவக்கப்படும்?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** (அ) ஆம்.

(ஆ) மேற்கண்ட வேலைக்கு ஒப்பந்தங்கள் முடிக்கப்பட்டவுடன் வேலைகள் ஆரம்பிக்கப்படும்.

**திரு. நி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு? இந்தத் திட்டம் எவ்வளவு காலத்திற்குள் கட்டி முடிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே 16·50 லட்ச ரூபாய் இதற்கு ஒப்பந்த முடிவு அளிக்கப்பட்டிருக்கிறது. மற்றும் ஒப்பந்தம் ஏற்பட்டு, வேலை தொடங்கப்படும். தொடங்கிய பிறகு வேலை முடியும்.

**திரு. ஏ. கோபால் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பாலங்கள் கட்டப்படுகின்றபோது, வீராணம் திட்டம் கைவிடப்பட்டிருக்கின்ற சூழ்நிலையில்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இக்கேள்வி வட ஆற்காடு மாவட்டத்தைப் பற்றியது. ஏற்கெனவே அமைச்சர் அவர்கள், இது காண்ட்ராக்டுக்கு விட்டு, கட்டுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது என்று பதிலளித்து விட்டார், அடுத்த கேள்வி எண்.51.

### கோடைக்கானல் பகுதிகளில் வாழைப்பயிர்.

* வினா எண். 51—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ணைக்காடு, தாண்டிக்குடி, கோடைக்கானல், அய்யன்பாளையம், பட்டிவீரன்பட்டி போன்ற பகுதிகளில் வாழைப் பயிருக்கு முடிக்கொத்து நோய் வந்து விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த விவசாயிகளைப் பாதுகாக்க அரசு எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்னென்ன ?

(இ) மீண்டும் இந்நோய் வராமல் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு** திரு. கா. காளிமுத்து ; (அ) ஆம்.

(ஆ) முடிக்கொத்து நோய் தாக்கப்பட்ட பகுதிகளில் எல்லாம் வாழைக்குப் பதில் மாற்றுப்பயிர் பயிரிட பரிந்துரை செய்யப்படுகிறது. மாற்றுப் பயிர்த்திட்டத்தை ஊக்குவிக்க விதை, உரம், பூச்சிக்கொல்லிகள் போன்ற இடு பொருள்கள் 50 சதவீத மானிய விலையில் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் மலைவாழைப்பயிர், தொடர்ந்து சாகுபடி செய்ய இருப்போருக்கு நோய் தாக்காத உயரிய மலைவாழைக் கன்றுகள் உற்பத்தி செய்து வழங்க வாழைக்கன்றுகள் தயாரித்து விநியோகிக்க ரூ. 2 இலட்சம் மதிப்பீட்டில் திட்டம் செயல்படுத்த அரசு ஆணை வழங்கியுள்ளது. இது தொடர்பாக பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருவதோடு கருத்தரங்குகளின் மூலமாகவும், விவசாயிகளிடம் நேரடித் தொடர்பு மூலமாகவும் பயிற்சி அளித்து நோயினால் தாக்கப்பட்ட வாழைகளை அப்புறப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(இ) இம்முடிக்கொத்து நோய் அசுவினிப்பூச்சிகளால் பரப்பப்படும் வைரஸ் நோய். இந்நோயை முற்றிலும் கட்டுப்படுத்துவது இயலாத காரியம். ஆனால் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தினரால் தடியன்குடிசை என்னும் இடத்தில் நடத்தப்பட்டு வரும் ஆராய்ச்சிப் பண்ணையில் இது வரை எந்தவித இறுதி முடிவும் வெளியிடப்படவில்லை. நோய் முழுவதும் வராமல் தடுத்து பரிபூரண தடுப்பு முறை காண்பதற்கு இன்னும் சில காலம் ஆகலாம்.

திரு. ராஜகுமார் **விஜயரகுநாத தொண்டமான் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுப் பயிர் செய்வதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்தெந்த மாற்றுப் பயிர்கள் செய்வதாக அரசாங்கம் நினைத்துக்கொண்டிருக்கிறது ? முக்கியமாக, கொக்கோ, மிளகு இவைகளை, மாற்றுப் பயிர்களாகப் பயிரிட்டால், இந்த வாழையில் ஏற்பட்ட நஷ்டஈட்டை ஈடுசெய்யும் என்று நினைக்கிறேன். அதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9–50]

**மாண்புமிகு** திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல் மிளகு, அன்னாசி, ஜாதிக்காய் போன்ற பயிர்கள் வாழைகள் அழிந்த இடங்களில் பயிரிடப்பட்டு வருகின்றன.



திரு. **என். வரதராஜன் :** தமிழகத்தில் புகழ்பெற்ற சிறுமலை வாழைப்பழங்கள் எதிர்காலத்தில் இல்லாமல் போய்விடுமோ என்ற ஆபத்து இருக்கிறது. அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது ஆராய்ச்சி இன்னும் கொஞ்சகாலம் தொடரும் என்று சொன்னார்கள். அதனுடைய நிலை என்ன ? இந்த வாழைப் பயிருக்குப் பதிலாக மாற்றுப் பயிர் வைப்பதைவிட பிரசித்தி பெற்ற இந்த வாழையை மீண்டும் உயிர்ப்பிக்க என்ன முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு** திரு. கா. காளிமுத்து : வேளாண்மைப் பல்கலைக் கழகம் அந்த ஆராய்ச்சியை தீவிரமாக நடத்திக்கொண்டிருக்கிறது. முடிவு வெளியிடப்பட்டவுடன் நிச்சயமாக மலை வாழைக்கன்றுகள் காப்பாற்றப்படும் அளவுக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். தற்போது நோய் தாக்காத மலைவாழைக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

திரு. ப. **நெடுமாறன் :** ஏறத்தாழ ஐந்தாண்டுகளுக்கு மேலாக ஒருவகை மலை வாழையே முடிக்கொத்து நோயினால் முற்றிலும் அழிந்து விட்டிருக்கிறது. எவ்வளவோ மருந்துகளைப் போட்டும் பயனளிக்கவில்லை. இன்னும் ஆராய்ச்சி நிலையில் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது. மேலும் மற்ற இடங்களிலும் வாழை முற்றிலும் அழிந்துவிடக்கூடிய அபாயம் இருக்கிறது. ஆகவே, வெளிநாட்டு நிபுணர்களை வரவழைத்தாவது நோய்க்குரிய காரணத்தை ஆராய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு** திரு. கா. காளிமுத்து : இப்போது அந்த நோய் குறிப்பாக கொடைக்கானல் வட்டாரத்தில் மட்டுந்தான் இருக்கிறதென்று தகவல் இருக்கிறது. நம்முடைய ஆராய்ச்சி நிபுணர்கள் மிக்க திறமை மிக்கவர்கள். ஆகவே, நிச்சயமாக அவர்கள் அதற்கு ஒரு முடிவு காண்பார்கள்.

திரு. **ஆ. வெள்ளைச்சாமி :** முடிக்கொத்து நோய் கொடைக்கானல் வட்டாரத்தில் ஆரம்பித்து வெகுவாகப் பரவி வருகிறது. தரைப் பகுதியில் அந்த நோய் பரவாமல் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு** திரு. கா. காளிமுத்து : ஏற்கெனவே பதில் சொல்லப்பட்டு விட்டது.

சுங்குவார்சத்திரம் பேருந்து நிற்குமிடம்.

* வினா எண். 52—திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு மாவட்டம் சுங்குவார்சத்திரம் பேருந்து நிலையத்தில் சிறுநீர் கழிப்பிடம் கட்டும் உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்பொழுது நிறைவேற்றப் படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) சுங்குவார் சத்திரத்தில் பேருந்து நிலையம் இல்லை. திருமங்கலத்தில் ரூ.2 இலட்சம் செலவில் பேருந்து நிலையம் கட்டுவதற்குண்டான திட்டம் பரிசீலனையில் உள்ளது .

(ஆ) வினா எழவில்லை.

திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுங்குவார்சத்திரத்தில் பேருந்து நிலையம் இல்லையென்று சொன்னார்கள். பேருந்து நிலையம் இல்லாவிட்டாலும் நூற்றுக்கணக்கான பேருந்துகள் அவ்வழியாகச் செல்லுவதாலும் அங்கு ஆயிரக்கணக்கான மக்கள் சிற்றுண்டி அருந்த இறங்குவதாலும் சிறுநீர் கழிக்க இடம் இல்லாத குறைபற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் பலமுறை எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. சுங்குவார்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் மனு கொடுத்து நிராகரிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இதுபற்றி விரைவில் முடிவு எடுத்து அங்கு கழிப்பிடங்கள் அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : சுங்குவார்சத்திரத்தில் இதுவரை பேருந்து நிலையம் இல்லையென்றாலும் மாண்புமிகு உறுப்பினர் யோசனையை அரசு பரிசீலனை செய்யும்.

திரு. து. இராசரத்தினம் : தலைவர் அவர்களே, சுங்குவார் சத்திரத்தைச் சுற்றியிருக்கும் மூன்று கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு ஊராட்சி ஒன்றியத்திலிருந்து பணம் ஒதுக்க இயலாது என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே, அரசே தனியாகக் கவனம் செலுத்தி ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாகக் கழிப்பிடங்கள் கட்டித்தர ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக எந்தெந்த ஒன்றியங்கள் எடுக்கப்பட்டு வருகின்றனவோ அந்தந்த ஒன்றியங்கள் கழிப்பிடங்கள் கட்டும் திட்டத் தத்



தீட்டி நடைமுறைப்படுத்தி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொல்லக்கூடிய யோசனைப்படி. கண்டிப்பாகக் கழிப்பிடங்கள் கட்டப்படும்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : கழிப்பிடங்கள், மற்ற வசதிகளை தேசீய நெடுஞ்சாலைகளின் முக்கிய இடங்களில் ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: முக்கியமான இடங்களில் கட்டுவதற்காகத்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மண்ணச்சநல்லூர் பேரூராட்சி

*வினா எண். 53—திரு. எம். கே. இராஜமாணிக்கம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மண்ணச்சநல்லூர் பேரூராட்சியில் வரி வசூலிப்பதில் ஊழல்கள் நடந்துள்ளது பற்றி புகார் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் என்றால், அது சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) இது சம்பந்தமாக பேரூராட்சியின் தலைமை எழுத்தர் 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 7 ஆம் நாள் முதல் தாற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். முழு விவரங்கள் அறிய மாவட்ட ஆட்சித் தலைவரால் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

திரு. எம். கே. இராஜமாணிக்கம் : தலைவர் அவர்களே, அந்தப் பேரூராட்சியின் தலைமை எழுத்தர் தாற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட வரி வசூல் செய்யும் நபர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அதுபற்றிய குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. வரி வசூலிப்போர் மீதும், தவறான முறையில் செயல்பட்டிருக்கிறார்கள் என்று தெரிந்தால் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

## கம்பம் மற்றும் கூடலூர் மருத்துவமனைகளுக்கு மின் வசதி

*வினா எண். 54— திரு. ஆர். டி. கோபாலன், திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கம்பம், கூடலூர் ஆகிய நகரங்களில் உள்ள அரசினர் மருத்துவமனைகளில் உள்ள பிரசவ வார்டுகளில் மின்சார விளக்கு இல்லாமல் அரிக்கன் விளக்குகள் வைத்து பிரசவம் பார்க்கப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) கம்பம், கூடலூர் ஆகிய நகரங்களில் உள்ள அரசினர் மருத்துவ மனைகளில் உள்ள பிரசவ வார்டுகளில் மின்சார விளக்குகள் பொருத்தப்பட்டு விட்டன.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். டி. கோபாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பம் அரசினர் மருத்துவ மனையில் பிரசவ வார்டில் மின் விளக்குகள் அடிக்கடி பியூஸ் ஆகிவிடுகிற நிலைமை ஏற்படுவதற்குக் காரணம் வயரிங் சரியாக இல்லாததுதான். ஆகவே, அங்கே புதிதாக வயரிங் செய்து கொடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : கம்பம் மருத்துவ மனையைப் பொறுத்தவரையில் பிரசவ வார்டில் டியூப் லைட்ஸ் குழாய் விளக்குகள் போடப்பட்டிருக்கின்றன—அதற்கு, லோட் கொஞ்சம் குறைந்துவிட்டால் மீண்டும் '' ஆன் '' செய்வது கஷ்டமாக இருக்கிறது என்ற காரணத்தினால் அதை மாற்றி ஆர்டினரி லைட்ஸ்—சாதாரண பல்புகள்—போடப்பட்டிருக்கின்றன. இப்போது அங்கே அந்தப் பிரச்சினை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது அங்கே பிரச்சினை இல்லை என்று சொல்லிவிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். டி. கோபாலன் சொன்னது போல் அங்கே டெம்பாரரி மின் இணைப்புத்தான் இருக்கிறது. அதை பெர்மனன்ட் மின் இணைப்பாக ஆக்கிக் கொடுக்க முன்வருவார்களா ? திடீரென்று விளக்குகள் அணைந்துவிடுவதால் தாய்மார்கள் குழந்தைகளுக்குப் பால் கொடுப்பதற்கு சிரமப்படுகிறார்கள். திருஞானசம்பந்தர்





குழந்தையாக இருக்கிறபோது பார்வதி வந்து பால் கொடுத்ததாக எல்லாம் இருக்கிறது. ஆகவே, அந்த மருத்துவமனையிலே உள்ள நிலைமையை மாற்றி நிரந்தரமாக மின் இணைப்புக் கொடுக்கிற வகையில் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மின்சாரம் இல்லாத காலத்திலிருந்து அதெல்லாம் நடந்து கொண்டிருக்கிறது (சிரிப்பு).

டாக்டர் கே. [illegible] : பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரம் இருக்கின்ற இடங்களிலே கூட மின் தடை திடீர் திடீரென்று ஏற்படுகிற காரணத்தினால் பிரசவ வார்டுகளிலேயும், ஆப்பரேஷன் தியேட்டர்களிலேயும் கஷ்டப்படுகின்ற நிலைமை இருக்கிறது. எமர்ஜென்ஸி லைட்கள் இல்லாத பல மருத்துவ மனைகள் இருக்கின்றன. ஆகவே, அமைச்சர் அவர்கள் அங்கேயெல்லாம் எமர்ஜென்ஸி லைட்டுகளைப் பொருத்த உடனடியாக ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு நல்ல யோசனை. பல இடங்களிலே பேட்டரி பொருத்தப்பட்ட எமர்ஜென்ஸி லைட்டுகள் வைக்க படிப்படியாக உத்திரவுகள் போட்டுக்கொண்டு இருக்கின்றோம். இந்த யோசனை ஏற்கப்படும்.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, கம்பம், கூடலூர் ஆகிய இடங்களில் மட்டுமல்ல, தமிழ்நாட்டில் பெரிய நகரங்களிலே உள்ள பெரிய ஆஸ்பத்திரிகளிலே கூட மின் தடை காரணமாக பல அறுவைகள் தடைப்பட்டுப்போகிற காரணத்தினால் அந்த ஆஸ்பத்திரிகளிலே எல்லாம் ஜெனரேட்டர்கள் வசதி ஏற்படுத்திக் கொடுத்து மக்களுக்கு உதவி செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அ[illegible]களே, ஆண்டுதோறும், 5, 6 பெரிய மாவட்ட மருத்துவ ம[illegible]களிலே ஜெனரேட்டர் வைத்துக்கொண்டு வருகிறோம். ப[illegible] 2 ஸ்கீமிலே கூட நீங்கள் விரைவிலே பார்க்கப் போகிறீர்[illegible] நாம் அதை படிப்படியாக நிறைவேற்றிக் கொண்டு இருக்கிறே[illegible]

திரு. எஸ். ஆண்டித்தேவர் : தலைவர் அவர்களே, கம்ப[illegible] கூடலூர் மருத்துவமனைகளிலே விளக்குகளுக்கு மின் தடை ஏற்பட்டது மாற்றப்பட்டு இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் நேரில் போய் பார்த்து இருக்கிறேன். அங்கே தண்ணீர் வசதி கூட எனக்குக் கொடுத்த தகவலின்படி இல்லை, பிரசவம் முடிந்த உடனே முக்கியமாகத் தேவைப்படுவது தண்ணீர்தான். ஆனால், அங்கே தண்ணீர் கிடைக்கவில்லை. அமைச்சர் அவர்க[illegible] அந்த நிலைமை அரசுக்குத் தெரியுமா ? அதற்கு நடவடிக்கை எடுப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர். எச். வி. ஹண்டே** : கம்பம் மருத்துவ மனையிலே கிணறு இருக்கிறது. அங்கே பம்புசெட்டு கொண்டு வந்து அதற்குமின் இணைப்புக் கொடுத்து அங்கே ஓவர்ஹெட் டாங்க் அமைக்கப்பட்டு வருகிறது. உண்மை அதுதான். அதற்கான உத்திரவுகள் போடப்பட்டு இருக்கின்றன. அதற்கு ஏற்பாடுகள் செய்துவிட்டோம் என்பதை மகிழ்ச்சியோடு நான் மாண்புமிகு உறுப்பினருக்கு இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10–00]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அவையின் அனுமதியோடு கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது** ; தலைவரவர்களே, ஜெனரேட்டர் போன்றவைகளைப் பொதுமக்கள் வாங்கிக் கொடுத்தாலும் கூட அந்த மருத்துவமனையில் இருக்கின்ற அதிகாரிகள் அதைத் தேவைப்படுகிறபோது ஓட்ட முடியாத நிலைமை இருக்கிறது. இதுபற்றி அமைச்சரவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா ?

**மாண்புமிகு டாக்டர். எச். வி. ஹண்டே** : பேரவைத் தலைவரவர்களே, இப்படிப்பட்ட சம்பவங்கள் எங்கே ஏற்பட்டாலும் கூட அதுபற்றிய செய்திகளை உடனடியாகத் தர வேண்டுமென்பதற்காக நாம் ஏற்பாடு செய்து கொண்டு இருக்கிறோம். மாவட்ட மருத்துவ அதிகாரிகள்—டிஸ்டிரிக்ட் மெடிகல் ஆபீசர்கள்—புதிய முறையைக் கையாளும் விதத்தில் மருத்துவமனையைப் பொறுத்தவரையில், என்னென்ன வேண்டி இருக்கின்றன என்பதைப் பற்றி ஒரு காப்பியை செக்ரட்டரிக்கும், ஒரு காப்பியை டி.எம்.எஸ்.-க்கும் கொடுக்க வேண்டுமென்று கட்டாயமாகச் சொல்லியிருக்கிறோம் இதன் விளைவாக எங்கெங்கு எப்படிப்பட்ட கோளாறுகள் ஏற்படுகின்றன என்பதைப்பற்றி உடனடியாகத் தெரிந்து கொள்ள வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறோம்.

**திரு. செ. இராமலிங்கம்** : பேரவைத் தலைவரவர்களே, குடந்தை அரசு மருத்துமனையில் ரோட்டரி சங்கத்தின் மூலமாக..........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : கம்பத்திற்கும், குடந்தைக்கும் ரொம்ப தூரம்?





**திரு. இரா. தாமரைக்கனி** : பேரவைத் தலைவரவர்களே, கம்பம், கடலூர் ஆகிய நகரங்களில் உள்ள ஆஸ்பத்திரிகள் பி.டபிள்யூ.டி-க்குச் சொந்தமான கட்டிடங்களில் இருக்கின்றன. அடிக்கடி இப்படிப்பட்ட ரிப்போர்கள் ஏற்படுவதால் நானும். நண்பர் திரு.கோபாலன் அவர்களும் மனுக்களை எடுத்துக் கொண்டு, தபால்காரர் போல ஒவ்வொரு ஆபீசுக்கும் செல்ல வேண்டியிருக்கிறது. சிறிய பிரச்சினையாக உள்ள இது பெரிய பிரச்சினையாக ஆகிக் கொண்டிருக்கிறது. ஆகவே, பி.டபிள்யூ.டி-க்குச் சொந்தமான கட்டிடத்தை ஹெல்த் டிபார்ட்மென்டே ஏற்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே** : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவமனையைப் பொறுத்தவரையில், பராமரிப்பை பி.டபிள்யூ.டி-யிலேதான் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். டிஸ்டிரிக்ட் மெடிகல் ஆபீசர்கள் செல்லும் நேரத்தில் எங்கெங்கு கோளாறு இருக்கிறதோ அதைப்பற்றி கவனித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க நமக்குத் தகவல் கொடுத்தவுடனே அங்கே உள்ள பி.டபிள்யூ.டி. நண்பர்கள் உடனடியாக வேலை செய்யவில்லை என்றால் செக்ரட்டேரியட் மூலம் உத்தரவு போட சௌகரியமாக இருக்கும். என்னென்ன பழுது பார்க்க வேண்டுமோ அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டு வருகிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தகவலாகக் கொடுக்க விரும்புகிறேன்.

ஹோமியோபதி டாக்டர்கள்.

*வினா எண் 55— **திரு. கே. நாராயணசாமி** : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1971–72 ஆம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவமனை வளர்ச்சிக்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது ?

(ஆ) படித்த ஹோமியோபதி டாக்டர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(இ) விவரம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே** : (அ) தமிழ்நாடு ஹோமியோபதி மருந்துகள் மற்றும் ஹோமியோபதி மருத்துவர்களின் சட்டம் 1972-ம் ஆண்டு மே திங்கள் 5-ம் நாள் முதல் அமலுக்கு வந்தது. எனவே 1971–72-ம் ஆண்டில் ஹோமியோபதி மருத்துவ வளர்ச்சிக்காக வரவு-செலவுத் திட்டத்தில் தொகை ஏதும் ஒதுக்கப்படவில்லை.

(ஆ) உள்ளது.

(இ) ஹோமியோபதி மருந்தகங்கள் தற்போது மாவட்டத் தலைமை மருத்துவமனை, திண்டுக்கல் மற்றும் சேலத்தில் இயங்கி வருகின்றன. படித்த ஹோமியோபதி டாக்டர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க மேலும் அரசு ஆணை எண். 1432, சுகாதாரம், நாள் 2-9-1980-ல் ஹோமியோபதி மருந்தகங்கள் மேலும் 6 மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் திறக்க அனுமதி அளித்துள்ளது.

**திரு கே. நாராயணசாமி :** பேரவைத் தலைவரவர்களே, 1972-ம் ஆண்டின் திட்டத்தை, அண்ணாவின் கொள்கைகளைக் கடைப்பிடிக்கின்ற தம்பிகள் என்று சொல்கிறவர்கள் நிறைவேற்றுதற்கு ஏன் இத்தனை நாள் தாமதிக்கிறார்கள் என்பதை அறிய அவா.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** பேரவைத் தலைவரவர்களே, கேள்வி, 1971-72-ம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவமனை வளர்ச்சிக்காக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது என்பதாகும். 1971-72-ம் ஆண்டில் அதற்கான தொகை ஏதும் ஒதுக்கப்படவில்லை. 1972-ம் ஆண்டு 3ம் திங்கள் 5-ம் நாளில் தான் சட்டம் இங்கே கொண்டு வரப்பட்டது. 1973-ம் ஆண்டிலேயிருந்து நாம் இதற்காகச் செலவு செய்து கொண்டிருக்கிறோம். அந்த விவரங்களை வேண்டுமென்றால் தரத் தயாராக இருக்கிறேன். 1977-78, 1978-79, 1979-80, 1980-81 ஆம் ஆண்டுகளில் சராசரியாக 9 இலட்சம் ரூபாயிலிருந்து இப்பொழுது கடைசியாக 11.6 இலட்சம் ரூபாய் அளவிற்கு செலவழித்துக் கொண்டிருக்கிறோம்.

**டாக்டர் கே. சமரசம் :** பேரவைத் தலைவரவர்களே, மருத்துவத் துறையிலே இந்த ஹோமியோபதி மருத்துவம் மிகவும் சிறந்தது என்றும், எளிமையானது என்றும், கிராமங்களில் அதிக அளவில் நடைமுறையிலே இருக்கிறது என்றும் எல்லோரும் ஒத்துக்கொள்கிறோம். ஆனாலும்கூட அரசு அதற்காக வேண்டிய தேவையான முழு ஆதரவை அளிக்கவில்லை என்ற நிலை இருக்கிறது. ஆகவே, இதை மாற்றியமைத்து, எல்லாப் பகுதிகளிலேயும், இந்த ஹோமியோபதி மருத்துவத்தை அளிக்க அரசு முன் வருமா? அதற்கான ஆக்கபூர்வமான செயல் திட்டத்தை அறிவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது 1980 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 2-ம் நாளில் அரசாணை எண் 1132-ல் அதற்கான அரசாணை வெளியிடப்பட்டது. அதன் அடிப்படையிலே ஹோமியோபதி பிரிவை ஆரம்பிக்கும் டிஸ்ட்ரிக்ட் ஹெட்குவார்ட்டர்ஸ் ஹாஸ்பிடல் இராமநாதபுரம் மாவட்ட தலைமை மருத்துவமனை, கடலூரிலுள்ள தலைமை மருத்துவமனை. வேலூரிலுள்ள தலைமை மருத்துவமனை, நாகப்பட்டினத்திலுள்ள தலைமை மருத்துவமனை, திருச்சியிலுள்ள தலைமை மருத்துவமனை ஆக இந்த 6 தலைமை மருத்துவமனைகளிலே ஏற்படுத்தியிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிச்சயமாக வரவேற்பார்கள் என்று கருதுகிறேன்.

**திரு பொ. செயபதி :** பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவத் துறையிலிருந்து மருந்தகத் துறையைத் தனியாகப் பிரித்து புதிய டைரக்டரேட் ஏற்படுத்துவதாக ஏற்கனவே சபையிலே வாக்குறுதி கொடுக்கப்பட்டிருக்கிறது. அது இப்பொழுது என்ன நிலைமையில் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூலக் கேள்வி ஹோமியோபதியைப் பற்றியது.

**டாக்டர் கே. சௌரிராசன் :** தலைவர் அவர்களே, முறையாக கல்வி பெறாமல் 3 மாதத்திற்குள்ளாக ரூ. 50 கொடுத்து ஏராளமானவர்கள் ஹோமியோபதி பட்டம் பெற்று இப்பொழுது தமிழகத்திலே வைத்தியம் செய்து கொண்டு வருகிறார்கள். அரசே ஹோமியோபதி கல்லூரி நடத்துகிற இந்த நேரத்தில் தகுதியில்லாதவர்கள் ஹோமியோபதி பட்டம் பெற்று வைத்தியம் செய்வதைத் தடுப்பதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா? அவர்கள் ஹோமியோபதி வைத்தியம் மட்டும் அல்லாமல் அல்லோபதி வைத்தியம் கூட செய்கிறார்களே, அதுபோல் அல்லோபதி பட்டம் பெற்றவர்கள் ஹோமியோபதி வைத்தியம் செய்ய அனுமதிக்கப்படுவார்களா? நான் கூட எம்.பி.பி.எஸ். பட்டம் கொடுக்கிறேன் என்று யாருக்காவது கொடுத்து அதை வைத்துக் கொண்டு அவர்கள் வைத்தியம் செய்ய அனுமதிக்கப்படுவார்களா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, அது உண்மையான தகவல். அரசாங்கத்திற்கு அது பற்றிய தகவல் வந்துள்ளது. இப்பேர்ப்பட்ட போலிப் பட்டங்கள் கொடுத்துள்ளதெல்லாம் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. இரண்டு மூன்று மாதங்களுக்குள்ளே நமக்கு இதுபற்றி தகவல் கிடைத்திருக்கிறது. இன்னும் நாம் தகவல் சேகரித்துக் கொண்டிருக்

கிறோம். ஆகவே அப்படிப்பட்ட தவறான பட்டங்கள் கொடுப்பவர்கள் மீது என்ன நடவடிக்கைகள் எடுப்பது என்பதைப்பற்றி ஆராய தகவல்கள் சேகரித்துக் கொண்டிருக்கிறோம். அரசாங்கத்தினுடைய நோக்கம் எல்லாம் 1972-ம் ஆண்டு சட்டத்தினுடைய அடிப்படையிலே ஸ்ட்ரிக்ட்டாக நாம் கவனம் செலுத்துவோமானால், நடவடிக்கை எடுத்துத் தண்டிப்போமானால் இப்போர்ப்பட்ட போலிப் பட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படாத வகையிலும், அதைக் கொண்டு மக்களை எக்ஸ்பிளாய்ட் செய்யாத வகையிலும், அதற்குரிய வகையிலே ஏற்பாடுகளைச் செய்ய முடியும். ஹோமியோபதி மருத்துவர்கள் எண்ணிக்கை மிகவும் ஆச்சரியப்படத்தக்க வகையிலே குறைவாக இருக்கிறது. அந்தக் கல்லூரி மூலமாக வெளி வந்திருப்போர் எண்ணிக்கை 65 தான்.

**திரு என். வரதராஜன்:** தலைவர் அவர்களே, இது மிக முக்கியமான கேள்வி. இன்று நம்முடைய கிராமப்புறங்களில் ஏழை, எளிய மக்கள் குறைந்த தொகையிலே தங்களுடைய வைத்தியச் செலவை முடித்துக் கொள்ள உதவியாக இருப்பது ஹோமியோபதி மருத்துவம் ஆகும். நாம் ரூ. 40, 45 கோடி அளவுக்கு வைத்தியத் துறைக்கு செலவழிக்கும்போது, அதிலே மூன்றில் ஒரு பங்காவது நாம் ஹோமியோபதிக்குச் செலவழிப்பது சரியானதாக இருக்கும். போலி டாக்டர்கள் மருத்துவம் பார்ப்பதையும், தவறான முறையில் வைத்தியம் செய்வதையும் தடுத்து, அரசே நேரடியாகக் கவனித்து, இதனை ஹோமியோபதிக்கும், அல்லோபதிக்கும் உள்ள போட்டியாகக் கருதாமல், குறைந்த செலவில் வைத்தியத் துறையில் மக்களுக்கு உதவி செய்யக்கூடிய காரியமாகக் கருதி, அரசு தன்னுடைய கொள்கையை எதிர்காலத்தில் வகுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இருந்து கொண்டிருக்கிற கொள்கையிலே எந்தவிதமான மாறுதலும் கிடையாது. அதையே தான் நம்முடைய நண்பர் அவர்கள் அண்ணாவினுடைய உண்மையான தம்பிகளா என்று கேட்ட நேரத்தில், ஆம் என்பதற்கான புள்ளிவிவரங்களைக் கொடுத்தேன். ஆகவே, ஏற்கனவே இயற்றப்பட்ட சட்டத்தின் அடிப்படையிலேதான் செயலாற்றிக் கொண்டு வருகிறோம். அதிலே எந்த விதமான மாறுதலும் கிடையாது. ஹோமியோபதி மருத்துவத்தின் பயனை மக்கள் அடைய வேண்டுமென்பதற்காகத்தான் 6 மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளில், நான் சற்று முன்னர் கொடுத்த தகவலில் குறிப்பிட்டதைப் போல், ஹோமியோபதிக்கான பிரிவுகள் இணைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, நிச்சயமக, படிப்படியாக, நமக்குக் கிடைக்கக்கூடிய, விஞ்ஞான ரீதியாக பயிற்சி பெற்ற மருத்துவர்களை வைத்துக் கொண்டுதான் அதைச் செய்ய



முடியும். ஆகவே, அந்த அடிப்படையிலே, இதை வேகமாக, அதே நேரத்தில், குறைந்த விலையிலே மக்களுக்கு அந்த மருந்துகளை அளிக்கக் கூடிய வகையில், எந்த அளவு நாம் பயன்படுத்திக் கொள்ள முடியுமோ, அந்த அளவு செய்ய அரசாங்கம் தயாராக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

### *Auto analyser wing in Madras Medical College*

*Q. No. 56— THIRU : T.R. RAJARAM: Will the hon. the Minister for Health be pleased to state :

(a) whether an Auto analyser wing has been opened in the Madras Medical College during 1980 ; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) ஆம்.

(ஆ) ரூ. 3,94,000 செலவில் ஆட்டோ அனலைசர் வாங்கப்பட்டு ஜூன் 1980 முதல் பயோகெமிஸ்ட்ரி பிரிவில் பயன்படுத்தப்படுகிறது.

### கடையநல்லூரில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நூல் வழங்கல்

***வினா எண் 57 —திரு. ஏ. சாகுல் ஹமீது :** மாண்புமிகு கைத்தறி, கதர்த்துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) கடையநல்லூர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கெட்டுப்போன நூல்கள் கொடுக்கப்பட்டு வருவது அரசு கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம், எனில், நல்ல உயர்ரக நூல் கொடுக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் :** (அ) தமிழ் நாட்டில் இயங்கும் எல்லா கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்கும் வழங்கப்படுவது போலவே கடையநல்லூர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கும் கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தியாகும் தரமான நூலே வழங்கப்படுகிறது. கெட்டுப்போன நூல்கள் ஏதும் விநியோகிக்கப்படவில்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

கிறோம். ஆகவே அப்படிப்பட்ட தவறான பட்டங்கள் கொடுப்பவர்கள் மீது என்ன நடவடிக்கைகள் எடுப்பது என்பதைப்பற்றி ஆராய தகவல்கள் சேகரித்துக் கொண்டிருக்கிறோம். அரசாங்கத்தினுடைய நோக்கம் எல்லாம் 1972-ம் ஆண்டு சட்டத்தினுடைய அடிப்படையிலே ஸ்ட்ரிக்ட்டாக நாம் கவனம் செலுத்துவோமானால், நடவடிக்கை எடுத்துத் தண்டிப்போமானால் இப்பேர்ப்பட்ட போலிப் பட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படாத வகையிலும், அதைக் கொண்டு மக்களை எக்ஸ்பிளாய்ட் செய்யாத வகையிலும், அதற்குரிய வகையிலே ஏற்பாடுகளைச் செய்ய முடியும். ஹோமியோபதி மருத்துவர்கள் எண்ணிக்கை மிகவும் ஆச்சரியப்படத்தக்க வகையிலே குறைவாக இருக்கிறது. அந்தக் கல்லூரி மூலமாக வெளி வந்திருப்போர் எண்ணிக்கை 65 தான்.

திரு என். வரதராஜன்: தலைவர் அவர்களே, இது மிக முக்கியமான கேள்வி. இன்று நம்முடைய கிராமப்புறங்களில் ஏழை, எளிய மக்கள் குறைந்த தொகையிலே தங்களுடைய வைத்தியச் செலவை முடித்துக் கொள்ள உதவியாக இருப்பது ஹோமியோபதி மருத்துவம் ஆகும். நாம் ரூ. 40, 45 கோடி அளவுக்கு வைத்தியத் துறைக்கு செலவழிக்கும்போது, அதிலே மூன்றில் ஒரு பங்காவது நாம் ஹோமியோபதிக்குச் செலவழிப்பது சரியானதாக இருக்கும். போலி டாக்டர்கள் மருத்துவம் பார்ப்பதையும், தவறான முறையில் வைத்தியம் செய்வதையும் தடுத்து, அரசே நேரடியாகக் கவனித்து, இதனை ஹோமியோபதிக்கும், அல்லோபதிக்கும் உள்ள போட்டியாகக் கருதாமல், குறைந்த செலவில் வைத்தியத் துறையில் மக்களுக்கு உதவி செய்யக் கூடிய காரியமாகக் கருதி, அரசு தன்னுடைய கொள்கையை எதிர்காலத்தில் வகுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இருந்து கொண்டிருக்கிற கொள்கையிலே எந்தவிதமான மாறுதலும் கிடையாது. அதையே தான் நம்முடைய நண்பர் அவர்கள் அண்ணாவினுடைய உண்மையான தம்பிகளா என்று கேட்ட நேரத்தில், ஆம் என்பதற்கான புள்ளிவிவரங்களைக் கொடுத்தேன். ஆகவே, ஏற்கனவே இயற்றப்பட்ட சட்டத்தின் அடிப்படையிலேதான் செயலாற்றிக் கொண்டு வருகிறோம். அதிலே எந்த விதமான மாறுதலும் கிடையாது. ஹோமியோபதி மருத்துவத்தின் பயனை மக்கள் அடைய வேண்டுமென்பதற்காகத்தான் 6 மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளில், நான் சற்று முன்னர் கொடுத்த தகவலில் குறிப்பிட்டதைப் போல், ஹோமியோபதிக்கான பிரிவுகள் இணைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, நிச்சயமக, படிப்படியாக, நமக்குக் கிடைக்கக்கூடிய, விஞ்ஞான ரீதியாக பயிற்சி பெற்ற மருத்துவர்களை வைத்துக் கொண்டுதான் அதைச் செய்ய





முடியும். ஆகவே, அந்த அடிப்படையிலே, இதை வேகமாக, அதே நேரத்தில், குறைந்த விலையிலே மக்களுக்கு அந்த மருந்துகளை அளிக்கக் கூடிய வகையில், எந்த அளவு நாம் பயன்படுத்திக் கொள்ள முடியுமோ, அந்த அளவு செய்ய அரசாங்கம் தயாராக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

*Auto analyser wing in Madras Medical College*

*Q. No. 56— THIRU T.R. RAJARAM: Will the hon. the Minister for Health be pleased to state:

(a) whether an Auto analyser wing has been opened in the Madras Medical College during 1980; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) ரூ. 3,94,000 செலவில் ஆட்டோ அனலைசர் வாங்கப்பட்டு ஜூன் 1980 முதல் பயோ கெமிஸ்ட்ரி பிரிவில் பயன்படுத்தப்படுகிறது.

கடையநல்லூரில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நூல் வழங்கல்

*வினா எண் 57 —திரு. ஏ. சாகுல் ஹமீது: மாண்புமிகு கைத்தறி, கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) கடையநல்லூர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கெட்டுப்போன நூல்கள் கொடுக்கப்பட்டு வருவது அரசு கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம், எனில், நல்ல உயர்ரக நூல் கொடுக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: (அ) தமிழ் நாட்டில் இயங்கும் எல்லா கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்கும் வழங்கப்படுவது போலவே கடையநல்லூர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கும் கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தியாகும் தரமான நூலே வழங்கப்படுகிறது. கெட்டுப்போன நூல்கள் ஏதும் விநியோகிக்கப்படவில்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

[1981 ஜனவரி 27

காஞ்சிபுரம் கூட்டுறவு நூற்பாலை.

*வினா எண் 58—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு கைத்தறி, கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கூட்டுறவு நூற்பாலை தற்போது நஷ்டத்தில் நடைபெறுகிறதா ?

(ஆ) ஆம் எனில், இதனைச் சரிசெய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

[முற்பகல் 10–10]

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, எனக்குத் தரப்பட்டுள்ள ஆடிட் ரிப்போர்ட்டின்படி அந்த மில் 65 லட்சம் ரூபாய் நஷ்டத்தில் நடக்கிறது என்று அறிகிறேன். அந்த நஷ்டத்திற்கு அல்லது அந்த மில் சரியாக நடக்காததற்கு காரணகர்த்தா யார் ? அவர் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நஷ்டத்திற்கு தனிப்பட்ட நபர் யாரும் பொறுப்பல்ல. 1974 ஆம் ஆண்டிலிருந்தே ஒரு மந்த நிலை ஏற்பட்டிருந்தது. 1975 முதல் 1977 வரையில் பஞ்சின் விலை அதிகமாக இருந்ததாலும், விற்கும் நூலின் விலை குறைந்ததாக சமநிலையில் இல்லாமல் இருந்தது. ஆகவே இந்த இடைப்பட்ட காலத்தில் அந்த மில் நஷ்டத்தில் இயங்கியது. 1978-லிருந்து நூலின் விலை அதிகமாக இருந்தது, லாபம் கிடைத்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கூட்டுறவு நூற்பாலையில் 1980 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1 ஆம் தேதி முதல் 1980 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 20 ஆம் தேதி வரையில் 8.54 லட்சம் நிகர லாபம் கிடைத்துள்ளது. ஆனால் அதே நேரத்தில் ஏற்கனவே 51.40 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருந்தது. இப்போது லாபகரமாக இருந்தாலும், முன்னாலே ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுசெய்து கொண்டு வருகிறது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு நூற்பாலையில் மொத்தம் எத்தனை பிரேம்கள் வேலை செய்யவேண்டும்? குறைவாக வேலை செய்வதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?



1981 ஜனவரி 27]

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போடவேண்டும்.

பெரம்பூர் தொகுதியிலுள்ள இறைச்சிக் கூடம்

*வினா எண் 59 – திரு. சு. பாலன் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

சென்னை பெரம்பூர் தொகுதியில் உள்ள ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி கூடத்தினை நவீன முறையில் சீர்படுத்தும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : இல்லை. சென்னை பெரம்பூரில் உள்ள பழைய இறைச்சிக் கூடத்திற்குப் பதிலாக மாதவரத்தில் ஒரு நவீன இறைச்சிக் கூடம் அமைப்பதற்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இது சம்பந்தமாக தமிழ்நாடு இறைச்சி நிறுவனம் நவீன இறைச்சிக் கூடத்தை அமைக்க தகுந்த நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, பெரம்பூரில் உள்ள அந்த ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி கூடத்தில் தினந்தோறும் எவ்வளவு ஆடு, மாடுகள் வெட்டப்படுகின்றன என்பதையும் அதே நேரத்தில் அறுவைக்கு அனுமதிக்கப்படுகின்ற ஆடு மாடுகளுக்கு மருந்துவச் சான்றிதழ் வழங்கப்படுகின்றதா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் வெட்டப்பட்ட ஆடுகளின் எண்ணிக்கை பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த எண்ணிக்கையின் குறிப்பு என்னிடம் இப்போது இல்லை. தனிக்கேள்வி போடவேண்டும்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, பசுவதைத் தடைச் சட்டம் கொண்டுவரப்போவதாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பல மாதங்களுக்கு முன்பு சொன்னார்கள். தமிழ்நாடு பூராவிலும் உள்ள மாடுகள் இறைச்சிக்காக கேரளா போன்ற மாநிலங்களுக்குக் கொண்டு செல்லப்படுவதை. . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக்கேள்வி இறைச்சிக் கூடத்தைச் சீர்படுத்துவது பற்றியதாகும். இதற்கும் கேரள மாநிலத்திற்கு மாடுகள் போவதற்கும் என்ன சம்பந்தம் ? மூலக்கேள்வியை ஒட்டியதல்ல.

டாக்டர் கே. சௌரிராஜன் : தலைவர் அவர்களே, சமீபத்தில் பத்திரிகையில் ஒரு செய்தி வந்திருக்கிறது. மாதவரத்தில் இந்த நவீன இறைச்சிக் கூடத்தை ஏற்படுத்தக்கூடாது என்று கேட்டு சென்னையில் உள்ள ஜெயின் சங்கமும், 'அனுவ்ரத்' சங்கமும் அரசுக்கு கோரிக்கை கொடுத்துள்ளதால், அதைக் கைவிடும் யோசனை அரசுக்கு உண்டா அல்லது அதனை அமல்படுத்தப்போகிறீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, அதைக் கைவிடும் திட்டம் அரசிடம் ஏதும் இல்லை. பெரம்பூரில் உள்ள இறைச்சிக் கூடம் 13 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ளதால், நவீன இறைச்சிக் கூடமாக அதை மாற்ற அந்த இடம் போதாது என்பதால், மாதவரத்தில் 150 ஏக்கர் நிலப்பரப்பில் அந்த நவீன இறைச்சிக் கூடத்தை ஏற்படுத்துவது என்று முடிவு செய்து இருக்கிறோம் என்பதை மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் முதலில் நான் இரண்டு துணைக் கேள்விகள் கேட்டேன். அதற்குப் பதில் அளிக்கவில்லை என்பதால் மீண்டும் கேட்கிறேன். அந்த இறைச்சிக்கூடத்தில் வெட்டப்படுகிற ஆடுகளும், மாடுகளும் மிகவும் நோய்வாய்ப்பட்டவை என்று சொல்லப்படுகிறது. ஆகவே, அங்கே வெட்டப்படுகிற கால்நடைகள் நல்ல நிலையில் உள்ளவை என் து குறித்து மருத்துவச் சான்றிதழ் பெற்ற பின்னர் வெட்டப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நவீன இறைச்சிக்கூடத்தில் வெட்டப்படுகின்ற மாடுகள் எல்லாம் உபயோகம் அற்ற மாடுகளாகத்தான் இருக்கும். அதாவது, அந்த மாடுகள் எல்லாம் இனி இனவிருத்திக்கு உபயோகமற்றவையாக அல்லது வேலை செய்வதற்கு பயன்படாதவை என்கிற வகையில் உள்ள மாடுகளாகத்தான் இருக்கும். அந்த மாடுகளை வெட்டுவதை நவீன முறையில் வெட்டி, மக்களுக்கு வினியோகிக்கலாம் என்கிற முறையில் தான் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலன் அவர்கள் கேட்ட கேள்வி—அங்கே வெட்டப்படுகிற ஆடுகளோ, மாடுகளோ வெட்டப்படுவதற்கு முன்பு முறைப்படி மருத்துவ பரிசோதனைக்கு ஆளாக்கப்பட்டு,



சான்றிதழ் பெறப்பெற்ற பின்னர் வெட்டப்படுகிறதா என்பதாகும். அந்தக் கேள்விக்குரிய பதிலைத்தான் பேரவையும் எதிர்பார்க்கிறது.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே வெட்டப்படுகிற மாடுகள் முறைப்படி பரிசோதிக்கப்பட்ட பின்னரே வெட்டப்படுகின்றன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

### தஞ்சை மாவட்டத்தில் கால்நடை கிளை நிலையங்கள்.

*வினா எண். 60—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சையில் தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம் 50 கிளைகளுடன் இயங்கி வருவதை 100 ஆக விஸ்தரிக்க அரசுக்கு திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : இல்லை.

[முற்பகல் 10-20]

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : தலைவரவர்களே, தமிழகம் முழுவதிலும் இன்று கால்நடை பராமரிப்பு கிளை நிலையங்களில் ஒருசில நிலையங்கள் காலியாக உள்ளன. அவைகள் எவ்வளவு? அந்த நிலையங்களுக்கு, பல கிராமங்களில் இன்றைக்கு ஆய்வாளர்களாகப் பணியாற்றுகிறார்களே, கிரேடு 1, கிரேடு 2 என்று ; அப்படி இருப்பவர்களில் ஒருவரை, ஒரு கிளை நிலையத்திற்கு 30-க்கு குறையாமல் மாடுகள் வந்தால், மாற்றம் செய்து தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பொதுவான கேள்வி அல்ல. தஞ்சை மாவட்டத்தில் 50 கிளைகள் இருப்பதை 100 ஆக அதிகரிப்பது பற்றிய கேள்வி இது.

* வினாக்கள்— விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் *உடுக்குறி இடப்பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

---

* உடுக்குறியுறாத வினாக்கள் 1-200—விடைகளுடன் இணைப்பாக சேர்க்கப்பெற்றுள்ளது.

[1981 சனவரி 27

2. தகவல் கோரல்.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. நா. சுந்தரராஜ்: சார், பாயின்ட் ஆப் ஆர்டர். நான் உரிமை மீறல் பிரச்சனை ஒன்று கொடுத்திருக்கிறேன். அதன் நிலை என்ன? எப்போது எடுத்துக் கொள்ளப்படும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை என் அறையில் வந்து கேட்க வேண்டும். அது பரிசீலனையில் இருக்கிறது. ஆளுநர் உரை மீதான விவாதம் முடிந்த பிறகு இப்படிப்பட்ட பிரச்சனைகளை எடுத்துக்கொள்ளலாம் என்று தலைவர்கள் பேசி முடிவு செய்திருக்கிறார்கள். பிப்ரவரி 19-ந் தேதி வரையில் அவை நடக்கிறது. உங்கள் பிரச்சனை பற்றி பின்னர் முடிவு செய்யப்படும்.

திரு ரா. கிருஷ்ணன்: சார், பாயிண்ட் ஆஃப் ஆர்டர்.

** ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் கூறியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன். ஆளுநர் உரையில் நீங்கள் இதைப்பற்றி எல்லாம் பேசலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவரவர்களே, சற்றுமுன் தாங்கள் சொல்லிய நேரத்தில் ஆளுநர் உரை விவாதத்தில் இருப்பதால் இப்போது உரிமை மீறல் பிரச்சனையை எடுத்துக்கொள்வதற்கில்லை என்று சொன்னீர்கள். உரிமை மீறல் என்றால் வேறு எந்த பிரச்சனை இருந்தாலும் அதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்பது நாம் கடைப்பிடித்து வருகிற மரபு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரிமை மீறல் பிரச்சனை கொடுத்திருக்கிறார்கள். அது பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனை முடிந்த பிறகு தான் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: தலைவரவர்களே, அண்ணாமலை பல்கலைக் கழகம் தொடர்ந்து மூடிக்கிடக்கிறது. அதற்கு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். இப்போது ஆசிரியர்கள் தொடர்ந்து சிறைக்கு சென்றுகொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் ஏற்கெனவே அறையில் இதற்குப் பதில் சொல்லிவிட்டேன்; அதே பதில்தான் இப்போதும்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பெற்றது.



1981 ஜனவரி 27]

திரு. து. புருஷோத்தமன்: தலைவரவர்களே, நான் ஏற்கனவே ஒரு குறுகிய கால வினா கொடுத்து ஒன்றரை ஆண்டு ஆகிவிட்டது. அது அமைச்சர்களுடைய பயணப்படியைப் பற்றியது. மீண்டும் ஒரு முறை நம்முடைய நிதியமைச்சர் அவர்களிடம் கொடுத்தேன். ஒன்றரை ஆண்டு காலம் ஆகிவிட்டது. இன்னும் எவ்வளவு காலம்தான் ஆகும் ஒரு குறுகிய கால வினாவை எடுத்துக் கொள்ள?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய கவனத்திற்கு வந்திருந்தால் நான் நடவடிக்கை எடுக்கிறேன். என் கவனத்திற்குக் கொண்டுவர உங்களுக்கு உரிமை இருக்கிறது. ஒன்றரை ஆண்டுக்கு முன்னால் நான் சபாநாயகராக இல்லை; ஆகவே இந்தப் பிரச்சனை வரவில்லை.

திரு. ந. உமாநாத்: தலைவரவர்களே, கவர்னர் உரையின் மீதான விவாதம் முடிவுறுகிற வரையில் கவன ஈர்ப்புத் தீர்மானமோ, ஒத்திவைப்புத் தீர்மானமோ எடுக்கப்பட மாட்டாது என்று சொன்னீர்கள். அப்படிச் சொல்வதற்கு எந்தவிதமான விதிகளும் கிடையாது. ஆகவே 7 நாட்கள் கவர்னர் உரையின் மீதான விவாதம் நடந்தால் அந்த நாட்களில், பல அவசரமான ஜனநாயகப் பிரச்சினைகள் வருகின்றபோது அந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதிலே அரசாங்கத்திற்கு எதிராக செய்கின்ற வகையிலே விவாதம் நடத்துவதற்கு இந்தச் சபைக்கு உரிமையே இல்லையா? அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பிரச்சினை சம்பந்தமாக ஆயிரக்கணக்கான பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள், இந்த நிலையில்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆளுநர் உரையின் மீது ஒவ்வொரு கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் இவசரி பேசுகிறார்கள். ஆகவே, அவர்கள் பேசுகின்றபோது இந்த மாதிரிப் பிரச்சினைகள் பற்றி எல்லாம் பேசுவதற்கு போதிய வாய்ப்பு இருக்கின்றது. மன்ற உறுப்பினர்களுக்கு அதற்கான ஆற்றலும் இருக்கின்றது. ஆளுநர் உரையின் மீது விவாதம் நடந்துகொண்டிருக்கும் போது பல பிரச்சினைகள் குறித்துப் பேச வேண்டி இருப்பதால்தான் அந்த நாட்களில் கவன ஈர்ப்புத் தீர்மானம், ஒத்திவைப்புத் தீர்மானம் போன்றவை எடுத்துக் கொள்ளப்படுவதில்லை என்ற மரபு கடைபிடிக்கப்பெற்று வருகிறது. ஆகவே உறுப்பினர்களின் உரிமைகள் பறி போவதாக யாரும் கருத வேண்டியதில்லை.

* டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நண்பர் திரு. உமாநாத் அவர்கள் எழுப்பிய பிரச்சினை குறித்து நானும் என்னுடைய கட்சியின் கருத்துக்களை எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒத்திவைப்புத் தீர்மானத்திலே பேசப்பட வேண்டிய விஷயங்களை கவர்னர் உரையிலே பேசலாம் என்று கூறுகிறீர்கள். அப்படிப் பேசினால் அதற்குரிய

விளக்கங்களையும், பதிலையும் முதலமைச்சர் அவர்கள் அளிப்பதற்கு 6 அல்லது 7 நாட்கள் ஆகலாம். உடனடியாக தீர்த்து வைக்க வேண்டிய பிரச்சினைகளுக்கு அரசு என்ன விளக்கம் அளிக்கின்றது என்பதை அறிந்துகொள்ள விரும்புகின்ற உறுப்பினர்களால் அவ்வளவு நாட்கள் காத்திருக்க முடியுமா? தற்போது அண்ணாமலை பல்கலைக் கழகம் சம்பந்தப்பட்ட பிரச்சினை காரணமாக கைது செய்யப்படுகின்ற ஆசிரியர்களின் தொகை நாளுக்கு நாள் ஏறிக்கொண்டே போகிறதே, அதைப் பற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசின் கடமையல்லவா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பிரச்சினை மட்டுமல்ல. பின்னி மில் மூடிக் கிடக்கிறது. இப்படிப் பல பிரச்சினைகள் தினசரி வருகின்றன. அவற்றை எல்லாம் ஒரே நாளில் எடுத்துக் கொண்டு விவாதித்து முடிவு செய்துவிட முடியாது.

திரு. கு ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே' ஒத்திவைப்புத் தீர்மானத்தில் பேச வேண்டியவற்றை கவர்னர் உரையின் மீது பேசுகின்றபோது பேசிக்கொள்ளலாம் என்று சொல்லி உறுப்பினர்களை திக்குமுக்காடச் செய்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் மாண்புமிகு உறுப்பினர்களைத் திக்குமுக்காடச் செய்யவில்லை. என்னைத்தான் திக்குமுக்காடச் செய்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் பாராளுமன்றத்திலே உறுப்பினராக இருந்தவர்கள். ஆகவே அங்கே இம்மாதிரியெல்லாம் அனுமதிக்கப்படுவதில்லை என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்கும்.

திரு. கு. ரமணி : ஒத்திவைப்புத் தீர்மானத்திலே பேச வேண்டியதைக் கவர்னர் உரையின் மீது பேசுகின்றபோது பேசலாம் என்று சொன்னீர்கள். கவர்னர் உரையின் மீது பேசுகின்றபோது இவை பற்றி பேசுவதற்கு எங்களுக்கு சந்தர்ப்பமே வருவதில்லை. மேலும் கவன ஈர்ப்புத் தீர்மானம் முதல் ஒத்திவைப்புத் தீர்மானம் வரையில் அத்தனையும் தள்ளப்பட்டு விட்டது என்று நீங்கள் சொல்லிவிட்டீர்கள். இப்போது மறுபடியும் கவர்னர் உரையின் மீது பேசுகின்ற போது அதைப்பற்றி பேசலாம் என்று சொல்கிறீர்கள் . . . . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வரும்போது உறுப்பினர்களே, அது அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்றுதானே சொல்கிறார்கள். அப்படியானால் அதை ஏன் கவர்னர் உரையின் மீது பேசுகின்றபோது சொல்லக் கூடாது?

திரு. கு. ரமணி : கவர்னர் உரையின்மீது பேசுகின்றபோது எல்லாவற்றையும் சொல்ல முடியாது,



மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்மானங்கள் கொண்டு வருகின்றபோது அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்று சொல்லப்படுகின்றது. அப்படியானால் கவர்னர் உரையின் மீது பேசுகின்ற போது அதைப்பற்றி பேசலாமே.

[முற்பகல் 10-30]

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, தாங்கள் குறிப்பிட்டவைகளைப் பற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் ஆளுநர் உரை மீது விவாதம் 5, 6 நாட்களுக்கு நடைபெறும், அதிலே சில முக்கிய விவரங்களைக் குறிப்பிட்டுப் பேசினாலும், விவாதத்திற்கு பதில் அளிக்கும் போது தான் அவைகளுக்கான பதில்களை அமைச்சர்களிடமிருந்து பெற முடியும். ஆனால் முக்கியமான அவசர பிரச்சினைகளுக்கான தீர்வை அதில் காண முடியாது. ஒத்திவைப்புத் தீர்மானம், கவன ஈர்ப்புத் தீர்மானம் போன்றவைகள் இருந்தால், அவற்றின் மூலம் அந்தந்தப் பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வு காண இயலும். இதனால் அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஏ. சாகுல் ஹமீது : தலைவர் அவர்களே . . . . . . . . . . .
(மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சாகுல் ஹமீது அவர்களும் அதனையொட்டியே கருத்துக்களைச் சொல்லப் போகிறார்கள் என்பது தெரிகிறது. இன்னும் 4, 5 நாட்களில் ஆளுநர் உரை மீது விவாதம் முடிந்தவுடன் எல்லா நிகழ்ச்சிகளும் வழக்கம்போல் இடம் பெறும்.

## 3. தன்னிலை விளக்கம்

### 'சிவப்பு சந்தன மரம்' —வனத்துறை அமைச்சரின் விளக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சரவாகள் ஒரு தன்னிலை விளக்கத்திற்கு அனுமதி கேட்டிருக்கிறார்கள். அவர்கள் இப்போது தன்னிலை விளக்கம் அளிக்கலாம்.

* மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு என்னுடைய தன்னிலை விளக்கத்தை அவைமுன் வைக்கிறேன்.

கடந்த 24 ஆம் தேதி ஆளுநர் உரை மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் சில கருத்துக்களைச் சொல்லி, அதிலே என் பெயரைத்

குறிப்பிட்டு, குற்றச்சாட்டைச் சுமத்தி, விளக்கம் கேட்டிருக்கிறார்கள். நான் அன்றைக்கு அவையிலே இல்லாத காரணத்தினால் உடனடியாக பதிலைத் தரமுடியவில்லை. இப்பொழுது நான் தன்னிலை விளக்கம் அளிப்பதற்கு முன்னாலே அவர் என்ன பேசினார் என்பதை முதலில் எடுத்துச் சொல்லி விடுகிறேன். பத்திரிகைகளிலே பல்வேறு விதமாக அவர் பேசியது வந்திருக்கிறது. ஆனால் நம்முடைய சட்ட மன்றக் குறிப்பேட்டில் பதிவாகியிருக்கிறபடி அவர் என்ன பேசியிருக்கிறார் என்பதைத் தெரிவிக்க வேண்டும் என்று நினைத்து, அதற்கான அனுமதியை தலைவர் அவர்கள் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

நம்முடைய குறிப்பேட்டிலே, "ரெட் சான்டல், அதாவது சிவப்பு சந்தனம் என்று ஒரு வகை தேக்கு உள்ளது. அது தேக்கைக் காட்டிலும் விலை உயர்ந்ததாகும். பாரஸ்ட் ஆக்டின்படி அந்த மரங்களை யாரும் வெட்டக் கூடாது. விற்கக் கூடாது. அப்படி இருக்கும் போது 60 இலட்சம் ரூபாய் பெருமானமுள்ள ரெட் சான்டல் மரங்கள் பாரஸ்ட் ஆக்டுக்கு விரோதமாக, அந்த மரங்கள் வெட்டப்பட்டு, சில வியாபாரிகள் மெட்ராஸ் ஹார்பரில் இருந்து ஜப்பானுக்கு கப்பலின் மூலம் ஏற்றுமதி செய்து அனுப்புகிறார்கள். அதிகாரிகள் அதைக் கண்டு பிடித்து அவர்கள்மீது வழக்குப் போடுகிறார்கள். கிரிமினல் கேஸ் கோர்ட்டில் பெண்டிங்காக இருக்கின்றது. திடீரென்று அந்த வழக்கு வாபஸ் வாங்கப்படுகிறது. அந்த வழக்கு வாபஸ் வாங்கப்பட வேண்டும் என்று உத்தரவு போட்டது யார் தெரியுமா? நம்முடைய மரியாதைக்குரிய அமைச்சர் அவர்கள், நான் பெயரை வேண்டுமானாலும் சொல்லுகிறேன் உத்தரவுகளைக் கையிலேயே வைத்துக் கொண்டிருக்கிறேன். தேவைப்பட்டால் நான் சொல்ல விரும்புகிறேன். இதிலே ஒரு ஊழலப்பன் ஒளிந்திருப்பதாக நான் பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறேன். காரணம் 'ரெட்ராஸ்பெக்டிவ்-எபக்ட்' கொடுத்து, அந்த ரெட் சான்டல் மரத்தை வெட்டக் கூடாது என்று ஏற்கனவே ஷெட்யூலிலே இருந்ததை மாற்றி, ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுத்து வெட்டுவது சரிதான் என்று அதிலே அவர்கள் ஒரு மாற்றத்தை, ஒரு அமென்ட்மெண்ட்டை கொண்டு வந்திருக்கிறார்கள். அமைச்சர் வீரப்பன் அவர்கள் இந்த ஊழலுக்காக பதில் சொல்ல வேண்டும் என்று நான் அமைதியோடும், பொறுப்போடும் கேட்டுக் கொள்கிறேன். அதற்கான ஆதாரத்தைத் தரத் தயாராக இருக்கிறேன். ஜி. ஓ. இருக்கிறது."

இதிலே விளக்கம் தேவை என்று கேட்டிருக்கிறார்கள். இவை அனைத்தும் அடிப்படையற்ற, ஆதாரமற்ற, தவறான, உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டு என்பதை பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். முதல் குற்றச்சாட்டு, 'ரெட் சாண்டல்' என்ற மரம் இருக்கிறது என்று சொல்கிறார். 'ரெட்



சாண்டல்' என்று ஆங்கிலத்திலும், செம்மரம் என்று தமிழிலும் சொல்லப்படும் அந்த வகை மரங்கள் தமிழகக் காடுகளிலேயே கிடையாது. ஆந்திரக் காடுகளிலேதான் இருக்கின்றன.

இரண்டாவது, வனச் சட்டத்தின்படி மரங்களை வெட்டக் கூடாது என்றிருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார். அவர் ஒரு வழக்கறிஞர், எந்த வனச் சட்டத்திலும் மரங்களை வெட்டக் கூடாது என்ற சட்டம் கிடையாது. எந்த மரங்களை வெட்டுவதானாலும், விதிகளின்படி அனுமதி பெற்று வெட்ட வேண்டும் என்றுதான் வனச் சட்டம். அப்படித்தான் வனச்சட்டத்தில் இருக்கிறது:

அடுத்து, 60 லட்சப் பெருமானமுள்ள ரெட் சாண்டல் மரங்கள் பாரஸ்ட் ஆக்ட்டுக்கு விரோதமாக வெட்டப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். தமிழகத்திலேயே அந்த வகை மரங்கள் இல்லை. அதனால் அது இங்கே வெட்டப்படவும் இல்லை என்பதை இங்கே நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அடுத்து அந்த மரங்கள் ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதிகாரிகள் அதைக் கண்டுபிடித்து அவர்கள் மீது வழக்குப் போடுகிறார்கள். கிரிமினல் கேஸ் கோர்ட்டில் பெண்டிங்காக இருக்கின்றது. திடீரென்று அந்த வழக்கு வாபஸ் வாங்கப்படுகிறது.

இதைத்தான் சில பத்திரிகைகள் மிகப் பிரபலமாக, தெளிவாக என்மீது அனுதாபத்தோடு கொட்டை எழுத்துக்களில் என் பெயரைப் போட்டு பிரசுரித்திருக்கிறார்கள். இதுதான் குற்றச்சாட்டினுடைய மையக் கருத்து. இதில் அரசாங்கமோ வனத்துறையோ வழக்கு போடவில்லை. இந்த மரம் ஆந்திரக் காடுகளிலிருந்து வந்ததாக ஆந்திரா வனத்துறை அதிகாரிகள் தமிழ்நாடு வனத்துறை அதிகாரிகளுக்கு தெரிவித்து இரண்டு அதிகாரிகளும் போய் நடவடிக்கை எடுக்கிறார்கள். அந்த நடவடிக்கை எடுப்பதற்கான சட்டத்தை உருவாக்கியதே இந்த அப்பாவி அமைச்சர்தான். அதனால் தான் நடவடிக்கை எடுக்கிறார்கள். அந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட நேரத்திலும் அமைச்சரவை இல்லை. அன்றைக்கு, மார்ச் ஏப்ரல் மாதம் தான் கப்பல் ஏறுகிறது. அன்றைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சரவை இல்லை. அதனாலே சரக்கு கப்பல் ஏறுகிறது. நடவடிக்கைகள் எடுக்கிறார்கள். அதிகாரிகள். வழக்கு மன்றத்திற்குப் போனது அரசாங்கமும் அல்ல, காட்டு இலாகாவும் அல்ல. அந்த வியாபாரிகள் வழக்கு மன்றத்திற்குப் போனார்கள். ஒரு உயர்நீதிமன்ற நீதிபதி ஸ்டே கொடுத்தார். அதற்குப் பிறகு அரசாங்கத் தரப்பிலிருந்து ரிட் அப்பீல் போகிறது. அங்கே

[திரு. ஆர். எம். வீரப்பன்] 1981 ஜனவரி 27

ரிட் அப்பீல் முடிவு செய்யப்படாமலிருக்கும் போதே கப்பல் போய் விட்டது. ஜப்பான் நாட்டில் அந்த வியாபாரிகள் ஜப்பானிலுள்ள அந்த வழக்கு மன்றத்தில் வழக்கு தொடுத்து நாங்கள் பணம் கட்டி எங்களுடைய நாட்டுக்கு வந்த சரக்கை தடுத்து நிறுத்துகிற உரிமை யாருக்கும் இல்லை, அந்த கப்பலின் காப்டனையே கைது செய்ய வேண்டும் என்று அனுமதி வாங்கி சரக்கை இறக்கி விட்டார்கள். வழக்கு மன்றத்தில் அவர்கள் வழக்கு போட்டார்கள். ஒரு நீதிபதி ஸ்டே கொடுத்தார். உயர் நீதிமன்றத்திற்கு அரசாங்க சார்பில், நம் வனத்துறை சார்பில் ஆந்திர அரசுக்காக, ஆந்திர வனத்துறைக்காக ரிட் அப்பீல் போடப்பட்டது. அது அப்படியே பெண்டிங்கில் இருக்கிறது. எந்த வழக்கும் அரசால் போடப்படவும் இல்லை, திரும்பப் பெற்றுக் கொள்ளப்படவும் இல்லை. ஆகவே இது அடிப்படையற்றதொரு குற்றச்சாட்டு.

இன்னொன்றும் சொல்கிறார். ஜீ. ஓ. கையில் வைத்திருக்கிறேன் என்று சொல்கிறார். அதை 'ஷெட்யூல்ட் டிம்பரிலிருந்து' மாற்றி இருக்கிறார்கள். ரிட்ரா ஸ்பெக்டிவ் எபெக்ட் என்று சொல்கிறார்கள். அந்த ஜீ.ஓ. என்பது இரகசியமான ஜீ.ஓ. அல்ல. தெளிவான, எல்லோருக்கும் ஆணை பிறப்பிக்கிற ஒரு உத்தரவுதான் அது. ஆகவே அது அவர்கள் கையில் இருப்பதில் ஆச்சரியம் இல்லை. அவர் கையில் வைத்திருக்கிறார். அதில் இருக்கிற ஆணை என்ன என்பதைத் தெரிந்து கொள்வதில், சொல்வதில் தவறி இருக்கிறார். அவ்வளவு ஆத்திரம் என் மீது. என் மீது அவர்களுக்கு அவ்வளவு அக்கறை. ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் எதுவும் இல்லை. இந்த 'ஷெட்யூல்ட் டிம்பர்' என்ற பட்டியலில் இந்த இந்த செம்மரத்தைச் சேர்த்ததே இந்த அரசுதான். அதற்குப் பிறகு மத்திய அரசு ஒரு ஆணை பிறப்பித்தது தெரிகிறது. இந்த செம்மரத்தை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு எந்த அனுமதியும் தேவை இல்லை. ஒப்பன் ஜெனரல் லைசென்ஸ் கீழ் இதை மூன்றாவது பிரிவில் கொண்டு வந்து விட்டது. ஆகவே தமிழ்நாட்டில் விளையாத ஒரு மரத்தை, தமிழ்நாட்டில் இல்லாத ஒரு மரத்தை, நாம் கட்டுப்பாடு செய்கிறோம், மத்திய அரசு ஏற்றுமதி செய்யலாம் என்று க்ளியரன்ஸ் கொடுத்து விடுகிறார்கள். ஆகவே அதற்குப் பிறகு பரிசீலனை செய்து முன்னால் இருக்கிற டிரான்சிட் ரூல்ஸ், பொசிஷன் ரூல்ஸ் விதிகளே போதும், நம்முடைய தமிழ்நாட்டிலே இல்லாத ஒரு மரத்தை ஷெட்யூல்ட் டிம்பரில் சேர்க்க வேண்டாம் என்று அரசாங்கம் அதிலேயிருந்து நீக்கியது. அந்த ஆணையைத்தான் அவர்கள் கையில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதில் ஒன்றும் இரகசியம் இல்லை.

இந்த மரத்தை தவறாக ஏற்றுமதி செய்யக் கூடாது, அதைத் தடுக்க வேண்டும் என்று முயற்சித்தது இந்த அரசுதான். அதற்குப் பிறகு பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டோம். ஆனால்



1981 ஜனவரி 27] [திரு. ஆர். எம். வீரப்பன்]

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் ஏற்றுமதி செய்வதற்கு அனுமதி அளித்திருக்கிற ஆணையை மாத்திரம் இங்கே சொல்லி என் நிலையை முடித்துக்கொள்கிறேன்.

3—3—1975-ம் ஆண்டு ஒரு அரசாணையில்

"The Government have carefully considered the request of the Pesident Red Sandeds Exporters's Association (Registered: Madras), and have decided that the orders issued by the Chief Conservator of Forests that the District Forest Officers of this State should not issue any export certificate for Red Sandels originating from Andhra Pradesh should be cancelled and the Statusquo ante restored.

The Chief Conservator of Forests is requested to take action accordingly"

என்றிருக்கிறது. இந்த அமைச்சரும் இல்லை, இந்த அரசும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்றுமதி செய்வதற்கே அனுமதி அளித்திருக்கிறது. நாம் அதை தடை செய்ய முயற்சித்தோம். மத்திய அரசு ஓப்பன் ஜெனரல் லைசென்ஸில் கொண்டு வந்து விட்ட காரணத்தால் இந்த முடிவை எடுத்தோம். ஷெட்யூல்ட் டிம்பரிலிருந்து எடுத்திருக்கிறோம். இங்கே விளையாத மரத்தை ஷெட்யூல்ட் டிம்பரில் வைத்துக்கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லை—ஏற்றுமதிக்கு நாம் கட்டுப்பாடு விதித்திருக்கிறோம்—மத்திய அரசு ஓப்பன் ஜெனரல் லைசென்ஸில் கொண்டு வந்துவிட்டது. இங்கிருக்கிற சட்டங்களை வைத்துக்கொண்டே அதைக் கட்டுப்படுத்தலாம் என்ற முடிவைத்தான் எடுத்திருக்கிறது. அரசாங்கம் வழக்கு போடவில்லை, திரும்ப மீண்டும் பெற்றுக் கொள்ளவில்லை. எந்த அமைச்சரும் ஆணை இடவில்லை. இதில் ஊழல் இல்லை. முப்பது இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ளதை ஆந்திர பிரதேச ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் அனுப்பியது. பாக்கி 25 இலட்சம் பெறுமான முள்ளதைத்தான் மற்றவர்கள் அனுப்பியிருக்கிறார்கள். இன்னும் அந்த வழக்கு சம்பந்தமான கோப்புகள் பரிசீலனையில் இருக்கின்றன என்பதை பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10–40]

இந்தச் செய்தியைப் போட்ட பத்திரிகைகள், இந்த விளக்கத்தை என்னுடைய வேண்டுகோளை ஏற்று கருணைகூர்ந்து எவ்வளவு பெரிய எழுத்தில் போட வேண்டுமோ, அப்படிப் போட வேண்டுமென்று நீங்கள் தெரிவிக்க வேண்டுமென்று பணிவோடு அமைதியாகக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தன்னிலை விளக்கத்தின் மீது எவ்வித விவாதமும் இருத்தல் கூடாது. யாருக்கும் பேச அனுமதி கிடையாது. (குறுக்கீடு).

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : இதைக் கொடுத்த எம்.எல்.ஏ. சபையிலே இல்லாதபோது, வேறு யாராவது சொல்லலாம். தேர் இஸ் சம் பேக்ட்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் தன்னிலை விளக்கத்திற்குப் பிறகு யாரும் பேச விதியில்லை. வேண்டுமானால், தலைவர் பேசலாம். (குறுக்கீடு).

திரு. க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் அனுமதித்தால் நான் விளக்கம் சொல்ல விரும்புகிறேன். தலைவர் அவர்கள் தன்னிலை விளக்கத்தை அனுமதிக்கின்றபோது, இந்த தன்னிலை விளக்கம் சம்பந்தமாக சட்டமன்றத்தில் விவாதத்திற்கு வருகின்றபோது, இப்பிரச்சினை எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாக இருக்குமானால், அது தன்னிலை விளக்கமாக இருக்க முடியாது. தன்னிலை விளக்கம் தந்துவிடுவதாலேயே, அது ஒரு தன்னிலை விளக்கமாக ஆகிவிட முடியாது. சட்டமன்றத்தில் விவாதத்திற்குரிய பிரச்னையாக சொல்லப்படுவதை தன்னிலை விளக்கம் என்பதாகச் சொல்லும்போது, அதற்கு விளக்கம் சொல்லவேண்டிய சூழ்நிலை உருவாகத்தான் செய்யும். தன்னிலை விளக்கம் என்ற பெயராலே எதிர்க் கட்சியிலே உள்ளவர்கள் சொல்லக்கூடிய குற்றச்சாட்டுகள் தவறாக இருந்தால்கூட, அதற்கு மறுப்பு சொல்ல முடியாமல் அது அமைச்சர் விளக்கத்துடன் முடிந்துவிடும் என்பது நியாயமாகாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடிந்துவிட வேண்டுமென்று நான் கட்டளை இடவில்லை என்று நான் பேராசிரியர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் பேசும்போது நாங்கள் தடுத்து விட்டோம், ஆனால் சென்ட்ரல் கவர்ன்மென்ட் ஓ.ஜி.எல். இன் கீழ் அனுமதித்தது என்று சொன்னார்கள். நீங்கள் தடுத்தவுடன், சென்ட்ரல் கவர்ன்மென்டுக்குத் தெரிவித்தீர்களா? அப்படி தெரிவித்திருந்தும், அதை அவர்கள் சேர்த்தார்கள் என்றால்; நீங்கள் ஆட்சேபணை பண்ணிய அந்த க்ரஸ்பான்டென்செல்லாம் இருக்கின்றனவா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மத்திய சர்க்கார், மாநில சர்க்காரின் கரஸ்பான்டென்சை எல்லாம் சொல்ல முடியாது. பேரவைத் தலைவர் அனுமதியின் பேரில் உறுப்பினர் ஒருவர் தன்னிலை விளக்கம் ஒன்றினை பேரவைமுன் பிரச்சினை எதுவும் இல்லை என்றாலும் அளிக்கலாம். ஆனால், அப்போது





சர்ச்சைக்குரிய பொருள் எதையும் கொண்டுவரக் கூடாது, எவ்வித விவாதமும் இருத்தல் கூடாது' என்று நீங்கள்தான் எழுதி வைத்திருக்கிறீர்கள். நான் என்ன பண்ணுவது ?

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தன்மீது சொல்லப்பட்ட குற்றச்சாட்டிற்கு பதிலளிக்க விரும்பினால், அதைத் தன்னிலை விளக்கம் என்ற பெயராலே சொல்வதற்கு அனுமதிப்பது ஏற்றுக்கொள்ள கூடியதல்ல. ஒரு உறுப்பினர் சொன்ன கருத்திற்கு தன்னிலை விளக்கம் என்ற பெயரால் பதில் கூறி அந்தப் பிரச்னையை முடிப்பதென்பது நியாயமான முறையல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதே முறைதான் பார்லிமெண்டிலும் அனுமதிக்கப் பெற்றிருக்கிறது.

திரு. க. அன்பழகன் : தன்னிலை விளக்கத்திற்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் யாருக்கும் ஏற்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பார்லிமெண்டில்கூட, அமைச்சர் இன்டர்வீன் பண்ணி தன்னிலை விளக்கம் கொடுத்தால் அதற்குப் பிறகு யாரையும் பேச அனுமதிப்பதில்லை.

### 4. அறிவிப்புகள்.

(அ) விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்தம், ரத்து) சட்ட முன்வடிவு, 1981 (ஆ.இ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்தம், ரத்து) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

### 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்தம், ரத்து) சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்தம், ரத்து) சட்ட முன்வடிவை'' பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1981 (ஆ, இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1981.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) பொது வக்ஃபுகள் (கால வரையறையை நீட்டித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1981.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பொது வக்ஃபுகள் (கால வரையறையை நீட்டித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.





6. 1980-81 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதி நிலை அறிக்கை.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 1980-81 ஆம் ஆண்டிற்கான துணை மானிய கோரிக்கைகளை அவையில் வைக்க முன் வந்துள்ளேன். வரவு-செலவுத் திட்டத்தில் இடம் பெறாத திட்டங்களுக்கும், கூடுதலாக நிதி ஒதுக்கம் தேவைப்பட்ட இனங்களுக்கும் தேவையான ரூபாய் 50.41 கோடி நிதி ஒதுக்கம் பெற துணை மானியக் கோரிக்கைகள் அவையின் முன் வைக்கப்பட்டுள்ளன. எந்தெந்தத் திட்டங்களுக்கு எவ்வளவு தொகை தேவைப்படுகிறது என்கிற விவரம், இணைக்கப்பட்டுள்ள விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளது. துணை மானிய கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள சில முக்கிய இனங்களை அவை உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டுவர விழைகிறேன்.

2. வரவு-செலவுத் திட்ட உரையில் அறிவித்தவாறு, விவசாயிகளுக்குக் கூட்டுறவு கடன்கள் தொடர்பாக சலுகைகள் வழங்குவதற்கு மத்தியக் கூட்டுறவு சங்கங்களுக்கு ரூபாய் 42 கோடி வழிவகை முன்பணமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு விவசாயக் கூட்டுறவு கடன் சங்கமும், அரசு அளித்துள்ள சலுகைகளினால் பயனடையும் விவசாயிகளின் கணக்குகளில் செலுத்த வேண்டிய தொகைகளின் விவரங்களைச் சேகரித்த பின்னர், இந்த முன்பணம் மானியமாகக் கணக்கில் கொள்ளப்படும். இது தவிர, மத்தியக் கூட்டுறவு வங்கிகள் கடன்களை ஒழுங்காகத் திருப்பிச் செலுத்திய விவசாயிகளுக்குத் தொடர்ந்து கடன் வழங்கும் தகுதி பெறுவதற்காக 7 மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு 22.57 கோடி ரூபாய் முன்பணமாக அனுமதிக்கப்பட்டுள்ளது. இதனால் ஏழை எளிய விவசாயிகள் தொடர்ந்து கடன் பெற ஏதுவாகிச் சிரமங்கள் தவிர்க்கப்படும் என அரசு கருதுகிறது. மின் உற்பத்திக்குத் தேவையான எரி பொருள்களின் விலை உயர்வாலும், விவசாயிகளிடமிருந்து மின் கட்டண வசூலில் பாதிப்பு ஏற்பட்டதாலும், திட்டமிட்ட பணிகளை இவ்வாண்டு மேற்கொள்வதற்கு மின் வாரியத்திடம் போதிய நிதி வசதி இல்லை ; இந்நிலையைத் தவிர்க்க, அரசு மின் வாரியத்திற்கு ,5 கோடி ரூபாய் கடன் வழங்கும்.

3. அரசு இவ்வாண்டு முதல் தீவிரமாகச் செயல் படுத்தி வரும் கிராமத் தன்னிறைவுத் திட்டத்தில், குடிதண்ணீர் வழங்குவது முக்கியமான பகுதியாகும். வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட ரூபாய் 16 கோடியை விட கூடுதலாக ரூபாய் 4 கோடி குடிநீர் வழங்கும் திட்டங்களுக்கு இவ்வாண்டு செலவிடப்படும். ஊராட்சி ஒன்றியங்களின் நிதி நிலைமை திருப்திகரமாக இல்லாத காரணத்தினால் தன்னிறைவு திட்டத்திற்கு பல ஒன்றியங்களால் தங்கள் பங்கைச் செலுத்த இயலவில்லை.

அவைகளுக்கு முன்பணமாக 3.35 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் நடைபெறும் வேலைகளின் தரத்தைந் தணிக்கை செய்ய, தனி தொழில் நுட்பப் பணியாளர் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

4. அண்மையில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டின்போது மதுரை நகரில் பல வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மதுரையில் உள்ள குடிசைப் பகுதிகளில் சாலைகள், பொதுச் சுகாதார வசதிகள் போன்ற இன்றியமையாத வசதிகளுக்கு ரூபாய் 3.11 கோடி செலவு அனுமதிக்கப்பட்டுள்ளது. பெரும் திரளாக வரும் மக்களின் சுகாதார நலனைக் கருதி 84 இலட்சம் ரூபாய் செலவில் கழிப்பிடங்கள் கட்டும் பணிகளும் 24.79 இலட்சம் ரூபாய் செலவில் பொதுச் சுகாதார நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. மதுரை நகரை அழகுபடுத்த, சோடியம் விளக்குகள் 12.25 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டன. இச் செலவினங்களுக்கு மாமன்றத்தின் இசைவை இந்த மானிய கோரிக்கைகளின் மூலம் அரசு கோருகிறது.

5. பி. டி. இராசன் கால்வாயிலிருந்து நில மட்டத்திற்கேற்ற கால்வாய் ஒன்று ரூபாய் 42.12 இலட்சம் செலவில் வெட்டுவதற்கான திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தினால் 1,341 ஏக்கர் நிலங்கள் கூடுதல் பாசனம் பெறும். 48 இலட்சம் ரூபாய் செலவில் பெரியார் அணை வலுப்படுத்தப்படும். கன்னியாகுமரியிலும் சென்னையில் இராயபுரத்திலும் கடல் அரிப்பினால் ஏற்படும் சேதங்களைத் தவிர்க்க முன் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு, இம் மானியக் கோரிக்கையில் ரூபாய் 2·14 கோடி செலவிற்கு அவையில் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

6. சென்னை நகரில், லாரிகளின் போக்குவரத்தினால் ஏற்படும் நெரிசல்களைத் தவிர்ப்பதற்குப் புற நகரில் மூன்று லாரி, பஸ் நிற்கும் இடங்களைத் கட்டுவதற்கு ரூபாய் 3.34 கோடி செலவில் ஒரு திட்டத்தை அரசு வகுத்துள்ளது. பெட்ரோலியப் பொருள்களின் விலை ஏற்றத்தினாலும், மற்ற உறுப்புப் பொருள்களின் விலை ஏற்றத்தினாலும் போக்குவரத்து நிறுவனங்களின் நிதி நிலைமை பாதிக்கப்பட்டது. இதன் காரணமாக, நவம்பர் மாதம் முதல் கட்டணங்களை உயர்த்திய போதிலும், நிதி நிலைமையைச் சீர் செய்ய போக்குவரத்து நிறுவனங்களுக்கு 10.81 கோடி ரூபாய் முன்பணமாக வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகளிடமிருந்து கடன் வசூலிப்பதில் ஏற்பட்டுள்ள தேக்க நிலை காரணமாக, மத்திய ரிசர்வ் வங்கி, விவசாய மறுநிதி வளர்ச்சி நிறுவனம் ஆகியவற்றிடமிருந்து பெற்ற கடன்களைத் தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி திருப்பிச் செலுத்த



இயலாத நிலை ஏற்பட்டது. இக்கடன்களுக்கு உறுதி வழங்கியுள்ளதால் இவ்வங்கிக்கு அரசு 20 கோடி ரூபாய் முன்பணமாக வழங்கியுள்ளது.

7. மானிய கோரிக்கையில் உள்ள சில முக்கிய செலவினங்களை மட்டுமே மேலே சுட்டிக் காட்டியுள்ளேன். மானியக் கோரிக்கையில் அரசு கேட்டுள்ள தொகையை வழங்கி, இத்திட்டங்களுக்கு அனுமதி அளிக்குமாறு அவையை வேண்டி அமருகிறேன்.

[முற்பகல் 10–50]

## 7. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளுநர் உரைக்கு நன்றியுரைக்கும் தீர்மானத்திற்கு திருத்தங்கள் இப்போது மொழியப் பெற்று வழிமொழியப் பெற வேண்டும். பிறகு உறுப்பினர் திரு. பெ. சு. திருவேங்கடம் தன் உரையைத் துவங்குவார்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

இறுதியில் கீழ்க்காணும் திருத்தங்களைச் சேர்த்துக்கொள்ளவும்:—

(1) தமிழ்நாட்டில் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள அனைத்து கடன்களையும், தள்ளுபடி செய்யவேண்டிய அவசியம் பற்றியும் ;

(2) தமிழ்நாட்டில் உள்ள விவசாயிகள் மின் இணைப்பு வேண்டுவோர் 90 நாட்களுக்குள் மோட்டார் வாங்கி பதிவு செய்தால் உடன் இணைப்பு தரலாம் என மின்வாரியம் தாக்கீது கொடுத்து பல்லாயிரம் விவசாயிகள் மோட்டார் வாங்கி பதிவு செய்து மூன்று ஆண்டுகளாக இணைப்பு கிடைக்காமல் அவதியுறும் விவசாயிகளுக்கு உடன் இணைப்பு கொடுக்கப்பட வேண்டிய அவசியம் பற்றியும்

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

திரு. ஐ. பாலன் : நான் அதை வழிமொழிகிறேன்

திரு. இ. பலராமன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

இறுதியில் கீழ்க்காணும் திருத்தங்களைச் சேர்த்துக்கொள்ளவும்:—

(1) மது விலக்குக் கொள்கையை அரசு கொள்கையாக அறிவிக்க வேண்டிய அவசியம் பற்றியும் ;

(2) வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் மற்ற பகுதிகளில் தீவிர இயக்கமாக இயங்கும் நக்சலைட் இயக்கத்தை ஒழிக்க அரசு தீவிர நடவடிக்கை மட்டும் எடுத்து, அப்பகுதி இளைஞர்களுக்கும் மற்ற வேலைவாய்ப்பு இல்லாதவர்களுக்குத் தொழில் வாய்ப்பு அளிக்கப்பட வேண்டிய அவசியம் பற்றியும் ;

(3) வட ஆற்காடு மாவட்டம் முழுவதும் வறட்சிப் பகுதியாக அறிவிக்கப்பட வேண்டிய அவசியம் பற்றியும் ;

(4) விவசாய பிரச்சனைக்கு முழுமையாக தீர்வு காண வேண்டிய ஆலோசனைகளைப் பற்றியும் ;

(5) சென்னை பி. & சி. மில் பிரச்சனையை தீர்க்க தகுந்த நடவடிக்கைகள் மாநில அரசு எடுக்க வேண்டிய அவசியம் பற்றியும் ;

(6) கிராம அதிகாரிகளைத் திடீரென்று நீக்கம் செய்த காரணத்தினால் மிகவும் அவதிப்படும் அவர்கள் குடும்பங்களுக்கு நிவாரணம் அளிக்கப்பட வேண்டிய அவசியம் பற்றியும் ;

(7) லட்சோப லட்சம் படித்த பட்டதாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் தொழில் கொள்கையைப் பற்றி அறிவிக்கப்படவேண்டிய அவசியம் பற்றியும்

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

திரு. எம். எஸ். வி. சித்தன் : நான் அதை வழிமொழிகிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்—.





இறுதியில் கீழ்க்காணும் திருத்தங்களைச் சேர்த்துக் கொள்ளவும்:—

(1) பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதியில் நிலவும் கடும் வறட்சி பற்றியும் ;

(2) விவசாயிகளின் கிளர்ச்சியின்போது சுடப்பட்டு உயிர் நீத்த விவசாயிகள், காவலர்கள் பற்றியும்

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத் தக்கது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : நான் அதை வழிமொழிகிறேன்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

இறுதியில் கீழ்க்காணும் திருத்தங்களைச் சேர்த்துக் கொள்ளவும்.—

(1) அண்ணாமலை பல்கலைக் கழகத்தை அரசு ஏற்று நடத்தப்பட வேண்டிய அவசியம் பற்றியும் ;

(2) விலைவாசி ஏற்றத்தைத் தடுக்க வேண்டிய அவசியம் பற்றியும்

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத் தக்கது.

திரு. சு. பாலன் : நான் அதை வழிமொழிகிறேன்.

திரு. டி. மணி : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

இறுதியில் கீழ்க்காணும் திருத்தங்களைச் சேர்த்துக் கொள்ளவும்—

(1) தமிழகத்தில், குமரி மாவட்டத்தில் 100-க்கும் அதிகமான முந்திரி தொழிற்சாலைகளில் பணிபுரியும் சுமார் 50,000-க்கும் அதிகமான முந்திரி தொழிலாளர்கள் கடந்த 6 மாதங்களாக வேலை இல்லாத நிலைமையைக் குறித்தும், அரசுக்கு அதிகமான அந்நிய செலாவணி கிடைக்கக் கூடிய ஒரு முக்கியமான தொழிலில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு, மேற்படி வேலை இல்லாத காலங்களுக்கு நிவாரணம் கிடைக்கச் செய்ய வேண்டிய அவசியம் பற்றியும் ;

**(2) தமிழகத்தில்**, குறிப்பாக குமரி மாவட்டத்தில் கடந்த **8 மாதங்களாக** கடலோரப் பகுதியில் மீன்களை நம்பி வாழும் **மீனவ மக்களுக்கு** சரிவர மீன் கிடைக்காத காரணத்தால் இன்று **தொழில் மந்தம்** ஏற்பட்டு, தொழிலாளர்கள் பட்டினி கிடப்ப **தால் அப்பகுதியினை** ' வறட்சிப் பகுதியாக ' அறிவிக்க வேண்டிய **அவசியம் பற்றியும்** ;

**(3) தமிழகத்தில், விளவங்கோடு** தாலுகாவில் தென்மேற்குப் **பகுதியிலுள்ள** கொல்லங்கோடு கிராமம், விளவங்கோடு கிராமம், குன்னத்தூர் இன்னும் சில கிராமங்களில் கடந்த ஆண்டும், இந்த ஆண்டும் நிலங்களுக்கு நீர்ப்பாசனம் சரிவரக் கிடைக்காத தால் அப்பகுதி சிறு விவசாயிகளின் பயிர்கள் தீய்ந்துவிட்ட காரணத்தால் அப்பகுதியினை வறட்சிப் பகுதியாக அறிவிக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றியும் ;

(4) குமரி மாவட்டத்தில் அரசு ரப்பர் தோட்டத்தில் பணி புரியும் தொழிலாளர்கள் மூலம் கோடிக்கணக்கான வருவாய் **ஆண்டுதோறும் கிடைத்தும், அத்தொழிலாளர்களுக்கு இது வரையிலும் போனஸ் பிரச்சினையில் அரசு கவனம் செலுத்தாதது பற்றியும்**

**ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத் தக்கது.**

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : நான் அதை வழிமொழிகிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

இறுதியில் கீழ்க்காணும் திருத்தங்களைச் சேர்த்துக் கொள்ள வும்—

(1) மதுவிலக்கு சம்பந்தமாக அரசு நிலையான கொள்கையை அறிவிக்கவேண்டியதின் அவசியம் பற்றியும் ;

(2) விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்சக் கூலி சம்பந்தமான சட்டத்தை அமுல் நடத்துவதற்கு தகுந்த நட வடிக்கைகள் எடுக்க அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றியும் ;

(3) மத்திய அரசு அரிசன மக்களுக்கு வழங்கிய தொகையை கொண்டு வீடு கட்டும் திட்டத்தை செயல்படுத்த அரசு தெரி விக்காதது பற்றியும் ;





**(4) மின்சாரத் துறையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று அரசு உத்தரவை ஓராண்டு காலமாக அமுல் செய்யாமல் இருக்கும் விஷயத்தைப் பற்றியும்**

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத் தக்கது.

திரு. சி. பழனிமுத்து : நான் அதை வழிமொழிகிறேன்.

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

இறுதியில் கீழ்க்காணும் திருத்தங்களைச் சேர்த்துக் கொள்ள வும்—

(1) படித்த பட்டதாரிகளுக்கு மாதம் ரூ. 50 கொடுக்கப்பட வேண்டிய அவசியம் பற்றியும் ;

(2) கர்ப்பிணிகளின் ஊட்டத்திற்காக மாத மாதம் நிதி உதவி அளிக்கப்பட வேண்டிய அவசியம் பற்றியும்

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

திரு. என். இட்டப்பா : நான் அதை வழிமொழிகிறேன்.

*திரு பெ.. சு திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர் களே. ஆளுநர் உரையின் மீது திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களை நான் சொல்ல விழை கிறேன். மகாகவி பாரதியார், " உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் " என்று சொன்னார். ஆனால் இன்றைய தினம் ஆட்சியாளர்கள் ஏதோ ஜனநாயக நாட்டில் தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தி அகிம்சா முறையிலே எந்தவித மான போராட்டத்தையோ அல்லது எந்தவிதமான அறவழிப் போராட்டத்தையோ நடத்தக்கூடாது என்ற ஒருநிலையை ஏற்படுத்தித் தமிழகத்திலே பல்வேறு இடங்களிலே அராஜக முறை யிலே போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து, பல்வேறு விவசாய மக்கள் உயிரிழந்து இருக்கிறார்கள் பல்லாயிரக்கணக் கான விவசாயிகள் சிறையிலே அடைக்கப்பட்டார்கள் : பல நூற்றுக் கணக்கான குடும்பங்களின் பண்ட பாத்திரங்கள் உடைக்கப் பட்டன. இப்படிப்பட்ட ஒரு அராஜக நிலைமையைப்பற்றி ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருக்க வேண்டும், நாங்களும் எதிர் பார்த்தோம், ஆனால் அதுபற்றிக் குறிப்பிடப்படவில்லை அந்த நான் கண்டிக்க விரும்புகிறேன்.

[திரு. பெ. சு. திருவேங்கடம்] [1981 ஜனவரி 27]

இன்றைய தினம் விவசாயிகளை வந்தனை செய்யவில்லை என்றாலும் கூட நிந்தனையாவது செய்யாமல் இருக்கலாம். மகாராஷ்டிரத்திலே போராட்டம் நடைபெறவில்லையா என்று கேட்கிறார்கள். மகாராஷ்டிரத்திலே நடப்பதற்கும் தமிழ்நாட்டிலே நடப்பதற்கும் பல வேறுபட்ட காரணங்கள் இருக்கின்றன.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

தமிழ்நாட்டில் நீங்கள் தேர்தலுக்கு முன்பு விவசாயத் தலைவர்களைச் சந்தித்திருக்கிறீர்கள்; எங்களுக்கு வாக்களியுங்கள் அல்லது ஆதரவாக இருங்கள்; நீங்கள் சொல்லுகின்ற எல்லா கோரிக்கைகளையும் நாங்கள் நிறைவேற்றித் தருகிறோம் என்று வாக்குறுதி அளித்தீர்கள். உங்கள் வாக்குறுதியை நம்பி விவசாயிகள் உங்களுக்குப் பேராதரவு அளித்தார்கள்; நீங்கள் ஆட்சிக்கு வந்தீர்கள். ஆனால் ஆட்சிக்கு வந்த பிறகு, முன்னர் விவசாயிகளிடத்திலே நீங்கள் என்ன சொன்னீர்களோ அதை மறந்து விட்டீர்கள். உங்களால் ஏமாற்றப்பட்ட விவசாயிகள் இன்றையதினம் அவர்களுடைய ஏமாற்றத்தை வெளிப்படுத்தும் வகையில் அறவழியில் பந்த் நடத்தினார்கள். துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்ற இடங்களில் பார்வையிடுவதற்காக திராவிட முன்னேற்றக் கழகத்தால் அனுப்பப்பட்ட குழுவிலே சென்று நானும் பார்த்தேன். அங்கெல்லாம் விவசாயிகள் வன்முறையில் ஈடுபட்டிருக்கவில்லை; துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற வேண்டிய அவசியமே இல்லை. ஆனாலும்கூட வேண்டுமென்றே போலீசார், திட்டமிட்டே, இந்த அரசாங்கம் எப்படி விவசாயிகளை அடக்க வேண்டும் அல்லது அந்த விவசாயிகளை தொந்தரவு செய்ய வேண்டுமென்று சொன்னார்களோ அதைப்போல எல்லா இடங்களிலேயும் ஓரேமாதிரியான அடக்குமுறை, காட்டு தர்பார் நடைபெற்றிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கேகூட நேற்றையதினம் நம்முடைய ஆளுநர் அவர்கள் சுதந்திர தினத்தில் தியாகிகளுக்கு விருந்து கொடுத்து நாட்டியம் நடத்தியிருக்கிறார்கள். அது பாராட்டப்பட வேண்டிய ஒன்று. ஆனால் நான் சென்ற வெள்ளாகுளம் என்ற இடத்தில் எங்கம்மாள் என்ற சுதந்திரத்திற்காகப் போராடிய ஒரு மூதாட்டி இருக்கிறார்கள்; அவர்கள் இரண்டு முறை, ஆகஸ்ட் போராட்டத்திலேயும் தனி நபர் சத்தியாக்கிரகப் போராட்டத்திலேயும் கலந்து கொண்டு பல மாதங்கள் சிறை சென்று, அரசாங்கத்தால் தாமரைப் பட்டயம் வழங்கப்பட்டவர்கள். அவர்கள் தன்னுடைய இல்லத்தை எங்களுக்குக் காட்டினார்கள். அங்கிருந்த பண்ட பாத்திரங்கள் நல்லமுறையில் இல்லை, அவை அத்தனையும் அடித்து நொறுக்கப்பட்டிருக்கின்றன; கதவுகளில் ஜன்னல்கள் இல்லை; கதவுகள் உடைக்கப்பட்டிருந்தன. ரேடியோ உடைக்கப்பட்டிருக்கின்றது. கண்ணீர் விட்டுக்கொண்டே அந்த மூதாட்டி சொன்னார்கள், இதற்காகவா நாங்கள் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டோம் என்று சொன்னார்கள். எனவே இதிலிருந்து இந்த அரசாங்கம் கிராமங்களில் உள்ள தாய்மார்களை விவசாயிகளை சுதந்திர தியாகிகளை எந்த அளவிற்கு மதிக்கிறது என்பதை நிலைநாட்ட இதையே எடுத்துக்காட்டாகச் சொல்ல விரும்புகிறேன்.





பண்ருட்டி தொகுதியில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகமானாலும் சரி, திருத்தணிக்கு அருகில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகமானாலும் சரி, குறிஞ்சாகுளம் பகுதியில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகமானாலும் சரி, போலீசார் வேண்டுமென்றே இப்படிப்பட்ட ஒரு அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறார்கள். எதிர்காலத்திலேயும் இப்படியே நடந்து கொண்டால் நிச்சயமாகப் பொதுமக்கள் அதைத் தாங்கிக் கொள்ள மாட்டார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்திலே, இன்னொன்றையும் நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகின்ற அளவிற்கு உற்பத்திப் பொருட்களுக்கு விலை தரப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். தேவையான உரங்களை மலிவான விலைக்குத் தரப்போகிறோம் என்று சொல்கிறீர்கள். இப்படி நீங்கள் ஒவ்வொரு முறையும் பட்ஜெட் உரையிலும் சரி கவர்னர் உரையிலும் சரி பல்வேறு கருத்துக்களைச் சொல்லிவிட்டு, பிறகு அதையே மறந்துவிட்டு, வருகின்ற ஆண்டுகளில் இன்னொரு கருத்தைச் சொல்வது என்ற முறையில் இப்படிப் பொதுமக்களை ஏமாற்றிக்கொண்டிருக்கிறீர்கள்.

[முற்பகல் 11-00]

விவசாயிகளுக்குச் சொல்லியதைச் செய்வதற்கு நீங்கள் நிச்சயமாகத் தயாராக வேண்டும்.

அதே நேரத்தில் இன்னொன்றையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைய தினம் விவசாய சங்கத்தினுடைய தலைவர் அவர்கள் விடுதலை ஆன பிறகு சொல்லியிருக்கிறார்கள். அரசாங்கம் அழைத்தால் நான் வருவதற்குத் தயாராக இருக்கிறேன். சுமூகமான முறையிலே பல பிரச்சினைகளைப் பேசித் தீர்க்கலாம் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆனால் அதற்காகக் கூட நீங்கள் அழைத்ததாகத் தெரியவில்லை. என்னுடைய தொகுதியான கலசபாக்கம் போளூர், திருவண்ணாமலை பகுதியில்

[திரு. பெ. சு. திருவேங்கடம்] [1981 ஜனவரி 27

ஏதோ இராணுவ ஆட்சி நடைபெறுவதைப் போல், மின் கட்டணம் கட்டாத ஒன்றிரண்டு கிராமங்களில் கூட, 30, 40 லாரிகளில், 3,000, 4,000 போலீசார், மின் இலாகா அதிகாரிகளோடு சென்று, இராணுவ முகாம் போல, அந்தக் கிராமத்திலே முகாமிட்டு, பல்வேறு கிராமங்களிலே, டிரான்ஸ்பார்மர்களை எடுத்துக் கொண்டு சென்றிருக்கிறார்கள். விவசாயிகளது மின் இணைப்புகளைத் துண்டித்திருக்கிறார்கள். இதிலே இன்னொரு வேடிக்கை என்னவென்றால், மின் கட்டணம் கட்டிய விவசாயினுடைய இணைப்பைக் கூட அதிகாரிகள் துண்டித்து விட்டுச் செல்கிறார்கள். பிறகு கேட்டால் நாங்கள் வந்து இணைப்பு தருகிறோம் என்று சொல்கிறார்கள். அப்படிப் பட்ட நிலைமைகள் இன்றைய தினம் இருந்து கொண்டிருக்கின்றன. நீங்கள் விவசாயிகளைப் பகைவர்களாகக் கருதுகிறீர்கள். அவர்களைப் பகைவர்களாகக் கருத வேண்டியதில்லை. அவர்களுடைய பிரச்சினையை நல்ல முறையிலே தீர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஆட்சிக்கு வந்தவுடனே சொன்னீர்கள், 90 நாட்களுக்குள் மோட்டார் வாங்கினால் உடனே, மின் இணைப்பு தருவேன் என்று சொன்னீர்கள். ஏமாந்த பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் இன்றைய தினம் மின் மோட்டாரை வாங்கி தன்னுடைய திண்ணையிலே வைத்திருக்கிறார்கள். மின் இணைப்பு எங்கே, எங்கே என்று என்னைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களைக் கேட்கிறார்கள். அப்படிப்பட்ட பிரச்சினையைப் பற்றி ஆளுநர் உரையிலே சொல்லியிருக்கலாம். அது பற்றி ஒன்றும் சொல்லவில்லை. அவர்களுக்கு உடனடியாக, மின் இணைப்பு கிடைப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். விவசாயிகள் இன்றைய தினம் மின் மோட்டாரை வாங்கி வைத்துக் கொண்டு அல்லல் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று இன்றைய தினம் வடஆர்க்காடு மாவட்டத்திலே மிகக் கடுமையான வறட்சி நிலவுகிறது. ஆளுநர் உரையிலே கூட அதைப் பற்றிச் சொன்னார்கள். ஏறக்குறைய செப்டம்பர் மாதத்திலிருந்து மிகக் கடுமையான வறட்சி வடஆர்க்காடு மாவட்டத்திலும் சரி, மற்றும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் சரி நிலவிக் கொண்டிருக்கிறது. 40 ஆண்டுக் காலத்திலே அப்படிப்பட்ட ஒரு வறட்சியை வடஆர்க்காடு மாவட்டம் சந்தித்ததில்லை. குறிப்பாக, திருவண்ணாமலை, போளூர், கலசப்பாக்கம் பகுதியிலே பயங்கரமான வறட்சி நிலவுகிறது. இது பற்றி செப்டம்பர் மாதத்திலே முதலமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதினேன். வடஆர்க்காடு மாவட்டத்திலே பயங்கரமான வறட்சி இருக்கிறது. குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லை. சப்பா பயிர் தீய்ந்து விட்டது. விவசாயிகள் பம்ப் செட்களை விற்று பயிரிட்டார்கள். ஆனால், அந்தப்



1981 ஜனவரி 27] [திரு. பெ. சு. திருவேங்கடம்]

பயிர்கள் கூட, மழையில்லாத காரணத்தாலே, பயிர் விளையவில்லை. இதனால், இலட்சக்கணக்கான ரூபாய்களை இழந்து விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக வறட்சி நிவாரணப் பணி மேற்கொள்ள வேண்டுமென்று முதலமைச்சருக்கும், விவசாயத் துறை அமைச்சருக்கும் குடிநீர் வடிகால் வாரியம், மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் கடிதம் அனுப்பியிருக்கிறேன். முதலமைச்சர் அலுவலகத்திலிருந்து மட்டும் ஒரு பதில் கடிதம் வந்தது. அதுபற்றி அதிகாரிகள் விரைவாக நடவடிக்கை எடுப்பார்கள் என்று பதில் வந்திருக்கிறது. இது வரையிலே, பத்திரிகைகளிலும் வானொலியிலும் வேண்டுமானால், ஏதோ வடஆர்க்காடு மாவட்டத்திற்கு இத்தனை இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். நூற்றுக்கணக்கான பணிகள் நடைபெறும் என்று விளம்பரங்கள் வருகின்றனவே தவிர, நடைமுறையிலே எந்தவிதமான நிவாரணப் பணியும் நடைபெறவில்லை என்பதை நான் மெத்த வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன்.

வடஆர்க்காடு மாவட்டத்தில் ஏலகிரி, ஜவ்வாது மலை போன்ற பல மலைப் பகுதிகள் இருக்கின்றன. அங்கெல்லாம் குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லாமல் மக்கள் அவதிப்படுகிறார்கள். விவசாயத்தையே நம்பி வேலை செய்து கொண்டிருக்கின்ற மலைவாழ் மக்களும், கீழே இருக்கிற விவசாய மக்களும், விவசாய வேலை செய்து கொண்டிருக்கிற அரிசன மக்களும், இன்றைய தினம் எந்தவிதமான வேலையும் கிடைக்காத காரணத்தால் தங்களுடைய அன்றாட உணவுக்குக் கூட வழியில்லாத நிலையிலும், இன்றைய தினம் இந்த மாநிலத்தை விட்டே, பல்வேறு மாநிலங்களுக்கு பிழைப்பைத் தேடி பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் ஒவ்வொரு நாளும் சென்று கொண்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே நினைவுறுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆனால், ஆட்சியாளர்கள் அதைப் பற்றி சிந்தித்ததாகவே தெரியவில்லை. நான்கூட, மாவட்ட ஆட்சித் தலைவர், மற்றும் அதிகாரிகளைச் சந்தித்துச் சொல்லும்போது, ஏனோ, தானோ என்று பதில் சொல்கிறார்களே தவிர, எந்த கவனமும் செலுத்துவதாகத் தெரியவில்லை. இதற்கு முன் வறட்சி, அல்லது இயற்கையின் சீற்றங்கள், அல்லது வெள்ளம் அல்லது புயல் ஏதாவது வந்தால், அரசாங்கம் எந்த அளவுக்குச் சுறுசுறுப்பாகப் பணியாற்றின என்பதை நாங்கள் எல்லாம் கண்கூடாகக் கண்டவர்கள். ஆனால், இன்றைய தினம் அரசாங்கம் மிக மெத்தனமாக இருக்கிறது. ஒவ்வொரு கிராமத்திலும் தண்ணீர் இல்லாத பயங்கரமான சூழ்நிலையிருக்கிறது. குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக அப்பகுதிகளுக்குக் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்தார்கள். இப்பொழுது அதெல்லாம் இல்லை. ஏற்கனவே நாங்கள் ஆட்சியிலிருந்த காலத்தில், அம்மாதிரி வறட்சி நேரங்களில், கைப்பம்புகள்

அமைத்துத் தந்திருக்கிறார்கள். பவர் பம்புகள் அமைத்துத் தந்திருக்கிறார்கள். இப்பொழுது பம்புகள் பழுதடைந்து விட்டால் ரிப்பேர் செய்கின்ற பணியே நடைபெறுவதில்லை. அது கை பம்புகளாக இருக்கட்டும், பவர் பம்புகளாக இருக்கட்டும், ரிப்பேர் செய்வதில்லை. கிராமங்களிலே இருககிற மக்கள் குடிப் பதற்குக் கூட தண்ணீர் இல்லாத ஒரு சூழ்நிலையில் மிகவும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அதே போன்று ஒரே நாளில் திடீரென்று கிராம அதிகாரிகளை வேலை விட்டு நீக்கி விட்டீர்கள். அதிலே எத்தனையோ பேர்கள் ஏழை எளியவர்கள், சாப்பாட்டிற்குக் கூட கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கிறவர்கள். ஆயிரக்கணக்கான பேர்கள் இருக்கிறார்கள். இன்றைய தினம் கிராமங்களில் உள்ள நிர்வாகம் ஸ்தம்பித்துக் கொண்டிருக்கின்றது. கிராமங்களில் உள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான பல லட்சக்கணக்கான மரங்கள் ஆங்காங்குள்ள பொது மக்களால் வெட்டி எடுத்துச் செல்லப் படுகின்றன. கேட்பதற்குக் கூட நாதி இல்லை என்ற நிலைமை இருக்கின்றது.

அது மட்டுமல்ல, இன்றைய தினம் கிராமங்கள் இருண்ட சூழ்நிலையிலே இருக்கின்றன. தெரு விளக்குகள் எறிவதே இல்லை. நான் ஊராட்சி மன்றத் தலைவராக இருந்த நேரத்தில் 1962 ஆம் ஆண்டு அங்கே விளக்குகளை ஏற்றுகின்ற பணியினைச் செய்தேன். அன்றைய தினம் பேரறிஞர் அண்ணா அவர்களை அழைத்து அந்தப் பணியினை செய்யச் செய்தேன். அப்போது அண்ணா அவர்கள் பெருமிதத்தோடு சொன்னார்கள், "இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொள்வதிலே மெத்த மகிழ்ச்சி அடைகிறேன். இருளைப் போக்கி ஒளியைத் தருகின்ற இந்த விழாவிலே கலந்து கொள்வதிலே பெருமகிழ்ச்சி அடைகிறேன்." என்று சொன்னார்கள். இன்றைய தினம் கலசபாக்கம் தொகுதி மட்டும் அல்ல, வடார்க்காடு மாவட்டம் முழுவதையும் இருளடையச் செய்து விட்டார்கள். இன்றைய தினம் ஒளியைப் போக்கி இருளை கிராமங்களிலே உண்டாக்கி இருக்கிறீர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது).

அதே போன்று, இன்றைய தினம் வடார்க்காடு மாவட்டத்தின் தன்னிறைவுத் திட்டப்பணி கிராமங்களிலே நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. ஆனால் அந்தப் பணி சரிவர நிறை வேற்றவில்லை. மழை இல்லாத காரணங்களினாலே எங்கள் பகுதியிலே ஸ்தம்பித்து இருக்கிறது. அதேபோன்று உணவுக்கு வேலை என்கின்ற அந்த வேலையிலே, சரியான முறையில் நீங்கள் பயன்படுத்துவீர்களேயானால், கிராமங்களிலே இருக்கின்ற மக்களைக் காப்பாற்றலாம். அதுவும் இப்போது சரியாக





இல்லை. ஏராளமான இடைத் தரகர்கள் அந்த அரிசிகளை எடுத்துச் செல்லுகின்ற நிலைமைதான் இன்றைய தினம் இருந்து கொண்டிருக்கிறது.

நிர்வாகச் சீர்கேடுகள் மாவட்ட அளவிலேயானாலும் சரி, ஒன்றியங்கள் அளவிலேயானாலும் சரி அதிகமாகிவிட்டு இருக் கின்றன. அவைகளிலே நீங்கள் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லி, விவசாயிகள் பிரச்சினை குறித்து ஆளுநர் உரையிலே குறிப்பிடாததைக் கண்டித்து முடிக் கிறேன். நன்றி. வணக்கம்.

*திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் பேருரைக்கு நன்றி தெரிவித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச்சொல்ல விரும்புகிறேன். பழம் பெருமையும், வரலாற்றுச் சிறப்பும் கொண்ட மதுரை மாநகரத்தில் உலகத் தமிழ் மாநாடு மிகச் சிறப்பாக 7 நாட்கள் நடந்து முடிந்தது. தமிழர்களுடைய நாகரிகத்தையும் வரலாற்றுச் சிறப்பையும் தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பையும் உலகுக்கு உணர்த்துகின்ற வகையிலேயும் தமிழ் மக்களைத் தட்டி எழுப்பி, புத்துணர்வு ஊட்டுகின்ற முறையிலேயும் அந்த மாநாட்டை நடத்தி முடித்த நம்முடைய புரட்சித் தலைவருக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். தமிழ்நாட்டு மக்கள் மட்டுமல்லாமல், மாநாட்டிலே வந்திருந்த தமிழ் அறிஞர்களும், பலநாட்டு மேதைகளும், பலநாட்டு அமைச்சர் பெருமக்களும் மனம் குளிர கண்டு கேட்டு களித்தார்கள். அந்தப் பெருமக்கள் அத்தனைபேர்களும் நம்முடைய முதல்வரைப் பாராட்டினார்கள். அரசியல் வேறுபாடு இல்லாமல் அனைத்துக் கட்சி அரசியல் தலைவர்களும் அந்த மாநாட்டில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றி அரசையும் முதல்வரையும் பாராட்டினார்கள். சிலபேர் அந்த மாநாட்டைப் பற்றிக் குறை கூறினாலும் கூட, யார் மனம் குளிர்ந்து வாழ்த்த வேண்டுமோ அத்தனை பேர்களும் வாழ்த்துத் தெரிவித்தார்கள்.

குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், அங்கே வந்த புலவர் குழுவைச் சேர்ந்த 49 புலவர் பெருமக்களும், அந்தப் புலவர் குழுவிற்குத் தலைமை தாங்கி அமைப்பாளராக இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிற முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவ நாதம் அவர்களும் வாழ்த்துத் தெரிவித்தார்கள். நாம் அத்தனை பேர்களும் வாழ்த்துகிறோம். அரசியல் ரீதியாக வாழ்த்துகிறோம். ஆனால் புலவர் பெருமக்கள் வாழ்த்துவது சாதாரண காரியமாக நான் நினைக்கவில்லை. அத்தனை பேர்களும் வாழ்த்தியதற்கு மேலாக அந்த மாநாட்டிலே முத்தமிழ் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் மூன்று முறை நான் சொல்வேன். நீங்கள்

அனைவரும் வாழ்க என்று கோஷமிடவேண்டும் என்று மக்களைப் பார்த்துக் கேட்டார்கள். அதேபோல அவர்கள் தமிழையும், தமிழ்மொழியின் சிறப்பையும் சொல்லி, மூன்றாவதாக புரட்சித் தலைவர் என்று அவர் வாயாலே சொல்ல, அங்கே கூடியிருந்த லட்சக்கணக்கான மக்கள் 'வாழ்க' என்று விண்ணதிர அந்த முழக்கத்தை அங்கே செய்தார்கள். அப்படிப்பட்ட ஒரு பெருமையும், சிறப்பும் நம்முடைய முதல்வர், புரட்சித் தலைவருக்குக் கிடைத்திருக்கிறது என்று சொன்னால் அது சாதாரண காரியம் என்று என்னாலே நினைக்க முடியவில்லை.

[முற்பகல் 11-10]

அங்கே தேவநேயப் பாவாணர் சரியாகப் பேச முடியவில்லை என்றாலும் மிகச் சிறப்பாகப் பேசினார்கள். தன்னுடைய ஆராய்ச்சிக் கருத்துக்களை ஒரு மணி நேரத்திற்கும் மேலாக எடுத்து வைத்துப் பேசினார்கள். அத்தனை பேரும் மயங்கி நிற்கிற நிலையில், அத்தனை பேரும் மனம் குளிரும் நிலையில் ஒரு மணி நேரம் அழகாக அவருடைய கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அப்படிப்பட்ட சிறப்பான ஒரு மாநாட்டைத் தமிழகத்தில் இரண்டாவது தடவையாகப் புரட்சித் தலைவர் தலைமையில் நடந்து இருக்கிறது என்று சொன்னால் அது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். அதற்கும் மேலாக, சனவரி மாதம் 10ஆம் தேதி மாநாட்டின் கடைசி நாளான அன்று- இந்தியப் பிரதமர் வருகை தந்து, நம்முடைய நாட்டில் உள்ள மக்கள் எல்லாம் எதிர்பார்த்து இருந்த இந்தி மொழி திணிப்பு இல்லை என்ற வாக்குறுதியை மீண்டும் கொடுத்தார்கள். அப்படிக் கொடுத்ததன் வாயிலாக நம்முடைய மறைந்த மாமேதை நேருவின் உறுதிமொழிக்கு மீண்டும் வலிவு கொடுத்ததாக அது அமைந்து இருக்கிறது என்பதால் அதை நம்மால் பாராட்டாமல் இருக்க முடியாது. அந்த அம்மையார் அவர்கள் அந்த உறுதி மொழியை உரிய நேரத்தில் கொடுத்ததற்காக தமிழக மக்களின் சார்பாக நான் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதுமட்டுமல்ல. அங்கே கூடியிருந்த 30 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் எந்தவிதமான குழப்பமும் இல்லாமல் மாநாடு நடைபெற உதவி செய்து இருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிற போது, அதற்காக அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டு இருக்கிறேன்.

அந்த மாநாட்டின் மூலமாக சில உண்மைகளை நாம் புரிந்து கொள்ள முடிந்தது. அங்கே வந்திருந்த அத்தனைபேரும், இப்போது தமிழகத்தைப் பொறுத்த வரையில் எல்.கே.ஜி., யு.கே.ஜி. என்று பள்ளிகளில் வைத்து அங்கே ஆங்கிலம் மட்டும் பயிற்றுவிப்பது என்கிற ஒரு விஷக்கொடி வளர்ந்து இருக்கிறது என்பதை



எடுத்துச்சொன்னார்கள். இந்த நிலை மாற்றப்பட வேண்டுமானால், இந்த எல்.கே.ஜி., யு.கே.ஜி. என்ற வகுப்புகளில் மட்டுமல்லாமல், குறைந்த பட்சம் 5வது வகுப்பு வரை தமிழ் மட்டுமே பயிற்சிமொழியாக இருக்கவேண்டும் என்கிற முறையில் திட்டங்களை வகுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கல்வி அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல், இங்கே தமிழகத்தில் மாநாடு நடத்திக் கொண்டு இருந்த நேரத்தில்—புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் மாநாடு நடைபெற்றுக்கொண்டிருக்கிற அதேநேரத்தில்—தன்னுடைய தொண்டை தமிழுக்காகச் செய்து கொண்டு இருக்கும் அதே நேரத்தில்—அமெரிக்காவில் உள்ள அரிசோனா பல்கலைக்கழகம் புரட்சித் தலைவர் அவர்களுக்கு டாக்டர் பட்டம் கொடுத்துக்கொண்டு இருக்கிறது. தன்னுடைய தொண்டை எவன் ஒருவன் சரியாகச் செய்து கொண்டு இருக்கிறானோ அவனைத் தேடி பட்டங்கள் வரும் என்பதற்குச் சான்றாக இது அமைந்து இருக்கிறது. பலபேர் பட்டங்களுக்காக, பதவிகளுக்காக அலைந்து கொண்டு இருக்கும் இந்த நேரத்தில், கேட்காமலேயே 3,000 மைல்களுக்கு அப்பால் இருக்கும் அமெரிக்கப் பல்கலைக் கழகம் அப்படிப்பட்ட பட்டத்தை அளித்துக்கொண்டு இருக்கிறது என்பதற்காக அந்தக் பல்கலைக் கழகத்திற்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இந்த ஆண்டு மழை பொய்த்து விட்டது. முதல்போகம் யாரும் அறுவடை செய்யவில்லை. கார்த்திகை மாதம் கொஞ்சம் மழை பெய்தது. அந்த மழையும் சரிவர இல்லாததால், இரண்டாம் போகம் அறுவடை செய்யமுடியாமல் இருக்கிறது. குறைந்த பட்சம் 25 சதவீதம் கூட அறுவடை நடைபெறவில்லை. அது மட்டுமல்ல. புதுக்கோட்டை மாவட்டத்திலும், வடாற்காடு மாவட்டத்திலும், பயிர்கள் சாவியாகிவிட்டது. அறுவடை செய்யப்படவில்லை, மகசூல் கிடைக்கவில்லை என்ற காரணத்திற்காக, அந்த இரண்டு மாவட்டங்களையும் வறட்சி மாவட்டமாக அறிவித்து இந்த ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலைக்கு எந்த விதத்திலும் மாறுபடாமல் என்னுடைய செங்கற்பட்டு மாவட்டம் இருக்கிறது. என்னுடைய மாவட்டத்தில் பஞ்சம் தலைவிரித்தாடும் நிலை இருக்கிறது. ஆகவே, செங்கற்பட்டு மாவட்டத்தையும் வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் 25 சதவீதத்திற்குக் குறைவாக அறுவடை உள்ள இடங்களில் நில வரியை ரத்து செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முக்கியமாக என்னுடைய மாவட்டத்தில் வடபகுதியாக இருக்கும் திருத்தணி, கும்மிடிப்பூண்டி, திருவள்ளூர் போன்ற இடங்களில் மணிலா செழிப்பாக இருக்கும் என்று எதிர்பார்த்தோம்.

ஆனால் கடந்த 20 நாட்களாக அந்தப் பயிர்களில் பூச்சி விழுந்து கருகி பாழாகிக்கொண்டு இருக்கும் நிலைமை இருக்கிறது. அதைக் காப்பாற்றித் தரும் பொறுப்பை வேளாண்மைத் துறை அமைச்சர் மேற்கொண்டு, அதற்காக அக்கரை செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

செங்கற்பட்டு மாவட்டத்தில் மேலும் ஒரு சர்க்கரை ஆலை ஆரம்பிக்கப் போவதாக இருப்பதை அறிந்து நாங்கள் அத்தனை பேரும் அதை வரவேற்று, வாழ்த்தக் கடமைப்பட்டு இருக்கிறோம்.

எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் படாலம் சர்க்கரை ஆலையிலிருந்து கிடைக்கும் சக்கையைப் பயன்படுத்தி காகித ஆலை ஏற்படுத்த உத்தேசம் இருக்கிறது. அதை விரைவிலே பூர்த்தி செய்து தரவேண்டுமென்று இந்த அரசை கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்களுடைய மாவட்டத்திலே மேலும் ஒரு பெரிய குறை என்னவென்றால் அங்கே இருக்கிற அரசிதழ் பதிவு பெறாத ஊழியர்கள் எச். ஆர். ஏ. (வீட்டு வாடகைப்படி), சி.சி.ஏ. (நகர ஈட்டுப்படி) ஆகியவை பெறாமல் இருக்கிறார்கள். இந்த நிலை பல்லாண்டு காலமாக இருந்து வருகிறது. பலமுறை முதலமைச்சரையும், நிதி அமைச்சரையும் சந்தித்து இதுபற்றிய கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதனால் ஏற்படுகின்ற குறை என்னவென்றால் எங்களுக்குப் பக்கத்திலே இருக்கிற திருப்போரூர் யூனியன் அல்லது காட்டாங்கொளத்தூர் யூனியனில் ஒரு பகுதியில் நகர ஈட்டுப்படி வழங்கியும், ஒரு பகுதியில் நகர ஈட்டுப்படி வழங்காமலும் இருப்பதால் அங்கே பணியாற்றுகின்ற ஆசிரியர்கள். அரசு ஊழியர்கள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் ஒரு பஞ்சாயத்திலிருந்து மற்றொரு பஞ்சாயத்துக்கு மாற்றுவதாக இருந்தாலும் இதிலே பிரச்சினை எழுகிறது. ஆகவே, எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மாவட்டம் முழுவதற்கும் இந்த நகர ஈட்டுப்படியையும்: வீட்டுவாடகைப் படியையும் பெற்றுத்தர வேண்டும் ; இப்போது இருக்கிற குழப்பத்தைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எங்களுடைய பகுதியைப் பொறுத்தவரையில் பல உயர்நிலைப் பள்ளிகளை பஞ்சாயத்து யூனியனிலிருந்து அரசு எடுத்துக்கொண்ட போதிலும் இன்னும் அவை கூரைக் கட்டடத்திலேயே இயங்கிக்கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு யூனியனிலும் இப்படிப்பட்ட பள்ளிகள் 2 அல்லது 3 இருக்கின்றன. இந்தப் பள்ளிகளுக்கு உடனடியாக நல்ல கட்டிடங்களைக் கட்டித் தர வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்தபடியாக, ஊராட்சி ஒன்றியங்கள் சம்பந்தப்பட்ட ஏரிகள், வாய்க்கால்கள், பழுதுபட்டிருக்கின்றன. ஒன்றியங்களுக்கு எந்தவிதமான வருமானமும் இல்லாத காரணத்தால் அவைகளை ஒன்றியங்களால் சரிவரசெய்ய முடியவில்லை. ஆகவே, சாலைகளை ஹைவேய்ஸ் டிபார்ட்மெண்டுக்கும், வாய்க்கால்கள், ஏரிகளை பொதுப்பணித் துறைக்கும் மாற்றி நல்லமுறையில் அவைகளை பராமரிக்க இந்த அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முக்கியமாக என்னுடைய ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்தவரையில் எந்தவிதமான வசதியோ, வாய்ப்போ இல்லாமல் இருக்கிறது. பல பகுதிகளில் விவசாயிகள் வரி கொடா இயக்கம் நடத்தி, தொல்லைகள் கொடுக்கின்ற காரணத்தால் வரி வசூல் செய்ய முடியவில்லை. அதனால் மக்களுக்கு வேண்டிய வசதிகள் செய்ய முடியவில்லை ; சாலைகள் போட முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, ஏரி, குளங்கள், வாய்க்கால்கள், சாலைகள் பராமரிக்கும் பொறுப்பை மாற்றியமைக்க இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

*திரு. க. இரா. சின்னராசு : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே. இங்கே 1981ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 21ஆம் நாள் தமிழக ஆளுநர் அவர்கள் அளித்திருக்கின்ற பேருரைக்கு நன்றி தெரிவித்து பேசுகின்ற ஒரு நல்ல வாய்ப்பினைத் தந்ததற்கு முதலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு ஆளுநர் உரையில் ஆளுநரும் அரசும் சேர்ந்து தந்திருக்கிற அறிக்கையைப் பார்க்கின்றபோது இந்த நாட்டு மக்களுக்கு நல்ல பல திட்டங்களைத் தீட்டி நலிந்துகிடக்கின்ற ஏழை எளிய மக்களை வாழவைக்க நல்ல பலவழிமுறைகளைக் குறிப்பிட்டிருப்பதை நான் உண்மையிலேயே பாராட்டி வரவேற்க கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அரசு ஏற்பட்ட பிறகு ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டை தமிழ்நாட்டில் சிங்கார மதுரையிலே புரட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்து நடத்திய அந்த உலகத் தமிழ் மாநாட்டை உலக மக்கள் எல்லாம் பாராட்டியிருக்கிறார்கள். தமிழ் மொழியைக் காப்பதற்கு நாம் எடுத்த அந்த விழாவை அங்கே கூடியிருந்த மக்கள் பாராட்டி வரவேற்பதோடு அங்கே வருகை தராமல் இருந்த தமிழ் மக்கள் அனைவரும் கூட அந்த விழாவை மிகவும் பாராட்டினார்கள். ஏனென்றால் அங்கே கூடியிருந்த 25, 30 இலட்சம் மக்களுக்கு எந்தவிதமான அசம்பாவிதமும் நிகழாமல் அவர்களுக்கு அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்ததுதான். அதற்காக இந்த அரசை அனைவரும் பாராட்டுகிறார்கள்.

[திரு. க. இரா. சின்னராசு] [1981 ஜனவரி 27

அந்தத் தமிழ் பெரும் விழாவுக்கு சிறப்பாக ஏற்பாடு செய்து, அருமையாக நடத்தி, அதனால் இந்த நாட்டுக்கும், உலகுக்கும் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு மிக சிறந்த முறையிலே தமிழகத்திலே ஆட்சி செய்து வருகிறது என்பதை எடுத்துக் காட்டியமைக்காக நான் இந்த அரசை மிகவும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[முற்பகல் 11–20]

அடுத்து இந்த ஆளுநர் உரையிலே விவசாயிகளின் மிகமுக்கியமான பிரச்சினை பற்றி குறிப்பிடப்பட்டிருக்கின்றது. விவசாயிகளின் விளைபொருட்களுக்கு மத்திய அரசு நிர்ணயித்திருக்கின்ற விலையிலிருந்து கூடுதலாக மாநில அரசு கொடுக்கின்றது. மத்திய அரசு நெல்லுக்கு நிர்ணயித்திருக்கின்ற 105 ரூபாயோடு 10 ரூபாய் சேர்த்து 115 ரூபாயாக குவிண்டால் ஒன்றுக்கு மாநில அரசு கொடுப்பதை விவசாயப் பெருங்குடி மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல் கரும்புக்கு டன் ஒன்றுக்கு 130 ரூபாய் என்று மத்திய அரசு கொடுத்தால் மாநில அரசு அதை 175 ரூபாய் என்ற அளவிலே கொடுப்பதை விவசாயப் பெருங்குடி மக்கள் இன்று பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். மேலும் தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் டன் ஒன்றுக்கு 212 ரூபாய் 10 பைசா என்ற அளவிலே கரும்பின் சுகர் கன்டென்ட் பர்சன்டேஜ்படி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே விவசாயப் பெருங்குடி மக்கள் அனைவரும் குறிப்பாக தர்மபுரி மாவட்டத்து விவசாயப் பெருங்குடி மக்கள் அனைவரும் இந்த அரசு எடுத்து வருகின்ற நடவடிக்கைகளைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து, விவசாயிகளுக்குத் தேவையான பூச்சிக்கொல்லி மருந்து, டீசல் போன்ற அவசியமான பொருட்களை எல்லாம் அவர்கள் நியாய விலையிலே பெறுவதற்கு வழிவகைகள் செய்கிறேன் என்று இந்த அறிக்கையிலே கூறி இருப்பததற்காக உண்மையிலேயே இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மின்சாரத் திருட்டைத் தடுக்கின்ற வகையிலே ஒரு சட்டத்தை இந்த அரசு அறிவித்திருப்பதை நாயுடு சங்கத்தினர் எதிர்த்து வருகிறார்கள். இந்த விஷயத்தைப் பொறுத்தவரையிலே நான் ஒரு விவசாயி என்ற வகையிலே ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு விவசாய சங்கத்தைச் சேர்ந்தவர்கள் இந்த சட்டத்தை எதிர்த்தால் உண்மையிலேயே இந்த நாட்டில் மின்சாரத்தைப் பயனபடுத்துகின்ற விவசாயிகள் அத்தனை பேரும் மின்சாரத்தைத் திருடுவதாகவும் ஆகவே அவர்கள் இந்தச் சட்டத்தை எதிர்ப்பதாகவும் பொருள் ஆகிவிடாதா ? ஆகவே



1981 ஜனவரி 27] [திரு. க. இரா. சின்னராசு]

அந்த விவசாயச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் இந்தச் சட்டத்தை எதிர்த்து அதன்மூலம் விவசாயிகளை சமுதாயத்தில் திருடர்கள் என்று அடையாளம் காட்டுகிறார்களே தவிர உண்மையிலேயே விவசாயிகளுக்கு நல்ல பெயர் வரவேண்டும் என்பதற்காக அவர்கள் பாடுபடவில்லை என்பதை நாட்டு மக்கள் தெரிந்து கொள்கின்ற வகையிலேதான் அவர்கள் நடந்து கொள்கிறார்கள் என்று நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, தர்மபுரி மாவட்டத்தில் நீர்ப் பாசனத் திட்டத்தின் கீழ் பல திட்டங்களை நிறைவேற்றுவது குறித்து அரசின் பரிசிலனையில் இருந்துகொண்டிருக்கின்றது. அந்த அடிப்படையிலே என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற ஒன்றிரண்டு பற்றிக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆலப்பட்டி கிராமத்தின் பக்கத்தில் காட்டாற்றில் ஒரு ஏரி கட்டுவதற்கு அரசு முடிவு செய்திருக்கின்றது. அதை உடனடியாகச் செய்து தரவேண்டும் என்று அரசை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதியில் புது ஏரி குருதொட்ட நூர் ஏரி போன்றவற்றைக் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல் எட்டிக்கள் அகரம் பக்கத்தில் ஒரு ஏரியைக் கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோன்று அளேகுந்தானி ஏரி, வெலகல அள்ளி ஏரி போன்றவற்றையும் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்தில் தேன்கனிக்கோட்டை வட்டம் தொட்ட ஹள்ளி ஆற்றின் குறுக்கே ஒரு அணை கட்டுவது பற்றி அரசு பரிசிலனை செய்துகொண்டிருக்கின்றது. அப்பகுதி மிகவும் பின்தங்கிய வறட்சியான பகுதியாக இருப்பதால் அந்தப் பகுதியிலே அந்த நீர்த்தேக்கத்தைக் கட்டித்தர அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வேப்பனப்பள்ளி ஒன்றியத்தில் நொச்சிக்குப்பம் ஆற்றுக்கு குறுக்கே சிங்கிரிபள்ளி என்ற கிராமத்தின் பக்கத்தில் ஒரு அணை கட்டுவதற்கு அரசு திட்டம் தீட்டி வருகின்றது. அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கர்நாடக அரசும், தமிழக அரசும் ஒன்று சேர்ந்து ஒகேனேக்கல் மின் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு முயற்சி எடுத்திருப்பதைப் பாராட்டுகிறேன். அதுகுறித்து கர்நாடக அரசோடு பேசி அந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற வகையில் அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. க. இரா. சின்னராசு] [1981 ஜனவரி 27

அடுத்து, கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கிராம வளர்ச்சியை, மேம்படுத்துகின்ற வகையிலே பல நல்ல திட்டங்களைத் தீட்டி எந்தவிதமான வருமானமும் இல்லாமல் இருக்கின்ற கிராமங்களிலே நல்ல மேம்பாடு ஏற்படுவதற்குரிய முயற்சியை எடுத்துவருகின்ற இந்த அரசை தர்மபுரி மாவட்டத்தில் இருக்கின்ற அத்தனை பேரும் பாராட்டுகின்றனர்.

அடுத்து தமிழக அரசு அறிவித்திருக்கின்ற பல்கலைக் கழகங்களில் ஒன்றை தகடூர் அதியமான் பெயரில் தர்மபுரி மாவட்டத்தில் ஏற்படுத்தித் ர வேண்டும் என்று எங்களுடைய மாவட்டத்தின் மக்களின் சார்பாக நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் சென்ற நிதிநிலை அறிக்கையில் கூட்டுறவு விசைத்தறி ஆலைகள் திறப்பது பற்றிய அறிவிப்பு இருந்தது மற்ற மாவட்டங்களில் கூட்டுறவு விசைத்தறி நூற்பு ஆலை திறக்கப்படுவதாக வெளியிடப்பட்டு இருந்தது. அந்தப் பட்டியலில் எங்கள் தருமபுரி மாவட்டம் விடப்பட்டுள்ளது. ஆகவே அந்தத் துறையினுடைய அமைச்சர் அவர்களை தருமபுரி மாவட்ட மக்களின் சார்பாக வேண்டிக் கேட்டுக் கொள்கி றன். தருமபுரி மாவட்டத்திலே நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி நூற்பு ஆலைகளை திறக்க வேண்டும் என்று.

அடுத்து, தர்மபுரி மாவட்டம் இந்த ஆண்டு மிகவும் வறட்சியால் பாதிக்கப்பட்டு வறண்டு காட்சி அளித்துக்கொண்டிருக்கிறது. வட ஆற்காடு மாவட்டத்தில் சில பகுதிகளை வறட்சி பகுதிகளாக அறிவித்துள்ளதாக ஆளுநர் உரையில் தரப்பட்டிருக்கிறது. அது போலவே தர்மபுரி மாவட்டத்தையும் வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும். அந்த மாவட்டத்திலே 25 சதவீதம் கூட இந்த ஆண்டு விளைச்சல் இல்லாமல் அந்தப்பகுதி மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே தர்மபுரி மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து, அந்த மாவட்டத்திற்கான நிவாரணப் பணிகளை செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

அடுத்து ஓசூர் பகுதியில் ஒரு கல்லூரியை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தர்மபுரி மாவட்டத்தில் பெண்கள் கல்லூரியே கிடையாது. அந்த மாவட்டத்தில் ஒரு பெண்கள் கல்லூரியை ஏற்படுத்த வேண்டும் என்றும், அந்தே கல்லூரியை அந்த மாவட்டத்திற்கு மையமாக இருக்கிற கிருஷ்ணகிரியில் அமைக்க வேண்டும் என்று கேட்டு, ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது பேச எனக்கு வாய்ப்பு தந்தமைக்கு துணைத் தலைவருக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி. வணக்கம்.



1981 ஜனவரி 27]

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் கொள்கைகளாக ஆளுநர் அவர்களின் உரையில் சில கருத்துக்களை இங்கே தந்திருக்கிறார்கள். ஆனால் உரையிலே, அரசினுடைய திட்டங்கள் அல்லது திட்டவட்டமான கொள்கைகள் என்று ஏதாவது சொல்லப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால், கொள்கைகளுக்குப் பதிலாக குழப்பம்தான் இருக்கின்றது என்பதை இங்கே நான் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

நாட்டிலே எந்தப் பகுதியைப் பார்த்தாலும், அது விவசாயப் பகுதியாக இருந்தாலும் சரி, தொழிலாளர் பகுதியாக இருந்தாலும் சரி, அனைத்துப் பகுதிகளிலும் இன்றைக்கு குழப்பமான ஒரு நிலைமைதான் இருக்கிறது என்பதை நாட்டு மக்களும் மற்றவர்களும் புரிந்து இருக்கிறார்கள். அரசு பொறுப்பிலே இருப்பவர்களும் கூட அதை உணர்ந்திருக்கிறார்கள். அதற்குக் க ரணம் அவர்களே மிகுந்த குழப்பம் உள்ளவர்களாக இருப்பதினால் மக்களையும் மற்றவர்களையும் கூட குழப்பிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத்தான் சொல்ல முடிகிறது.

ஆளுநர் உரையில் உலகத் தமிழ் மாநாட்டை நடத்தியதைப் பற்றி பெருமையாகக் கூறிக் கொண்டிருக்கிறார்கள். அது பெருமைப்படத்தக்க விஷயமாக இருப்பதினால் நானும் வரவேற்கிறேன். மொழி உணர்வு என்பது எல்லோருக்கும் பொதுவான விஷயம். அதனால் அதை பாராட்டுகிறேன். ஆனால் அது பெரிய அளவில் சிறப்பாக நடத்தப் பெற்றதாக சொல்கிறார்களே, அது எப்படி நடத்தப்பட்டது தெரிமா ? என்னைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் அழைப்பு அனுப்பப்பட்டது. அவ்வளவுதான். நாங்கள் எங்கே போய் நிற்பது, யாரைப் பார்ப்பது, எங்கே தங்குவது, இடவசதி உணவு வசதிகளுக்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது போன்ற விவரங்கள், வழிகள் எதுவும் தரப்படவில்லை. கிராமங்களில் சொல்வார்களே, எல்லோருக்கும் தாம்பூலம் வைக்க வேண்டும் என்று அதுமாதிரி எல்லோருக்கும் தாம்பூலம் வைப்பது போல் அழைக்கப் பெற்றது. அவ்வளவுதான். அங்கு சென்று எந்த வசதியும் இல்லாமல் சட்டமன்ற உறுப்பினர்கள் பட்ட துன்பங்களே சொல்லி முடியாது என்றால் சாதாரண மக்களின் நிலை என்னவாகியிருக்கும் என்று நீங்களே யோசித்துக் கொள்ள வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக் காட்ட ஆசைப்படுகிறேன்.

தமிழ் வளர்ச்சிக்காக, தமிழ் ஆராய்ச்சிகளுக்கு தீவிரமாகக் கவனம் செலுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஆனால் அதற்கான எந்தவித் தெளிவான திட்டமும் இந்த அறிக்கையில் சொல்லப் பெறவில்லை என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. இல. பலராமன்] [1981 ஜனவரி 27

அடுத்து, நடந்து முடிந்த 5 வது உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி மதுரையை தலைமையிடமாகக் கொண்ட உலகத் தமிழ்ச் சங்கம் ஒன்றினை ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அது எப்படிச் செயல்படும் என்று தெரியவில்லை. அது நல்ல முறையில் நடைபெறுமா என்பது பற்றி சந்தேகமாகத்தான் இருக்கிறது. நமது நிதியமைச்சர் அவர்கள் 232 புலவர்களுக்கு 60 லட்சம் ரூபாய் செலவு செய்யப் பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அது, ஒரு புலவருக்கு 25,863 ரூபாய் என்ற அளவிற்கு வருகிறது. அப்படி என்ன செலவு செய்தார்கள் ? என்ன கொடுத்தார்கள் என்று கேட்டால் அது ஒரு கேள்வியாகவே நிலைத்து நின்றுக் கொண்டிருக்கிறது.

அதே நேரத்தில் எங்களுடைய தலைவி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் வருகை தந்ததை பெருமையாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு மொழி பேசுபவர்கள் மீது மற்றொரு மொழி குறிப்பாக இந்தி மொழி திணிக்கப்பட மாட்டாது என்று ஜவஹர்லால் நேரு அவர்கள் கொடுத்த வாக்குறுதியை, பிரதமர் அவர்கள் உறுதிப் படுத்தினார்கள்.

[முற்பகல் 11-30.]

அதே நேரத்தில் ஜனநாயக அடிப்படையில் இந்தியை கற்கிறோம் என்று நினைக்கக் கூடிய மக்களுக்கு இந்தி கற்பதற்கு தமிழக அரசு ஏதாவது வழிவிடுகிறதா என்று பார்த்தால் இல்லை என்றுதான் கூறுவேன். மக்களாகவே விரும்பி இந்தி கற்கிறபோது அதற்கு வழி விடுவதுதான் ஜனநாயக மரபாக இருக்கமுடியும். இந்தி என்பது கடலுக்கு அப்பாலே வேறு எங்கேயோ இருக்கக்கூடிய மொழியல்ல. இந்தியத் துணைக் கண்டத்தில் ஒரு ஒற்றுமையை ஏற்படுத்தக்கூடிய மொழி என்ற உணர்வோடு அதை கற்க வேண்டிய சூழ்நிலையை நாம் உருவாக்க வேண்டும். அதை ஒதுக்குவது என்பது அல்லது இந்தி என்றால் அது ஒரு ராட்சச மொழி என்ற நிலையை உருவாக்குவது நியாயமான கொள்கை அல்ல.

இந்த அறிக்கையில், விவசாயிகளுக்கு நன்மைகள் கிடைக்கும் என்று நினைத்திருந்தேன். ஆனால் பத்து பதினாறு வயது இளைஞர்கள்தான் இன்று சுடப்பட்டிருக்கிறார்கள். அந்த அளவிற்கு ஒரு கொடூரமான நிலை ஏற்பட்டிருக்கிறதே தவிர விவசாயிகள் பிரச்னைகள் இன்றுவரை தீர்க்கப்படவில்லை. அதற்கு அரசாங்கப் பொறுப்பில் உள்ளவர்கள்தான் காரணம். பொறுப்பான அமைச்சர்கள்தான் காரணம். அதிலும் குறிப்பாக முதல் அமைச்சர்தான் காரணம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது தீர்க்கப்படவேண்டிய பிரச்னை. அரசாங்கம் அதற்கேற்றபடியான அணுகுமுறையை



1981 ஜனவரி 27] [திரு. இல. பலராமன்]

ஏற்படுத்தாததின் காரணமாகத்தான் அந்நிலை தொடர்ந்திருந்து துப்பாக்கிச்சூடு நடக்கக்கூடிய அளவிற்கு நாட்டில் பூதாகரமான நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை உணரவேண்டும். அதைத் தீர்ப்பதற்கு ஏதாவது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறதா என்று இந்த அறிக்கையில் பார்த்தால் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். ஏதோ கூறியிருக்கிறார்களே தவிர திட்டவட்டமாக அதைத் தீர்க்கிற நிலை இல்லை.

வட ஆற்காடு மாவட்டம் இன்று வறட்சியாக இருக்கிறது, பஞ்ச நிலை இருக்கிறது. அங்கு வறட்சியாக இருக்கிறது என்று கூறுவதற்குக்கூட வெட்கப்படுகிறீர்கள். அதற்குப் பதிலாக வேறு திசையில் திருப்பிவிட்டு வேறு ஒரு வார்த்தையைக் கூறி மக்களை ஏமாற்றிக்கொண்டிருக்கிறீர்கள். 50 சதவீதம் வரி தள்ளுபடி செய்கிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது அறிக்கையில். தண்ணீர் தட்டுப்பாடு காரணமாக வறட்சி ஏற்பட்டிருக்கிறது என்பதால், மழை இல்லாத காரணத்தால் இந்த வரி தள்ளுபடி என்பதை உணர வேண்டும். ஆகவே அந்தப் பகுதியை வறட்சிப் பகுதியாக அறிவித்து மேலும் பல நல்ல பணிகளை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு என்றைக்குமே மின்சாரம் சரிவரக் கிடைப்ப இல்லை. நீங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு மேலும் 30 சதவீதம் தொழிற்சாலைகளுக்கு மின்வெட்டு ஏற்படுத்தியிருக்கிறீர்கள். ஆனால் சினிமாக் கொட்டகைகளுக்கு மின்வெட்டு ஏற்படுத்தியிருக்கிறீர்களா என்றால் இல்லை. எவ்வளவு காட்சிகள் வேண்டுமானாலும் நடத்தலாம் என்று காலையில் ஆரம்பித்து பொழுது விடியும்வரை காட்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன. அந்த அளவிற்கு சினிமாத் துறையில் மட்டும் மின் வெட்டு, தட்டுப்பாடு இல்லை. அந்த நிலைதான் உங்கள் ஆட்சியில் இருக்கிறது. ஆனால் அந்த அளவிற்கு விவசாயிகளுக்கு இல்லை, தொழிற்சாலைகளுக்கு இல்லை என்ற நிலைதான் இருக்கிறது.

எங்கள் மாவட்டம் வறட்சியான மாவட்டம். சம்பா பயிர் பயிரிடமுடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. அங்கே விவசாயிகள் போராட்டம் என்று மக்களை அடக்கியொடுக்குவதற்கு இராணுவ ஆட்சியில் இருப்பது போன்று கெடுபிடிகள் நடந்தன. எனக்கு முன்னால் பேசிய திரு. திருவேங்கடம் அவர்கள் சொல்லியது போல் 40 லாரிகளில் காவல்துறையினர், அதிகாரிகள் புடைசூழச் சென்று கிராமப்புற மக்களை துன்புறுத்தினார்கள். துப்பாக்கிச் சூடு நடந்திருக்கிறது.

எங்கள் மாவட்டத்தில் உள்ள திருப்பத்தூரில் திட்டங்களை தீட்டுவோம், தொழிற்சாலைகள் ஆரம்பிப்போம் என்று கடந்த அறிக்கையில் கூறி இருந்தார்கள். அந்தப் பகுதி மக்கள் இந்த ஏபார்த இயக்கத்தில் ஈடுபடக் காரணம் வேலையில்லாத நிலைமை,

வறுமை—இது எல்லாப் பகுதிகளிலும் ஏற்படக்கூடிய நிலைதான். அந்தப்பகுதி மக்களுக்காக ஏதாவது திட்டம் தீட்டியிருக்கிறீர்களா என்று பார்த்தால் இல்லை. மேலும் விலைவாசி ஏறிக்கொண்டேயிருக்கிறது. (மணியடிக்கப்பட்டது.)

திரு. ரா. உமாநாத்: அன்புள்ள துணைத் தலைவர் அவர்களே, போன ஆண்டு ஆளுநர் உரைக்கும். இந்த ஆண்டு ஆளுநர் உரைக்கும் மலைக்கும், மடுவிற்கும் உள்ள வித்தியாசத்தை நான் காண்கிறேன். போன ஆண்டு கவர்னர் உரையின் மீது சர்வாதிகார எதிர்ப்பு, ஜனநாயக பாதுகாப்பு என்கிற முத்திரை ஓரளவு பதிந்திருந்தது. ஆனால் இந்த ஆண்டு சர்வாதிகார வாடையும், ஜனநாயக எதிர்ப்பு துர்நாற்றமும் வீசிக் கொண்டிருக்கிறது என்பதை என்னால் சொல்லாமல் இருக்க முடியாது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம், மத்திய அரசாங்கத்துடன்—அரசாங்கத்திற்கு அரசாங்கம் நல்லுறவு வைத்திருப்பதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை; அது அவசியமும் கூட, ஆனால், மத்திய அரசாங்கத்தில் ஆளக்கூடிய அந்தக் கட்சியுடன் அரசியல் கொள்கை, உறவு வைத்திருப்பதைத்தான் நாங்கள் கடுமையாக ஆட்சேபிக்கிறோம். அரசியல் கொள்கை, உறவு வைத்திருப்பது நாட்டுக்குக் கெடுதல், தமிழ்நாட்டின் எதிர்காலத்திற்குக் கெடுதல் என்று ஆரம்பத்திலேயே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

21 டிசம்பர் 1980 ஆம் நாளன்று 'மக்கள் குரல்' பத்திரிகையில் ஒரு அரசியல் கொள்கை நிலை வந்திருக்கிறது. அதைப் படித்துக் காட்டுகிறேன். 'ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு மீனாட்சியின் மதுரையில் நடக்கிறது. இங்கு மீனாட்சி கல்லூரியில், இந்திய மீனாட்சி இந்திரா காந்தியின் உருவப் படம் திறந்து வைக்கப்படுகிறது'. அப்படியானால், மீனாட்சி அம்மன் மதுரைக்குத்தான் மீனாட்சி; ஆனால் திருமதி இந்திரா காந்தி இந்தியாவின் மீனாட்சியாகும். இப்படி பேசியது, இந்திரா காங்கிரஸ் தலைவர் அல்ல. இப்படிப் பேசியது நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அல்ல. பேசியது, நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எந்தப் பிரதமர் தன்னுடைய அரசை, தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசைக் கலைத்தார்களோ, அதே பிரதமர், இன்றைய முதல்வரின் தலைமையில் சென்னை நகரத்திலே ஊர்வலம் நடைபெற்றபோது, போலீஸ் தடியால் அடிக்கப்பட்டு, மண்டைகள் பிளந்து, ரத்தம் சிந்தப்பட்டதோ, அதே பிரதமர், அதே அரசு, மாண்புமிகு முதலமைச்சர் பதவிக்கு நம்முடைய இன்றைய முதல்வர் வராமல் இருப்பதற்கு தடுப்பதற்கான முயற்சி செய்து, அந்த இடத்தில் எதிர்க் கட்சித் தலைவரை உட்கார வைப்பதற்கு சகல முயற்சிகளும் எடுத்தாரோ, அந்தப் பிரதமரைப் பார்த்து, இன்றைய





முதலமைச்சர் அவர்கள் 'இந்திரா இந்தியாவின் மீனாட்சி' என்று புகழ்ந்த பேச்சைக் கேட்டபோது, எனக்கு முன்னாள் காங்கிரஸ் தலைவர் திரு. டீ. கே. பரூவா அவர்கள் பேசிய பேச்சு ஞாபகத்திற்கு வருகிறது. அவர் அடிக்கடி 'இந்திரா இஸ் இண்டியா' 'இண்டியா இஸ் இந்திரா' என்று ஒவ்வொரு கூட்டத்திலும் பேசுவார். நமது முதலமைச்சர் அவர்கள் பேச்சைக் கேட்கிறபோது, 'இந்திரா இஸ் மீனாட்சி', 'மீனாட்சி இஸ் இந்திரா' என்ற அந்தப் பிரசங்கம் போய் கொண்டிருப்பதை வேதனையோடு நான் சொல்ல வேண்டியிருக்கிறது.

அதோடு நிற்கவில்லை. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மேலே குறிப்பிடுகிறார், 'இந்திரா காந்தியின் தலைமையில் நாடு முன்னேற்றத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது' என்று அதே பிரசங்கத்தில் சொல்கிறார். ஆனால், நாடு முன்னேறவில்லை, சர்வாதிகாரம்தான் முன்னேறிக் கொண்டிருக்கிறது. இது நமக்குத் தெரியும். விலைவாசி தான் முன்னேறிக் கொண்டிருக்கிறது என்பதும் நமக்குத் தெரியும். அரிசி விலை சில நாட்களாக ஏறிக் கொண்டிருப்பதும் நமக்குத் தெரியும். டாட்டா, பிர்லாக்களின் தொந்தி முன்னேறிக் கொண்டிருப்பதும் நம்க்குத் தெரியும்.

Our Chief Mi ister is prettify g au horita ia sm என்றுதான் சொல்ல வேண்டும். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சர்வாதிகாரத்தை அழகு படுத்துகிறார், பெருகூட்டுகிறார் என்றுதான் சொல்ல வேண்டும். தமிழகத்தின் கதியைப் பாருங்கள்.

எதிர்க் கட்சித் தலைவர் திருமதி இந்திரா காந்தியை 'அன்னை இந்திரா, என்கிறார். முதலமைச்சர், 'நீ அன்னை என்று அழைக்கிறாயா ? விட மாட்டேன்' என்று 'இந்தியாவின மீனாட்சியே' என்கிறார். அடுத்தவர், நீர் மீனாட்சி என்றழைத்தால், நான் 'காஞ்சி காமாட்சி என்றழைப்பேன் என்றால், தமிழகத்தின் கதி என்னவாகும் என்பதை தமிழ்நாட்டு மக்கள் யோசிக்க வேண்டும். ஆளும் கட்சி எம்.எல். ஏக்கள் தயவு செய்து யோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-40].

விலைவாசியால் அவதிப்படும் தமிழ் மக்களுக்கு கை கொடுக்க திராவிட இயக்கம் இல்லை, இரு பிரிவுகளும் மூழ்கடிக்கப்படும். ஜனநாயகத்தைக் கரையேற்ற திராவிட இயக்கம் முன்வரவில்லை. இந்திய நாட்டு சர்வாதிகாரத்தை பல்லக்கில் ஏற்றி வைத்து ஒருவர் முன்னால், ஒருவர் பின்னால் அவர்களுக்குள் தகராறு ஒன்றுதான், யார் முன்னால் சர்வாதிகாரப் பல்லக்கைத் தூக்கு

வது என்பதைத் தவிர வேறு எந்தவிதமான வித்தியாசமும் இல்லை. சர்வாதிகாரத்தின் அரசு வடிவந்தான் ஜனாதிபதி ஆட்சி முறை. அந்தக் கருத்தைத் துவக்கி வைத்தது பிரதமர் இந்திரா காந்தி (குறுக்கீடு). அவரவர்கள் கருத்தை அவரவர்கள் பேசும்போது கூறலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவு செய்து யாரும் குறுக்கிட வேண்டாம்.

திரு. ரா. உமாநாத் : சர்வாதிகாரத்தின் அரசு வடிவந்தான் ஜனாதிபதி ஆட்சி முறை. அந்தக் கருத்தைத் துவக்கி வைத்தது பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் நான் என்று சொல்ல விரும்புகிறேன். அதையும் ஜனாதிபதி ஆட்சி முறையையும் நான் ஆதரிக்கிறேன் என்று நம்முடைய முதலமைச்சர் கூறுகிறார்.

ஜனாதிபதி ஆட்சி முறை மூலம் காங்கிரஸ் கட்சி என்ன எதிர்பார்க்கிறது ? அவர்களுடைய கன்செப்ஷன் என்ன ? மகாராஷ்டிர முதலமைச்சர், அதாவது காங்கிரஸ் தலைவர், அவர் தான் பிரஸ்கான்பிரன்சில் அடிக்கடி விளக்கம் கொடுக்கக்கூடியவர், அவர் பிரஸ் கான்பிரன்சில் கொடுத்த விளக்கம் என்ன ?

"ஜனாதிபதி ஆட்சி முறையின்கீழ் உச்ச நீதிமன்றம் தலையிட முடியாத அதிகாரங்கள் ஜனாதிபதியிடம் இருக்கும்.

நாடாளுமன்றத்தின் மக்களவையோ, மாநிலங்களவையோ விரும்பினாலும் அல்லது இரண்டு அவைகளுமே விரும்பினாலும் கூட ஜனாதிபதியைப் பதவியிலிருந்து இறக்க முடியாது."—

That is the concept.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட் ஜனாதிபதியாக இருந்து கொண்டே சொன்னார்— 'நான் வெளியிடும் சட்டங்களை உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ஆதரித்து தீர்ப்பு எழுத மறுத்தால் உச்ச நீதிமன்றத்தை எனது விருப்பத்திற்கிணங்கும் நீதிபதிகளைக் கொண்டு நிரப்புவேன்' என்று கூறினார். நம் நாட்டில் எந்தப் பிரதமருக்கும் இப்படிக் கூற அதிகாரமில்லை என நினைக்கிறேன்'

மக்கள் பிரதிநிதிகளை திருப்பி அழைக்கும் உரிமைக்காக நிற்கிறேன் என்கிறார் முதல்வர். ஆனால் மத்திய அரசை நாடாளுமன்றம் திரும்ப அழைக்கும் உரிமையைப் பறிக்கும் ஜனாதிபதி ஆட்சி முறையையும் ஆதரிக்கிறேன் என்கிறார். இது எப்படிப் பொருந்தும் என்று கேட்க விரும்புகிறேன். எனவே, அண்ணா தி.மு.க. அரசை நான் கேட்க விரும்புகிறேன்—





தேர்தல் காலத்தில் என்ன அரசியல் கூறி ஓட்டு வாங்கினீர்கள் மற்ற வாக்குறுதிகள் ஒரு பக்கம் இருக்கட்டும். மாண்புமிகு முதல்வர் பேசியது 1 ஜனவரி 1980 அண்ணா பத்திரிகையில் வந்தது, '11 ஆண்டு பிரதமராக இருந்தவர் இந்திரா அவர்கள். இவரது சொல்லுக்கும் செயலுக்கும் பல முரண்பாடுகள் உள்ளன. இப்படிப் பட்டவர்களால் ஜனநாயகம் காக்கப்பட மாட்டாது'.

4 ஜனவரி 1980 அண்ணா பத்திரிகையில் 'இந்திரா காந்தி அடிக்கடி தனது பேச்சை மாற்றி வருகிறார். உறுதிமொழியையும் மறந்து விடுகிறார். இப்படிப்பட்டவர் ஆட்சிக்கு வந்தால் 15, 20 ஆண்டுகளுக்குத் தேர்தல் வராது'.

அண்ணா, 5—1—80-ல் 'நம்மை அடிமைகளாக, ஒரு குடும்பத் தலைவியின் அடிமைகளாக ஆக்க இந்திராவும் சஞ்சையும் இட்டமிடுகிறார்கள்'.

அண்ணா, 1—1—80-ல், 'ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் நடந்து மக்களிடம் ஓட்டுக் கேட்க வரவேண்டிய நிலையை இழக்கலாமா? ஜனநாயகம் உரிமையைப் பறிக்க அனுமதிக்கலாமா? தன்மானம் உள்ளவர்களால் இதை ஏற்க முடியாது'.

எல்லாவற்றுக்கும் மேலாக அவை முன்னவர் அவர்கள் பேசிய அருமையான எக்ஸ்ட்ராக்டைப் படிக்க விரும்புகிறேன். 4—1—80 அண்ணா பத்திரிகையில் வந்திருக்கிறது. அந்த எக்ஸ்ட்ராக்ட் நன்றாக இருக்கிறது, 'மெட்ராஸ் ஐ வந்தால், மூன்று நாட்களுக்குத்தான் அவதி ஏற்படும். ஆனால் காங்கிரஸ்-ஐ வந்தால் அவ்வளவுதான். காலமெல்லாம் கஷ்டப்படும்" Really it is a fact அதிலே மறுப்பே கிடையாது. எதற்காக இப்படி கொட்டேஷன்களைப் படிக்கிறேன் இப்படி, 'சர்வாதிகாரி', 'சொல்லுக்கும் செயலுக்கும் முரண்பாடுகள் இருப்பவர்' அடிக்கடி பேச்சை மாற்றக்கூடியவர்கள் 'உறுதிமொழியை மறந்து விடக் கூடியவர்', 'நம்மை அடிமைகளாக்கும் குடும்ப சர்வாதிகாரம்' என்றெல்லாம் கூறி, எட்டே மாதங்களில் 'இந்திய மீனாட்சி', 'நாட்டை முன்னேற்றக் கூடியவர்', 'மக்களுக்கு நன்மை செய்ய வழி செய்யக்கூடியவர்கள்', 'இந்திய மக்களின் வாரிசு', ஜனநாயகவாதி' என்றெல்லாம் கூறி—Political some-slaut அடிக்கலாமா ? அரசியல் பல்டி அடிக்கலாமா ? அரசியலைப்பற்றிச் சிந்திக்கக் கூடிய மக்கள் என்ன கூறுவார்கள்? தலைவர் அவர்களே, ஆம்பிள்ளையை பொம்பளையாக்கும் ஆபரேஷனைக் கேள்விப் பட்டிருக்கிறோம், பத்திரிகையிலே பார்த்து இருக்கிறோம். பெண்ணை ஆணாக்கும் ஆபரேஷனைக் கேள்விப்பட்டிருக்கிறோம். பத்திரிகையிலே படித்திருக்கிறோம். ஆனால் சர்வாதிகாரத்தை ஜனநாயகமாக்கும் ஆப்பரேஷனைக் கேள்விப்பட்டதில்லை. நம்

முடைய முதலமைச்சர் அப்படி ஒன்று இருக்கிறது என்று சொல்கிறார். அவர் பதில் சொல்கிறபோது அந்த ரகசியத்தைப் பற்றிச் சொன்னால் புரிந்து கொள்ள முடியும்.

எந்த அரசியல் நிலைக்காக எங்களைப் போன்ற தோழமைக் கட்சிகள் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரித்தனவோ, எந்த அரசியல் நிலைக்காக பல்லாயிரக்கணக்கானவர்கள் அடிபட்டு, உதைபட்டு, ரத்தம் சிந்தி, உயிர் விட்டார்களோ, எந்த அரசியல் நிலைக்காக மக்கள் வாக்களித்தார்களோ அந்த அரசியல் நிலையிலிருந்து நமது முதலமைச்சர் ஒரு முழு சுற்று மாறிவிட்டார் என்று சொல்ல விரும்புகிறேன். நாங்கள் முதல்வரிடம் கூற விரும்புகிறோம். You are answerable to the voters மக்களுக்கு நீங்கள் பதில் கூறக் கடமைப்பட்டவர்கள். இந்த விஷயத்தில் வாக்களித்த மக்களுக்கு முதல்வர் பதில் சொல்லக் கடமைப்பட்டவர். தற்காலிகமாக அவர்கள் மன்னிக்கலாம். போகப் போக மக்கள், இந்த மாற்றத்தினுடைய விளைவை உணர்கிற போது அவர்கள் மன்னிக்கவே மாட்டார்கள். நாடாளுமன்றத் தேர்தலிலே அதைத்தான் பார்த்தோம்.

History will never forgive such a shift in the Political stand in eight months.

யார் மன்னித்தாலும் சரித்திரம் மன்னிக்கவே மன்னிக்காது.

பிரதமர் 5 ஆண்டுகளுக்கு நமது அரசைக் கலைக்காமல் இருக்க வேண்டுமென்ற அச்சம் தேவையில்லை. காரணம் அவர்கள் ஆட்சியை ஒரு தடவை கலைத்துப் பார்த்தார்கள். அதையும் மீறி மக்கள உங்களை அரசாங்கத்திலே உட்கார வைத்திருக்கிறார்கள். ஆகவே இந்தக் கூட்டணி உங்களுக்கு அளிக்கக்கூடிய ஆதரவை ஏற்று மக்கள் அளிக்கக் கூடிய பலத்தை நம்பித்தான் ஆட்சி நடத்த முடியும். மத்திய அரசு கலைத்தாலும் கூட. அதை எதிர்க்கக் கூடிய முறையிலே, அந்தக் கூட்டணியை எதிர்த்துத்தான் மக்கள் மீண்டும் அரசாங்கத்திலே உட்கார வைத்திருக்கிறார்கள். ஆகவே அதற்காகப் பயப்படத் தேவையில்லை. பிரதமரை நம்பி அரசாங்கத்தை நடத்த முடியாது. உங்களைத் தேர்ந்தெடுத்த மக்களை நம்பித்தான் 5 ஆண்டுக் காலத்திற்கு ஆட்சியை நடத்த முடியும். அதனால்தான் தோழர்கள் வரதராஜனும், ரமணியும் பேசும் பொழுது சர்வாதிகாரத்தை ஆதரித்து இப்படியே போனால் உங்கள் அரசியல் ஆதரவு தொடர்வது பற்றி மறு பரிசீலனை செய்வோம் என்று சொன்னார்கள். ஒரு வேளை எங்களுடைய அரசியல் ஆதரவை நாங்கள் பின்வாங்கினாலும் கூட தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசு முழு 5 ஆண்டுகள் பதவியில் இருக்க வேண்டும் என்ற கோட்பாட்டின்படி கவிழ்ப்பதற்கு இடம் தரமாட்டோம். 5 ஆண்டுகளுக்கு முன்னாலே இதைக் கவிழ்ப்பதற்கு மத்திய அரசு முயற்சி செய்தால் அதை நாங்கள் எதிர்ப்போம் என்பதை, இந்த விஷயத்தில் எதிர்ப்பைத் தெரிவிப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





சர்வாதிகாரத்தின் அரவணைப்பில் சிக்கினால் நீங்கள் மேற்கொண்டு வந்த சில அடிப்படையான கொள்கைகளை கைவிட வேண்டியிருக்கும் என்று கூறிவந்தோம். யூ ஆர் டூயிங் இட். உலகத் தமிழ் மாநாட்டில் இந்தியைத் திணிக்க மாட்டோம் என்று பிரதமர் கூறியதற்கு பாராட்டி உள்ளார்கள் கவர்னர் உரையிலே. ஆனால் இந்த வாக்குறுதி புதியதல்ல. 1964இல் பிரதமர் வாக்குறுதி கொடுத்திருக்கிறார். 1971 ஆம் ஆண்டிலே இதே பிரதமர் வாக்குறுதி கொடுத்திருக்கிறார். இப்போதும் அவர் வாக்குறுதி கொடுக்கிறார். ஆனால் பிரதமர் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பதைப் பார்க்க வேண்டும். இந்தி தெரிந்த ஊழியர்கள் கோப்புகளில் இந்தியில்தான் குறிப்பு எழுத வேண்டும் என்று மைய அரசு உத்திரவு போட்டது. அதனால் நம் மாநிலம் போன்ற மாநிலங்களிலிருந்து போன இந்தி தெரியாத தமிழ் அலுவலர்கள் இந்தி கற்றுக் கொள்ள மறைமுகமாக நிர்ப்பந்திக்கப்பட்டு உள்ளார்கள். இந்தி தெரியாத அலுவலர்கள் ஒர்க் பண்ண முடியாத நிலைமை ஏற்பட்டு உள்ளது. அவர்கள் ஒர்க் பண்ணவில்லை என்றால் அவர்களுக்கு வேலை போய்விடும். ஆகவே நிர்ப்பந்தம் வந்தே ஆகும். இந்தி கற்றுக்கொண்டால்தான் வேலை பாதுகாப்பு கிடைக்கும் என்ற நிலைமை ஏற்பட்டு விடுகிறது.

[முற்பகல் 11-50]

1971 இல் 359 பிரிவுகளில் இது திணிக்கப்பட்டது. 1975இல் 683 பிரிவுகளிலே இது திணிக்கப்பட்டது. இதைச் செய்தது யார் ? நம்முடைய பிரதமர்தான், அதே போல் இந்தி தெரிந்த அதிகாரிகள் தங்களுடைய நிர்வாகப் பணிகளை இந்தியில் நடத்த வேண்டும் என்று உத்திரவு போடப்பட்டது. 1970 இல் 124 அதிகாரிகள் செய்தார்கள். 1975 இல் 465 அதிகாரிகள் செய்கிறார்கள். இதைச் செய்தது திருமதி இந்திரா காந்திதான். இன்றும் அவர்கள் இதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். இதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒரு பக்கத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

Programme and Implementation for accelerating the speed and development of Hindi.

என்று மத்திய அரசு நாடாளுமன்றத்திலே வைத்திருக்கின்ற ரிப்போர்ட்டிலேயிருந்துதான் நான் குறிப்பிடுகிறேன். இப்படி திட்டம் போட்டு மறைமுகமாக இந்தியைத் திணித்துக் கொண்டிருக்கும் பிரதமர் அடிக்கடி 'திணிக்க மாட்டோம்' என்று எதற்காக வாக்குறுதி அளிக்கிறார் ? அந்த வாக்குறுதி, மறைமுகத் திணிப்பை மறைக்கும் ஒரு முகமூடி என்று நான் கூறு

கிறேன். அந்த முகமூடியைக் கிழித்தெறிந்து உள்ளே நடக்கின்ற மறைமுக இந்தித் திணிப்பை தமிழக மக்களின் சார்பாக கண்டிக்க வேண்டிய கடமை நம்முடைய முதலமைச்சருக்கு இருக்கிறது. ஆனால் அவர் அதைச் செய்வதற்குப் பதிலாக அந்த முகமூடியை நம்ப வைக்கின்ற முறையில், பாராட்டு தெரிவிக்கும் வகையில் கவர்னர் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். பிரதமரின் பேச்சில் இன்னொன்றையும் குறிப்பிட்டிருக்கிறார்கள்; ஆனால் அது கவர்னர் உரையில் வரவில்லை. பிரதமர், ''இந்தி அதிகாரபூர்வமான இணைப்பு மொழிதான் ; ஆனால் திணிக்க மாட்டோம்'' என்று சொல்லியிருக்கிறார்கள். அதன் அர்த்தம் என்ன ? இந்தி பேசாத மக்களுக்கும் இந்திதான் இணைப்பு மொழி ; இப்பொழுது திணிக்கவில்லை; அந்த நாளை ஒத்தி வைக்கிறோம் என்று கூறுவதாகத்தான் அர்த்தம். The evil day is postponed.

அதைப்பற்றி மாண்புமிகு முதல்வர் 1978 இல் இதே பேரவையில் என்ன கூறினார் ? நான் ப்ரொசீடிங்ஸிலிருந்து கோட் செய்கிறேன். ''தமிழகத்தைப் பொறுத்தவரையில் தமிழ்தான் ஆட்சிமொழியாக இருக்கும். தமிழ்தான் இங்கு ஆட்சி புரியும் என்பது மட்டுமல்ல, இந்தி ஆட்சிமொழியாவதை இந்த அரசு ஒருபோதும் அனுமதியாது. அதற்கு ஒத்துழைக்காது'' என்று சொல்லியிருக்கிறார். 1978 இல் இப்படிச் சொன்ன நம்முடைய முதல்வர் இப்பொழுது நம்முடைய பிரதமர் இந்திதான் ஆட்சிமொழி என்று கூறியபொழுது 'அதை ஏற்றுக் கொள்ள முடியாது' என்று முதல்வர் கவர்னர் உரையில் துணிவோடு கூற முன்வர முடியவில்லை. நேர்மாறாக பிரதமருக்குப் பாராட்டு தெரிவித்திருக்கிறார்கள். சர்வாதிகாரத்தை அரவணைத்தால் சொந்தக் கொள்கைகளை டிபென்ட் பண்ண முடியாமல் போகும். அது வாழ்க்கை அனுபவம்—life experience என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கவர்னர் உரையில் பொருளாதாரக் கொள்கை சம்பந்தமாக, பணவீக்கம், ஊதியம் சம்பந்தப்பட்ட அரசுக் கொள்கை பற்றி எனக்கு முன்னால் பேசிய தோழர்கள் கூறினார்கள். ஆனால் நான் ஒன்று கூறுவேன். பணவீக்கம், விலைவாசி, ஊதியம் சம்பந்தமாக கவர்னர் உரையில் குறிப்பிட்டுள்ளது, பத்தாம்பசலி பொருளாதாரக் கருத்து. இது இந்த அரசின் சொந்தக் கருத்து அல்ல, இரவல் சரக்கு. பிரதமர் இந்திராவிடம் வாங்கிய இரவல் சரக்கு. பிரதமர் இந்திரா காந்தி வைத்திருப்பதும் சொந்தச் சரக்கல்ல; டாட்டா, பிர்லாவின் பொருளாதாரக் கொள்கையின் சரக்கு. அவர்களிடமிருந்து பிரதமர் கடன் வாங்க பிரதமரிடமிருந்து நம்முடைய முதல் அமைச்சர் கடன்வாங்கியிருக்கிறார்கள். நான் முதல்வரைக் கேட்கிறேன், ஏன் திருமதி காந்தியின் கட்சியிடம் கொள்கையை இரவல் வாங்க வேண்டும்?



அதற்கான அவசியம் என்ன ? உங்கள் பார்ட்டி சொந்தமாகக் கொள்கையை உருவாக்கவில்லையா ? உங்கள் பார்ட்டிக்கு ஏன் பொருளாதாரக் கொள்கை இல்லையா ? தோழமைக் கட்சிகளாக நாங்கள் இருக்கிறோமே எங்களைக் கேட்டு அறிவிக்க வேண்டுமென்று கூறவில்லை ; ஆனால் கூப்பிட்டு அழைத்து உங்கள் கருத்து என்ன என்று கேட்டு கருத்துக்களைப் பரிமாறிய பிறகு இந்தப் பிரச்னையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சொந்த நிலையை எடுக்கக் கூடாதா ?

நாங்கள் சொன்னால் நீங்கள் கேட்க மாட்டீர்கள் ; பிரதமர் சொன்னால்தான் நீங்கள் கேட்பீர்கள். திரு. இந்திரா காந்தி சொன்னால்தான் நீங்கள் கேட்பீர்கள். திரு. நாயுடுவை கைது செய்த பொழுது—அவர் செய்கின்ற முறைகளில் எங்களுக்குக் கருத்து வேறுபாடு உண்டு—ஆனால் அவரை (National Security Ordinance) இன் கீழ் கைது செய்தது தப்பு என்று சொன்னபோது, முதலமைச்சர் அவ்வாறு செய்தது சரிதான், விடுதலை செய்ய முடியாது என்று சொன்னார். ஆனால் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் அது தப்பு என்று சொன்னதும், உடனே முதலமைச்சர் அப்படிக் கைது செய்தது தப்பு என்று சொல்லி விடுவார்கள். நாம் சொன்னால் தப்பு இல்லை என்று சொல்கிறார். அந்த அம்மையார்—பிரதமர் சொன்னால்தான் தப்பு என்று சொல்கிறார். Governor's address is a declaration of war on the Working class, salaried employees and rural poor.

கிராமப்புற ஏழை மக்கள், மாதாந்திர சம்பளம் வாங்கும் ஊழியர்கள், தொழிலாளர் வர்க்கத்தின் மீது போர்ப் பிரகடனமாக இருக்கிறது. இந்தப் போர்ப் பிரகடனத்தை உழைப்பாளி மக்கள் சந்திப்பார்கள்.

கவர்னர் உரையில் பல வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அரசின் சில நடைமுறைகள் இருக்கின்ற நம்பிக்கையையும் பலவீனப்படுத்துவதாக இருக்கிறது. போன கவர்னர் உரையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பழைய சட்டம் திருத்தப்படும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. கல்வியமைச்சரும் பல கேள்விகளுக்குப் பதில் சொல்லும் பொழுது அதை ஊர்ஜிதம் செய்யும் வகையில் சொன்னார். ஆனால் 6 மாதங்கள் ஆகியும் ஒன்றும் செய்யவில்லை. மாறாக, மேலவையில் சில தினங்களுக்கு முன் சொல்லியிருக்கிறார், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை அரசு எடுக்காது என்று முதலமைச்சர் கூறியதாகப் பார்த்தோம். ஏன் ? போன கவர்னர் உரைக்கும் இந்தக் கவர்னர் உரைக்கும் மத்தியில் என்ன வந்து விட்டது ? What happened in between ? அன்றைக்கு நாம் அதற்கான நடவடிக்கை எடுப்போம் என்று சொல்லி, இன்றைக்கு முடியாது என்று சொல்வதற்கு

What happened in between? இடையில் என்ன நடந்து விட்டது? முதல்வர் பேசுவதைப் பார்த்தால் ஆசிரியர்கள் கிளர்ச்சியினால் தான் அவர்களுக்கு அதிருப்தி ஏற்பட்டதாகத் தெரிகிறது. எடுத்த உடனே ஆசிரியர்கள் கிளர்ச்சி செய்தார்கள் என்றால் பரவாயில்லை. Pro-Chancellor, Vice-Chancellor, Sub-Collector, Education Minister, C.M. எல்லோரிடத்திலும் கெஞ்சிப் பார்த்தார்கள். அங்கே உள்ள பல்கலைக் கழகப் பெரும் நிர்வாகி ஒருவர், பொது மக்கள் தூது கோஷ்டி சென்று பார்த்தபோது என்ன கூறினார் தெரியுமா? ஆசிரியர்களைப் பற்றி குறிப்பிட்டு, 'இவர்களை இன்னும் விட்டு வைத்திருக்கிறார்களா? நீங்கள் அவர்களைக் கவனிக்கவில்லையென்றால், நான் பல்கலைக் கழகத்தை மூடி Food Corporation of India Godown ஆக்குவதற்கு ஏற்பாடு செய்வேன் என்று ஒரு பெரியவர் பேசினார். அங்கே உள்ள ஒரு பெரியவர் உங்கள் பார்ட்டியைச் சேர்ந்தவர் அல்ல; அங்கே, பல்கலைக் கழக நிர்வாகத்தைச் சேர்ந்தவர் அவர். அப்படிப் பட்டவர் அங்கே இருக்கிறார். கொடவுன் ஆக்குவதற்குத்தான் அவருக்கு அக்கறை, கல்வியில் அல்ல— Not in education. இன்னும் ஏன் விட்டு வைத்திருக்கிறார்கள் என்று நான் சர்க்காரைக் கேட்க விரும்புகிறேன். ''ஆசிரியர்கள் மாணவர்களைத் தடுக்கலாமா'' என்று முதலமைச்சர் கேட்கிறார். நியாயமான கேள்வி. நான் அதற்கு இன்னொன்று கேட்கிறேன். அதற்கு முன் சில மாணவர்களை அங்கே இருக்கிற நிர்வாகம் தூண்டிவிட்டு இங்கிலீஷ் லெக்சரரை அடித்து அவரைக் கல்லூரி ஆஸ்பத்திரியிலேயே கொண்டு போய் சேர்த்து விட்டார்கள். அப்பொழுது நம்முடைய முதல்வருக்கு ஏன் கோபம் வரவில்லை? இன்றைக்கு மாணவர்களைத் தடுக்கிறபொழுது கோபம் ஏற்படுகிறதே, அன்றைக்கு ஒரு ஆசிரியருடைய மண்டையை மாணவர்களை விட்டு நிர்வாகம் அடித்ததே அப்பொழுது கோபம் வந்திருக்கக் கூடாதா? அதுவல்ல காரணம். எப்படியோ முதல்வருக்கு ப்ரோ சான்ஸலர் மீது ஒரு அனுதாபம் ஏற்பட்டிருக்கிறது. 'கொடை வள்ளல்' என்ற எண்ணமா? அது வேண்டாம் என்கிறேன் நான். அந்த எண்ணம் என்றால் கைவிட வேண்டுமென்று நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஏன்? மத்திய மாநில அரசுகள் அந்த யூனிவர்சிட்டிக்குக் கொடுக்கிற பணம் எவ்வளவு? ரூ. 5 கோடி அதாவது ரூ. 500 இலட்சம். யூ.ஜி.சி. கொடுத்தது ரூ. 500 இலட்சம்; அதாவது மத்திய மாநில, அரசுகளால். எல்லோரும் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்? அண்ணாமலைப் பல்கலைக் கழகம் என்று சொன்னால், அண்ணாமலையார் அவர் கொடை வள்ளல்; அவர்தான் எல்லாம் போட்டிருக்கிறார் என்று நினைக்கிறார்கள்.





அவர்கள் போட்டது ரூ. 20 இலட்சம்; ரூ. 20 இலட்சம் கொடுத்து, ரூ. 500 இலட்சம் வாங்கி, அதைப் பராமரிக்கக் கூடிய சகல அதிகாரங்களும் இன்றைக்கு ராஜா குடும்பத்திற்கு. எல்லா ஊழல்களும் அந்த யூனிவர்சிட்டியில் நடக்கிறது. கோல்டன் ஜூபிளிக்காக வசூல் செய்த பணம் எங்கே? கேட்டார்கள். No reply. மாணவர்களிடம் வாங்கியிருக்கக் கூடிய Admission donation எங்கே? கேட்கிறார்கள். No reply பதில் இல்லை. வசூல் செய்த பணத்தை நாஷனலைஸ்ட் பேங்கிலே போட வேண்டும். ஆனால் நிர்வாகம் தனியார் பேங்கிலே கொண்டு போய் போடுகிறது' ஏன்? Is it not a corrupt practice? ஏனென்றால் தனியார் பாங்குகளில் டெபாசிட் செய்து வைத்தால், வர்கள் பாங்கிலே ஊழியர்கள் ரெக்ரூட்மென்டிலே அந்த டெபாசிட் வைத்தவருக்கு ப்ரீயாக ரெக்கமண்டேஷன்—2 ஊழியரை நியமிக்கலாம் நீ, 3 ஊழியரை நியமிக்கலாம் நீ என்று கொடுக்கிறார்கள், ஆகவே, அரசாங்க பணத்தை அங்கு கொண்டு போய் வைத்து அந்த உரிமையைப் பெற்று, அங்கே பாங்கிலே ஆளைச் சேர்ப்பதற்கு— சேர்த்து ஆள் சேர்க்கப்பட்ட ஆளிடம் லஞ்சம் வங்கி, அங்கே அவர்கள் செய்திருப்பது. Government money is being misused ஆகவே நீங்கள் தடுக்கவேண்டும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் டென்டர் கட்டண விஷயம் பற்றிக் கொஞ்சம் பாருங்கள். அங்கு இந்திய மாணவர் ரூ. 5,500 ஒரே தவணையில் கட்ட வேண்டும். அயல்நாட்டு மாணவர் ரூ.24,375 ஒரே தவணையிலே, சர்க்கார் நடத்தும் பல்கலைக் கழகத்திலே. ஒரு மாணவருக்கு ரூ. 242 சர்க்கார் டென்டல் கோர்ஸ்க்கு ரூ. 242 என்று வசூல் செய்யும்போது, அங்கே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே, ரூ. 5,500 இந்திய மாணவருக்கு; அயல்நாட்டு மாணவருக்கு ரூ. 24,000 வசூலிக்கப் படுகிறது. இது கல்விப் பணியா? கொள்ளைப் பணியா? இதைப் பார்த்து நமது முதல்வருக்கு ஏன் நியாயமான ஆத்திரம் வரவில்லை? வர வேண்டும் அல்லவா? மக்கள் பண விரயம் ஆகிறபொழுது ஊழலைப் பார்க்கிறபொழுது நிச்சயமாக ஆத்திரம் வரவேண்டும். நியாயமான ஆத்திரம். ஆகவே நிர்வாகத்தை அரஸ்ட் செய்வதற்குப் பதிலாக, இன்றைக்கு கிட்டத்தட்ட 700 ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இதைத் தீர்ப்பதற்கு பதிலாக மாநிலம் பூராவும் பரவுவதற்குத்தான் சர்க்கார் வழி வகுத்திருக்கிறது. ஏ.யூ.டி., MUTA போன்ற எல்லா ஆசிரியர்களுடைய ஸ்தாபனங்களும் இன்று உண்ணாவிரதம் இருக்கின்றன. அவர்களுடைய கோரிக்கைகளிலே இதுவும் ஒன்று. மாகாணம் பூராவும் மறுபடியும் ஒரு கிரைசிஸ் வரவேண்டுமா? ஆகவேதான் இதிலே தலையிட வேண்டும் உடனே தீர்க்க வேண்டும் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. ரா. உமாநாத்] [1981 ஜனவரி 27

[நண்பகல் 12—00]

இன்னொரு எரிமலைக் குமுறுகிறது, தமிழகச் சிறைகளின் நான்கு சுவர்களுக்குள்ளே, பல்லாண்டுகாலமாக—இந்த ஐ. ஜீ. என்று அல்ல—பொதுவாக ஜெயிலுக்குள் இருக்கும் சிஸ்டம் ஐ.ஜீ. முதல் கீழே வரைக்கும் கைதிகளுக்கு வரக்கூடிய ரேஷனில் ஒரு போர்ஷன் சாப்பிடுவது வழக்கம். பல்லாண்டுகாலமாக இது தான் அங்கேயுள்ள சிஸ்டம். அதனால், கைதிகளுக்குச் சரி யான சாப்பாடு கிடைக்காது. கொடுமை. பல அடி-தடி. உள்ளே கைதிகள் அடிக்கப்படுகிறார்கள். உயிர் போய்விட்டால் தற்கொலை என்று சொல்லப்படுகிறது. ஆயுள் கைதிகள் 7 ஆண்டுகள் 15 ஆண்டுகள் கம்ப்ளீட் செய்தவர்கள் விடுதலை இல்லாமல் உள்ளே தவித்துக்கொண்டு இருக்கிறார்கள். அர சாங்கத்தின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். உலகத் தமிழ் மாநாடு நடைபெறுகிறபோது அந்த ஆயுட்கைதி கள் விடுதலை எதிர்பார்த்தார்கள். கிடைக்கவில்லை. எந்த நேரத்திலும் அவர்கள் மத்தியில் வெடிப்பு ஏற்படலாம். இதே காரணத்திற்காக சமஸ்டிப்பூரில் போன வாரம் பத்திரிகையில் படித்து இருப்பீர்கள்-உள்ளே வெடிப்பு ஏற்பட்டு பயரிங் நடந்து 12 பேர் செத்துப் போய்விட்டார்கள். 'டு யு வான்ட் சச் எ திங் டு ஹேப்பன் இன் அவர் ஸ்டேட்'. நம்முடைய ஸ்டேட்டில் அது நடக்கக்கூடாது. அதனால் தான் அரசு உட னடியாகத் தலையிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறைக்காவலர்கள் ஒரு எரிமலை. ஆனால் அமைச்சர் அவர் கள் அப்போதே அவர்களை அழைத்துப் பேசி ஒரு 6 கோரிக்கை களை நான் அனுதாபபூர்வமாக தீர்த்து வைக்கிறேன் என்று சொல்லி, அதை டைப் செய்து, நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் அந்தச் சங்கப் பிரதிநிதிகளை கூப்பிட்டுப் பேசி, எழுத்து மூலமாக எழுதி, அதிலே ஐ.ஜி. கையெழுத்துப்போட்டு இருக்கி றார்கள். இன்றையவரைக்கும் கையெழுத்துப் போட்டுகொடுத்து இருக்கும் கோரிக்கைகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. அமைச்சர் உடம்பு சரியில்லாமல் இருந்தார். நான் புரிந்து கொள்கிறேன். பட் வாட் ஈஸ் தி ஐ.ஜீ. டூயிங். ஐ.ஜீ. பர்சனலாகக் கையெழுத்துப்போட்டுக்கொடுத்து இருப்பது அவ ருக்குத் தெரியும் இல்லையா? அவர் என்ன செய்கிறார்? அமைச்சருக்கு உடம்பு சரியில்லை என்று சொன்னால், உள்ளே பயரிங் செய்ய வேண்டும் என்று சொன்னால், அமைச்சருக்கு உடம்பு சரியில்லை ஆகவே, பயரிங் செய்ய மாட்டேன் என்று சொல்லவா போகிறார்? 'ஹீ டஸ் தி ஜாப் ஆப் பயரிங்' ஹீ டஸ் தி ஜாப் ஆப் காலிங் தி போலீஸ்'. ஆனால், காவ லர்களை அமைதிப்படுத்த கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்று வதற்கு அமைச்சர் இல்லாவிட்டால், முதலமைச்சர் அவர்களை அணுக வேண்டியது தானே? ஆகவே, ஐ.ஜீ. அதையும் செய்ய வில்லை. இந்த 6 கோரிக்கைகளைப் பரிசீலிக்கிறேன் என்று



1981 ஜனவரி 27] [திரு. ரா. உமாநாத்]

சொன்னபோது, அமைச்சர் அவர்கள் நல்லெண்ணத்துடன் ஒன் றைச் சொன்னார், வார்டர்களிடத்தில். உள்ளே நடைபெறு கிற ஊழலை நீங்கள் பிடித்துக் கொடுத்தால், நான் நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொன்னார்கள். 'ஐயா, நாங்கள் பிடித் துக்கொடுத்தால் எங்களுக்கு ஆபத்து வந்து விடும், பெரிய பெரிய அதிகாரிகள் தொந்தரவு கொடுப்பார்கள்' என்று சொன்னபோது, 'இல்லை அப்படி வராமல் நான் பார்த்துக்கொள்கிறேன்' என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை நம்பி தைரியமாக வேலூரில் பிடித்துக் கொடுத்தார்கள். சம்பந்தப்பட்ட அதி காரிகள் சஸ்பென்ட் செய்யப்பட்டார்கள். மற்ற அதிகாரி ளுக்குப் பூராவும் ஆத்திரம் வந்து விட்டது. சரி, நாம் மாட்டிக் கொள்ளப்போகிறோம் போல் இருக்கிறது என்று எண்ணி, அதி காரிகளுக்குள்ளே கன்சல்ட் செய்து, அதன் அடிப்படையிலே சென்னையில் ஒரு 'ப்ரவோகேஷன்' வார்டர்களுக்குள்ளே ஏற் படுத்தி, அங்கேயிருக்கும் அதிகாரி 52 சிறைக்காவலர்களைக் கைது செய்து திண்டிவனம் சிறையில் இன்றைக்கு வைத்துக் கொண்டு இருக்கிறார். இப்படி அங்கே நடந்து கொண்டு இருக்கி றது. ஆகவே, அரசாங்கத்தின் நிலைமை எப்படி மாறிவருகி றது என்பதை எல்லோரும் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 'ஊழலைக் கண்டுபிடிக்கிறவர்களுக்கு ஜெயில். ஊழல் செய்கிற ஆளுக்கு சொகுசான வாழ்க்கை' 'கேன் யு டாலரேட் இட்' நாம் இதை அனுமதிக்கலாமா?

இதேபோலத்தான் சட்ட அமைச்சர் அவர்கள் திருச்சி சிறைக்கு விஜயம் செய்தபோது கைதிகளிடத்தில் பேசினார்கள். நாங்களும் பக்கத்தில் இருந்தோம். தைரியமாக நீங்கள் சாட்சி யம் சொல்லுங்கள், உங்களைப் பழி வாங்காமல் நான் பார்த்துக் கொள்கிறேன் என்று சொன்னார். பாவம், அதை நம்பி அவர் களும் சாட்சியம் சொன்னார்கள். இந்த சிறைக் காவலர்கள் ஸ்ட்ரைக் சமயத்தில் எந்தெந்தக் கைதிகள் சாட்சியம் சொன்னார் களோ அவர்களை எல்லாம் ஒரு செட்டாக—இவர்கள் இங்கே இருந்தால் ஆபத்து என்று சொல்லி, இவர்கள் வார்டர்களோடு சேர்ந்து கொண்டு கலகம் செய்வார்கள் என்று சொல்லி—அவர் களை வேலூர் சிறைக்கு ட்ரான்ஸ்பர் செய்து விட்டார்கள். கடலூர் சிறைக்கு ட்ரான்ஸ்பர் செய்து விட்டார்கள். பழி வாங்கியாகிவிட்டது. இப்போது அமைச்சர் கொடுத்த வாக் குறுதி என்ன ஆயிற்று? இப்படியேபோனால் எரிமலை வெடிக் காமல் என்ன நடக்கும் என்பதை நான் கேட்கவிரும்புகிறேன்.

கவர்னர் உரையில், சென்னை நகருக்குத் தண்ணீர் கொண்டு வருவதற்காக கட்டளைக் கால்வாய்த்திட்டம் என்று சொல்லப் பட்டு இருக்கிறது. நாங்கள் அதை எதிர்க்கிறோம். 'வீ வான்ட் டு மேக் அவர் பொசிஷன் கிளியர்' கட்டளைக் கா

வாயில் இருந்து சென்னைக்குத் தண்ணீர் கொண்டு வரும் திட்டத்தை நாங்கள் எதிர்க்கிறோம். ஏனென்றால் அப்படி ஓப்பன் கால்வாய் வழியாக வருகிறபோது, பூமியே தண்ணீரை இழுத்துவிடும், மேலும் வருகின்ற வழியில் இருக்கும் விவசாயிகள் தண்ணீர் எடுப்பார்கள். நாம் அதைத் தடுக்க முடியாது. உளுந்தூர்பேட்டை அருகே தண்ணீர் வருகிறபோது, அங்கேயிருக்கும் விவசாயிகள் கண் முன்னால் தண்ணீர் போவதை உபயோகிக்காமல், சும்மாவா இருப்பார்கள். எடுப்பார்கள், தடுக்க முடியாது. தடுக்கப்போனால் தகராறு வரும். கடைசியில் அந்தக் கால்வாயில் தண்ணீர் ஓடாது. இன்னொரு கால்வாய், அதிலே 500 கோடி ரூபாய் தான் ஓடும். வீராணம் ஸ்கேன்டல் போல், கட்டளை ஸ்கேன்டல் என்று வருவதற்கு தயவுசெய்து இடம் அளிக்காதீர்கள். அது மட்டுமல்லாமல் இந்தத் திட்டத்தை ஏற்பாடு செய்தால் தஞ்சை மாவட்டத்தில் உள்ள கடைமடைப் பகுதிகள்—நாகை தாலுக்கா உள்பட—நிச்சயமாக பாதிக்கப்படும் என்பதால் நான் இதை எதிர்க்கிறேன்.

அதற்கு பதிலாக, பொன்னேரிக்கு அருகே புலிக்காட் என்று ஒரு இடம் இருக்கிறது. அங்கேயிருந்து தண்ணீர் எடுக்க முடியும். அங்கே உப்பு நீர் என்று சொன்னாலும், 3 ஆண்டுகளில் அந்தத் தண்ணீரின் சாலினிடி நீக்க முடியும். நல்ல தண்ணீர் எடுக்க முடியும். சென்னைக்குப் பக்கத்தில் இருப்பதால் அதைப் பரிசீலிக்க வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

சில இன்ஜினீர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஏனெனில் இதில் லஞ்சம் ரொம்ப வராது. வாய்ப்பு கம்மி. 500 கோடி எங்கே, 100 கோடிக்கும் குறைவாக வரும் இந்தத் திட்டம் எங்கே ? ஆகவே, ' டோன்ட் கோ சிம்பிளி பைதி அட்வைஸ் ஆப் தி இன்ஜினீர்ஸ் ' அவர்களுடைய யோசனையை கேட்க வேண்டாம் என்று சொல்லவில்லை. இதை மனதில் வைத்துக் கொண்டு செய்யுங்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

நிர்வாகச் சீரமைப்பு என்ற ஒரு விஷயத்தைப் பற்றி மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன். இந்த நிர்வாகச் சீர்திருத்தம் அமைச்சர் மட்டத்திலிருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பது என்னுடைய கருத்து. பார்லிமெண்டில் ராஜ்ய சபா, லோக் சபா இரண்டிலும் சேர்த்து 700-க்கு மேற்பட்ட அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். நாடு பூராவிலும் இருக்கிற தொகுதியிலிருந்து அங்கே ரெப்பிரசென்டேஷனாகப் போகிறார்கள். இலாக்காக்களும் அங்கே அதிகம். அப்படி இருந்தாலும் அங்கே இருக்கிற உறுப்பினர்கள் அமைச்சர்களுக்கு கடிதம் எழுதினால் பிரதமர் உட்பட அனைவரும் சொந்த கையெழுத்துப் போட்டு, அக்னாலட்ஜ்மென்ட் அனுப்பி வைக்கிறார்கள். அதற்குப் பின்னாலே



டிஸ்போசல் வருகிறது. அந்த டிஸ்போசல் ஸ்டேஜிலும் பிரதமர் உட்பட சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் கையெழுத்துப் போட்டு உறுப்பினர்களுக்கு அனுப்புகிறார்கள். அமைச்சர்களுடைய கையெழுத்துக்குப் போவதால், அந்த பதில் தவறா, சரியா என்பதை அவர்கள் பார்க்க முடிகிறது. ஆனால் இங்கே அப்படி இல்லை. இங்கே கையெழுத்து புனிதமானது என்று நினைக்கிறார்களோ என்னவோ. இந்த சபையிலும் மேல் சபையிலும் சேர்ந்து 300 பேர்கள் தான் இருக்கிறார்கள். ஒரே மாநிலம் தான். சி. எம். உட்பட யாரும் சொந்த கையெழுத்துப் போட்டு பதில் அனுப்புவது கிடையாது; அக்னாலட்ஜ் பண்ணுவதும் இல்லை. கடிதம் எழுதி இரண்டு முதல் 9 மாதங்கள் கழித்து பதில்வரும். 'பிரின்டட் பார்ம்ஸ்' இருக்கிறது. அதிலே ' பார்வேர்டட்' என்று போட்டு, யாராவது ஒரு டிபுடி செக்ரட்டரியோ அல்லது அண்டர் செக்ரட்டரியோ கையெழுத்துப்போட்டு அனுப்புகிறார்கள். சில பதில்களைப் பார்த்தால் 'அண்டர் கன்சிடரேஷன்' என்று இருக்கும். ஆனால் என்ன சப்ஜெக்ட் என்று போட மாட்டார்கள். அது எதற்கு வந்த பதில் என்று எங்களுக்கே ஞாபகம் இருக்காது. 8, 9 மாதம் கழித்து வந்தால் எங்களுக்கு எப்படி ஞாபகம் இருக்கும் ? நாங்கள் அதற்கு என்று ' பைலா' வைத்திருக்கிறோம் ? அல்லது பிரைவேட் செக்ரட்டரியா வைத்திருக்கிறோம் ? சில சமயங்களில் எந்தவிதமான பதிலும் வராது. அது எரிசாராயம் மாதிரி .'எவாப்ரேட்' ஆகிவிடுகிறது. பதில் அனுப்பினாலும் அதிகாரிகள் அனுப்பும் பதில் அவர்களுக்குத் தெரியாது. கையெழுத்துக்குப் போனால்தானே அமைச்சர்களுக்குத் தெரியும்.

இந்த சபையில் கொடுத்த உறுதி மொழிகளைக் கூட நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்படுகிறது. 'அசம்பிளி கார்டு'க்கு 2 ரூபாய் என்றிருந்ததை 4 ரூபாய் என்று அறிவித்தார்கள். ஆனால் இன்றும் அது அமுல் நடத்தப்படவில்லை. அதற்கு யார் பொறுப்பு ? தெரியாது. அதனால்தான் சொல்கிறேன், நிர்வாகச் சீர்திருத்தம் இங்கே இருந்து ஆரம்பமாக வேண்டும் என்று. (மணியடிக்கப்பட்டது).

லால்குடி தாலுகாவில் ஒரு பெண். பரிட்சை முடிந்து, ரிசல்ட் ஜூலையில் வந்து விட்டது. அந்த பெண்ணினுடைய மார்க் ஷீட் இன்னும் வரவில்லை. எழுதி, எழுதி பார்த்தார்கள். பயனில்லை. கடைசியில் என்னிடம் வந்தார்கள். நான் ஜாயின்ட் டைரக்டர் ஆப் எக்சாமினேஷனுக்கு எழுதினேன். இன்று வரை பதில் கிடைக்கவில்லை. இது என்ன ஆச்சு ? That girls career is spoiled and destroyed ஆகவே தான் சொல்கிறேன். முதலில் இங்கே இருந்து நிர்வாக சீர்திருத்தம் செய்ய வேண்டும். ஆக, இந்த கவர்னர் உரை சர்வாதிகாரத்தை ஆதரிக்கக் கூடியதாக இருக்கிறது என்று கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழக ஆளுநர் உரைமீது நன்றி தெரிவிப்ப தற்கான ஒரு வாய்ப்பினை நல்கியதற்காக என் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி, என்னுடைய உரையை ஆரம்பிக்கிறேன்.

''இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்''

என்ற குறளுக்கு ஒப்ப, உலகத் தமிழ் மாநாட்டை பேரறிஞர் அண்ணா அவர்களுக்குப் பிறகு என்னுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் சிறப்பாகவும் செம்மையாகவும் மதுரையிலே நடத்தி, எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற முறையிலே, 'யாதும் ஊரே, யாவரும் கேளீர்' என்று உலகுக்கு எடுத்துக் காட்டி, உலகத்தினுடையவும், உலகத் தமிழர்களுடையவும் பாராட்டைப் பெற்றிருக் கிறார்கள். அந்த வகையில் உலகத் தமிழ்ச் சங்கத்தை அமைக்கவும் ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள் நம்முடைய புரட்சித் தலைவரவர்கள், இந்த மாநாட்டில் கலந்து கொண்ட இந்திய தலைமை அமைச்சர் அவர்கள் இந்தி மொழி பேசாத மாநிலங்கள் மீது, குறிப்பாக தமிழகத்தின் மீது இந்தி திணிக்கப் பட மாட்டாது என்ற உறுதியை தமிழகத்திற்குத் தந்திருக் கிறார்கள். எல்லாவற்றையும் விட இந்த மாநாட்டிலே கலந்து கொண்ட அயல் நாட்டு தமிழ் அறிஞர்களை முக்கியப் பகுதி களுக்கு அழைத்துச் சென்று தமிழ் மக்களோடு கலந்துரையாடவும், தமிழர்களுடைய கலாச்சாரங்களைத் தெரிந்து கொள்வதற்கும் சிறப்பாக ஏற்பாடுகளைச் செய்து கொடுத்திருந்தது நம்முடைய தமிழக அரசு. அந்த நல்ல பாங்கினை நான் பாராட்டுகிறேன்.

நம்முடைய மாநிலத்தில் மின்சாரத் தட்டுபாடு அடிக்கடி அதிகமாக வரும் என்பதைக் கருத்திற் கொண்டு, அந்தத் தட்டுப் பாட்டை நீக்குவதற்கான ஒரு முயற்சியை கவர்னர் உரை எடுத்துக் காட்டியிருக்கிறது. இத்தகையக் குறைபாட்டை நீக்குவதற்கு ஒரு நிரந்தர பரிகாரத்தை நம்முடைய தமிழக அரசு செயல் படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே விரும்பி வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12·10]

இம்மாநிலத்தை மேலும் தொழில் மயமாக்கும் திட்டத்தின் கீழ் காஞ்சீபுரத்தை பின்தங்கிய பகுதியாக அறிவித்து, பேரறிஞர் அண்ணா அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட ஓரிக்கை தொழிற் பேட்டை வளர்ச்சி அடைவதற்குரிய வாய்ப்புக்களை புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பேரறிஞர் அண்ணாவால் ஆரம்பிக்கப்பட்ட அந்தத் தொழில் பேட்டை அதற்குப் பிறகு கவனிப்பாரற்று கிடக்கின்றது. நம்முடைய முதல்வர் அவர்கள் இதைக் கவனத்





தில் கொண்டு அந்த தொழில் பேட்டை வளருகின்ற ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அடுத்து அண்ணா பிறந்த பூமியான காஞ்சிபுரத்தில் பல தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக செங்கல்பட்டு மாவட்டத்தில் கூட்டுறவுத் துறை யில் ஆரம்பிக்க இருக்கின்ற சர்க்கரை ஆலையை காஞ்சிபுரத்தில் அமைத்துக் கொடுக்கும்படி மிகவும் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கவர்னரது உரையில் கோவையிலேயும், திருச்சியி லேயும் பல்கலைக் கழகங்கள் ஆரம்பிக்க இருப்பதாக அறிவிக்கப் பட்டுள்ளது. அது போன்று உலகத் தமிழ் பல்கலைக் கழகம் ஒன்று ஆரம்பிக்க இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. நம் முடைய வரலாற்றிலே காஞ்சிபுரத்திலேயும், தட்சசீலத்திலேயும், நாலந்தாவிடலயும் 3 பல்கலைக் கழகங்கள் இருந்ததாக கூறப்பட் டுள்ளது. ஆகவே தமிழகத்திலே ஆரம்பிக்கப்பட இருக்கின்ற தமிழ் பல்கலைக் கழகத்தை காஞ்சிபுரத்திலே அமைத்தால் சிறந்த தாக இருக்கும் என்று கருதுகிறேன். காஞ்சிபுரத்தைச் சேர்ந்த போத்தூமர் இளவரசர் சவுத் கொரியாவிலேயும், ஜப்பானிலும் பௌத்த மதத்தைப் பரப்பியதாக வரலாறு கூறுகின்றது. அந்த முறையில் புலவர்கள் வாழ்ந்த காஞ்சிமாநகரில், பேரறிஞர் அண்ணா வாழ்ந்த காஞ்சிமாநகரில் உலகத் தமிழ் பல்கலைக் கழகத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று மிகவும் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து செங்கல்பட்டு மாவட்ட அரசு ஊழியர்களுக்கு நகர ஈட்டுப்படி வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வருகின்றது. அந்த கோரிக்கையை இந்த அரசு நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

அடுத்து விவசாயிகளுக்கு முடிந்த அளவுக்கு தமிழக அரசு தன்னாலான உதவிகளைச் செய்து வருகின்றது. ஆனால் விவ சாயிகளுக்கென்று செய்யப்படுகின்ற நல்ல திட்டங்கள் ஒரு சிலர் தங்களது சுயநலத்திற்குப் பயன் படுத்துகின்ற வாய்ப்புகள் அதிக மாக இருக்கின்றன. ஆகவே அது குறித்து அரசு நிச்சயமாக கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

''கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களை கட்டதனோடு நேர்''.

என்று வள்ளுவ கூறியிருக்கிறார். அந்த அடிப்படையில் நல்ல திட்டங்களுக்கு தடை விதிப்பவர்கள் யாராக இருந்தாலும் தமிழக அரசு கடுமையான நடவடிக்கை எடுப்பது தவறல்ல என்பது என்னுடைய கருத்து.

அடுத்து கடன் நிவாரணம் பற்றி ஆளுநர் அவர்களது உரையிலே குறிப்பிடப்பட்டுள்ளது. நான் ஒரு வழக்குரைஞர் என்ற முறையில் ஒரு கருத்தை இது சம்பந்தமாக தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்தக் கடன் நிவாரணச் சட்டம் அடிக்கடி திருத்தப்படுவதன் காரணமாக ஏற்படுகின்ற இன்னல்களையும் அதை செயல் படுத்துகின்ற வகையில் ஏற்படுகின்ற கஷ்டங்களையும் உணர்ந்து இந்த அரசு ஏதாவது ஒரு நிரந்தரமான பரிகாரம் காண வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஏழையின் சிரிப்பினில் இறைவனைக் காண்போம் என்ற பேரறிஞர் அண்ணாவின் தத்துவத்திற்கேற்ப, மாநில அரசுகளுக்கு மத்திய அரசு நிதியுதவி செய்வதில் காட்கில் ஏற்பாடுகளுக்கு பதிலாக வறுமைக் கோட்டுக்கு உட்பட்டு இருப்பவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் நிதியுதவி செய்யவேண்டும் என்று கூறப்பட்ட நல்ல கருத்தினை நான் முழு மனதோடு வரவேற்கிறேன்.

அடுத்தபடியாக பக்கிங்காம் கர்நாடிக் நூற்பாலையில் வேலை நிறுத்தம் செய்து தொழிலாளர்கள் போராட்டம் நடத்தியும், அந்த ஆலை மூடப்பட்டிருப்பதால், கிட்டத்தட்ட 13,000 குடும்பங்கள் பாதிக்கப்பட்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நிவாரணம் அளிக்க அந்த ஆலையை திறக்கும் வகையில், அதற்கான ஏற்பாடுகளில் தமிழக அரசு ஈடுபட்டு செயல்பட வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

தன்நிறைவுத் திட்டம், வேலைக்கு உணவுத் திட்டம் போன்ற திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. அவைகள் நன்முறையில் செயல்பட அதற்கென வரைமுறைகள் வைத்துள்ளதையும் அறிந்து இந்த அரசை பாராட்டுகிறேன்.

வடாற்காடு, புதுக்கோட்டை மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவித்து நிவாரண நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளது. அதைப் பாராட்டி வரவேற்கும் அதே நேரத்தில், என்னுடைய செங்கல்பட்டு மாவட்டமும் கடுமையாக வறட்சியினால் பாதிக்கப்பட்டிருப்பதால், செங்கல்பட்டு மாவட்டத்தையும் வறட்சி மாவட்டமாக அறிவித்து, அதற்கான பணிகளை செய்து தர வேண்டும் என்று எங்களுடைய மாவட்டத்தின் மக்களின் சார்பாக தமிழக அரசை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.





வீட்டுக்கு ஒருவருக்கு வேலை வாய்ப்புத் தரும் புதிய திட்டம்
ஒன்றை நம்முடைய புரட்சித் தலைவர், முதல்வர் அவர்கள்
அறிவித்திருக்கிறார்கள். இந்த திட்டத்தின் மூலம் ஒவ்வொரு
குடும்பத்திலிருக்கும் சாதாரண குடிமகனும் வேலை வாய்ப்பு
பெற்று நலம் பெற முடியும் என்ற வகையில் வாய்ப்பு இருக்கிறது.
இத்தகைய திட்டத்தை கொண்டு வந்தமைக்காக தமிழக அரசை
நான் பாராட்டுகிறேன்.

அடுத்து காஞ்சிபுரம் நகரிலே உள்ள புற்று நோய் மருத்துவ
மனை அறிஞர் அண்ணா அவர்களின் பெயரிலே ஆரம்பிக்கப்பட்டு,
கிட்டத்தட்ட 2 கோடி ரூபாய்க்கு மேல் வெளிநாட்டிலிருந்து
சாதனங்கள் வரவழைக்கப்பட்டு செம்மையாக அமைக்கப்பட்
டிருந்தும் இன்று வரையில் செயல்பட முடியாத நிலையில் இருக்
கிறது. அதில் தமிழக அரசு உடனடியாக தலையிட்டு அந்த
மருத்துவ மனையை நல்லமுறையில் செயல்படுத்த ஏற்பாடுகளைச்
செய்து தரவேண்டும் என்று எங்கள் தொகுதி மக்களின் சார்பாக்
வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். இந்த ஆளுநர்
உரைமீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் பேச வாய்ப்பு
அளித்தமைககாகவும் துணைத்தலைவர் அவர்களுக்கு நன்றி
கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

* திரு. தி. கா. நல்லப்பன் : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, ஆளுநர் உரையின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
யின் சார்பிலே 3-வது நாளாக சில கருத்துக்களைச் சொல்ல
விரும்புகிறேன்.

நடந்து முடிந்த உலகத் தமிழ் மாநாட்டைப் பொறுத்த
வரையில் இங்கே பிரதானமாக கூறப்பட்டிருப்பது என்னவென்
றால், மதிப்பிற்குரிய இந்தியப் பிரதமர் அவர்கள் மாநாட்டிற்கு
வருகை தந்து, இந்தியை திணிக்க மாட்டோம் என்று கூறியது
தான் பிரதானமாக குறிப்பிடப்பட்டிருக்கிறது.

1965 ஆம் வருடத்திலே பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள்
இன்னொரு மாநிலம் விரும்புகிற வரை இந்தி மொழியை அவர்
கள் மீது திணிக்க மாட்டோம் என்று அளித்த உறுதி
மொழியினைத்தான் பிரதமர் அவர்களும் வலியுறுத்தியிருக்கிறார்
கள். ஆனால் இங்கே பார்க்கப்போனால், ஒரு டிக்கெட் ரிசர்வ்
செய்ய வேண்டும் என்று ரெயில்வே ஸ்டேஷனுக்குச் சென்றால்
அதற்கென கொடுக்கப்படும் விண்ணப்பத்தாள்களில் கூட ஆங்கில
மும், இந்தியும் தான் அச்சடிக்கப்பட்டிருக்கின்றன. அதை மாற்றி
அவைகளில் தமிழ் மொழியிலேயும் அச்சிட மாநிலஅரசு ஏதாவது
ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும் என்று கேட்டுக் கொள்வ
தோடு, சட்டப்படிப்புகளுக்கும், மருத்துவ படிப்புக்கும், பொறி
யியல்படிப்புகளுக்கும் உடனடியாக தமிழ் விஞ்ஞான சொற்
களைக் கொண்டு வரவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில்
வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. தி. கா. நல்லப்பன்] [1981 ஜனவரி 27

அடுத்தபடியாக 6-வது 5 ஆண்டு திட்டத்திற்கென 3,150 கோடி ரூபாய் தமிழகத்திற்கென ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் அது முன்பு ஒதுக்கியதைவிட அதிகம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. ஆனால் நம்முடைய தற்போதைய 1 ரூபாயின் மதிப்பு எவ்வளவு தெரியுமா 24¾ பைசாதான். பணவீக்கத்தின் காரணமாக அதன் மதிப்பு அவ்வளவு குறைக்கப்பட்டிருக்கிறது. அப்படி கணக்கு வருகிறபோது பார்த்தால், ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட தொகையைவிட இது அதிகமாகவே இருந்தாலும், அவற்றைக் கொண்டு பெரிய அளவில் திட்டங்களைச் செயல்படுத்த முடியாது என்ற ஒரு நிலையும் இந்த ரூபாய் மதிப்பு குறைந்ததன் காரணமாக ஏற்பட்டிருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து வறட்சிப் பகுதிகளாக வடாற்காடு, புதுக்கோட்டை மாவட்டங்களில் சில பகுதிகளை அறிவித்திருப்பதாக கூறியிருக்கிறார்கள். வறட்சிப் பகுதிகளாக இராமநாதபுரம், வடாற்காடு, தர்மபுரி ஆகிய மாவட்டங்களைச் சேர்க்கும்போது, ஏற்கெனவே பாண்டியாறு-புன்னம்புழா திட்டங்களைக் கொண்டு வரவேண்டும் என்று, கோவை மாவட்டத்தில் நீண்ட நாட்களாக மாநாடு நடத்தியும், எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பெறமால் இருக்கிறது. திருநெல்வேலியில் கேரள அரசோடு பேசி அங்கே வீணாகக் கடலில் போய் விழுகின்ற நீரை இங்கே கொண்டு வரும்படியான திட்டத்தைச் செயல்படுத்தும்போது, பாண்டியாறு- புன்னம்புழா திட்டத்தையும் சேர்த்துக் கொண்டு, அவைகளையும் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கையில், நடந்து முடிந்த விவசாயப் போராட்டம் பற்றி ஒரு சில வார்த்தைகளை என்னுடைய கருத்துக்களாகச் சொல்ல விரும்புகிறேன். விவசாயிகளுடைய நிலையை அவர்களுடைய கொள்கையை, நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். அதாவது போராட்ட திசை வழியை கம்யூனிஸ்ட் கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை.

[பிற்பகல் 12-20].

காரணம், நீண்ட நெடுங்காலமாக விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு மற்றவர்கள் விலை நிர்ணயம் செய்யக்கூடிய நிலைதான் இருக்கிறது. இன்றைக்கும் விவசாயிகள் அந்த நிலையில்தான் இருக்கிறார்கள். விவசாயிகள் யாரை எதிர்த்து போராட்டம் செய்ய வேண்டுமோ அதை விட்டுவிட்டு தவறான திசையில் நகர மக்களை தங்கள் எதிரிகளாக நினைத்து போராடும் நிலையில், அப்படி திசை திருப்பிவிடப்பட்டிருக்கிற நிலையில் நாங்கள் அந்தப் போராட்டத்தை ஆதரிக்கவில்லை. இருப்பினும அவர்கள் கருத்துக்களை முழுமையாக ஆதரிக்கிறோம். நேற்று முன்தினம் கூட இந்த சபையில் பேசுகிறபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். கரும்புக்கு டன்னுக்கு ரூ. 175 என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஒரு டன் கரும்பு ஒரு க்விண்டால் சர்க்கரையாகிறது. ஆனால் ஜனவரி மாதம்



1981 ஜனவரி 27] (திரு. தி. கா. நல்லப்பன்)

ஒரு கிலோ சர்க்கரையின் விலை ரூ. 2.50 ஆக இருந்தது இன்றைய தினம் ரூ. 3.50 ஆக ஆகியிருக்கிறது. ஆனால் ஜனவரியில் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பணம் ஒரு டன் கரும்புக்கு ரூ. 129 38 காசு. இன்றைய தினம் அது ரூ. 175 ஆக ஆகியிருக்கிறது. இருப்பினும் அது குறைவான தொகையாகும். அதை அதிகப்படுத்த வேண்டும்.

விவசாயிகள் போராட்டத்தில் காவல் துறையினர் பலயிடங்களில் அத்துமீறிய செயல்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். என் தொகுதியில் குறிச்சி என்ற ஊரில் ஆண்கள் அனைவரையும் அடித்து மூன்று நாட்கள் அவர்களை சிறையில் வைத்து குறிப்பிட்ட நபர்களை மட்டும் விடுதலை செய்திருக்கிறார்கள். ஒரு டீ கடையில் நுழைந்து அங்குள்ள பொருட்களை உடைத்து மூன்று சைக்கிள்களை அம்மிக்கல்லில் போட்டு உடைத்திருக்கிறார்கள் காவல் துறையினர்.

அதேபோல் என்னுடைய தொகுதியில் உள்ள பாண்டியம் பாளயத்தில், மின் கட்டணம் கட்டியிருந்தும்கூட மின் இணைப்பு துண்டிக்கப்பட்டிருக்கின்றன சில இடங்களில். அமாசிக் கவுண்டர் வீட்டில் அவர்களுக்குச் சொந்தமான மூன்று மின் இணைப்புகளில் இரண்டை அடித்து நொறுக்கி ட்யூப் லைட் போன்றவற்றை அடித்து நொறுக்கியிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

விலைவாசியேற்றம் தொழிலாளர்கள் போராடி அதிகமான சம்பளம் கேட்கிற காரணத்தால்தான் ஏற்படுகிறது என்று இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. விலைவாசிகள் ஏறுவதால் தொழிலாளர்கள் போராடுகிறார்கள். காரணம், உணவுப் பொருள்கள் அனைத்தையும் மத்திய அரசோ அல்லது மாநில அரசோ கொள்முதல் செய்யக்கூடிய ஒரு கொள்கை இல்லாததால் தனி முதலாளிகள் அந்த உணவுப் பண்டங்களை வாங்கி தங்களுக்கு ஏற்றபடி இருப்பு வைத்து விற்கக்கூடிய ஒரு சூழ்நிலையால் விலைவாசி ஏறுகிறது. ஆனால் இந்த அறிக்கையில் குறிப்பிட்டிருப்பது, தொழிலாளர்கள் போராடி ஊதிய உயர்வு பெறுகிற காரணத்தால்தான் விலைவாசி ஏறுகிறது என்பதாகும். சென்ற சட்டசபைக் கூட்டத்திற்குப் பின்னால் பஸ் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. ஒரு ரூபாய்க்கு 25 பைசா என்றளவிற்கு பஸ் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. பஸ் கட்டணத்தை ஏற்றினால்தான் நாங்கள் பஸ்ஸில் ஏறுவோம் என்று பிரயாணிகள் சொல்லவில்லை. டீசல் விலை உயர்ந்துவிட்டது, டயர் விலை ஏறிவிட்டது. உதிரிபாகங்கள் விலைகள் ஏறிவிட்டன. ஆகவே பஸ் கட்டணம் உயர்த்தப்படுகிறது என்று குறிப்பிடுகிறார்களே தவிர பஸ்ஸில் செல்லும் பயணிகள் கட்டணத்தை உயர்த்த வேண்டும் என்று சொன்னதால் உயர்த்துகிறோம் என்று சொல்லவில்லை. மத்திய, மாநில அரசுகள் அனுசரிக்கக்கூடிய கொள்கை

கள் காரணமாகத்தான் விலைவாசி ஏறுகிறது. இதை மூடி மறைக்க தொழிலாளர்கள் போராடி ஊதிய உயர்வு பெறுவதால விலைவாசி ஏறுகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்னொன்று. அரசு பதிவில்லாத மூட்டைத் தூக்குவது, காப்பி கடையில் இருப்பது, இன்னும் பீடி, சுருட்டு தயாரிக்கும் தொழிலாளர்கள் எல்லாம் ஏற்கனவே பதிவுபெறாத தொழிலாளர்களோடு முடிவுகாண ஒரு கொள்கையாக கூறப்பட்டிருக்கிறது என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

அடுத்து, மதுவிலக்குப் பிரச்னை. சென்ற கூட்டத்தில் என்னுடைய கட்சித் தோழர்கள் மதுவிலக்கு சம்பந்தமாக தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். அதாவது 25 ரூபாய்க்கும் 10 ரூபாய்க்கும் மதுவிலக்கு பர்மிட் கிடைக்கின்ற சூழ்நிலையில், மதுவிலக்கு தோற்றுவிட்டது; இதைமுழுமையாக நிறைவேற்ற முடியவில்லை, எனவே இதைத் தளர்த்தினால் அரசுக்கு 100 கோடி ரூபாய் வருமானம் கிடைக்குமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், இது இன்றைக்கு மீண்டும் திரும்ப வந்திருப்பது, இந்தக் கோரிக்கையை உறுப்பினர்கள் தலையில் கட்டுகின்ற நிலைதான் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த கிராம அதிகாரிகள் வேலை நீக்கம் சரியா, தவறா என்பதைவிட, ஏற்கனவே இவர்கள் மணியக்காரர்களாக நியமிக்கப்படும்போது, அவர்களுக்கு எவ்வளவு சொத்து இருந்தது என்பதைக் கணக்கிட்டு சமர்ப்பிக்கப்படும். ஆனால், கணக்குப் பிள்ளைகளுக்கு இதைப்போன்ற சூழ்நிலை யெல்லாம் இல்லை (மணியடிக்கப்படுகிறது) என்பதை மட்டும் கூறிக் கொண்டு, விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) பேரவை அலுவல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. நிறைய பேர்கள் பேசவேண்டி யிருப்பதால், இன்று மாலையிலும் 4–00 மணிக்கு பேரவை கூடுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





7. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி).

**திரு. ந. குலசேகர பாண்டியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, மேலவை கூட்டுக் கூட்டத்தில் 1981-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 21-ம் நாள் தமிழ்நாடு ஆளுநர் மேதகு திரு. சாதிக் அலி அவர்கள் நிகழ்த்திய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது என்னுடைய கருத்துக்களை சொல்வதற்கு வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகமே வியந்து, மகிழ்ந்து, பாராட்டத்தக்க வகையில் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு நடந்து முடிந்தது என்று சொன்னால், அது மிகையாகாது. இந்த மாநாட்டினை சீரோடும், சிறப்போடும், மக்கள் மறக்க முடியாத வரலாற்று சிறப்புமிக்க நிகழ்ச்சியாக்க, நிகழ்ச்சியாக்க என்பதைக் காட்டிலும், புதிய வரலாறு படைக்க புரட்சித் தலைவர் அவர்களும், இந்த அரசும் எடுத்துக்கொண்ட ஆர்வம் மிகுந்த அக்கறையை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது. தமிழர்களின் பழம் பெருமையும் வரலாற்றுச் சிறப்பும், தமிழ்ப் பண்பாட்டின் பொலிவும், தமிழ் இலக்கியத்தின் செறிவும் இந்த உலகுக்கு உணர்த்தப்பட்டது. இத்தகைய சிறப்புமிக்க தமிழகத்தில் நாம் வாழ்கின்றோமே என்று நினைக்கின்றபொழுது, இந்த மண்ணிலே வாழும் ஒவ்வொரு தமிழனின் நெஞ்சமும் பெருமிதத்தால் விம்முகிறது. ஒவ்வொருவரும் பெருமையும், பெருமகிழ்ச்சியும், பூரிப்பும் கொள்கின்றனர்.

எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு என்றார் பாரதிதாசன். தமிழர்களின் நலமும், தமிழ் மொழியின் வளமும் நின்று நிலைபெற நித்தம், நித்தம் ஓயாமல், ஒழியாமல் உழைத்துக் கொண்டு இருக்கிறார்கள் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள்.

புரட்சித் தலைவர் அவர்கள் தமிழ் மீது கொண்டுள்ள பற்றுதலை, பாசத்தை, அன்பை, அதன் ஆழத்தை உணர்த்த நான் நேரில் கண்ட ஒரு சிறு சம்பவத்தை இந்த அவைமுன் சொல்ல ஆசைப்படுகிறேன்.

டிசம்பர் 15, 16, 17 தேதிகளில் இந்தியத் தலைநகர் புதுடில்லியில் புரட்சித் தலைவர் அவர்கள் சரித்திர சாதனை நிகழ்த்திக் கொண்டிருந்த நாட்கள். மத்திய திட்ட அமைச்சருடன் பலமுறை கூடிப் பேசி, தமிழகத்திற்கு இதுவரை எந்த முதல்வரும் பெறமுடியாத இம் மாநிலத்தின் திட்ட அளவு ரூ. ,1[illegible]3 கோடியென நிர்ணயிக்கப்பட்ட நாட்கள்.

பாராளுமன்ற கருத்தரங்கில் கலந்துகொள்ள சென்ற நானும் அங்கிருந்தேன். டிசம்பர் திங்கள் 16-ம் தேதி காலை 8-30 மணிக்கு புது டில்லியில் தமிழ்நாடு இல்லத்தில் முதல் மாடியில் புரட்சித் தலைவர் அவர்கள் அறையில், அமைச்சர்கள், அதிகாரிகள் எல்லாம் தமிழகத்தின் திட்ட அளவை நிர்ணயிக்க விவாதித்துக் கொண்டுள்ளார்கள். கீழ்த் தளத்தில் தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதியின் வரவேற்பு அறையில் 94 வயது மதிக்கத்தக்க ஒரு பெரியவர் அமர்ந்துள்ளார். நான் அருகில் இருந்தவர்களிடம் அவரைப் பற்றி விசாரித்தேன். அவருக்கு 54 மொழிகள் தெரியும், எல்லா மொழிகளிலும் பல புத்தகங்கள் எழுதியுள்ளார், தற்போது சிலப்பதிகாரத்தை தமிழில் இருந்து உருதுவில் மொழிபெயர்த்துக் கொண்டுள்ளார். முதல்வர் அவர்களைச் சந்திக்க வந்துள்ளார்கள் என்று சொன்னார்கள்.

[பிற்பகல் 12-30]

புரட்சித் தலைவர் அவர்களுக்கு தற்போது உள்ள வேலைப் பளுவில் இது எப்படி சாத்தியப்படும் என்று நான் நினைத்துக் கொண்டிருந்த நேரத்தில் முதல்வர் அவர்களுக்கு இந்தப் பெரியவர் பற்றிய தகவல் தரப்பட்டது. தகவல் அறிந்தவுடன் புரட்சித் தலைவர் அவர்கள் பெரியவரை மாடிக்கு அழைக்கவில்லை—முதல்வர் அவர்களே மாடியில் இருந்து கீழே இறங்கி ஓடோடி வந்து பெரியவரைச் சந்தித்தார்கள். உலகத் தமிழ் மாநாட்டிற்கு வரும்படி அழைத்தார்கள். தாங்கள் சிலப்பதிகாரத்தை உருதுவில் மொழிபெயர்ப்பதன் வாயிலாக அரபு நாடுகளிலும் உலகில் எங்கெல்லாம் இஸ்லாம் உள்ளதோ அங்கெல்லாம் எங்கள் பெருமையும், இலக்கிய வளமும் உணர்வதற்கு வழி செய்கிறீர்கள்—ஆகவே, தாங்கள் அப்பணியை முடிக்க எப்படிப்பட்ட உதவி தேவைப்பட்டாலும் செய்யக் காத்திருக்கிறோம் என உறுதி கூறினார்கள். அவரிடம் பரிவோடு பேசி வழி அனுப்பி வைத்தார்கள். நான் சரித்திரத்தில் தமிழ் மன்னர்கள் தமிழ்ப் புலவர்களிடத்தில் காட்டிய பரிவை, பாசத்தைப் படித்திருக்கிறேன். ரசித்திருக்கிறேன். ஆனால் அன்று அந்த நெஞ்சை உருக்கும் நிகழ்ச்சி நான் படித்தவைகளுக்கு காட்சியாக காட்சியாக, அமைந்து விட்டது. தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு, தமிழ் மீது, தமிழ் அறிஞர்கள் மீது அவர் கொண்டுள்ள பற்றுதலை என்னால் உணர முடிந்தது. புரட்சித் தலைவர் அவர்கள் இடத்தில் வேறு யார் இருந்திருந்தாலும் இதற்குக் கூட ஒருவிதப் பெரியவிளம்பரத்தைத் தந்திருப்பார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் தமிழ் மீது, தமிழ் மக்கள் மீது கொண்டுள்ள பாசத்தை, தன் தன்னலமற்ற பணியின் வாயிலாக உணர்த்த முற்படுகிறாரே தவிர, விளம்பரத்தின் வாயிலாக அல்ல என்பதற்கு நடந்து முடிந்த உலகத் தமிழ் மாநாடே சாட்சியாக அமைந்துள்ளது.





ஆளுநர் உரையில், தமிழைப் பயிலுவதற்காக இந்நாட்டிற்கு வருகின்ற வெளிநாட்டு மாணவர்களுக்கு தாராளமாக படிப்புதவித் தொகைகள் வழங்குவது, வெளிநாடுகளில் உள்ள தமிழ் மக்கள், தமிழ் கற்க ஆசிரியர்கள் தேவைப்படும் பொழுது தமிழாசிரியர்களை அனுப்பி வைக்கவும், மத்திய அரசைக் கேட்டுக் கொள்வதும், மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கம் அமைக்க அரசு முடிவு செய்துள்ளதையும், எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்னும் கோட்பாட்டை செயல்படுத்த அரசு எடுத்துள்ள முயற்சிகள் பற்றியும் சொல்லப்பட்டிருப்பது பாராட்டுக்குரியதாகும்.

வறுமையை அடியோடு ஒழிக்க வேண்டும் என்ற கொள்கைக்கு முக்கியத்துவம் அளிக்க முன்வந்திருப்பதும், விலைவாசி ஏறுமுகத்தையும், அதைத் தொடர்ந்து பண வீக்க நிலை தொடர்ந்து இருப்பதையும் கண்டு இவ்வரசு கவலை கொண்டுள்ளதையும், நுகர் பொருள்களின் உயர்வு எதுவும் ஏற்படாமல், இரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள், டீசல் போன்ற இடுபொருள்களை உழவர்களுக்கு வழங்கவேண்டுமென அரசு கருதுவதையும், ஒரு குவிண்டால் நெல்லின் விலையை ரூ. 115 ஆகவும், ஒரு டன் கரும்பின் விலையை ரூ. 175 ஆகவும் உயர்த்தியுள்ளதையும், பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயிகள் நலனுக்காக 1980 ஆம் ஆண்டு மார்ச் 31 வரை உள்ள நிலவரப்படி கூட்டுறவுக் கடன்களுக்காக மாநில அரசு தன் சொந்த நிதியிலிருந்து 42 கோடி அனுமதித்துள்ளதும், தக்காவிக் கடன்களுக்காக 20,61,50,077 ரூபாய் தள்ளுபடி செய்திருப்பதும் பாராட்டுக்குரியது. இதனால் சுமார் 9,17,559 விவசாயிகள் பயன் அடைந்துள்ளனர். அதற்காக அரசுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

பருவ மழை பொய்த்ததன் காரணமாக என்னுடைய மாவட்டமான வட ஆற்காடு மாவட்டமும் புதுக்கோட்டை மாவட்டத்திலும் வறட்சி நிலைமை தோன்றியுள்ளது. இங்கு புதிய கிணறுகள் தோண்டவும், பழைய கிணறுகளை ஆழப்படுத்தவும், அரசு 1.30 கோடி அனுமதித்துள்ளது பாராட்டுக்குரிய செயலாகும். பயிர் விளைச்சல் 50 சதவீதத்திற்கும் குறைந்த நிலங்களுக்கு நிலவரியைத் தள்ளுபடி செய்துள்ளதைப் பாராட்டி நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

கிராமப்புற மக்களுக்கு உதவுவதற்காக திருத்தி அமைக்கப்பட்ட கிராமப்புற வேலை வாய்ப்புத் தேசியத் திட்டம், வளர்ச்சி வட்டாரங்களில் நிறைவேற்றப்படும். தன்னிறைவுத் திட்டங்கள் யாவும் பாராட்டப்பட வேண்டிய திட்டங்களாகும்.

கல்வித் துறையில், கோவை, திருச்சி ஆகிய இடங்களில் இரு பல்கலைக்கழகங்கள் துவங்க முன்வந்திருப்பதும், இவ்வாண்டிலேயே தமிழ்ப் பல்கலைக் கழகமும். மேலும் இரண்டு பல்கலைக் கழகங்களையும் துவங்க அரசு முன்வந்திருப்பது பாராட்டப்பட வேண்டிய செயலாகும்.

சென்னை நகருக்கு ரூ. 459 கோடி செலவில் காவிரி நீர் கொண்டு வருவது பற்றிய திட்டம், ரூ. 60 கோடி செலவில் பெரும் பகுதியினரைக் கொண்டு செல்லும் விரைவுப் போக்கு வரத்து திட்டம் போன்றவைகளின் மூலம் சென்னை நகரம் மேலும் முன்னேற்றமும், அழகும் பொலிவும் பெறும்.

நாட்டு மக்களின் நலன் ஒன்றையே கருத்தில் கொண்டு கடந்த சில மாதங்களில் அரசு சில அவசரச் சட்டங்களைப் பிறப்பித்தது. இந்த அவசரச் சட்டங்களுக்குப் பதிலாக சட்ட முன்வடிவுகள் இந்தக் கூட்டத் தொடரில் கொண்டுவரப்படும் என ஆளுநர் அவர்கள் தன் உரையில் சொல்லியிருப்பது பாராட்டுக்குரிய செய்தியாகும்.

இத்தகைய சிறப்பான உரையை அவைக்கு அளித்த ஆளுநர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து அமர்கிறேன். நன்றி வணக்கம்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் அளித்த உரையின் மீது நன்றி சொல்கின்ற தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. விஸ்வநாதன் அவர்கள் முன் மொழிந்ததை ஆதரித்து குடியரசுக் கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு உலகம் பாராட்டுகிற அளவிலே உலக சரித்திரத்திலே சிறப்பான எழுத்துக்களால் பொறிக்கப்பட மிகப் பெரிய கால கட்டமாம் உலகத் தமிழ் மாநாடு நல்ல முறையிலே நடந்தேறியது. உலகத்திலே இருக்கின்ற தமிழர்களை எல்லாம் தமிழுக்குப் பெருமை சேர்க்க ஒன்று கூட்டி மதுரையிலே சிறப்புச் செய்கிற முறையிலே மக்கள் வெள்ளம் 10 இலட்சத்திற்கு மேலாக இருந்தது என்று பத்திரிகைகள் எல்லாம் விளம்பிக் கொண்டு இருக்கின்றன. அப்படி 10 இலட்சம் தமிழர்கள் மதுரையிலே வெள்ளம் போல் கூடிய நேரத்திலே தன்னை தமிழினத் தலைவன் என்று சொல்லிக் கொண்டு நாட்டிலே அரசியலை நடத்திக் கொண்டிருக்கின்ற தமிழினத் தலைவர்கள் எல்லாம் அப்படித் தமிழர்கள் கூடுகிற கூட்டத்திலே இல்லாமல் போய்விட்டதற்கு காரணம் என்ன என்பதை எங்களால் புரிந்து கொள்ள முடிய





வில்லை. அல்லது தமிழினத் தலைவன் என்ற பட்டத்தை ஒரு வேலை நம்பிக்கையில்லாத் தீர்மானத்தாலே உலகத் தமிழ் மக்கள் எடுத்து விட்டார்களா என்று நாங்கள் எல்லாம் ஐயப்படுகின்ற நிலைமைக்கு ஆளாகியிருக்கிறோம். இன்றைக்கு தமிழர்கள் சிறிய அளவிலே மட்டுமல்ல, மாவட்டம், மாநிலம், நாடு என்று அத்தனையையும் கடந்து பரந்த அளவிலே பரந்த மனப்பான்மையிலே வாழ வேண்டுமென்ற தமிழர் பண்பாட்டை, தமிழர் கலாச்சாரத்தை, தமிழர் நாகரிகத்தை உலகத்திற்கு எடுத்துக் காட்டுகிற முறையிலே தமிழின் பெருமையை உலகத்திற்குக் காட்டுகிற முறையிலே புரட்சித் தலைவர் அவர்கள் அந்த மாநாட்டின் மூலமாக உணர்த்தியிருக்கிறார்கள். ஆனால் சில பேர்கள் மட்டும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள் எல்லாம் தமிழர் என்று ஒப்புக் கொண்டவர்கள் எல்லாம் கூட தமிழ் என்ற போர்வையைப் போற்றிக் கொண்டு தமிழர்களை மதிக்காமல் வீட்டிலேயே அடங்கிக் கிடந்தது எங்களுக்கு விந்தையாகத் தான் இருந்தது.

அப்படிப்பட்ட பெருமைக்கும் புகழுக்கும் அவர்கள் கொடுத்து வைக்கவில்லை என்று தான் எங்களால் சொல்ல முடியும். உலகத் தமிழ் மாநாட்டிற்குப் பின்னாலே உலகத் தமிழ் சங்கம் ஒன்று அமைக்க புரட்சித் தலைவர் அவர்கள் திட்டம் தீட்டியிருக்கிறார்கள். சரித்திரத்திலே இது போன்ற நிகழ்ச்சிகள் ஒரு சிலருக்குத் தான் செய்வதற்கு கொடுத்து வைக்க முடியும். அப்படிப்பட்ட பேற்றினையும் பெருமையையும் இன்றைக்கு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் பெற்று இருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

ஐந்தாண்டுத் திட்டச் செலவிற்காக நம்முடைய தமிழக சர்க்கார் மத்திய சர்க்காரிடமிருந்து—கேட்டு வாங்கிய நிதி ஒதுக்கீடு சிறப்பான முறையிலே இருக்கிறது என்பதை இந்த மாமன்றமே பாராட்டிக் கொண்டிருக்கிறது. அதை நிர்ணயிக்கிற வகையிலே வறுமைக் கோட்டிற்கும் கீழே இருக்கிற மக்களுடைய நிலையை வைத்துக் கணக்கிட்டுக் கேட்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். என்னைப் பொறுத்த வரையில் இன்னும் இந்த அரசை நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்வதெல்லாம், வறுமைக் கோட்டிற்கும் கீழே இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்களுடைய நலனை வைத்துக் கொண்டு அவர்களுடைய ஏழ்மை, வறுமை, அடிமைத் தனத்தை கணக்கிலே வைத்துக் கொண்டு ஆண்டுத் திட்டத்தை தீட்டுகிற முறையை அரசாங்கம் கவனத்திலே கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

விவசாயிகள் பிரச்சினையைப் பொறுத்த வரையில் 1½ ஏக்கர், 2 ஏக்கர் வைத்துக் கொண்டிருக்கிற அத்தனை விவசாயிகளுக்கும் மிகப் பெரிய சலுகைகள் செய்யக் கூடிய அளவுக்கு தாராள மனப்பான்மையைக் காட்டியிருக்கிறது இந்த அரசு. பெரிய நிலப் பிரபுக்கள் நிலத்தை தங்களுடைய கைகளிலே வைத்துக் கொண்டு, பாடுபட்டு உழைக்கிறவர்களை கொத்தடிமைகளாக வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அப்படிப்பட்ட விவசாயிக் கூலிகளுக்கும் சலுகைகள் செய்யக் கூடிய முறையிலே இந்த அரசாங்கம் திட்டங்களை தீட்ட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம், நாராயணசாமி நாயுடு அவர்களை கைது செய்ததற்கு மிகப் பெரிய எதிர்ப்பைக் கிளப்பி இருக்கிறது. அவரை அவசரச் சட்டத்தின் கீழ் கைது செய்தது தவறு என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். நான் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களைப் பார்த்துக் கேட்கிறேன், நாயுடு அவர்களை அவசரச் சட்டத்தின்கீழ் கைது செய்தது தவறு என்று சொல்கிறீர்களே, அவரை அவசரச் சட்டத்தின் கீழ் கைது செய்தது தவறு என்று சொன்னால் வேறு எந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டுமென்று சொல்கிறீர்கள், அதைச் சொல்லுங்கள். நீங்கள் அரசியல் இலாபத்திற்காக அவரை விடுதலை செய்ய வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள் . . . . . . . . . . . . . . . . . .

திரு. ஜே. எஸ். இராசு : நாயுடு அவர்களைக் கைது செய்தது பற்றி திரு. மூர்த்தி பேசுகிறார். கைது செய்தது நியாயம் என்று கருதிய இந்த அரசாங்கம் அவரை விடுதலை செய்ததே, அதற்கு என்ன காரணம் என்பதை அறிவிப்பாரா ?

[பிற்பகல் 12-40].

திரு. ஜி. மூர்த்தி : இன்றைக்கு விவசாயிகளினுடைய பிரச்னையை மேலும் வளர்க்கக் கூடாது என்பதற்காக மட்டுமல்லாமல், இது போன்று அரசியல் இலாபம் சம்பாதிப்பதற்காக இதை ஒரு காரணமாகக் காட்டி, மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தும் சூழ்நிலைகளாலும், அவர்கள் இந்த நாட்டிலே உள்ள நிலப் பிரபுக்களுக்குக் கொத்தடிமைகளாக வைக்கப்பட்டிருக்கின்ற அளவிற்கு, இனவெறி பிடித்தவர்களுக்கு வக்காலத்து வாங்கும் கேவலமான தன்மையை மக்கள் புரிந்துக் கொள்ளத் தவற மாட்டார்கள் என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.





அடுத்து, மீனவர்கள் எல்லா இடங்களிலும், அதிலும் குறிப்பாக இன்றைக்கு வீரபாண்டிப் பட்டணம், தூத்துக்குடி போன்ற இடங்களிலே உள்ள ஒரே இனத்திலே உள்ள மீனவர்கள் எந்த ஒரு இடத்திலும் மீன் பிடிக்கத் இடைக்காலத் தடை வாங்கி இருக்கிறார்கள். எல்லா விசைப் போட்டுகள், படகுகளை வைத்திருப்பவர்கள் அந்தப் பகுதியிலேயிருந்து இந்தப் பகுதிகளுக்குச் சென்று மீன் பிடிப்பது சம்பந்தமாக அரசாங்கம் ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உணவுக்கு வேலைத் திட்டம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. பேரணாம்பட்டு தொகுதியிலே இந்தத் திட்டம் சிறந்த பலனை அளித்துக் கொண்டு வருகிறது. முப்பதாண்டுக் காலமாக முன்னேற்றத்தைப் பார்க்காத அந்த பேரணாம்பட்டு தொகுதி மக்கள் உணவுக்கு வேலைத் திட்டத்தின் மூலமாகப் பல சாலைகள், கால்வாய்கள், கட்டிடங்கள், கிணறுகள் ஆகியவைகளை இந்தத் திட்டத்தின் மூலமாகச் சிறப்பான பலனைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நேரத்தில் மனம் திறந்து மதுவிலக்கு பற்றிக் கூற விரும்புகிறேன். மாண்புமிகு முதல்வரவர்கள் கேட்டுக்கொண்டகாரணத்தால் சொல்ல விழைகிறேன். மதுவிலக்கு பற்றி நாட்டிலே இன்றைக்குப் பேசப்பட்டு வருகிறது. இது மிக முக்கியமான பிரச்னை. மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டாமென்று இரண்டு தினங்களுக்கு முன் பேசிய சில உறுப்பினர்கள் கூறிய காரணம் என்னவென்றால், இதனால் தாய்க்குலம் பாதிக்கும், ஆகவே மதுவிலக்கை ரத்து செய்யக் கூடாது என்பதாகும். நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்றைக்குக் காவல் துறையினர் சில இடங்களில் தங்கள் மனச்சாட்சிக்கும் மீறி நடந்து கொள்ளும் நிலைமை இருக்கிறது. அப்பாவிகளாக இருக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்கள், ஏழை எளிய மக்கள், கடின உழைப்பைச் செய்து விட்டு வரும் தொழிலாளர்கள்—டானரி தொழிற்சாலைகளில் உப்பிலே மிதந்து விட்டு வருகின்ற அவர்களை மோந்து பார்த்தால் நமக்கே நாற்றம் எடுக்கும் அளவிற்கு இருக்கின்ற மிகவும் கஷ்டமான தொழிலைச் செய்துவிட்டு வருபவர்கள். அவர்கள் தூங்குவதற்காக இது போன்ற மதுபானங்களைக் கட்டாயமாக அருந்த வேண்டுமென்ற சூழ்நிலை இருக்கிறது. அப்படிக் குடித்துவிட்டுப் படுத்துக் கொண்டிருப்பவர்களைக்கூட காவல்துறையினர் தட்டியெழுப்பிச் செல்லும் கேவலமான நிலை இருப்பதால், வேறு எந்தக் காரணத்தைக் கொண்டு ரத்து செய்ய வேண்டுமென்று சொன்னாலும், போலீஸ்காரர்கள் இந்தக் கொள்கையைச் சரிவர நடைமுறைப்படுத்தவில்லை, தாறுமாறாக நடைமுறைப் படுத்துகிறார்கள் என்ற ஒரே காரணத்திற்காக, இவர்களின் பிடியிலேயிருந்து ஏழை எளிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் விடுதலை பெற வேண்டுமென்பதற்காக இந்த மது

விலக்கை உடனடியாக ரத்து செய்ய வேண்டுமென்று குடியரசுக் கட்சியின் சார்பாகச் சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இல்லை என்றால் அந்த மக்கள் படுகின்ற துன்பங்களுக்கு ஒரு விடுதலை கிடைக்க முடியாது என்பதால் எங்கள் கட்சியின் சார்பாக உடனடியாக மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிசன் என்ற பெயரை மாற்றியிருக்கிறார்கள். தமிழகத்திலே மட்டுமல்ல ; இந்தியாவிலேயே இதற்குச் சிறப்பான வரவேற்பு இருக்கிறது. தமிழகத்தின் முதல்வரவர்கள் இந்தக் கருத்தின் மூலம் தன்னைப் புரட்சித் தலைவர் என்பதை நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள். ஏதோ ஒரு மகான் இந்தப் பெயரைச் சூட்டிவிட்டார் என்பதற்காக அதையே மூடத்தனமாகப் பின்பற்ற வேண்டுமென்ற வெறி எதுவும் கூடாது. அந்தப் பெயர் இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களை இழிவுபடுத்துகின்ற வகையில் இருக்கிறது.

திரு. எல். இளையபெருமாள் : தலைவரவர்களே, அந்தப் பெயரை உத்தமர் காந்தியார் சொல்லவில்லை. சபர்மதி ஆஸ்ரமத்திலே இருந்த ஒரு சன்னியாசி சொன்னதுதான் அந்தப் பெயர். பல பிரிவுகளாக இருந்தவர்களை ஒன்று சேர்ப்பதற்காகச் சொல்லப்பட்ட பெயர் அது. அரசால் அங்கீகரிக்கப்பட்ட பெயர் அல்ல ; மத்திய அரசோ, மாநில அரசோ வேண்டுமானால் மாற்றம் செய்து கொள்ளட்டும். ஆனால் யாரும் மூடத்தனமாகச் சொல்லவில்லை என்பதை நான் கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. மூர்த்தி : நான் யாரோ ஒரு மகான் என்றுதான் சொன்னேனே தவிர காந்தி மகான் வைத்த பெயர் என்று சொல்லவில்லை. அந்தப் பெயரைச் சொல்லி, கடவுளின் பிள்ளை அரிசன் என்று சொல்கிறார்கள். ஆனால் ஐயப்பன் கோவிலுக்குச் செல்லுகிறார்களே தவிர கடவுளின் பிள்ளைகள் வாழும் சேரிக்குச் செல்லவில்லை. அரிசன் என்ற பெயர் இழிவு படுத்துவதாக இருக்கிறது என்பதற்காக பேரறிஞர் அம்பேத்கார் அவர்கள் அரிசன் கடவுளின் பிள்ளைகள் என்றால் அரிசன் அல்லாதவர்கள் வேறு எவருக்குப் பிறந்தவர்கள் என்று கேட்பார்கள். அந்த இழிநிலையைப் போக்க வேண்டுமென்றுதான் சொல்கிறேன் ; அரிசன் என்று அழைத்துக் கொள்ளத் தயாராக இல்லை. உணர்வுபூர்வமாக இந்த நாடு திராவிட நாடு, நாங்கள் ஆதி திராவிடர்கள். திராவிட உணர்வோடு இந்த நாட்டிற்குச் சொந்தக்காரன் என்ற உரிமையோடு.........





திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லும்போது, ஏதோ அரிசன் என்பது எங்களுக்கு இழிவாகப் படுகிறது. அதை யார் வைத்தார்களோ, அது வேறு சமாச்சாரம். ஆனால், அரிசன் என்பது இழிவாகப் படுகிறது. என்று சொன்னார்கள். 112 பிரிவுகள் உள்ள அந்த ஜாதி லிஸ்டில் ஒரு பிரிவைச் சேர்ந்த ஆதி திராவிடர் என்ற பெயர் வைப்பதை மட்டும் அந்த மக்கள் அத்தனைபேரும் ஏற்றுக்கொள்வார்களா ? எதற்காக அந்தப் பிரிவினை செய்யவேண்டும்? ஏன் என்று எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லையென்றுதான் நாங்கள் பேசினோம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. என். எஸ். வி. சித்தன்) மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தாங்கள் பேசுகின்ற பொழுது சொல்லலாம். அல்லது தங்கள் கட்சியினர் பேசுகின்றபொழுது சொல்லச் சொல்வது பொருத்தமாக இருக்கும். இப்படிக் குறுக்கிட்டுக் கொண்டே போனால் நேரம் அதிகமாகும்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உறுப்பினர் இருக்கையில் உட்கார்ந்திருக்கும்போது அதைத் தாங்கள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் (சிரிப்பு)

திரு. ஜி. மூர்த்தி : நான் இந்தக் கருத்தைச் சொல்லும்போது அரிசன் என்ற வார்த்தை இழிவு என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அதிலே எங்களுக்குத் தடை இல்லை. நாங்கள் அதை இழிவு என்று நினைக்கிறோம். நாங்கள் எங்களுடைய கருத்தைச் சொல்கிறோம். அந்த இழிவை அவர்கள் ஏற்றுக்கொள்ளச் சம்மதம் என்று சொன்னால் ஏற்றுக்கொள்ளட்டும். அதற்கு நாங்கள் தடையாக இல்லை. ஆகவே, இன்றைக்குத் தமிழ்நாடு என்றால், திராவிட நாடு என்று எண்ணுகிறோம். திராவிட நாட்டிற்குச் சொந்தக்காரன் ஆதி திராவிடன் என்கிற உணர்வு இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. கர்நாடகம் — ஆதி கர்நாடகா, ஆதி ஆந்திரா என்று வருகிறது. ஆகவே, இந்த நாட்டிற்குச் சொந்தக்காரன் தாழ்த்தப்பட்டவன் என்பதை உளப்பூர்வமாக இன்றைக்கு இந்தச் சட்ட மன்றம் ஒத்துக் கொண்டிருக்கிறது. அந்தப் பெயர் மாற்றத்திற்குப் பெருமைப்படுறோம் அதைக் கொண்டு வந்த தமிழக முதல்வருக்கும், அரசுக்கும் குடியரசுக் கட்சியின் சார்பிலே எங்களுடைய மனமார்ந்த பாராட்டினைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

[1981] ஜனவரி 27

*திரு பி. துரைராஜ் : மாண்புமிகு சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 21 ஆம் நாள் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் இம்மாமன்றத்தில் ஆற்றிய உரையின் மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துக்கள் சிலவற்றை இங்கே வைக்க ஆசைப்படுகிறேன்.

ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டை மாமதுரையில் வெகு சீரும் சிறப்புமாக நடத்திய மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைப் பெரிதும் பாராட்டக்கூடிய அந்தப் பேரறிஞர்களுடைய பட்டியலில் என்னையும் இணைத்துக் கொள்வதிலே பெருமகிழ்ச்சி அடைகிறேன். உலகத் தமிழ் மாநாடு எவ்வளவு சீரும் சிறப்புமாக இருந்தது என்பதை அங்கே வந்திருந்தவர்கள் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் அது சிறப்பாக இருந்தது. அதற்காக நானும் புரட்சித் தலைவரைப் பாராட்டக் கடைமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்னும் கோட்பாட்டை ஏற்படுத்துவதற்கு புரட்சித் தலைவர் அரசானது முயற்சிக்கும் என்று இங்கே குறிப்பிட்டதற்காக மிகவும் பெருமைப் படுகிறேன் என்பதை சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். அதே நேரத்தில் சென்னை நகரின் சாலைகளுக்குள்ள மற்ற பெயர்களையெல்லாம் தமிழ் அறிஞர்கள் பெயர்களாக மாற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே, குறிப்பாக, தமிழக அரசை நான் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். உதாரணமாக, இங்கே எத்தனையோ பெயர்கள் இருக்கின்றன. பார்த்தியன் சாலை என்றிருக்கிறது. அதற்கு பாவாணர் சாலை என்றுகூடப் பெயர் வைக்கலாம். இப்படிப்பட்ட பெயர் களை எல்லாம் மாற்றி, தமிழ் அறிஞர்களுடைய பெயர் களை அச்சாலைகளுக்கு இடவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்வதில் பெருமைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர், மத்திய சர்க்கார் திட்டக் குழுவிலே பரிந்து, கனிந்து பேசி, ஏறக்குறைய ரூ. 3,150 கோடி அளவுக்கு, தமிழ்நாட்டிற்கு ஒதுக்கீடு பெற்றமைக்கு நான் இந்த அரசைப் பாராட்ட கடமைப்பட்டிருக் கிறேன். சிறு விவசாயிகளுடைய கடன்தொல்லையெல்லாம் தீர்க்கும் பொருட்டு நம்முடைய புரட்சித் தலைவர் ஏறக் குறைய ரூ. 100 கோடி அளவுக்கு கடன்களை ரத்து செய்திருக் கிறார்கள். அதற்காக நான் பாராட்டக் கடமைப் பட்டிருக் கிறேன்.



[1981 ஜனவரி 27] [திரு. பி. துரைராஜ்]

[illegible] விவசாயிகளுடைய பிரச்சினைகளைக் குறித்து இங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் மற்றவர் களும் பேசினார்கள். ஆனால், உண்மையிலே விவசாயிகள் [illegible]நிலையானது மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியில் [illegible]பட்டதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்று [illegible]க்கொள்கிறேன். 7 ஆண்டு காலம் ஆண்ட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இதே விவசாயிகள் தங்களுடைய 9 அம்சக் கோரிக்கைகளுக்காக போராட்டம் நடத்தியதையும் [illegible]க் போராட்டத்தை எதிர்த்து அன்றைய தினம் ஆட்சி [illegible]ய திராவிட முன்னேற்றக் கழக அரசு துப்பாக்கிப் பிரயோகம் செய்து ஏறத்தாழ 19 பேர் உயிர்கள் பலி [illegible]ப்பட்டதை தமிழக மக்கள் மறந்திருக்க மாட்டார்கள் என்று [illegible]க்கொள்ள ஆசைப்படுகிறேன்.

என்னுடைய தொகுதியில் சங்கரன்கோயில் வட்டத்தில் [illegible] துப்பாக்கிச் சூடு குறித்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒரு குழு ஆராயச் சென்றது. உண்மை [illegible] அவர்கள் மனசாட்சிப்படி அங்கே பேசிவிட்டு வந்திருந் தால், உண்மையிலே அவர்கள் அங்கே விவசாயப் போராட்டத்தில் [illegible]பட்டவர்கள் போக்குவரத்து நடைபெறாத அளவு [illegible]யை எந்த அளவு சேதப்படுத்தினார்கள் என்பதைப் பார்த்திருப்பார்களானால், நிச்சயமாக அங்கே அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் சரியானதா, இல்லையா என்பதை உணர்ந்திருக்கக்கூடும். அங்கே, போக்குவரத்தைத் தடை செய்ய வேண்டுமென்பதற்காக, அங்கே 20, 30 தார் [illegible]களை கொண்டு வந்து தீயை வைத்து கொளுத்தி, ரோடு [illegible] முழுமையாக தாரை உருக்கி ஊற்றி, பஸ் போக்கு வரத்து, நடைபெறாத அளவுக்குச் செய்தார்கள். அந்தத் துப்பாக்கிச் சூடு நடந்த துறிஞ்சாக்குளம் என்ற கிராமத்திலே அவர்கள் சென்று பார்த்திருப்பார்களானால், அங்கே குழிகள் [illegible]பட்டு, ஏறத்தாழ 6 அடி குழாய்கள் தோண்டப் பட்டு, போக்குவரத்துக்கள் நடைபெறாத அளவுக்குத் தடை செய்திருந்தார்கள்.

[பிற்பகல் 12-50]

அந்தப் போக்குவரத்துத் தடைகளை நீக்குவதன் பொருட்டு அங்கிருந்த காவல் துறையினர், அவர்களை அந்தக் குழிகளை எல்லாம் மூடிக்கொண்டிருந்தபோதுதான் இந்த மாதிரி நிலைமை ஏற்பட்டு அந்த விவசாயிகள் கொடுமைகளுக்கு ஆளாக்கப் பட்டார்கள். ஒரு போலீஸ்காரர் குத்திக் கொலை செய் யப்பட்ட நிகழ்ச்சிக்குப் பிறகுதான் அங்கே துப்பாக்கிச் சூடு நடைபெற்றிருக்கிறது என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் பாரதப் பிரதமர் இந்திரா [illegible] அம்மையார் அவர்கள் கூட சொல்லி இருக்கிறார்கள்

[திரு. பி. துரைராஜ்] [1981 ஜனவரி 27

அரசாங்க அதிகாரிகள் கடமையைச் செய்கிறபோது அவர்களுடைய உயிருக்கு ஆபத்து வருகின்ற நேரத்தில் அவர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தாமல் வேறு என்ன செய்து தப்பித்துக் கொள்ள முடியும் என்று அவர்கள் திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறார்கள். விவசாயிகளுக்குகாக இன்றைக்குப் பரிந்து பேசக்கூடிய எதிர்க்கட்சிக்காரர்கள் இதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

விவசாயிகளுடைய பிரச்சினையானது அன்றையதினம் திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சியிலே இருந்தபோது மின்சாரக் கட்டணத்தை ஒரு யூனிட்டுக்கு ஒரு பைசா அதாவது 12 பைசாவில் இருந்து 13 பைசாவாக உயர்த்தியதை எதிர்த்து விவசாயிகள் போராடிய நேரத்திலும், அப்பேர்ப்பட்ட பேராட்டத்தை பல முறை இரும்புக் கரம் கொண்டு அடக்க ஏறத்தாழ 18 பேர்களுடைய உயிரைப் பறித்தார்கள். ஆகவே இன்றைய தினம் அந்த விவசாயிகளுக்காக நீலிக் கண்ணீர் வடிக்கிறார்கள் எதிர்க்கட்சிக்காரர்கள். இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் பேசி இருக்கிறார்கள். விவசாயிகளுக்காக நீலிக் கண்ணீர் வடிக்கின்ற எதிர்க்கட்சிக்காரர்கள், அவர்கள் ஆட்சியில் இருந்த காலத்தில் அவர்களுக்கு என்ன சலுகைகளைச் செய்தார்கள். அவர்களுக்கு என்ன நன்மைகளைச் செய்தார்கள், என்று அவர்கள் கேட்பதைப்போல நானும் இங்கே கேட்க விரும்புகிறேன்.

ஆகவே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் விவசாயிகளுக்கு எவ்வளவோ சலுகைகளை அளித்திருக்கிறது என்பதை இந்த மன்றத்தில் கூற ஆசைப்படுகிறேன். ஏனென்றால் தேசத்தின் அவசர கால நிலைமையை வைத்து மின்சாரக் கட்டணத்தை 12 பைசாவில் இருந்து 16 பைசாவாக உயர்த்தியது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான். அதை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் அதை உடனடியாக 16 பைசாவில் இருந்து 12 பைசாவாக குறைத்தது என்பதை விவசாயிகள் மறந்துவிடவில்லை.

இதற்கெல்லாம் மேலாக அண்ணா அவர்கள் சொன்னார்கள், எதிரியாக இருந்தாலும் கூட நல்ல காரியங்களைச் செய்தால் பாராட்டவேண்டும், அதுதான் மனிதத்தன்மை என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். ஆனால் இன்றைய தினம் விவசாயிகள் பிரச்சினையில் 60 கோடி ரூபாய் அளவுக்கு இந்த அரசாங்கம் தன்னுடைய நிதி நிலைக்கு வசூலாக [illegible] ரத்து செய்திருக்கிறதே அதற்கு ஒரு சொல்லாவது [illegible] பாராட்ட வேண்டாமா. அந்த அளவுக்கு ரத்து செய்ததை [illegible] பாராட்டுகிறேன். மேலும் நிலப் பிரபுக்களாக



[1981 ஜனவரி 27] [திரு. பி. துரைராஜ்]

[illegible]க்கக்கூடியவர்கள்—அதாவது விவசாயிகளின் பேரால் கடன் [illegible] மாட மாளிகைகளிலும், கூட கோபுரங்களிலும் வாழ்ந்து [illegible]மா கொட்டகை போன்ற பலவிதமான ஆடம்பரச் செலவு[illegible]யும் செய்கின்றவர்களின் கடன்களை ரத்து செய்ய [illegible]ண்டும் என்று, அவர்களுக்காகப் பரிந்துரை செய்கிறோம் [illegible] பேசுகிறவர்களுடைய மனப்போக்கை நாம் [illegible]ப் பார்க்க வேண்டும்.

விவசாயிகளுக்காக இந்த ஆண்டு 60 கோடியும், சென்ற [illegible]ண்டு 40 கோடியும் இந்த அரசு ரத்து செய்திருக்கிறது என்[illegible] பணிவோடு இந்த நேரத்தில் கூறிக் கொள்ள விரும்பு[illegible]றேன்.

அடுத்தபடியாக இந்த கவர்னர் உரையிலே ஏழை எளிய[illegible] குடும்பத்தில் ஒருவருக்கு, வீட்டுக்கு ஒருவருக்கு வேலை [illegible]கொடுக்க முயற்சி எடுக்கப்படும் என்று கூறியிருப்பதை உள[illegible]மாரப் பாராட்டுகிறேன். இன்றையதினம் சமுதாயத்தின் மேல் [illegible]மட்டத்தில் உள்ளவர்கள், பணக்காரர்கள் ஒரு குடும்பத்தில் [illegible] 5 பேர்களும் டாக்டருக்குப் படிக்கிறார்கள். அப்படி [illegible]அவர்களுடைய குடும்பங்களை மேல் நிலைக்குக் கொண்டு [illegible]கிறார்கள். ஆனால் தாழ்த்தப்பட்ட குடும்பத்தில் [illegible] வீடுகளில் உள்ள பிள்ளைகள் 5 பேர்களும் படித்து [illegible]ட்டாலும் காலத்தில் அவர்கள் பதியாத காரணத்தினால் [illegible]ந்த வேலை வாய்ப்பு நிறுவனத்தின் மூலமாக ஒருவருக்கும் [illegible] இன்றையதினம் வேலையில்லாமல் அந்தக் குடும்பம் எவ்வளவோ கஷ்டப் ட்டுக் கொண்டு இருக்கிறார்கள். சமீபத்தில் கூட அடையாற்றில் ஒரு போலிஸ்காரனுடைய மகன், பி.ஏ., படித்தவன் கடந்த 5 ஆண்டு காலமாக வேலை கிடைக்கவில்லை என்ற காரணத்தாலே தற்கொலை செய்து கொண்டான் என்று பத்திரிக்கைகளிலே செய்தி பார்க்கிறோம். அப்படிப்பட்ட நிலைமைகளை உணர்ந்துதான் புரட்சித் தலைவர் அவர்களுக்கு இப்படிப்பட்ட எண்ணம் பிறந்திருக்கிறது என்பதை உள்ளபடியே பாராட்டுகிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நெல்லை மாவட்டத்திலேயே [illegible]ங்கரன்கோவில் தொகுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதி [illegible]. இது மிகவும் வறட்சி மிகுந்த பகுதி என்பதை [illegible]வரும் அறிந்திருக்கிறார்கள். வானத்தில் மழை பெய்தால் [illegible] அதை வைத்துக் கொண்டுதான் விவசாயம் செய்யப் [illegible] பகுதியாக இருப்பதால் அந்தப் பிரதேசத்தில் பருவ மழை [illegible] காரணமாக மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

[திரு. பி. துரைராஜ்] [1981 ஜனவரி 27

அங்கே சென்றபோது நீங்கள் எல்லாம் கூட பார்த்து இருக்கலாம். விவசாயிகள் போட்ட பயிர்கள் எல்லாம் சாவியாகி கருகியிருக்கும் நிலை இருக்கிறது. அந்த அளவிற்கு சங்கரன்கோவில் பகுதியில் வறட்சி இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியையும் வறட்சிப் பகுதியாக அறிவித்து, இந்த அரசாங்கம் அதற்கான நிவாரணப் பணிகளை மேற்கொண்டு, அந்த விவசாய மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்று விரும்பி வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், சங்கரன்கோவில் பகுதி மிகவும் வறட்சியான பகுதியாக இருப்பதால், விவசாயம் தவிர வேறு வேலை செய்ய தொழிற்சாலை அங்கே இல்லாத காரணத்தால், அங்கே இருக்கக்கூடிய மக்கள் குறிப்பாக தாழ்த்தப்பட்ட அரிசன மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அந்த சங்கரன் கோவில் பகுதியில் ஒரு கூட்டுறவு நூற்பாலை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று விரும்பி வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆளுநர் உரையில் ஒரு முக்கியமான அம்சம் குறிப்பிடப்பெற்றுள்ளது. கேரள மாநிலத்தில் இருந்து கடலில் வீணாகச் சென்று கலக்கும் நீரைத் தமிழகத்திற்குத் திருப்பும் பணி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைக் கண்டு நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். இதை விட மகிழ்ச்சியான செய்தி எங்களுக்கு வேறு இல்லை. இந்தத் திட்டம் நிறைவேற்றப் பட்டால், சங்கரன்கோவில், ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர் போன்ற பகுதிகளில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் மிகவும் பயன் பெறுவார்கள். ஆகவே, இந்தத் திட்டத்தை விரைவில் முடிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1967 ஆம் ஆண்டில் நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது அறிஞர் அண்ணா அவர்களிடத்தில் இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மனு ஒன்று கொடுத்து இருந்தேன். அந்த நேரத்திலேயே இது குறித்து கேரள அரசோடு பேச ஒரு தூதுக்குழு அனுப்பப்பட்டது. அப் போது அவர்கள் சொன்னார்கள். பம்பையாற்றின் குறுக்கே நாங்கள் ஒரு அணை கட்டி வருகிறோம். அது கட்டி முடிக்கப்பட்டவுடன் எஞ்சிய நீரை நாங்கள் தமிழகத்திற்குத் தருகிறோம் என்று சொன்னார்கள். ஆகவே 10 ஆண்டுகளுக்கு முன்பே அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இப்போது மீண்டும் அது குறித்துப் பேசி அந்தத் திட்டத்தை இங்கே நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும் என்று புரட்சித் தலைவர் அவர்களை நான் கேட்டுக் கொள் கிறேன்.



1981 ஜனவரி 27] [திரு. பி. துரைராஜ்]

இந்த தமிழக அரசுக்கு அரிசன பெருங்குடி மக்களின் நிலை பற்றி நான் ஓரிரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நெல்லை மாவட்டத்தில் சங்கராங் குளம் என்ற கிராமத்திலே எவ்விதமான துன்ப நிலை தாழ்த்தப்பட்ட மக் களுக்கு ஏற்பட்டது என்பதைக் குறித்து நாங்கள் புரட்சித் தலைவர் அவர்களிடத்தில் எடுத்துச் சொல்லி, அதற்கு ஒரு நீதி விசாரணை வேண்டும் என்று கேட்ட நேரத்தில், புரட்சித் தலைவர் அவர்களே, அந்த கிராமத்திற்கு விஜயம் செய்து, அந்த உண்மை நிலையை உணர்ந்து, அதற்காக நீதி விசாரணை போட்டு இருக்கிறார்கள். அதற்காக தாழ்த்தப்பட்ட மக்கள் சமுதாயத்தின் சார்பில் புரட்சித் தலைவர் அவர்களுக்கு நான் பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

மேலும், அந்த தாழ்த்தப்பட்ட மக்கள் உண்மை நிலையை எடுத்துச் சொல்லி, அரசாங்கத்தின் கவனத்தை ஈர்க்கவேண்டும் என்பதற்காக ஒரு ஊர்வலம் நடத்திய நேரத்தில் அது சட்ட விரோதமானது என்று கூறி, அந்த அரிசன மக்களின் மீது வழக்குப் போட்டு இருக்கிறார்கள். அந்த வழக்கைப் பற்றி மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆலோசனை செய்து அதை வாபஸ் பெற ஆணை போடவேண்டும் என்று விரும்பி வேண்டி கேட்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

•

## 8, அறிக்கை அளித்தல்

### விடுதலைப் போராட்ட வீரர்களின் ஓய்வூதியத்தை அதிகப் படுத்தல்—நிதி அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் 106-வது விதியின் கீழ் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஓர் அறிக்கையை இப்போது அளிப்பார்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படும் மாநில ஓய்வூதியத் திட்டத்தின்கீழ், மாநில ஓய்வூதியம் மட்டும் பெற தகுதி படைத்தவர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியத் தொகை ரூ. 100 ஆகவும், மத்திய, மாநில ஓய்வூதியம் இரண்டும் பெற தகுதி படைத்தவர்களுக்கு மாதாந்திரம் ஓய்வூதியத் தொகை ரூ. 75 ஆகவும் இப்பொழுது இருந்து வருகிறது.

விடுதலைப் போராட்ட வீரர்களின் சிரம நிலையைப் பரிவுடன் கருத்தில் கொண்டு இவர்கள் பெற்று வரும் மாநில ஓய்வூதியத் தொகையை அதிகப்படுத்திட இந்த அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி மாநில ஓய்வூதியம் மட்டும் பெற

தகுதி படைத்தவர்களுக்கு ரூ. 100-லிருந்து ரூ. 150 ஆகவும் மத்திய, மாநில இரண்டு ஓய்வூதியமும் பெற தகுதி படைத்தவர்களுக்கு ரூ. 75-லிருந்து ரூ. 100 ஆகவும் 25—1—1981 முதல் உயர்த்தப்படுகிறது. இதனால் ஒரு ஆண்டுக்கு அரசுக்கு கூடுதலாக ரூ. 50 இலட்சம் (சுமாராக) செலவாகும்.

விடுதலைப் போராட்ட ஓய்வூதியம் பெறுவோர்கள் குறைந்த பட்சம் 3 மாத சிறை தண்டனை அனுபவித்திருக்க வேண்டும் என்பதற்கு பதிலாக 1 மாத சிறை தண்டனை அனுபவித்திருந்தாலே போதுமென்று 1—4—1980 அன்று தமிழக அரசு ஆணையிட்டுள்ளது. அதன் அடிப்படையில் அநேக மனுக்கள் அரசுக்கு வந்து அவை விசாரிக்கப்பட்டு ஆணையிடப்படும் நாளிலிருந்து ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இதனை 1—4—1980-லிருந்தே முன் தேதியிட்டு வழங்க வேண்டும் என்று விடுதலைப் போராட்ட ஓய்வூதியம் பெறுவோரின் கோரிக்கையை அரசு பரிவுடன் ஏற்று 1—4—1980 ஆம் தேதியிலிருந்தே ஓய்வூதியம் வழங்கப்பட அரசு முடிவு செய்துள்ளது. இந்த சலுகைகளை இந்தப் பேரவை உறுப்பினர்களும் விடுதலைப் போராட்ட வீரர்களும் மனமார வரவேற்பர் என நம்புகிறேன். (கைதட்டல்).

[பிற்பகல் 1-00]

## 7. ஆளுநர் உரைக்கு நன்றிகூறும் தீர்மானம் விவாதம்—(தொடர்ச்சி)

*திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : வணக்கத்திற்குரிய சட்டப் பேரவைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையிலே நல்லவைகளைப் பாராட்டியும், குறைகளைச் சுட்டிக்காட்டவும் காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே பேசுகின்ற வாய்ப்பினை நல்கிய தலைவருக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்ட மன்ற உறுப்பினர்களிலே மிகப்பெரும்பான்மையோர் பஸ்களிலே பயணம் செய்கின்றவர்கள்தான். எனவே அவர்கள் சாதாரண ஏழை எளிய மக்களோடு தொடர்பு கொண்டிருக்கிற காரணத்தால், ஏழை எளிய மக்கள் என்ன பிரச்சனைகளை எழுப்புகிறார்கள் என்பதை இந்த சபையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அமைச்சர் பெருமக்கள் நான் கூறுகின்ற குற்றச்சாட்டுகளைக் கண்டு என்மீது குறைபட்டுக்கொள்ளக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல வேண்டுமானால் பேரறிஞர் அண்ணா அவர்கள் இதே மாமன்றத்திலே ஒரு





உதாரணத்தைச் சொன்னார்கள். அன்றையதினம் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மரியாதைக்குரிய காலஞ்சென்ற கருத்திருமன் அவர்களும், இப்போது மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு ஹண்டே அவர்களும் எதிர்க்கட்சி வரிசையிலே இருந்து கொண்டு ஆளும்கட்சியை சாடு இன்றபோது சொன்னார்கள். கருத்திருமன் அவர்கள் பூனை தன் எதிரியான எலியைக் கௌவுவது போல குற்றஞ்சாட்டினார்கள் ; ஆனால் ஹண்டே அவர்கள் பூனை தன் குட்டியை கௌவிச் செல்வதுபோல குற்றஞ்சாட்டினார்கள் என்று சொன்னார்கள். அந்த முறையிலே இப்போது நான் சொல்கிறேன்.

[மாண்புமிகு மாற்று தலைவர் தலைமை]

ஆளுநர் உரையிலே உலகத் தமிழ் மாநாட்டைப் பற்றிச் சொன்னார்கள். உலகத் தமிழ் மாநாட்டைப் பொறுத்தவரை வரலாற்றிலே யாரும் செய்ய முடியாத சாதனை என்பதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். ஆனால் பொது மக்கள் என்ன பேசுகிறார்கள் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் திருவுருவத்தைத் தாங்கிய ரதம் வந்தது ; பாராட்டுகிறேன். அண்ணா அவர்கள் இந்த நாட்டு முதலமைச்சராக இருந்தார்கள். தன்னுடைய நா வன்மையால் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களின் உள்ளங்களிலே குடி கொள்ளும் ஆற்றல் பெற்றிருந்தார்கள். எனவே, அவர்களுடைய திருவுருவம் ஊர்வலத்தில் வந்தது பற்றி பெருமைப்படுகிறோம். ஆனால், அதே நேரத்தில், இந்த நாட்டின் விடுதலைக்காகப் போராடி, 10 ஆண்டு காலம் சிறை சென்று, 10 ஆண்டு காலம் இந்த நாட்டின் முதலமைச்சராக இருந்து, தனக்கென்று எதுவுமே செய்துக்கொள்ளாது, '' ஆண்டி கையிலே ஓடு இருக்கும் ; அது கூட உனக்கு இல்லையே ஐயா '' என்று சொல்லக் கூடிய அளவுக்கு வாழ்ந்த எங்கள் இதய தெய்வம் பெரும் தலைவர் காமராஜ் அவர்களுடைய திருவுருவம் அங்கே அலங்கார ரதத்திலே வரவில்லை என்ற ஏக்கம் தமிழர்கள் உள்ளத்திலே இருக்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பேரறிஞர் அண்ணாவின் திருவுருவத்தை அலங்கார ரதத்தில் வைப்பது பற்றி கவலையில்லை. அதைப் போன்று, இனி வருகின்ற அரசு விழாக்களிலே அண்ணாவுடன், பெருந்தலைவர் காமராஜ் அவர்களும் முதல் கவர்னர் ஜெனரலாக இருந்த சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரி ஆகியோர் உருவங்கள் இடம்பெறச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போன்று, விவசாயிகளுக்கு பல சலுகைகளை அளித்திருக்கிறார்கள் ; பாராட்டுகிறேன். நெல்லுக்கு 115 ரூபாய் விலை கொடுக்கும்போது, அவர்களுக்கு ஒன்று சொல்கிறேன். இன்றையதினம் விவசாயிகளைப்பற்றி நாமெல்லாம் பெருமையாகச் சொல்கிறோம். ஆனால் விவசாயிகளுடைய உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான விலை கிடைகவில்லை என்பதை

ஒப்புக்கொள்ள வேண்டும். கிட்டத்தட்ட 800 ரூபாய்க்கு அல்லது 1,000 ரூபாய்க்கு வாங்கிவந்த உழவு மாடுகள் இன்றைய தினம் 3,000 ரூபாய்க்கு வாங்க வேண்டியிருக்கிறது; அதே போல உற்பத்திச் செலவு ஏகப்பட்ட ரூபாய் ஆனாலும் கூட அந்த விளை பொருள்களுக்கு நியாயமான விலை சரியாக கிடைக்கவில்லை. உரத்தின் விலை இன்றைய தினம் பல மடங்கு கூடியிருக்கிறது. காரணம், 400 கோடி ரூபாய் உரத்திற்கு மானியமாக மத்திய அரசு வழங்கியது. இப்பொழுது அந்த மானியம் நிறுத்தப்பட்டுவிட்டது. அந்த மானியத்தை மறுபடியும் தரவேண்டுமென்று மாநில அரசு மைய அரசைக் கேட்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய அரசு ஒப்புக்கொள்ளாதநிலையிலே கூட மாநில அரசு தன்னுடைய சொந்த நிதியிலிருந்து 42 கோடி ரூபாய் அளவுக்கு கூட்டுறவுக் கடனை தள்ளுபடி செய்து பிறகு மேலும் 20 கோடி ரூபாய்வரையில் தள்ளுபடி செய்திருப்பதை நான் வரவேற்கிறேன். இது முறையாக செயல்படுகிறதா என்று கவனித்துக் கொள்ள வேண்டும். இந்த அரசு விவசாயிகளின் நலத்தின் மீது இவ்வளவு அக்கரை கொண்டிருக்கின்றது என்பதை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில் விவசாயிகளுக்கு மேலும் பல சலுகைகள் வழங்குவதற்கு என்னென்ன செய்யலாம் என்றெல்லாம் ஆராய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். உதாரணமாக நகரப் பஞ்சாயத்து, கிராமப் பஞ்சாயத்து ஆகியவை ரோடுகள் விஸ்தரிப்பு, குடிநீர் வசதி போன்றவற்றிற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஒப்புதல் பெற்று இம்ப்ரூமெண்ட் (அபிவிருத்தி வரி) டாக்ஸ் என்று ஒரு வரியைப் போடுவார்கள். அதே போன்று சினிமா டிக்கட்டுகளில் அக்ரிகல்சர் டாக்ஸ் (விவசாய வரி) என்று 10 பைசா வீதம் வசூல் செய்தால் பல கோடி ரூபாய் அரசுக்கு கிடைக்கும். அதை வைத்து விவசாயிகளுக்கு இலவசமாக பூச்சிக்கொல்லி மருந்து, உரங்கள் போன்றவற்றை மானியமாகவும், ஏழை விவசாயிகளுக்கு உழவு மாடுகள், உழவுக் கருவிகள் போன்றவற்றை இனாமாகவும் வழங்கலாம். ஆகவே, அந்த திட்டத்தை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்றையதினம் நெல்லினுடைய விலை ஏன் உயர்ந்திருக்கின்றது என்பதை மரியாதைக் குரிய உணவு அமைச்சர் அவர்களுக்கு சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அதிகாரிகள் தங்கள் இஷ்டம் போல் செயல்படுவதற்காக இன்றையதினம் திட்டங்கள் தீட்டி வருகிறார்கள். அதிகாரிகள் மக்களுடைய சேவகர்கள் தான். ஆனால் அமைச்சர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள். ஆகவே நீங்கள் தான் அதிகாரிகளை தட்டிக் கேட்க வேண்டுமே தவிர அதிகாரிகளுடைய சொல்லுக்கு ஆட்பட்டுவிடக்கூடாது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நெல் கொள்





முதலைப் பொறுத்தவரையில் இப்போது மொத்த வியாபாரிகளுக்கு 40 சதவீதம் லெவி வசூல் செய்ய வேண்டும் என்று சட்டம் போடப்பட்டிருக்கின்றது. இந்த சட்டத்தினால் ஏற்படும் பாதகங்களைத் தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதுவரை சாதாரணமாக குவிண்டாலுக்கு 140 ரூபாய் விவசாயிகளுக்கு கொடுத்து வியாபாரிகள் நெல்லை வாங்கிக் கொண்டிருந்தார்கள். ஆனால் இப்போது 40 சதவீதம் லெவி என்று போட்ட உடனேயே அந்த 140 ரூபாய்க்கு வாங்காமல் 120 ரூபாய்க்கு வாங்குகிறார்கள். அப்படி விவசாயிகளிடம் வாங்கி தன்னுடைய நஷ்டத்தைச் சரிகட்ட வெளியிலே 190 ரூபாய்க்கு விற்கிறார்கள். ஆக இந்த வகையிலே பார்த்தால் விவசாயிகளுக்கு இது சாதகமாக இல்லை. மேலும் இதிலே அதிகாரிகளுடைய கெடுபிடி அதிகமாக இருக்க ஏதுவாகும். முன்பு 20 சதவீதம் லெவி போட்டதற்கே எவ்வளவு எதிர்ப்பும் கண்டனமும் எழுந்தது என்பதை நான் இங்கு நினைவூட்ட விரும்புகிறேன். ஆகவே இப்போது 40 சதவீதம் லெவி என்று சொன்னால் ஓரளவுக்கு அரிசி விலைக்கட்டுப்பாட்டிற்குள் இருக்கின்ற இந்தச் சூழ்நிலையிலே அது சரியான நிலைமையை ஏற்படுத்தாது. ஆனால், மீதநேரத்தில் அதிகாரிகளின் கெடுபிடிகளுக்கு அஞ்சி வியாபாரிகள் லஞ்சம் கொடுக்க முற்படுகின்ற சூழ்நிலை ஏற்படுகின்றது. சில அதிகாரிகள் லஞ்சம் வாங்கக்கூடும். அதனால் தரமான அரிசி, தரமான நெல் ஆகியவற்றை அவர்களாலே வாங்க முடியாது. சாதாரணமாக குடோனிலே வருடக் கணக்காக சேமிக்கப்பட்ட அரிசி மக்களின் வினியோகத்திற்காக அனுப்பப்படுகின்றது. நேஷனல் ரூரல் எம்ப்ளாய்மெண்ட் ப்ரோக்ராம் மூலமைப்பாக செயல்படுத்தப்படுவதாகச் சொல்லப்படுகின்றது. அந்தத் திட்டத்தின் மூலம் 2 கிலோ அரிசியும் ஒரு கிலோ அரிசிக்குண்டான பணமும் தான் கொடுப்பதாக அதிகாரிகள் சொல்கிறார்கள். அது கிட்டத்தட்ட $4\frac{1}{2}$ ரூபாய் அளவுக்கு வரும்; ஆனால் 10 ரூபாய் கொடுத்தாலே வேலைக்கு ஆட்கள் வரமுடியாத சூழ்நிலையிலே—அதுவும் ரேஷன் அரிசியைக் கொடுத்தால் யார் வேலைக்கு வருவார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் அரிசி வழங்குவதற்குப் பதிலாக வேறு வகையிலே ஏற்பாடு செய்தால்தான் திட்டம் நன்றாகச் செயல்படும். மேலும் இந்தத் திட்டம் நல்ல முறையிலே செயல்பட வேண்டும் என்றால் ஊராட்சி ஒன்றியத் தேர்தல்கள் நடைபெற வேண்டும். சொல்வதற்கே வெட்கப்படக்கூடிய அளவிலே சில அதிகாரிகள் பஞ்சாயத்து யூனியன மேஜையிலே உட்கார்ந்துகொண்டு ரோடு போடுவதாகவும பாலங்கள் கட்டுவதாகவும் எழுதி பணத்தைக் கையாடல் செய்திருப்பதாக பரவலாக பேசப்படுகிறது. அப்படிப்பட்ட நிலை வராமல் இருக்க வேண்டும் என்றால் ஊராட்சி ஒன்றியத்தினுடைய தேர்தல்களை உடனடியாக நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்] [1981 ஜனவரி 27
[பிற்பகல் 1-10].

ஆளுநர் அவர்களுடைய உரை பெரும்பான்மையான மக்களு களுக்கு நன்மை பயக்கக்கூடியதாக அமைந்திருப்பதால் நாங்கள் அதை வரவேற்கிறோம் என்று கூறிக் கொள்கிறேன். நமது மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள், அந்த 40 சதவீதம் நெல்லுக்கு லெவி என்பதை மாற்ற மறு பரிசீலனை செய்ய வேண் டும் என்று அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். வெளி மாநிலத்திற்கு அனுப்ப வேண்டுமானால் அந்த லெவியே போட லாம். அதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எதிர்த்தது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எதிர்த்தது. பாரதீய ஜனதாக் கட்சி யினுடைய பொதுச்செயலாளர் எம். ஆர். காந்தி அவர்கள் வெளி யிட்டுள்ள அறிக்கையிலே அதை கடுமையாக எதிர்த்து தம் எதிர்ப் பைத் தெரிவித்துள்ளார். இப்படி எல்லோராலும் எதிர்க்கப் பட்ட திட்டம் அது. அதை மாற்றுவதற்கு மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

நான் மாண்புமிகு உள்துறை அமைச்சர் அவர்களையும், மின் சாரத்துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன் உங்கள் கீழுள்ள அதிகாரிகளை சரியாக வேலை வாங்குங்கள். அதிகாரிகளின் மந்தப் போக்குதான் அத்தனை முறை கேடு களுக்கும் காரணம். மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு ஒன்று கொண்டு வர விரும்புகிறேன். மின்சார பாக்கிப் பணம் கட்டுவதற்காக விவசாயிகள் சென்றால், நீங்கள் பச்சைத் துண்டு போட்டுக் கொண்டு வந்தால் மின்சாரக் கட்டணத்தை கட்ட வேண்டாமே என்று சில அதிகாரிகள் சொல்வ தாகச் சொல்லப்படுகிறது. கிட்ட தட்ட, 5, 6 வருடங்களாக பம்பு செட்டுக்கு மோட்டார் வாங்கி வைத்திருப்பவர்களுக்குக் கூட, அதற்கான மின் இணைப்புக் கொடுக்கப்படவில்லை. அப் படி அதிகாரிகள் எல்லா வகையிலும் மெத்தனமாக, மேம்போக் காகவே இருக்கிறார்கள். அவைகளைப் போக்க மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உடல் ஊனமுற்றோர், வயோதிகர், விதவைகள் ஆகியோர் உதவிப்பணம் கேட்டு மனுச் செய்தால் அவர்களுக்கு உதவிப்பணம் உண்டா இல்லையா என்பதைச் சொல்ல ஆண்டுக் கணக்குகள் ஆகின்றது. அதிகாரிகள் அவர்களுக்கு அதற்கான உதவிப் பணம் தகுதி உண்டு அல்லது இல்லை என்று உடனடியாக சொல்லி விட்டால் அவர்கள் அலுவலகங்களுக்கு அலைவதாவது மிச்சமாகும்.



1981 ஜனவரி 27] [திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்]

அது மட்டுமல்ல. தேசிய நெடுஞ்சாலைகள்தான் செப்பனிடப் படுகிறதே தவிர ரூரல் ரோடுகள் அப்படியே இருக்கிறது. முன்பு தார் ரோடுகளாக இருந்தவை எல்லாம் கூட இப்போது செம் மண் ரோடுகளாக மாறி வருகின்றன. கேட்டால் தார் கிடைக்க வில்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால் அதே நேரத்தில் தேசிய நெடுஞ்சாலைகளை செப்பனிட மட்டும் எப்படி தார் எங்கேயிருந்து கிடைக்கின்றதோ தெரியவில்லை. (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஜே. எஸ். இராஜ): இன்னும் 3 உறுப்பினர்கள் பேசவிருக்கிறார்கள். நீங் கள் ஏற்கெனவே உங்களுக்கு ஒதுக்கியிருந்த நேரத்தை விட இரண்டு நிமிடங்கள் அதிகமாக எடுத்துக் கொண்டுள்ளீர்கள். அதனால், சீக்கிரமாக முடித்து விடுங்கள்.

திரு. ஆர். நவநீதக்கிருஷ்ண பாண்டியன்: தயவு செய்து அமைச்சரவர்கள் அனைவரையும்கேட்டுக் கொள்கிறேன். உங்கள் துறைகளில் பணிபுரியும் அதிகாரிகள் சரியாக சுறுசுறுப்பாக இயங்குகிறார்களா என்று கவனிக்க வேண்டும். அதிகமாக வேலை வாங்க வேண்டும். அதன் மூலம் பொது மக்களுக்கு உடனடி நிவாரணம் கிடைக்க வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அரசுக்கு நல்ல பெயர் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் நான் இவைகளைச் சொல் கிறேன். கிட்டத் தட்ட 10 ஆண்டுகளுக்கு முன்னால் போடப் பட்ட தார் ரோடுகள் இன்னும் பழுது பார்க்கப்படவில்லை. அதனால் அங்கே கார்கள், பஸ்கள் போக முடியவில்லை. சில வழித்தடங்களில் இதன் காரணமாக பஸ் போக்குவரத்து நிறுத்தப் பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் என்ன? அதிகாரிகள் சுறு சுறுப்பாக வேலை செய்வதில்லை என்பதுதான். ஆகவே அவர் களை சரிவர இயக்க வேண்டும் என்று அமைச்சர்களைக் கேட்டுக் கொண்டு மற்றைய பிரச்னைகளை பேச நேரம் கிடைக்கவில்லை என்றாலும் இந்த அளவுக்கு எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு தலைவருக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

திரு. என். வி. என். சோமு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையில், 'உவகை தரும் வகையில் அண்மையில் நடந்து முடிந்த ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டுடன் இந்த ஆண்டானது நல்ல முறையில் தொடங்கி யுள்ளது' என்று ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். பத்திரிகைளில் இன்றையதினம் செய்திகள் வந்து கொண்டிருக்

கின்றன. பி. அண்டு. சி. மில் மூடப்பட்டதினால் 13,000—க்கும் அதிகமான குடும்பங்கள் அவதியுறுகிறார்கள். 10,000-க்கு மேற்பட்ட விவசாயப் பெருமக்கள் சிறையில் அடைப்பட்டிருக்கிறார்கள். 10 பிணங்கள் கிடக்கின்றன. அதைக் கண்டு பெண்கள் வேதனைப்படுகிறார்கள். எதை வைத்துக் கொண்டு 'உவகை தரும் வகையில்' காட்சிகளைக் கண்டதாக ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. வேதனை தரக்கூடிய இந்தச் செய்திகளைக்கண்டு அவர் உவகைப் படுகிறாரா? ரோம் நகரம் பற்றி எரியும் போது, நீரோ மன்னன் பிடில் வாசித்தானாம்—

"When Rome was burning Nero was fiddling"

என்று சொல்வார்கள். உலகத் தமிழ் மாநாட்டைக் காட்டி அங்கு உவகை தரும் காட்சி என்று ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதை அவலக் காட்சி என்று என்னால் சொல்லாமல் இருக்க முடியாது.

அதில் கலந்துகொண்ட அறிஞர் பெருமக்கள் எவ்வளவு வேதனைப் பட்டிருக்கிறார்கள் என்பதை நான் பணிவன்போடு குறிப்பிட விரும்புகிறேன். இது அரசியல் ஆதாயம் தேடிக் கொள்ள நடத்தப்பட்ட ஒரு மாநாடு என்று மிகவும் உளம் நொந்து ஒரு அறிஞர் கூறியிருக்கிறார். டாக்டர் பெரோஷிமா ஜப்பான் நாட்டிலுள்ள டோக்கியோ பல்கலைக்கழகத்தில் வரலாற்று ஆசிரியர். அவர் இந்த மாநாட்டைப் பற்றிக் கூறும் போது—

I am disappointed. It has turned out only to be a political festival.

நான் ஒரு பெருத்த ஏமாற்றத்திற்கு ஆளானேன் என்று கூறியிருக்கிறார். ஒரு அரசியல் காட்சியாக இந்த மாநாடு நடைபெற்று முடிந்திருக்கிறது என்று சொன்னதோடு மட்டுமல்லாமல் கருத்தரங்குகள் தமிழ் அறிஞர்களிடம், அந்தந்தத் துறையைச் சார்ந்த வல்லுனர்கள் கைகளில் ஒப்படைக்கப்படவில்லை என்று வேதனையோடு கூறி மேலே ஒரு படி சென்றிருக்கிறார்.

மதுரையில் நடந்த உலகத்தமிழ் மாநாட்டோடு 1968ம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்களும் எங்கள் தலைவர் கலைஞர் அவர்களைக் கொண்டும் நடத்திய உலகத் தமிழ் மாநாட்டோடு ஒப்பிட்டுக் கேட்கும்போது, இந்த இரண்டு மாநாடுகளில் எந்த மாநாட்டை சிறப்பாகச் சொல்கிறீர்கள் என்று கேட்ட திருபர்களிடம் அவர் சொல்லியிருக்கிறார்—

The Madras conference was certainly better.

சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாடு மிக மிகச் சிறந்த மாநாடு என்று டோக்கியோ நகர பல்கலைக்கழக வரலாற்றுப் பேராசிரியர் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றால் இதை எதிர்க்கட்சி நண்பர்கள் பெரிதாக பீற்றிக் கொள்வதில் அர்த்தமில்லை.



அது மட்டுமல்ல. சோவியத் நாட்டுப் பிரதிநிதி டாக்டர் அலேஸர் மேலும் ஒரு படி சென்று சொல்கிறார்—

Somehow I feel out of place here

என்று. எங்களுக்கு அங்கே இடமே கிடையாது என்று சொல்லி விட்டு,

The people around look upon me as a sort of non-sense—

எங்களை முட்டாள்களைக் பார்ப்பதைப்போல் அங்கிருக்கக் கூடிய மக்கள் எங்களை வேடிக்கை பார்த்தார்கள் என்று சொல்லியிருக்கிறார். இவ்வளவையும் செய்துவிட்டு என்ன சாதனை என்றால், இந்தி, இந்தியை தாய்மொழியாகக் கொள்ளாத மக்கள் மீது வலுக்கட்டாயமாக திணிக்கப்பட மாட்டாது என்று மாண்புமிகு பிரதமர் அவர்கள் கூறியதை சாதனை என்று வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார்கள். இந்த உறுதிமொழியை இவ்வளவு கோடி பணம் செலவு செய்து எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் சொல்லவில்லை. செலவு பத்து கோடி என்று சொல்கிறார்கள், 12 கோடி என்று சொல்கிறார்கள். எவ்வளவு என்று வெளிச் சத்துக்கு வரவில்லை. இவ்வளவு கோடிக்கணக்கான பணம் செலவு செய்வதற்கு முன்னாலேயே, ஒரு ஆண்டுக் காலத்திற்கு முன்னால் இங்கு வந்திருந்த பாரதப் பிரதமர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த நாட்டின் எந்தப்பகுதி மக்கள்மீதும் எந்த மொழியும் திணிக்கப்படமாட்டாது என்ற உறுதியை காங்கிரஸ் தந்திருக்கிறது. என்னுடைய தந்தையார் உறுதிமொழி தந்திருக்கிறார். இந்தி எதிர்ப்புப் போராட்டம் தமிழ்நாட்டில் நடைபெற்றபோது அப்போது மத்திய அமைச்சராக, செய்தித்துறை அமைச்சராக இருந்த திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள், என் தந்தையார் என்ன உறுதிமொழியை தந்தார்கள் என்பது உங்கள் பலருக்கு நினைவிருக்கலாம், அந்த உறுதிமொழியை மீண்டும் அழுத்தத் திருத்தமாக காட்டிகாரிகலாக, நான் உங்களுக்குத் தருவதற்கு எனக்கு கொஞ்சம் கூட தயக்கம் கிடையாது; மேலும் நான் வீணான பொய்யான உறுதிமொழிகளைத் தருவதில்லை என்பது உங்களுக்குத் தெரியும் என்றும் 30-10-1978-ல் கடற்கரையில் நடந்த பிரமாண்டமான கூட்டத்தில் கூறியிருக்கிறார்கள். பத்து, பனிரெண்டு கோடி ரூபாய் செலவு செய்து மதுரையில் திருவிழா கூட்டி அந்த உறுதி மொழியைத்தான் நீங்கள் பெற முடிந்ததே தவிர வேறு உறுதி மொழி எதுவும் பெற முடியவில்லை.

இந்த ஆண்டு மருத்துவக் கல்லூரி அட்மிஷன் சம்பந்தமாக 65 வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. உயர்நீதி மன்றத்தில், செப்டம்பர் மாதம் சொன்னார்கள், இன்டர்வ்யூ நடைபெற்று முடிந்து விட்டது என்று. இரண்டு மாதங்கள் கழித்து தேர்வு முடிவுகள் வெளியிடப்படுகின்றன. என்றால் இன்டர்வ்யூ நடை

[திரு. என். வி. என். சோமு] [1981 ஜனவரி 27

பெற்று இரண்டு மாதங்கள் யார் எடுத்துக் கொள்கிறார்கள் என்பது குறித்து நீதிமன்றத்தில் 65 வழக்குகள், அபிடவிட்ஸ் மூலம் அறைகூவலாக, சவாலாக நீதி மன்றத்தில் சொல்லியிருக்கிறார்கள்கள். தீர்ப்பு எப்போது வெளியாகுமோ என்று எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

சென்ற ஆண்டு உயர்நீதிமன்றத்தில் மருத்துவக் கல்லூரி அட்மிஷன் சம்பந்தமாக மாண்புமிகு நீதிபதிகள் திரு. வீ. ராமசாமி, திரு. வீ. ரத்தினம் ஆகியோர் ஒரு தீர்ப்பு சொல்லியிருக்கிறார்கள். இந்த அரசு பைல்களைத் திருத்தியிருக்கிறது, நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பைல்களில் அதற்குப் பின்னால் இந்த அரசு திருத்தியிருக்கிறது என்பதை நீதிமன்றத்தில் எடுத்துச் சொல்லி ஸ்ட்ரிக்ச்சேர்ஸ், கண்டனக் குறிப்பு சொல்லியிருக்கிறார்கள். அதில் அந்த இரண்டு நீதிபதிகளும் சொல்கிறார்கள.........

[பிற்பகல் 1-20]

"In every one of the pages in this list, the signature of the Minister for Health is found, but no date is given. In one of the pages relating to general rule we found a date 9—9—1979 below the signature of Mr. Muthu who is stated to be the Member-Secretary of the Co-ordination Committee. So, the same Secretary has signed in every page except in the first page, no date was given and to the Counter Affidavit filed on 2—11—1979

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இங்கேதான் நீதிபதிகள் பிரச்சினைக்கே வருகிறார்கள். We again call for the original lists which were produced on 30—10—1979 and to our surprise.

எங்களுடைய ஆச்சரியத்திற்கும், அதிர்ச்சிக்கும், We found that the date 9—9—1979 has been corrected as 8-9-1979."

1979ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 9ஆம் நாள் என்று சொல்லப்படுகின்ற அந்த தேதியை, எங்களுக்கு காட்டப்பட்ட அந்தத் தேதியை, 1979ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 8ஆம் நாள் என்று திருத்தியிருக்கிறார்கள்.

"The correction should have been obviously made because in the counter affidavit filed on 2—11—1979 the approval of the Minister was stated to have been obtained on 8—11—1979. Whether it is going in any way to help the petitioner or the respondent we have to record our very strong disapproval."



1981 ஜனவரி 27] [திரு. என். வி. என். சோமு]

இது மனுதாரருக்கு இலாபகரமாக இருக்கிறதோ, பிரதிவாதிகளுக்கு இலாபகரமாக இருக்கிறதோ, ஆனால் நீதிமன்றத்தைப் பொறுத்தவரையில், We have to record our very strong disapproval.

நீதிமன்றத்தைப் பொறுத்தவரை, தாக்கல் செய்யப்பட்டிருக்கின்ற தஸ்தாவேஜை திருத்துகிறதென்றால், இது கண்டிக்கப்பட வேண்டிய செயல் என்று சொல்லப்படுகின்ற நேரத்தில், "In correcting a record which was produced before the Court".

இந்தத் திருத்தத்தைக் சுட்டிக் காட்டி, நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட தஸ்தாவேஜை திருத்தியது அமைச்சராக இருந்தாலும் அல்லது எந்த அதிகாரியாக இருந்தாலும், "We have no doubt that whoever was responsible for this correction should have done it with a clear intention of misdirecting the Court by creating a false evidence." பொய் சாட்சி தயார் செய்து, நீதி மன்றத்தினுடைய கவனத்தை திசை திருப்புவதற்கு இப்படி செய்யப்பட்டிருக்கிறது என்று இரண்டு நீதிபதிகளும் கடுமையாக கண்டனம் தெரிவித்ததோடு மட்டுமல்லாமல், மேலும் சொல்லுகிறார்கள் "Since the learned Advocate General said that the matter may be left to him to be dealt with by the Department, we refrain from expressing more and leave it to the Government to take such action as is necessary against those responsible."

தலைமை வழக்கறிஞராக இருக்கக்கூடிய அட்வகேட்—ஜெனரல் அவர்கள் நீதி மன்றத்தில், இதை டிபார்ட்மென்ட் மூலமாக, இலாகா மூலமாக நாங்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்கிறோம் என்றும், ஆகவே நீங்கள் மேலும் கருத்து தெரிவிக்க வேண்டாம் என்றும் தெரிவித்த காரணத்தினாலும், இந்தப் பிரச்னையை, இதோடு விட்டுவிடுகிறோம் என்று இரண்டு நீதிபதிகளும் சொன்னார்கள். நான் இந்த அரசாங்கத்தைக் கேட்கிறேன், இந்த அரசாங்கம் அப்படி சுட்டிக் காட்டிய பிறகும், கவலையற்று, சூடு சொரணையற்று நீதி மன்றத்தில் இரண்டு நீதிபதிகளும் கடுமையாகக் கண்டனம் தெரிவித்த பின்னரும் இன்னும் அந்த டிபார்ட்மென்ட் நடவடிக்கையை யார் மீது எடுத்தார்கள்? அந்த ஃபைலை திருத்தியது யார் என்று கண்டு பிடித்தார்களா? என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? இதுவரை என்ன செய்தார்கள் என்பது குறித்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு அறிவித்தாக வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, மதுவிலக்கு பற்றி கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன் மொழிந்தபோது, மாண்புமிகு உறுப்பினர் விஸ்வநாதன் அவர்கள் பேசினார்கள். மதுவிலக்கு எப்படி இருக்கிறது என்பதற்கு நான் ஒரே ஒரு உதாரணத்தைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். என்னுடைய பூங்கா நகர் தொகுதியில், 54ஆவது வட்டத்தில், தேர்தல் நடைபெறுகிறது. இந்த ஆளும் கட்சித் தேர்தலில் தலைவர், செயலாளர், மற்றும் பல தேர்தல்கள் நடைபெறுகின்றன. அந்தத் தேர்தலில் அறிக்கை கொடுக்கிறார்கள். அந்தத் தேர்தலில் தலைவர் தேர்தலுக்கு திராவிடமணி, செயலாளர் தேர்தலுக்கு ஜி. எஸ். பாபு, துணைச் செயலாளர் தேர்தலுக்கு மாணிக்கம் என்று துண்டு அறிக்கையைப் போட்டுவிட்டு, அதற்குப் பின்னாலே ஒரு கடிதம் எழுதப்படுகிறது. அந்தக் கடிதத்தின் போட்டோஸ்டாட் காபி எடுத்து, பத்திரிகையில் வெளிவந்திருக்கிறது. அந்தக் கடிதத்தில், ஜி. எஸ். பாபு என்கிறவர் தன் நண்பருக்குக் கடிதம் எழுதுகிறார். ''அன்புள்ள தங்கவேலுக்கு, பாபு எழுதியது, தயவுசெய்து இந்தக் கடிதம் கொண்டுவரும் மகேந்திரனிடம் 2 ஃபுல் கிளாஸ் சாராயம் கொடுத்தனுப்பவும்.'' என்று ஆளுங் கட்சியைச் சேர்ந்த அண்ணா தி.மு.க. வட்டச் செயலாளர் தேர்தலுக்கு எழுதுகிறார். வட்டத் தேர்தலுக்கே இப்படி 2 ஃபுல் கிளாஸ் சாராயம் என்று எழுதினால், பகுதிச் செயலாளர் தேர்தலிலும், மாவட்டச் செயலாளர் தேர்தலிலும் இன்னும் ஜாஸ்தியாக இருக்கும்.

பொதுச் செயலாளர் தேர்தல் நடைபெறுகிறதோ இல்லையோ —அந்தத் தேர்தலில் எவ்வளவு பீப்பாய் சாராயத்தை நடமாட விடுவார்கள்? ஒவ்வொரு தொகுதியிலும் சென்று ''மான்-ஹோல்ஸ்'' என்று சொல்லக் கூடிய கழிவறைகளின் மூடிகளைத் திறந்து பார்த்தால் ஆயிரக்கணக்கான சாராயக் கேன்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றைக் கண்டிக்க, எடுத்துக் காட்ட இன்றைய தினம் இந்த அரசாங்கத்திற்கு சற்றுக் கூட வக்கில்லை; வகையில்லை; பொறுப்பில்லை. ஆனால் அதே நேரத்தில் பார், பார், உலகத் தமிழ் மாநாட்டை நடத்தி விட்டோம் என்று பீற்றிக் கொள்கிறார்கள். (குறுக்கீடு) உலகத் தமிழ் மாநாட்டில் நண்பர் விஸ்வநாதன் பங்கை ஊர் அறியும். அவர் எப்படி இருந்தார் என்பது தெரியும். அவரோடு என்னுடைய தமிழறிவு போட்டி போட வேண்டிய அவசியமில்லை.

பதின்மூன்றாயிரம் குடும்பங்கள்—பி. அண்டு சி. ஆலைத் தொழிலாளர்கள்—ஏறத்தாழ ஒரு லட்சம் பேர் பரிதவித்துக் கொண்டிருக்கிறார்கள். முதலமைச்சருக்கோ, மற்ற அமைச்சர்களுக்கோ, தொழிலாளர் நல அமைச்சருக்கோ சற்றாவது அதைப் பற்றி இரக்கமோ, கவலையோ இருக்கிறதா என்று கேட்க ஆசைப்படுகிறேன். பல முறை இல்லாவிட்டாலும், ஒரு முறை



யாவது டில்லிக்குச் சென்று மத்திய சர்க்கார் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்களா? தொழிலாளர்களைப் பொறுத்தவரை எல்லாவற்றுக்கும் ஒத்துக் கொள்கிறார்கள். ஏழு நாட்களும் வேலை செய்ய வேண்டுமா, செய்கிறோம். 24 மணி நேரமும் ஏழு நாட்களும் வேலை செய்ய வேண்டுமா, செய்கிறோம், நவீனப்படுத்தப்பட்ட இயந்திரங்களைக் கொண்டு எந்த அளவுக்கு உற்பத்தி செய்ய வேண்டுமோ அதைச் செய்யத் தயாராக இருக்கிறோம் என்றெல்லாம் சொல்லுகிறார்கள். ஆனால் தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லுவதைப் பொறுத்தவரை அதைப் பற்றி உட்கார்ந்து பேசுவோம் என்று சொல்லுகிறார்கள்.

அந்தத் தொழிலாளர்கள் ஊர்வலமாக வந்தபோது ஓடோடி வந்தார் முதலமைச்சர். அவர்களை நடுவில் சந்தித்து மனுக்களை பெற்றுக் கொண்டேன் என்று சொன்னார். ஆனால் இதுவரை பி. அண்டு சி. ஆலையைத் திறந்து அந்தத் தொழிலாளர்கள் கஷ்டத்தைப் போக்க என்ன செய்தார்கள்? மத்திய அரசாங்கத்திற்கு என்ன தாக்கீது கொடுத்தார்கள்? என்ன யோசனையைக் கொடுத்தார்கள்? அது நாட்டுக்குத் தெரியாது, ஊருக்குத் தெரியாது, இந்த மன்றத்திற்கும் தெரியாது. தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் சாவகாசமாக அனந்தசயனம் செய்து கொண்டிருக்கிறார்கள். அவரே முன்னர் பி. அண்டு சி. ஆலைத் தொழிற்சங்கத் தலைவராக இருந்தார் என்று சொல்லப்படுகிறது. அவர் இப்போது மந்தகாசமாகச் சிரித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார். அந்த ஆலை 104 ஆண்டு காலமாக, இருந்து வருகிற ஆலை. அந்த ஆலை மூடப் பெற்று 27 நாட்கள் ஆகியும் ஏன் என்று கேட்பார் இல்லை. பதறித் துடிக்க வேண்டாமா?

மகாராஷ்டிர மாநில முதலமைச்சர் திரு. ஏ. ஆர். அந்துலே ஒரு ஆலையைத் திறக்க எப்படிப் பாடுபட்டார்? பம்பாய் மாநிலத்தில் ஒரு மில்லைத் திறக்க மத்திய சர்க்காரோடு, போராடினார். வாளா இருக்கும் இந்த அரசாங்கம், கேளாக் காதினராக இருக்கும் அரசாங்கம் கூர்ந்து கவனிக்க வேண்டும். உங்கள் கட்சியின் கொடியில் அண்ணாவின் திருவுருவப் படத்தைப் போட்டிருக்கிறீர்கள். அண்ணா சொன்னார்; "I represent the man in the Street" ''தெரு ஓரத்துப் பாட்டாளி மக்கள் பிரதிநிதியாக இருக்கிறேன்'' என்று சொன்னார். அவருடைய உருவத்தைக் கொடியில் போட்டுக் கொண்டு, பரிதவிக்கும் பல இலட்சம் குடும்பங்களுக்கு

வழி காட்டாமல் உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள். அந்த ஆலையைத் திறக்கும் காரியத்தை மத்திய சர்க்கார்தான் செய்ய வேண்டுமென்று ஆளுநர் உரையில் சொல்லியிருக்கிறீர்கள். ஆளுநர் உரையில் அதைப்பற்றி மேலெழுந்தவாரியாகக் குறிப்பிட்டிருப்பது போதாது. அந்த ஆலையைத் திறக்க இந்த அரசாங்கம் எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ள வேண்டும். 3,476 பேர்களை வீட்டுக்கு அனுப்ப வேண்டுமென்று அந்த ஆலைத் தொழிலாளர்கள் பிரச்னையில் சொல்லுகிறார்கள். அந்த 3,476 பேர்களை வீட்டுக்கு அனுப்பிவிட்டு ஆறாயிரம் பேர்களை வைத்துக் கொண்டு வேலை செய்ய வேண்டுமா? இப்போது இருக்கக் கூடிய 13,000 பேர்கள், 11,000 ஆகக் குறைந்திருக்கிறது. அதிலும் 3,476 பேர்களை அனுப்பி விட்டு, 6,000 பேர்களை மட்டும் வைத்து வேலை செய்ய வேண்டுமென்று சொல்லக்கூடிய அளவுக்கு இன்றையதினம் அரசாங்கம் ஆலோசனை கூறியிருக்கிறது. முன்னர் எங்கள் தலைவர் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது இப்படிப்பட்ட பிரச்னை எழுந்தபோது சிக் மில்களை தமிழ்நாட்டு டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் எடுத்து அதற்குப் பின்னால் நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷனுக்கு விடக்கூடிய அளவுக்குத் துணிச்சலோடு செயல்பட்டார்கள். அந்தத் துணிச்சலும், தைரியமும் இந்த முதலமைச்சருக்கு இல்லை.

[பிற்பகல் 1-30]

அதுபற்றி ஆளுநர் உரையிலே எதுவும் குறிப்பிடாததை நான் கண்டிக்கிறேன். அந்த ஆலையிலே வேலை செய்யக் கூடிய 300-க்கும் மேற்பட்ட உயர் அதிகாரிகளுக்கு ஏறத்தாழ 10 லட்சம் ரூபாய்க்கு மேல் சம்பளம் தரப்பட்டது. ஆனால் 13 ஆயிரம் தொழிலாளர்கள் 85 லட்சம் ரூபாய்தான் சம்பளம் வாங்கினார்கள். (மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று மாலை 4.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பிற்பகல் 4.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.





7. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். வி. என். சோமு அவர்கள் 15 நிமிடங்கள் பேசி விட்டார்கள். அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரமே பத்து நிமிடங்கள்தான். ஆகவே, இரண்டொரு நிமிடங்கள் தம் கருத்தைக் கூறி அவர்தம் உரையை முடித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். வி. என். சோமு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பி அண்ட் சி ஆலைத் தொழிலாளர்களைப்பற்றி பேசிக்கொண்டிருக்கும்பொழுது இடைவேளை—உணவு வேளை குறுக்கிட்டது. ஆகவே என்னுடைய உரையை அப்பொழுது முடிக்க முடியாமற் போய்விட்டது. இப்பொழுது நாம் இடைவேளை உணவு சாப்பிட்டு விட்டு வந்திருக்கிறோம். ஆனால் பரிதாபத்திற்குரிய, பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட அந்தத் தொழிலாளர்களில் எத்தனைபேர் இடைவேளை உணவு சாப்பிட்டார்கள் என்பது பிரச்னைக்குரியதாக இருக்கிறது. உணவுப் பொருட்கள்கூட அவர்களுக்கு வழங்கப்படவில்லை என்று என்னிடத்திலே வேதனையோடு குறிப்பிட்டார்கள். முதலமைச்சரவர்களும், ஆலை நிர்வாகிகளும், தொழிற்சங்கத் தலைவர்களும் உட்கார்ந்து பேசி எல்லோருக்கும் அந்த உணவுப் பொருட்களைக் கொடுப்பதாக ஒரு முடிவெடுத்தும்கூட எல்லா உணவுப் பொருட்களும் பண்டகசாலைக்கு வந்தபிறகும்கூட இதுவரைக்கும் அவர்களுக்கு உணவுப் பொருட்கள் கொடுக்கப் படவில்லை. ஏற்கனவே இருக்கின்ற வேதனை போதாது என்று அவர்கள் பஞ்சத்தால், பட்டினியால் பரிதவிக்கும் நிலைமையைப் பற்றி இங்கே இருக்கின்ற அமைச்சரவை அனுபதாபத்துடன் பரிசீலிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இவர்களுடைய பிரச்னையைப் பொறுத்தவரையில் தொழிலாளர்கள் எல்லாவிதமான நிபந்தனைகளுக்கும் தங்களைக் கட்டுப்படுத்திக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். வாரத்தில் ஏழு நாட்கள் வேலை செய்ய வேண்டுமென்று சொன்னார்கள்; அதைத் தொழிலாளர்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்று சொன்னார்கள். ஒவ்வொருநாளும் 24 மணி நேரம் வேலை செய்ய வேண்டுமென்று சொன்னார்கள்; அதற்கும் தொழிலாளர்கள் ஒப்புக்கொள்வதாகச் சொல்கிறார்கள். அத்துடன் நவீனப்படுத்தப்பட்ட இயந்திரங்கள் கொடுக்கின்ற உற்பத்தியை நீங்களும் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள்; அதற்கும் தொழிலாளர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால் மற்றப் பிரச்னைகளைப்பற்றிப் பேசி முடிவு எடுத்துக்கொள்ளலாம்.

[திரு. என். வி. என். சோமு] [1981 ஜனவரி 27

நீங்கள் ஆலையைத் திறக்க வேண்டும் என்று சொன்னால் அதற்கு நிர்வாகம் மறுக்கிறது. மாநில சர்க்கார் அந்த நிர்வாகத்திடம் சொல்லி அல்லது மத்திய சர்க்காரைக் கலந்தாலோசித்து அந்த ஆலை நிர்வாகத்தைப் பணிய வைப்பதற்கு முன்வரவில்லை; அதுசம்பந்தமாக மாநில சர்க்கார் வாளாவிருப்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இவ்வளவு முக்கியமான பிரச்னையைப்பற்றி நம்முடைய தொழிலாளர் நல அமைச்சரவர்கள் எத்தனை முறை டெல்லிக்குச் சென்றிருக்கிறார்? ஒருமுறை கூட டெல்லிக்குச் செல்லவில்லை; இங்கேயிருந்து டெலக்ஸ் கொடுக்கிறேன், டெலிபோனில் பேசுகிறேன் என்று சொல்கிறார்களே தவிர, அவர் இதுவரையில் டெல்லிக்குச் செல்வதாகத் தெரியவில்லை. கொடுமையிலும் கொடுமை என்னவென்று கேட்டால் 3,476 பேர் செய்யும் வேலையை 6,000 பேர் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறார்கள். இங்கேதான் அவர்கள் வேதனைப் படுகிறார்கள்; கண்ணீர் வடிக்கிறார்கள்; இன்னும் சொல்லப் போனால் இரண்டாண்டுகளுக்குத் தேவையான ஆர்டர்கள் பி அண்ட் சி மில்லிலே தேங்கியிருக்கின்றன. இப்பொழுதுகூட அந்த ஆலை திறக்கப்படுமேயானல் இரண்டு ஆண்டுகளுக்குத் தேவையான ஆர்டர்களைச் செய்து முடிக்கலாம் என்பதை இங்கே பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். அனந்தசயனத்தில் இருக்கின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் அனுதாபத்துடன் கவனித்து பி அண்ட் சி ஆலைப் பிரச்னையில் உடனடியாகத் தலையிட்டு எதையாவது உருப்படியாகச் செய்து விம்முகின்ற அந்தத் தொழிலாளர்களின் கண்ணீரைத் துடைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மூர் மார்க்கெட் பிரச்னை. ஏறத்தாழ பிரதான கட்டிடத்திற்குள்ளே 600 கடைகள் இருக்கின்றன. சுற்றியுள்ள இடங்களில் ஏறக்குறைய 200-க்கும் மேற்பட்ட கடைகள் இருக்கின்றன. அவர்கள் சுமார் 80 ஆண்டுக்காலமாக நிரந்தரமாக வியாபாரம் செய்து கொண்டிருக்கிறார்கள், வருமான வரி கட்டுகிறார்கள், விற்பனை வரி செலுத்துகிறார்கள்; அவர்களிடத்திலே 20,000 பேர் பணியாற்றுகிறார்கள். திறந்த வெளியில் 400 கடைகள் இருக்கின்றன. அந்தக் கடைகள் இரயில்வே விஸ்தரிப்பிற்காக உடனடியாகக் காலி செய்யப்பட வேண்டுமென்று மிரட்டல் செய்து, நோட்டீஸ் விடப்பட்டிருக்கின்றன. ஆனால் மாண்புமிகு இரயில்வே அமைச்சரவர்கள் மத்திய சென்னை பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி அவர்களிடத்திலே, மாற்றுத் திட்டத்தைக் கொடுத்துவிட்டுத்தான் அவர்களைக் காலி செய்வதைப் பற்றிப் பரிசீலிப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல், இந்த மாமன்றத்திலே மாண்புமிகு அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்களும், மற்றுமொரு அமைச்சரவர்களும்



1981 ஜனவரி 27] [திரு. என். வி. என். சோமு]

சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு மாற்று இடத்தைக் கொடுத்துவிட்டு மாநகராட்சிக்கு அருகாமையில் உள்ள தாமரை தடாகத்தை அப்புறப்படுத்திவிட்டு கட்டிடங்களைக் கட்டி இப்பொழுதுள்ள வியாபாரிகளுக்கு ஒதுக்கீடு செய்வோம் என்று சொன்னார்கள். ஆனால் இப்பொழுதுள்ள நிலைமை என்ன வென்றால், கண்ணப்பர் திடலில் சில கடைகள் கட்டப்பட்டு அந்தக் கடைகள் மூர்மார்க்கெட்டிலே வியாபாரம் செய்கின்ற வியாபாரிகளுக்கு ஒதுக்கப்படாமல் ஆளுங்கட்சியைச் சேர்ந்த சிலர் அங்கே ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். எப் பொழுது வேண்டுமானாலும் அமைச்சர்களோ மாநகராட்சியைச் சேர்ந்தவர்களோ அங்கே சென்று பார்த்தால் ஆளுங் கட்சியினரின் ஆக்கிரமிப்பையும் கண்ணப்பர் திடலில் இருபது முப்பது இடங்களில் அமர்ந்து இருக்கும் நிலைமையையும் காண்பார்கள்.

சென்னை மாநகரத்திற்கு மிகப்பெரும் வரலாற்றையும் பெருமையையும் அளிக்கும் ஒன்றாகும் மூர் அங்காடி. அங்கே ஏறத்தாழ இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட முதலாளிகள், வியாபாரிகள், தொழிலாளர்கள் ஆகியவர்களின் வாழ்க்கைப் பிரச்னை இருக்கிறது. இதையும் அலட்சியப்படுத்திவிடாமல் நம்முடைய அரசாங்கம் மாற்று இடத்தை அவர்களுக்கு ஒதுக்கிக் கொடுத்து விட்டு அவர்களை அப்புறப்படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் விரும்பி, வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. ராஜகுமார் விஜய ரெகுநாத தொண்டமான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் அவர்களின் உரை மீது எங்கள் காங்கிரஸ் கட்சியின் கருத்துக்களை நான் சொல்ல முன்வருகிறேன். முதலிலே, மதுரையிலே தமிழ் மகாநாட்டை சீரும் சிறப்புமாக நல்லமுறையிலே நடத்தினீர்கள். தமிழினுடைய கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் பரப்பக் கூடிய வகையிலே அந்த மாநாடு சிறப்பாக இருந்தது. அதை நடத்திய நமது மாண்புமிகு முதல்வருக்கும் இந்த அரசாங்கத்திற்கும் எங்களுடைய வாழ்த்துக்களை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றோம். தமிழ் மகாநாடு நடந்திருக்கக் கூடிய நேரத்திலே, நீங்கள் சொன்னீர்கள், எங்கும் தமிழ்ச் சங்கங்களை வைக்கப் போகின்றோம். காரைக்குடியிலே ஒரு யூனிவர்சிட்டி நிறுவப் போகின்றோம் என்றெல்லாம் சொன்னீர்கள். மிகவும் மகிழ்ச்சி. அதே நேரத்தில் அதை நடத்தியதன் அடையாளமாக ஒரு பெரிய தமிழ்ப் பல்கலைக் கழகமே உரு வாக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே உங்களைக்

கேட்டுக் கொள்கிறேன். அதுவும் நான் புதுக்கோட்டைக்கு வேண்டுமென்று தனியாகக் கேட்டுக்கொள்வது புதுக்கோட்டை பின்தங்கிய மாவட்டமாக இருக்கக்கூடிய காரணத்தாலே, அந்த மாவட்டத்திலே இந்தப் பெரிய தமிழ் யூனிவர்சிட்டியை நிறுவவேண்டுமென்று உங்களை இந்த நேரத்திலே பணிவாக கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், இந்தத் தமிழ் மகாநாட்டிற்கு, The Symbol of National Unity ஆக இருக்கக்கூடிய நமது பாரத நாட்டின் பிரதமர் மதிப்பிற்குரிய இந்திரா காந்தி அவர்களை நீங்கள் அழைத்தீர்கள். அது உங்களுடைய பெருந்தன்மையைக் காண்பிக்கிறது. அந்த நேரத்திலே அவர்களும் ஒன்று சொன்னார்கள், ரீஜினல் லாங்குவேஜை நாங்கள் எந்தவிதத்திலும் அமுக்கப் போவதில்லை. அந்த ரீஜினல் லாங்குவேஜஸை நிச்சயமாக வளர்க்கப் போகிறோம் என்று அவர்கள் உறுதி அளித்தது நமக்கெல்லாம் பெருமையாக இருக்கிறது. அவர்களை அழைத்ததைப்பற்றி நாங்கள், காங்கிரஸ் கட்சியிலே இருப்பவர்கள், மிகவும் பெருமைப்பட்டு, நன்றி சொல்ல கடமைப் பட்டிருக்கிறோம்.

அடுத்து, உங்களுக்குத் தெரியும் புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களிலே பெரும் வறட்சி ஏற்பட்டிருக்கிறது என்பது. குறிப்பாக, புதுக்கோட்டையிலே ஒரு குளத்திலும் குடி தண்ணீர் கிடையாது. விவசாயத்திற்கு விடுங்கள், குடிக்கக் கூட தண்ணீர் கிடையாது. இந்த நேரத்திலே, அங்கே செய்யக் கூடிய வேலைகள், on a war footing போர்கால நடவடிக்கையிலே, அங்கு செய்தால்தான், இன்றைக்கிருக்கிற நிலைமைகளை நீங்கள் சமாளிக்க முடியும். இப்பொழுது ரூ. 60 இலட்சம் அரசாங்கம் கொடுத்திருக்கிறது. நான் அதற்காக நன்றி செலுத்துகின்றேன். ஆனால், அதே நேரத்திலே, நீங்கள் கொடுத்திருக்கக்கூடிய ரூ. 60 இலட்சம் நிச்சயமாக புதுக்கோட்டைக்குத் போதாது என்று இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ரூ. 5 கோடியாவது கொடுத்து, அந்த வேலைகளைத் தீவிரப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே தங்களுக்கு நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கு அதிகமான drought-affected area என்ற காரணத்தாலே, தன்னிறைவுத் திட்டங்கள் ஏற்பாடாகிக் கொண்டிருக்கின்றன. ஆனால், அந்தத் தன்னிறைவுத் திட்டங்களை யூனியன் லெவலில் ஒவ்வொரு யூனியனாக எடுத்துச் செய்து வருகின்றார்கள். புதுக்கோட்டை மாவட்டத்தை பின்தங்கிய மாவட்டமாக, ஏன், நான் உங்களைக் கேட்டுக் கொள்வது, மிகவும் பின்தங்கிய மாவட்டமாக அதை அறிவிக்க



வேண்டும் என்பதுதான். மிகவும் பின்தங்கிய மாவட்டமாகிய அந்த மாவட்டத்திற்கு பூரா ஜில்லாவிற்கும் அந்தத் தன்னிறைவுத் திட்டத்தை எடுத்துச் செய்தால்தான் நிலைமை மாறுமே தவிர ஒரே ஒரு யூனியனுக்கோ அல்லது இரண்டு யூனியன்களுக்கோ செய்தால், நிச்சயமாக அது immediate effect கொடுக்காது என்று நான் இந்த நேரத்திலே உங்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[மாலை 4-10]

அடுத்து, அந்த மாவட்டத்தில் இருப்பதோ 2, 3 மில்கள்தான். அந்த 3 மில்களுக்கும் இன்று சரியாகவே எலக்டிரிக் கனக்ஷன், எலக்டிரிக் பவர் போவதில்லை. அதனால் அந்த மில்களிலே வேலையிலே இருக்கக்கூடிய தொழிலாளிகளுக்கு வேலை இல்லாமல் வாரத்திற்கு ஒரு நாள் 2 நாள்தான் வேலை கிடைக்கும்படியான சூழ்நிலை இருக்கின்றது. பின்தங்கிய மாவட்டத்தில் 3 மில்கள்தான் இருக்கின்றன. அங்கே வேலை இல்லை என்கிறபோது, அங்கே உள்ள தொழிலாளிகள் வெளியே சென்று வேலை பார்க்கப் வாய்ப்பில்லாமல் இருக்கின்றது. இந்த வருடம் அது பஞ்சப் பிரதேசமாகப் போய்விட்டது. அதனாலே காவேரி மில்போன்ற மில்களுக்கு நேரடியாக எலக்டிரிக் கனக்ஷன் கொடுத்தால் மின் வெட்டு இருக்காது. தொழிலாளர்கள் அனைவருக்கும் வேலை கிடைக்கும். இதனை அரசாங்கம் பின்தங்கிய மாவட்டமாகிய எங்கள் மாவட்டத்திற்கு செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரசாங்கம் West-flowing rivers எல்லாவற்றையும் ஒன்றாகக் கொண்டுவந்து சென்னைக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்கு என்னுடைய வாழ்த்துக்களைக் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் நாங்கள் புதுக்கோட்டைக்குக் காவிரி தண்ணீர் வேண்டும் என்று நீண்ட நாட்களாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இங்கே கொண்டுவருகிற நேரத்தில் புதுக்கோட்டைக்கும், இராமநாதபுரத்திற்கும் காவிரி நீரைக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே எல்லோரும் விலேஜ் ஆபிசர்களைப் பற்றி பேசினார்கள். அது குறித்து ஒரே ஒரு கருத்தை தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். நீங்கள் எடுத்த நடவடிக்கை எல்லாம் வில்லேஜ் ஆபீசர்களிலே வயதானவர்களை எல்லாம ரிட்டையர் செய்து அவர்களுக்கு காம்பன்சேஷன் கொடுத்து இளம் வயதினர்களாக இருக்கின்றவர்கள் விடுங்கள்.

5 ஆயிரம், 7 ஆயிரம் பேர்கள் இருப்பார்கள். அவர்களுக்கு மறுபடியும் வேலை கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இவர்களை, அவர்களோடு சேர்த்து நிறுத்தி விட்டால், அவர்கள் வெளியே சென்று வேலை பார்க்க முடியாது. இளம் வயதுக்காரர்களுக்கு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாக வைக்கப்படுகின்ற தேர்வில் முன்னுரிமை கொடுத்து அவர்களை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வயதானவர்களுக்குக் காம்பன் சேஷன் கொடுத்து அனுப்பவேண்டும். இதை நிச்சயமாக செய்யவேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் வயதானவர்களுக்குக் காம்பன்சேஷன் கொடுப்பது பற்றி நிச்சயமாகச் செய்வோம் என்று சொல்லி இருக்கிறார்கள். அது பத்திரிகையிலே வந்திருக்கிறது. அதைப்போல் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டுக்கு இப்போது இந்த ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 3,150 கோடி ரூபாய் மத்திய அரசாங்கம் கொடுத்திருக்கிறது. இது மத்திய அரசாங்கம், நம்முடைய மதிப்பிற்கும் மரியாதைக்குமுரிய பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள், நமது தமிழ்நாட்டின் மீது வைத்துள்ள மதிப்பையும் அக்கறையையும் காட்டுகிறது. அதை நீங்கள் எந்தெந்த மாவட்டங்களில் எப்படி எப்படிச் செலவழிக் கின்றீர்கள் என்று சொன்னால் நாங்கள் ஒத்துழைப்புத் தரக் கடமைப் பட்டிருக்கிறோம்.

அடுத்தாற்போல், இங்கே நான் தெரிவிக்க விரும்புவது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் கொடைக்கானல் வந்திருந்தபோது, கொடைக்கானல் டெவலப்மெண்டிற்காக ஒரு மாஸ்டர் ப்ளான் போட்டு இருக்கிறோம். இரண்டரை கோடி ரூபாய் அளவிற்கு அங்கே ரோடு வசதிகளுக்காக செய்து இருக்கிறோம் என்று சொன்னார்கள். அதைச் சீக்கிரமாக அமல்படுத்தவேண்டுமென்று இந்த நேரத்தில் உங்கள் மூலமாக கேட்டுக்கொள்கிறேன். அங்கே இருக்கும் ரோடுகள் எல்லாம் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. போவதற்கு வசதி இல்லை. கிராமத்திற்கும், டவுனுக்கும் எந்த விதமான தொடர்பும் இல்லாமல் இருந்து வருகிறது. இந்த நிலைமை தொன்று தொட்டு இருந்து வருகிறது. இந்தக் காலத்தில் அப்படிப்பட்ட நிலைமை இருக்கக்கூடாது. வில்லேஜுக்கும் டவு னுக்கும் தொடர்பு இருந்தால்தான் அபிவிருத்தி ஏற்படும். அந்த இடமும் டெவலெப் ஆகும். ஊம்பாரை கிராமத் திற்கு நம்முடைய மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் வந்திருந்தபோது ஒன்றைச் சொன்னார்கள். அங்கே ஒரு அணைக்கட்டபோவதாகச் சொன்னார்கள். இதுவரையிலும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அங்கே தண்ணீர் இப்போது அடியோடு நின்று விட்டது. குடிக்கக்கூட



தண்ணீர் கிடையாது. ஆகவே, சீக்கிரமாக அந்தத் திட்டத்தை எடுத்து, அந்த அணைக்கட்டைக் கட்டவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

* திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மதிப்பிற் குரிய பேரவைத் தலைவரவர்களே இந்த அரசின் வருங்காலத் திட்டத்திற்கு முகப்பு ஓவியமாக விளங்கக் கூடிய மதிப்புமிக்க ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மேதகு ஆளுநர் உரையில் குறிப்பிட்டுள்ளதுபோல், ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டை சீரோடும், சிறப்போடும் நடத்தியிருப்பதற் காகவும், தமிழ் வளர்ப்பதற்காகச் சங்கம் அமைத்திருப்பதற் காகவும், இந்த அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். காலப்போக்கில் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் இந்தியைப் படிப்பார்கள் என்று சொல்பவர்களும், இந்தி எந்த அளவிற்கு உலகத்தில் உள்ள மக்களால் அதிக அளவிற்குப் பின்பற்றப்பட்டு வருகிறது என்று மிகுந்த அக்கறையுடன் வெளிநாட்டு பயணம் செய்வோரும் தமிழகத்தில் ஆராய்ச்சி செய்ய உலா வருகிற இந்த நேரத்தில், இப்படிப்பட்ட தமிழ் மாநாடும், தமிழ் மக்கள் மீது இந்தி மொழி என்றைக்கும் திணிக்கப்படாது என்று பாரதப் பிரதமர் மூலம் உறுதிமொழி பெற்று இருப்பதும் பாராட்டத்தக்க நிகழ்ச்சிகளாகும். தமிழ் இனம், தமிழ்ச் சமுதாயம் ஆகியவற்றிற்கு ஆதரவாக இருக்கும் வகையில் இதனைச் செய்து காட்டிய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு நான் பாராட்டுக் களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்தாற்போல், மேதகு ஆளுநர் உரையில் விவசாயிகள் பிரச்னை குறித்து குறிப்பாக விவசாயப் பொருள்கள் கொள்முதல் விலைப் பிரச்னை, கடன்கள் ரத்து, தக்காவிக் கடன் ரத்து, இடுபொருள்கள் மலிவு விலையில் கிடைக்கும் திட்டங்கள் ஆகியவை இதிலே குறிப்பிட்டுள்ளதன் மூலம் இந்த அரசு விவசாயிகளின்பால் எந்த அளவிற்கு அக்கறையும் அதே நேரத்தில் அனுதாபத்தோடும் இந்த அரசு செயல்பட்டு வருகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக அவை விளங்குகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயம் மாநில அரசின் பட்டியலில் இருந்தாலும், நீர்ப்பாசன திட்டங்களை நிறைவேற்றுவது, உரங்களுக்கு விலை நிர்ணயிப்பது, விவசாயக் கடன்களுக்கு ரிசர்வ் வங்கி மூலம் கட்டுப்பாடுகள் ஆகியவை எல்லாம் மத்திய அரசின் நிர்வாகத் தில் இருக்கும் காலகட்டத்தில் கூட, இப்படிப்பட்ட நிலையிலும் கூட, விவசாயிகளுக்கு மாநில அரசின் அதிகாரத்தில் என்ன செய்யலாம், அவர்களுக்கு எப்படி உதவி செய்யலாம்

என்று தமிழக அரசு உண்மையிலேயே அந்த விவசாயிகளின் பிரச்னையைப் பரிவோடு அணுகுவதைப் பார்க்கிறபோது, இந்த ஆளுநர் உரையில் சொல்லியிருப்பவைகள் ஒரு நியாயமான குரலாக ஒலிக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

விவசாயிகளுக்காக உழைக்கிறோம் என்று சொல்லி ஏமாற்றிவருகிற நாராயணசாமி நாயுடு சங்கமும், அதற்கு அரணாக இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் விவசாயிகளை ஏமாற்றி வருகிறார்கள். ஏன் இதைச்சொல்கிறேன் என்று சொன்னால் ஏற்கனவே பேசி முடிக்கப்பட்ட பிரச்னைகளைக்கூட, ஏற்றுக்கொள்ளப் பட்ட முடிவுகளைக்கூட நிறைவேற்றாமல், தமிழக விவசாயி கள் மத்தியில் போராட்டக்குரலை எழுப்பிக்கொண்டு வரு கிறார்கள். 1977-ம் ஆண்டில் விவசாயப் பிரச்னைகளை ஆராய்வதற்காக ஒரு உயர்மட்டக்குழு நியமிக்கப்பட்டது, அந்த உயர்மட்டக்குழு தன்னுடைய முடிவை அறிவிப்பதற்கு முன்பாக, மின் கட்டண பாக்கிகள் நான்கு மாதம் இருக்க 1977 டிசம்பர் முதல் அந்தந்த மாத கட்டணத்தைக் கட்டி விடுவது என்றும் அந்தக் கமிட்டியின் அறிக்கை வந்தபிறகு பாக்கி 4 மாத நிலுவை பற்றி முடிவு எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டது. அப்போது எல்லா விவசாயச் சங்கத்தலைவர்களையும் அழைத்துப்பேசி இந்த முடிவு எடுக்கப்பட்டது. நாராயணசாமி நாயுடு சங்கமும் இதில் கலந்து கொண்டு ஒப்புக்கொண்டது. அதற்குப் பின்னர் அவர்கள் கட்டுவது இல்லை என்று முடிவு எடுத்ததால்தான் இப்படிப்பட்ட பிரச்னை இப்போது வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

[மாலை 4–20]

அதன் பிறகு கூட உயர் மட்டக் குழு அறிக்கை வெளியிடு வதற்கு முன்பு 14 பைசா, 12 பைசா என்று இந்த நாட்டு விவ சாயிகளுக்கு மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று மிகப் பரிவுடன் விவசாயிகளுக்குச் சாதகமாக முடிவு செய்தது அரசு. அப்படி அறிவித்தவுடன் விவசாயிகள் சங்கத் தலைவர்,





நான் மாலை கொண்டு வரவில்லை; மானசீகமாக மாலை அணிவிக்கிறேன்'' முதல் அமைச்சருக்கு என்று சொல்லிச் சென்ற நாராயணசாமி நாயுடு அதை மறந்து, மறைத்து மீண்டும் மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க போராடுவோம் என்று விவசாயிகளை ஏமாற்ற அறிவித்திருக்கிறார்.

உத்தரப் பிரதேசத்தில் 28 பைசா, மேற்கு வங்கத்தில் 28 பைசா, பஞ்சாபில் 27½ பைசா, அரியானாவில் 27½ பைசா என்று மின்சாரக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. தமிழ் நாட்டிலே தான் இந்தியத் துணைக்கண்டத்திலேயே மிகக் குறைந்த கட்டணம். எவ்வளவு குறைந்த அளவுக்கு வசூலிக்க முடியுமோ அந்த அளவுக்கு குறைக்க வேண்டுமென்ற அடிப்படையிலே நடவடிக்கை எடுத்து, அறிவித்த போது 'மாலை கொண்டுவர வில்லை, மானசீகமாக மாலை அணிவிக்கிறேன்' என்று சொல்லி விட்டுப் போனவர் போராடுவோம் என்கிறார். இதிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலை என்ன? அரணாக இருக்கிறோம் என்கிறார்கள். அரணாக இருக்கிறோம் என்று சொல்லுகின்ற அருமை நண்பர்களே, 'மாலை கொண்டுவரவில்லை, மான சீகமாக மாலை அணிவிக்கிறேன்' என்று சொன்னவர் போராடு வோம் என்று சொல்வதின் நோக்கம் என்ன? நீங்கள் அதை ஆதரிக்கிறீர்களா? இதிலே உங்கள் நிலையைத் தெளிவு படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

"இந்த 14 பைசா, 12 பைசா என்பது இந்தியத் துணைக் கண்டத்திலேயே மிகக் குறைந்த கட்டணம், மின்சாரக் கட்ட ணத்தைக் குறைக்க வேண்டுமென்று சொன்னபோது அனைத்து விவசாயிகள் சங்கத் தலைவர்களையும் அழைத்துப் பேசி இந்த முடிவை அறிவித்தபோது, அதை ஏற்றுக் கொண்டு மானசீகமாக மாலை அணிவிக்கிறேன் என்ற நாயுடுவே 'மின் சாரக் கட்டணத்தை ரத்து செய்ய வேண்டும் என்பது எங்க ளுடைய நோக்கம் அல்ல; குறைக்க வேண்டுமென்பது எங்கள் இலட்சியம்' என்று சொல்லியிருக்கிறார்கள். 1980-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 3-ம் நாள் இந்து சென்னை பதிப்பில் அச்செய்தி வந்துள்ளது. அப்படியெல்லாம் சொல்லிவிட்டுச் சென்ற பிறகு போராட்டம் என்கிறார்களே, அதை திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிக்கிறதா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். இந்த மாநிலத்தில் உள்ள மின் கட்டண விகிதம் குறைக்கப்பட வேண்டும் என்கிறதா? தயவு செய்து உங்கள் நிலையை தெளிவு படுத்துங்கள்.

இந்தப் பிரச்னையிலே திராவிட முன்னேற்றக் கழகம் இரட்டை வேடம் போடுகிறது. விவசாயிகளுடைய விளை பொருட்களுக்கு மிகச் சரியான விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசினுடைய விவசாய அமைச்சர் திரு. ராவ் பிரேந்திர

[திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்] [1981 ஜனவரி 27

சிங், இந்தியத் துணைக் கண்ட மாநில விவசாய அமைச்சர்கள் மாநாட்டைக் கூட்டி, அங்கே பேசினார்கள். வேண்டுமென்றே உற்பத்தி விலையைக் கூட்டி, அதிக் கொள்முதல் விலை கொடுக்க வேண்டுமென்று கேட்டு, அதைக் கொடுப்பது பொருத்தமல்ல என்று சொல்லியிருக்கிறார். இப்போது நிர்ணயிக்கப்பட்டிருக்கிற விலையில் இந்த நாட்டு விவசாயிகளுக்கு நியாயமான விலை, சரியான விலை கிடைக்கிறது, இலாபம் கிடைக்கிறது என்று அங்கே மத்திய அமைச்சர் பேசியிருக்கிறார். இலட்சிய உறவு கொண்டு 16 பெற்று பாராளுமன்றத்திற்குச் சென்றிருக்கிற திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பாராளுமன்றத்திலே அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இருக்கிறீர்களா? இல்லையே, ஏன் இப்படி இரட்டை வேடம் போடுகிறீர்கள்? விவசாயிகளை ஏமாற்றுகிறீர்கள்?

அதைப்போல கடனை தள்ளுபடி என்பது கூடாது என்று மத்திய சர்க்கார் சொல்லுகிறது. ஆனால் அவர்களோடு இலட்சிய உறவு கொண்டிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலை என்ன? மத்திய விவசாய அமைச்சர் எந்தச் சர்க்காரும் தமிழக விவசாயிகள் கோரிக்கையை நிறைவேற்ற முடியாது என்று சொல்லியிருக்கிறார், மத்திய விவசாய அமைச்சர் திரு. ராவ் பிரேந்திர சிங்

In Tamil Nadu, they do not want to pay electricity bill. They want all the loans to be written off. These demands are too big for any Government to meet.

என்று சொல்லியிருக்கிறார். இப்படிப்பட்ட நிலையில் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற விலை சரியானது என்று மத்திய அமைச்சர் சொல்லியிருக்கிற நிலையிலும், மத்திய சர்க்கார் அப்படிச் சொல்லியிருந்தாலும் இந்தத் தமிழ் நாட்டு விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அவர்களுடைய உற்பத்திச் செலவைக் கருதிப் பார்த்து 115 ரூபாய் நெல்லுக்கு, 175 ரூபாய் கரும்புக்கு என்று விலை நிர்ணயம் செய்திருக்கிறது இந்த அரசு. ஆகவே அரணாக இருப்போம் என்று கூறிக் கொள்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலை, இந்தப் பிரச்னையைப் பொறுத்தவரையில் என்ன என்பதை அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும். இந்தியத் துணைக் கண்டத்திலேயே இங்குதான் மின்சாரக் கட்டணம் குறைவாக இருக்கிறது. அதையும் குறைக்க வேண்டும் என்கிறார் நாயுடு. அதற்கு நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? முடிந்து விட்ட மின்சாரக் கட்டணத்தைப்பற்றி மீண்டும் பேசுவது என்பது, அதை மீண்டும் குறைக்க வேண்டும் என்பது அந்தச் சங்கத்தைச் சேர்ந்து விவசாயிகளை ஏமாற்றுவது என்பதே அல்லாமல் வேறல்ல. தமிழக அரசு கட்டணத்தைக் குறைத்து கூட்டுறவுக் கடனை



1981 ஜனவரி 27] [திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்]

தள்ளுபடி செய்தது என்றாலும் கடனைத் தள்ளுபடி செய்வது வங்கக் கடலிலே விழுந்து தற்கொலை செய்வதற்கு ஒப்பாகும் என்று மத்திய அமைச்சர் சொன்னாலும் கூட, நெல்லுக்கு 115 ரூபாய் என்றும், கரும்புக்கு 175 ரூபாய் என்றும் விலை நிர்ணயித்திருப்பதை நான் வரவேற்றுப் பாராட்டுகிறேன்.

அடுத்து கிராம அதிகாரிகள் பற்றிய பிரச்னை. 1973-ம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட வர்கீஸ் கமிட்டியின் அறிக்கையில் இதுபற்றிக் கூறப்பட்டிருக்கின்றது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர்கள் பேசுகின்றபோது ஏதோ அங்கொன்றும் இங்கொன்றுமாக சில அதிகாரிகள் தவறு செய்கிறார்கள் என்ற காரணத்திற்காக இப்படி மொத்தமாக நடவடிக்கை எடுப்பதா என்று கேட்டார்கள். 1973-ம் ஆண்டில் வர்கீஸ் கமிட்டி :

The concept of service is conspicuously absent in this relationship's

என்று கூறி இருக்கின்றது. அதுமட்டுமல்ல. கிராம அதிகாரிகளைப் பொறுத்த வரையில் ஒரு புதிய செட் அப் ஏற்படுத்துகின்ற வகையிலே, புதிய வகையிலே கிராம அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என்று 1973-ம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட அந்தக் கமிட்டியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. மேலும் எவ்வளவு விரைவாக இதைச் செயல்படுத்த வேண்டுமோ அவ்வளவு விரைவாக இதைச் செயல்படுத்த வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இந்தப் பழைய முறைகளை ஒழிப்பதற்கு மக்களுடைய ஆதரவு சாதகமாக இருக்கின்றது. ஆகவே எவ்வளவு விரைவாக இதைச் செயல்படுத்த வேண்டுமோ அவ்வளவு விரைவாகச் செயல்படுத்த வேண்டும் என்று வர்கீஸ் கமிட்டி கூறியதோடு மட்டுமல்ல, அம்ப்ரோஸ் கமிட்டியும் கூறி இருக்கின்றது.

உண்மையிலேயே இன்றைய சூழ்நிலையில் கிராம அதிகாரிகள் என்று இருக்கின்ற பதவியின் மூலம் ஒட்டு மொத்தமாக ஒரு கிராம அரசியலே நடத்துகிறார்கள் என்ற அளவுக்கு அந்தக் கமிட்டி சொல்லி இருக்கின்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி மன்றத் தலைவர்கள் எல்லாம் தனக்கு போட்டி என்று கருதுகின்ற வகையிலே 1971-ம் ஆண்டு ஒரு சில இடங்களில் நடத்தப்பட்டிருக்கின்றன. அங்குள்ள போட்டியின் காரணமாக கிராம அதிகாரிகள் நிலவரிகளை வசூல் செய்யும் அளவு ஊராட்சி மன்ற வரிகளை வசூலிப்பதில்லை. 50 சதம் வரி ஊராட்சிக்கு வசூலாகாமல் உள்ளது. ஆகவே கிராம அதிகாரிகள் மாற்றப்பட வேண்டும் என்று வர்கீஸ் கமிட்டி கூறி இருக்கின்றது.

[வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்] [1981 ஜனவரி 27

'The Commission recommends that a determined start should be made as early as possible. Simultaneous action has to be intiated on the political front to mobilise a measure of public support which already exists in favour of the reform'.
என்று கூறியிருக்கின்றது.

அடுத்து மதுவிலக்கு பிரச்னை பற்றி மனம் திறந்து கருத்துக்களைக் கூறவேண்டும் என்று ஆளுநர் அவர்கள் கூறியிருக்கின்ற காரணத்தால் நான் என்னுடைய கருத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். 1971-ம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் மதுவிலக்கினைத் தளர்த்திச் சட்டம் கொண்டு வருவதற்குக் காரணமான சூழ்நிலையும் காரணமும் இன்றும் இருக்கின்றது. ஆகவே தேசிய அளவில் இந்தக் கொள்கையை மத்திய அரசு ஏற்றுக் கொண்டு ஒரு முடிவுக்கு வருகின்ற வரையில் மதுவிலக்கு என்று இருப்பதை ரத்து செய்வது தவறு இல்லை என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதைக் கூறுகின்றபோது பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் கூறிய கருத்தொன்று நினைவுக்கு வருகின்றது. அதாவது, பாண்டிச்சேரியிலே ஒருவர் குடித்துவிட்டு தெருவிலே படுத்திருந்தால் நிச்சயமாக அவர் பாண்டிச்சேரியைச் சேர்ந்தவராக இருக்க மாட்டார். தமிழ்நாட்டைச் சேர்ந்தவராகத்தான் இருப்பார் என்று சொன்னார்கள். காரணம் என்னவென்றால் பாண்டிச்சேரியிலே மது அருந்துவது தடை செய்யப்படாத காரணத்தால்தான் கட்டுப்பாடு இருக்கின்றது. தமிழ்நாட்டில் அது தடை செய்யப்பட்டிருப்பதால் கட்டுப்பாடு இல்லாத நிலை இருக்கின்றது. மேலும் மதுவிலக்கைத் தளர்த்தி விட்டால் குடிக்கின்றவர்களின் எண்ணிக்கை அதிகமாகிவிடும் என்ற தவறான கருத்து நிலவுகின்றது. 1950-ம் ஆண்டு மதுவிலக்கை அமல்படுத்துவதற்கு முன்னால் 25லிருந்து 30 சதவீதம் பேர் வரை குடிக்கின்றவர்களாகத் தமிழகத்தில் இருந்தார்கள் என்று தேக் சந்த் கமிட்டி சொல்கிறது. 1950-ம் ஆண்டிலிருந்து 1964-ம் ஆண்டு வரையுள்ள இடைப்பட்ட 14 ஆண்டுகளில் மதுவிலக்கு அமல் படுத்தப்பட்ட பிறகு 5லிருந்து 7 சதவீதம் பேர்கள் குடிக்கிறவர்கள் இருந்திருக்கிறார்கள் என்று அக்கமிட்டி குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே தேக் சந்த் கமிட்டியின் ஆய்வுப்படி மதுவிலக்கு ரத்து செய்யப்படுவதால் குடிக்கிறவர்களின் தொகை கூடிவிடும் என்கின்ற அச்சம் தேவையில்லை. ஆகவே மதுவிலக்குக் கொள்கையைச் சற்று தளர்த்தலாம் என்று தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

திரு. பொ. விஜயராகவன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையின் மீது நான் சார்ந்திருக்கின்ற ஜனதா கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்



1981 ஜனவரி 27] [திரு. பொ. விஜயராகவன்]

களைக் கூறுவதற்கு முற்படுகிறேன். சாதாரணமாக ஆளுநருடைய உரை அரசாங்கத்தினுடைய கொள்கைகளை எடுத்து வைக்கின்ற ஒரு புத்தகமாக, ஒரு கொள்கை விளக்க ஏடாக இருப்பதை நாம் காண்பது உண்டு. ஆனால் நம்முடைய ஆளுநர் உரையில் மது விலக்கு கொள்கை பற்றி அரசாங்கம் ஒரு தெளிவான கொள்கையைக் கொண்டதாக இல்லாமல் குழப்பம் அடைந்த ஒன்றாக இன்றைக்கு மீண்டும் அந்தக் கொள்கை பற்றி நீங்கள் மனம் திறந்து சொல்ல வேண்டும் என்று மன்றத்து உறுப்பினர்களிடம் சொல்லுகின்ற அளவிற்கு வந்திருக்கின்றது.

[மாலை 4—30]

நான் அரசாங்கத்தைப் பார்த்து ஒன்று கேட்க விரும்புகிறேன். கடந்த 2, 3 வருடக் காலமாக மதுவிலக்குக் கொள்கையைத் தீவிரமாகக் கடைபிடித்து அதில் அக்கறை காட்டி வந்த இந்த அரசுக்கு இன்றைக்குத் திடீரென்று ஏன் இந்தத் தடுமாற்றம் என்று கேட்க ஆசைப்படுகிறேன். ஏதேதோ காரியங்களை எல்லாம் சட்டமன்றத்தைக் கூட்டி கேட்காத நீங்கள்—உதாரணமாக கிராம அதிகாரிகளுடைய பதவி நீக்கம், விற்பனை வரியில் விலக்கு போன்ற 11 விஷயங்களுக்கு அவசரச் சட்டத்தைப் பயன்படுத்தி நடைமுறைப்படுத்திய நீங்கள், மதுவிலக்கு திட்டத்தில் மட்டும் மாமன்ற உறுப்பினர்களை ஆலோசனை சொல்ல வேண்டும் என்று கேட்பது, தடுமாற்றம் அல்லாமல் வேறு என்ன? இந்தத் தடுமாற்றம் ஏன் ஏற்பட்டது என்று கேட்க விரும்புகிறேன். எதைப் போட்டாலும் எப்படிப் போட்டாலும் நாங்கள் அண்ணா வழியில் நிற்கிறோம் என்று சொன்னால், அண்ணா வழி என்பது மதுவிலக்கை ரத்து செய்வதா? அல்லது மதுவிலக்கைத் தளர்த்துவதா என்று கேட்கவிரும்புகிறேன். இன்றைக்கு ஆளும் கட்சி உறுப்பினர்கள் எடுத்து வைக்கிற வாதங்களைப் பார்த்தால் மதுவிலக்கை ரத்து செய்வதோ, அல்லது தளர்த்துவதோ ஏற்பட்டுவிடும் என்பதற்கு அடையாளம்போல்தான் அமைந்திருப்பதாக உணரமுடிகிறது. எங்களுடைய கட்சியின் சார்பில் இந்தப் போக்கை வன்மையாகக் கண்டிக்கிறேன். இந்த மாநிலத்தின் பெரிய பெரிய தலைவர்கள் எல்லாம் மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டாம் என்பதற்காக தங்கள் உயிரையே, தங்கள் வாழ்நாளில் இருந்த அனைத்துப் பொருள்களையுமே தியாகம் செய்திருக்கிறார்கள். அதனால் மற்ற மாநிலங்களில் இல்லாவிட்டாலும் தமிழகத்தில் மட்டுமாவது மதுவிலக்கை ரத்து செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக பக்கிங்காம் கர்நாடிக் நூற்பு ஆலை சம்பந்தமாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஏறத்தாழ 18,000 தொழிலாளக் குடும்பங்கள் தெருவில் நிற்கின்றன.

அவ்வளவு பேர்கள் வேலை பார்த்து வந்த நிறுவனம் இன்றைக்கு மூடப்பட்டு இருக்கிறது. அது பற்றி ஆளுநர் உரையில் வருத்தம் தெரிவித்திருக்கிறார்கள். எப்படியாவது திறக்கப் பார்க்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்களே தவிர வெளியே பேசும்போது, மாநில அரசுக்கு நிதி ஆதாரங்கள் குறைவாக இருப்பதினால், அதை ஏற்று நடத்துவது கடினமான காரியம் என்று பேசுகிறார்கள். உங்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். மத்திய அரசை நீங்கள் கட்டாயப்படுத்தி, வலியுறுத்தி இந்த பக்கிங்காம் கர்நாடிக் மில்லை, மத்திய அரசே ஏற்று நடத்துவதற்கு வழிவகைகளை வகுக்கும் முறையில் வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அந்த முயற்சியையாவது நீங்கள் எடுக்கக்கூடாதா என்று கேட்க விரும்புகிறேன்.

மத்திய அரசைப் பொறுத்தவரையில் எங்களுக்கு இருக்கக்கூடிய கணிப்பு எல்லாம், அது பேசுவது ஒன்றாகவும், செய்வது ஒன்றாகவும் இருக்கும் என்பதுதான். அதிலே எந்தவித கருத்து வேற்றுமையும் கிடையாது. ஒரு தொழிலாளிகூட வேலை செய்யாத ஒரு தொழிற்சாலையை தேசிய மயமாக்கும்போது, ஒரு கார்கூட உற்பத்தியாகி வெளிவராத ஒரு தொழிற்சாலையை தேசியமயமாக்கும்போது, இந்த பி. அண்டு. சி. மில்லை தேசியமயமாக்கினால் என்ன? தன்னுடைய பிள்ளை ஆரம்பித்து வைத்த தொழிற்சாலை என்ற காரணத்திற்காக ஒரு கார்கூட உற்பத்தியாகாத மாருதி தொழிற்சாலையை, அது நஷ்டத்தில் ஓடுகிறது என்று தேசியமயமாக்கும்போது, 13,000-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்படுகிற நிலையில், உண்மையிலேயே மக்கள் நலனில் அக்கறை இருந்தால் அவர்களுக்கு நன்மை செய்பவர்களாக இருப்பார்களேயானால் உடனடியாக இந்த பக்கிங்காம் கர்நாடிக் நூற்பு ஆலையையும் தேசியமயமாக்கி இருக்க வேண்டும். இவையெல்லாம் கருத்திற்கொண்டு இந்த அரசு நிச்சயமாக மத்திய அரசை வலியுறுத்தி அதை மேற்கொள்ளச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய பீதிகரமான பரபரப்பான செய்தி, எரி சாராயம் கடத்துவது பற்றி ஏறத்தாழ 5 கோடி என்று சொல்லுகிறார்கள. சில நேரங்களில் 15 கோடி 35 கோடி என்றெல்லாம் கூடச் சொல்லுகிறார்கள். அந்த அளவு மாபெரும் ஊழல் நடைபெற்றிருக்கிறது. அப்படிப்பட்ட பரபரப்பான செய்திகள் பத்திரிகைகளிலே நாளொரு விதமாக வந்து கொண்டிருக்கிறது. அப்படி பெரிய அளவில் எரி சாராயம் வேறு மாநிலங்களுக்குக் கடத்தப்பட்டிருக்கிறது இரு மாநிலங்களிலிருந்தும் வெவ்வேறு விதமான



செய்திகள் தினந்தோறும் வருகின்றன. கேரள மாநிலத்திலிருந்து அந்த அரசாங்கம் ஒரு விதமாகச் செய்தி தருகிறது. நம்முடைய மாநிலத்திலுள்ள பத்திரிகைகள் வேறு விதமான செய்திகள் தருகின்றன. எப்படி இருந்தாலும் தவறு செய்தவர்களை மக்கள் மத்தியில் கண்டுபிடித்து நிறுத்தியாக வேண்டும். தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் சரி, மக்கள் மத்தியில் உண்மை வெளிப்பட்டேயாக வேண்டும். ஆகவே, அதை நல்ல முறையில் பாரபட்சமற்ற முறையில், பெரிய அளவில் உயர்மட்ட விசாரணை நடைபெற்றாக வேண்டும். சுப்ரீம் கோர்ட் நீதிபதியைக் கொண்டோ, அல்லது இரு மாநிலங்களுக்கும் அப்பாற்பட்ட நிலையில் இருக்கும் நபர்களைக் கொண்டோ, விசாரணை நடைபெற்று, குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு மக்கள் முன்னால் நிறுத்தியாகவேண்டும். அவர்களின் செயல்களுக்கு அவர்கள் பொறுப்பு எடுத்தேயாகவேண்டும் என்று கூறி கொள்ள விரும்புகிறேன்.

வேலைக்கு உணவுத் திட்டம் என்ற திட்டம் இன்று திருத்தப்பட்டு கிராமப்புற வேலைவாய்ப்பு தேசிய திட்டம் என்ற அளவில் மாற்றப்பட்டிருக்கிறது. அப்படி மாற்றப்பட்டிருக்கிற நிலையில் நான் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வேலைக்கு உணவுத் திட்டம் என்ற திட்டம் ஜனதா கட்சி மத்தியில் ஆட்சியில் இருந்தபோது கொண்டுவரப்பட்ட திட்டமாகும். அன்றிருந்த நிலை இன்றைக்கு இல்லை என்பதை நான் வருத்தத்துடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அன்றைக்கு வேலைக்கு என்று கொடுக்கப்பட்ட தானியத்தின் அளவு அல்லது அரிசியின் அளவு இன்றைக்குக் குறைக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிந்து விட்டதா? இல்லை விலைவாசிகள் குறைந்து விட்டனவா என்று நான் கேட்க விரும்புகிறேன். விலைவாசி குறையாமல் வேலையில்லாத் திண்டாட்டம் குறையாமல வேலைக்கு என்று அளிக்கப்படுகிற தானியம் உணவுப் பொருள் இன்று குறைக்கப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் யார் என்பதை இந்த அரசு தெளிவுபடுத்த வேண்டும். இப்படிக் குறைக்கப்பட்டிருந்தால் இந்தத் திட்டம் மூலம் எப்படி கிராம மக்கள் பயன்பெற முடியும் என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும்.

தன்னிறைவுத் திட்டம் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆண்டு ஏறத்தாழ 69 வளர்ச்சி வட்டாரங்கள் தொடங்கப்பட்டு வேலைகள் நடைபெற்றுவருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அடுத்த ஆண்டு 120 வளர்ச்சி வட்டாரங்கள் தன்

நிறைவுத் திட்டத்தின்கீழ் வேலை நடைபெறுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டு எல்லாம் தயாராகிக் கொண்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். இந்தத் தன்னிறைவுத் திட்டம் இன்று 69 வளர்ச்சி வட்டாரங்களில் தொடங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் ஏறக்குறைய அக்டோபர், நவம்பர் மாதத்தில்தான் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டிருக்கிறது. அவசரக்கோலத்தில், 69 வட்டாரங்களில் ஒதுக்கப்பட்டிருக்கிற பணத்தைச் செலவழிக்கவேண்டும் என்ற வகையில் செலவழித்திருக்கிறார்களே தவிர உண்மையில் சொல்லப்போனால் இந்த 69 வட்டாரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருவது இன்று திருப்திகரமாக இல்லை. ஒரு பைனான்ஷியல் இயர், 12 மாதங்களில் இன்று ஆறு மாத கால அளவில் பணம் செலவழிக்கும் சூழ்நிலை இருக்கிறது. இந்த 69 வட்டாரங்களிலும் இன்னும் கொஞ்ச நாட்களாவது சரியாக ஆய்வுகள் நடத்தி இந்தத் தன்னிறைவுத் திட்டத்தை முழுமையாக பயன் பெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை இந்த அரசு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பனையேறும் தொழிலாளர்களை எடுத்துக்கொண்டால், இவர்கள் பனை ஏறும்போது விபத்துக்களாகி இறந்துவிட்டால் அவர்கள் குடும்பத்திற்கு நிதி உதவியாக ரூ. 5,000 வழங்கி வருவதாக அரசு தெரிவித்திருக்கிறது. ஆனால் இந்த ரூ. 5,000 பெறுவதற்குள் இறந்துபோனவரின் குடும்பம் மிகப் பெரிய பிரச்னைகளைச் சமாளிக்கவேண்டியிருக்கிறது. மருத்துவர்கள் சான்றிதழ் வழங்கும்போது எப்படி எங்கு அடிப்பட்டது என்பதற்குத்தான் சான்றிதழ் வழங்க முடியும். பனையிலிருந்து விழுந்துதான் இறந்தான் என்று மருத்துவ பரிசோதனையில் சொல்லமுடியாது. போலீஸ் அதிகாரிகள் இருக்கிறார்கள். ரெவின்யூ அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியும். போலீஸார் ரிப்போர்ட் இருக்கிறது, ரெவின்யூ துறை ரிப்போர்ட் இருக்கிறது. மருத்துவ அதிகாரிகள் ரிப்போர்ட்டில் இவன் பனையிலிருந்துதான் விழுந்து இறந்தான், அல்லது இவ்வளவு அடி உயரத்திலிருந்து விழுந்து இறந்தான் என்று இல்லாததால், பாதிக்கப்பட்ட பல குடும்பங்களுக்கு இந்த ரூ. 5,000 நிதி உதவி மறுக்கப்பட்டிருக்கிறது. கோர்ட்டுக்கு போகிறார்கள். இன்னார் கொலை செய்துதான் இவர் இறந்தார் என்று எந்த மருத்துவரும் சான்றிதழ் வழங்குவதில்லை. இன்னின்ன காயங்கள் பட்டிருக்கின்றன. இன்னின்ன இடங்களில் பட்டிருக்கின்றன. அந்தக் காயங்கள் பட்டு இறந்திருக்கிறான் என்றுதான் சொல்வார்களே தவிர இன்னார் கொலை செய்து இறந்தான் என்று எந்த மருத்துவரும் சொல்ல முடியாது. ஆகவே இதைக்கருத்தில்கொண்டு இப்போதுள்ள விதிமுறைகளை அறவே எடுத்து விட்டு, — ரெவின்யூ அதிகாரிகளும் போலீஸ் அதிகாரிகளும் பேரய்யா[illegible] ரெவின்யூ துறை ரிப்போர்ட்டை வைத்துக்கொண்டு, போலீஸ் ரிப்போர்ட்டை வைத்துக்கொண்டு, மருத்துவரின் சான்றிதழை



வைத்துக் கொண்டு பனையேறும்போது கீழே விழுந்து இறந்தவர்களின் குடும்பங்களுக்கு இந்த நிதி உதவி அளிக்க அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கனவே அப்படி பனையேறும்போது கீழே விழுந்து இறந்தவர்களின் குடும்பங்களுக்கும் இந்த நிதி உதவி கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.

அதேபோல் வீடு கட்டுகிற தொழிலாளர்கள் இருக்கிறார்கள். வீடு கட்டுகிற தொழிலாளர்கள் மிக அபாயகரமான இடங்களிலிருந்துகொண்டு அபாயகரமான தொழிலைச் செய்கிறார்கள். அவர்களும் வீடு கட்டிக்கொண்டிருக்கும்போது கீழே விழுந்து இறந்துவிடுவார்களானால் அவர்கள் குடும்பங்களுக்கும் இந்த நிதி உதவியை நீட்டித்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி—திருநெல்வேலி ரெயில்வே பாதை பற்றி கூற விரும்புகிறேன். 1979-ல் திருவனந்தபுரத்திலிருந்து கன்னியாகுமரிக்கு ரெயில்வே பாதை திறந்து வைக்கிறபோது அன்று அந்த அமைச்சர் அவர்கள் 1979 டிசம்பருக்குள்ளாக கன்னியாகுமரி திருநெல்வேலி இரயில்வே பாதை அமைத்துத் தரப்படும் என்று உறுதி கூறினார்கள். 1979 டிசம்பர் போய் 1980 டிசம்பர் போய் இப்போது 1981-ல் இருக்கிறோம். இரண்டாண்டுகள் முடிந்த பிறகும் அந்த வேலைகள் இன்னும் முடிவுறவில்லை. ஆகவே இந்த அரசு உடனடியாக மைய அரசை வலியுறுத்தி விரைவாக அதைச் செயல்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[மாலை 4-40]

அதோடு, இந்த வேலை முடிந்தவுடன் கரூர்—திண்டுக்கல் அகல ரயில் பாதை ஆரம்பிப்பதற்கு மத்திய அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல் கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் வரையிலும் ரயில் விடுவதென்று அந்தத் திட்டம் சொல்லப்பட்டு, பல வருடங்களாகி விட்டது. அதையும், இந்த அரசு உடனடியாக செயல்படுத்துவதற்கு மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இந்தத் தாய்த் தமிழகத்தோடு இணைந்து 25 வருடங்களாகிவிட்டது. ஜனவரி 30 ஆம் தேதி, 1980 அன்று ஆற்றிய ஆளுநர் உரையில் தாய்த் தமிழகத்தோடு இணையப் போராடிய தியாகிகளுக்கு அறிவித்த உதவித் தொகை நிறுத்தப்பட்டிருப்பதை திரும்பவும் தரவேண்டும். அதற்கான ஒரு சட்டத்

திருத்தம் கொண்டுவரப்படும் என்று சொல்லியிருந்தார்கள். ஆனால், இதுவரையிலும் அந்தச் சட்டம் வரவில்லை. அந்தத் தியாகிகளுக்கு வழங்கப்பட்ட அந்த உதவித் தொகை நிறுத்தப் பட்டிருக்கிறது. இன்றைக்குத் தாய்த் தமிழகத்தோடு இணை வதற்காகப் போராடிய அந்தத் தியாகிகளைக் கவனிக்க இந்த அரசு தவறி விட்டது. எனவே, உடனடியாக இந்தத் தியாகி களுக்கு உதவித் தொகை வழங்குகின்ற அளவில், உடனடியாக சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து, அந்த உதவித் தொகை வழங்கப்பட வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய நீர்ப்பாசனத் துறையைப் பொறுத்தவரையில், அண்டை மாநிலங்களிலிருந்து தண்ணீர் பெறுவதில் ஏராளமான சிக்கல்கள் இருப்பதை நான் அறிவேன். உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால், கன்னியாகுமரி மாவட்டத்தில் நெய்யாறு இடைக்கால் சேனலுக்கு அண்டை மாநிலமான கேரளா விலே இருந்து தண்ணீர் விடப்படும் என்று சொல்லப்பட்டிருக் கிறது. ஏறத்தாழ, இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டு 10, 15 வருஷங்களுக்கு மேலாகிறது. அங்கே ஓரளவுக்கு வாக்குறுதி அளிக்கப்பட்ட தண்ணீர் கூட பெறவில்லை. அதனால் பல ரெவின்யூ கிராமங்கள் பயிர் செய்ய முடியாமல் ஏராளமான விவசாயிகள் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் பயிர் செய்ய முடியாமல் அல்லல்படுகிறார்கள். ஆகவே, இந்த அரசு உடனடியாக கேரள மாநிலத்தோடு பேச்சுவார்த்தைகள் நடத்தி, இதில் ஒரு சுமுகமான முடிவைக் கண்டாக வேண்டும்.

அதோடு, சித்தாறு—பட்டணங்கால் வாய்க்காலுக்கு எப்போது தண்ணீர் வந்தாலும் கடைமடைக்குச் செல்வதில்லை. தண்ணீர் வராத நேரத்தில் அதைப் பற்றிச் சொல்லவே வேண்டிய தில்லை. 2, 3 வருடங்களாக விவசாயிகள் பயிர் செய்ய முடியாத காரணத்தால், அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளுக்குத் தண்ணீர் வரியை ரத்து செய்ய வேண்டும். அந்த இடங் களிலே, பகுதிகளிலே வாழ்கின்ற விவசாயிகளுக்கு, அந்தப் பகுதியை பஞ்சப் பிரதேசமாக அறிவித்து, இந்த அரசு தருகின்ற எல்லாவிதமான, சலுகைகளையும் வழங்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

கீழ்க்குளத்தில் 1978 ஆம் ஆண்டிலே புயல், வெள்ளத்தின் காரணமாக. ஒரு உடைப்பு ஏற்பட்டது அது இன்னும் சரிசெய்யப்படவில்லை. அந்த உடைப்பைச் சீர் செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு, நன்றி கூறி விடைபெறுகிறேன்.





திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகின்ற போது, என்னுடைய ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். சங்கம் வளர்த்த மதுரையிலே ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டை சீரும் சிறப்புமாகக் கொண்டாடும் வகையில் தமிழர்கள் பண்பாடு, தமிழர்கள் கட்டுப்பாடு, தமிழர்கள் விருந் தோம்பல் ஆகியவைகளை உலகத்திற்குத் தெரிவிக்கின்ற வகை யிலே, கேட்போர் எல்லாம் அவர்கள் மனதிலே வைத்துக் கொள்ளுகின்ற வகையிலே மிகச் சிறப்பு மிக்க வகையிலே இந்தத் தமிழ் மாநாட்டை சிறப்பான வகையிலே ஏற்பாடு செய்த புரட்சித் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

இந்தச் சிறப்புமிக்க விழாவிலே, மிகச் சீரிய வகையிலே திட்டங்களை அமைத்து, இந்த மாநாடு எப்படியெல்லாம் சிறப் பாக நடைபெற வேண்டுமென்பதற்காக, பல மாதங்களாக சிரமங்களையும் பாராமல் பல திட்டங்களை வகுத்து, அங்கே வருகின்றவர்களுக்கு என்னென்ன வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று, அவைகளை நிரந்தரமாக அந்த மதுரை மாநகரத்திலே கிடைப்பதற்கு பாடுபட்டு, அதில் வெற்றிகண்ட நம் புரட்சித் தலைவர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. இன்றைக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்ற ஒருசில கொள்கை முடிவுகளிலிருந்து விவசாயத் தொழி லாளர்கள் எல்லாம் நம்முடைய நாடு 1947 ஆம் ஆண்டிலே சுதந்திரமடைந்திருந்தாலும், உண்மையான சுதந்திரக் காற்றை சென்ற ஆண்டிலேதான் அடைந்தார்கள் என்று நான் சொல்ல முடியும்.

ஏனென்றால் ஒரு பக்கத்தில் ரெவின்யூ போர்டை ஒழித்து விட்டு, மற்றொரு பக்கத்தில் பகுதி நேர கிராம அதிகாரிகள் பதவியை ரத்து செய்ததன் வாயிலாக அந்தக் கிராம மக்களுக்கு உண்மையான சுதந்திரம் கிடைத்திருக்கிறது. கிராம அதிகாரிகள் பார்ட் டைமாக வேலை செய்த காரணத்தால் தங்கள் வருவாய் போதாமல் பல தவறுகள் செய்கிற சூழ்நிலை இருந்து வந்தது. அவர்கள், அரசு கொண்டு வந்திருக்கிற பல நிலச் சீர்திருத்தச் சட்டங்களை எல்லாம் அமல்படுத்த ஒரு தடைக்கல்லாக இருந்து வந்திருக்கிறார்கள். அவர்களிலே பலர் ஒருசில மிராசுதாரர் களிடம் வேலை செய்பவர்களாக இருந்து வந்திருக்கிறார்கள். இந்த நிலையில் பகுதி நேர கிராம அதிகாரிகளை எடுத்துவிட்டு மாற்றுத் திட்டத்தைக் கொண்டு வந்த இந்த அரசைப் பாராட்டு கிறேன்.

விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்சக் கூலியை அமல்படுத்தும் நேரத்தில் சட்டத்தில் இருந்து தப்பிக்க ஒரு சில மிராசுதாரர்கள் தவறான வழிகளைப் பயன்படுத்தி வருகிறார்கள். அந்த மக்களுக்கு உள்ள உண்மையான உரிமையைக் கொடுக்கக் கூடாது என்பதற்காக நிலங்களைத் தரிசாகப் போடவும் சவுக்கு போன்ற மரங்களை வைத்தும் அந்த மக்களைப் பட்டினி போட்டு அவர்களைத் தங்களுக்குக் கட்டுப்பட்டு வைக்க வேண்டுமென்று செயல்பட்டு வந்தார்கள். நம்முடைய இதய தெய்வமாம் புரட்சித் தலைவர் அவர்களிடம் இரண்டாண்டுகளுக்கு முன்னால் ஆயிரம் பேருடன் வந்து கோட்டையில் சந்தித்து எடுத்துச் சொன்னதன் பேரில் அதைப் பரிசீலித்து அந்த மக்களின் துயரை நீக்குவதற்காக ஆளுநர் உரையில் அவ்வாறு நிலத்தைத் தரிசாகப் போடுவதைத் தடுத்து நிறுத்த சட்டம் கொண்டு வரப்படும், அந்த நிலங்கள் அரசால் எடுத்துக் கொள்ளப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். செங்கற்பட்டு மாவட்டத்தில் சவுக்குப் பயிர் செய்தால் நில உச்ச வரம்பில் இருந்து கூட விலக்களிக்கப்படுகிறது. அதைப் பல மிராசுதார்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு உச்ச வரம்புச் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொண்டு வருகிறார்கள். ஆகவே, இதைத் தடுக்கும் வகையில் கொண்டு வரப்பட்டுள்ள திட்டத்தின் காரணமாக உணவு உற்பத்தி பாதிக்கப்படுவது தடுத்து நிறுத்தப்படும். இதற்கான சட்டத்தை மிக விரைவில் கொண்டு வரவேண்டுமென்று இந்த அரசை வற்புறுத்திக் கேட்டுக் ஆளுநர் உரையில் இந்தக் கருத்தை எடுத்துச் சொன்னதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெருநகரங்களில் வாழ்கிற மக்களும், மற்றப் பொதுமக்களும் வீட்டை விட்டு வெளியே செல்லுகிற நேரத்தில் குடி தண்ணீர் கிடைக்காமல் அல்லல்படுகிறார்கள். குடிநீர் கிடைக்காமல் அந்த மக்கள் ஓட்டல்களில் காப்பி, டீ, கிரஷ் போன்றவற்றைக் குடித்து உடல் நலத்தைக் கெடுத்துக் கொள்கிறார்கள். அந்த நிலையை மாற்ற அரசு முன்வந்து ஆங்காங்கு பல இடங்களில் குடி தண்ணீர்த் தொட்டிகளைத் திறந்து வைத்து ஏழை மக்களின் சுகாதாரத்தையும் உடல் நலத்தையும் பாதுகாக்க முன்வந்தமைக்காகப் பாராட்டுகிறேன். இந்த ஆண்டை நாம் ஊனமுற்றோர் ஆண்டாகக் கொண்டாடி வருகிறோம். ஊனமுற்றோர்களுக்கு அந்த இடங்களில் வேலை வாய்ப்பு அளிக்கலாம். குடிதண்ணீர்த் தொட்டிகளை அமைக்க தர்ம ஸ்தாபனங்கள் முன் வந்தால் அதையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

தன்னிறைவுத் திட்டம் என்ற மாபெரும் புரட்சிகரமான திட்டத்தைக் கொண்டு வந்து ஆண்டாண்டு காலமாக இருக்கும் மக்கள் குறைகளைத் தீர்க்க அரசு நடவடிக்கை எடுத்து





வருகிறது. பாதைகள் இல்லாத கிராமங்களுக்குப் பாதைகள் போடப்படுகின்றன. குடி தண்ணீர் இல்லாத கிராமங்களுக்குக் குடிதண்ணீர் கொடுக்கப்படுகிறது.

[மாலை 4-50]

ஆனால் அவைகளைச் செய்வதற்குக் காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது. அதற்குள் அவைகளை முடிக்க முடியுமா என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால் அரிசன நலத் துறை மூலமாக பாதை வசதிகள் செய்து கொடுக்கப்படுவதற்குத் தேவையான நிலங்களை ஆர்ஜிதம் செய்ய வேண்டி இருக்கிறது. ஆர்ஜிதம் செய்வதற்குப் பிறகுதான் பாதை வசதிகளைச் செய்ய முடியும். ஆகவே அந்தத் திட்டங்களுக்கு மேலும் காலக் கெடு கொடுக்கப்படுகிற முறையிலே அந்த 69 ஒன்றியங்களிலேயும் மேலும் 6 மாதம் கொடுத்தால் அந்தத் திட்டங்கள் வெற்றி பெறும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரிசன மக்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தைப் பற்றி பெருமதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றவர்களும் பேசியிருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் பேசுகின்ற நேரத்திலே, நாங்கள் கொண்டுவந்த திட்டத்தை நீங்கள் நிறுத்தி விட்டீர்களே என்று கேட்டார்கள். அதற்குப் பதில் அளிக்கின்ற நேரத்திலே மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அந்தத் திட்டத்தை மீண்டும் பரிசீலிப்போம் என்று சொல்லி இருக்கிறார்கள். அதைப் பற்றி நான் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கனவே கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்ற இலவச வீடுகள் எந்த நிலைமையிலே இருக்கின்றன என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். உண்மையிலேயே அங்கே மக்கள் வாழ்கிறார்களா என்றால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். அங்கே மக்கள் குடி இருக்கக்கூடிய வழிவகைகள் இல்லை. 100 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன என்றால் அவற்றிலே 10 வீடுகளிலேதான் மக்கள் குடியிருக்கிறார்கள். பல வீடுகளிலே, கட்டி முடிக்கப்பட்ட ஓராண்டுக் காலத்திற்குள்ளாகவே விரிசல் ஏற்பட்டு மக்கள் வாழ்வதற்கு லாயக்கில்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதைத் தவிர இந்த வீடுகளைக் கட்டிக் கொடுப்பதிலே மாபெரும் தவறுகள் நடந்திருக்கின்றன. அப்படிப்பட்ட குறைகள் இல்லாமல் இந்த இலவச வீடுகளைக் கட்டிக் கொடுக்கலாம், ஏற்கனவே அறிவித்திருக்கின்ற திட்டத்தின்படி அந்த மக்களுக்கு கொடுக்கப்படுகிற 1,000 ரூபாய் சப்ஸிடியை அதிகப்படுத்திக் கொடுத்து அவர்களே அந்த வீடுகளைக் கட்டிக் கொண்டால் அவர்கள் நல்ல முறையிலே குடியிருப்பதற்கு வாய்ப்பு இருக்கும்.

இல்லாவிட்டால் இடையிலே இருக்கின்ற சிலர் சுரண்டக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே இந்தத் திட்டத்தை மறு பரிசீலனை செய்து இலவச வீடுகளை சரியான முறையில் கட்டிக் கொடுப்பதற்கான வழி வகைகளைச் செய்ய வேண்டுமென்று புரட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலேதான் மதுராந்தகம் ஏரி இருக்கிறது செங்கற்பட்டு மாவட்டத்திலேயே அதுதான் மிகப் பெரிய ஏரியாக இருக்கிறது அதை நம்பித்தான் விவசாயப்பெருமக்கள் இருக்கிறார்கள். அங்கே சென்ற பல ஆண்டுகளாகவே பராமரிப்புச் சரியாக இல்லை. வண்டல் மண் அதிகமாகச் சேர்ந்து விட்டது. அதைத் தூர்வாரினால் கிட்டத்தட்ட 2,000 ஏக்கர்களுக்கு மேலும் பாசன வசதி கிடைக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே அதைத் தூர் வாருவதற்கு உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காக 1975ஆம் ஆண்டிலே மத்திய விவசாயத் துறை அமைச்சராக இருந்த திரு. ஜகஜீவன்ராம் அவர்கள் அந்த ஏரியைப் பார்க்கிற நேரத்திலே அதைத் தூர்வாருவதற்கும் செப்பனிடுவதற்கும் சர்க்கார் மூலமாக ஆயத்தங்கள் செய்வதாகச் சொன்னார்கள். அதற்குப் பிறகு 1976 ஆம் ஆண்டிலே மத்திய அரசிலிருந்து அறிவிப்பு வந்தது. அதற்குப் பிறகு மத்திய அரசு எந்தவிதமான நடவடிக்கையும் அது குறித்து எடுக்கவில்லை. ஆகவே இந்த அரசு அந்த ஏரியைத் தூர் வாருவதற்கும் செப்பனிடுவதற்கும் வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுராந்தகம் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாகும். அங்கே தொழிற்சாலையே இல்லை. அங்கே தொழில்கள் துவங்குவதற்காக பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருந்தாலும் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை. காகித ஆலை துவக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை வந்த நேரத்திலே நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் இதே மாமன்றத்திலே உறுதிமொழி சொல்லியிருக்கிறார்கள். மதுராந்தகத்திலே அந்த காகித ஆலை துவக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டம் இன்னும் செயல்பட ஆரம்பிக்கவில்லை. அதை உடனடியாகச் செயல்படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் வேலை செய்கிற தொழிலாளர்கள் எல்லாம் பல ஆண்டுகளாக தற்காலிகமாகவே வேலை செய்து வருகிறார்கள். அவர்கள் பத்தாண்டு, பதினைந்தாண்டுக் காலமாகத் தற்காலிக வேலையில் இருப்பதால் பல இம்சைகளுக்கும், அல்லல்களுக்கும் ஆட்படுகிறார்கள். அவர்களுக்குத் தினக் கூலியாக 4 ரூபாய் தான் இருக்கிறது. அந்த நிலைமைகளை மாற்றி அவர்களை நிரந்தரம் செய்ய வேண்டிய வழிவகைகளை இந்த அரசு செய்ய வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.



அதுமட்டுமல்லாமல், மாமண்டூரில் இருக்கின்ற கதர் வாரியத்தின்மூலம் செயல்படும் காகித ஆலையில் வேலை செய்யும் தொழிலாளர்கள் பல ஆண்டுகளாக தற்காலிக வேலையிலேயே இருக்கிறார்கள். நஷ்டத்திலே ஓடினாலும் கூட அந்த மக்களின் குறைகளை அறிந்து, அந்த மக்களுக்கு உதவி செய்யும் வகையில் அந்த ஆலையிலே வேலை செய்யும் தொழிலாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்குப் பெரிய குப்பத்திலும், ஆலிக் குப்பத்திலும் பிரிட்ஜ் போடவேண்டுமென்று கோரிக்கை இருக்கிறது. 1973ஆம் ஆண்டு அங்கே நடைபெற்ற ஒரு சம்பவத்தின் காரணமாக, ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டு, அந்தக் கமிஷன் தீர்ப்பில் அங்கே பிரிட்ஜ் கட்ட வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. ஆனால் இதுவரையில் கட்டப்படவில்லை. சென்ற ஆண்டு சில பிரிட்ஜ்களை கட்ட வேண்டுமென்று முயற்சி செய்யப்பட்டு, எஸ்டிமேட் தயார் செய்யப்பட்டதாகச் சொல்கிறார்கள். நடப்பு ஆண்டிலேயாவது அந்த பிரிட்ஜைக் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அந்த பிரிட்ஜ் கட்டப்படாமல் இருந்தால் அந்தக் குப்பத்திலே வாழும் மக்களுக்கு வெளி உலகத்தோடு தொடர்பு இல்லாமல் போய் விடுகிறது. அங்கே என்ன நடக்கிறது என்பதே மற்றவர்களுக்குத் தெரியாத சூழ்நிலையில் பல கலவரங்கள் ஏற்பட்டு உயிர்க் கொலைகள் நடக்கின்றன. அவைகளைத் தவிர்ப்பதற்காக இந்தப் பிரிட்ஜை உடனடியாகக் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் செங்கல்பட்டு மாவட்டத்தில் ஒருசில பகுதிகளில் மட்டும் நகர ஈட்டுப்படி கொடுக்கப்படுகிறது. அதை மேலும் விஸ்தரித்து மாவட்டத்தில் உள்ள அனைத்துத் தாலுக்காக்களுக்கும் அந்த நகர ஈட்டுப்படியைக் கொடுக்க வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

இடைக்கழி நாட்டுப் பகுதியில் கயிறு திரிக்கும் ஆலை ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமென்று கூறி என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் பேருரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த ஆளுநருடைய உரையில், நடந்து முடிந்த உலகத் தமிழ் மாநாட்டுச் சிறப்புகளைப் பற்றியெல்லாம் சொல்லியிருக்கிறீர்கள்; ஆனால் சொல்லப்படாதவை ஏராளம் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏறக்குறைய 232 புலவர்களுக்கு 60 இலட்சம் ரூபாய் இந்த உலகத் தமிழ் மாநாட்டின் பெயரால் செலவழிக்கப்பட்டது என்று நிதி

யமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொரு புலவருக்கும் ஏறக்குறைய 25,862 ரூபாய், நாள் ஒன்றுக்கு ஏறக்குறைய 4,000 ரூபாய் செலவிடப்பட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது. அது நியாயமான, முறையாகச் செலவழிக்கப்பட்டிருக்கிறதா என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் அறிந்து கொள்வதற்காக ஆவலுடன் இருக்கிறார்கள். எனவே, அந்த உலகத் தமிழ் மாநாட்டுக் கணக்குகளை இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு அருள்கூர்ந்து சமர்ப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உலகத் தமிழ் மாநாட்டின் பெயரால் மொத்தத்திலே ஆளுங் கட்சிக்காரர்களுக்கு என்னென்ன நடைபெற்றது என்பதையெல்லாம் நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். உலகத் தமிழ் மாநாட்டின் பெயரால், ஆளுங்கட்சிக்காரர்களுக்கு காண்ட்ராக்டுகளும், அவர்கள் விளம்பர ஏஜண்டுகளாகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படி உலகத் தமிழ் மாநாட்டின் பெயரால் கைக்கு அகப்பட்டதைச் சுருட்டியிருக்கிறார்கள் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, உலகத் தமிழ் மாநாட்டிற்குப் பல்வேறு வெளிநாடுகளிலேயிருந்தும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் பலர் 31—12—1980-ஆம் நாளன்று சென்னைக்கு வந்தார்கள். அவர்களுக்கு தங்குமிடங்கள் ஏற்பாடு செய்யப்படவில்லை. அவர்கள் கேட்பாரற்ற முறையிலே இருந்தார்கள். தங்குமிடங்களை அவரவர்களே தங்களால் முடிந்தவரையில் ஏற்பாடு செய்துகொண்டு தங்கியிருக்கிறார்கள். பொன்னி பதிப்பகத்தைச் சேர்ந்த தியாகராசன், வைரமுத்து ஆகியவர்கள் அரசின் அழைப்பாளிகளாகத் தங்க வைக்கப்படவில்லை. அவர்கள் உலகத் தமிழ் மாநாட்டிற்கு வந்து உங்களைப் பற்றி என்ன கருத்தோடு சென்றிருப்பார்கள் என்பதை நினைத்துப்பார்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

''எங்கும் தமிழ், எதிலும் தமிழ்'' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் உலகத் தமிழ் மாநாட்டிற்காக அழைப்பிதழ்கள்-வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் அழைப்பிதழ்கள் ஆங்கிலத்திலே இருந்தன. இதுதான் உங்களுடைய ''எங்கும் தமிழ், எதிலும் தமிழ்'' என்ற கொள்கையா என்று கேட்க விரும்புகிறேன்.

உலகத் தமிழ் மாநாட்டு மலர் தயாரித்திருக்கிறார்கள். அதிலே இருக்கின்ற கட்டுரைகள் எல்லாம் தமிழுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் இடம் பெற்றிருக்கின்றனவா என்பதையெல்லாம் தமிழ் அறிஞர்கள் ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



[மாலை 5-00]

அடுத்து இங்கே விவசாயிகளைப் பற்றி, நாங்கள் எவ்வளவோ கடன் சலுகைகளை வழங்கியிருக்கிறோம் என்றெல்லாம் சொல்லியிருக்கிறீர்கள். நான் கூடத் திரும்பத் திரும்பப் படித்துப்பார்த்தேன் பல்வேறு சந்தர்ப்பங்களில், பல்வேறு நேரங்களில், இதே மன்றத்தில் சொல்லப்பட்டவைகளைத்தான் திரும்பத் திரும்பச் சொல்லியிருக்கிறீர்கள். தக்காவிக் கடன், கூட்டுறவுக் கடன், இப்படிப்பட்ட கடன்கள் எல்லாம் இருக்கின்றன. ஆனால், இந்தக் கடனையெல்லாம் அநுபவித்த விவசாயிகள் தமிழ்நாட்டிலேயிருக்கிறார்களா என்றால், உள்ளபடியே, நண்பர்களே, அப்படிப்பட்ட விவசாயிகள், சிறு விவசாயிகள் இந்தக் கடன் நிவாரணத்தின் கீழ் அதன் பலன்களைப் பெறவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். கூட்டுறவுக்கு, கடன்களுக்கு, அதுவும் 5 ஏக்கருக்கு உட்பட்டவர்கள், அதிலும், புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்கள், சிறு விவசாயிகள், இவர்களுக்கு மட்டுமே அந்தக் கடன் சலுகை பொருந்தும் என்று நீங்கள் சொன்னீர்கள். ஆனால், அந்தப் பலனை அனுபவிக்க முடியாத பல விவசாயிகள் இன்னும் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் இந்தக் கடன் நிவாரணச் சட்டம் பொருந்தும் வகையில் கடன் நிவாரணச் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

விவசாயிகளுடைய போராட்டத்தைப் பற்றி இங்கே பேசிய பலரும் குறிப்பிட்டார்கள். பல்வேறு சங்கங்களைச் சேர்ந்தவர்களை எல்லாம் முதலமைச்சர் அழைத்து, சமாதானப் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். 1 பிளஸ் 1 என்ற திட்டத்தை அறிவித்ததற்கு மறுநாளே மின்சாரத் துண்டிப்பைச் செய்தது இந்த ஆட்சியாளர்கள்தான். அந்த 1 பிளஸ் 1 திட்டத்தை ஏற்றுக் கொண்ட விவசாயச் சங்கத்தைச் சேர்ந்தவர்களிடத்தில் அவர்களுடைய மின் இணைப்பைத் துண்டித்தது இந்த ஆட்சியாளர்கள். அதனுடைய விளைவாகத்தான் மீண்டும் விவசாய மின் கட்டணத்தைக் கட்டமாட்டோம் என்று விவசாயிகள் எல்லாம் சொன்னார்கள் அதனுடைய விளைவாகத்தான் போராட்டம் ஏற்பட்டது. எனவே, அந்தப் போராட்டத்திற்கு முழு முதற் பொறுப்பு ஆட்சியாளர்களுடைய அணுகு முறைதான் என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆட்சியாளர்கள் 1 பிளஸ் 1 திட்டத்தை ஏதோ திராவிட முன்னேற்றக்கழகத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாம் எதிர்க்கிறோம் என்றெல்லாம் சொன்னார்கள். மின்சாரக் கட்டணம் கட்டக் கூடாது என்றோ, அல்லது வரியை வசூலிக்க

கூடாது என்றோ திராவிட முன்னேற்றக் கழகமோ, எங்கள் கட்சித் தலைவர்களோ, என்றைக்கும் சொல்லியது கிடையாது. ஆனால், ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் எதற்கெடுத்தாலும் எந்தப் போராட்டம் நடத்தினாலும், திராவிட முன்னேற்றக் கழகத்தை இழுக்க வேண்டுமென்பதற்காக, இப்படி பல்வேறு சந்தர்ப்பங்களில் கூறியது வாடிக்கையான ஒரு நிகழ்ச்சி. எனவே, நான் ஆளுங் கட்சிக்காரர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள், சமூக விரோதிகள், என்று திராவிட முன்னேற்றக்கழத்தையும், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களையும் சுட்டிக் காட்டுகிறீர்கள். யார் சமூக விரோதி? வரியை வசூலிக்க முடியாதவர்கள், மின்சாரக் கட்டணத்தை வசூலிக்க முடியாதவர்கள், வசூலிக்க யோக்கியதை இல்லாத அரசு சமூக விரோத அரசா? (குறுக்கீடு) வரியை வசூலிக்க முடியாத அரசு, கையாலாகாத அப்படிப்பட்ட அரசு தான் உள்ளபடியே சமூக விரோத அரசு என்று சொல்ல முடியும். எனவே, நீங்கள் எதிர்கட்சிகளைத் தவறாகக் கூற வேண்டாமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

உபரி நிலங்களையெல்லாம் எடுத்து, ஏதோ நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு விநியோகிக்கப் போவதாகச் சொல்கிறார்கள். ஆனால், குடியரசுத் தலைவருடைய ஒப்புதலுக்காக உங்களால் அனுப்பப் பட்டிருக்கிற சட்டம் உள்ளபடியே எத்தனை ஏக்கர் நிலத்தை எடுக்கும் என்பதை நீங்கள் சொல்லவில்லை. ஆனால், அப்படி எடுக்கிறபோது, உள்ளபடியே எடுக்கமுடியாத அளவுக்கு அதிலே சில ஓட்டைகளையெல்லாம் வைத்திருக்கிறார்கள். அதில், உங்களுக்குத் தேவையானவர்களுக்கு சலுகை செய்வதற்காக இப்படிப்பட்ட ஷரத்துக்களை வைத்துத்தான் சட்டம் இயற்றப்பட்டுச் சென்றிருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன். எனவே அந்தச் சட்டத்தின் மூலமாக நிச்சயமாக 1 ஏக்கர் நிலத்தைக் கூட நீங்கள் உபரி நிலமாக எடுக்க முடியாது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

வேலைக்கு உணவுத் திட்டம் என்ற திட்டத்தைச் சொல்லியிருக்கிறீர்கள். ** **

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ** என்று சொல்லியிருக்கின்றார்கள். ஆதாரம் இருந்தால் தயவு செய்து இங்கேயே உங்கள் முன்னால் அதைக் காண்பித்தாலே நன்றாக இருக்கும்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது சம்பந்தப்பட்ட ஆதாரங்களை எல்லாம் தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலேயும் கூடுதல் ஆட்சித் தலைவரிடத்திலேயும் நான் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இங்கே மன்றத்தில் பேசும்பொழுது ஆதாரம் இல்லாமல் எந்தக் குற்றச்சாட்டையும் சொல்லக் கூடாது என்பதுதான் மரபு. தயவு செய்து ஆதாரத்தோடு பேசுங்கள். இல்லையென்று சொன்னால், சொன்ன வார்த்தையை வாபஸ் பெறவேண்டும்.

திரு. மு. ப. முனுசாமி : தலைவர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்கள் இந்த பேரவையிலே கொடுத்த திட்டத்திலே—கொடுத்த கூலி குறைவாக இருக்கிறது என்று எடுத்துச் சொல்லியும் கூட...............

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு உறுப்பினர் இராமலிங்கத்திடம்தான் ஆதாரம் இருக்கிறதா என்று கேட்டிருக்கிறதே தவிர, மற்ற மாமன்ற உறுப்பினர்களிடம் அல்ல. மாமன்ற உறுப்பினர் இராமலிங்கத்திடம் ஆதாரம் இருந்தால் இப்போதே தயவு செய்து இந்த மன்றத்தில் கொடுக்கலாம்.

திரு. செ. இராமலிங்கம் : நான் சொல்லுகிறேன்........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : குற்றச்சாட்டை சொல்வதற்கு முன்னால் அதற்கான ஆதாரங்களை பேரவைத் தலைவரிடம் காட்டிவிட்டுப் பேச வேண்டும். ஆதாரம் இல்லை என்றால் அதைக் குறித்துப் பேசவேண்டாம். (குறுக்கீடு) இப்போது உறுப்பினர் சொன்ன குற்றச்சாட்டு அவைக் குறிப்பில் இடம் பெறாது. அதை நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

திரு. செ. இராமலிங்கம் : நான் மாவட்ட ஆட்சித் தலைவர் இடத்திலும், இது சம்பந்தமான ஆதாரங்களைக் கொடுத்திருக்கிறேன். கூடுதல் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலோ இது குறித்து ரகசிய விசாரணை மேற்கொண்டிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்போது கலெக்டர் பற்றி எல்லாம் பேசவேண்டாம். அமைச்சர் கேட்டார். உங்களிடம் ஆதாரம் இருந்தால் அதைப் பற்றிப் பேசவேண்டும். (குறுக்கீடு) கொடுத்தேன் என்று

சொல்லுகிறீர்கள். இப்போது உங்கள் கையிலும் இல்லை· அமைச்சருக்கும் அது வரவில்லை. அதனாலேதான் அமைச்சருக்குத் தெரியாத ஒன்றை அவருக்கு புரியும்படியாக ஆதாரம் இல்லாமல் இங்கே பேசவேண்டாம். வேறு சப்ஜக்டுக்கு போங்கள்

திரு. செ. இராமலிங்கம்: நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்ற வழக்கத்தைவிட்டு இரண்டு நாட்கள் ஆகின்றன.

திரு. ஜே. எஸ். இராசு : ஆன் எ பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன். இந்தத் தன்னிறைவுத் திட்டம் என்பது ..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : யாரிடம் இருந்து கிளாரிபிகேஷன். அமைச்சர் கேட்டார் அதற்கு இவர் பதில் சொல்லியாகிவிட்டது. இவை ஆதாரம் இல்லாமல் குறிப்பில் இடம் பெறாது. உங்களுக்கும் அமைச்சருக்கும் இந்த நேரத்தில் இந்த இடத்தில் இந்த சப்ஜக்டில் சம்பந்தம் இல்லை. திரு. இராமலிங்கம், உங்களுடைய நேரம் முடிந்து விட்டது. சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு செ இராமலிங்கம் : பேருந்து கட்டணத்தை மீண்டும் உயர்த்தப்போவதாக அறிவித்திருக்கிறீர்கள். இதற்கு முன்னமேயே அதிகமான அளவுக்கு உயர்த்தி இருக்கிறீர்கள். பொதுமக்களும் ஏழை எளியவர்களும் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே பேருந்து கட்டணத்தை மீண்டும் உயர்த்தக் கூடாது என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

வறட்சி நிலையைப் பொறுத்தவரையில் ஆளுநர் உரையில் புதுக்கோட்டை, வடார்க்காடு மாவட்டங்களை மட்டும்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் எந்தக் காலத்திலும் வரண்டு போகாத தஞ்சை மாவட்டம் இன்றைய தினம் வரண்டு போய் தாளடி பயிர்கள் எல்லாம் பாதிக்கப்படுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. காரணம் காவிரி ஆற்றில் சரியான முறையில் பாசனம் இல்லாத காரணத்தினால் தஞ்சை மாவட்டத்தில் திருவிடைமருதூர் தாலுகா பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே பாதிக்கப்பட்டிருக்கிற பகுதிகள் அனைத்தும் வறட்சிப் பகுதியாக அறிவிக்கப்படவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த தன்னிறைவு திட்டத்தில் ஊராட்சி ஒன்றியங்களை தேர்ந்தெடுக்கும் நேரத்தில் எந்த அளவுகோலை நீங்கள் வைத்திருக்கிறீர்கள் என்று தெரியவில்லை. உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதியில்



வந்த நேரத்தில் திருப்பனந்தால் ஒன்றியத்தில் கடந்த 4 ஆண்டு காலமாக 75 இலட்சம் ரூபாய் பொது நிதியில் தேங்கிக் கிடைக்கிறது என்பதையும், திருவிடைமருதூர் ஒன்றியத்தில் 65 லட்சம் ரூபாய்கள் 3, 4 ஆண்டுகளாக தேங்கிக் கிடக்கிறது என்பதையும் தெரிவித்திருக்கிறேன், அந்த நிதியை முறையான தேவையான வளர்ச்சிப் பணிக்குப் பயன்படுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.)

(மாலை 5-10]

*திரு. எல். இளையபெருமாள் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது இன்றைக்கு உரையாற்றுகின்ற நல்வாய்ப்பு கொடுத்ததற்காக முதற்கண் என் நன்றியை தெரிவித்து உரையைத் துவக்குகிறேன்.

விவசாயப் பிரச்சினையில் தமிழக அரசு 42 கோடி ரூபாய் அளவிற்குத் தள்ளுபடி செய்ததற்காக என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், அதே சமயத்தில், விவசாயிகளுடைய பிரச்சினை குறித்து சுதந்திர இந்தியாவில் கடந்த 33 ஆண்டுகாலமாக சரிவர சீர்தூக்கி செயல்படவில்லை என்பதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். சுதந்திர இந்தியாவில் அதனுடைய உற்பத்தி பொருளுக்கு அவனே விலை நிர்ணயம் செய்துகொள்வதற்குக் கூட நம்முடைய சட்டத்திலே சரியான முறையில் வழிவகை செய்ய இயலாதவர்களாக நாம் இருக்கிறோம். என்பதை ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. விவசாயிகளுக்குத் தேவையான உரம் முதலியவற்றை பாதி விலைக்கு கொடுக்க உத்தரவு அளித்தால் விவசாயிகள் நிச்சயமாக போற்றுவார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுக்கு மின்சார இணைப்பு கொடுப்பதில் அதிக அளவு கால தாமதம் ஆகிறது. 1966-ஆம் ஆண்டில் இன்ஜின் வாங்கி இன்றைக்கு 1981-ம் ஆண்டு வந்த பின்பும் மின்சார இணைப்புக் கிடைக்காமல் பல விவசாயிகள் கஷ்டப் படுகிறார்கள். இதனால் விவசாயிகள் மிகவும் அவதிப்படுகிறார்கள். அந்த அவதிகளை நீக்குவதற்கு வழிவகை கண்டுபிடிக்கவேண்டும். மின் உற்பத்தி இல்லை என்று சொன்னால் போதாது. விவசாயிகளுக்கு மின் இணைப்புக்கொடுக்க முன்னுரிமை கொடுக்க அரசு முன்வரவேண்டும். அதற்கென தனியாக ஒரு திட்டம் வகுக்கவேண்டும். அப்படி உருவாக்கி செய்வதன் மூலம் ஏழை எளிய நடுத்தர விவசாயிகள் மத்தியில் நல்ல மாற்றம் ஏற்படும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

கோடிக்கணக்கான அளவில் பொருள் உற்பத்தி செய்யும் மில் அதிபர்கள் மின் கட்டணம் கட்டா விட்டால் அவர்களுக்கு பல சந்தர்ப்பங்கள் கொடுத்து, வாய்ப்புகள் கொடுத்து மின் கட்டணம்

வசூலிக்கப்படுகிறது. அனால் அதே சமயத்தில் விவசாயக் குடிமகன் மின் கட்டணம் கட்டுவதற்கு ஒரு மாதம் தவறினால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இந்த அவல நிலையை அரசு உடனடியாக கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மின் கட்டணம் வசூலிக்கும் விஷயத்தில் 1 பிளஸ் 1 முறை கொண்டு வந்து இருப்பதை காங்கிரஸ் கட்சியின் சார்பில் நான் வரவேற்கிறேன். ஆனால் அதனைக் கட்ட சக்தி டைத்தவர்கள் அதைக் கட்டுவதற்கு சிரத்தை இல்லாமல், அசிரத்தையாக இருப்பது நிச்சயமாக ஏழை விவசாயிகள் மத்தியில் வருத்தத்தை ஏற்படுத்துகிறது. நாட்டில் உள்ள வறட்சி காரணமாகவும், மழை பொய்த்து விட்ட காரணத்தாலும், உற்பத்திக்கு ஏற்ற விலை கொடுக்காத காரணத்தாலும், மனம் உடைந்து போய் இருக்கக் கூடிய விவசாயிகளிடத்தில் இப்படி கஷ்டப்படுத்தி வசூலிப்பதாக இருந்தால், அது சரியாகாது. சமூதாயத்தில் பேராசைக்காரர்களும், மற்றவர்களும் மிகச் சுலபமாக அரசுக்குச் செலுத்த வேண்டியதைக் கட்டாமல் இருக்கிறபோது கஷ்டப் படுத்தி வசூல் செய்யும் முறை தவிர்க்கப்பட வேண்டும்.

இந்த அறிக்கையின் 10-வது டக்கத்திலே கொடுத்நு இருக்கிறார்கள். நிலமற்ற உழவுத் தொழிலாளர்கள், சிறு உழவர்கள், சொற்ப நில உழவர்கள், உழவுத் தொழிலாளர்கள் ஆகியோரது நலனை அரசு கண்ணும் கருத்துமாகக் கட்டிக்காத்து உதவி செய்து வந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்கள். 1948ஆம் ஆண்டு விவசாயத் தொழிலாளர்கள் சட்டம் கொண்டு வரப் பட்டது. அந்தச் சட்டத்தை 3 முறை அமென்ட் செய்யப்பட்டு விட்டது. இந்த மூன்று திருத்தத்திற்குப் பிறகும் அது நிறைவேற வில்லை. நாம் தமிழகத்திலே குறைந்தபட்ச கூலி சட்டம் கொண்டு வந்தோம். ஆனால் அதை அமல்படுத்துவதற்கு வேண்டிய வாய்ப்பு ஏற்படுத்தவில்லை. அதற்கு வேண்டிய அலுவலர்களை நியமிக்கவில்லை. விவசாய தொழிலாளிகளின் இந்த அவல நிலையைப் போக்க ஒன்றும் செய்யாத நிலையில் இருக்கிறோம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் 14 வயதிற்குட் பட்டவர்கள் தொழிலாளியாக இருக்கக் கூடாது என்று சட்டம் இருக்கிறது. ஆனால் விவசாயத் தொழிலாளியைப் பொறுத்த வரையில் அவனுடைய மகன் 8 வயது, 9 வயது, 10 வயது என்று இருந்தாலும் வயலில் மாடு ஓட்டும் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. இந்த அவல நிலையைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த வகையில் விவசாயத் தொழிலாளர்கள் மீது அரசு அக்கறை செலுத்தினால் தான் அவர்கள் நல்ல நிலைமைக்கு வர முடியும். அதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



மதுவிலக்குச் சம்பந்தப்பட்டவரையில் இங்கே மனம் திறந்து பேசுங்கள் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. நான் இந்த அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். இந்த அரசாங் கத்திலே சேவை செய்த தலைவர்களையும் தியாகம் செய்த தலைவர்களையும் பார்த்து இருக்கிறேன். நீங்கள் சீர்திருத்த வாதிகள். அரசியல்வாதியும் சீர்திருத்தவாதியும் ஒன்றாகிவிட முடியாது. இன்றைய தினம் ஆட்சியில் உள்ள நீங்கள் சீர்திருத்த வாதியான பெரியார், அண்ணா போன்றவர்களால் உருவாக்கப் பட்டவர்கள் என்று சொல்லி கொண்டு, இந்த மதுவிலக்குக் கொள்கையை ரத்து செய்ய வேண்டும் என்று சொன்னால், அது உங்கள் ஆட்சிக்கு பாதகத்தை விளைவித்து விடும் என்கிற எச்சரிக்கையை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் இந்த சாராயமும், கள்ளும் கண்ட இடத்தில் எல்லாம் இல்லையையா என்று கேட்கலாம். அதற்கு என்ன வழி என்று நீங்கள் கலக்கம் அடைய வேண்டாம். கலைஞர் இராஜாஜி அவர்கள் அந்த தள்ளாத வயதிலும்கூட மதுவிலக்கை முதலமைச்சராக இருந்தபோது வீடு தேடிச்சென்று. ரத்து செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார்கள். அதனால் பாதிக்கப்படுகின்றவர்கள், அவல நிலை அடைபவர்கள், கேவலப்படுகிறவர்கள் இந்த ஏழை எளிய மக்கள்தான். வசதி உள்ளவர்கள் எப்போதும் குடிக்கிறார்கள். அவர்கள் பெர்மிட் வைத்திருக்கிறார்கள்; அவர்கள் புத்தி உள்ளவர்களாக இருக் கிறார்கள், தப்பித்துக் கொள்கிறார்கள். ஏழை எளிய மக்கள் மட்டும் பாதிக்கப்படுவதற்கு, அவலப்படுவதற்குக் காரணம், இந்த அரசாங்கத்தின் மதுவிலக்குக் கொள்கை தான்; போலீசாரின் நடைமுறைகள்தான்; அரசு தான் காரணம், அரசு நடத்துகிற மிஷனரி தான் காரணம். இந்த அவலத்தை போக்க ஏழை எளிய மக்களைப் பாதிக்கும் காரியத்தைச் செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போதுகூட, கள்ளு விற்கிறார்கள், குடிக்கிறார்கள்; மரத்திலே கட்டியிருக்கிறார்கள்; அதை போலீசார் பார்க் கிறார்கள், கலெக்டரும் அறிகிறார். அப்படி இருந்தும் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? சட்டம் இருக்கும்போதுகூட ஏன் கடுமையான நடவடிக்கை எடுக்கவில்லை? காவலர்களுக்கு உதவி செய்தால், அவர்களுக்கு நன்மை செய்தால் லஞ்சம் வாங்க மாட்டார்கள், தவறு செய்ய மாட்டார்கள் என்று பெருந் தன்மையோடு செய்தார்கள். அப்படிச் செய்த பிறகும் இந்த அவல நிலை இருப்பதால் சட்டத்திற்கு மதிப்பு இல்லாமல் போகிறது. சட்டத்திற்கு மதிப்பு இல்லை என்றால், நீங்கள் போடுகின்ற சட்டத்திற்கு மக்கள் மத்தியிலே அவல நிலைதான் உண்டாகும். இதை தீர்க்கமாகச் சிந்தித்து, ஏழை எளிய மக்கள் எந்த வகையிலும் பாதகம் அடையாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எல். இளையபெருமாள்] [198: ஜனவரி 2.

தி.மு.க. ஆட்சிதான் மதுவிலக்கை ரத்து செய்தது. தற்காலிகமாக ரத்து என்று சொல்லி, கள்ளே தெரியாத குழந்தைகள், 25 வருஷத்தில் சாராயமே தெரியாத குழந்தைகள் இந்த பாவங்களை அறியாதவர்கள் அவல நிலை அடைவதற்கு அது காரணமாகி விட்டது. அதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள். அதன் பிறகு அ.தி.மு.க. இந்தப் பாவத்தைக் கட்டிக் கொள்ள வேண்டாம் என்று ஏழை எளிய மக்களின் சார்பாக கேட்டுக் கொள்கிறேன். மனிதாபிமானத்தோடு நீங்கள் இதை சிந்தித்து, செயல்பட வேணடுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இங்கே தண்ணீர் கொண்டு வர கட்டளைக் கால்வாய் திட்டத்தைச் சொல்கிறார்கள். வீராணம் என்ன வாயிற்று ? அதிலே எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டது ? போனது எல்லாம் போகட்டும், இருப்பதை வைத்துக் கொண்டாவது திட்டத்தை அமுல் செய்யுங்கள். இல்லை என்றால் எதைத்தான் செய்ய விரும்பினீர்கள். ஏன் விட்டு விட்டீர்கள். இல்லை என்றால் அதையும் விட்டு விடுங்கள் ; கட்டளைக் கால்வாய் திட்டத்தையும் விட்டு விடுங்கள். 450 கோடி ரூபாயை அதிலே கொண்டுபோய் கொட்ட வேண்டாம். சென்னை பக்கத்திலே இருக்கிற செம்பரம்பாக்கம் ஏரியில் ஆழமாக புதிய நீரூற்றுகளை எடுத்து, நல்ல நீரைக் கொண்டு வரலாம். அதற்கு நீங்கள் முயற்சி செய்ய வேண்டும்.

1924ஆம் ஆண்டு சட்டத்திற்குப் பிறகு கர்நாடக அரசு " நாங்கள் ஒரு துளி தண்ணீர் கூட கொடுக்க மாட்டோம் " என்கிறது. கேரள அரசு அரபிக் கடலிலே தண்ணீர் போய் வீணானாலும் தமிழ்நாட்டுக்கு கொடுக்க மாட்டோம் என்கிறது. இந்த அவல நிலை இருக்கும்போது, இருக்கிற தண்ணீரையும் இங்கே கொண்டு வந்துவிட்டால் விவசாயிகள் நிலை என்னவாகும் என்பதை நீங்கள் தீர்க்கமாக பரிசீலிக்க வேண்டும். பரிசீலிக்கும் போது, எஞ்சினியர்கள் சொல்வதில் உண்மை இல்லை என்று சொல்லவில்லை ; இருந்தாலும் தவறு நடைபெறாமல், விவசாயம் செய்வதற்கு இருக்கின்ற சூழ்நிலையில் விவசாயம் கெடாமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும் ; அதை மனதிலே வைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நான் விவசாய அமைச்சரைக் கேட்டுக் கொள்வதெல்லாம், பல இடங்களிலே ஏரிகள், கண்மாய்கள் தூர் எடுக்காமல் இருக்கின்றன. கடந்த 10 ஆண்டு காலமாக உள்ளாட்சித் தேர்தல் நடைபெறாமல், மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் இருந்த காரணத்தால் அந்த வேலைகள் நடைபெறவில்லை. அந்தந்த இடங்களிலே இப்படியெல்லாம் நடக்கின்ற அவல நிலைகளை, கேவலமான போக்குகளை நீக்குவதற்கு முற்படாமல், உண்மை எப்படி இருந்தாலும், ' வோட்டு ' என்ற பாவச் சுமைக்காக



1981 ஜனவரி 27] [திரு. எல். இளையபெருமாள்]

அதை அனுமதித்துக் கொண்டே போனால் பெருத்த ஏமாற்றமே
ஏற்படும். அதற்குப் பரிகாரம் காண வேண்டுமானால் உடனடி
யாக ஏரி, கண்மாய்களை தூர் எடுக்க வேண்டும். தூர் எடுக்
காமல் பொய் கணக்கு எழுதியவர்கள் எந்த யூனியனில் இருந்
தாலும், எந்த மாவட்டத்தில் இருந்தாலும அவர்கள்மீது கடுமை
யான நடவடிக்கை எடுக்க வேண்டும். 10 ஆண்டு காலமாக
மக்கள் பிரதிநிதி இல்லாத காரணத்தால், அதிகாரிகளுடைய
நிர்வாகம் நடைபெற்ற காரணத்தால், அவர்கள்மீது நடவடிக்கை
எடுத்து, தகுந்த முடிவு கட்டவேண்டும். அதே நேரத்தில்
கட்டளைக் கால்வாய் திட்டத்திற்கு 450 கோடி ரூபாய் கொட்டி,
அதைக் கொண்டு வந்து வீணாக்க வேண்டாம் என்று கேட்டுக்
கொள்கிறேன்,

[மாலை 5.20]

அடுத்து இன்றையதினம் பி. அன்ட் சி, மில்லைப் பொறுத்த
வரையில் 13 ஆயிரம். தொழிலாளர்கள் அவதியுறுகின்ற நிலை
ஏற்பட்டிருக்கின்றது ஆனால் நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பு
ஒரு அதிகாரியை மாநில அரசு நியமித்தது. திரு பத்மநாபன்
என்ற அந்த அதிகாரி இருக்கும்போது கிட்டத்தட்ட 90 இலட்ச
ரூபாய் இதே பி அன்ட் சி மில்லில் லாபமாக கிடைத்திருக்
கின்றது. அப்படி லாபகரமாக நடந்த மில் இன்றைக்கு
என்ன காரணத்தால் நஷ்டம் அடைந்திருக்கின்றது ? உயர்
மட்ட அதிகாரிகள் எதேச்சமாக தங்கள் இஷ்டபடி நடந்து
வருவதால்தான் இன்றைக்கு இந்த நிலைமை ஏற்பட்டிருக்
கின்றது. திருச்சியிலே திருவெரம்பூர் என்ற இடம் இருக்கின்றது
அங்கு எல்லாவிதமான சின்ன சின்ன உபகரணங்கள் எல்லாம்
தயார் செய்யப்படுகின்றது. ஆனால் அவையெல்லாம் விட்டு
விட்டு அதிகாரிகள் அயல் நாடுகளிலே இருந்து உபகரணங்களை
வாங்கவேண்டும் என்று தங்களுடைய எண்ணத்தைத் தெரிக்கின்ற
காரணத்தாலே தான் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.
வெளிநாட்டு வியாபாரத்திலே தொடர்பு கொண்டால்தான்
வெளிநாடு சென்று வரலாம் என்று அதிகாரிகள் நினைப்பதுதான்
நமமுடைய தற்போதைய அவல நிலைமைக்குக் காரணம்.
ஆகவே இப்படிப்பட்ட நிலைமைகளுக்கு இடம் கொடுக்க
வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மின்சார வாரியத்திலே இரண்டாண்டுகளுக்கு
முன்பு கிட்டத்தட்ட 3 ஆயிரம் ஷெட்யூல்டு காஸ்ட்டு, ஷெட்யூல்டு
ட்ரைப் மக்களைச் சேர்ந்தவர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள்.
அவர்களுக்கு தேர்வெல்லாம் முடிந்துவிட்ட பிறகும் வேலை
வாய்ப்பு கொடுக்கப்படவில்லை. அவர்கள் அத்தனை பேரும்
தகுதியற்றவர்களாகிவிட்டார்களா ? அவர்களிலே யாருமே
திறமைசாலிகளாக இல்லையா ? என்ன காரணத்திற்காக அவர்
களுக்கு இன்னும் வேலை வாய்ப்பு கொடுக்கப்படவில்லை*
மேலும் பட்டினி போடாமல் நாங்கள் காப்போம் என்று இந்த

ஆளுநரது உரையிலே 21 ஆம் பக்கத்திலே சொல்லப்பட டிருக்கின்றது. நானும் திரு. உகம்சந்த் அவர்களும் 1978—79 ஆட ஆண்டுகளிலே இன்றைய முதலமைச்சர் அவர்கள் அன்றைய தினமும் முதலமைச்சராக இருந்தபோது மனு கொடுத் தோம். ஆனால் சவுக்குத் தோப்புத்தான் வளர்கின்றது தொழிலாளர்கள் வேலையற்ற நிலையில்தான் இருக்கிறார்கள் (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைர் :** சீக்கிரம் முடியுங்கள். இன்னும் 7 பேர்கள் பேச வேண்டி இருக்கின்றது.

**திரு. எல். இளையபெருமாள் :** தீண்டாமை ஒழிப்புச் சட் டத்தின்படி நடவடிக்கைகள் எடுப்பதற்கென்று ஒரு துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல் நியமிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப் பட்டிருப்பதற்காக நமது அரசுக்கு நான நன்றி சொல்லிக் கொண்டாலும் துணை ஐ. ஜி. அவர்களின் கீழ் பணி செய்பவர் கட்கு வாகன வசதி கிடையாது என்பதையும் அவர்களுக்கு அலுவலகம் கிடையாது என்பதையும் அவ ருக்கு வேண்டிய அலுவலகமும் வாகன வசதியும் கொடுக்கா மல் இருந்தால் அவர்களால் எப்படி காரியமாற்ற முடியும். ஆகவே அவர்கள் ஒன்றும் செய்யாத நிலையில் இருக்கிறார்கள். துணை ஐ. ஜி. போட்டால் மட்டும் போதாது. போதிய வாகன வசதிகள் கொடுத்து தீண்டாமை ஒழிப்புச் சட்டப்படி குற்றங்கள் செய்பவர்களை கண்டிக்க வேண்டும்.

அடுத்து மதுரை மாநகரிலே உலகத் தமிழ் மாநாடு நடத்தி னார்கள். அந்த மதுரைக்கு பக்கத்திலே தண்டரை என்ற கிரர்மத்திலே ..........(மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ;** நேரம் இல்லை சீக்கிரம் முடித்துவிடுங்கள். நிறையப் பேர் பேச வேண்டி இறுக்கின்றது.

**திரு, எல். இளையபெருமாள் :** தாழத்தப்பட்ட இனத் தைச் சார்ந்தவர்கள் கொம்பு உதவில்லை என்ற ஒரே காரண திற்காக அவர்களை ஊரை விட்டே துரத்தி அடித்திருக்கிறார்கள். ஆகவே உண்மையிலேயே ஜாதி எண்கின்ற எண்ணம் தமிழரது மனத்திலே இருந்து மறைய வேண்டும் என்றால் யாருமே ஜாதி என்ற பெயரையே போடுவது கூடாது, எந்த ஜாதியைச் சார்ந்த வராக இருந்தாலும் ஜாதி பெயரைத் போடுவது கூடாது என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தால் அது மிக்க நலமாக இருக்கும் என்று கேட்டுக் கொண்டு எனக்கு சந்தர்ப்பம் அளித்தமைக்கு நன்றி கூறி என் வார்த்தையை முடிக்கிறேன். நன்றி வணக்கம்





**திரு. மு. அப்பாதுரை :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்தில் நிகழ்த்தப்பட்ட ஆளு நருடைய உரையின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார் பாக என்னுடைய கருத்துக்களைக் கூற நான் கடமைப்பட் டிருக்கிறேன். இங்கே ஆளுகின்ற கட்சியைச் சார்ந்த அருமைச் சகோதரர்கள் எல்லோரும் பேசுகின்றபோது உலகத் தமிழ் மாநாடு பற்றிச் சுட்டிக்காட்டினார்கள். நாங்களும் அந்த மாநாட்டை .வரவேற்கிறோம். அதேபோன்று இன்றைக்குத் தமிழக அரசு உலகத் தமிழ்ச் சங்கம் ஏற்படுத்துவதையும் வரவேற்கின்ற நேரத்தில் வளர்ந்து வருகின்ற விஞ்ஞான தொழில் நுட்ப அறிவினைப் பெறத்தக்க வகையில் அந்தத் தமிழ் மன்றத்திலே பணிகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று நாங்கள் சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறோம்.

அதே நேரத்தில் உலகத் தமிழ் மாநாட்டிலே கலந்துக் கொண்டு பாரதப் பிரதமர் அவர்கள் தந்த உறுதி மொழியை இங்கே எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இந்தி மொழியை திணிக்க மாட்டோம் என்று அவர்கள் உறுதி கூறியதை, இங்கே வலியுறுத்திக் காட்டியிருக்கிறார்கள். நான் ஒன்றை நினைவு படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். மறைந்த பாரதப் பிரதமர் பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்கள் கொண்டு வந்த மொழிக் கொள்கை அது. அந்த மொழிக் கொள்கை காக்கப் பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரையில் ஆங்கிலம் இந்த நாட்டினுடைய துணை ஆட்சி மொழியாக இருக்கும் என்று அவர் கொண்டு வந்த மொழிக் கொள்கை உண்மையாக காக்கப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டும் உத்திர பிரதேசம், பீகார், மத்தியப் பிரதேசம் போன்ற இடங்களில் அரசாங்கத்திலும், பள்ளிக் கூடப் பாடங்களிலும் ஒரே மொழி கொள்கையான இந்தியை மட்டும் கொண்டு வந்து, ஆங்கிலம் அறவே விலக்கப்பட்டிருக்கிறது. எப்படி என்று சொன்னால் நேருவின் இரு மொழிக் கொள்கை எங்கே காப்பாற்றப்பட் டிருக்கிறது. இந்த நிலையில் இந்திரா காந்தி அவர்கள் எங்கே நிற்கிறார்கள் ? அவரை ஆதரிக்கின்ற அண்ணா திராவிட முன் னேற்றக் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும், இந்த மொழிக் கொள்கையில் எங்கே நிற்கிறார்கள் என்று கேட்க கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, நிதி நிலையைப் பற்றி குறிப்பிடும்போது, இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடம் வாதாடி, 6 வது ஐந் தாண்டுத் திட்டத்திற்கென 3,150 கோடியைப் பெற்றிருப்ப தாகவும், இது அவர்கள் ஒதுக்கியதைவிட சுமார் ஆயிரம் கோடி ரூபாய் அதிகம் என்றும் ஆளுநர் உரையில் குறிப்பிடப் பெற்றிருக்கிறது. இந்த ஆயிரம் கோடியை அதிகமாக வாதாடி பெற்றதாக வரவேற்கின்ற அதே நேரத்தில், ஏறியிருக்கிற விலை வாசிகளைப் பார்க்கும்போது, இந்த ஆயிரம் கோடி ரூபாய்

அதைச் சரிக்கட்டத்தான் சரியாக இருக்குமென்றும், இதனால் அதிகப்படியான திட்டங்களையோ, நன்மைகளையோ மக்களுக்குச் செய்ய முடியாது என்றும், அந்த வகையில் இந்த அதிக ஒதுக்கீடு எந்த வழியிலும் ஒத்துழைக்காது என்றும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதேபோல தமிழ்நாட்டில் நடைபெற்ற விவசாயிகள் போராட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டு, அதை நல்ல முறையில் சமாளித்ததாகவும் ஆளுநர் உரையில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஒன்றை நான் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். இந்த விவசாயப் புரட்சியின்போது என்னுடைய பகுதியில் துப்பாக்கிச் சூடே நடைபெற்றிருக்கிறது. அது இப்போது ஆளுநருடைய விசாரணையில்இருந்து கொண்டிருக்கிறது. அதனால் அதைப்பற்றி விளக்கமாக பேச நான் தயாராக இல்லை. ஆனால் அந்தச் சம்பவத்திற்குப் பிறகு, என்னைப்போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அந்த இடத்தைச் சென்று பார்த்ததற்குப் பிறகு, மற்ற சர்வ கட்சி தலைவர்களும் அந்த இடத்தைப் பார்வையிட்டதற்குப் பிறகு, தலைமை போலீஸ் கமிஷனர் சென்று பார்வையிட்டதற்குப் பிறகும் கூட, அங்கே போலீஸ் அடக்குமுறை அதிக அளவில் நடைபெற்றிருக்கிறது. ஒரு கொள்ளைக்காரனின் ஆட்சியில் நடைபெறுவதை விட மோசமான கடுமையான முறையில் அங்கே அடக்குமுறை நடந்திருக்கிறது. கட்டப்பட்ட மாட்டினுடைய வாலைக்கூட காவல் துறையினர் அடித்திருக்கிறார்கள் என்றால், அவர்கள் எவ்வளவு கொடுமைகள் புரிந்திருப்பார்கள் என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

அதைப் போன்ற துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் நியாயமா நியாயமற்றதா என்கிற வாதங்கள் ஒருபுறம் இருந்தாலும் கூட, அந்தச் சம்பவத்தில் 5 பேர்கள் உயிரிழந்திருக்கிறார்கள். அவர்களில் 3 பேருக்கு உழுவதற்குச் சொந்தமாக நிலம் கூட கிடையாது. மற்ற இரண்டுபேருக்கு வண்டிமாடுகள் கூட கிடையாது. பம்பு செட்டுகள் கூட கிடையாது. அப்படிப்பட்ட சாதாரண ஏழை விவசாயிகள். நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே ஒன்று கேட்க விரும்புகிறேன். அப்படிப்பட்ட சாதாரண விவசாயி குடிமகனுக்கு, அவன் இறந்ததற்கான நஷ்டஈடு, அல்லது சலுகைகள் அவனுடைய குடும்பத்திற்கு வழங்கப்பெற வேண்டாமா? அப்படி வழங்க வேண்டும் என்றும் அதைப் பற்றி அரசாங்கம் பரிசீலிக்கவும் வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் ஆளுநர் உரையிலே ஒன்றை சொல்லியிருக்கிறார்கள். 'வேலைக்கு உணவுத் திட்டம் இப்போது திருத்தியமைக்கப் பட்டு கிராமப்புற வேலை வாய்ப்பு தேசியத் திட்டமாகப் பெயர் பெற்றுள்ளது. கிராமங்களை வளர்ச்சியடையச் செய்ய, கிராமப் புற மக்களுக்கு உதவி செய்யும் வகையில் இத்திட்ட சமுனைப்புடன் செயல்படுத்தப்படும' என்று சொல்லி





...யிருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கக் கூடிய மத்திய அரசின் ...தவறான ஏற்றுமதிக் கொள்கையினால், தவறான பொருளாதாரக் கொள்கையினால், கிராமப்புற தொழில்வளமே நசிந்துக் கொண்டு வருகிறது. திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் இருக்கக் கூடிய தீப்பெட்டித் தொழிற் சாலைகளுக்கு அப்படிப்பட்ட ஆபத்து வந்திருக்கிறது. விம்கோ என்று சொல்லக் கூடிய பெரிய முதலாளிகள் உள்ள அந்த நிறுவனத்திற்கு 7 யூனிட்டுகளைத் திறக்க லைசன்சுகளை வழங்கியிருக்கிறார்கள். சிறு தீப்பெட்டிகள் தயார் செய்யும் சிறு தொழிலாளர்களுக்கு 2½ பைசா எக்ஸைஸ் வரியைக் கூட்டியிருக்கிறார்கள். இது அவர்களின் வாழ்க்கை முறையையே பாதித்து விடும். கிராமங்களை வளர்க்கப்போவதாகச் சொல்லும் இந்த அரசாங்கம் இதை எதிர்த்து ஏன் இது வரை ஒரு வார்த்தைக்கூட சொல்லவில்லை. அதானால் கிராமப்புறங்களை காப்பாற்றப்போவதாகச் சொல்லப்படுவது எல்லாம் யாரை ஏமாற்ற என்று கேட்க விரும்புகிறேன்.

அதேபோல இன்றைக்கு தமிழகத்தில் இருக்கக் கூடிய ...நீளமான கடற்கரையைப் பயன்படுத்தி மீனளப் பரப்புக் குறித்து ஆய்வு மேற் கொள்ள ஆராய்ச்சி நடத்த மத்திய அரசை ...வேண்டியுள்ளதாக ஆளுநர் உரையில் குறிப்பிட்டுள்ளனர். இன்றைக்கு அம்பத்தூரில் ஒரு மிகப் பெரிய நிறுவனம் பிரிட்டானியா பிஸ்கட் என்ற பெயரில் இருக்கிறது.

[மாலை 5-30]

அந்த பிஸ்கட் கம்பெனி நாட்டை கொள்ளை அடித்துக் கொண்டிருக்கிறது. அந்த பிரிட்டானியா பிஸ்கட் கம்பெனி பிரிட்டானியா இண்டஸ்ரீஸ் என்று பெயரை மாற்றிக் கொண்டு கடலில் மீன பிடிக்க ஜப்பான் கப்பல் வாங்கியிருக்கிறார்கள். அதே போன்று டாட்டா, பிர்லா, டி.வி.எஸ். ஐயங்கார் போன்ற ஸ்தாபனங்களுக்கு மத்திய அரசு மீன் பிடிக்க லைசென்ஸ் வழங்கியிருக்கிறார்கள். அண்டை நாடான இலங்கையில் கடற்கரையின் மிகப் பெரிய பகுதியில் மீன் பிடிக்க டி.வி.எஸ்.ஸீமென்ஸ் போன்ற கம்பெனிகள் கட்டுக்குத்தகை எடுத்து இருக்கிறார்கள். இவைகளையெல்லாம் எதிர்த்து, கொள்ளைக் கூட்டங்களை எதிர்த்து, தமிழ் நாட்டின் மீன் வளத்தைப் பயன்படுத்தி தமிழகமக்கள் பெரும்பாலானவர்கள் வாழக்கூடிய இந்தத் தொழில் குறித்து இந்த அரசு என்ன கொள்கையைக் கடைப் பிடிக்கப் போகிறது என்று கேட்க விரும்புகிறேன்.

பி. அண்ட். ஸி., ஆலையைப் பொறுத்தவரையில் பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். நான் சொல்லிக் கொள்ள விரும்புவது என்னவெனில். இந்த மன்றத்திலுள்ள அனைத்துக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும் சேர்ந்து

பி. ஆன்ட்.ஸி. நூற்பாலையை மத்திய அரசே ஏற்று நடத்த வேண்டும் என்று சொல்லி ஒரு ஏகோபித்த தீர்மானமாகக் கொண்டு வர வேண்டும் என்பதாகும்.

மதுவிலக்குக் கொள்கை பற்றிச் சொன்னார்கள். நான் ஆணித்தரமாக எடுத்துச் சொல்வேன், தமிழக ஆட்சியில், இன்று நடைபெறக்கூடிய ஆட்சியில் மதுவிலக்குக் கொள்கை செத்து விட்டது என்று சொன்னால் அது மிகையாகாது. இன்று நாட்டில் சட்டம் ஒழுங்கை நாங்கள் காப்பாற்றுகிறோம் என்று காவல் துறையினர் சொல்கிறார்கள். இன்று காவல் துறையினர் சட்டம்-ஒழுங்கைப் காப்பாற்றவில்லை. யார் எங்கே சாராயம் விற்பது, யாருக்கு எந்த ஏரியாவைப் பிரித்துக் கொடுப்பது என்று தான் தமிழகத்தின் காவல் துறை இன்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறதே தவிர சட்டம்-ஒழுங்கைக் காப்பற்றுவதற்கல்ல. இன்று தனி போலிஸ் போடப் பட்டிருக்கிறது. பிடிப்பதற்கு ஒரு போலிஸ், வடிப்பதைப் பார்க்க ஒரு போலீஸ் என்று சொன்னால் இன்று தமிழகத்தில் சாராயம் ஓடிக்கொண்டிருக்கிறது. ஆகவே இன்று மடிந்து விட்ட ஒரு கொள்கையை வைத்துக் கொண்டு இந்த அரசு செயல்படுகிறதா என்று ஐயப்படுகிறோம். ஆகவே, இன்று மதுவிலக்குக் கொள்கை என்று சொல்கிறபோது நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழன், தமிழ் இனம், செத்துக் கொண்டிருக்கிறது. எப்படியென்றால், கள்ளச் சாராயத்தை தவறானமுறையில் காய்ச்சுவதால் உடல்நலம் குன்றி அதைக் குடிப்பவர்கள் பல்வேறு வயிற்றுவலி போன்ற வியாதிகளுக்கு ஆளாகிக் கொண்டு வருகிறார்கள். அப்படிப்பட்ட வியாதிகள் பரவிவருகிறது.

அடுத்து, சட்டம் ஒழுங்கு சீர்குலைந்திருக்கிறது. என் தொகுதியில் இரண்டு சாராயக் கோஷ்டிகளுக்குள் சண்டை நடக்கிறது. ஒரு கோஷ்டிக்கு போலீஸ் பக்கபலம் இருக்கிறது. ஒரு காவல்நிலையத்தின் உள்ளே சென்று அடித்தவர்களை, போலீஸ் காரர்களை அடித்து விட்டு இழுத்து செல்கிறது. சட்டம் ஒழுங்கு எங்கே நிலைநிறுத்தப் ட்டிருக்கிறது?

இந்த ஆட்சியில் தீவிரவாதிகளை நாங்கள் தீவிரமாக சமாளித்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். தர்மபுரி. வட ஆற்காடு மாவட்டங்களில் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் அரசு கடுமையான நடவடிக்கைகள் எடுத்துள்ளது. நக்சலைட்ஸ் என்ற பெயரால் அருமைத் தோழர் பாலன் போன்றவர்கள்—ஒரு காலத்தில் அவர்கள தீவிரவாதிகளாக இருந்திருக்கலாம் தாக்கப்படுவது சரியல்ல. எங்கள் மாவட்டத்தில் படுமோசமான முறையில் தாலூக்கா செயலாளர் சாமி அவர்களை மிரு த்தனமாக ஜெயிலில் அடைத்திருக்கிறார்கள், பொய் வழக்கு போட்டிருக்கிறார்கள். நாங்கள் ஆளும் கட்சியின் தோழமைக் கட்சியாக இருப்பதால், தோழமையின் பெயரால் கேட்டுக் கொள்கிறேன். இந்த நிலையை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று.





ஹரிஜனங்களைப் பற்றிச் சொல்லும்போது சங்கராபுரம் சம்பவம் கமிஷன் ஆய்வில் இருக்கிறது. ஆகவே அதைப்பற்றி நான் கூறவில்லை. அப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்கப் பட வேண்டும். ஒரு துணை கமிஷனரை, ஐ.ஏ.எஸ் அதிகாரியை எல்லா மாவட்டங்களிலும் ஹரிஜன நல அதிகாரியாகப் போட வேண்டும். அதற்கான சட்டங்கள் எல்லாம் இருக்கின்றன. என் தொகுதியில் பல கிராமங்களில் குடிக்கக்கூட தண்ணீர் எடுக்க முடியாத நிலை இருக்கிறது என்று சொன்னால் இந்தச் சட்டங்கள் வாடுகின்றனவா? ஆகவே இந்த ஹரிஜன மக்களைப் பாதுகாக்க தனி போலீஸ் படையை அமைக்க வேண்டும் என்று எங்கள் கட்சி சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பட்டது).

திரு. சேலம் மு. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது ஆட்சிக் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களை கூற வாய்ப்பளித்தமைக்காக நன்றி. இங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தின சார்பாக பேசிய நண்பர் உறுப்பினர் மாண்புமிகு ராமலிங்கம் அவர்கள் எதற்கெடுத்தாலும் ஊழல் ஊழல் என்று சொன்னார்கள். உலகத் தமிழ் மாநாட்டிலே ஊழல் என்றார்கள். உழைப்புக்கு உணவு, வேலைக்கு உணவு என்பதிலும் ஊழல் என்றார்கள். தன்னிறைவுத் திட்டத்திலேயும் ஊழல் என்றார்கள். இன்றைக்கு எதற்கெடுத்தாலும், ஊழல் ஊழல் என்று சொல்லக்கூடியவர்கள், தாங்கள் கடந்த காலத்தில் ஊழல் என்ற சூழலிலே சிக்கி, அந்த ஊழலுக்குகே பலியானவர்கள் என்பதை மறந்து விடக் கூடாது.

1976 ஆம் ஆண்டு, இந்தியப் பேரரசை ஆளக்கூடிய இந்திரா காந்தி அம்மையார் எந்தக் காரணத்திற்காக திராவிட முன்னேற்றக் கழக அரசைக் கலைத்தார்கள் என்பதை மறந்துவிட முடியாது. 1980 ஆம் ஆண்டு பிப்ரவரி 17 ஆம் நாள் புரட்சித் தலைவர் அவர்களுடைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை என்ன காரணத்திற்காக கலைக்கப்பட்டது என்பதை இதுநாள் வரையில் அதற்கான காரணத்தை, விடையைத் தர முடியவில்லை. யாராலும் பதில் சொல்ல முடியவில்லை. அப்படி, ஊழலுக்கு இரையானவர்கள், உலகத் தமிழ் மாநாட்டில் ஆளும் கட்சியினர் அக்கப்பட்டதைச் சுருட்டிக் கொண்டதாகக் கூறுகிறார்கள். அவர்கள் அதற்கு ஆதாரம் காட்ட முடியுமா? ஆதாரம் கேட்டால், அவர்கள் அங்கே கொடுத்தோம், இங்கே கொடுத்தோம் என்று சொல்லுகிறார்கள். ஆதாரம் இல்லாமல் பேசக் கூடியவர்கள் ஆண்ட காலத்தில், நாட்டில் ஏற்பட்ட சேதாரம் கொஞ்சமா நஞ்சமா என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு, 68லே சென்னையிலே பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்த காலத்திலே நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டைவிட பன்மடங்கு சீரும் சிறப்பு

மாக நடைபெற்றிருக்கிறது. இவ்வளவு பெரிய மாநாட்டில் வைகையிலே தண்ணீர் வெள்ளம், கூடலிலே மக்கள் வெள்ளம் என்று சொல்லக்கூடிய அளவிற்கு 25 இலட்சம் மக்கள், அந்தக் கூடல மாநகரிலே கூடினார்கள்.

இந்தியாவின் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் 1978 ஆம் ஆண்டு இந்த மதுரை மாநகருக்கு வந்த போது; அவருக்கு கறுப்புக் கொடி காட்டப்பட்டு, தாக்கப்பட்டு அதே மதுரை மாநகரில், அந்தக் கலங்கத்தைத் துடைக்கின்ற வகையிலை சிறப்புமிக்க வரவேற்பளிக்கப்பட்டது. இப்படிப் பட்ட வரவேற்பு அங்கே ஒரு வரலாற்றை படைத்திருக்கின்றது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இவ்வளவு பெரிய மாநாட்டில், புரட்சித் தலைவர் அவர்கள் எங்காவது ஒரு இடத்தில் தன்னுடைய பெயரை விளம்பரப் படுத்திக் கொண்டிருக்கிறாரா? தன்னுடைய கட்சி கொடி எங்காவது தென்பட்டதா? என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். உலகத் தமிழ் மாநாட்டைப் பார்த்த வெளிநாட்டுப் பிரதிநிதிகள், அதேபோல் உலகத்தில் இருந்து பல்வேறு நாடுகளிலே இருந்து வந்துள்ளவர்கள், இந்தியாவில் இருந்து பல்வேறு பகுதிகளிலே இருந்து வந்தவர்கள் யார் இந்த மாநாட்டை நடத்துகிறார்கள் என்று கேட்கக்கூடிய அளவிற்கு, அரசியல்கலப்பு இல்லாத சுத்தமான முறையில், தமிழ் ஆராய்ச்சியாளர்கள், தமிழ் அறிஞர்கள் நடத்தக்கூடிய மாநாடாக இருந்தது. அங்கே அந்த மாநாட்டில் நடைபெற்ற விவாதம், மொழி, கலாச்சாரம், இலக்கியம் ஆகியவற்றைப் பற்றி பல ஆராய்ச்சிகள் உருப்படியான முறையில வழிவகைகள் காண பட்டன.

கடந்த காலத்திலே 'நாம் இருவர், நமக்கு இருவர்' என்ற சிவப்பு முக்கோண விளம்பரத்தில் பலர் தங்களுடைய முகம் தெரியாதா என்று ஏங்கி வந்தவர்கள், இந்தப் புரட்சித் தலைவர் அவர்களைப் பற்றி ஊழல், ஊழல் என்று சொல்லுகிறார்கள். இதற்கு அவர்கள ஆதாரம் காட்ட முடியுமா? 4½ கோடி மக்களுக்கு நம்பிக்கை நாயகனாக இருக்கின்ற புரட்சித் தலைவர் அவர்கள் கடந்த 25 ஆண்டுகளாக சம்பாதித்த பணம் முழுவதையும் ஏழை எளிய மக்களுக்கு கொடுத்து கொடுத்து, சிவந்த கரங்கள் என்பதை இந்த நாடு அறியும். மக்களின் வரிப் பணத்தை எடுத்து எடுத்து பாழ் படுத்திய கரங்கள் அல்ல. இன்றைக்கு ஏழை எளிய மக்களுக்கு அன்னமிட்ட கை. தமக்குச் சொந்தமான வரிப் பணத்தை ஆக்கிக் கொண்ட கரைபடிந்த கரங்கள் அல்ல. உண்மைக்க கூடிய கரங்கள். இப்படிப்பட்ட புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே இன்றைக்கு ஏழை எளிய மக்கள், வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் மக்கள் வளம் பெற, வழி வகைகள் காண பல திட்டங்கள் தீட்டப்பெற்று செயல்பட்டு வருகின்றன. [illegible] ஊழல், ஊழல் என்று எதிர்க் கட்சியினர்கள் [illegible] இல்லாமல் சொல்லுகிறார்கள். ஒரு ஜனநாயக அமைப்பி[illegible]





எதிர்க்கட்சிகள் தேவை தான். ஒரு ஜனநாயக ஆளும் கட்சிக்கு உற்றுரிய ஆக்க ரீதியான யோசனைகள் சொல்ல எதிர்க் கட்சிகள் தேவைதான்.

[மாலை 5–40]

ஆனால் அதற்குப் பதிலாக எதற்கெடுத்தாலும் எரி சாராயம் சாராயம் என்று எகிறிக் குதிக்கிறார்கள். அந்த சாராய ஊழலில் சம்பந்தப்பட்டவர்கள் யார் என்பதை வெளி உலகத்திற்குத் தெரிவிக்க அவர்கள் ஏன் பயப்படுகிறார்கள்? மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இந்தச் சபையில் பதில் அளிக்கக்கூடிய நேரத்தில் உண்மைகளை இந்த நாட்டு மக்களுக்கு அறிவிக்கப் போகிறார்கள், திட்டவட்டமாக பதிலுரையில் தெளிவாகத் தெரிவிக்க இருக்கிறார்கள்.

விவசாயிகளைப் பற்றி அவர்கள் சொல்லுகிறார்கள். விவசாயிகள் மீது அவர்களுக்கு எவ்வளவு அக்கறை? அவர்கள் 1972-ஆம் ஆண்டு பத்து பைசாவாக இருந்த மின்சாரக் கட்டணத்தை 11 பைசாவாக உயர்த்தினார்கள். அப்போது அந்த மின் கட்டண உயர்வை எதிர்த்து விவசாயிகள் அமைதியான முறையில், காந்திய முறையில் போராடினார்கள், ஆனால் அவர்களை அப்போது சுட்டுத் தள்ளினார்கள். மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் பேசும்போது புத்தாண்டு தினத்தில் துப்பாக்கி குண்டை அளித்துவிட்டு பொங்கல் வாழ்த்துக்களையும் புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவிக்கிறீர்களே என்றார்கள். அவர்களுடைய ஆட்சியில் துப்பாக்கியிலிருந்து பூமாரி பொழிந்தது போல் பேசினார்கள். அவர்கள் காலத்தில் துப்பாக்கிச் சூட்டினால் பெருமாநல் லூரில் இரண்டு பேர் செத்தார்கள். சேலம் மாவட்டம் பெத்தநாயக்கம்பாளையத்தில் 11 பேர் செத்தார்கள்.

1975-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நெருக்கடி நிலை அமல்படுத்தப்பட்டதைப் பயன்படுத்திக் கொண்டு 11 பைசாவாக இருந்த மின் கட்டணத்தை 16 பைசாவாக விவசாயிகளுக்கு உயர்த்தினார்கள். நெருக்கடி நிலை காரணமாக விவசாயிகள் போராட முடியாத நிலை அப்படிப்பட்டவர்கள்தான் இன்று விவசாயிகளுக்காக நீலிக் கண்ணீர் வடிக்கிறார்கள். நாராயணசாமி நாயுடுவுக்குப் பரிந்து பேசுகிறார்கள். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் நாராயணசாமி நாயுடுவைப் பேச அழைத்தும் அவர் பேச முன்வரவில்லை. முதல்வர் அவரைச் சந்தித்துப் பேச மறுத்தார். இதே நாராயணசாமி நாயுடு அப்போது சென்னையிலே இருந்து கொண்டு பல அரசியல் கட்சித் தலைவர்களைச் சந்தித்தார் அவருக்கு டில்லிக்குச் செல்லக் கூட நேரம் இருந்தது; தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் கலந்து கொண்டு பேச நேரம் இல்லை. அரசியல் தலைவர்கள் இதனைச்

சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர் தன்னைத் தனியாக கூப்பிட்டுப் பேச வேண்டுமென்று கூறுகிறார். இந்த நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக விவசாயப் பிரிவு இல்லையா? இந்திய கம்யூனிஸ்டு கட்சி விவசாயப் பிரிவு இல்லையா? மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி விவசாயப் பிரிவு இல்லையா? அனைத்திந்திய அண்ணா தி.மு.க. விவசாயச் சங்கப் பிரிவு இல்லையா காந்தி தேசிய காமராஜ் காங்கிரஸ் கட்சியின் விவசாயப் பிரிவுகள் இல்லையா இத்தனைகட்சிகளும் விவசாயிகள் நலனில் அக்கறை காட்டவில்லையா? இவர்களை எல்லாம் ஒதுக்கிவிட்டு தம்மை மட்டும் தனியாகக் கூப்பிட்டுப் பேச வேண்டுமென்று சொல்லுகிறார். இது எவ்வளவு பெரிய சர்வாதிகாரம்? எவ்வளவு பெரிய மமதை? தான்தான் பெரியவர் என்ற ஆதிக்கத்தை ஏற்படுத்துகிறார். இதற்கெல்லாம் அரசியல் கட்சித் தலைவர்கள் துணை போகலாமா?

முதல்வர் அவர்கள் பல முறை பேசினார்கள். அவர்கள் தங்கள் மின் கட்டணத்தைக் கட்ட வாய்தா கொடுத்தார்கள். அதற்கு ஒப்புக்கொண்டு பிறகு கட்டவில்லை. அதற்குப் பிறகுதான் மின் துண்டிப்பு ஆரம்பிக்கப்பட்டது. மின் கட்டணத்தை வசூலிக்க லாயக்கில்லை, தகுதி இல்லை. இன்னும் இதைவிட மோசமான வார்த்தைகளைக் கூடப் பயன்படுத்தினார்கள். அதை நான் சொல்ல விரும்பவில்லை. அவர்களை எப்படியும் இந்த அரசினுடைய கொள்கைக்கு இணங்க முடியும் என்று முதல்வர் அவர்கள் பல முறை காத்திருந்து மின் கட்டணத்தைக் கட்ட வாய்ப்பளித்தார்கள். அவர்கள் அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி கட்டவில்லை.

இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பெரியவர் இளையபெருமாள் அவர்கள் கூறினார்கள். விவசாயி உற்பத்தி செய்யக்கூடிய விளைபொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை அரசு மாற்றாந்தாய் முறையில் நடந்து கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். அவர்கள் சற்றுச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். உள்ளத்தில் கை வைத்துப் பார்க்கவேண்டும். இன்றைக்கு மத்திய அரசு அகில இந்திய ரீதியில் நிர்ணயித்த விலையை விட விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்கு மாநில அரசு அதிகமான தொகையை நிர்ணயித்திருக்கிறது. இதுவா மாற்றாந்தாய் மனப்பான்மை என்பதை அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். உண்மைக்கு மாறாக சில கருத்துக்களை நாட்டு மக்கள் மத்தியில் எடுத்து வைக்கிறார்கள். அவர்கள் இதைத் தெரிந்துதான் பேசுகிறாரா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வலிய அவரைக் கூப்பிட வேண்டாம்.



திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு சகோதர உறுப்பினருக்கு நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நாராயணசாமி நாயுடு சங்கத்திடம் எனக்குத் தொடர்பு கிடையாது. அவர் செயல், விவசாய மக்களுக்குத் தகுந்த செயலாக இல்லை. அவ்வாறு நடந்துகொள்ளவில்லை. அரிசன மக்களுக்கு விரோதமாக நடந்தார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் சொன்னபோது சுதந்தர காலம் என்று குறிப்பிட்டதை நினைவுபடுத்த விரும்புகிறேன். சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து மில் அதிபர்களுக்கும், ஆலை அதிபர்களுக்கும் நாம் கொடுக்கின்ற சலுகைகளைப் போல விவசாய மக்களுக்குக் கொடுக்கவில்லை என்பதைத்தான் நான் சொன்னேன் தவிர நாராயணசாமி நாயுடு சங்கத்திற்கு ஆதரவாக நான் கருத்துத் தெரிவிக்கவில்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: தமிழகத்தில் தொழில் துறைக்குத் தேவையான மின்சாரத்தை—அது நீர் மின்சாரமாக இருந்தாலும், அனல் மின்சாரமாக இருந்தாலும், அணு மின்சாரமாக இருந்தாலும்—உற்பத்தி செய்வதற்கு மத்திய அரசின் கீழ் உள்ள போர்டிலே அனுமதியைப் பெற்று பிறகு திட்டக் குழுவின் அங்கீகாரம் பெற்றுத்தான் ஆரம்பிக்க வேண்டியிருக்கிறது. அதற்குள் கால தாமதமாகிவிடுகிறது. அதனால் தொழில் வளர்ச்சி குறைகிறது (மணியடிக்கப்பட்டது.)

திரு. க. பாலசுப்பிரமணியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 21—1—1981 அன்று மேதகு ஆளுநர் அவர்கள் இந்த மாமன்றத்திலே ஆற்றிய உரையின் கீழ் நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு கோ. விஸ்வநாதன் அவர்கள் முன்மொழிந்த அந்தத் தீர்மானத்தை எனது இதயபூர்வமாக வழிமொழிந்து ஒரு சில கருத்துக்களை இங்கே வைக்கலாம் என்று கருதுகிறேன். ஆளுநர் அவர்களுடைய உரையிலே உலகத் தமிழ் மாநாட்டைப் பற்றிக் குறிப்பிருப்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அதிலே "வழிவழி வந்த தமிழ்த் தலைமுறையின் பெருமை உலகுக்கு உணர்த்தப்பட்டது" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. வழிவழி வந்த தமிழ்த் தலைமுறையின் பெருமை உலகத் தமிழ் மாநாட்டின் மூலமாக புரட்சித் தலைவரால் உணர்த்தப்பட்டதை நான் ஆதாரத்தோடு விளக்கலாம் என்று நினைக்கிறேன். பாண்டிய மன்னன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் முன்னாலே கண்ணகி தோன்றுகிறாள்.

"நீர்வார் கண்ணை என்முன் வந்தோய்
யாரையோய் நீ! மடக்கொடியோய்"

என்று பாண்டிய மன்னன் வினவினான். அதற்குக் கண்ணகி சொல்கிறாள்,

" தேரா மன்னா, செப்புவதுடையேன்
எள்ளறு சிறப்பின் இமயவர் வியப்ப
புள்ளுறு புண்கண் தீர்த்தோன் அன்றியும்
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி புகுநீர் நெஞ்சுடை
தான்தன் அரும்பெறற் புதல்வனை
ஆழியின் மடித்தோன் "

என்று. அங்கே சோழ மன்னனைப் பற்றிய பறைசாற்றுகிறாள். ஒரு புறாவுக்காக தன்னுடைய சதையை அரிந்துகொடுத்த சிபி சக்கரவர்த்தி, பசு மாட்டின் கண்ணீரைத் துடைப்பதற்காக ஒரே வாரிசான தன்னுடைய மகனை தேர்க்காலிலே வைத்து அழித்தான் மனுநீதிச் சோழன் என்று சொல்கிறாள். அவர்களுகககு நான் சளைத்தவன் அல்ல என்று பாண்டியன் மன்னன் சொல்கிற முறையிலே சொன்னான். கண்ணகியினுடைய வாதம் நியாயமானது என்பதை உணர்கிறான். கண்ணகியினுடைய கணவன் இறந்து அநியாயமானது என்பதை அறிந்த பாண்டியன் தவறு செய்துவிட்டோம் என்பதை உணர்கிறான்.

" மன்பதை காக்கும் தென்புலன்காவல்
என்முதற் பிழைத்தது கெடுக என் ஆயுள் "

என்று கூறி மண்ணிலே வீழ்ந்து இறந்துபடுகிறான் பாண்டிய மன்னன். " வழிவழி வந்த தமிழ்த் தலைமுறையின் பெருமை" என்பது தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட தென்னாட்டு மன்னர்கள் ஆட்சி செய்கிற போது தவறு செய்யமாட்டார்கள். தவறு செய்துவிட்டால் ஆட்சியிலே அவர்கள் இருக்கமாட்டார்கள் என்பதைத்தான் காட்டுகிறது.

[மாலை 5—60]

அப்படியே அவர்கள் ஆசைப்பட்டாலும் கூட அவர்களை மக்கள் தண்டிப்பார்கள் என்ற பயம் அவனுக்கு இருந்தது. எனவே,

" மன்பதை காக்கும் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது ; கெடுக என் ஆயுள் "

என்று வீழ்கிறான். தென்னாட்டு மக்கள் தவறு செய்துவிட்டால் ஆட்சியிலே ஒட்டிக்கொண்டிருக்க வழி தேடுகிறார்கள் என்ற அவப்பெயர் என்னால் காப்பாற்றப்படட்டும் ; அப்படிப்பட்ட நிலைமை தமிழ்நாட்டிற்கு வரக்கூடாது ; இப்படிப்பட்ட நிலைமைகள் தமிழ் மன்னர்களுக்கு வரக்கூடாது என்று அன்றைய தினம் பாண்டிய மன்னன் நினைத்தான். ஆனால் தமிழகத்தின் வரலாற்றைப் பார்க்கின்றபொழுது, உதாரண புருஷர்களாக நினைத்துக்கொண்டிருப்பவர்கள் அந்த உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை என்பதை இப்பொழுது நான் நினைத்துப் பார்க்கிறேன். எனக்கு ஒன்று தெளிவாகத் தெரிகிறது.



அப்பொழுது பாண்டிய மன்னன், கண்ணகி முதலிய சிலப்பதி
காரத்தில் உள்ளவர்கள் ஈடுபட்ட இடம் மதுரை ; எனவே
அறியும் நாம் அங்கே சென்று நம்மைப்பற்றி அவச் சொல்
வெளிப்படக்கூடாது என்ற காரணத்தால் சில பேர் வரவில்லை
என்பதைச் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். அந்த அளவிற்குத்
தொடையையும், தன் மகனையும் கொடுத்தார்கள் ; தன்னையே
தியாகம் செய்துகொண்டு பாண்டிய மன்னன் வீழ்ந்திருக்கிறான்.
அந்த மதுரையிலே புரட்சித் தலைவர் அவர்கள் இந்த உலகத்
தமிழ் மாநாட்டை நடத்தி உலகத்திலே உள்ளவர்களுக்கு தமிழ்
இலக்கியத்தைப்பற்றியும், தமிழ் நாட்டின் வரலாற்றைப் பற்றி
யும் சமீப காலத்தில் முடக்கப்பட்டிருந்ததை எடுத்து வெளிப்
படுத்த வேண்டுமென்ற ஆர்வத்தோடு ஈடுபட்ட புரட்சித்
தலைவரின் ஆற்றலையும், திறமையையும், அறிவையும் பாராட்
டாமல் இருக்க முடியாது.

இன்றைய தினம் சொல்கிறார்கள் ; மதிப்பிற்குரிய மாண்பு
மிகு எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் சொல்கிறார்கள் ; 12
கோடி ரூபாயைச் செலவழித்து இந்திரா காந்தி அம்மையாரை
வரவழைத்து வாக்குமூலத்தைப் பெற்றிருக்கிறீர்கள் ; ஏற்
கனவே நாங்கள் பெற்ற வாக்குமூலத்தைத் திரும்பவும் பெறுவ
தற்காக இன்றைக்கு 12 கோடி ரூபாயைச் செலவிட்டிருக்
கிறீர்கள் என்று சொன்னார்கள். அவருடைய சொற்றொடரி
லேயே—அலங்காரமாகச் சொல்லலாம், ஒன்றுமே இல்லாததைப்
பற்றிப் பீற்றிக்கொண்டிருக்கிறீர்கள் என்று சொன்னார்கள் ;
ஆனால் 10 கோடியோ, 12 கோடியோ செலவழித்தது எதற்கு
என்பதை மதுரைக்குப் பக்கத்தில் இருக்கின்ற மக்களையும்
மதுரையிலே வாழுகின்ற மக்களையும் கேட்டால் சொல்வார்கள்;
அல்லது அங்கே சென்று வந்திருக்கும் வாய்ப்பைப் பெற்றிருந்
தால் புரிந்து கொண்டிருப்பார்கள். ஆனால் பரிதாபத்திற்குரிய
அந்த நண்பர்கள், மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம்
பேய் என்று ஒரு பழமொழி சொல்வார்களே அதைப் போல
அவர்கள் மருண்டு போய் இருக்கிறார்கள். அங்கே இருப்பது
என்ன என்று தெரியாது.

உலகத் தமிழ் மாநாட்டிற்கு 12 கோடி ரூபாய் செலவு
செய்தது. ஏதோ இந்திரா காந்தி அம்மையாரை கடைசி நாளில்
வரவழைத்து, இந்தியைத் திணிக்க மாட்டோம் என்று சொல்வ
தற்காக எடுத்த முயற்சி அல்ல. கடைசி நேரம் வரையிலும்
இந்திராகாந்தி அம்மையார் வராமலும் இருக்கலாம் என்று
தெரிந்துதான் செய்யப்பட்ட நிகழ்ச்சி. ஆனால் அங்கே செய்த
செலவுகள், உலகத்திற்குத் தமிழருடைய பெருமையைப் பறை
சாற்ற வேண்டுமென்பதற்காகப் புரட்சித் தலைவரவர்களால்
எடுக்கப்பட்ட முயற்சியாகும்.

இங்கே பேசிய அதே உறுப்பினர் ஒரு கருத்தைச் சொன்னார்
கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்
ஏதோ பிட் நோட்டீசை அடித்து, அந்த நோட்டீசின் பின்

புறத்தில் ஏதோ கையெழுத்து இருந்ததாகவும், அதில் ஒரு செயலாளருக்குப் போட்டியிட்டவரின் கையெழுத்து போட்டு, சாராயக் கடைக்கு அனுப்பியது பற்றியெல்லாம் சொன்னார்கள். எது எதற்கோ செலவழிக்கப்பட வேண்டிய பணத்தை போட்டோஸ்டெட் காப்பிக்காகச் செலவழித்துக்கொண்டிருக்கிறார்கள், அந்த நோட்டீசை எடுத்து இவர்களே எழுதிக்கொண்டு போட்டோஸ்டெட் காப்பியை எடுத்துக்கொண்டு இங்கே மன்றத்திலே பேசுகிறார்கள் என்று கூட நானும் கூறலாம். ஏனென்றால் அவர் ஒரு வழக்கறிஞர் என்பதை நான் அறிவேன். ஆகவே, ஒரு குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் வரையில் அதை நாம் பேசக்கூடாது அல்லது அதை வலுவுள்ளதாக நினைத்துக் கொள்ளக்கூடாது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அடித்த நோட்டீசாக இருந்தாலும் இருக்கலாம். அல்லது அவ்வாறு இல்லாமலும் இருக்கலாம். அதை அவர்களே அச்சடித்து வைத்துக்கொண்டு கையெழுத்தையும் போட்டு இருக்கலாம். அது என்னுடைய கட்சிக்காரர் போட்ட கையெழுத்துதானா அல்லது அவர்களே எழுதிக் கொண்ட கையெழுத்தா என்பது விவாதத்திற்குரிய விஷயமாகும். கிறித்தவ வேதத்திலே ஒரு கருத்துச் சொல்லப்பட்டிருக்கிறது ; ஒரு மனிதன் தன் கண்ணிலே உள்ள உத்தரத்தை எடுக்காமல் பிறர் முதுகிலே உள்ள தூசைத் துடைக்க முற்படுவதைப் போல் எவ்வளவோ ஊழல்களைப் புரிந்தவர்கள், எங்களைப் பார்த்து—அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பார்த்து, பீப்பாய் பீப்பாய்களாக விற்கிறது என்று சொல்கிறார்கள்.

கடைசியாக ஒரேயொரு கருத்தை மட்டும் கூற விரும்புகிறேன். ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு வேலை கொடுக்க வேண்டுமென்ற உயரிய திட்டத்தை புரட்சித் தலைவரவர்கள் இன்றைக்குச் செயல்படுத்தக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இதை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், சில குடும்பங்களைப் பார்த்தால் பத்து பேர் இருந்தால் அதில் 9 பேர்களுக்கு வேலை இருக்கும். ஆனால் ஒருவனுக்கு மட்டும் வேலை இருக்காது. 4, 5 வகுப்புகள்தான் படித்திருப்பான். வேலை இருக்காது. இன்னும் சில குடும்பங்களிலே பார்த்தால், ஒரு குடும்பத்திலே 10 பேர் இருந்தால், 9 பேர் நா...லந்து வ...ரதான் படித்திருப்பார்கள். வேலை இருக்காது, ஒருவன் மட்டும் படித்ததும் வேலையில்லாமல் தவித்துக் கொண்டிருப்பான். அந்த நிலைமையை மாற்றுவதற்காக புரட்சித் தலைவர் அவர்கள் இப்படிப்பட்ட நிலையை உருவாக்கியிருக்கிறார் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

*திரு. ஜே. சி. டி.பிரபாகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகின்ற நல்ல வாய்ப்பினை பெற்றமைக்குஉள்ளபடியே நான் மகிழ்ச்சி அடைகிறேன். உரையின் துவக்கமே இனிமையாக இருந்திருக்கிறது. இன்பத் தமிழ் மாநாடு பற்றிச் சொல்லியிருக்கிறார்கள் அல்லவா ? அந்த உரையின் துவக்கமே



இனிமையாக இருந்திருக்கிறது. எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று சொல்லி, நாமெல்லாம் ஒரு பக்கம் ஆர்ப்பரித்துநிற்க ஒரு சில வயிற்றெரிச்சல்காரர்கள் எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்பதற்குப் பதிலாக, எரி சாராயத்தைப் பற்றிக்கூட இங்கே பேசிக்கொண்டு இருக்கிறார்கள். பால்டிகா கப்பல் ஊழல் என்று சொன்னவர்கள் கலன். கவிழ்ந்து போன நிலையிலே இன்றைக்கு இருந்துகொண்டு எரி சாராய ஊழல் என்று கதை விடுகிறார்கள். அந்தக் கதை கூட எரிந்து போகிற நாள் வெகு தொலைவிலே இல்லை என்பதை இந்த மாமன்றத்திலே நான் சொல்லியாக வேண்டும்.

பண்டைய தமிழ் மன்னர்கள், தமிழுக்கும், தமிழ் காத்த புலவர்களுக்கும் செய்த சிறப்புகளைப் பற்றி நாம் வரலாற்றிலே படித்திருக்கிறோம், பார்த்ததில்லை. வாய் வழியாகக் கேட்டிருக்கிறோம், ஆனால் நேரடியாகப் பார்த்ததில்லை. தமிழுக்குச் சிறப்பு செய்த புலவருக்கு சிறப்பு செய்தான் சேரலாதன். தமிழ் பாடிய உருத்திரன் கண்ணனுக்கு பதினாயிரம் பொன் பரிசளித்தான் கரிகால சோழன். தமிழ் பாடிய மாங்குடி மருதனுக்குச் சிறப்பு செய்தான் பாண்டியன் நெடுஞ்செழியன். அவர்கள்கூட தன்னையும் பாடி, தமிழ் அன்னையையும் பாடிய பிறகுதானே மாமன்னர்களிடம் சிறப்புப் பெற்றிருக்கிறார்கள். ஆனால், எங்கள் இதய தெய்வம் தானைத் தலைவர் புரட்சித் தலைவர் சேரனையும், சோழனையும், பாண்டியனையும் வென்றிருக்கிறத் தமிழ் ஆர்வத்தினைக் கூடல் மாநகரிலே காட்டினார்கள். தன்னைப் பாடிய, தமிழைப் பாடிய புலவருக்குச் சிறப்பு செய்த சோழனையும், பாண்டியனையும், சேரனையும் வென்று விட்டார் நமது இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள். கூடல் மாநகரிலே, உலகமே போற்றுகின்ற மாநாடு கண்டோம். ஆனால். அந்த மாநாடு நடந்திடுமோ ? நடந்திடத்தான் விடுவோமா என்று சொல்லி மக்களை திசை திருப்ப முயன்றார்கள். விவசாயிகள் என்ற பெயராலே விஷமிகளைத் தூண்டி விட்டவர்கள் யார். நமது இந்தியப் பிரதம அமைச்சர் மாநாட்டிற்கு வந்து விடுவார்களா ? வரத்தான் விட்டுவிடுவோமா என்று டெல்லியிலே முயற்சி செய்தவர்கள் யார் யார் தமிழர் என்று சொல்லிக் கொண்டு, தமிழ் மாநாட்டுக்கு இழுக்கு தேடுவதற்காக உழைத்துக் கொண்டிருந்த. உத்தமர்கள் யார் என்று வெட்ட வெளிச்சமாக இந்தக் கூடல் மாநகர் மாநாடு நமக்குக் காட்டியிருக்கிறது. அது மட்டுமல்ல, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழுக்காக உழைத்தவர்கள் யார் என்பதையும் தமிழை வைத்துப் பிழைத்தவர்கள் யார் என்பதையும், தமிழக மக்களுக்கு நன்றாக இந்த மாநாடு உணர்த்தியிருக்கிறது. நடந்து முடிந்திருக்கிற அந்த மாநாடு இருக்கிறதே, அது இரண்டு மிகப் பெரிய உண்மைகளைத் தமிழக மக்களுக்குக் காட்டியிருக்கிறது என்பதை நாம் சொல்லியாக வேண்டும். 1972-லே, கேட்கப்பட்ட மிகப் பெரிய கேள்விக்கணை யார் தமிழர் என்பது. அந்தக் கேள்விக்கு விடை. கூடல் மாநகர் காட்டியிருக்கிறது. அண்ணன் வழியிலே யார்

என்பதற்கு கூடலில் நடைபெற்ற மாநாடு காட்டியிருக்கிறது இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள்தான் அண்ணாவின் புனிதப்பாதையிலே சென்று கொண்டிருக்கிற தலைவர் என்று தமிழக மக்களுக்குக் காட்டியிருக்கிறது.

[மாலை 6—00]

அது மட்டுமல்ல. புரட்சித் தலைவருடைய தமிழ் ஆர்வமும் தமிழ் உணர்வும் மாநாடோடு முடிந்துவிடவில்லை. மாநாடு முடிந்த பிறகு சென்னை உயர்நீதி மன்றத்தில் இருக்கிற தலைமை நீதிபதி மாற்றப்படுகிறார் அந்த மாற்றல் குறித்து இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள், உடனடியாக உரிமைக் குரல் எழுப்புகிறார் கடிதம் வாயிலாக மைய அரசுக்கு எழுதிக் காட்டுகின்றார் உணர்வு தன்னை. இங்கே வருகின்றவர்கள் தமிழ் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும், தமிழ் அறிந்தவர்கள் தான் வரவேண்டும் இங்கே இருக்கின்றவர்களின் உணர்வு தன்னை மதிக்கின்றவர்களாக இருக்க வேண்டும் என்ற பொருள் பட எழுதி இருக்கின்றார்கள்.

ஆனால், தமிழினத் தலைவர்கள் என்று சொல்லுகிற சில பேர்கள் இது குறித்துக் கருத்துக் கேட்ட நிருபர்களிடம் ''நோ கமன்ட்'' என்று மௌனகீதம் பாடியுள்ள எதிர்க்கட்சித் தலைவரைப் பற்றி மிக நன்றாகத் தமிழ் மக்கள் புரிந்து கொள்வதற்கு இது ஒரு வாய்ப்பாக அமைந்திருக்கிறது.

அது மட்டுமல்ல, உலகத் தமிழ் சங்கத்தை இன்றைக்கு தமிழகத்திலே அமைத்திடுவோம் என்று சொல்லியிருக்கிற இந்த இனிப்பான அறிவிப்பைக் கூட நாங்கள் இன்றைக்கு வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இன்றைக்கு மாநாடு முடிந்த பிறகும் கூட இந்தப் பணிகளை, தமிழ் காக்கின்ற பணிகளை பார்க்கின்ற போது இந்தி எதிர்ப்புப் போராட்ட வீரர்களுக்கு ஓய்வு ஊதியம் தரவேண்டும் என்று இருந்த அந்தத் திட்டத்தை உச்ச நீதி மன்றத்திலே அங்கே ''ரிட்'' மூலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிற அந்த நிலைமையை அப்படி நிறுத்திவைக்கப்பட்டிருக்கிற அந்த உதவித் தொகையை நிச்சயமாக தமிழ்ப் பாதுகாப்புப் பணியிலே ஈடுபட்டிருக்கிற வீரர்களுக்கு தருவோம் என்று சொன்ன நமது இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள், விரைவிலே இது குறித்த அறிவிப்பை வெளியிடவேண்டும் என்று பணிவோடு இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆறாம் ஐந்தாண்டு திட்டத்திற்கு 3,750 கோடி ரூபாய் இது வரையிலே யாருமே சாதித்திராத மிகப் பெரிய சாதனையாகப் பெற்றிருக்கிறார்கள். உண்மையிலேயே இதைப் பெற்று தருவதற்காக உழைத்திட்ட இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கு தமிழக மக்கள் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.



விவசாயிகளுக்கு நாம் செய்திருக்கிற அந்தச் சாதனையை இந்த மாநிலம் மட்டுமல்ல. இந்தியாவில் உள்ள மற்ற மாநில முதலமைச்சர்கள் எல்லாம் வியந்து பாராட்டுகின்ற வண்ணம் நமது பணிகள் அமைந்திருக்கின்றன.

பச்சையப்பன் அறக்கட்டளையை இன்றைக்கு மேற்கொண்டிருக்கிறோம். 2 ஆண்டுகளுக்கு ஏற்றதோடு மட்டுமல்ல, இது வரை இருந்தவர்கள் அந்த அறக்கட்டளை பொறுப்பிலே இருந்தவர்கள் எப்படி எல்லாம் நடந்திருக்கிறார்கள் என்பதைப் பற்றிக் கூட முழுமையாக விசாரிக்க வேண்டும் என்று என் பணிவான வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன்.

கட்டளைப் பொதிமலையின் கீழிருந்து, காவிரி ஆற்று நீரை சென்னை நகரத்திற்குப் பெற்றுத் தருகிற அந்த இனிப்பான செய்தியை நிச்சயமாக சென்னை நகர மக்கள் வரவேற்பதோடு வாழ்த்துகிறார்கள். அதே சமயம், சென்னை நகருடன் புதிதாக இணைக்கப்பட்டிருக்கின்ற பல்வேறு பஞ்சாயத்துக்கள் உதாரணமாக வில்லிவாக்கம் 32, 33, 76 வட்டங்களில் உள்ள மக்கள்கூட அப்படிப்பட்ட குடிநீர் கொடுக்கின்ற திட்டம் தங்களுக்குத் தரப்படுமானால் நிச்சயமாக மகிழ்ச்சி அடைவார்கள். அங்கே தற்காலிகமாக அரசு ஒரு குடிநீர் திட்டத்தை உருவாக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

தாங்கள் வைத்ததுதான் சட்டம், காட்டியதுதான் ரெக்கார்டு என்று இருந்த அந்தக் கிராம முன்சீப்களை அகற்றியது குறித்து அப்பாவி மக்களை ஏமாற்றிக் கொண்டிருந்த ஒரு சில கிராம முன்சீப்புகள் குறித்து கிராமத்திலே இருக்கிற மக்கள் வெகுவாக மகிழ்ச்சி அடைந்து இருக்கிறார்கள்.

விவசாயிகளுக்கு அரசு சலுகைகள் செய்திருக்கின்றது. ஆனால், அந்த சலுகைகள் மேலும் நீட்டிக்கப்படுமானால், விஷமிகளுக்கு போய் சேர்ந்துவிடுமோ என்கின்ற கவலை கூட நமக்கு இருக்கிறது. இங்கே மூச்சைப் பிடித்துக் கொண்டு பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பக்கிங்காம் கர்னாட்டிக் மில் பிரச்சினை பற்றி பேசும்போது இதய தெய்வம் புரட்சித் தலைவர் அரசு இதை பரிவோடு கவனிக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால், அதே நேரத்தில் பக்கிங்காம் கர்னாட்டிக் பற்றி மத்திய ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிற மத்திய அமைச்சர் இது ஒரு ''ஜங்க'' காயலான்கடை என்று சொன்ன அந்த காரியத்தை இங்கே எடுத்து வைக்காது போன மர்மம்தான் நமக்குப் புரியவில்லை. அந்த மௌனகீதத்திற்கு யார் தான் விடையளிக்கப் போகிறார்களோ? இங்கே தொழிலாளர் பெருமக்கள் கோட்டையை நோக்கி வருகிறார்கள். கோட்டையிலே கோலோச்சுகிற கோமான் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் வாளாவிருக்கவில்லை. இரும்புக் கரம் கொண்டு அடக்குவேன் என்று சொல்லவில்லை. தொழிலாளர் தலைவர்கள்

மண்டையைப் பிளக்க வில்லை. ஓடோடிச் செல்கிறார் வீதிக்கு. தொழிலாளர் பெருமக்களை அவர்களுடைய உணர்வுகளை மதித்து மனுக்களைப் பெற்றுக்கொண்ட ஒரே தலைவர் இன்றைக்கு இந்தியத் துணைக்கண்டத்திலேயே நமது இதய தெய்வம் புரட்சித் தலைவர்தான் என்பதை மட்டும் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இந்த ஆளுநர் உரையில் குறிப்பிட்டுள்ள அத்தனையும் வறுமைக் கோட்டின் எல்லைக்குக் கீழே வாழ்ந்து கொண்டு இருக்கும் அந்த கிராம மக்களுக்கு நிச்சயமாக உறு துணையாக இருக்கின்ற நல்ல திட்டங்கள் என்று எடுத்துச் சொல்லி, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. ஜே.. எஸ், இராசு : சட்டப் பேரவை துணைத் தலைவ அவர்களே, ஆளுநர் உரையின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களை எடுத்து வைப்பதற்கு நான் விழைகிறேன். ஆளுநர் உரையில் அநேகமாக 4—5 பத்திகளை வெகுவாகப் பிடித்துக்கொண்டு பேசி முடித்த நண்பர் பிரபாகரன் உள்பட எல்லோரும் போற்றிப் புகழ்ந்த அகில உலக தமிழ் மாநாடு பற்றிய சிறப்புரையாகும். அண்ணா அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்று இருந்த நேரத்தில் அவர் நடத்திக் காட்டிய வரலாற்றுப் புகழ் மிக்க அந்த மாநாடு முடிந்த பிறகு அவர் வைத்த எந்த அறிக்கையிலோ அல்லது பேருரையிலோ தனக்கோ, தன்னுடைய அரசுக்கோ எந்தவிதமான புகழாரத்தையும் சூட்டிக் கொண்டது இல்லை என்பதை இங்கே இருக்கும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் நினைவு படுத்தக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அது மட்டுமல்ல, அண்ணா அவர்கள் பொறுப்பேற்று நடத்திய அந்த மாநாடு பொது மக்களின் நன்கொடையில் நடத்திய மாநாடு என்பதோடு மட்டுமல்லாமல், அந்த மாநாட்டைத் தலைமையேற்று நடத்திய அண்ணா அவர்கள், அந்த மாநாட்டில் மீதப்பட்ட 18 இலட்சம் ரூபாயை குறள் ஆராய்ச்சிக்காக தமிழகக் கழகங்களுக்கு பகிர்ந்து அளிக்கிறேன் என்று சொன்னதையும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இப்போது நடத்தப் பெற்ற இந்த மாநாடு முழுக்க முழுக்க அரசு முன் நின்று நடத்திய மாநாடாகும். கணக்குகள் சரியாக இன்னும் வரவில்லை. பல கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டு ஊரெல்லாம் வெளிச்சம் போட்டு, விளம்பரம் செய்யப்பட்டதே தவிர தமிழ் ஆராய்ச்சிக்கு உருப்படியாக எதையும் செய்ததாகத் தெரியவில்லை. இருப்பினும், அதனை நாம் பாராட்டக் [illegible], தமிழுக்காக எடுக்கப்படும் மாநாடு என்பதால்தான். [illegible] அந்த நேரத்தில் அந்த மாநாட்டில் கலந்து கொள்வதும்,





கலந்து கொள்ளாததும் ஒவ்வொருவருடைய மன நிலை அல்லது அவர்கள் கட்சி எடுக்கும் நிலை என்பதை மதிப்பிற்குரிய ஆளும் கட்சி நண்பர்கள் உணர்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். இந்த விஷயத்தைப் பற்றி ஆழமாக நாம் பேச வேண்டுமானால் அதைப் பொது மேடைகளில் பேசுவதற்கு வைத்துக் கொள்ளலாம்.

இங்கே நமக்கு முன் இருக்கும் பிரச்சினை, நாட்டிலே நிலவி வரும் விவசாயப் பிரச்சினை, சுடப்பட்டு மாண்ட விவசாயக் குடும்பங்களுக்கும் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் உள்ள பல்வேறு பிரச்சினை, வேலை இழந்த கிராம அதிகாரிகள் 26,000 பேர் உண்ண உணவின்றி நடுத் தெருவில் நிற்கும் பிரச்சினை, பி.அன்ட் சி மில் தொழிலாளர்கள் பிரச்சினை, விலைவாசி ஏறிவிட்டது என்று இன்றைக்கு ஆளுநர் உரையிலேயே குறிப்பிடப்பட்டுள்ள பிரச்சினை, போலீஸ் அராஜகமும், அட்டூழியங்களும், மற்றும் பிற காரியங்கள், ஆகியவையாகும். இவற்றிற்கெல்லாம் முத்தாய்ப்பு வைத்தாற்போல், சாராயம் தமிழகம் எங்கும் வழிந்தோடும் பிரச்சினை ஆகியவற்றைப் பேசி முடிவு காண வேண்டியிருக்கிறது.

இதையெல்லாம் விட்டு விட்டு தமிழ் மாநாட்டைப் பற்றி வெகுவாகப் பாராட்டிப் பேசியிருக்கிறீர்கள். தமிழ் மொழிக்கு மாநாடு நடத்துவது கூடாது என்று எவரும் சொல்லவில்லை. ஆனால் அந்த மாநாட்டைப் பாராட்டுவதையே மையமாக வைத்து இங்கே பேசுவது எந்த வகையில் சிறந்தது என்பது எனக்குப் புரியவில்லை. நாட்டிலே ஆயிரம் பிரச்சினைகள் இருக்கின்றன. அதை மறைக்க உலகத் தமிழ் மாநாட்டைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். எதை வேண்டுமானாலும் உயர்வாகவும் பேசலாம், இழிவாகவும் பேசலாம். ஆனால் உலகத் தமிழ் மாநாட்டின் சாதனைப் பற்றிய உண்மை தெரிய வேண்டுமானால் அதைப் பற்றி இதுவரை பத்திரிகைகளில் வெளிவந்துள்ள—அத்தனை பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ள கருத்துக்களை நம்முடைய அரசின் தகவல் துறை மூலம் தொகுத்து கருத்துக்களை ஒன்று திரட்டி, எந்தப் பத்திரிகை எந்த முறையில் எழுதி இருக்கிறது, அங்கே தமிழ் வளர்ச்சிக்காக எந்த அளவிற்குக் கருத்துக்கள் விளம்பரமும் வீண் ஆடம்பரமும் எவ்வாறு கொடி கட்டிப் பறந்திருக்கிறது. என்பதையெல்லாம் தனியாக சமநிலையில் ஆராய்ந்து பார்த்தால் நிச்சயமாக உணர்வார்கள் ; வெளிச்சம் போட்டதுதான் மிச்சமே தவிர மொழி வளர்ச்சிக்கு மாநாடு பயன்படவில்லை என்கிற உண்மை நிச்சயமாக தென்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[மாலை 6—10]

தமிழ்நாட்டிலே 4½ கோடி, 5 கோடி மக்கள் இருக்கிறார்கள் மிகப் பெரும் திருவிழா போல காட்சி நடத்தினால் ஏராளமானவர்கள் அந்தக் காட்சியைக் காண வருவார்கள். எனவே

[திரு. ஜே. எஸ். இராசு] [1981 ஜனவரி 27

அதிலே கலந்து கொண்ட மக்களின் எண்ணிக்கையை வைத்து அதுதான் ஒரு அரசின் சாதனை என்று தவறான கணக்குப் போட்டு விடாதீர்கள். நாட்டு மக்கள் இந்த நிர்வாகத்தை, உங்கள் மாநாட்டுக் காட்சியை வைத்துக் கணக்குப் போடவில்லை. கிராமப் புறத்திலே இருக்கிற வறுமை, விலைவாசி ஏற்றம், விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்காத கொடுமை இவைகளைப் பற்றி எல்லாம் மக்கள் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மட்டும் இங்கே தெரிவித்துக் கொள்ள நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

நம்முடைய ஆளுநர் உரையில்—போன ஆண்டு—அருமையான கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். புதிதாக மக்கள் உங்களை நம்பி, மீண்டும் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். பாராட்டுகிறேன். அந்த நம்பிக்கைக்கு உகந்த வகையில் பணியாற்றுவீர்கள் என்று நம்புகிறேன். அறிஞர் அண்ணாவின் கொள்கையை ஏற்று செயல்படுத்த என்னுடைய அரசு முன்வரும் என்று பேரவையில் 1980 ஜூன் திங்களில் பட்வாரி அறிவித்தார். ஆனால் இந்த அறிக்கையிலே ஒரு கருத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதாவது மதுவிலக்குக் கொள்கையை எந்த வகையில் செயல்படுத்தலாம் என்பதற்கு உங்களுடைய கருத்துக்களைத் தாருங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். இது ஒரு கொள்கை பற்றிய விஷயமாகும். இத்தனை நாட்களுக்குப் பிறகு இது பற்றி, இந்த ஒரு முக்கியமான கொள்கைப் பற்றி கேட்டிருக்கிறார்கள். அந்தக் கருத்தை இப்போது இங்கே கேட்க வேண்டிய அவசியம் என்ன ? நம்முடைய அரசாங்கத்தில் ஒரு ஆஸ்தான கவி இருப்பதாக அறிகிறோம். அவரை நியமிக்கும்போது நம்மை கலந்திருக்க வேண்டும். அந்த ஆஸ்தான கவி எப்படிப்பட்டவர் தெரியுமா ?

ஓடிவா ! ஓடிவா ! ஓடிவா
மதுக்கிண்ணமே ! நீ ஓடி
வந்தால் எனக்கு வராது
மரண பயமே !

என்று அந்த ஆஸ்தான கவி பாடுகிறார். இப்படி மதுக் கிண்ணத்தை ஓடிவா என்று அழைக்கும் அவரை நியமிக்கும் போது கேட்கவில்லை; இப்போது ஏன் கேட்கிறார்கள்.

ஓர் கையிலே மதுவும் ஓர் கையில்
மங்கையரும் சேர்ந்திருக்கும்போது
என் ஜீவன் பிரிந்தால்தான்
நான் வாழ்ந்த வாழ்க்கை
நலமாகும் ! இல்லையெனில்
ஏன் வாழ்ந்தாய் என்றே
இறைவன் எனைக் கேட்பானே !



1981 ஜனவரி 27] [திரு. ஜே. எஸ். இராசு]

என்றும் பாடுகிறார். அந்தக் கவி. அந்தக் கவி நீண்டநாள் வாழட்டும். அவரை, குடிக்கிற ஒருவரை ஆஸ்தான கவியாகப் போட்டுவிட்டு, மதுவிலக்கு கொள்கைபற்றி மனம் திறந்து சொல்லுங்கள் என்று கேட்கிறீர்கள். அதற்கு முன் ஒரு குறிப்பு. மடை திறந்த வெள்ளம் போல் சாராயம் ஓடுகிறது. மனம் நிறைய மக்கள் குடிக்கிறார்கள். இந்த நிலையில் உறுப்பினர்கள் மனம் திறந்து கருத்து சொல்ல வேண்டுமாம். பேரறிஞர் அண்ணா அவர்கள் மது குடிப்பதை விரும்பாதவர்கள். மது விலக்கை ஆதரித்தவர்கள். அந்த அண்ணாவின் கொள்கையை ஏற்று செயல்படுகிறேன் என்று சொல்லுகிற முதலமைச்சர் அந்த அண்ணாவின் கொள்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று சொல்வதற்கு என்ன காரணம்? சாராயம் குடிப்பவர்களை அடக்க முடியவில்லையா? அல்லது அவர்களுடைய பிடியில் சிக்கி, உங்களால் விடுபட முடியவில்லையா? 'ஐதர் திஸ் ஆர் தட்', அண்ணாவின் பெயரால் ஆட்சி நடத்துகிறீர்கள். எந்த கொள்கையை உயிர் கொள்கையாக அண்ணா அவர்கள் கொண்டிருந்தாரோ, அந்தக் கொள்கையைப் பற்றி எங்களிடம் கருத்து கேட்கிறீர்கள், இதற்கு என்ன அர்த்தம்? அண்ணாவின் மதுவிலக்குக் கொள்கையை தீவிரமாக அமல்படுத்துவதுதானே, ஊழலற்ற ஆட்சி நடத்த வேண்டும் நாட்டுக்கு அதுதான் நலன் தரும். ஆனால் ஊழலைப்பற்றி நாங்கள் எதைச் சொன்னாலும் ஆதாரம் இருக்கிறதா என்று ஆளும் கட்சியினர் கேட்பதை விட்டு விட்டு, அதிலே உண்மை இருக்குமா? அதிலே பழை இருக்குமா என்று ஆராய்வது உங்கள் நிலையாக இருக்க வேண்டும். ஊழல் இல்லை என்று உங்களால் சொல்ல முடியுமா? ஊழல் இருக்கும். அதற்கு ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். தமிழகத்தில் ஒரு வீட்டுவசதி வாரியம் இருக்கிறது. அது பல கோடி ரூபாய் களை கடனாக வழங்கி, வீடு கட்ட இருக்கிற ஒரு முக்கிய அமைப்பு. அது மிகச் சிறந்த அமைப்பாக ஒரு காலத்திலே இருந்தது. இன்றைக்கு அதிலே இருக்கிற சகல துறையும் கெட்டுக் கொண்டிருக்கிறது. நாகர்கோவிலில் ஒரு ஹவுசிங் சொசைட்டி இருக்கிறது. அதற்கு கடன் கொடுக்கிற தமிழ் நாடு வீட்டு வசதி தலைமைச் சங்கத்திலிருந்து கடன் வழங்கப்படுகிறது. அந்தக் கடன் மூலம் வீட்டு மனைகள் வாங்கி, அதை உறுப்பினர்களுக்கு வழங்குவது நோக்கமாகும். அதற்காக தலைமை நிலையத்தில் பணம் நாகர்கோவில் சங்கத்திற்குக் கடனாகப் பணம் போகிறது. கிட்டத்தட்ட 32 இலட்சம் ரூபாய் போகிறது. ஆனால் போன பணத்திற்கு இன்று வரையில் நிலம் வாங்கப்படவில்லை. பணம் போய் 7, 8 மாதம் ஆகிறது. மூன்று முறை பணம் அனுப்பப்படுகிறது. மூன்று முறை அனுப்பியும்; அந்த 30 அல்லது 32 இலட்சம் ரூபாயை வாங்கி வைத்துக் கொண்டு நாகர்கோவில் சொசைட்டியினர் சும்மா இருக்கிறார்கள். இதிலே வேடிக்கை என்னவென்றால் நிலம் யார் தருகிறார்கள் ? குறைந்த பட்சம் சேல்ஸ் அக்ரிமென்ட் செய்யப்பட்டிருக்கிறதா ? பத்திரம் பதிவாகி இருக்கிறதா ? அப்படி

இருந்தால் அவைகளை தலைமை சங்கம் பெற்றுக் கொண்ட பிறகுதான் கடன் தொகை அனுமதித்து வழங்கப்பட வேண்டும். இதுதான் நடைமுறை.

ஆனால், எந்தவிதமான நடைமுறையும் இல்லாமல், விதி முறையும் இல்லாமல் 30 இலட்சத்திற்கு மேற்பட்ட தொகை தமிழ்நாடு வீட்டு வசதி தலைமைச் சங்கத்திலிருந்து நாகர் கோவிலுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இது ஊழலுக்கு இடம் தராதா? ஆறு, ஏழு மாதங்களாக 30 இலட்சத்திற்கு மேற்பட்ட தொகையை அந்த சொசைட்டி வாங்கி வைத்திருக்கின்றது. இதற்கு வட்டியை யார் தருவது? அது மட்டுமல்ல. அந்தப் பணத்தை கொடுத்து யாரிடம் நிலம் வாங்க விலை பேசப்பட்டது. ஏன் இன்னும் அந்த நிலம் வாங்கப்படவில்லை என்பதை எல்லாம், வீட்டு வசதி அமைச்சரவர்கள் இங்கே இருப்பார்கள் என்று கருது கிறேன், அவர்கள் பதில் சொல்வார் என்று கருதுகிறேன். கடந்த அக்டோபரிலிருந்து இதுவரை வீடு கட்ட கடன் வழங்க பண மின்றி சங்கம் இருக்கும்போது 30 இலட்ச ரூபாயை இப்படி கடனாக வழங்கியுள்ளதற்கு என்ன காரணம். ஆகவே இதிலே ஊழல் மறைந்து இருக்கின்றது என்று எதிர்க்கட்சி என்ற நிலை யிலே இருந்து சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். (மணியடிக் கப்பட்டது.)

அடுத்து விவசாயிகள் பிரச்சினை பற்றிச் சொல்ல விரும்பு கிறேன். விவசாயிகளுக்கு நீங்கள் செய்திருக்கின்ற சாதனைகள் பற்றி விரிவாகப் புகழ்ந்திருக்கிறீர்கள். நான் அதிலே குறுக்கே வரவில்லை. ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். திருச்சி மாவட்டத்தில் விவசாயிகள் கடந்த 2 மாதங்களாக பயங்கரமாகத் தாக்கப்படுகின்றார்கள். திருச்சியில் ஊர்வலம் நடத்துவதற்கென்று அனுமதி கேட்டு அந்த அனுமதி விவசாயி களுக்குத் தரப்பட்டது. ஆயிரக்கணக்கானபேர் திருச்சி நகருக்குச் சென்றார்கள். ஆனால் அவர்கள் அத்தனை பேரும் வழி மறிக்கப் பட்டு செக் போஸ்ட் போடப்பட்டு தாக்கப்பட்டிருக்கிறார்கள். ஏழை விவசாயிகளைத் தாக்கச் சொல்வதற்கு எந்த சட்டம் இடம் தருகின்றது. இன்டியன் கான்ஸ்ட்டிட்யூஷனிலே உலவ, பேச, எண்ண எழுத உரிமைகள் தரப்பட்டிருக்கின்றன. அந்த சட்டத்தின் பேரால் அனுமதி தரப்பட்டு ஊர்வலம் நடத்த வந்த விவசாயத் தோழர்களை அடிப்பதற்கும், நொறுக்கு வதற்குமா இந்த அரசாங்கம் இருக்கிறது. அங்கே ஒரு கலெக்டர். பெயரை நான் சொல்ல விரும்பவில்லை. குடி தண்ணீர் இல்லை. வறட்சி நிலவுகிறது என்று கேட்டதற்கு மழை இல்லாததால் தண்ணீர் இல்லை என்ற விஞ்ஞான உண்மையைக் கண்டுபிடித்து எங்களிடம் சொல்கிறார். சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாம் தான் சட்டதிட்டங்கள் குறித்து சட்டமன்றத்திலே விவாதிக் கிறோம். ஆனால் ஒரு அதிகாரி, நம்முடைய வரிப் பணத்தி



லிருந்து சம்பளம் வாங்குகின்ற ஒரு அதிகாரி மழை இல்லாததால் தண்ணீர் இல்லை என்று சொல்கிறார். என்னுடைய அன்பிற் குரிய திரு. கே.ஏ.கே. அவர்களைக் கேட்கிறேன், திரு. அரகங் நாயகம் அவர்களைக் கேட்கிறேன், திரு. குழந்தைவேலு அவர் களைக் கேட்கிறேன், ஜனநாயகத்தின் பேராலே கேட்கிறேன், தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றப் பிரதிநிதி ஒரு குறையைச் சொல்லும்போது மழை இல்லை, ஆகவே தண்ணீர் இல்லை என்று சொல்லுகின்ற ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி இந்தத் தமிழகத் திலே இருக்கிறார். அவரை எல்லாம் நீங்கள் அமைச்சர்களாக இருந்துக் கொண்டு பார்த்துக் கொண்டு இருக்கிறீர்கள். இப்படிப்பட்ட ஆட்சியில் நிலவிடும் கொந்தளிப்புகளை அருள்கூர்ந்து கணக்கிலே எடுத்துக்கொண்டு எதிர்காலத்திலாவது நல்லமுறை யிலே இந்த அரசின் ஆட்சி நடைபெறுவதற்கு வழி செய்யுங்கள் என்று கூறி இந்த ஆளுநர் உரை வரவேற்கப்படுவதற்குரிய எந்த விதமான அருகதையும் அற்றது என்று கூறி என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர். அருமைச் சகோதரர் அவர்கள் பேசுகின்றபோது அறிஞர் அண்ணா அவர்கள் மதுவை ஒழிப்பதற்குப் பாடுபட்டார், ஆனால் மதுவிலக்கைத் தளர்த்துவதற்கு இந்த அரசாங்கம் முயற்சி செய்தது என்று கூறினார்கள். அண்ணாவின் புகழைப் பாடிக்கொண்டிருக்கின்ற நீங்களும், காந்தியின் புகழைப் பாடிக்கொண்டிருக்கின்ற இந்திரா காங்கிரஸ் கட்சியினரும் இணைந்து ஆட்சி நடத்து கின்ற பாண்டிச்சேரியில் கூட மதுவிலக்கைத் தளர்த்தி இருக்கிறீர்களே, அதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று அவரிடமிருந்து அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்படிப்பட்ட வாதங்கள் எல்லாம் வேண்டாம். அமருங்கள். அடுத்து திரு. எம். சின்னசாமி அவர்களைப் பேச அழைக்கிறேன்.

திரு. ஜே. எஸ் இராசு: பேரவைத் துணைத் தலைவரவர் களே, கையைக் கொடுத்துவிட்டால் மீளலாம், ஆனால் வாயைக் கொடுத்துவிட்டால் மீள முடியாது. தேர்தலின் போது உங்கள் தலைவர் மதுவிலக்கை உறுதியாக அமுல் படுத்துவேன் என்றார். எனவே எனவே நிறைவேற்றவேண்டிய துதானே என்று நாங்கள் கேட்கிறோம். அவ்வளவுதான்.

[மாலை 6—20]

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு துணைத் தலைவா அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உகந்தளித்த உரையின் மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே என்னுடைய கருத்துக்களை கூற விரும்புகிறேன்.

[திரு. எம். சின்னசாமி] [1981 ஜனவரி 27

முச்சங்கமும் வளர்ந்த மதுரையில், அக்காலம் கடந்ததற்குப் பின்னர் எச்சங்கமும் இல்லையே என்று ஏங்கிக் கிடந்த தமிழ்ப் புலவர்கள், தமிழ் அறிஞர்கள், தமிழ் ஆராய்ச்சியாளர்கள் ஆகியவர்களுடைய ஏக்கத்தைப் போக்குகிற விதத்தில் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டைக் கூட்டி, உலகத் தமிழ் அறிஞர்களை ஒன்று திரட்டி உலகத் தமிழ்ச் சங்கம் கண்டு, எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று உலகத்திற்கே பறை சாற்றி, தமிழையும் தமிழர்களையும் நலம் காக்கும் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை மனமார தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த மாநாட்டைக் கண்டவர்கள், அதிலே பங்கேற்றவர்கள் அதனை வந்து பார்த்தவர்கள், அந்த மாநாடு எவ்வளவு சீரும் சிறப்புமாக நடைபெற்றது என்று அறிவார்கள். ஆனால் மாநாட்டையே அங்கு வந்து பாக்ககாதவர்கள் சிலர் ஊழல் என்று சொல்லுகிறார்கள். யார் ஊழல் செய்தார்கள் என்பதை நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள். இந்த மாநாட்டிலே உள்ள முக்கியமான அம்சம் இந்தியத் தலைமை அமைச்சர் அவர்கள் மாநாட்டிற்கு வந்து கலந்துகொண்டு. பண்டிட் நேரு அவர்கள் அளித்த தமிழ் நாட்டினுடைய மக்கள் மீது இந்தி ஒரு போதும் திணிக்கப்பட மாட்டாது என்ற உறுதி மொழியை, உறுதிபடுத்தியதுதான்.

அடுத்து நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் டெல்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்தில், ஒரு மாநிலத்தில் பின் தங்கிய நிலையை அறிய நபர்வாரி வருமான அடிப்படையில் தீர்மானிப்பதற்கு பதிலாக, வறுமைக் கோட்டிற்கும் கீழுள்ள மக்கள் சதவீதம், மாநிலத்தின் நபர் வாரித் திட்டச் செலவு ஆகியவற்றின் அடிப்படையில் தீர மானிக்கப்பட வேண்டும் என்று பேசியிருக்கிறார். இது வரை எந்த மாநில முதல்வரும் தெரிவிக்காத அரிய யோசனை நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்றால் அவர்கள் வறுமையை ஒழிப்பதிலே எவ்வளவு தீவிரமாக, தாய்மை உணர்வோடு பணியாற்றுகிறார்கள் என்பது விளங்குகிறது. அவர்களுடைய எண்ணத்தோடும் குரலோடும் இங்குள்ள மாமன்ற உறுப்பினர்களின் குரலும் சேர்ந்து ஒலிக்குமானால், வறுமை கோட்டிற்குக் கீழே உள்ள மக்களுடைய துயரங்கள், குறைகள் நீக்கப்படும். அப்போதுதான் எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும் இங்கே இல்லாமை இல்லாத நிலை வேண்டும் என்ற கவிஞனின் அந்த தத்துவம் நடைமுறைக்கு வரும். அப்படிப்பட்ட அந்தக் கருத்தைச் சொன்ன மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களை நான் பாராட்டி தலைவணங்குகிறேன்.



981 ஜனவரி 27] [திரு. எம். சின்னசாமி]

அடுத்து விவசாயிகளுடைய பிரச்னையை எடுத்துக் கொண்டால், அதைப்பற்றி நம்முடைய நண்பர்கள் இங்கே நிறைய எடுத்துப் பேசினார்கள். விவசாயிகளிடம் இந்த அரசு எவ்வளவு பரிவோடும் கனிவோடும் இருக்கிறது என்பதற்கு உதாரணம் இந்த ஆண்டில் மட்டும் 62 கோடி ரூபாய் விவசாயிகளிடம் இருந்து கடன் தள்ளுபடி செய்துள்ளது. தக்காவி கடனாக இருக்கிற 20 கோடி ரூபாயையும் தள்ளுபடி செய்திருக்கிற காரணத்தினால் 10 லட்சம் விவசாயப் பெருமக்கள் பலன் அடைந்திருக்கிறார்கள்.

அடுத்து விவசாயிகளுக்கு கொடுக்க வேண்டிய இரசாயன உரங்கள் பூச்சிக் கொல்லி மருந்துகள், டீசல் போன்ற இடு பொருள்களை நியாயமான விலையில் அரசு கொடுக்கும் என்ற அருமையான அறிவிப்பையும் அரசு செய்துள்ளது. அதே நேரத்தில் அவர்களுக்கு அவர்களுடைய விளை பொருள்களுக்கு கூடுதல் ஆதாயம் கிட்டும் வகையில் அந்த விளை பொருள்களின் விலைகளை உயர்த்திக் கொடுக்கவும் மத்திய அரசை வற்புறுத்தியிருக்கிறது. நெல்லுக்கு ஒரு குவிண்டாலுக்கு ரூ. 130-ம் கரும்புக்கு ஒரு டன்னுக்கு 200-ம் விலை நிர்ணயிக்க வேண்டும் என்று மத்திய அரசை நம் அரசு வலியுறுத்தி வந்துள்ளது. அப்படி வலியுறுத்தும்போதே நெல்லினுடைய விலையை 115 ரூபாயாகவும், கரும்பின் விலையை 175 ரூபாயாகவும் தானே விலையை உயர்த்திக் கொடுத்துள்ளது. அதை வரவேற்றேயாகவேண்டும்.

அடுத்து விலைவாசிகள் ஏறிக் கொண்டே இருக்கின்றன என்று சொல்லி, அரசாங்க ஊழியர்களின் ஊதியத்தை மாத்திரம் ஏற்றிக் கொண்டே இருந்தால், பணவீக்கம் ஏற்பட்டு அதனால் விலைவாசிகள் அதிகமாகத்தான் ஆகுமே ஒழிய அது அவர்களுக்கு பலன் ஒன்றும் அளிக்காது. தவிரவும் கிராமங்களிலே உள்ள நிலமற்ற விவசாயிகள், கைத்தறி நெசவாளர்கள் ஆகியோர்கள் இருக்கிறார்களே, அவர்களுடைய ஊதியம் உயராவிட்டால் விலைவாசி ஏற்றத்தினால் அவர்களும் பாதிக்கப்படுவார்கள் என்று அரசு பரிவோடு அவர்களைப் பார்க்கிறது. சங்கமே அமைத்துக் கொள்ளாத நிலையில் ஆயிரக்கணக்கானவர்கள் இருக்கிறார்களே, அவர்களுடைய நிலை இந்த விலைவாசி ஏற்றத்தினால் பாதிக்கப்படுமே என்று கவலைப்படுகிறது. எப்படி இருந்தாலும், இந்த விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்த தீவிரமான கண்காணிப்பும் நடவடிக்கைகளும் எடுத்தாக வேண்டும். அதை அரசாங்கம் எடுக்க வேண்டும் என்று கேட்டு, அதற்கு சர்வ கட்சிகளும் கட்சி வேறுபாடின்றி ஒத்துழைக்க முன் வரவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய அரசாங்கம் இந்த மாநிலத்தை தொழில் மயமாக்க வேண்டும் என்ற முயற்சியை தீவிரமாக மேற்கொண்டு வருகிறது. செங்கல்பட்டில் கூட்டுறவுத் துறையில் ஒரு சர்க்கரை ஆலை நிறுவப் போவதாக இதில் சொல்லியிருக்கிறார்கள். இந்திய அரசும், இந்திய திட்டக் குழுவும், உலக வங்கியின் உதவியோடுகூட தமிழ்நாட்டில் ஒரு காகித ஆலையை துவங்க இருக்கிறது. அந்த ஆலையை கரூர் பக்கத்தில் உள்ள புகளூர் பகுதியில் நிறுவ ஆய்வு வேலைகள் எல்லாம் நடைபெற்று வருகின்றன. ஆகவே அந்தத் திட்டத்தை வேறு பகுதிக்கு மாற்றிவிடாமல் புகளூரிலேயே அந்த ஆலையை நிறுவவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த திட்ட வேலையை முடுக்கி அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கோவை, திருச்சியில் பல்கலைக் கழகங்கள் அமைக்கப்பட இருக்கின்றன என்று உரையில் சொல்லப் பட்டிருக்கிறது. திருச்சியில் அமைய இருக்கிற பல்கலைக் கழகத்திற்கு தந்தை பெரியாரின் பெயரைச் சூட்டவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மதுவிலக்குக் கொள்கை. இதுகுறித்து மனம் திறந்து பேசவேண்டும் என்று உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். மதுவிலக்கு திட்டம் பற்றி மனம் திறந்து பேசுவதும் சங்கடமாக இருக்கிறது. பேசாமல் இருப்பதும் சங்கடமாக இருக்கிறது. மதுவிலக்கைப் பொறுத்தவரையில் அண்டை மாநிலங்களில், அநேகமாக அனைத்து மாநிலங்களிலும் மதுவிலக்கு இல்லை. தேசிய அளவில் அந்தக் கொள்கை வராத வரையில் மதுவிலக்குக் கொள்கையை நிறைவேற்று வது என்பது இயலாத காரியம். மதுவிலக்குக் கொள்கையைப் பொறுத்தவரையில் அதற்கு தமிழ்நாட்டு மக்களின் ஒத்துழைப்பு இல்லை. சட்டம் இருந்தபோதிலும் மதுவிலக்கு இல்லை என்ற நிலையில்தான் நடைமுறையில் இருந்துவருகிறது. ஆகவே மதுவிலக்குக் கொள்கை வெற்றி பெறாததோடு மட்டுமல்லாமல் நாம் வருவாயையும் இழந்து நிற்கிறோம். ஆகவே இந்த மதுவிலக்குக் கொள்கையைப்பற்றி மறுபரிசீலனை செய்யவேண்டிய கட்டாயத்திற்கு இன்றைக்கு தமிழகமக்கள் இந்த அரசை ஆளாக்கியிருக்கிறார்கள். ஆகவே மதுவிலக்கை ஒத்திவைப்பதுதான் நன்றாக இருக்கும். தோல்வியுற்ற கொள்கையை வைத்துக்கொண்டு இருப்பதில் பிரயோஜனமில்லை என்பதை என் தனிப்பட்ட கருத்தாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாய நிலங்களை தரிசாகப் போட்டுவைத்து சில மிட்டா மிராசுகள் விவசாயக் கூலிகளின் கோபத்தை அரசுக்கு எதிராக திருப்பிவிடும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.





ஆகவே தரிசு நிலங்களை எடுத்து நிலம் இல்லாத ஏழை விவசாயிகளுக்கு கொடுப்போம் என்ற நில மீட்சித் திட்டத்தை அரசு எடுத்துக்கொண்டிருப்பதாக உரையில் குறிப்பிடப் பட்டுள்ளது. இந்த அருமையான பொதுவுடமை தத்துவத்தை இந்த உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன்.

தீண்டாமை ஒழிப்பதற்காக ஒரு அதிகாரியைப் போட்டிருக்கிறார்கள். தீண்டாமை ஒழிப்பு வேலைகளுக்காக அதிகாரிகளைப் போட்டுவிட்டு அவர்களுக்கு வாகனவசதி இல்லாதிருப்பதால் இந்தச் சட்டத்தை நிறைவேற்றாமல் இருக்கிறார்கள் என்று திரு. இளையபெருமாள் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆகவே தீண்டாமை ஒழிப்பு அதிகாரிகளுக்கு வாகனவசதிகள் செய்து தரவேண்டும் என்று நான் இந்த சந்தர்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து. இந்த உரையில் எதிர்காலத்தில் இந்த நாட்டு மக்கள் நல்லமுறையில் நன்கு வாழக்கூடிய வகையில் நல்ல பல அம்சங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றை வரவேற்று எனக்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

திரு எஸ். இளையபெருமாள் : தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய அரசு ஒன்றும் செய்யவில்லை என்று சொன்னார்கள். நான் சொல்கிறேன், 1955ஆம் ஆண்டில் தீண்டாமை ஒழிப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது. 1976ல் சிவில் ரைட்ஸ் ப்ரொடெக்ஷன் ஆக்ட் கொண்டுவரப்பட்டது. மத்திய அரசு சட்டங்களை மாநில அரசுகள் நிறைவேற்ற பொறுப்புள்ளது. ஆகவே, மதுவிலக்கைக்கூட மத்திய அரசு தானே எடுத்த சமயத்தில் அது இந்திரா காங்கிரஸ் கட்சி ஆட்சியாக இருந்தாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாக இருந்தாலும் சரி, எந்த ஆட்சியாக இருந்தாலும் சரி அந்த விஷயங்களைச் செய்ய வேண்டிய பொறுப்பு அந்தந்த மாநிலங்களுக்கு உள்ளது. அந்த ஆட்சி செய்யவில்லையென்று சொல்லாதது தவறு என்று தெரிந்தால் அதை ஒத்துக்கொள்ளவதுதான் நியாயமே தவிர சால்ஜாப்பு சொல்வது—பி. ஆண்ட். சி. மில் பற்றிச் சொல்வது போல்—பாவமான காரியமாகும்.

[மாலை 6—30]

*திரு. சி. பழனிமுத்து : சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக, என்னுடைய ஒருசில கருத்துக்களை ஆளுநர் அவர்கள் உரையின் மீது பேச விரும்புகிறேன். இப்போது ஆளுநர் அவர்கள் உரையிலே, விலைவாசிகளை கட்டுப்படுத்துவதற்கு, இத்தமிழக அரசு

முனைப்பாக எந்தவிதமான முயற்சியும் எடுத்துக் கொள்ள வில்லை. ஒவ்வொரு வருவாய் கிராமங்களிலும் நியாய விலைக் கடைகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. ஆனால் ஏழை எளிய அரிசன பாமர மக்கள் வசிக்கக்கூடிய கிராமங்களில் சரியாக இதுவரையிலும் ரேஷன் கார்டுகள், 6 மாதங்களாகியும் கொடுக்கப்படவில்லை. காரணம் என்னவென்றால், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் இதுபோன்ற ரேஷன் கார்டுகளைக் கொடுக்கப்படவில்லை. என்று சொல்லப்படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவரை பலமுறை அணுகியும், ரேஷன் கார்டுகள் இன்னும் கொடுக்கப்படவில்லை ஏழை எளிய பாமர மக்கள் அத்தியாவசியமான உணவுப் பண்டங்களைப் பெறுவதற்கு ரேஷன் கார்டுகளை விநியோகம் செய்வதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை.

இதற்கு அடுத்தாற்போல், விவசாயப் பிரச்சனையை இந்த அரசு முழுமையாக தீர்ப்பதற்கு எந்தவிதமான நியாயமான நடவடிக்கையும் முன்னதாக எடுத்திருக்கவில்லை. ஆனால் விவசாய விளைபொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டும். கரும்பு உற்பத்தியைப் பெருக்குவதற்கு தமிழக அரசு ஊக்கம் அளிக்கவேண்டும். கர்நாடகம், மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்களில் டன்னுக்கு ரூ. 200 க்கு மேல் கொடுக் கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டில் தமிழக அரசு நெல்லுக்கு ரூ. 115 ம், கரும்புக்கு ரூ. 175 ம் கொடுத்துள்ளது. ஆகவே இந்த அரசு மற்ற மாநிலங்களிலே உள்ளதுபோல் கொடுப்ப தற்கு முயற்சி செய்யவேண்டும். ஏழை எளிய விவசாயப் பெருங் குடி மக்கள் மழை இல்லாமல், விவசாயம் செய்ய முடியாத நிலையிலே இருக்கிறார்கள். ஆனால், விவசாயிகள் இந்த நாட்டின் முதுகெலும்பு என்று அரசியல்வாதிகள் அனைவரும் கருதுகிறார்கள். ஆனால், விவசாயிகள் எல்லோரும் புறக் கணிக்கப்படுகிறார்கள். காரணம் என்ன? 10 பேர்களுக்குள் வேலைசெய்கிற தொழிற்சாலைகளில் அவர்கள் ஒன்றாகச் சேர்ந்து, செயல்பட்டு அவர்கள் தங்கள் கோரிக்கைகளை எழுப்புகிறார்கள். ஆனால் விவசாயிகள் ஒன்று சேர்ந்து தங்கள் கோரிக்கைகளை தெரிவிக்க முடியவில்லை. விவசாயிகள் கடன் களைத் திருப்பித் தரவில்லை என்பதற்காக இந்த அரசு அவர்கள்மீது ஜப்தி நடவடிக்கை எடுக்கக்கூடாது. கடந்த பட்ஜெட் கூட்டத்திலே 42 கோடி ரூபாய் அளவிற்கு கடன் தள்ளுபடி செய்தார்கள். ஆனால் குறுகிய காலக் கடனை நடுத்தரக் கடனாக மாற்றிக்கொண்டவர்களுக்கு இந்தச் சலுகை கொடுக்கப்பட்டது. குறுகிய கால கடனாக வாங்கியவர்கள், படிக்கத் தெரியாதவர்கள். பாமர மக்கள். ஆகவே, அவர் களுடைய இந்தக் கடன்களை நடுத்தர கடனாக மாற்றுவதற்கு வழிவகை செய்துகொள்ள அவர்களுக்குத் தெரியவில்லை. இதுபோன்ற ஏழை எளிய மக்கள் எல்லாம் ஒரு ஏக்கர் நிலம் வைத்துள்ளவர்கள் கிட்டத்தட்ட 4,000 அல்லது 5,000 ரூபாய் கட்டவேண்டிய நிலையிலே உள்ளார்கள். காரணம், இந்த



கூட்டுறவு நாணய சங்கத்திலே இருக்கக்கூடிய செயலாளர், மற்றுமுள்ள அலுவலர்கள் போன்றவர்களை அணுகி, சரியான முறையிலே விவசாயிகள் பயனை அடைய முடியவில்லை.

மேலும், இந்தப் பகுதியிலே, சேலம் மாவட்டத்திலே மழை என்றாலே, புயல் அடித்தால்தான் மழை பெய்யும். அந்த நிலையிலே சேலம் மாவட்டம் 10 ஆண்டுகளாக இருந்து வருகிறது. ஆகவே, சேலம் மாவட்டத்தை முழுமையான வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். குறிப்பாக, ஆத்தூர் தாலுகா முழுவதும் கடுமை யான வறட்சிப் பகுதியாக உள்ளது. அப்பகுதியில் மழை இல்லை; மழை பொய்த்து விட்டது. மக்கள் விவசாயம் செய்ய முடியவில்லை. ஏழை விவசாயிகள் விவசாயம் செய்ய முடிய வில்லை. இதைத் கருத்தில் கொண்டு, அந்தப் பகுதியை வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். உதாரணத்திற்கு விவசாயிகளுடைய நிலைமையைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், சென்னை யிலே ஒரு பெட்டிக் கடை வைத்திருக்கின்றவனுக்கு வருகின்ற வருமானம் கூட, அங்குள்ள 10 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர் களுக்கு இந்த வருமானம் இல்லை என்று சொன்னால் அது மிகையாகாது. ஆகவே, விவசாயிகளைப் பொறுத்தவரையிலே விவசாயிகள் இதுவரை பொருளாதாரத்திலே முன்னேற வில்லை; எந்தவிதமான முன்னேற்றமும் அடையவில்லை. எனவே விவசாயிகள் நிலை அன்று இருந்து இன்று வரை Agriculturists are born in debts, live in debts, die in debts, and bequeath debts. ஆகவே, அவர்களுடைய கோரிக்கையை இந்த அரசு பரிசீலனை செய்து, தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பி. அண்டு சி. மில்லைப் பொறுத்தவரை, அந்த மில் மூடப் பட்டுள்ளது. அதில் பணிபுரியும் 13,000 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க இந்த அரசு அந்த மில்லைத் திறப்பதற்கு வழிவகை காணவேண்டுமென்று வேண்டுகிறேன்.

மேலும், இந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 69 வட்டாரங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன. இப்போது மேலும் 100 ஊராட்சி ஒன்றியங்கள் எடுக்கப்படும் என்று கூறி, 120 ஊராட்சி ஒன்றியங்கள் எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கின்றன. ஆகவே, இந்த தன்னிறைவுத் திட்டத்தை நல்ல முறையிலே செயல்படுத்த வேண்டுமென்று வேண்டுகிறேன். அதிலே, என்னுடைய ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்தை தன்னி றைவு திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலைக்கு உணவுத் திட்டம் என்பது நல்ல திட்டம். அந்தத் திட்டத்தின் மூலம் மலைவாழ்மக்களும் கிராம மக்களும் சாலைகள், கிணறுகள், பள்ளிக் கட்டிடங்கள் அமைப்பதன் மூலம் பயன்பெறுகிறார்கள். அந்தத் திட்டத்தில் சிறு ஊழல்கள் இருந்தாலும் நல்ல முறையில் செயல்பட்டு வந்தது. என்னுடைய பகுதியில் பைத்தூர் மலைப் பகுதியில் ஆறு மைல் தூரம் சாலை அமைக்கப்பட்டது. யாராலும் சாலை அமைக்க முடியாத நிலையில் தினமும் 500 மலைவாழ் மக்கள் அந்தச் சாலையை அமைத்தார்கள். இந்தத் திட்டம் கடந்த டிசம்பர் மாதம் 10 ஆம் தேதியன்று நிறுத்தப்பட்டது. தற்போது அது கிராமப்புற வேலை வாய்ப்பு தேசிய திட்டமாகப் பெயர் பெற்றுள்ளது. டிசம்பர் பத்தாம் தேதி வரை வேலை செய்தவர்களுக்கு இன்று வரை உணவு வழங்கப்படவில்லை. தமிழக அரசு முனைப்பாக நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு அரிசி வழங்க ஆவன செய்யவேண்டும்.

மதுவிலக்குப் பிரச்சனை பற்றிக் கூறியிருக்கிறார்கள். தற்போதே வீதிக்கு நான்கு கடைகள் இருக்கின்றன. இந்த அரசு அதைப் பற்றி எவ்வாறு முடிவு செய்யவேண்டுமோ அவ்வாறு செய்யவேண்டும்.

கிராம முன்சீப்புகள், கர்ணங்கள் ஆகியோர் வேலை இழக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. அதிலே, எஸ். எஸ். எல். சி. படித்து கிராம கர்ணம் டெஸ்ட் பாஸ் செய்தவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும். ஆதித் திராவிட பழங்குடி மக்களுக்கு வாய்ப்பளிக்க இந்த அரசு தக்க முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டும். அரிசன மக்களுக்காக அரசின் மூலம் நிலம் வாங்கி ஆர்ஜிதம் செய்யப்படுகிறது. அந்த நிலங்களுக்கு ஒரே தவணையாக பணத்தைக் கொடுத்தார்கள். இப்போது ஐந்து தவணையாகக் கொடுக்கிறார்கள். அதை ஒரே தவணையாகக் கொடுத்தால்தான் ஏழை எளிய மக்களுக்கு நிலத்தை ஒதுக்கித் தர முடியும்.

ஆத்தூர் நகரில் குடிதண்ணீர் விநியோகம் வாரம் ஒரு தடவை கூட இல்லை. பருவ மழை இல்லை. தண்ணீர்ப் பிரச்சனைக்குத் தீர்வு காண அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆத்தூரில் 75,000 மக்களுக்கு மேல் இதனால் வேதனையும் துன்பமும் அடைகிறார்கள். இவர்கள் தண்ணீர் இல்லாத காரணத்தால் ஆத்தூரை விட்டு வெளியே செல்லும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையோடு செயல்படாமல் குடிதண்ணீர் பிரச்சனையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும். மேட்டூரிலிருந்து காவிரி நீர் கொண்டு வரப்படும் என்று 1978 ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்தார்கள்



அந்தத் திட்டம் பற்றி இதுவரை எந்த விதமான துரித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அங்கு ஒரு டிரம் (பேரல்) தண்ணீர் ஐந்து ரூபாய் முதல் எட்டு ரூபாய் வரை விற்கிறார்கள்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மூடப்பட்டுள்ளது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைத் திறக்க ஒருங்கிணைந்து செயல்படவேண்டும். (மணியடிக்கப்பட்டது)

விவசாயிகள் பிரச்சனையைத் தீர்த்து வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. திருமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இம்மாமன்றத்தில் ஆளுநர் உரை வரலாற்றுச் சிறப்புமிக்க உரையாகும். உலகம் முழுவதும் தமிழ் உணர்வை ஏற்படுத்திய உலகத் தமிழ் மாநாட்டினைப் பற்றி ஆளுநர் அவர்கள் உள்ள உணர்வோடு கூறியிருக்கிறார்கள். அவர்கள் இலக்கியச் சுவையோடு பாராட்டியதோடு மட்டுமல்லாமல் இந்த அரசுக்கு மணி மகுடம் வைததது போல் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். உலகம் முழுவதும் தமிழ் வளர்ச்சி பெற இந்த அரசும் முதல்வர் அவர்களும் கொண்டுள்ள நல்ல எண்ணங்களையும் ஆளுநர் அவர்கள் மனமுவந்து பாராட்டியிருக்கிறார்கள். இவ்வாறு தமிழ் மேல் ஆளுநர் அவர்கள் கொண்டுள்ள தாகத்தை வரவேற்கிறேன். இந்த மாமன்றத்தில் ஆளுநர் உரை ஒளி வீசிக் கொண்டிருக்கிறது.

ஏழை மக்கள் வாழ்வு உயரவும் மக்கள் நல்வாழ்வுக்கும் வேலைக்கு உணவுத் திட்டம், கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம், போன்றவற்றைப் பற்றி எடுத்துக் கூறியிருப்பதைப் பாராட்டுகிறேன். விவசாயிகளுக்கு அதிக அளவில் சலுகைகளைச் செய்திருக்கிறார்கள். அரசு செய்திருக்கக்கூடிய சலுகைகள் நியாயமாக இருப்பதை ஆளுநர் அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள்.

இயற்கையின் மாற்றத்தால் மழை பெய்யாமல் கடுமையான வறட்சி புதுக்கோட்டை, வட ஆற்காடு மாவட்டங்களில் ஏற்பட்டுள்ளது பற்றியும் ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

[மாலை 6-40]

புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மிகவும் பின்தங்கிய பகுதிகளில் வறட்சி நிவாரணப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. அவைகளை இன்னும் அதிக அளவில் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆழ்குழாய்க் கிணறுகளை மாவட்டந்தோறும் தோண்ட வேண்டும்,

குடிநீர்க் குழாய்களை அமைத்து குடிநீர் வசதி செய்து கொடுக்க வேண்டும், வறட்சிப் பகுதிகளிலே ஏழை விவசாயிகளுடைய துயரைத் துடைக்கின்ற பணிகளைச் செய்கின்ற முறையிலே சிறு தொழில் கடன்களை அதிகமாக வழங்கவேண்டும்.

சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுடைய கடமையை ஆற்ற அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்ய அரசு முன்வரவேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு டீஸல் ஜீப் வாகன வசதியும், ஒரு எழுத்தரும், ஒரு டைப்பிஸ்டும், அந்தந்தத் தொகுதியில் தலைமை அலுவலகத்திற்கான இட வசதியும் மற்ற வசதிகளையும் செய்துகொடுத்தால் அவர்கள் தொகுதிப் பணிகளைச் செய்ய ஏதுவாக இருக்கும். ஆகவே இந்த அரசு மனமுவந்து அவைகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு மலர் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பணம் ஏதும் பெறாமல் இலவசமாக வழங்கப்பட ஆவன செய்யப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உலகத் தமிழ் மாநாட்டைப் புறக்கணித்தவர்கள் தமிழுக்கு எதிரிகள் ஆவார்கள், தமிழ்த் துரோகிகள் என்று அவர்களை மக்கள் கருதுகிறார்கள். பல்வேறு எதிர்ப்புகளுக்கு இடையே உலகத் தமிழ் மாநாட்டை சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் நடத்தி தமிழ் மக்களின் பெருமையை நிலைநாட்டிய தமிழ்க் காவலர் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு என் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைக் கூறி முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று. நாளை காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை மாலை 6-43 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

157. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் 1979–80 ஆம் ஆண்டிற்கான 10 ஆவது ஆண்டறிக்கையும், தணிக்கை அறிக்கையும் [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–'அ' பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]





158. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பகுதிநேர கிராம அலுவலர்கள், பதவிகளை நீக்குதல் அவசரச் சட்டத்தின் 14 ஆவது பிரிவின்கீழ், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளரை (பொது) தகுதிவாய்ந்த அதிகாரியாக நியமிப்பது குறித்து, வருவாய்த்துறையின் 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 15 ஆம் தேதியிடப்பெற்ற 2582 ஆம் எண் அரசாணையில் வெளியான ஆணை.] தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பகுதிநேர கிராம அலுவலர்கள் பதவிகளை நீக்குதல் அவசரச் சட்டத்தின் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 10/1980) 12 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

159 கிராம நிர்வாக அலுவலர்களை வேலைக்கமர்த்துதல் மற்றும் பணி நிபந்தனைகளை முறைப்படுத்துதல் விதிகளைச் செய்வது குறித்து, வருவாய்த்துறையின் 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 18 ஆம் தேதியிடப்பெற்ற 2600 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பகுதிநேர கிராம அலுவலர்கள் பதவிகளை நீக்குதல் அவசரச் சட்டத்தின் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 10/1980) 12 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

160. வருவாய்த்துறையில் 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 18 ஆம் தேதியன்று வெளியாகி, 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 20 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நர்டு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் பாகம் III பிரிவு 1 (ஆ) / பக்கங்கள் 1–4-ல் (ஆங்கிலத்தில்) வெளியான SRO /B 570 (அ) 80 ஆம் எண் அறிவிப்பில் வெளியிடப்பெற்ற விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த்துறையின் 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 27 ஆம் தேதியிடப்பெற்ற 2645 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பகுதிநேர கிராம அலுவலர்கள் பதவிகளை நீக்குதல் அவசரச் சட்டத்தின் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 10/1980) 12 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

161. கிராம நிர்வாக அலுவலர்கள் பதவிகளை, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைக் கழகத்தின் வரம்பிற்குள் கொண்டுவருவதைப் பொறுத்தவரையில், வருவாய்த் துறையின் 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 18 ஆம் தேதியிடப்பெற்ற SRO.B 507 (அ) 80 ஆம் எண் அறிவிப்பில் வெளியிடப்பெற்ற விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் [illegible] ஆம் தேதியிடப் பெற்ற 2747 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பகுதிநேர கிராம அலுவலர்கள் பதவிகளை நீக்குதல் அவசரச் சட்டத்தின் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 10/1980) 12 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

[1981 ஜனவரி 27

## ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

15. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 19 ஆம் தேதியிலிருந்து ஆகஸ்ட் திங்கள் 12 ஆம் தேதிமுடிய மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றிய தொகுப்புரை

---

V211,31'N81
N83-9
122164